॥ अव ॥

ஸ்ரீ

ஸ்ரீபாண்டுரங்காய நம:

ஏகநாதசுவாமிகள் சரித்திரம்

ஆழ்வார் திருநகரி

சிங்கம். ஸ்ரீனிவாச அய்யங்கார் எழுதியது.

கவி

தஞ்சமென் றடைந்தோர்க் கெல்லாந் தானிலை நல்கொக்கும்
பஞ்சவர் தூதனைப் பரமனைத் தனக்காட்கொண்ட
விஞ்சிய பணிகள்யாவும் விப்பிரனேக நாதன்
செஞ்சரணங்கள் போற்றித் திருத்தொண்டு பரவுவாமால்.

11971

உதயகாலத்தில் உத்தவசித்தர்கள் பக்தவிஜய சரித்திரத்தில் ஏகநாத சுவாமிகளின் பிரபாவத்தைக் கேட்க விரும்பி, நித்திய விதி முடித்து நற்றவனாய நாபாஜிசித்தருடைய ...ணமலர் பாதம் பணிந்து, "சுவாமி! தேவரீர் திருவாயால் நாமதேவருடைய அவதாரமான துகாராம் சரித்திரத்தைக் கேட்டு பக்திபரவசமாயினோம். மஹாராஷ்டிர பாஷையில் ஸ்ரீராமாயணத்தையும், ஸ்ரீபாகவதத்தையும், ஸ்ரீராகவன் பண்டரிநாதன் இருவருடைய நியமனத்தாலும், எழுதிய ஏகநாத சுவாமிகள் சரித்திரத்தை எளியேங்கள் கேட்டுய்யுமாறு திருவாய்மலர்ந்தருள வேண்டும்" என்று பிரார்த்திக்க, நாபாஜிசித்தர், நான்மறையவரான உத்தவசித்தருக்கு உகப்புடன் ஏகநாத சுவாமியின் சரித்திரத்தைச் சொல்ல ஆரம்பித்தார்.

திருமாமகளது திருமுகம்போன்றது மகாராட்டிரதேசம். அந்த மகாராட்டிர தேசத்துள்ளே சிறந்து விளங்கும் நகரங்களிலே நீர்வளத்தாலும் நிலவளத்தாலும் பசு பக்ஷிகளின் வளத்தாலும் பிராமணர் முதல் பஞ்சமர் வரையிலுள்ள மாந்தர் மகளிர் வளத்தாலும் சிறந்து, தருமம் குன்றாது பாவம் பரவாது சாதுக்களின் கூட்டங்களினால் சிறப்புற்றது பைட்டிணிபுரம் என்னும் ஒரு அரிய நகரம். அந்த நகரத்தில், மஹாராஷ்டிர மரபிலே, ஆத்திரேய கோத்திரத்திலே உதித்தவராய், பக்தியே திரண்டு உருவாயதென்று சொல்லத் தகுந்தவராய், வேதவித்தாய், கிரகத்தாஸ்ரம தருமத்தை அனுசரித்தவராய், அக்கினி கோத்திரியாய், சோமயாகம் முதலியன செய்ததால் சோமயாஜி என்று யாவரும் வணங்குவதற்குரியவராய், ஐவகை வேள்வியை ஆதரித்தவராய், பண்டு தாம் செய்த பாக்கிய விசேஷத்தால் பல நெறிகளாகிய புறச்சமயங்களை யாதரியாது, வைஷ்ணவ சமயத்தை யாதரித்து பாண்டுரங்கனை வித்தியா நகரத்திலிருந்து எழுந்தருளப்பண்ணி, பண்டரிபுரத்திற்குக் கொணர்ந்து பிரதிஷ்டை செய்துவைத்த பரம

சாந்தராகிய பானுதாச ரென்னும் பாகவதோத்தமருக்கு சக்கரபாணி என்றொரு அருந்தவப்புதல்வ ரொருவரிருந்தார். இவரது பக்தியையும், வைராக்கியத்தையும் யாக எக்ஞாதி கர்மாக்களையும், கல்வி யறிவையும் பார்த்தால், இவர் தந்தையான பானுதாசரையே ஈடு சொல்லவேண்டுமென்றி, வேறொருவரை ஈடு சொல்லத் தகாதவர். இவர் பரம்பரையானது உத்தம பரம்பரையாயிருந்ததால், அபூர்வமாய் ஒரு ஆண் குழந்தையே இந்த சந்ததியில் தோன்றி, முன்னவர் ஆதரித்துவந்த அனுஷ்டானாதி தருமங்களை ஆதரித்துவரும் வழக்கப்படி இவருக்கு ஓர் ஆண் குழந்தை பிறந்தது. அக்குழந்தைக்குச் சூரிய நாராயணனென்று பெயரிட்டு நாளொருமேனியும் பொழுதொரு வண்ணமுமாய் வளர்த்து வந்து ஐந்து வயதானதும் வேதம் முதல் சாஸ்திர இதிகாச புராணங்கள் கற்க குருகுலவாசம் செய்யும்படி அனுப்ப, சூரியநாராயணர் குருகுல வாசம்பண்ணித் தாம் கற்கவேண்டிய கல்விகள் யாவும் கற்று, கற்புடைய வனிதையான ருக்மணி யென்னும் பெண்ணை மணஞ்செய்து வேதவித்யா சாந்தத் தருமத்தை யாதரித்து, விரதானுஷ்டான பரராய் விளங்கிவந்தார். இவர் தன் மனைவியான ருக்மணியுடன் பாண்டுரங்கனையே சதா பக்தி பண்ணிக்கொண்டிருந்தார்.

இப்படி இருக்கும்பொழுது இவரும் இவர் முன்னோர்களும் செய்த தவமெல்லாம் திரண்டு ஒரு வடிவெடுத்ததுபோல ஓர் ஆண் குழந்தை பிறந்தது. அக்குழந்தைக்கு வேத விதிப்படி புண்ணியாகவாசனம், சாதககர்மம், நாமகரணம், அன்ன பிராசனம் சவுளம், உபநயனம் முதலியன செய்வித்து வித்தியாப்பியாசம் செய்ய, வேதவித்தாய், சதுர் சாஸ்திர பண்டிதராய், உண்மை வைஷ்ணவராய், பரம சாந்தராய், பரிசுத்த மனத்தராய் விளங்கும் கிருஷ்ணபண்டிதரிடம் ஏகநாதர் என்னும் பெயருடைய தன் குமாரனை யொப்புவித்து, சூரிய நாராயணர் தன் மைந்தனது கல்வி அபிவிருத்தியைக் கவனித்து வந்தார். ஏகநாதரும், 'ஏக சந்தகிராகி' என்று தன்னை யாருங் கொண்டாட, ஆசாரியரிடம் ஒரு தடவை கேட்ட பாடத்தைப் பல தடவையும் கேட்டதுபோல் மனனம் பண்ணி ஆசாரியனிடம் உள்ளவற்றையெல்லாம் ஏழுவயதிலேயே கற்றுக்கொண்டு, கற்றதின் பயனாகிய ஒழுக்கம், சாந்தம், அறிவு, பக்தி, வைராக்கியம் என்னும் இவைகளை, "விளையும் பயிர் முளையிலே" என்பதற்கேற்ப, இளம்பிராயத்திலேயே யடைந்து, தந்தை தாயரை வழிபட்டுக்கொண்டு, சதா தனியிடத்தி லிருப்பதையே விரும்பித் தன்போன்ற வயதுடைய குழந்தைகளின் விளையாட்டைச் சிறிதும் அறியாதவராய், "நான் இனி செய்யவேண்டியது யாது? நான் என்றால், அது எதை உணர்த்தும்? நானென்பது சரீரத்தையா? அன்றி, ஆன்மாவையா? நானென்பது சரீரமல்லாது ஆன்மாவானால், அந்த

ஆன்மா நித்தியமா, அநித்தியமா? அது நித்தியமானால், அது எந்த வஸ்துவை ஆதாரமாகக்கொண்டிருக்கிறது? ஆன்மா வஸ்துவிற்கு தாரக போக்கியமான வஸ்து ஒன்று இருந்தால், அந்த வஸ்து எத்தன்மையது? அந்த வஸ்து அழியுந்தன்மையுடையதா, அல்லது அழியாது விளங்கும் நித்திய வஸ்துவா? அது நித்திய வஸ்துவானால், அது என்ன நாமமுடையது? அந்த வஸ்துவை யடைந்த ஆன்மாவானது அடையும் பயன் யாது" என்று இதையே சிந்தித்துக்கொண்டு இந்த அரிய விஷயங்கள் சிறுவனான தன் சிற்றறிவில் முற்றும் தோன்றாமை கண்டு தனியிடத்திலிருந்து வருந்துவர். மீண்டும் தனக்குத்தானே தேறி, "நாம் இதுவரை யறிந்த உண்மையான விஷயங்கள் முழுமையும் தெரிந்துகொள்ளவேண்டுமானால், நல்ல ஆசாரியன் அனுக்கிரகம் நமக்கு வேண்டும். இந்தச் சிற்றறிவினையுடைய நான், ஞானகாரியங்களை யெப்படி தேடி அறிவேன்? என்றால் ஞானகாரியங்களை அடைய முடியாதுபோனால், என்னை ஞானதேசிகனிடம் சேர்க்கத்தகுந்த சக்தி யாருக்குண்டு" என்று சிந்தித்தார். முடிவில் தனது முன்னோர்கள் வழிபடும் தெய்வமான பாண்டுரங்கனைப் பக்தி பண்ணினாலன்றி, என் இஷ்டங்கள் பூர்த்தியடையமாட்டா என்று துணிந்தார்.

ஏகநாதர் ஏழாவது வயதில் இந்த ஞானம் பிறக்க, பண்டரிநாதனைச் சேவை செய்தாலன்றி தன் எண்ணங்கள் பூர்த்தியாகாதென்று நினைத்து, மறுநாள் தன் பிதாவானவர் திருவாராதனம் பண்ணும்பொழுது அவர் பக்கத்தில் நின்று, அங்கன்னியாச கரன்னியாசமாக அவர் செய்வதையெல்லாம், நன்றாகப் பார்த்துத் தனது மனதில் பதித்துக்கொண்டு திருவாராதன மந்திரச் சுவடியை எடுத்து அதிலுள்ள மந்திரங்களையெல்லாம் ஒரேதரம் படித்து மனனம் பண்ணிக்கொண்டு, மறுநாள் முதல் பஞ்ச உஷைக்காலத்தெழுந்து தீர்த்தமாடி தான் செய்யவேண்டிய பிரமசரிய விரதத்திற்குரிய சந்தியாவந்தன காயத்திரிஜபம் முதலியவைகளைச் செய்து முடித்து, திருத்துழாய் புஷ்பம் முதலியன எடுத்து வந்து, பண்டரிநாதனுடைய படத்தை எழுந்தருளப் பண்ணி, தனது அறையிலிருந்து தந்தையார் செய்வதுபோலப் பக்தியுடன் திருவாராதனம் செய்து ஆராதனை முடிந்ததும், "ஹே! தியானபரா! ஏ! பாண்டுரங்கா! அநந்த கல்யாண குணமுடைய உன்னையே நமஸ்கரிக்கின்றேன். நீர் என்னுடைய வந்தனத்தையும் தோத்திரத்தையும் ஏற்றுக்கொண்டு என்னைச் சற்குருநாதன் சன்னதியில் சேர்த்து வைக்கவேண்டும்" என்று பிரார்த்திப்பார். இவ்வாறு ஒவ்வொருநாளும் பாண்டுரங்கனுக்குத் திருவாராதனம் செய்து, ஆராதனை முடிந்து பிரார்த்தனை செய்து வரும்பொழுது, சர்வேஸ்வரனான பாண்டுரங்கனுக்குத் தன்னை

நோக்கி, பஞ்சாக்கினி மத்தியிலிருந்து தவம் செய்வோரைப் பார்க்கினும், தன்னையே சிந்தித்துக்கொண்டு, உலகப்பற்றை முற்றத் துறந்த முனிவர்களைப் பார்க்கினும், தனது நாம சங்கீர்த்தனத்தையே பாடி யாடி பரவவும், பாகவதோத்தமர்கள் செய்கின்ற பக்தியைக் காட்டிலும், ஏழு வயதுடைய ஏகநாதர் செய்யும் திருவாராதனமானது பரம திருப்தியை யுண்டாக்கிற்று. ஏகநாதனுக்கு ஒரு யோகநாதனை ஆசாரியனாய்ச் சேர்க்கவேண்டுமென்று தன் திருவுள்ளத்தில் நினைத்து ஏகநாதர் தூங்கிக்கொண்டிருக்கும்பொழுது, அவர் சொர்ப்பனத்தில் வந்து, “ஏகநாதா! உன்னுடைய பிரார்த்தனையை நிறைவேற்றுவதற்கே வந்தேன். நீ ஒரு சற்குருவை அடையவேண்டு மென்னும் ஆசை பெரிதும் உடையவனாய் இருத்தலால், ஜனார்த்தன பண்டிதரென்று இந்த ஊருக்குச் சிறிது தூரத்திலிருக்கும் அவந்தி நகரில் இருக்கின்றார். அவர் தத்தாத்திரேயரை வழிபட்டு உபாசனா மூர்த்தியாகக்கொண்டவர். அவருடைய பரிபூரண கிருபைக்கு நீ ஆளாகக் கடவாய் என்று சொல்லி மறையவும், ஏகநாதர் திடுக்கென்று விழித்து, சொப்பனத்திலே தத்ரூபமாகப் பாண்டுரங்கன் எழுந்தருளி, ஜனார்த்தன பண்டிதரை ஆசாரியனாய் அடையும்படி சொன்னதை நினைந்து, ஆராமகிழ்ச்சி யடைந்து, பொழுது விடிந்ததும் தனது மடிசஞ்சியை எடுத்துக்கொண்டு தீர்த்தமாடச் செல்லுவதுபோலத் தனது தாய் தந்தையருடனும் சொல்லாமல் அவந்திநகரம் வந்து, ஜனார்த்தன பண்டிதருடைய வீட்டை விசாரித்துக்கொண்டு, அவர் பூசை செய்துக்கொண்டிருக்கும் சமயம், அவர் முன்னே வந்து, அவருடைய திருவடிகளில் விழுந்து சாஷ்டாங்கமாக நமஸ்காரம் பண்ணி எழுந்து நின்று, இருகரங்களையும் குவித்துக்கொண்டு, தன் சரீரம் முற்றும் புளகாங்கிதத்தால் மூட, கண்களிலிருந்து ஆனந்த பாஷ்பம் தாரை தாரையாய்ப் பெருக, “ஒன்றுமறியாச் சிறுவனாகிய என்னை நீர் ஆட்படுத்திக் கொள்ளவேண்டும். தேவரீருடைய சன்னதியை நாடிவரும் பாக்கியமுடைய அடியேனை, உமது கருணையாகிய பிரவாகத்தினால் தீர்த்தமாடி வைக்கவேண்டும். ஞானோபதேச மென்னும் அமுதை எனது செவியாகிய வாயால் உண்ணும்படி, சர்வேஸ்வரனை அடைய வெண்ணுகின்ற தாகமென்னும் பசியைத் தீர்த்து வைக்கவேண்டும். உமது சன்னதியை யடைந்த அடியேனுக்கு, இறப்பு பிறப்பு என்னும் நித்திரையும், விழிப்பும் இனி வாராதபடி இரக்ஷிக்கவேண்டும். உமது அருட்கண்களால் நோக்கி, அடியேன் அனேக ஜென்மங்களில் செய்திருக்கும் பாபங்களை யெல்லாம் நசிக்கச்செய்யும் உமது அஸ்தத்தால் எனக்கு அபயமளித்து எனது சஞ்சித ஆகாம்மிய வினைகளைப்போக்கி அருளும். புண்ணிய புருஷ புனித புங்கவ கண்ணியமுடைய கருணாநிதியே! முக்திநெறிக்கொரு வித்தே!

முதல்வா! சத்துவ குணமுடைய தந்தையே! தாயே!” என்று தோத்திரம் பண்ணினார்.

ஜனார்த்தன பண்டிதர், முலைப்பால்மணம் வாய் மாறாத பாலகன் வார்த்தைகளும், அவ்வார்த்தைகளிலுள்ள பொருள் நயங்களையும் கண்டு பரமானந்த மடைந்து தான் செய்யும் பூசையைக் கூட நிறுத்திக்கொண்டு ஏகநாதர் திருமுகத்தினை நோக்கி, “பாலா! நீ உன்னுடன் ஒத்த வயதுள்ள சிறுவருடன் சேர்ந்து விளையாடுவதை விட்டு,இங்குவந்து என்னைத் தோத்திரம் செய்வதேனோ? தனையா! உன்னைப் பார்த்தால், எந்தவூரென்று எனக்குத் தெரியவில்லை? இந்த ஊராயிருந்தால் உன்னை நான் பலமுறையும் பார்த்திருப்பேன். ஆதலின், நீ எந்த ஊர்? யாருடைய வீட்டிற்கு வந்திருக்கிறாய்? உன்னுடைய தாய் தந்தையர்கள் யாராவது உன்னுடன்கூட வந்திருக்கிறார்களா? உன்னுடைய வரலாற்றைக் கேட்டறிவதற்கு மிக்க ஆவலுள்ளவனா யிருக்கிறேன் என்றார்.

ஜனார்த்தன பண்டிதர் இவ்வாறு கேட்க, ஏகநாதர் மீண்டும், குருநாதனுடைய திருவடியில் விழுந்து பணிந்து, “சுவாமி! அடியேன் பைட்டிணபுரத்தில் மஹாராஷ்டிர பிராமண குலத்தில், ஆத்திரேய கோத்திரத்தில் உதித்த சூரியநாராயணர் என்பவருடைய மைந்தன். தேவரீர் திருவடியைப் பற்றிக்கொண்டு பிறவிக்கடல் கடக்க வேண்டுமென்று கருதி, உம்மையே ஆசாரியராய்க் கொள்ளவந்தேன்” என்று சொல்ல, ஜனார்த்தன பண்டிதர், “குழந்தாய்! நீ வயதில் சிறியவனாகக் காணப்படினும், உனது வார்த்தைகள் அரிய கலைகளைக்கற்ற வல்ல பண்டிதர்களும் பேச முடியாத சாதுர்யமுடையதாய்க் கேட்போர்கள் செவிக்குப் பரம சுகத்தைத் தருகிறது. உன்னுடைய பெயர் யாது? இவ்வளவு பேரறிவுடையவனைப் புத்திரனா யடைந்த தாய் தந்தையரைப் பிரிந்து இங்கு தனியே ஏன் வந்தனை? அவர்கள் வருந்தாவண்ணம் நீ உன் ஊருக்குச் செல்லுவதே உத்தமம்” என்றார். ஏகநாதர் தான் ஆசாரியரென்று விரும்பிவந்த ஜனார்த்தன பண்டிதர் கூறிய வார்த்தையைக் கேட்டதும், கண்களில் நீர் தாரை தாரையாகப் பெருக, விம்மி விம்மி அழுதுக்கொண்டு, “தேவரீரிடம் ஞானோபதேசம் பெறவேண்டுமென்று வந்தேன். என் தெய்வமே! நான் உம்மை ஆசாரியரென்று அறிந்து அடையும் சக்தனா? என்னுடைய திருவாராதனமூர்த்தியாகிய பாண்டுரங்கனிடம் ஞானாசிரியனைச் சேர்க்கவேண்டுமென்று அடியேன் ஒவ்வொருநாளும் பிரார்த்தனை செய்ய, அவர் அருள் சுரந்து அடியேன் சொர்ப்பனத்தில் தோன்றி, தேவரீரையே ஆசாரியனாய் அடையும்படி நியமித்ததாலே, அந்த நியமனப்படி உம்மைத் தேடி வந்தேன். என்னுடைய தாய் தந்தையர்களென்பதை ஆராய்ந்து பார்த்ததில், நான் அடைந்த ஜென்மம் அனந்த

மாகவிருக்கிறது. அந்த ஜென்மங்களுக்கெல்லாம், அடியேனுக்கு வாய்த்த தாய் தந்தையர்கள் அனந்தமாவர். அவர்கள் எனக்கு என்ன நன்மை செய்தனர்? அதுபோல் நான் மோக்ஷத்தை நாடக் கருதினால், இவர்கள் எனக்கு என்ன செய்யமாட்டுவர்? உற்றுப் பார்த்தால், முந்திய தாய்தந்தையர்களுக்கும் இவர்களுக்கும் ஒரு சிறிதும் மேன்மையிருப்பதாய்த் தெரியவில்லை. கர்மவசத்தால் வந்த இந்தத் தாய் தந்தையரை விட்டு, உண்மையான தந்தையையும் தாயையும் அடைய விரும்பி வந்தேன். உண்மைத் தாயும், உண்மைத் தந்தையுமான தேவரீரையே நாடி வந்தேன். அடியேனை ஏற்றுக்கொள்ளவேண்டும்'' என்று பிரார்த்தித்தார்.

ஜனார்த்தன பண்டிதர் ஏகநாதருடைய வார்த்தைகளைக் கேட்டு, ஆராமகிழ்ச்சியடைந்து, “தனையா! நீ என்னுடன் இங்கேயேயிருப்பாய். உத்தமனான உனக்குப் பாண்டுரங்கனது அனுக்கிரகத்தால் சர்வாபீஷ்டமும் அடைவாய்'' என்று ஆசீர்வதித்து, தன் வீட்டிலேயே வைத்துக்கொண்டு அவருடைய மனநிலையைச் சோதிக்க விரும்பினார். ஏகநாதர் குருகுலவாசம் செய்யும் காலத்து, ஆசாரியரான ஜனார்த்தன பண்டிதருக்கு வேண்டிய பணிவிடைகளைச் செய்து, அவரது மனமகிழ நடந்துகொண்டு வரும்பொழுது, ஏகநாதருடைய வைராக்கியத்தைப் பரீக்ஷிக்க விரும்பித் தன் வீட்டு வரவு செலவு கணக்கை அவரிடம் கொடுத்து, “பொருள்கள் சோரம் போகாமலும், கணக்குத் தவறாமலும், பார்த்துக்கொள்'' என்று சொல்ல, ஏகநாதர் குருமூர்த்தியைப் பணிந்து, கணக்குகளை வாங்கிக்கொண்டு அதில் கண்ணும் கருத்துமிருந்தாலும், ஆசாரியருடைய கைங்கரியமும் குறைவுபடாமல் செய்துக்கொண்டிருந்தார். இப்படியிருக்கும்பொழுது ஓர்நாள், ஏகநாதரை அழைத்து, “இன்றையதினம் நீ சரியாய்க் கணக்குப் பார்த்து, வரவு செலவு திட்டம் கட்டி என்னிடம் கணக்கைக் காட்டவேண்டும்'' என்று சொல்ல, ஏகநாதர், ‘ஆக்ஞை’ என்று சொல்லி, அன்று பகலெல்லாம் ஆசாரியனுக்குச் செய்யவேண்டிய பணிவிடைகள் யாவும் குறைவிலாது செய்து அன்றிரவு ஆசாரியனுக்குப் படுக்கை விரித்துக் கொடுத்து, அவர் படுத்துக் கொண்டதும், அவரது திருக்கால் திருக்கைகளைப் பிடிக்க, அவர் நித்திரை போனபின், ஒரு அறைக்குட் சென்று விளக்கை வைத்துக்கொண்டு கணக்கைக் கூட்டிப் பார்க்கும்பொழுது, வரவு செலவு திட்டம் சரிப்படாமல் ஒருதடவை பார்க்க வரவு கலத்தில் மூன்று காசு குறையவும், மற்றொரு முறை பார்க்க, வரவு கலம் சரிப்பட்டு செலவு கலத்தில் மூன்று காசு குறையவும், பின்னொரு முறை கூட்டிப் பார்க்கக் காசு கூடவும், மற்றொருமுறை பார்க்க ஒரு காசு குறைவதுமாய் கணக்கு சரிப்படாமல் போகவே, இரவு இருபத்தி

ரண்டு நாழிகைவரை அதையே மாறி மாறிப் பார்த்துக்கொண்டிருக்கும்பொழுது, ஜனார்த்தன பண்டிதர், இரவு பதினெட்டு நாழிகைக்குக் கண்விழித்து எழுந்து, ஏகநாதர் படுத்து நித்திரை செய்துக்கொண்டிருக்கும் இடத்திற்குச் சென்று பார்க்க, அவர் அங்கில்லாது ஒரு அறையில் விளக்குவைத்து கணக்குப் பார்த்துக்கொண்டிருப்பதைப் பார்த்து, இவனைப் பரீக்ஷிக்க இதுவே சமயமென்று நினைத்து, ஏகநாதர் முன்னே சென்று, சிறிது நேரம் நின்றுகொண்டிருந்தார். தன் ஆசாரியராகிய ஜனார்த்தன பண்டிதர் தன்முன் நிற்பதையும் பாராது கணக்கைக் கவனமாய்ப் பார்த்திருப்பதைக் கண்டு, “ஏகநாதா! இப்பொழுது நீ என்ன செய்துக்கொண்டிருக்கிறாய்?'' என உரத்த குரலுடன் கேட்க, அதையும் கவனியாது கணக்கிலேயே கவனத்தைச் செலுத்துவதைக் கண்டு, சிறிது அருகிற் சென்று, அவன் முதுகில் தனது கையை ஓங்கி அடித்தார். அந்த அடி பட்டதும்கூட தனக்குத் தெரியாமல் கணக்கிலேயே கவனத்தைச் செலுத்தியிருப்பதைக் கண்டு, அவருடைய தீவிரமான வைராக்கியத்தைக் கொண்டாடிக்கொண்டு அங்கேயே நின்றுகொண்டிருக்க, ஏகநாதர் மாறி மாறிக் கணக்கை முற்றும் பார்த்து, கூட்டிக் கணக்கு சரிப்பட்டுவிடவே, சந்தோஷத்தால் தன் தொடையில் அறைந்துகொண்டு ‘சபாஷ்! அச்சா!’ என்று சொல்லித் தலையை ஆட்டினார்.

ஜனார்த்தன பண்டிதர் அதைக்கண்டதும், “ஏகநாதா! இரவு இருபத்தைந்து நாழிகையும் தூங்காது என்ன செய்துக்கொண்டிருக்கிறாய்? எனது கணக்குகளைப் புரட்டிப் புரட்டிப் பார்த்து, இடையிடையே ஒரு துண்டு சீட்டில் எழுதிக்கொண்டிருப்பதையும், பின் நீயே உன் தொடையில் அறைந்துகொண்டு ‘சபாஷ், அச்சா’ என்று சொல்லித் தலையையாட்டியதையும் பார்த்தால், என் கணக்குகளையெல்லாம் மோசம்பண்ணி என்னை அதோகதியாக்க நீ செய்வதுபோலல்லவா யிருக்கிறது? நான் வந்து ஒரு ஜாம நேரமாயும், என்னைக்கூடப் பாராமல் இந்த ஏடுகளைப் பார்த்துக்கொண்டிருக்கின்றனையே? என்னினும் உனக்கு மேலான பொருள் இந்த ஏட்டிலிருக்கிறதென்றுதானே நினைத்து நான் தூங்கும் சமயத்தில் விளக்கை வைத்து கணக்குகளைப் புரட்டிப் புரட்டிப் பார்க்கிறாய் என்று சிறிது கோபமுற்றவர்போல, அபிநயித்து ஏகநாதரிடம் கேட்க, அவர் தனது ஆசாரியன் முன்னே நின்று பேசுவதைக் கேட்டு நடுக்கமுற்று, விரைந்து வந்து அவர் திருவடிகளில் சாஷ்டாங்கதண்டம் சமர்ப்பித்து, “குருநாதா! தேவரீர் எழுந்தருளியதை உணராது மந்தமதியினால் இருந்து விட்டேன், நேற்று அடியேனிடம் “கணக்கைச் சரிபார்த்து திட்டம் கட்டி என்னிடம் காட்டவேண்டும்'' என்று நியமனம் செய்ததால், கணக்கைச் சரிபார்க்கும்பொழுது, அது சரிப்படாமல் மூன்று காசுவரை கூடியும் குறைந்தும் வந்து

கொண்டிருந்தது; இப்பொழுதுதான் கணக்கு சரிப்பட்டது. கணக்கு சரிப்பட்ட சந்தோஷத்தால் துடையைத்தட்டிக்கொண்டு ஏதோ உளறிவிட்டேன்" என்றார். அவர், "ஏகநாதா! நான் உன்னிடம் கணக்குப் பார்க்கும்படி சொல்லிவிட்டது எனக்கு ஞாபகமில்லை. கணக்கைப் பார்த்தாயா? சரியாய் விட்டதா? ஆனால், நல்லது, நீ படுத்துக்கொள்" என்று சொல்லிவிட்டு தனது படுக்கையில் வந்து படுத்துக்கொண்டு ஏகநாதரைப்பற்றிச் சிந்திக்கிறார். "இவன் கணக்கில் இவ்வளவு வைராக்கியம் வைத்து நாம் வந்து நின்றதையும் பாராது, அழைத்த சொல்லையும் கேளாது, முதுகில் அறைந்ததையும் உணராது 'பார்க்காமல் படுப்பதில்லை' என்று மூன்று காசுக்கு முட்டிக்கொண்டிருக்கும் இவனே கடவுளைத் தியானிக்குந் தகுதியுடையவன். நான் சென்றழைக்கவும் கேளாது, அடிக்கவும் உணராத நிலையில் கவனத்தைச் செலுத்தியவன், ஈஸ்வர தியானம் பண்ணும்பொழுது தியானத்தைக் கெடுப்பதற்குரிய காமம் வெகுளி மயக்கம் என்பன இவனிடம் அணுகாது. இந்த உத்தமனுக்குச் செய்வதுதான் உபதேசமாகும். "ஆதலின் நாளையே இவனுக்கு உபதேசஞ்செய்யவேண்டும்" என்று தன்னுள் நினைத்துக்கொண்டு தீர்த்தமாடச் சென்றார். ஏகநாதரோ, வெளியில் படுத்தபடியே, "அந்தோ! இன்று என்ன குற்றம் செய்துவிட்டேன்! நான் கணக்குப் பார்த்துக்கொண்டிருக்கும்பொழுது எனது ஆசான் எழுந்தருள, அவரைப் பாராமலும், அவரைப் பணியாமலும், இருந்துவிட்டேனே! நான் இத்தனை நாள் செய்த கைங்கரியத்தின் பலனையெல்லாம் இன்று செய்த தீமையால் இழந்தேனே" என்று சிந்தித்துக்கொண்டே அன்றிரவு நித்திரையின்றி வருந்தித் தீர்த்தமாடச் சென்றார்.

சனார்த்தன பண்டிதர் பஞ்ச பஞ்ச உஷத்காலத்தில் தீர்த்தமாடி, நித்திய கர்மங்களை முடித்துக்கொண்டு, தனது திருமாளிகைக்கு வந்ததும், வழக்கம்போல, ஏகநாதர் தீர்த்தம் கொணர்ந்து, திருவடியில் அப்பி, அந்த ஸ்ரீபாத தீர்த்தத்தைத் தலையில் புரோக்ஷித்துக்கொண்டு பரமானந்தபரிதனாய், அவர் தியானத்திற்குரிய வியாக்கிராசனம் விரித்து, அவரை அதில் எழுந்தருளப்பண்ணி, அஞ்சலியஸ்தனாய் முன்னே நின்றுக்கொண்டிருக்கும்பொழுது, சனார்த்தன பண்டிதர் அந்த ஆசனத்தில் உட்கார்ந்து, ஏகநாதரைப் பார்த்து, "வத்சா! நீ என்னிடம் கோரிவந்த பொருளை, நேற்று இரவில் நீயாகவே பெற்றுக்கொண்டாய். மூன்று காசுக்கும் இரண்டு காசுக்கும் ஒரு காசுக்கும் இரவெல்லாம் கண்விழித்து நான் வந்ததுகூட தெரியாதிருந்து கணக்கைப் பார்த்ததுபோல, சர்வேஸ்வரனை கவனம் செலுத்திப் பார்த்தால் போதுமானது. அந்த வஸ்துவை அறிய விரும்பும்பொழுது, மற்றைய பொருள்களில் கவனம் போய்விடப்படாது.

பக்தி செய்வது தான் 'வைராக்கியம்' என்பது. இந்த வைராக்கியமில்லாமல் ஆயிரம் ஆண்டு பக்தி பண்ணினாலும், சர்வேஸ்வரனை அடைய முடியாது. இது உண்மை. நான் நேற்று உன்னிடம் விளங்கக் கண்டேன். கணக்கின் தவறுதலைக் கண்டாலன்றி, விடுவதில்லை யென்று, நீ வைராக்கியம் கொண்டதுபோல, ஈஸ்வரனைக் கண்டாலன்றி, விடுவதில்லையென்று பக்தி பண்ணுவதுதான் சிறந்தது" என்று சொல்லும்பொழுது, ஏகநாதர் குருநாதருடைய பாதத்தில் சாஷ்டாங்கமாக விழுந்து தண்டம் சமர்ப்பித்து, "சுவாமி! தெரிந்துகொண்டேன். அடியேன் இதுவரை சுத்தப் பாமரனாய், மிருக பக்ஷிகளோடொப்ப பகுத்தறிவற்றவனாய் இருந்தேன். நீர் எனக்கு உபதேசியாமலே ஈஸ்வர நிலயத்தை அடியேனடைந்து கடைத்தேறச்செய்த உமது கருணைப் பெருக்கை, என்னென்று கூறுவேன்? ஆயினும், எனது மனமானது இந்திரியங்களின் வசப்பட்டு, காமமரபியராய கள்வருக்கு இடங்கொடாது பண்டரிநாதனுடைய பாதத்தாமரைகளையடைய, அனுக்கிரகம் செய்யவேண்டும், நான் எனது என்னும் செருக்கையறுத்து, நற்கதியாகிய பரமபதத்தினை அடியேன் பெற, அனுக்கிரகம் செய்யவேண்டும்" என்று பிரார்த்தித்தார்.

ஜனார்த்தன பண்டிதர் ஏகநாதருடைய இனிய மொழிகளைக் கேட்டு, பரமானந்தமடைந்து தான் எழுந்து அவரைத் தழுவிக்கொண்டு, அவருடைய திருச்செவியில் தாரக மந்திரத்தை உபதேசிக்க, அதைப் பெற்றுக்கொண்டு தன் கண்களினால் 'சர்வம் விஷ்ணுமயம் சகத்' என்னும் வாக்கியத்தின்படி, எந்த வஸ்துவும் தனக்கு பண்டரிநாதனை பாண்டுரங்கனாகவே தோற்ற, அவனுடைய சர்வ வியாபிதத்தைக் கண்டு, பரமானந்த பரிதனாய் எமாறுது தனது ஆசானை பக்தியுடன் பணிந்து பணிவிடை செய்துக்கொண்டிருந்தார். இப்படி இருக்கும்பொழுது, ஜனார்த்தன பண்டிதர் தனியேயிருந்து யோசிக்கிறார். அதாவது, "ஏகநாதனைப் பார்த்தால், வயதில் மிகவும் சிறுகுழந்தையாகயிருக்கின்றான். இவன் வைராக்கியமும், பக்திசெய்யும் தீவிரத்தையும் பார்த்தால், எனக்கே ஆச்சரியமாயிருக்கிறது! இவன் மானிட யோனியில் உற்பவித்தாரெனினும், தேவ அம்சமென்றே நினைக்கும்படியிருக்கிறது. இந்த உத்தமனை நான் சிஷ்யனாய் அடைந்தபின் இவனிடம் நாம் ஒன்றும் மறைக்கப்படாது. நமது உபாசனா மூர்த்தியாகிய தத்தாத்திரேய மூர்த்தியை இவனுக்குத் தரிசனம் செய்துவைக்க வேண்டும். அவருடைய அனுக்கிரகம் இவனுக்கும் பரிபூரணமாக ஏற்படும்படி செய்தாலன்றி இவனுக்குக் கவிதா ஞானம் ஏற்படாது" என்று தன்னுள் நினைத்து, "குழந்தாய்! நீ என்னுடன் வா" என்றழைத்துக்கொண்டு, மானிட சஞ்சாரமில்லாத இடத்தில் கொண்டுபோய் உட்காரவைத்து "ஏகநாதா! நான் உபாசனா மூர்த்தியாய் வணங்கும்

தத்தாத்திரேயரை உனக்குத் தரிசனம் செய்து வைப்பதற்காகவே நான் உன்னை இங்கு அழைத்துவந்தேன். ஆனால் அவர் முதலில் உன் கண்முன்னே சுய உருவத்தோடு தோற்றப்படமாட்டார். இழிந்த சாதியில் பிறந்தவர் ஒருவர்போல உருமாறித் தோன்றுவார். நான் அவரிடம் உட்கார்ந்து பேசிக்கொண்டிருப்பேன்; அந்த சமயம் பார்த்து நீ அவருடைய பாதத்தில் விழுந்து வணங்கினால், தனது உச்சிஷ்டத்தை உனக்குக் கொடுப்பார். அதை நீ எச்சலென்று இகழாது வாங்கி உண்டுவிடு. அம்மட்டே நீயும் என்னைப்போல பண்டிதர் என்னும் நாமதேயம் பெறுவாய். அளவுகடந்த பாண்டித்துவம் உனக்கு வந்துவிடும்'' என்று சொல்லிவிட்டு, தான் தத்தாத்திரேயரை மனதில் தியானித்துக் கொண்டிருந்தார்.

தத்தாத்திரேயமூர்த்தியானவர், துருக்கி ஸ்தானத்திலிருந்து சிந்திய நாட்டிற்கு அப்பொழுது தான் வந்துகொண்டிருக்கும் துருக்கி வேடமுடையவராய், தோலால் தைத்த சட்டை புனைந்து, செந்நிறத் தாடியுடையவராய், பருத்து உயர்ந்து சிவந்து தோன்றும் மேனியுடையவராய், கண்டோர் நடுங்கும் பார்வையுடைய கண்களில் அஞ்சனம் தீட்டியவராய், தலையில் பத்து முழத்திற்குக் குறையாத நீளமுள்ள பாகையைத் தரித்தவராய், குதிரைமீதேறி அந்த வனத்தில் வந்துகொண்டிருந்தார். அப்பொழுது சனார்த்தன பண்டிதர், குதிரைமீது வந்துகொண்டிருக்கும் துருக்கனைக் கண்டதும், விரைவாய் எழுந்து சென்று, அவர் திருவடியில் விழுந்து, நமஸ்காரம் செய்து, குதிரையிலிருந்து அவரை இறக்கி, ஒரு மரநிழலில் இருக்கச்செய்து, தானும் அவருடன் உட்கார்ந்து சிறிதுநேரம் பேசிக்கொண்டிருக்க, துருக்க உருவுடன் வந்த தத்தாத்திரேயர், சனார்த்தன பண்டிதரைப் பார்த்து, "எனக்குப் பசியாயிருக்கிறது, ஏதாகிலும் கொஞ்சம் ஆகாரம் கொடு'' என்று கேட்க, உடனே ஒரு பீங்கான் தட்டினில் அநேக பழவர்க்கங்களைப் பரப்பி, அந்தத் தட்டத்தை அவர் முன்னே வைத்ததும், தத்தாத்திரேய மூர்த்தியானவர், சனார்த்தன பண்டிதரைப்பார்த்து, "நீயும் என்னுடன் இருந்து உண்ண வேண்டும்'' என்று சொல்ல, சனார்த்தன பண்டிதரும் பீங்கான் தட்டிலுள்ள பதார்த்தங்களான பழங்களை புசித்துத் தின்றுகொண்டிருக்கும்பொழுது, ஏகநாதருடைய கண்களுக்குத் தத்தாத்திரேயருடைய செயலால் அந்தத் தட்டத்திலிருக்கும் பழங்களெல்லாம் பக்குவம்செய்த மாம்சகண்டங்களாகத் தோன்றிற்று. இதைக் கண்டதும் ஏகநாதர் நடுக்கமுற்று, "இது என்ன கொடுமை! நமது ஆசாரியனுக்குமா இப்படி தகாத காரியம் செய்ய மனம் வந்தது! அந்தோ! குரு பிராமணராயிற்றே! பரமசரித்திரனை துருக்கன் கண்களில் படினும், தீர்த்தமாட வேண்டுமே! கோமாம்ச பக்ஷணம் செய்யும் துருக்கிஸ்தானத்திலிருந்து வந்த துருக்கனுடன் உட்கார்ந்துக்கொண்டு ஒரே தட்டிலிருந்து மாம்ச கண்டங்களை எச்சலின்றி, அருவருப்பின்றி, தின்றுக் கொண்டிருக்கிறாரே! பிராமண சாதியில் பிறந்தவன் புலானுண்ணத் தகுமோ! இத்தகைய தகாதன செய்யும் இவரையோ ஆசாரியனாகக் கொண்டேன்! அப்படி கொண்டதும், என்செயலில்லாது பண்டரிநாதனும் எனக்கு சொப்பனத்தில் வந்து, "சனார்த்தன பண்டிதரை ஆசாரியனாகநான் அடையும்படி நியமித்தாரே! அவரது நியமனப்படியன்றோ, நான் இவரைத் தேடி ஆசாரியனாகக் கொண்டேன். இவர் துலுக்கனுடன் கலந்து உண்ணுகிறாரே, இது என்ன சோதனையோ தெரியவில்லையே! ஆனால் இவர் என்னை அழைக்கும் பொழுது, காதில் கேளாததுபோல் இருந்துவிடவேண்டும். இந்த விகாரமான துருக்கனுடன் உட்கார்ந்து மாம்ச பக்ஷணங்களை உண்ணுவதைப் பார்க்கிலும், ஆசாரியசாபம் பெறுவது மேலென்று நினைத்து, சற்று தூரத்தே சென்று, எதையோ பார்த்துக்கொண்டிருப்பவர் போல, பராக்காக இருந்துவிட்டார்.

தத்தாத்திரேய சுவாமிகள் அச்சமயம், சனார்த்தன பண்டிதரைப் பார்த்து, அதோ உன்னுடன் வந்திருக்கும் புதியவன் நம்முடன்கூட இருந்து உண்ணத் தகுந்தவரே. அவரையும் அழை என்று நியமிக்க அவர் ஏகநாதர் பராக்காகயிருப்பதுபோல் அபிநயிக்கும் திசையைநோக்கி, இரண்டு மூன்றுமுறை பெயரைச் சொல்லி அழைக்கவும், வராமை கண்டு இன்று இவனுக்குக் கொடுத்து வைத்தது இவ்வளவுதானென்று நினைந்து, துருக்க வேடத்துடனிருக்கும் தத்தாத்திரேய மூர்த்தியை அடைந்து சிறிதுநேரம் அவருடன் சல்லாபம் செய்து அவரைக் குதிரை மீதேற்றி அனுப்பிவிட்டு, தனது சிஷ்யனான ஏகநாதர் நின்றுக்கொண்டிருக்கும் இடத்திற்கு வந்து, "தனையா! என்னுடன் துருக்கர்போல் வந்து பேசிக்கொண்டிருந்தவர்தான் தத்தாத்திரேயர். தன்னை நோக்கி யருந்தவம் செய்தோர்க்கு எளிதில் அடைய வொண்ணாத தத்தாத்திரேயர் உன்மீது கருணை புரிந்து உன்னை அழைக்குமாறு என்னிடம் சொன்னார். அவ்வாறே நான் மூன்றுமுறை கூவி அழைக்கவும் நீ வந்தாயில்லை. அவருடைய அனுக்கிரகம் உனக்குப் பூரணமாக ஏற்பட்டு அதை அடைய பாக்கியம் செய்யாது போயினை'' என்று சொல்லிக்கொண்டு தனது திருமாளிகைக்கு ஏகநாதருடன் எழுந்தருளினார்.

ஏகநாதருக்கு தத்தாத்திரேய மூர்த்தியால் கவிதாஞானம் அடையச்செய்த அத்தியாயம்

சனார்த்தன பண்டிதர் பின்னும் ஏகநாதரது பக்திக்கு வியந்து, இன்று எப்படியாவது இவருக்கு தத்தாத்திரேயரது பூரண அனுக்கிரகம் கிடைக்கவேண்டுமென்று நினைத்து, மறுபடி

யும் தன்னுடன் ஆரண்யத்திற்கு அழைத்துக்கொண்டு போகும் பொழுதே தத்தாத்திரேயரது வைபவங்களைச் சொல்ல ஆரம்பித்தார். அதாவது முன்னொரு காலத்தில், நாரதரானவர் கொஞ்சம் இரும்பினால் கடலைகள் செய்து எடுத்துக்கொண்டு உலகத்தில் பதிவிரதை யாரென்பதைப் பார்க்கவேண்டுமென்று விரும்பி; அந்தக் கடலையை யெடுத்துக்கொண்டு சத்தியலோகம் சென்று சாரதா தேவியைப் பணிந்து, தோத்திரம் பண்ணி, "அம்மா! எனக்கு நிரம்ப பசியாயிருக்கிறது; அதற்கு என்னிடமோ கொஞ்சம் கடலை யிருக்கிறது. அதை மாத்திரம் சட்டியில் போட்டு வறுத்துக் கொடும்" என்று சரஸ்வதியினிடம் கொடுக்க, அவள் அதை வாங்கி சட்டியைக் காயவைத்து நெடுநேரமாக வறுக்கவும், அது பொரியாதது கண்டு, கடலை பொரியாத காரணமென்ன? என்று சட்டியில் இருந்த கடலையைக் கீழே கொட்டிப் பார்க்க, அது இரும்பு கடலையா யிருந்தது. அதனைக் கண்டு கோபங்கொண்டு கடலை சூடாறியதும் வாரிக்கொண்டு நாரதரிடம் வந்து, "தனையா! இரும்புக் கடலையைக் கொணர்ந்து என்னிடம் கொடுத்துப் பொரித்துத்தாவென்று கேட்டாயே? இரும்பு பொரியுமா? உனக்கு இவ்வளவு வயதாயும் குறும்பு தொலையவில்லையே? உன் கடலைகளை வாரிக்கொண்டுபோ" என்று அவர் முன்னே இறைத்தாள். நாரதபகவான், நடுங்கினவர்போல நடித்துக்கொண்டு கடலைகளில் ஒன்றையும் விடாது பொறுக்கி எடுத்துக்கொண்டு, வெண்டாமரையாளது திருமுகத்தை நோக்கி அடியேனுக்கு இன்று ஆகாரம் இந்த கடலைதான். ஆனால், இதை எந்த பதிவிரதை பொரித்துக் கொடுப்பாளோ தெரியவில்லையே" என்று சொல்லி, மலரயன் மனைவியை வணங்கிவிட்டு, வைகுண்டத்திற்கு எழுந்தருளி, திருமாமகளை தோத்திரம் செய்து, ஏ உலகன்னையே! எனக்கு இந்த வைகுந்தம் வந்தும் பசியாயிருக்கிறது. அதற்கு என்னிடமே கொஞ்சம் கடலை யிருக்கிறது. இதை என் தாயினிடம் கொடுத்து வறுத்துத் தருமாறு வேண்டினேன். அவள் அதை வாங்கி நெடுநேரம் வரை வறுத்து மீண்டுவந்து, "இது பொரியவில்லை" என்று என்னிடம் கொடுத்துவிட்டாள். தாங்களாவது கருணைசெய்து இதை வறுத்துத் தரவேண்டும்" என்று இலக்ஷ்மி தேவியின் கையில் கொடுத்தார். அவள் அதை வாங்கி, "நமது மருமகளான சாரதாவுக்கு கடலை வறுக்கத் தெரியாதுபோன காரணம் என்ன? கடலையிலேதாவது குற்றமிருக்குமா?" என்று பார்க்க, அது இரும்புக் கடலையா யிருப்பது கண்டு, "நாரதரே! உமது குறும்பை யாரிடமும் காட்டுவதென்று வைத்துக் கொள்ளாதீர். இரும்புக் கடலையைக் கொணர்ந்து இதைப் பொரித்துத் தாவென்று கேட்கிறீர்? இது பொரியாது" என்று அவர் கையில் கொடுக்க, அவர் அதை வாங்கிக்கொண்டு, "தாயே! எனக்கு இந்த கடலையைத்

தவிர வேறு ஆகாரம் கிடையாது. ஆனால், இதை எந்த பதிவிரதை வறுத்துத் தருவாளோ" என்று சொல்லிக் கொண்டு நேரே திருக்கயிலாய மலையை யடைந்து பார்வதிதேவியாரைப் பணிந்து, தோத்திரம் பண்ணி, முன்போல் கடலையை அவள் கையிலும் கொடுத்து, "ஜெகதாம்பிகா! இந்த கடலையை எனதன்னையிடத்திலும், ஸ்ரீமந்நாராயணனுடைய திருமார்பில் வீற்றிருக்கும் ஸ்ரீதேவியிடத்திலும் கொடுத்து வறுத்து தரச் சொன்னேன். அவ்விருவரும் வாங்கிப் பார்த்து, வறுக்க முடியாதென்றனர். நான் அவ்விருவரையும் பணிந்து, "எனக்கு இதுவே ஆகாரம். இதை யெந்த பதிவிரதை வறுத்துத் தருவாளோவென்று சொல்லி உம்மிடம் வந்தேன்" என்று கடலையை அவ்வம்மையின் கையில் கொடுத்தார். பார்வதியும் கடலையை வாங்கிப் பார்த்து, இரும்பா யிருப்பது கண்டு, நகைத்துக் கொண்டு, "ஓய் நாரதரே! நீர் பிரமச்சாரி. உமக்கு ஸ்திரீகளைப் பற்றிய விஷயங்கள் என்ன தெரியும்? இரும்புக் கடலையை வறுத்துக் கொடுக்கும்படி பதிவிரதை எங்கிருக்கின்றாளென்பதைத் தேடித் திரிந்து திண்டாடும். இந்த கடலையைக் கொண்டு செல்லும். இதை வறுக்க என்னாலாகாது" என்று அவர் கையில் கொடுக்க, அதை வாங்கிக்கொண்டு பூலோகம் வந்து சேர்ந்தார்.

நாரதர் பூலோகம் வந்து சேர்ந்ததும், தன் ஞானதிருஷ்டியால் கற்புடைய வனிதையர் யாரென்று பார்க்க, அத்திரி மஹாமுனிவருடைய பத்தினியாரான அநுசூயா தேவியைக் கற்பிற் சிறந்தவளென்று தோற்ற, அக்கணமே அத்திரி முனிவருடைய ஆஸ்ரமத்திற்குச் செல்ல, எதீந்தராகிய அத்திரிபகவான் சமாதியில் தன்னை மறந்திருக்க, அவர் மனைவியான அநுசூயா தேவியானவள், நாரதபகவானைத் தோத்திரம் பண்ணி, "சுவாமி! தேவரீர் இங்கு எழுந்தருள, இந்த ஆஸ்ரமம் என்ன தவம் செய்ததோ" என்று பிரார்த்தித்தாள். அப்பொழுது நாரதபகவான், தன்னிடமிருந்த இரும்புக் கடலைகளை அவள் கரத்தில் கொடுத்து, "தாயே! எனக்குப் பசி அதிகமாக யிருக்கிறது. இதை வறுத்துத் தரவேண்டும்" என்று சொன்னார். அநுசூயா தேவி, அந்த கடலைகளை வாங்கி அது இரும்புக் கடலைகளென்று தெரிந்துக் கொண்டு, தனது நாதனைத் தியானித்துக்கொண்டு, சட்டியில் போட்டு வறுக்கவே, அது நொடியில் வறுப்பட்டது. உடனே அதை ஆறவைத்து நாரதருடைய கையில் கொடுக்க, அதை வாங்கிக் கொண்டு, "தாயே! நான் வருகின்றேன்" என்று சொல்லி நேரே சத்தியலோகத்திற்கு வந்து கமலாசனனைப் பணிந்துவிட்டு, சரஸ்வதியின் முன்னேபோய் தன் தாயையும் பணிந்து, இரும்புக் கடலையை வாயில் போட்டு கொரித்துக் கொண்டு நின்றார். சாரதா "வாயில் போட்டுத் தின்பது யாது? இன்று இந்த கடலையை யாராவது பதிவிரதை பொரித்துத் தந்தாலன்றி,

வேறு ஆகாரம் செய்யே னென்றனேயே? கடலை பொறிந்ததா? அதைப்பொறித்து உன் கையில் கொடுத்த பதிவிரதை யார்? சொல்" என்று கேட்டாள். நாரதர் நகைத்துக் கொண்டு கடலையை யெடுத்து அவள்கரத்தில் கொடுத்து "தாயே! இதைப் பாரும், பொரித்திருக்கிறதா யில்லையா என்பதைக் கவனியும்? உம்மிடம் கொடுக்க, இது பொரியாதென்று சொல்லி, என்னையும் பரிகசித்துக் கடலையை என் கையில் கொடுத்துவிட்டீரே? பூலோகத்தில் அத்திரி முனிவரென்றொரு மகாத்மா தவம் செய்துக் கொண்டிருந்தார் அவரது பத்தினி அனுசூயாதேவி என்பவள். அவளைப் பதிவிரதையர்களுக் கெல்லாம் தெய்வமென்றே சொல்ல வேண்டும். அந்த உத்தமியினிடம் நான் இருப்பு கடலையைக் கொடுக்க, அதை அவள் ஒரு இமைப் பொழுதிற்குள் பொரித்துத் தந்தனள்" என்றார். இந்த வார்த்தையைக் கேட்டதும், அனுசூயையினிடம் அசூயைக் கொண்டு, எப்படியாவது தனது நாதனால் அவளுடைய கற்பை அழிக்க வேண்டு மென்று கருதி, அந்த கடலைகளில் இரண்டு மூன்றை தனது கைவசம் வைத்துக் கொண்டு மீதமுள்ளதை நாரதரிடம் கொடுத்தனுப்பினாள். நாரதர் அதை வாங்கிக் கொண்டு, "தாயே! நான் போய் வருகிறேன்" என்று சரஸ்வதியினிடம் விடை பெற்றுக் கொண்டு, சத்திய லோகத்தைவிட்டு, ஸ்ரீவைகுந்தத்திற்கு வந்து, பரவாசுதேவனைப் பணிந்து லக்ஷ்மீதேவியின் முன்சென்று தண்டம் சமர்ப்பித்து இரும்புகடலை அவள் பார்க்கும்படி வாயில் போட்டுக் கொண்டு மென்று தின்றார். லக்ஷ்மீயும் நாரதரிடம் சரஸ்வதி கேட்டது போலவே கேட்டு, அனுசூயையினிடம் அசூயை யடைந்து, இரண்டு மூன்று கடலையை வாங்கி வைத்துக்கொண்டு, "நிமிஷமே என் நாயகரிடம் சொல்லி, அவள் கற்பை யழிக்கின்றேன்" என்று நினைந்து, நாரதரை அனுப்பி விட்டாள்.

நாரதர் அப்பொழுதே கயிலாயமலைக்கு வந்து கண்ணுதற் கடவுளை பணிந்து பார்வதியிடம் சென்று பணிந்து, "தாயே! உம்மிடம் அடியேன் தெரிவித்தபடி மூவுலகங்களும் வணங்கும் சிறப்புடைய பதிவிரதையான ஒருத்தியினிடம், இரும்புக் கடலையை கொடுத்து பொரித்துத் தரச்சொல்லி வாங்கி வந்தேன். இதோ பாரும்" என்று, பார்வதிதேவி கையில் கொஞ்சம் கொடுத்துவிட்டு சில கடலைகளை அவள் பார்க்க வாயில் போட்டு தின்று கொண்டிருந்தார். பார்வதியும் நாரதரைப் பார்த்து "இதைப் பொரித்து உன்னிடம் தந்த உத்தமி யார்" என்று கேட்க, சரஸ்வதியிடத்திலும், இலக்குமியிடத்திலும் சொன்னது போல, அனுசூயையின் பெருமையைப் புகழ்ந்து, பார்வதியிடமும் சொல்ல, அவளும் அனுசூயையிடம் அசூயை யடைந்து, தனது கணவனால் அவள் கற்பினை அழிக்க நினைந்து, நாரதரை அனுப்பிவிட்டாள். நாரதர் தன் வயிற்றைத் தடவிக்கொண்டு

"இன்றைக்கு நல்ல கலகம் கிடைத்த தென்று நினைத்து பூவுலகிற்கு வந்துவிட்டார்.

இதற்குள் முதலில் சரஸ்வதியானவள், நாரதரிடம் பெற்றுக் கொண்ட இரும்புக் கடலையைத் தன் நாயகரான பிரம்ம தேவரிடம் கொடுத்து, நாரதர் சற்று நேரத்திற்கு முன்னே வந்ததும் இரும்புக் கடலையைப் பொரித்து தரச் சொன்னதும், தன்னால் பொரிக்கமுடியாது என்று அவர் கையில் கொடுத்ததும், அவர் தன்னை நோக்கி 'ஒரு பதிவிரதையிடம் கொடுத்து, இதைப் பொரித்துத் தரச்சொல்லி அதை ஆகாரமாகப் புசிப்பேனன்றி, வேறு உணவு இன்று உண்ணேன்' என்று சபதம் செய்துவிட்டு சென்றதும் சொல்லி, இந்த கடலையைப் பூலோகத்திலிருந்து தவம்செய்யும் அத்திரி முனிவருடைய பத்தினியான அனுசூயையென்பவளிடம் கொடுத்துப் பொரித்து வாங்கிக்கொண்டு வந்து, என் முன்னே நின்று, பொரித்த இரும்புக் கடலைகளைத் தின்றுகொண்டு, நாரதன் என்னைப் பார்த்து நகைத்தான். நீர் அவளுடைய கற்பை அழித்தாலன்றி எனக்கு இனி நாரதன் முகத்தில் விழிக்க வழியில்லை" எனச் சொல்லி கண்ணில் நீரை யுதிர்த்தாள். பிரமதேவன் அவள் கண்ணீரைக் கையால் துடைத்து, "தேவீ! நீ வருந்தவேண்டாம். இக்கணமே அவள் கற்பைக் குலைத்து விட்டு வருகிறேன்" என்று சொல்லிவிட்டு, ஒரு அதிதியின் உருவத்தையடைந்து, அத்திரிமுனிவருடைய ஆஸ்ரமத்திற்கு எழுந்தருளினார்.

இலக்ஷ்மியும் சரஸ்வதி சொன்னதுபோலவே தன் நாயகனிடம் சொல்லி, அவள் கற்பையழிக்கும்படி வேண்ட பிரமதேவர் அத்திரி முனிவருடைய ஆஸ்ரமத்திற்கு அதிதி வேடந்தரித்து வந்ததுபோலவே விஷ்ணுவும் வந்து சேர்ந்தார். பின்னே பரமசிவனும் பார்வதியால் ஏவப்பட்டு, அதிதிவேடம் புனைந்து அத்திரி முனிவர் ஆஸ்ரமம் அணுகினார். மூர்த்திகள் மூவரும், அனுசூயையின் கற்பை அழிக்கக் கருதிவந்து ஓரிடத்தில் கூடி, தாங்கள் வந்த விஷயத்தை ஒருவரோடொருவர் சொல்லிக் கொண்டு, மூவரும் ஒன்றாய்ச் சேர்ந்து அத்திரிமுனிவருடைய ஆஸ்ரமத்திற்குள் சென்றார்கள். அத்திரிமுனிவர் மூன்று அதிதிகளையும் கண்டு, ஆனந்தபரவசராய் எழுந்து வந்து வணங்கி, ஆஸ்ரமத்தினுள்ளே அழைத்து வந்து அர்க்கிய பாத்யமளித்து, ஆதரித்து நீங்கள் மூவரும் அடியேனால் அதிதி பூஜை செய்தற்குரியவர்கள். ஆகையினாலே, அடியேன்மீது கருணைபுரிந்து, எனது பூசையை யேற்றுக்கொள்ள வேண்டும்" என்று சொல்ல, அப்பொழுது மூவரும், அத்திரி முனிவரைப் பார்த்து, "தவச்செல்வமே! எங்கள் மூவரையும் பூசிப்பது, என்றால் தங்கள் போன்ற வானப்பிரஸ் தாஸ்ரமிகளுக்கு மிகுந்த கஷ்டமேற்படும். எங்களைப் பூசிக்கின்ற தம்பதிகள், மானுபிமான மற்றவர்களாக யிருக்க

வேண்டும், எங்களுக்கு உணவு பரிமாறும்பொழுது, நிர்வாணியா யிருக்கவேண்டும், வீட்டுக்குடையவன் எங்களுடன்கூட இருந்து உன்னை அவன் பத்தினியே இடையில் வஸ்திரமின்றி, பரிமாற வேண்டும். அந்த இடங்களில் தான் நாங்கள் பூசையை யேற்றுக் கொள்ளுவோமென்று சொல்ல, அவர் அதற்குச் சம்மதித்துத் தன் மனைவியான அனுசூயா தேவியினிடம் சொன்னார். அனுசூயையும் நாதன் சொல்லுக்கு நன்றென்று சிந்தை சம்மதித்து, வந்தவர்கள் மூவரும் யாரென்று சிந்தை செய்ய, தனது கற்பை அழிக்கக் கருதி, திரிமூர்த்திகளும் வந்தனர்களென்று தெரிந்துகொண்டு தனது கணவரிடம் "அவர்களைப் பூசைக் கழைக்கலாம்" என்று சொல்லவும், அத்திரி முனிவர் அதிதிகளின் உருவம் தரித்துவந்த மூவரையும் தமது ஆஸ்ரமத்தின் உள்ளே அழைத்து உட்காரவைத்துத் தானும் அவர்கள் பக்கத்தில் உட்கார்ந்தார். உடனே அனுசூயை தனது நாயகனைத் தியானித்துக் கொண்டு, இம்மூவரும் எனது மானத்தை நோக்க, "அறிவிலா குழந்தைகளாகுக" என நினைத்த மாத்திரத்தில், திரிமூர்த்திகள் மூவரும் மூன்றுமாத குழந்தைகளாய்ச் சிற்றுடையின்றி அழுதுகொண்டிருக்க, அத்திரி முனிவர் நடுக்கமுற்று, அனுசூயையைப் பார்த்து, "பெண்ணே! நீ என்ன காரியம் செய்தாய்? இவர்கள் பாலகராகும்படி இவர்கள் உனக்குச் செய்த குற்றமென்ன? எனக்கேட்க, அனுசூயை, "நாதா! இம் மூவரும் உண்மையில் அதிதிகளல்ல. என் கற்பை அழிக்கும்படி இவர்கள் மனைவியரால் ஏவப்பட்டு அதிதியுருவந் தாங்கி வந்தனர். இம் மூவர்களும், நமது ஆஸ்ரமத்தில் குழந்தைகளாக சிலநாளிருக்க வேண்டியவர்களே. தாங்கள் யாரை நோக்கி தவம் செய்கின்றீரோ அந்த மூவரான பிர்ம்மா, விஷ்ணு, உருத்திரன் இவரே நாராயணன், இவரே உருத்திரன் எனத் தன் நாதனுக்குக் காட்டி, அந்த மூவருக்கும் பாலூட்டி மூன்று தொட்டில் மாட்டி மூன்று குழந்தைகளையும் அதில் கிடத்தித் தாலாட்டிக் கொண்டிருந்தனள்.

இப்படி சிறிதுநாள் கழிந்ததும், சரஸ்வதி தன் நாதன் சென்று திரும்பி வராதது கண்டு, தனது மாமனாரான நாராயணனைத் தேடிச்செல்ல, பார்வதி தன் கணவன் வராததினால் தன் அண்ணன் வீடு அடைந்தாள். லக்ஷ்மி தன் கணவனும் வராமையால் அவர்களோடு சேர்ந்து வருந்தி, "உன் கணவன் எங்கே சென்றார்" எனத் தனித்தனியே கேட்டு அனுசூயையின் கற்பை அழிக்கவே மூவரும் சென்றார்கள் என்று தெரிந்துகொண்டதும், தங்களுக்குள் ஒருவரை ஒருவர் பார்த்து லச்சை படுவதைத் தவிர்த்து, மூவருக்கும் அனுசூயை யென்னும் ஒரு ஸ்திரீயால் ஆபத்து வந்து விட்டதென் றுணர்ந்து, அத்திரி முனிவருடைய ஆஸ்ரமத்திற்கு வந்து அனுசூயையை தோத்திரம் பண்ணவும்,

அனுசூயை, சரஸ்வதி லக்ஷ்மி பார்வதி என்னும் மூவருக்கும் பாதபூசை செய்து, "என் தாய்மார்களே! உங்கள் நாயகர்கள் இந்த ஆஸ்ரமத்திற்குள்ளேயே யிருக்கிறார்கள். அவர்களைத் தனித்தனியே நீங்கள் அழைத்துச்செல்லுங்கள்" என்று சொல்ல, குழந்தைகளாகத் தொட்டில்களில் கிடந்த மூவரையும் காட்ட, இவர்கள் மூவரும் தங்கள் தங்கள் கணவன் இன்னானென்று தெரிந்துகொள்ள முடியாமல், ஒன்றுபோல இருக்கும் குழந்தைகளைக் கண்டு திகைத்து நின்றனர். அப்பொழுது அனுசூயா தேவி, கொஞ்சம் ஜலம் கொணர்ந்து மூவர் முகத்திலும் புரோக்ஷிக்க, குழந்தை வடிவாயிருந்த மூவரும் தங்கள் சுயவடிவை யடைந்து தமது மனைவியர் முகத்தில் விழிக்க லச்சையுற்று நிற்கும்பொழுது, அத்திரிமுனிவரும் அனுசூயாதேவியும் வந்து மூவரையும் அவர் தேவியருடன் பணிந்து, நாங்கள் செய்யும் தம்பதி பூசையை யேற்றுக்கொள்ள வேண்டுமென்று பிரார்த்திக்க, திரிமூர்த்திகளும் தங்கள் தங்கள் பத்தினியருடன் நின்று அனுசூயையும் அத்திரி முனிவரும் செய்யும் தம்பதி பூசையை யேற்றுக்கொண்டு அத்திரிமுனிவரைப் பார்த்து, "நாங்கள் மூவரும் உமது குழந்தைகளாய் உமது பத்தினியான அனுசூயாதேவியால் பாலூட்டி வளர்க்க வளர்ந்தோமாதலின், எங்கள் மூவரம்சமும் ஒன்றாய்க்கூடித் தத்தாத்திரேயரென்னும் பெயருடன் உமது குழந்தையாயினோம்" என்று மூன்று திருமுகங்களுள், இரண்டு கரமுடைய ஒரு மூர்த்தமாய்த் தமது அம்சத்தை யடையச்செய்து மூவரும் தேவியருடன் சத்தியலோகம் கைலாசம் வைகுண்டம் என்னும் மூன்றிடங்களுக்கும் சென்றனர். ஏகநாதர் திரிமூர்த்தியின் சொரூபமே தத்தாத்திரேயருடைய அவதாரம். அவருடைய கருணைக்கு இலக்காக நீயும் அமையவேண்டுமென்று பின்னும் கீழ்வருமாறு சொல்லத் தொடங்கினார்.

முன்னொருகாலத்தில் ஆயிரம் தோள்களையுடைய கார்த்தவீரியார்ச்சுனன் என்பவன் இராவணனை வென்றானென்றும், உலகெங்கணும் வென்று திக்விஜயம் செய்து, இராஜசூயயாகத்தை முற்றுவித்துத் தாம் ராஜ்யபட்டம் பெற்றானென்றும், நீ இராமாயண மகாபாரதத்தில் அவனுடைய பிரதாபங்களைக் கேட்டிருக்கலாம். அத்தகைய சக்தி அவனுக்கு என்ன காரணத்தால் வந்ததெனின், இந்த மகானுபாவனான தத்தாத்திரேய சுவாமிகளின் அனுக்கிரகமே. அவரை நோக்கி அருந்தவம் செய்து, பிரம்மருத்திரர்களை நோக்கி, ஆயிரமாண்டு தவம்செய்து வரம் பெற்ற இராவணனை வென்றனன். நீயும் அவர் கருணைக் கிலக்காக வேண்டும். உருவத்தைக் கண்டு எமாறாதே" என்று ஏகநாதரிடம் சொல்லிக்கொண்டு மனுஷ்ய சஞ்சாரமில்லாத ஆரண்யம் சென்று ஏகநாதரை ஓரிடத்தில் உட்காரவைத்துவிட்டு, தான் ஒரு மரத்தின் நிழலில் உட்கார்ந்துக்கொண்டு தத்தாத்தி

ரேயரைப் பஜித்துக்கொண்டிருக்க, அப்பொழுதே தத்தாத்திரேய சுவாமிகள் ஒரு பக்கிரி உருவமடைந்து, தமது காமதேனுவை ஒரு சுவானமாகக் கையில் பிடித்துக்கொண்டு ஒரு சோளினா பையைத் தனது தோளில் மாட்டிக்கொண்டு, கையிலொரு தப்புவாத்தியத்தை அறைந்துகொண்டு ஜனார்த்தன பண்டிதர் முன்னே வந்தார். ஜனார்த்தன பண்டிதர், பக்கிரி உருவம் தரித்துவரும் தத்தாத்திரேயரைக் கண்டதும், பெரு மகிழ்ச்சியுடன் எழுந்து சென்று பணிய, அவர் தன் சோளினா பையிலிருந்து கந்தல் துணிகளால் தைத்த பிசானாவென்றை எடுத்து விரித்து 'அல்லாஹூ' என்று சொல்லிக்கொண்டே உட்கார்ந்தார். ஜனார்த்தன பண்டிதரும், பக்கிரிவேடம் தரித்துவந்த தத்தாத்திரேயருடன் அந்தப் பிசானாவில் உட்கார்ந்தார். இருவரும் சிறிதுநேரம் ஏதேதோ பேசிக்கொண்டிருந்தார்கள். ஏகநாதர், பக்கிரியானவர் தன் சோளினா பையிலிருந்து தகரக் குவளையொன்றை யெடுத்துத் தன் கையில் பிடித்துவந்த காமதேனுவாகிய நாயை ஒரு மரத்தில் கட்டி, அதன் பாலைக் கறந்து வைத்துக்கொண்டு, தன் சோளினாவில் மறுபடியும் கையை வைத்து ஒரு ரொட்டியையெடுத்து அதைப் பாதிபிட்டு ஜனார்த்தன பண்டிதரிடம் கொடுக்க, இருவருமாக ரொட்டியைத் தகரக்குவளையில் கறந்து வைத்திருக்கும் பாலில்தோய்த்துத் தின்றுக்கொண்டிருந்தனர். ஏகநாதர் குருக்களைப் பார்த்து மனம் சகியாதவராய் "இவரைத் தத்தாத்திரேய மூர்த்தி யென்கிறீரே! இவருக்குத் துருக்கனும், அந்த மதத்துப் பக்கிரியும்தானா உருவத்தை யடைய முடியும்! இந்துமதத்தில் ஒரு பஞ்சமனாய், வைஷ்ணவ தர்மத்தை ஆதரித்தவராய் இருக்கப்படாதா! இது என்னவேடம்! அவருக்குப் பிரியமான வேடம்" இருக்கட்டும், இந்த நிமிஷத்தில் நானும் சென்று வணங்குவேனென்று, யோசித்துக் கொண்டிருக்கும் பொழுது பக்கிரிவேஷம் தரித்த, தத்தாத்திரேய மூர்த்தியானவர் ஜனார்த்தன பண்டிதரைப் பார்த்து, "உம்முடன் வந்திருக்கும் பாகவதோத்தமன் வைராக்கிய பக்தியுடையவன். பரமசாந்தன். ஆகையால், அவனும் நம்முடன் கலந்திருக்கத் தகுந்தவனே. அவனையும் இங்கே அழைக்கலாம்" என்று சொன்னார்.

ஜனார்த்தனபண்டிதர் உடனே ஏகநாதரிருக்கும் இடத்திற்கு ஓடிவந்து, "உனக்குத் தத்தாத்திரேய மூர்த்தியின் கிருபை விசேஷமாய் ஏற்பட்டிருக்கிறது. அவரே உன்னை வலிய அழைக்கிறார். வந்து அவருடைய பாதத்தில் விழுந்து வணங்கு; அவர் கொடுப்பதை அருவருக்காமல் உண்டுவிடு என்று சொல்லி அழைத்துவந்து பக்கிரியின் பாதத்தில் வணங்கச் செய்தார். அவ்வாறே ஏகநாதர் மனமில்லாமலே வணங்க, பக்கிரி வடிவினராய் வந்த தத்தாத்திரேயர், தான் தின்றுகொண்டிருந்த எச்சில் ரொட்டியைப் பிட்டு, தகரக் குவளையிலிருந்த நாய்ப்பாலில் தோய்த்து ஏக

நாதருடைய் கையில் கொடுக்க, அவர் அதை வாங்கி மறைவில் வந்து வாயில் போட்டுக்கொள்ளுவதுபோல தூர எறிந்துவிட்டார். இதை உணராத ஜனார்த்தனபண்டிதர், ஏகநாதரிடம் வந்து "அப்பா! உனக்கு இன்று சர்வாபீஷ்டபல சித்தியாயிற்று. நீ செய்த பூஜாபலம் இன்றுதான் கிடைத்தது. தனையா! அவர் கொடுத்ததை அருவெறுப்பில்லாமல் புசித்தாயா" என்றுகேட்க, ஏகநாதர், குருமூர்த்தியைப் பணிந்து, "சுவாமி! நான் மோசம் போனேன். பக்கிரி எச்சலென்று நினைத்து தூர எறிந்துவிட்டேன்" என்று சொல்லக் கேட்டு, பெரிதும் வருத்தமுற்று, ஏகநாதரை அழைத்துவந்து மறுபடியும் அவர் பாதத்தில் விழச் செய்து, அவர் வாயில் மென்றுகொண்டிருக்கும் தாம்பூலத்தை யெடுத்து ஏகநாதருடைய வாயில்போட்டு மென்று தின்னும்படி சொன்னார். ஏகநாதர் அவ்வாறே மென்று தின்றுகொண் டிருக்கும்பொழுது தனக்கொரு உற்சாகமும், சாயித்திய உணர்வும் ஏற்பட்டது. உடனே தத்தாத்திரேய மூர்த்தியின் தாட்களில் விழுந்து பணிந்து, தன்வாயில் அவர் அனுக்கிரகத்தால் உண்டான கவிதா ஞானத்தால் நூறு பாசுரம் மஹாராஷ்டிர பாஷையில் பாடி தோத்திரம் செய்தார். உடனே தத்தாத்திரேய மூர்த்தியும் ஏகநாதருக்கு மூன்று முகமும், ஆறு கரமும், தன் முன்னே காமதேனுவான பசுவும், நான்கு வேதங்களாகிய நான்கு நாய்கள் தன்னைச் சுற்ற, சேவை தந்து மறைந்தார். உடனே சனார்த்தன பண்டிதர், ஏகநாதரை அழைத்துக்கொண்டு தனது திருமாளிகைக்கு வந்து சேர்ந்தார்.

தத்தாத்திரேயருடைய அனுக்கிரகத்தால் கவித்துவமடைந்து, பாண்டுரங்கன்மீது அருமையான பாசுரங்களை மஹாராஷ்டிர பாஷையில் பாடும்பொழுது, சனார்த்தன பண்டிதர் இவருடைய பாடலின் பொருள் செறிவும், பதங்கள் சேரும் கோமளமும் கண்டு ஆனந்தமடைந்து இவரே மஹாராஷ்டிரபாஷைக்கு மகாகவி என்று தன் மனதில் மதித்து ஏகநாதரை நோக்கி, "நீ என்னிடம் தெரிந்துகொள்ளவேண்டிய யாவும் தெரிந்தாய்விட்டது. ஆகையினால், உனது தாய் தந்தையர் மகிழ, பைட்டிணிபுரம் போய்ச் சேர்ந்து, உனது இல்லற வாழ்விற்குரிய ஒரு கற்புடைய வனிதையை மணம் செய்துகொண்டு பாண்டுரங்கனது பூரண கிருபைக்கிலக்காய் இருந்து அவன் இணையடியை மறவாதிருப்பாயாக" என்று ஆசீர்வதித்தார். ஏகநாதர் தனது ஆசாரியராகிய சனார்த்தன பண்டிதரை நோக்கி, தீர்க்கதண்டம் சமர்ப்பித்து, "சுவாமி! உம்மைப் பிரிந்து தமியேன் வருந்தும் காலமும் வாய்த்ததே, என்செய்வேன்? ஆயினும், உமது நியமனத்தின்படி நடக்கவேண்டியது எனது கடமையன்றோ? ஆதலால் உமது ஆக்கினையின்படியே அடியேன் எனது ஊருக்குப் போகிறேன். தேவரீர் கருணை அடியேனிடம் மறவாமலிருக்கவேண்டும்"

என்று சொல்லி, குருகுலவாசம் இன்றோடு தீர்ந்ததென்று பைட்டிணிபுரம் வந்து தன்னைப் பிரிந்து வருந்தும் தாய்தந்தையர்கள் மனம்மகிழ, அன்னவரைப் பணிந்து ஆசிபெற்று ஆனந்தமுற்று அரிய பாடலால் பாண்டுரங்கனைப் பஜித்துக்கொண்டிருந்தார்.

திருக்கலியாண வத்தியாயம்

இப்படியிருக்க, இவர் தந்தையாகிய சூரியநாராயணர் தன் மைந்தனுக்குத் திருமணம் செய்ய விரும்பி, மைந்தனிடம் வந்து, "மைந்தா! நமது சந்ததியானது பூர்வீக சந்ததியாய் ஒரு ஆண் இதுவரை தழைத்தது. என் பாட்டனாராகிய பானுதாசருக்கு என் தந்தையாகிய சக்ரபாணி ஒரே மைந்தராகப் பிறந்தார். அவருக்கு நான் ஒருவனே பிறந்தேன். எனக்கு நீ ஒரு மைந்தனே தோன்றினாய். ஆதலால், நமது சந்ததி உன்னுடன் முட்டுப்பட்டதென்று ஏற்படப்படாது. அன்றியும், நம்முடைய சந்ததியானது சோமயாஜி என்று சோமயாகம்முதலிய யாகங்கள் செய்து பெருமைபெற்றிருக்கிறது. அன்றியும், நானும் அக்கினிகோத்திரி என்று தினமும் அக்கினி கோத்திரம் செய்பவன். நமது பரம்பரையாகச் செய்துவந்த அக்கினிகோத்திரத்தை நீ செய்யாம லிருப்பது சரியல்ல. ஒருவன் இல்லறத்தானாய் மனைவியுடனிருந்தாலன்றி, அவன் அக்கினிகோத்திரம் செய்வதற்கு உரிமையற்றவனாய்ப் போய்விடுகிறான். அன்றியும், புத்திரனை யடையாதவர்கள் மோக்ஷவீடு சேரமாட்டார்களென்று சாஸ்திரங்களெல்லாம் சொல்லுகிறது. ஆகையினால், நீ ஒரு கற்புடைய வனிதையை மணம் செய்துகொண்டு இல்லறம் நடத்தி எங்கள் சந்ததி தழைத்தோங்கச் செய்வாயென்று வேண்டிக்கொண்டார். ஏகநாதர் தந்தையின் வார்த்தைகளைக் கேட்டு, "தந்தையே! அடியேன் இல்லறத்தானாக இருக்க வேண்டுமென்னும் நினைப்புடையவனன்றி, வேறு ஆஸ்ரமத்திற்குப் போக எனக்கு விருப்பமில்லை. உமது எண்ணத்தின்படியே கலியாணம் செய்துகொள்ளுகிறேன்" என்று சொல்ல, அந்த வார்த்தையைக் கேட்டு பெருமகிழ்ச்சி யடைந்து, தன் பந்து மித்திரர்களுடன் கூடி யோசித்து அவ்வூரிலேயே தன் போன்ற ஒரு வேதியர் புருஷோத்தமரென்னும் பெயருடையவர், பரம்பரையாகவே நல்ல சந்ததியாய், வைஷ்ணவ சமயத்தைச் சார்ந்தவராய், பாண்டுரங்கனுடைய பாதத் தாமரைக்கே ஆட்பட்டவராய், கர்மானுஷ்டானங்களை வழுவின்றி செய்பவராய், சுசீலராய், விளங்கியவரது புத்திரியாகிய தாராதேவி என்னும் கற்புடைய வனிதையைக் கலியாணம் செய்து வைப்பதென்று நிர்மாணித்து, புருஷோத்தமரிடம் கேட்க, அவரும் சம்மதித்ததால், நல்ல சுபமுகூர்த்தத்தில் ஏகநாதருக்குத் திருக்கலியாணம் நடந்தது. அழகிலும், கற்பிலும், அறிவிலும், குணத்திலும், ஈஸ்வர பக்தியிலும், சிறந்து விளங்கும் தாராதேவி, தருண நங்கையாகி, தாய் வீட்டிலிருந்து

தன் வீடடைந்து நாயகன் மகிழ, மாமி மாமன் புகழ, இல்லறம் நடத்தி வந்தாள். தத்தாத்திரேய மூர்த்தியின் அனுக்கிரகத்தினால் அளவிடமுடியாத செல்வம் பெருக, அநேக பரிசாரகர்கள், வேலைக்காரர்கள், பணிசெய்ய, ஏகநாத சுவாமிகள் வீட்டு கவலையற்று, சாக்ஷாத் பண்டரிநாதனைப் பஜித்துக்கொண்டிருக்கும் பொழுது, இவர் தாய் முன்னும், தந்தை பின்னுமாக பரமபதம் சார்ந்தனர். ஏகநாத சுவாமிகள் தாய் தந்தையர்களுக்குச் செய்ய வேண்டிய ஈமக்கடன்களைக் குறைவிலாது முடித்துத் தனது மனைவியுடன் பஞ்ச யெக்ஞத்தில் பிதுர் எக்ஞம் ஒன்று குறையுற்றிருக்க, அதையும் அடைந்தவராய் எப்பொழுதும் அதிதி பாகவதர்களை ஆதரித்து, நித்திய ததியாராதனம் செய்துகொண்டு பைட்டிணிபுரத்தில் வேதியர் திலகராய் வாழ்ந்து வந்தார்.

ஏகநாதர் ராமானுக்கிரகத்தால் ராமாயணம் பாடிய அத்தியாயம்

ஏகநாதர் இல்லற தருமப்படி, முற்றுந் துறந்த முனிவர்களையும், ஏழைகளையும், தன்னைவந்து யாசிப்பவர்களையும் துணையாயிருந்து பாதுகாத்து, பிதுரர்களையும் தெய்வத்தையும், விருந்தினர்களையும், சுற்றத்தவர்களையும், தனது செல்வத்தில் ஆறுபங்கிலே தனக்கும் அரசனுக்கும் போக, நான்கு பங்காளிகளுக்கென்று நினைந்து போற்றியும், பிரமசரியம், கிரகஸ்தம், வானப்பிரஸ்தம், சந்நியாசம் என்று சொல்லும் மூன்று ஆஸ்ரமிகளையும், உணவினாலும் உடையாலும் பாதுகாத்தும் வேதவிதிப்படி தினசரியாகிய நித்திய கர்மங்களையும் நைமித்திகமென்று நிமித்தத்தின் பொருட்டு செய்யவேண்டிய கர்மங்களையும் நடத்தி வருங்காலத்தில், ஒருநாளிரவில் ஸ்ரீ ராமச்சந்திரன் இவர் சொப்பனத்தில் தோன்றி வால்மீக பகவான் எழுதிய ஸ்ரீ ராமாயணத்தை மஹாராஷ்டிர பாஷையில் கவிகளாக எழுதிமுடிக்க, நியமனம் செய்து மறையவும், அக்கணமே கண்விழித்துத் தான் கண்ட கனவை நினைத்துப் பார்க்கும்பொழுது, ஓலைக்கட்டும் எழுத்தாணியும் இருப்பது கண்டு, இது ராகவன் ஆக்ஞைதானென்று நினைத்து, அப்பொழுதே ஓலைக்கட்டை யவிழ்த்து அதை நன்றாகவாரி சுவடியாகத் துண்டித்துத் துவாரம்போட்டு கயிறு அமைத்துக் கட்டி வைத்துவிட்டு கங்கைக்குச்சென்று தீர்த்தமாடி நித்திய கர்மங்களை முடித்துக்கொண்டு தன் மனையகம் வந்து, அக்கினிகோத்திரம் முடித்து பூஜாக்கிரகத்தில் எழுந்தருளியிருக்கும், தன் திருவாராதன மூர்த்தியான பாண்டுரங்கனுக்கு அபிஷேக அலங்கார தூபதீப நைவேத்தியங்களால் திருப்திசெய்து தனது இருகரங்களையும் குவித்து நின்று, 'சுவாமி! நேற்று இரவில் ஸ்ரீராமச்சந்திரமூர்த்தி அடியேனது 'சொப்பனத்தில் எழுந்தருளி, ஸ்ரீராமாயணத்தைப் பாடும்படி

நியமித்தருளினராதலால், அடியேன் ஸ்ரீராமாயணத்தை யெழுதலாயினேன். தேவரீர் கருணைபுரிந்து பூர்த்தியடையும்படி செய்யவேண்டுமென்று பிரார்த்தித்து, கடவுள் வாழ்த்தெழுதி, பின் அவையடக்கமெழுதி, கோசலநாட்டின் சிறப்பை எழுத ஆரம்பித்துவிட்டு போசனம் செய்ய தன்னுடன் உட்காரவேண்டிய அதிதிகளுடன் ஆகாரம் செய்து, அதிதிகளை உபசரித்து அனுப்பிவிட்டு, மறுபடியும் சுவடியை அவிழ்த்து ராமாயணத்தை யெழுதுவார்.

இப்படியே தனது தினசரியாகிய கர்மத்திற்கும் குறைவு வராமல், இராமாயணத்தையும் விரைவாய் எழுதிக்கொண்டு வரும்பொழுது, இவர் வீட்டிற்கு அயல் அகத்தானாகிய கேசவராமன் என்னும் பெயர் வாய்ந்த சிறிது வித்வபக்தியுடைய பிராமணன் அசூயையடைந்து இராமாயணத்திற்கு மாறாக "இவனோ ராமாயணம் பாடத்தகுந்த யோக்கியதை யுடையவன்? இவனுடைய படிப்பு எவ்வளவென்பது எனக்குத் தெரியாதோ? இளம்பிராயத்தே தாய் தந்தையரைவிட்டு ஓடி, தான்தோன்றியாய்ப் பல ஊர்கள் சுற்றி அலைந்துவிட்டு வந்த தனது சக்தியைக் கொண்டு இராமாயணத்தை யெழுதினால் இது வால்மீகத்திற்கு ஈடாய் விடுமோ! அன்றியும், ஸ்ரீராமன் வந்து தன்னிடம் இராமாயணத்தை எழுதச் சொன்னாரென்றொரு பொய்யைச் சொல்லி, அதனால் தான் நிரம்ப யோக்கியனென்றும்; பொய் சொல்லாதவனென்றும்; ஊரிலுள்ளவர்கள் நம்பும்படி வந்தவர்களுக்கெல்லாம் அநேக பரிசாரகர்களைக்கொண்டு பஞ்ச பக்ஷண பரமான்னத்துடன் ததியாராதனம் செய்து வைக்கிறான். "இவன் யோக்கியதை எனக்கன்றோ தெரியும். இவன் ராமாயணம் முடிவு பெற்று வெளியில் வரும்பொழுது அதை எந்த வித்வான்கள் ஆதரிக்கின்றார்களென்று, நான் பார்க்கிறேன் என்று தன்னுள்ளே நினைந்துகொண்டிருந்தான்.

ஏகநாத சுவாமிகளால் ராமாயணத்தை எழுதி வரும்பொழுது, கிஷ்கிந்தா காண்டத்தில் முடிவாய் சீதையைத் தென்திசை தேடிச் சென்ற, அங்கதன் சாம்புவந்தன் நீலன் முதலிய வீரர்கள் கண்டு களித்துத் தன்னைத் தோத்திரம்பண்ண, தேவர்கள் தன்மீது பூமாரி பொழிய, வேதமுனிவர் தன்னை வாழ்த்த, மாருதியானவர் மகேந்திர பர்வதத்தில் விஸ்வரூபத்துடன் நின்று, தென்திசை நோக்கினாரென்று எழுதி கிஷ்கிந்தா காண்டத்தைப் பூர்த்திசெய்து சுந்தர காண்டத்தை யெழுத ஆரம்பம் செய்து, அனுமான் விஸ்வரூபத்தோடு மகேந்திரமலையின் சிகரத்தில் நின்று இலங்கையைக் கண்டான். ஆனந்தத்தால் தோள் தட்டினான். வீரகர்ச்சனை செய்தான். இந்தத் தொனியால் அண்டம் குலுங்கின. அப்பொழுது மகேந்திர மலையிலிருந்து, இலங்கையை நோக்கி ஆகாயவீதியில் தாவிப் பாய்ந்தாரென்னும்

பாகத்தை யெழுதியபடியே தன்னைமறந்து தானே அனுமானாய் ஆகாயத்திற்பாய்ந்தெழுந்து அனுமான் சத்துருபுறத்திற்போய்க் குதித்ததற்குப்பதிலாகத் தானும் தன்னை நிந்திக்கும் சத்துருவான கேசவராமனது வீட்டுப் புறக்கடையில் வந்து வீழ்ந்தார். வீட்டினுளிருந்து, ஏகநாதர் எழுதிவரும் இராமாயணத்தையே தலையெடுக்காதபடி செய்துவிட வேண்டுமென்று இதையே சிந்தித்துக்கொண்டிருக்கும்பொழுது, தன் வீட்டுப் புறக்கடையில் ஏதோ விழுந்த சப்தம் கேட்டு வீட்டின் பின்கட்டுதான் விழுந்துவிட்டதோ என்று, நடுங்கிப் பின்புறமுற்றத்துக்கதவைத் திறந்து பார்க்க, ஏகநாத சுவாமிகள் விழுந்து கிடப்பதையும், அவர் பிரக்ஞையற்றிருப்பதையும், அவர் கையில் ஓலையேடும் எழுத்தாணியும் இருப்பதையும் கண்டு, தானும் பண்டிதனாதலால் அவர் கையிலிருந்த ஓலையை மெள்ள எடுத்து அதைப் படித்துப் பார்க்கும்பொழுது, முன்கூறிய கதாபாகத்தைத் தழுவி எழுதப்பட்டிருப்பதையும், மானிடராகத் தோன்றி மனைவியுடனிருந்து இல்லறம் நடத்தும் ஒருவனால் காணவொண்ணாத கருத்துக்களும், வீரச்சுவையும், பிராசக்கட்டும் வாக்கியங்களின் செறிவும், பத்யங்களினழகும், அப்பதங்களாலமைந்த கவிகளின் திட்டநுட்பமும் கண்டு நடுக்கமுற்று, இவர் தெய்வத்தன்மை வாய்ந்தவரன்றி, சாமான்யமான மானிடரல்லர். இவர் எழுதிய மஹாராஷ்டிர கவிகளும், தெய்வீகச் சக்தியமைந்தது தானே இவருடைய பிரபாவம். இதைத் தெரிந்துகொள்ளாது நான் அசூயைகொண்டேன். இவர் கவி எழுதும்பொழுது தன்னைமறந்து தானே அனுமானாகயிருந்து கடல் தாண்டி என் வீட்டுப் புறக்கடையில் வந்து வீழ்ந்துவிட்டார். இவருடைய உண்மைஞானத்தையுணராது, வித்தியாகருவத்தால் நான் இவருடைய திருவடிகளில் அபசாரப்பட்டுவிட்டேன்" என்று வருந்தி, அவரைத் தூக்கித் தனது மடியில் சாத்திக்கொண்டு பிரக்ஞை வந்ததும், அவரை மெள்ள நடத்திக்கொண்டுபோய் வீட்டில் விட்டுவிட்டு தனது வீட்டுக்கு வந்து அவருடைய வைராக்கியமான பக்தியைப் புகழ்ந்துகொண்டிருந்தார்.

கேசவராமன் நாள்தோறும் ஏகநாத சுவாமிகள் திருவாராதனம் செய்யும்பொழுது மணியடிக்கும் சத்தம் தனது காதுகளில் கேட்டதும் ஓடிவந்து ஏகநாத சுவாமிகளைப் பணிந்து திருவாராதனம் ஆனதும் தளிகைப் பிரசாதம் வாங்கிக்கொண்டு தனது வீட்டிற்குச் செல்லுவார். இப்படி சிலநாள் வந்து அவர் செய்யும் திருவாராதனத்தையும் பக்தியையும் கண்டு, இவரை நாம் ஆசாரியராய் அடையவேண்டுமென்னும் எண்ணம் தனக்குவர, ஒருநாள் ஏகநாதர் திருவாராதனம் செய்துக்கொண்டிருக்கும் சமயம், ஏகநாதருடைய திருவடிகளில் விழுந்து பணிந்து,

சுவாமி! அடியேனை உமது சிஷ்யனாகக் கொள்ளவேண்டும். என்னை உமது கருணைக் கிலக்காக்கிப் பிறவியென்னும் பிணியை ஒழித்தருள வேண்டும்" என்று பிரார்த்திக்க, ஏகநாதர் வேதியர் சொல்லைக் கேட்டு, இவருடைய மனோநிலையைச் சோதிக்க விரும்பி, "நாளை வாரும்" என்று சொல்லி அனுப்பிவிட்டுத் தன் பரிசாரகர்களை அழைத்து, "நாளைய தினம் நான் திருவாராதனம் பண்ணும்பொழுது உங்களை அழைப்பேன். நீங்கள் ஏனென்று கேளாது பராமுகமாக இருந்துவிடுங்கள்" என்று சொல்லிவிட்டு போசனஞ்செய்து இராமாயணத்தை எழுதிக்கொண்டிருந்தார்.

கேசவராமன் மறுநாள் பூசை நடக்கும் சமயம் "இன்று ஏகநாத சுவாமிகள் தனக்கு உபதேசம் செய்யப்போகிறாரென்று தீர்த்தமாடிவிட்டு, மடிவைத்து வெண்மையான வஸ்திரத்தை உடுத்திக்கொண்டு லலாடத்தில் திரிபுண்டிரமிட்டு ஏகநாத சுவாமிகள் முன்னேவந்து உட்கார்ந்தார். இவர் தன்னை வணங்காமலும் தன் திருவாராதன மூர்த்தியான பண்டரிநாதனை வணங்காமலும் உட்கார்ந்ததைக் கண்டு, இவன் உபதேசம் பெறத் தகுந்தவனில்லை என்று தெரிந்துகொண்டாலும் இன்னும் இவனைப் பரீக்ஷிப்போமென்று நினைத்து, தனது பரிசாரகர்கள் பெயரைச் சொல்லி ஒவ்வொருவரையும் தனியே அழைக்க, ஒருவரும் வந்தார்களில்லை. ஏகநாத சுவாமிகள் சிறிது கோபமுற்றவர் போல, பாவனைசெய்து இன்று திருமஞ்சனம் செய்ய தீர்த்தம் கொணர்ந்து வைக்க ஒருவருமில்லையா? எத்தனை பெயர்கள் என் வீட்டில் இருந்தும்; எனது திருவாராதனத்தை ஒருவரும் கவனிக்கவில்லையே. அவர்கள்தான் தீர்த்தம் கொணர்ந்து தராமல் போனாலும் வேறு யாராவது கொஞ்சம் தீர்த்தம் கொணர்ந்து தரப்படாதா? நான்தான் கொண்டு வரவேண்டும்போலிருக்கிறது" என்று ஒருமுறைக்கு மூன்றுமுறை சொல்லியும் அயலகத்து கேசவராமன், தன் இருப்பிடத்தைவிட்டு எழுந்திராமல் உட்கார்ந்தபடியேயிருந்தான். "நான் தீர்த்தம் கொண்டு வருகிறேன்" என்று உபசாரம்கூட சொன்னானில்லை. அப்பொழுது ஏகநாதரே எழுந்து தீர்த்தம் கொணர்ந்து அபிஷேகம் செய்துவிட்டு தனது பூசையை முடித்துக்கொண்டு கேசவராமனைப் பார்த்து, "இன்று உபதேசம் செய்வதற்குரிய நாளல்ல. அந்த நாள் வந்ததும் நானே உன்னை வலிய அழைத்து உபதேசம் செய்து வைக்கிறேன்" என்று சொல்லி அவனுக்குப் பிரசாதம் கொடுத்து அனுப்பிவிட்டார்.

ஏகநாத சுவாமிகள் கேசவராமனை அனுப்பிவிட்டுத் தினமும் இராமாயணத்தை மஹாராஷ்டிர பாஷையில் பாடியவர். அந்த ஸ்ரீராமாயணமும் முற்றுப்பெற்றது. தான் எழுதிய இராமாயணத்தை யரங்கேற்றுவதாக நினைத்து அந்த ஊரிலுள்ள வைஷ்ணவ

சன்னதியில் பெரிய கொட்டகைபோட்டு பல பண்டிதர்களுக்கும் தெரிவித்து பல ஊரிலிருந்து அந்தணர் யாவர்களும், பண்டிதர் பலர்களும், திரண்டு கூடிய சபையில், தானெழுதிய ஸ்ரீராமாயணத்தை வாசித்துக் காட்ட யாவர்களும் கேட்டு அதிலுள்ள சொல் நயம், பொருள் நயம் கண்டு, 'மஹாராஷ்டிர மகா கவி' என்று திருநாமத்தைப் பண்டிதர் யாவரும் ஏகோபித்த மனமுடையவராய் ஏகநாத சுவாமிகளுக்கு இட்டு மகிழ்ந்தனர். வந்தவர்களுக்கெல்லாம் ததியாராதனம் கோலாகலமாய் நடந்தது. இவர் பாடிய ராமாயணமானது இவரால் படிக்கப்பட்டு பட்டாபிஷேகம் செய்யும் தினத்தில் இவருக்கு அலங்காரம் செய்து பல்லக்கிலேற்றி வந்து பட்டாபிஷேக கட்டத்தை வாசிக்கச் சொல்லி கேட்டு மகிழ்ச்சியடைந்து பண்டிதர்கள் யாவருமே மீண்டும் பல்லக்கில் ஏகநாத சுவாமிகளை ஏற்றித் தாமே பல்லக்கைச் சுமந்துகொண்டு அவர் திருமாளிகையில் எழுந்தருளச் செய்து அவரால் பூசிக்க மகிழ்ச்சியடைந்து தத்தம் ஊருக்கு வந்து சேர்ந்தனர். மஹாராஷ்டிர தேசமெங்கும் இவர் எழுதிய ராமாயணமானது பொன்னேபோல் போற்றப்பட்டு பண்டிதர்களால் புராண படனமாக வாசிக்க யாவரும் சிரவணம் செய்யவமைத்ததாயிருந்தது. இப்படியிருக்க ஏகநாதர் பைட்டிணிபுரத்தில் மஹாராஷ்டிர மகா கவியாய் விளங்கிவரும் காலத்தில் பதினெண் புராணங்களிலும் ஒன்றாய்ச் சுகாசாரிய சுவாமிகளால் திருவாய் மலர்ந்தருளப்பட்ட பாகவதத்தை மஹாராஷ்டிர பாஷையில் பாட விரும்பி ஒருநாள் பாண்டுரங்கன் ஏகநாதருடைய சொப்பனத்தில் எழுந்தருளி "நீ ஸ்ரீராமாயணத்தை மஹாராஷ்டிர பாஷையில் பாடியதுபோல், எனது சரித்திரமாகிய பாகவதத்தையும் பாடி முடிக்கவேண்டுமென்று நியமனந்தந்து எழுந்தருளினார்.

ஏகநாத சுவாமிகள் உடனே கண்விழித்து "நமக்கும் நெடுநாளாக ஸ்ரீ பாகவதத்தை நமது பாஷையில் எழுதவேண்டுமென்னும் ஆசையிருந்தாலும் பாகவதத்திலுள்ள வேதாந்தப் பொருள்களை அமைத்துப் பாடமுடியுமோ, என்னும் பயம் நெடுநாளாக என் மனதில் தோன்றியதால், நான் அதை எழுதத் துணிவு கொள்ளாது இருந்தேன். இன்று சொப்பனத்தில் பாண்டுரங்கன் எழுந்தருளி, நியமனம் செய்ததால், அவருடைய திருவடிகளை எனது சித்தத்தில் ஊன்றி எழுதி முடிக்கிறேன்" என்று துணிவுகொண்டு, மறுநாள் தீர்த்தமாடி நித்தியவிதியை முடித்து திருவாராதனம் ஆனதும் பாண்டுரங்கனைத் தியானித்துக்கொண்டு ஸ்ரீ பாகவதத்தை யெழுத ஆரம்பித்து கடவுள் வாழ்த்து அவையடக்கம் இந்தக் கவிகளை எழுதிவிட்டு ததியாராதனம் ஆனதும், பாகவதத்தினை எழுதிவந்தார்.

ஸ்ரீ கிருஷ்ணபகவான் ஏகநாதருக்கு அடிமையான அத்தியாயம்

ஏகநாதர் ஸ்ரீபாகவதத்தை எழுதிக்கொண்டு வரும்பொழுது ஸ்ரீ கிருஷ்ண பகவான் அவர் எழுதிவரும் பாகவதக் கவிகளைக் கேட்க விரும்பி ஒரு மறையவர் உருவம் தரித்து பைட்டிவிபுரத்திற்கு எழுந்தருளி, ஏகநாத சுவாமிகள் திருவாராதனம் முடிந்து வந்ததும், அதிதிகளுடன் ததியாராதனத்திற்கு எழுந்தருளும் பொழுது அவருடைய திருமாளிகையில் சென்று திருவடிகளில் சாஷ்டாங்கமாக விழுந்து தண்டம் சமர்ப்பித்து, விநயத்தோடு நின்றார். அப்பொழுது ஏகநாதர், பிராமணரைப் பார்த்துத் தானும் தண்டம் சமர்ப்பித்து, “சுவாமி! தேவரீர் எங்கிருந்து எழுந்தருளுகிறீர்? உமது திருநாமம் என்ன” என்று கேட்க, வந்த வேதியர் ஏகநாத சுவாமிகளைப் பார்த்து, “சுவாமி! அடியேன் துவாரகையில் வசித்துக்கொண்டிருப்பவன்; என் பெயர் ஸ்ரீ கண்டிய கிருஷ்ணனென்று சொல்லுவார்கள். தேவரீர் எழுதிய ஸ்ரீமத் ராமாயணத்தை ஒரு பண்டிதர் எமது ஊரில் பிரசங்கம் செய்ததைக் கேட்டு, உமது சரணாரவிந்தத்தை யடைந்து என்னாலான கைங்கரியத்தைச் செய்துகொண்டு தேவரீருடனிருக்கலாமென்னும் ஆசையின்மேல் வந்தேன். எனக்குத் தாய்தந்தை சுற்றம் ஒருவருமில்லை. நான் தனியன். என்னை ஏற்றுக்கொள்ள வேண்டும்” என்று பிரார்த்தித்தார். ஏகநாதர் ஸ்ரீ கண்டிய கிருஷ்ணனுடைய வார்த்தையைக் கேட்டதும், அவரைப் பார்த்து, “உமக்கு வீட்டிலிருந்து கைங்கரியம் செய்யவேண்டுமென்னும் ஆசையிருந்தால், அப்படியே இருந்து செய்” என்று நியமனம் செய்து ததியாராதனத்திற்கு எழுந்தருளினார். ஸ்ரீ கண்ட கிருஷ்ணன் பாக்கியம் என்று சொல்லி, பஞ்ச பஞ்ச உஷைக்காலத்திலெழுந்து தீர்த்தமாடி, கங்கையிலிருந்து தீர்த்த காவடியைக் கொணர்ந்து வைத்துவிட்டு ஏகநாதருடைய திருவாராதன பாத்திரங்களை யெல்லாம் சுத்திபண்ணி வைத்துத் தீர்த்தத்தை வட்டில்களில் பூரித்து வைத்து திருமஞ்சன தீர்த்தமும் பக்கத்தில் வைத்துத் திருத்துழாய் சமர்ப்பித்து சன்னதிக் கதவைப் பூட்டிவிட்டு நித்திய ததியாராதனத்திற்கு வேண்டிய பிரசாதம் கறியமுதுகளை வேறு பாரிசாரகர்களின் உதவியின்றி தானே செய்து முடித்துவிட்டு கங்கையிலிருந்து எழுந்தருளும் ஏகநாத சுவாமிகள் வருகைக்காகக் காத்திருந்து, அவர் எழுந்தருளியதும் அவருடைய திருவடி விளக்கி, உள்ளே அழைத்து வந்து திருவாராதனம் பண்ண சன்னதியின் திருக்காப்பு நீக்கி திருவிளக்கிட்டு, ஏகநாதர் திருவாராதனம் பண்ண எழுந்தருளும்வரை திருவாலவட்டம் வீசிக்கொண்டு நின்று, அவர் சன்னதியில் எழுந்தருளியதும், அவருக்கு உதவியாக கைங்கரியங்

களை அவர் ஏவாமலே குறிப்பறிந்து செய்துகொண்டு, அவர் நிழல்போலப் பிரியாது நின்று, திருவாராதனம் முடிந்ததும் அவர் நேற்று எழுதிய ஸ்ரீ பாகவதச் செய்யுள்களைப் பகவான் முன்னே நின்று படிக்கும்பொழுது அப்பாசுரங்களிலுள்ள பொருள் செறிவையும், பதப் பிரயோகங்களையும் கேட்டு ஆநந்தமுற்று, ததியாராதனத்திற்கு எழுந்தருளும் முன்னே ததியாராதன கூட்டத்திற்கு வந்து, சலசுத்தி பண்ணி, இலை தளிகை சேர்த்துக் காத்திருந்த ஏகநாதர் வழக்கம்போல் தன்னுடன் ததியாராதனத்திற்கு வந்திருக்கும் வேதியர்களை அழைத்து உபசரித்து எழுந்தருளப் பண்ணவும், ஸ்ரீ கண்டிய கிருஷ்ணனாய் கைங்கரியம் செய்யும் பகவான் யாவரையும் அறுசுவை உணவால் உபசரித்து, யாவருடைய மனமும் சந்தோஷிக்கச் செய்து ததியாராதனம் முடிந்ததும், சந்தன தாம்பூலம் கொடுத்து அனுப்பிவிட்டு ஏகநாதர் பாகவதத்தை எழுத ஆரம்பிக்கும்பொழுது அவர் பக்கத்தில் நின்று, திரு ஆலவட்டம் வீசிக்கொண்டு சுகாசாரிய ரெழுதிய ஸ்ரீபாகவதத்திலுள்ள வேதாந்தக் கருத்துக்கள் எல்லாம் இவர் எழுதும் பாகவதத்தில் வருவதற்கு அவரைக் கருணைக் கண்களால் கடாக்ஷித்துக்கொண்டிருப்பார்.

ஏகநாத சுவாமிகளும் தனக்குக் கைங்கரியம் செய்யும் ஸ்ரீ கண்டிய கிருஷ்ணனை சாக்ஷாத் கண்ணபிரான் என்றுணராது, உத்தமமான வேலைக்காரனென்று நினைத்து அவர் செய்யும் கைங்கரியங்களைக் கண்டு சந்தோஷித்தும், “இவன் நம்மிடம் ஒரு உதவியும் எதிர்பாராதவனாய் நமது கைங்கரியமே தனது புருஷார்த்தமென்று நினைத்துக் கைங்கரியம் செய்துகொண்டு வருகிறான்” என்று தன்னிடமுள்ள நிதிநிக்ஷேபங்களையும் அவன் பார்வையிலேயே ஒப்புவிக்க, பகலெல்லாம் கைங்கரியமும் இரவெல்லாம் வரவு செலவு கணக்குமாகப் பகவானுக்குக் கைங்கரியம் பலத்தது; கடையில்சென்று சாமான்கள் வாங்கிவரும் காரியமும் இவருக்கு ஏற்பட்டது. இப்படி ஏகநாத சுவாமிகளின் கைங்கரியத்தில் மூழ்கிப்போய் தனது தேவியர்களான ருக்மணி சத்தியபாமை ராதா நப்பின்னைமுதலிய ஸ்திரீகளையும் மறந்து தன்னை வந்திக்கும் அடியவர்களை ரக்ஷிக்கும் நினைப்பையும்விட்டு, ஏகநாத சுவாமிகளின் திருமாளிகையில் கைங்கரியம் செய்துகொண்டிருந்தார்.

இப்படியிருக்கும்பொழுது இவர் தந்தையாகிய சூரியநாராயணருக்குச் சிராத்தம் வந்தது. ஏகநாதர் முதல்நாள் இரவிலேயே மூன்று பிராமணர்களை நியமித்துவிட்டு அந்த ஊரிலுள்ள வேதியர் யாவரையும் தன்னுடன் கிட்ட பந்தியிலிருந்து போசனம் பண்ண அழைத்துவிட்டு ஸ்ரீகண்டிய கிருஷ்ணனிடம் “எனது தந்தைக்குச் சிராத்தமாதலால் ஊரிலுள்ள வேதியர் யாவரையும் இஷ்டபந்திக்கு அழைத்திருக்கிறேன். அதற்குத்

தக்கபடி சமையல் செய்யும்" என்று நியமிக்க, ஸ்ரீகண்டிய கிருஷ்ணன் "ஆக்ஞை" என்று சொல்லி, தன்னுடன் சில பரிசாரகர்களைச் சேர்த்துக்கொண்டு அநேக கறியமுதுவகைகளும், அனேக வகை பச்சடி,கிச்சடிவகைகளும், அனேகவகை பிரசாதவகைகளும் செய்து அடுப்பில் நறுநெய் வார்த்து, இருப்புச்சட்டியை வைத்துத் தானே பக்ஷணவகைகளாக லட்டு, பேணி, சோமாசி, அல்வா, வடை, ஜொஞ்ஜி, அப்பம், தேன்குழல் முதலியவைகளைச் செய்துக்கொண்டிருந்தார்.

ஏகநாதர் ஸ்ரார்த்த உணவை பஞ்சமருக்கிட்ட அத்தியாயம்

இப்படி இருக்கும்பொழுது, ஏகநாதர் ஸ்ரார்த்தத்திற்காக மடியாய் வேஷ்டியை உலர்த்தி உடுத்த, வீட்டின் மேல்மாடம் சென்று வஸ்திரத்தை உலர்த்திக்கொண்டிருக்கும்பொழுது, இவருடைய தோட்டத்தில் வேலைசெய்யும் பஞ்சமன் மனைவியானவள் பக்ஷணங்கள் செய்யப்படும் வாடையை முகர்ந்து தன் நாவில் நீரூர, தன் கணவனைப் பார்த்து, "கணவா! இன்று ஐயர் வீட்டிலே திதியாம். ஆயிரக்கணக்கான பார்ப்பார்கள் சாப்பிடுவார்கள் என்று பலகாரம் சுடுகிறார்கள். அதன் மணம் மூக்கைத் துளைத்துவிடுகிறது. உண்ணக் கொடுத்து வைத்தவன் பார்ப்பான்தானா? ஆனாலும், கொஞ்சம் மீதமிச்சம் இலைகளில் வைக்கமாட்டார்களா? அவைகளைப் பொறுக்கி நாமும் வயிரார உருசியுடைய பலகாரங்களைத் தின்னலாம், நீ இப்பொழுதே கஞ்சியை வயிறுநிறைய குடித்துவிடாதே" என்று சொன்னாள். இந்த வார்த்தையைக் கேட்ட தோட்டக்காரனான பறையன் தன் மனைவியைப் பார்த்து, "இன்றையதினம் சாமி வீட்டில் சாப்பிடும் பார்ப்பார் இலையிலே இருக்கும் பலகாரங்களைத் தின்னலாமென்னும் ஆசையை இப்பொழுதே விட்டுவிடு. திதியிலே சாப்பிடும் இலைகளைக்கூட நமது சாதியார் கண்களிலே காட்டமாட்டார்கள். பூமியில் தோண்டிப் புதைத்து விடுவார்கள்" என்று சொல்ல, கணவன் சொல்லைக்கேட்டு, அவன் மனைவியானவள், "ஐயோ! என்னுடைய ஆசை வீணாகவா போய்விட்டது? அப்படியா" என்று சொல்லிய வார்த்தைகள், ஏகநாத சுவாமிகளின் காதுகளில் விழுந்தன. அப்பொழுது ஏகநாதசுவாமிகள், "இது என்ன ஆச்சரியமாக யிருக்கிறது! பிராமணர்கள் சிரார்த்தத்திற்கென்று சமையல் செய்யும்பொழுது, குழந்தைகள் பக்கத்தில் வர ஏற்பட்டால் பக்ஷணங்களில் அந்தக் குழந்தைகளுக்கு ஆசை உண்டாய் "நமக்கு வேண்டும்" என்று கேட்கும். அப்படி குழந்தைகள் கேட்பினும், சிரார்த்தம் பலனற்றுவிடும் என்று சமையல் செய்யுமிடத்தில் குழந்தைகளை வரவிடுவதில்லையே. சிரார்த்த தினத்தில் சூத்திரர்களுடன் பேசப்படாதென்று சொல்லுவதுகூட, பேசும்படி நேர்ந்தால் அவர்கள் நம் வீட்டிற்கு வரும்

படி நேரும். அப்படி பக்ஷணங்களில் ஆசை வந்துவிட்டால், அதைப் பிதுர்க்களுக்கு பரிமாறப்படாது. பரிமாறினால், பிதுர் சாபம் வருமென்று கூறப்பட்டிருக்கிறது. அன்றியும், பக்ஷணங்கள் செய்யும்பொழுதுகூட தேவதார்ப்பணமானது என்று நினைத்துக்கொண்டே செய்யச் சொல்லியிருக்கிறதே! இப்படியிருக்க பஞ்சமன் பக்ஷணவாடையை நினைந்து ஆசைகொண்டு பேசிய வார்த்தைகளை எனது காதுகளால் கேட்ட பின்னே இதைப் பிதுர் தேவதைகளுக்கு ஆவாகனம் பண்ணிப் பிராமணர்களுக்கு எப்படி பரிமாறுகிறது? இனி இந்தப் பதார்த்தங்களைக்கொண்டு சிரார்த்தம் பண்ணினால், சிரார்த்தபலனை நான் இழப்பதோடு பிதுர்சாபமும் சேருமே! இதற்கு என்செய்வது?" என்று சிந்தித்துக் கொண்டு இருக்கும்பொழுது, "ஓ கோ! இதுவோ ஈஸ்வர சோதனை. பிராமணமுகமாக வந்து நான் கொடுக்கும் சிரார்த்தத்தை ஏற்றுக்கொள்ளவேண்டிய பகவான், இன்று பஞ்சமன் வடிவாக வந்து சிரார்த்தத்தை யேற்றுக்கொள்ள விரும்பினான். கர்மவசத்தால் தோன்றிய சரீரத்திற்கு மாத்திரம் உயர்வு, தாழ்வு, உயர்ந்த சாதி, தாழ்ந்தசாதி, என்னும் வித்தியாசம் உண்டன்றி, ஆன்மாவானது நித்திய வஸ்துவானதால், அதற்கு உயர்வு தாழ்வு உண்டென்று சாஸ்திரங்கள் கூறப்படவில்லையே. அந்த ஆன்மாக்களை சரீரமுடையவனாய் அமைந்த சர்வேஸ்வரனுக்கு சாதிபேத மில்லையாதலால், என்னைச் சோதிக்கவும், கர்மங்களில் இன்னம் எனக்குக் கொஞ்சம் இருக்கும் ஆசையை ஒழிப்பதற்குமே செய்த காரியம்" என்று நிச்சயித்துக்கொண்டு தனது நிழல்போல் தான் சென்ற வழியெல்லாம் செல்லத் தகுதியுடையவளான தனது பத்தினியாகிய தாராதேவி என்னும் பதிவிரதையை மேல்மாடத்தி லிருந்து அழைத்தார்.

தாராதேவியானவள் அக்கணமே ஓடிவந்து வந்தனைசெய்து நிற்க, ஏகநாதர் தனது மனைவியைப் பார்த்து, "பெண்ணே! இன்று நடந்த சம்பவத்தை நீ அறியாயோ? உனது மாமனான என் தந்தையின் சிரார்த்தத்திற்காக திருப்பணியாரம் செய்துக் கொண்டிருக்கும்போது, அதன் வாசனையை முகர்ந்த தோட்டக்காரனான பஞ்சமன் தன் மனைவியுடன் "இந்த வாசனையுள்ள பலகாரங்கள் நமக்குக்கிடைக்குமோ" என்று ஆசையடைந்தான். ஒரு பஞ்சமன் விரும்பிய பதார்த்தத்தை நமது பிதுர்க்களுக்களித்தால் சிரார்த்தபலன் இழப்பதோடு பிதுர்சாபமும் சாரும். அன்றி சர்வவியாபியான பரந்தாமன் நான் செய்யும் சிரார்த்தத்தைப் பிராமணமுகமாக இன்று விரும்பாது பஞ்சமன் முகமாக விரும்புகிறாய், ஈஸ்வர சங்கல்பம் அப்படி யிருக்கும்பொழுது நாம் என்ன செய்யலாம்? இன்று செய்த சிரார்த்த பதார்த்தங்கள் யாவும் பஞ்சமர்க்கு உணவு செய்வித்து வீட்டை மெழுகி புண்

ணியாவசனம் செய்துவிட்டு மறுபடியும் தளிகை பண்ணி சிராத்தம் நடத்தவேண்டுமேயன்றி, வேறு செய்வதற்கில்லை. உன் கருத்து யாது?'' என்று கேட்க, தாராதேவியும் "நாதா! தேவரீர் திருவுள்ளத்திற்கு எது செய்யலாமென்று தோன்றுகிறதோ, அதற்கு அடியாள் உடனாக யிருந்து செய்யக் கடமைப்பட்டவளே. ஆதலால் தேவரீர் விருப்பம்போல் இன்று பஞ்சமர்களுக்குத் ததியாராதனம் நடத்தியபின்னே சிராத்தகாரியத்தைப்பற்றி யோசிக்கலாம்'' என்று சொல்லி நாதனைப் பணிய, ஏகநாதர் தனது மனைவியின் உத்தம குணங்களைக் கொண்டாடிக்கொண்டு அப்பொழுதே பறைச்சேரிக்கு வந்து அங்குள்ள பஞ்சமர்கள் யாவரையும் குழந்தை ஸ்திரீகளுடன் அழைத்து வந்து, தோட்டக்காரன் அவன் மனைவி மகனுடன் தெருவில் பந்தியாக உட்காரவைத்து நீங்கள் எல்லோரும் "கோவிந்தா! கோவிந்தா'' என்று சொல்லிக்கொண்டு சாப்பிடுங்கள் என்றுசொல்லி, அவர்களுக்கு ஜலசுத்தி செய்து இலைகளைப் போட்டு அறுசுவையமைந்த பலவகை பொரியல், சிலவகைக் கூட்டு, பச்சடிவகைகள், கிச்சடிவகைகள், யாவும் பருப்புடனே இலையில் பரிமாறி அன்னம் படைத்து நெய்வார்த்து குழம்புவிட்டு சாப்பிடச் சொல்ல, யாவரும் உற்சாகத்தோடு "கோவிந்தா, கோவிந்தா'' என்று சொல்லிக்கொண்டே உண்டனர். ஏகநாத சுவாமியும் ஸ்ரீகண்டிய கிருஷ்ணனும் அநேகவகை பக்ஷணங்கள் அவர்கள் போதும் போதுமென்று சொல்லும்வரை இலையில் போட்டு அவர்கள் உண்ணும்படி செய்து பஞ்சமர்க்கு சந்தன தாம்பூலங் கொடுத்து எல்லோரையும் அனுப்பிவிட்டு, ஏகநாத சுவாமிகளும் ஸ்ரீகண்டிய கிருஷ்ணனும் கங்கைக்குச் சென்று தீர்த்தமாடி வீட்டை நன்றாக மெழுகிக் கோலமிட்டு,புண்ணியாவசனம் செய்து, சிராத்தம் பண்ண மறுபடியும் சமையல் செய்ய ஆரம்பித்தார். சமையல் நடந்துக்கொண்டிருக்கிறது.

இந்தச் சமயம் அந்த ஊரிலுள்ள வேதியர்கள் யாவரும் ஒன்றுகூடி ஏகநாதர் செய்த அக்கிரமச் செய்கைகளைக் கண்டு, ஆற்றாதவர்களாய், "ஏகநாதன் நமது சாதிக்குரிய பெருமையையும் குலைத்துவிட்டான். யாகத்திற்கு அவிர்ப்பாகம் செய்வதற்குப் பக்குவம் பண்ணிய சேமலதையை நாய்க்குப் போட்டதுபோல, பிதுர்தேவதைகளைத் திருப்தி செய்வதற்குரிய சிராத்தத்திற்குப் பக்குவம் பண்ணிய பதார்த்தங்களைப் பறையருக்குப் பரிமாறி பாழாயினான். அந்தோ! இவன் பண்டித சக்தியென்னவாயிற்று? இராமாயணம் பாடியும் பாகவதம் பாடியும் கடைசியாகக் கண்டது பறையரைப் பந்திவைத்து சிராத்தம் நடத்த அமைந்தது. இவனை நாம் விட்டுவிடப்படாது. நம்மைப்போல் மற்றைய ஊரிலுள்ள வேதியருடன் நாம் சம்மந்தம் செய்யவோ ஓர் பந்தி போசனம் செய்யவோ இனி வேண்டுமானால், நாம் சாக்கிரதை

யாக இவனை நமது சாதியிலிருந்து விலக்கிவிடவேண்டும். இவன் முகத்தில் யாரும் விழிக்கப்படாது. நெருப்பு தண்ணீர் இரண்டையும் விலக்கிவிட வேண்டும்'' என்று சொல்லி முடிவு செய்துக்கொண்டு அவனிடம் நேரே சென்று கேட்போமென்று யாவரும் கோபத்தோடு வந்து, ஏகநாத சுவாமிகளை அழைத்து, "அடே! குலத்தைக் கெடுத்த கோடாரிக் காம்பே? அநேகயாகங்கள் செய்து சோமயாசி என்று பெயர்பெற்ற உத்தமரான சக்ரபாணிக்குப் பேரனாய்ப் பிறந்தாயே? ஐயோ! பிராமணர்களுக்கு இந்தக்கலியுகத்தில் மற்றைய யாகங்களும், தபசும், தியானமும்போய் இந்தத் திதியென்று வருஷத்திற் கொருமுறை பிதுர்க்களைத் திருப்தி செய்துவைத்து எள்ளும் தண்ணீரும் வார்ப்பதுதானே இருக்கிறது. இதையும் குலைத்துவிடுவோமென்று நீ தலையெடுத்தாயே? பஞ்சமர் முகத்திலும் விழிக்கப்படாத இந்தப் பிதுர்தினத்தில் பிதுர்தேவதைகளைப் பிராமணர் முகமாக திருப்திபண்ண வேண்டியதற்காகச் சமையல் செய்த பதார்த்தங்களை யெல்லாம் நீயேநேரில் பறைச்சேரிக்குப்போய் பஞ்சமர்களை அழைத்துவந்து பகல் பதினைந்து நாழிகை நேரத்தில் பிராமணர்களுடைய நடுத்தெருவில் பந்திவைத்து பரிமாறுவதற்கு இந்த ஊர் பூராவும் உனக்கே சொந்தமா? நீ இப்படிச் செய்த காரியம் என்ன? என்று கேட்க, ஏகநாத சுவாமிகள் அந்த வேதியர் கோஷ்டிகளுக்கு வந்தனமளித்து, "சுவாமிகளே! அடியேன்மீது கோபம் கொள்ளாமல் கேட்கவேண்டும். சிராத்தம் செய்ய வஸ்திர முலர்த்துவதற்காக மேல்மாடத்தில் ஏறும்பொழுது தோட்டவேலைசெய்யும் பஞ்சமனும் அவன் மனைவியும் பக்ஷணம் செய்கின்ற நறுமணத்தை நுகர்ந்து அதன்மீது ஆசைகொண்டு, "இது நமக்குக் கிடைக்காது'' என்று சொல்லிக்கொள்ளும் வார்த்தை எனது காதில் கேட்டது. சிராத்தத்திற்கு செய்து வைக்கும் பதார்த்தங்களின் மீது பஞ்சமர் ஆசை யுற்றபின் அதைக்கொண்டு பிதுர்தேவதைக்குத் திருப்தி செய்துவைத்தால் சிராத்த பலனை இழப்பதோடு பிதுர்சாபமும் வரும் என்று கர்மகாண்டத்தில் கூறப்படுவதால், ஆசையுற்ற பஞ்சமருக்கே அதை வழங்கிவிட்டு, வீட்டைமெழுகி புண்ணியாவசனம் பண்ணி சிராத்தம் செய்வதற்காகத் தளிகை நடந்துகொண் டிருக்கிறது. எல்லாம் ஆய்விட்டது; நீங்கள் எல்லோரும் அடியேன்மீது கிருபை செய்து சிராத்தத்தை நிறைவேற்றிவைத்து எல்லோரும் போசனம் செய்து போகவேண்டும்'' என்று பிரார்த்தித்தார். உடனே வேதியர் யாவரும் முன்னிலும் அதிகமான கோபத்தை யடைந்து, "ஏ ஏகநாதா! நமது சாதியில் இதுவரை யாராவது ஒருவர் பஞ்சமனுக்குப் பிடிசாதம் போட்டதைக் கண்டிருக்கிறாயா? அவன் நமதடிமையானால் தானியத்தைத்தானே நாம் கொடுப்போம். அப்படி யிருக்க, பிதுர்தினத்தில் பிதுர்தேவதைகளைத் திருப்தி செய்யவும், பிராமணர்

களைத் திருப்தி செய்யவும், சமையல் செய்த பதார்த்தங்கள்
பூராவும் பந்திவைத்துப் பறையருக்குப் போட்டாய். பலகார
வாடையை பறையன் சுவாசித்து விருப்பம் கொண்டான் என்
றாய். அதைக்கொண்டு உனக்குச் சிரார்த்தம் செய்ய மனமில்லா
மற்போனால், அந்தப் பக்ஷணங்களைப் பசுவிற்கு வைத்துவிடு
கிறது. இல்லையேல் பூமியைத் தோண்டிப் புதைப்பது என்
பதை விட்டு விரும்பியவருக்கே கொடுப்பதோ? ஆகையால், உன்
னைச் சாதியிலிருந்து விலக்கிவிட்டோம். உன் முகத்திலுங் விழி
யோம். தீத்தண்ணீ ரிரண்டுமே விலக்கி யிருக்கிறோம்' என்று
சொல்லிவிட்டுச் சென்றனர்.

வேதியர் தன்னைச் சாதிபிரஷ்டம் செய்துவிட்டுச் சென்றபின்
ஏகநாதசுவாமிகள் ஏக்கத்துடன் சிரார்த்தம் முடங்கிவிட்டதே!
கர்மமென்னும் ஒன்றையே தாரகமாகப்பற்றி சொரூபலக்ஷணம்
இன்னதென்று தெரியாமலும், வைஷ்ணவம் இன்னதென்று
நோக்காமலும், இருக்கும் இந்த ஊரிலுள்ள வேதியர்கள் முனி
ந்து சென்றனரே! இதற்கென்ன செய்வது'' என்று சிந்தித்துக்
கொண்டிருக்கும்பொழுது சிரார்த்தத்திற்குத் தீர்த்தம் கொண்டு
வரச் சென்ற ஸ்ரீகண்டிய கிருஷ்ணன் தீர்த்தக்காவடியுடன் வந்து
காவடியை யிறக்கிவிட்டு ஆசாரியரைப்பணிந்து நிற்கும் சிஷ்யன்
போல் நின்று, "சுவாமி! தாங்கள் ஏதோ விசனமுற்றிருப்பது
போலத் தோன்றுகிறது. இதன் காரணத்தை அடியேன் தெரி
ந்துகொள்ளுமாறு விண்ணப்பம் செய்யவேண்டும்'' என்று இரங்
கிக் கேட்க, ஏகநாத சுவாமி, ஸ்ரீகண்டிய கிருஷ்ணனைப் பார்த்து,
"அப்பா! நீ தீர்த்தம் கொண்டுவரச் சென்றிருந்தபோது, இந்த
ஊரிலுள்ள வேதியர் யாவரும் திரண்டுவந்து நான் பஞ்சமர்களு
க்கு உணவளித்ததற்காகக் கோபித்துக்கொண்டு என்னைச் சாதி
பிரஷ்டம் செய்துவிட்டுச் சென்றார்கள். ஆதலால் சிரார்த்தம்
முடங்கிவிட்டது; இதுதான் நானடைந்த கவலை'' என்றுசொல்ல,
ஸ்ரீகண்டிய கிருஷ்ணன் ஏகநாதரைப் பணிந்து, "சுவாமி! தாங்
கள் சிரார்த்தம் செய்யும் புரோகிதர் வேண்டுவதில்லை. தங்க
ளுக்கே மந்திரங்களெல்லாம் தெரியும். மூன்று பிராமணர்கள்
வேண்டும். உமது திருவாராதன மூர்த்தியான பண்டரிநாதன்
ஒருவராயிற்று. அவருக்கு இன்னும் திருவாராதனமாகவில்லை.
ஆதலால், அவர் மகாவிஷ்ணு ஸ்தானத்திற்கு உரியவரே. அடி
யேன் ஒருவன் இருக்கின்றேன். என்னுடன் பரிசாரகராய் வேலை
செய்த இராமாநந்தன் ஒருவனிருக்கிறான். சிரார்த்தம் முடங்கி
விட்டதென்னும் கவலையே வேண்டாம். தளிகையாய்விட்டது
மேல்நடத்தும்'' என்று சொன்ன வார்த்தையைக்கேட்டு சிறிது
மகிழ்ச்சியடைந்து "நீசொல்லுவது ஆச்சரியத்தை விளைவிக்கின்
றது. நீங்களிருவர் இருப்பதுண்மையே. முன்னதாக மகா
விஷ்ணு ஸ்தானத்திற்குப் பண்டரிநாதனை நீர் குறிப்பிட்டீர்

அவர் எப்படி வருவார்? அன்றியும் என்னைச் சாதிப்பிரஷ்டம்
செய்தபின் நீங்களிருவரும் நான் செய்யும் சிரார்த்தத்திற்குப்
பிராமணர்களாக உட்கார்ந்தால் உங்களையும் சாதியைவிட்டுத்
தள்ளிவிடமாட்டார்களா? இந்த ஊரிலுள்ளவர்கள் உங்
களைச் சாதிப்பிரஷ்டம் செய்துவிட்டால் நீங்கள் எந்த ஊர்
சென்றாலும் பிராமண பந்தியில் உட்கார்ந்து சாப்பிடத் தகாத
வராவீரே. என்னால் நீங்கள் கெட்டுவிடப்படாதே'' என்று
சொல்ல, "அடியேன் விஷயத்தில் தங்களுக்குச் சந்தேகம்
வேண்டாம். என்னைச் சாதிப்பிரஷ்டம் பண்ணினால் பண்
ணட்டும். முதலில் பாண்டுரங்கனை அழைத்து, அவன்
உறுதி கேட்டுக்கொள்ளும்'' என்று சொல்லி, ஏகநாதர் "இவர்
நம்முடன் வேடிக்கை வார்த்தைப் பேசுபவரல்லர். ஆனாலும்,
பாண்டுரங்கனைப் பிரார்த்திப்போம்'' என்று, தனது மனதில்
நினைந்து பகவானைத் தியானித்தார். உடனே சங்கு சக்கரங்க
ளேந்திய சதுர்ப்புஜங்களுடன் கருமேகவண்ணனாய் ஏகநாதர்
முன்னே வந்து, "ஏகநாதா! நாழிகையாய்விட்டது; மகாவிஷ்ணு
ஸ்தானத்திற்கு நான் வந்தேன். பிதுர்ஸ்தானத்திற்கு உமது தந்
தையை வாசலில் சென்று அழையும் அவர் வருவார்'' என்று
நியமனம் செய்ய, ஏகநாத சுவாமிகள் கண்களைமூடி தியா
னத்திலிருந்தவர், கண்களைத் திறந்து நோக்க, ஸ்ரீமந்
நாராயணனே எழுந்தருளி யிருப்பதைக் கண்டு தாளிணையில்
வீழ்ந்து சாஷ்டாங்க நமஸ்காரம் பண்ணிவிட்டு வாசலில்
சென்று, "விஷ்ணு ஸ்தானத்திற்கு நாராயணனே வந்து
விட்டார். பிதுர் ஸ்தானத்திற்கு உம்மை அழைக்கிறார். நீர்
வரவேண்டும்'' என்று தன் தந்தையை அழைத்தார். அக்
கணம் சிரார்த்தம் எப்படி நடக்கிறது பார்ப்போமென்று எதிர்
வீட்டுத் திண்ணையில் குறும்பு செய்யும் வேதியர் கூட்டமாய்
நின்றுகாண, பிதுர்ஸ்தானத்திற்காக இவர் தந்தையான சூரிய
நாராயணர் ஆகாயத்திலிருந்து இறங்கிவந்து தன் தனயனைக்
கட்டிக்கொண்டு வீட்டினுள் புகுந்தார். உடனே பரந்தாமனான
பாண்டுரங்கன் விஸ்வதேவ ஸ்தானத்திற்கு ஒருவர் வேண்டு
மாதலால், நீ வாசலில் இருந்து கைலாசபதியை அழை, அவர்
வருவார்'' என்று சொல்ல, ஏகநாதசுவாமிகள் பாண்டுரங்கனது
சொற்படியே வாசலில் வந்து "கைலாசபதே! என் தந்தையின்
சிரார்த்தத்திற்கு விஸ்வதேவ ஸ்தானத்திற்கு நீர் எழுந்தருள
வேண்டும்'' என்றழைத்தார். உடனே சாம்பமூர்த்தியானவர்,
மான்மழுகரத்தராய்க் ககனமார்க்கத்தில் இருந்து இழிந்துவந்து
நிற்க, ஏகநாதர் அவர் திருவடியில் விழுந்து வணங்கும்பொ
ழுது, அவரை ஆசீர்வதித்துவிட்டு வீட்டினுள் புகுந்தார். இதற்
குள் அந்த ஊரெல்லாம் "ஏகநாதருடைய வீட்டில் நடக்கும்
சிரார்த்தத்திற்கு நாராயணனும் சிவபெருமானும் பிதுர்ஸ்தானத்

திற்கு சூரியநாராயணரும் வந்துவிட்டார். சிரார்த்தம் நடக்கிறது'' என்று எங்கும் பரவ, வேதியர் யாவரும் இந்த அதிசயத்தைப் பார்க்க வந்து கூடினர். சிரார்த்தம் ஆரம்பமாகுமுன் மூன்றுபேருக்கும் எண்ணெய் நலங்கு கொடுக்க, மூவரும் தேய்த்துக்கொண்டபொழுது கிணற்றில் தீர்த்தமாடினால் ஆசாரக்குறைவு என்று நினைத்து பகவான் ஏகநாதரைப் பார்த்து, "நீர் இப்பொழுது கங்கையை நினையும்'' என்று சொல்ல, அவரும் கங்காதேவியை நினைத்தார். உடனே ஆகாயத்திலிருந்து கங்காநதியானவள் ஒரு அருவிபோல ஏகநாதருடைய வீட்டு முற்றத்தில் பெருகிவந்தாள். மூவரும் தீர்த்தமாடிவிட்டு தங்கள் வஸ்திரத்தை உலர்த்தி உடுத்திக்கொண்டு தங்களுக்குரிய சின்னங்களைத் தரித்துக்கொண்டு உட்கார்ந்தார்கள். விதிப்படி மந்திரங்களுடன் மூவருக்கும் பூசைநடந்து, பின் ஆகாரமும் முடிந்தது. பின் மந்திரவிதிப்படி தக்ஷிணை தாம்பூலம் வாங்கிக்கொண்டு யாவரும் காணத் தெருவில்வந்து ஆகாயமார்க்கமாய்ச் சென்றனர். அப்பொழுது ஊரிலுள்ள வேதியர்களெல்லாம் ஒன்றுகூடி "நாம் ஏகநாத சுவாமிகளின் பெருமையை தெரிந்துக் கொள்ளாமல், கர்மம் கர்மம் என்று முட்டிக்கொள்ளுகிறோம். இது என்ன ஆச்சரியம்! அந்த ஸ்தானத்திற்குரிய அந்தந்த தேவதைகளே நேரில் எழுந்தருளி சிரார்த்தம் நடந்ததாகப் புராணங்களில்கூட கேட்டதில்லையே! இப்பேர்ப்பட்ட உத்தமரைச் சாதிப்பிரஷ்டம் செய்தது தப்பிதமானது. இந்தச் சம்பவம் வெளியூர்களில் பரவினால், இவரைச் சாதிப்பிரஷ்டம் பண்ணின நம்மையே சாதிப்பிரஷ்டராக்கிவிடுவார்கள். நாம் ஏதோவொரு பிராயச்சித்தம் செய்து இவரை நம்முடன் சேர்த்துக்கொண்டாலன்றி, நமக்குப் பெருமை ஏற்படாது. ஆதலால் இவருடன் பேசுவதற்கு இன்று வருவோமென்பதாகத் தீர்மானித்துத் தங்கள் தங்கள் இல்லம் சேர்ந்தனர்.

பைட்டிணிபுரத்து பார்ப்பனர்கள் இவ்வாறு யோசித்துத் தமது வீடுகள் சேர்ந்தபின் ஏகநாதசுவாமிகள் சமபந்தியில் ஸ்ரீகண்டிய கிருஷ்ணனை வைத்துக்கொண்டு அமுதுசெய்துவிட்டு வழக்கம்போல ஸ்ரீ பாகவதத்தை எழுதிக்கொண்டிருந்தார். சமயம் முன்னே தீர்மானித்தபடி ஏகநாதசுவாமிகளைப் பிராயச்சித்தம் செய்துகொள்ள சொல்லுவதற்காக அந்த ஊரிலுள்ள வேதியர் யாவரும் திரளாய்வந்து ஏகநாதருடைய சரணாரவிந்தத்தில் சாஷ்டாங்கமாக தண்டம் சமர்ப்பித்து "சுவாமி! தேவரீருடைய பிரபாவம் தெரியாது அடியோங்கள் பேதைமதியால் தம்மைச் சாதிப்பிரஷ்டம் செய்தோம். தமது திருமாளிகையில் நடந்த அற்புதச் செய்கையால் அடியேங்களுக்குப் புத்தி வந்துவிட்டது. நாங்கள் செய்த குற்றங்களையெல்லாம் பொறுத்து க்ஷமித்தருளவேண்டும். தயாநிதே! எங்கள் அறிவானது கர்மத்தி

னிடமே நாடிக்கொண்டிருப்பதால், ஒரு அற்பமான பிராயச்சித்தம் செய்யவேண்டும்'' என்று சொல்ல, ஏகநாத சுவாமிகள் வேதியர்களைப் பார்த்து, "அடியேன் வைஷ்ணவனாய் அந்தத் தத்துவங்களைத் தெரிந்துகொண்டு விட்டதால் கர்மங்களில் எனது மனது விசேஷமாய்ப் பரவாது போயிற்று எளியேனை உங்களுடன் சேர்த்துக்கொள்ள மனமுவந்து விட்டீர்களாயின் நீங்கள் சொல்லும் பிராயச்சித்தம் யாது? அதைச் சொன்னால் செய்கிறேன்'' என்று சொல்ல, வேதியர்கள் ஏகநாத சுவாமியைப் பார்த்து, "சுவாமி! வேறொன்றுமில்லை. கங்காநதியில் இதற்கொரு சங்கல்பம் பண்ணி தீர்த்தமாடினால் அதுவே பிராயச்சித்தமாகும். அதை நாளையே செய்துவிடலாம்'' என்று சொல்ல, ஏகநாத சுவாமிகளும் அதற்குச் சம்மதித்து வேதியருடன் சொல்ல, யாவரும் கேட்டு சந்தோஷித்துத் தங்கள் தங்கள் கிரகங்களுக்குச் சென்றனர்.

மறுநாள் பொழுதுவிடிந்ததும், ஏகநாதர் அன்று சங்கல்பதினமாதலால் கங்கை ஆற்றுக்குச்செல்ல, வேதியர் வருகைக்காகக் காத்திருந்தனர். வேதியர் யாவரும் கூட்டமாய் ஏகநாதசுவாமியின் திருமாளிகைக்கு வந்து அவரைச் சங்கல்ப ஸ்நானம்செய்து வைப்பதற்காக கங்காநதிக்கு அழைத்துச் சென்றனர். ஏகநாத சுவாமிகளுக்கு மகா சங்கல்பம் நடந்துகொண்டிருந்தது. அந்தச் சமயத்தில், திரியம்பக க்ஷேத்திரத்தினின்று ஒரு சைவத் திருமறையோன் விபூதி உருத்திராக்ஷ மணிந்து சிவநாமம் சொல்லிக்கொண்டு பைட்டிணி நகரத்திற்கு வந்து ஏகநாதருடைய திருமாளிகைக்குப் போய் அவரை விசாரிக்க, அவர் பிராம்மணர்களுடன் கங்கைக்குப்போய் இருக்கிறாரென்று, தெரிந்து சங்கல்பம் நடந்துகொண்டிருக்கும் இடத்திற்கு வந்து அந்தப் பிராமணகோஷ்டிகளுக்கு சாஷ்டாங்க தெண்டனிட்டு வேதியர்களை நோக்கி, "இந்தக் கூட்டத்தில் ஏகநாத சுவாமிகள் எங்கே எழுந்தருளியிருக்கிறார்'' என்று கேட்க, வேதியர்கள் விப்பிரோத்தமனைப் பார்த்து, அவரை நீர் தேடிவந்த காரணம் யாது? அவரால உமக்கு ஆகவேண்டியதென்ன?'' என்று கேட்க, சைவநெறி வந்த சதுர்மறையோன் குட்டநோயால் மலினமடைந்த தனது சரீரத்தைக் காட்டி, "நான் திரியம்பக க்ஷேத்திரத்தின் அருகேயுள்ள ஒரு கிராமத்தி லிருப்பவன். மிக்க எழில் வாய்ந்த எனது சரீரத்திற்குக் கொடிய குஷ்டநோய்வந்து உருமாறிவிட்டது. இந்தக் குஷ்டநோயைத் தீர்த்துக்கொள்ளக்கருதி, திரியம்பக க்ஷேத்திரத்திற்குச் சென்று உமாபதியான சிவபெருமானை நோக்கித் தவம் பண்ணவும், அகண்ட பரிபூரண சச்சிதானந்தனான சிவபெருமான் என்னிடம் வந்து தோன்றி, "அஞ்சாதே ஓ! மறையவனே! பைட்டிணிபுரத்தில் ஏகநாதரென்று ஒரு வைஷ்ணவ

யிருக்கிறார். அவர், பிதுர்க்களைத் திருப்திசெய்து வைப்பதற்காகச் செய்திருந்த பதார்த்தங்களை யெல்லாம் பஞ்சமர்களை அழைத்து அவர்களுக்கிட்டு ததியாராதனம் செய்து வைத்தார். அப்படி நடக்கும்பொழுது அவர்களைப் பஞ்சமர்களாக நினையாது பாண்டுரங்கனாகவே பாவித்துவிட்டாராதலால், அவர் செய்த ததியாராதனத்தில் உட்கார்ந்து உணவுசெய்யும் பஞ்சமர்களுக்குள் பாண்டுரங்கன் ஆவேசித்துத் ததியாராதனத்தை ஏற்றுக்கொண்டார். இந்தத் ததியாராதனத்தால் பகவான் அடைந்த திருப்திக்கு ஒரு எல்லையில்லை. ஆதலால், நீ அவரிடம் சென்று நடந்த ததியாராதனத்தில் ஒரு பெண்குழந்தைக்குச் செய்த பலனில் ஒரு பங்கு தானமாகப் பெற்றால், அக்கணமே இந்தநோய் மாறுவதன்றி, இனிப் பிறவியென்பதும் உன்னிடம் அணுகாது' என்று சொல்லி மறைந்தார். நான் சிவாக்கினையின்படியே ஏகநாதருடைய அனுக்கிரகம் பெறலாமென்று வந்தேன்" என்றனர். இந்த வார்த்தைகளைக் கேட்ட மறையவர், ஏகநாதரைக்காட்ட, திரியம்பகனாதனால் அனுப்பவந்த வேதியர் ஏகநாதரைப் பணிந்து, முன் வேதியரிடம் சொன்னது போலவே ஒன்றுவிடாது சொல்ல, அந்த வார்த்தைகளைக் கேட்டு "விப்பிரோத்தமா! அடியேன் நிஷ்காம்மிய பலனை உத்தேசித்தவனேயன்றி, ததியாராதனத்தால் விசேஷ பலனுண்டென்று செய்பவனல்லன். ஆதலால் அடியேன் சிவாக்ஞையை உல்லங்கனம் பண்ணாது பஞ்சமபந்தியில்உட்கார்ந்து உண்டவொருபெண்குழந்தை உண்டபலனை உமக்காக ஏற்றுக்கொண்டு அதில் ஒருபாகத்தைத் தருகிறேன்" என்று சொல்லி கங்காஜலத்தை மொண்டு எள்ளுடன் அவர் கரத்தில் தாரை வார்த்தார். அந்த நீரானது அவர் கையில் விழுந்ததுமே அவர் சரீரத்திலிருந்த குட்டநோய் முற்றும் நீர்ந்து திவ்விய சரீரத்தோடு விளங்கக்கண்டு, ஏகநாத சுவாமிகளைத் தோத்திரம் பண்ணினார். இதைக்கண்ட வேதியர்கள் வெட்கமுற்று "இன்னுமா பிராயச்சித்தம் செய்யவேண்டும்? நாம் கொச்சைமதியால் லச்சையுற்றோம்" என்று நினைந்து, பிராயச்சித்தம் வேண்டாமென்று ஏகோபித்து சொல்ல, அவரைத் திருமாளிகைக்கு அழைத்து வந்து, அவர் திருவடிகளில் விழுந்து "அபசாரங்களைப் பொறுத்தருள வேண்டும் புண்ணியரே" என்று பிரார்த்திக்க, ஏகநாதசுவாமிகள் எழுந்து நின்று பிராமண கோஷ்டிகளுக்கு வந்தனம் செய்து "நீங்கள் அடியேன் விஷயத்தில் ஒரு குற்றமும் செய்யாதிருக்க, குற்றம் செய்தவர்போல மன்னிப்பு கேட்பது நீதியோ? நீங்கள் யாவரும் அடியேன் புனிதமடைய என் வீட்டில் ஆகாரம் செய்து போகவேண்டும்" என்று பிரார்த்தித்தார். வேதியர் யாவரும் அதற்கு உடன்பட்டதும் ததியாராதனம் நடந்து சந்தன தாம்பூலம் பெற்று யாவரும் தங்கள் தங்கள் வீட்டிற்கு ஏகினார்கள்.

ஸ்ரீ கண்டிய கிருஷ்ணனை துவாரகை சேர்த்த அத்தியாயம்

ஏகநாத சுவாமிகள் பைட்டினிபுரத்தில் அநேக அற்புதங்களைச் செய்துகொண் டிருக்கும்பொழுது இவர் எழுதிவந்த பாகவதமும் முற்றுப்பெற்றது. அதை பகவத் சன்னதியில் வைத்து இராமாயணத்தை அரங்கேற்றியதுபோல, பண்டிதர்களின்முன் அரங்கேற்றி முடித்தார். இப்படியிருக்க, புண்டரீகாக்ஷன்; விப்பிரோத்தமன்; துவாரகையில் பிறந்தவன்; பக்தி வைராக்கியமுடையவன்; சதா கிருஷ்ணபகவானையே தியானித்துக்கொண் டிருப்பவன்; பூததயை யுடையவன்; இத்தகைய சிறந்த அம்சங்களையுடைய புண்டரீகாக்ஷன் கிருஷ்ணபகவானை நேரே தரிசனம் செய்யவேண்டுமென்னும் ஆசை தனக்கு அதிகரிக்க, அக்கணமே தவம் செய்ய நினைத்து ஒரு வனத்தை யடைந்து ஐம்புலனடக்கி அருந்தவம் செய்துகொண்டிருந்தான். இப்படி தவம் செய்துகொண் டிருக்கும்பொழுது ருக்மணிபிராட்டி இவன் முன்னே தோன்றி, "விப்பிரோத்தமா! நீர் இங்கு இருந்து என்ன தவம் பண்ணினாலும் எனது பிராணபதியைக் காணமாட்டீர். அவர் துவாரகையை விட்டுப்போய் ஒரு பன்னிரண்டு வருஷமாகிறது. அவர் பைட்டினிபுரத்தில் பரமபாகவதோத்தமராய் எழுந்தருளியிருக்கும் ஏகநாதருடைய பக்திவலையில் ஈடுபட்டு அவர் பத்தினியாகிய எங்களையும் பிரிந்து பக்தவத்சலனென்னும் பெயர் இருந்தால் போதுமென்று நினைத்துப் பிராமண சரீரத்துடனே ஸ்ரீ கண்டிய கிருஷ்ணனென்னும் பெயரை வைத்துக்கொண்டு பரிசாரக வேலைசெய்து வருகிறார். நீர் பைட்டினி புரத்திற்குச் சென்று, அவரிடம் எங்களைப் பன்னிரண்டு வருஷமாகப் பிரிந்திருப்பது நியாயமல்ல என்று சொல்லி நீரும் அவரைத் தரிசனம் பண்ணி அவரையும் இங்கு எழுந்தருளும்படி செய்யும்" என்று சொல்லி மறைந்தாள். புண்டரீகாக்ஷன் ஜெகன்மாதாவான ருக்மணிபிராட்டி சொன்னதை நினைந்து உடனே தவநிலையை விட்டெழுந்து துவாரகையினின்றும் பைட்டினிபுரத்திற்கு வந்து ஏகநாத சுவாமிகளின் திருமாளிகையை விசாரித்துக்கொண்டு அவர் திருமாளிகைக்கு எழுந்தருளவும், பரமசாந்தராக எழுந்தருளிய புண்டரீகாக்ஷரைக் கண்டு எழுந்து தீர்க்க தண்டம் சமர்ப்பித்து, அர்க்கியமளித்து ஆசனத்திலிருத்தி, "அருந்தவச் செல்வமே! அடியேன்மாட்டு கருணைகூர்ந்து எழுந்தருள் என்ன தவம் செய்தேனோ? சுவாமி! தேவரீர் திருவவதரித்த புண்ணிய பூமி எதுவோ? உமது நல்ம்பெறு நாமம் யாதோ? நீர் நாடிச் சேரும் தேசங்கள் எவை எவையோ? இன்று அடியேன் செய்யும் அதிதி பூசையை அங்கீகரிக்க வேண்டும்" என்று பிரார்த்தித்தார். புண்டரீகாக்ஷர் தன்னைப் பிரார்த்திக்

கும் ஏகநாத சுவாமியைப் பார்த்து, இருகரங்களையும் குவித்
துக்கொண்டு "பாகவதோத்தமா! உமது பெருமையே பெருமை!
நீர் அடைந்த பாக்கியமே பாக்கியம்! உம்முடைய அதிதிபூசை
யில் என்னை ஒழிந்த வேதியரடையும் பாக்கிய விசேஷத்தை
அடியேன் அடைய முடியாதவனாக இருக்கிறேன். சுவாமி! அடி
யேன் உமது அதிதி பூசையை நாடி வந்தவனல்லன். உம்
மிடத்து பரிசாரக உத்தியோகம் பார்த்து வரும் ஸ்ரீகண்டிய
கிருஷ்ணனைத் தேடி வந்தேன். அவர் இப்பொழுது எங்கேயிருக்
கிறார்? என்று கேட்க, ஏகநாதர் புண்டரீகாக்ஷனுடைய வார்த்தை
யைக் கேட்டு விஷயம் ஒன்றும் புலப்படாமல் யோசிக்கிறார்.
"பன்னிரண்டு வருஷமாக நமக்குக் கைங்கரியம் செய்துக்கொண்
டிருக்கும் ஸ்ரீகண்டிய கிருஷ்ணனைத் தேடிவந்தே னென்கிறார்.
அவர் வந்த நாள்முதல் இதுவரை அவருடைய பந்துக்களென்
றுவது, நியதிகளென்றுவது, சிநேகிதர்க ளென்றுவது, வந்தவர்
கள் ஒருவரையும் காணேன். இன்று இவர் அவரை இவ்வளவு
ஆத்திரத்துடனே தேடுவதற்குக் காரணம் யாதோ! இவருக்கும்
அவருக்கும் என்ன சம்பந்தமோ தெரியவில்லையே!" என நினை
த்து இவரிடம் கேட்போமென்று துணிவுகொண்டு, புண்டரீகாக்ஷ
ரைப் பார்த்து, "சுவாமி! எங்கிருந்து எழுந்தருளுகிறீர்? ஸ்ரீகண்
டிய கிருஷ்ணனுக்கும் உமக்கும் என்ன சம்பந்தமிருக்கிறது? அப்
படி சம்பந்தமிருந்தால், பன்னிரண்டு வருஷமாக அவரை
நாடாத காரணம் யாது? இதை அடியேன் தெரிந்து கொள்ளு
மாறு சொல்லவேண்டும்" என்று பிரார்த்தித்தார்.

அப்பொழுது புண்டரீகாக்ஷன் ஏகநாதரைப் பார்த்து "பாக
வத சிகாமணியே! நானிருப்பது துவாரகை. என் பெயர் புண்
டரீகாக்ஷன் என்பார்கள். எனக்கும் ஸ்ரீகண்டிய கிருஷ்ணனுக்கும்
பிதா புத்திர சம்மந்தம் உண்டு. அவனே என் பிதாவாவான்.
நான் அவன் மைந்தனாவேன்" என்று சொல்ல, இதைக் கேட்டு
வியப்படைந்து, "சுவாமி! தேவரீரைப் பார்த்தால் வயோவிர்த்த
ராகக் காணப்படுகின்றீர். யௌவன வயதுடைய ஸ்ரீகண்டிய
கிருஷ்ணனை உமது தந்தை யென்கிறீரே? இது விந்தையாக
வன்றோ இருக்கிறது" என்று சொல்லும் ஏகநாதசுவாமிகளைப்
பார்த்து, "சுவாமி! அதை இன்னும் சற்று நிமிஷத்தில் நீரே
தெரிந்துகொள்வீர். அவர் எங்கே? அதை மாத்திரம் உரைத்
தருளும்" என்று சொன்னார். ஏகநாதர் புண்டரீகாக்ஷனைப் பார்
த்து, "அவர் தீர்த்தம் கொண்டுவர கங்கைக்குச் சென்றிருக்கிறார்.
இன்னும் சிறிதுநேரத்தில் வந்துவிடுவார்" என்று சொல்லும்
பொழுதே இரண்டு பக்கங்களிலும் இரண்டு பெரிய செப்புப்
பானையை நிரப்பிய தண்ணீருடன் தொங்கவிட்டுத் தூக்கிய காவடி
யைத் தோளிலே சுமந்துகொண்டுவரும் பிராமணனைக் காட்டி,
"இவரே ஸ்ரீகண்டிய கிருஷ்ணன்" என்று தெரிவித்தார். ஏக

நாதசுவாமிகள் காட்டக்கண்ட புண்டரீகாக்ஷர், ஸ்ரீகண்டிய கிருஷ்
ணனுடைய பாதங்களில் சாஷ்டாங்கமாகவிழுந்து தண்டம்சமர்ப்
பித்து, இரண்டு கண்களிலும் கண்ணீர் சொரிய, "ஏ! ஜீவரக்ஷகா!
தீனதயாளா! நீ நல்லகாரியம் செய்தாய். பக்தவச்சலனென்னும்
திருநாமத்தை உலகிற்கு அனுஷ்டித்துக் காட்டவேண்டுமென்று
கருதியோ நீ இத்தனை நாளாக ஏகநாதனுக்கு பரிசாரகனா
னாய்? பல பல அண்டங்களை நினைத்தமாத்திரத்திலே தோற்று
வித்து தோற்றிய பொருள்களை உனது கருணையால் காத்தும்;
உலகத்தைப் படைத்த பிரமனோடு பிரளயம் வந்தபொழுது உல
கங்களையெல்லாம் வயிற்றி லொடுக்கிக் காத்தும்; சிறிதுகூட சிரம
மடையாத உமக்கு, பிராமண வேடந் தரித்து பன்னிரண்டு வருட
காலம் பரிசாரக வேலைசெய்து உடல் வருந்தும் தன்மையும் வந்
ததோ? எந்தாய்! பஞ்சபூதமும் உன்னையன்றி வேறில்லாதிருக்க,
நீ நினைத்தால் கங்கையே ஏகநாதனுடைய வீட்டில் கைகட்டி
ஊழியம் செய்யக் காத்திருக்கும்பொழுது, காவடி கட்டித் தோள்
களில் தழும்புண்டாகத் தண்ணீர் சுமந்து வருகின்றனையே? நீ
யாருக்கு பயந்தவன்? உன்னைத் தண்டிப்பவன்தான் யார்? அனு
வும் உன் அழகிய பாதகமலங்களில் விழுந்து அடங்கி உன்
ஏவலை எதிர்பார்த்துக் கொண்டிருக்குமே? ஏ! பன்னகசயனா!
நீயோ இருதோள்களும் வலியெழத் தண்ணீர்க் காவடியைத்
தூக்கவேண்டும்? இது என்ன சௌலப்பியம்? இந்திரன் முதல்
இறைவராலும் காணற்கரிய கழலிணைகள் கங்கைநீர் சுமந்து
வருந்தினவோ? பல்கோடி தேவரும் முனிவரும் வணங்க உரியவ
னான நீ ஏகநாதனுடைய தொண்டனாய் இணையடி பணிந்தாயோ?
இறைவனே! உனது திருமார்பைவிட்டுப் பிரிதல் செய்யாத
லக்ஷ்மிதேவியின் அவதாரமான ருக்மணி பிராட்டியைப் பன்னி
ரண்டு வருஷம் விட்டுப் பிரிந்திருக்க உனக்கு எங்ஙனம் மனந்
துணிந்ததோ? சரணாகதியாய் வத்ஸலனென்னும் நமது திரு
நாமத்திற்கு அழிவுவரினும் வருக, ஏகநாதருடைய கைங்கரியம்
இருந்தால் போதுமென்று நினைத்துப் பன்னிரண்டு வருடமாய்
உம்மைச் சரணமடையும் அடியவரையும் நோக்காது இருப்பது
நீதியோ? பரந்தாமா! உன்னைக்கண்டு தரிசிக்கவேண்டுமென்று
பல நாளாகத் தவம்பண்ணியும் நினது கருணை அடியேன்மாட்டு
எய்தப்பெறாது போகவே ருக்மணிபிராட்டியால் உமது செய்கை
தெரிந்தன்றோ உம்மைநாடி வரும்படி நேர்ந்தது. அந்தோ!
ராதா ருக்மணி பாமாமுதலிய பட்டபுஸ்திரீகள் எண்மரும் உன்
னைப் பிரிந்து பரதவிக்கின்றனரே? அவர்களையும் பொருட்படுத்
தாது பரதவிக்கவிட்டுப் பார்ப்பான் உருவம் தரித்துப் பாண்டு
ரங்கனாது தாசனான ஏகநாதருக்கு அடிமையாய் அமைந்த
னையே? பதினாயிரம் தேவிமார்கள் தனித்தனியே "தன் தன்
நாதன்" என்று பார்த்து மகிழும் நீ ஒற்றைப் பூநூலோடு பிரம

சாரியாய்க் காணப்படுகின்றனையே? சத்தியத்தை நிலைநிறுத்துவதற்காகத் திருவவதரித்த உமக்கு இத்தகைய பொய்வேடம் புனைவது பொருந்துமோ? 'புவனநாயகா' என்று பலவாறு பேசும்பொழுது ஸ்ரீகண்டிய கிருஷ்ணன் பேச நாவெழாது தலைகவிழ்ந்திருந்துவிட்டு மெல்ல சென்று திருமடைப்பள்ளியில் சென்று தீர்த்தக் காவடியை யிறக்கிவைத்துவிட்டு ஏகநாதருடைய சன்னதி அறையினுள் நுழைந்து துவாரகைக்கு எழுந்தருளினார். புண்டரீகாக்ஷனென்னும் வேதியர் சன்னதிக்கூடம் சென்று, ஸ்ரீகண்டிய கிருஷ்ணனான கோபாலன் வெளியில் வராமையைக் கண்டு, "சன்னதி உள்ளே சென்றவர் ஏன் வெளியே வரவில்லை" என்று உள்ளே தான் சென்று பார்க்கக் காணாமையினால், "ஆ கோபாலா? என்னை மோசம் செய்து ஓடினையே? தீனதயாளு! உன்னையே அடைய வேண்டும்; தரிசிக்க வேண்டும்; என்று அடியேன் செய்த தவமெல்லாம் பாழாய் விட்டதே" என முட்டிக்கொண்டார். கடகடவென்று கீழேவிழுந்து புரண்டார். "ஏ! வஞ்சநெஞ்சுடைய மாதவா! இது உனக்கழகா! நானும் உன்னையே நாடித் தவம் பண்ணினேன். உண்டி சுருக்கினேன். ஐம்புலனடக்கினேன், சித்தத்தை ஒருவழிப்படுத்தினேன். உனது திருவடியையே உள்ளத்தி லூன்றினேன். நீ வருவாய் வருவாய் என்று காத்திருந்தேன். வாராமையால், பெரிய பிராட்டியாய், உன்னைப் பிரியாதவளாய் இருக்கும் ருக்மணிதேவி பிரசன்னமாய் வந்து நீயிருக்குமிடத்தைச் சொல்ல, தவநிலையிலிருந்து எழுந்தபடியே துவாரகையிலிருந்து வழிநடந்து இங்கு வந்தேனே! உன்னைத் தேடி வந்த அடியேனிடம் ஒரு வார்த்தைகூட பேசாமல் மறைந்துபோனது நீதியோ? நான் உன்னை நினையாதிருந்தேன். என்னைப் பார்க்கிலும் ஏகநாதன் விசேஷ பக்தி செய்தனரா? அவருக்கு அடிமையாய் பன்னிரண்டுவருஷம் பரிசாரகனாய் உழைத்துவிட்டு, எனக்கு மாத்திரம் தரிசனம்கூட தராமல் ஒரு வார்த்தையும் சொல்லாமல் கள்வன்போல ஒளித்துக்கொண்டு ஓடினையே? ஓ! யதுகுல திலகா! உன்னை இனியெங்கே காண்பேன்? காணாது போனால் எப்படி வாழ்வேன்?" எனக் கதறினார்.

இதற்குள் ஏகநாதர் பிரமை கொண்டவர்போல யிருந்து சன்னதியினுள்ளே முட்டிக்கொள்ளும் சத்தம் கேட்டதும், புண்டரீகாக்ஷர் திருவாராதனம் செய்யும் இடத்தில் பகவான் சன்னதியிலே உயிரை மாய்த்துக்கொள்ளுவரோ என்று பயந்து விரைவாய் உள்ளே சென்று, உருண்டு புரண்டு கதறும் வேதியரைத் தூக்கி, "உத்தமா! உம்மினும் யான் பெரும்பாவியன்றோ? நீ அடியேனிடம் ஊழியம் செய்துவந்த ஸ்ரீகண்டிய கிருஷ்ணனை சர்வேஸ்வரனென்று தேடிவந்தடைந்து தரிசித்து திருவடியில் விழுந்து அவருடைய அநந்த கல்யாண குணங்களைக் கொண்டாடிப் பேசினீர். அடியேன் பன்னிரண்டு வருஷகாலமாய் எனது

வீட்டிலே ஊழியம் செய்யும் ஸ்ரீகண்டிய கிருஷ்ணனை பகவானென்றறிந்து பூசிக்கப்பெறாது போயினேன். அறியாது போயினேனாயினும், நீர் அவருடைய பாதத்தில் விழுந்து தோத்திரம் பண்ணும்பொழுது, அடியேன் எனக்கொரு பங்காக ஒரு பாதத்தைப் பற்றிக்கொண்டு நான் செய்த பிழைகளைப் பொறுத்தருள் வேண்டுமென்றாவது, பிரார்த்தித்தேனா? நீர் சர்வேஸ்வரரென்றறிந்து பேசும் வார்த்தைகளைக் கேட்டாவது தெளிந்தேனா? மந்தமதியுடையவனாய் இருந்துவிட்டேன். நீயாவது சர்வேஸ்வரனென்றறிந்து தோத்திரமாவது பண்ணினீர். அடியேன் வீட்டில் பன்னிரண்டு வருஷம் பரிசாரகராயிருந்தும், ஒருநாளாவது ஈஸ்வரன் என்றறிந்து போற்றாத புல்லனேனைப் பார். நீர் பூஜாபலம் பண்ணினவரன்றோ, விப்ரோத்தமனே! கவலைப்படாதீர். ஒவ்வொருவனுக்கும் கொடுத்துவைத்ததுவே கிடைக்கும். அடியேன் சர்வேஸ்வரனை வேலைக்காரனாக மதித்து வேலையிடும் அபாக்கியவானானேன். தேவரீர் வேலைக்காரனாயிருந்தவரை சர்வேஸ்வரரென்று அறிந்து பூசிக்கும் பாக்கியமுடையவரானீர்" என்று கண்களில் நீர்பெருக நின்று புண்டரீகாக்ஷனை சமாதானப்படுத்திவிட்டு பகவானை நினைந்து, "ஏ! தேவாதி தேவா! இந்த அறிவில்லாதவனை இப்படி அபசாரப்படும்படி செய்யலாமா? அந்தோ! திருமகளும் பூமகளும் தமதென்று மகிழ்ந்து நோக்கும் திருத்தோள்கள் கங்கையிலிருந்து தீர்த்தம் சுமந்து நோகும்படிசெய்தேனே! பிரம்மேந்திராதி தேவர்களும் வேதமும் வேதியரான மகரிஷிகளும் பல்காலும் தேடியும் பார்க்கப்படாத உனது திருவடிகள் நோக, பஞ்சமர்களின் பந்தியில் பரிமாறும்படி வேலை ஏவினேனே! பார்த்த நண்பா! எனது வீட்டில் வரும் அதிதிகள் நூற்றுக்கணக்காக வரினும், வேறு ஒருவர் உதவியின்றி நீரே வந்தவர்களுக்கெல்லாம் அறுசுவை உணவை அன்புடன் சமைத்து அனைவருக்கும் தனியே நின்று பரிமாறி சந்தன தாம்பூலம் வழங்கி அதிதிகளைப் பூசித்தனுப்பிவிட்டு எனதில்லாளும் உண்டபிறகு தானே இலையில் சட்டியில் இருப்பதையெடுத்துப் போட்டுக்கொண்டு உண்ணும்படி செய்தேனே! ஏ! பரந்தாமா! பகலெல்லாம் மாடுபோலுழைத்து, இரவில் நீ தூங்குவதைக் கண்டு மனந் தாளாது வீட்டிலுள்ள வரவு செலவு கணக்கு முற்றும் உன்னிடம் ஒப்புவித்து திரும்பியும் விட்ட கணக்கைப் பார்க்கும்படி ஏவி இரவிலும் தூங்கவிடாது செய்தேனே! ஏ! கருணாகரா! ததியாராதனத்திற்கு சாமான்கள் வாங்குபவன் சரியானவனில்லை என்று நினைத்து உன்னையே காய் கறி வாங்கவும், பண்டங்கள் கொள்ளவும் நியமித்து, காய் கறி மூட்டை சுமக்கவும், செய்தேனே! கமலக்கண்ணா! எனது திருவாராதன பாத்திரங்கள் யாவும் சுத்தி பண்ணுவதோடு கங்கையிலிருந்து திருமஞ்சனமும், திருத்துழாய் முதலிய

வும், கொணரும்படி செய்தேனே! நான் உன்னிடம் ஏவிய ஏவல்
வேலைகளை எண்ணும்பொழுது எனது உள்ளம் துடிக்கின்றதே!
அடியேன் கால்களையு மலம்பி தலையில் புரோக்ஷித்துக்கொண்
டீரே! இந்த மந்தமதியினன் பக்கத்தே நின்று, ஆலவட்டமும்
வீசினீரே! பன்னிரண்டு வருஷம் நீர் தேவியைப் பிரிந்திருக்கச்
செய்த நான் இராவணனிலும் கொடிய பாவியன்றோ! அவன்
உம்மைப் பன்னிரண்டு மாதமே தேவியைப் பிரிந்து வருந்து
மாறுசெய்தான். அடியேன் பன்னிரண்டுவருஷம் உம்மைப்பிரிந்து
வருந்துமாறு செய்தேன். அவன் உம்மிடமிருந்து சீதையைக்கவர்
ந்துசெல்ல, நீர் அனுமானால் சீதையை மீட்டீர். நான் தேவியி
னிடத்திலும் உம்மைப்பிரித்து அடிமைகொண்டேன். உமதுதேவி
யான ருக்மணி பிராட்டி இந்த அந்தணரால் சிறைமீட்டாள்.
அவள் ஸ்திரீயம்சமாதலால் பன்னிரண்டு மாசம் சிறையிலிருந்து
வருந்தினாள். நீர் புருஷராதலால் அவளைப் பிரிந்து பன்னி
ரண்டு வருஷம் சிறைவாசத்திலும் கொடிய அடிமை வேலை
செய்து வருந்தினீர்; இராமாவதாரத்தில் இராவணனால் தேவி
யைக் கொஞ்சநாளே பிரிந்திருந்தோம். அது போதாதென்று
கிருஷ்ணாவதாரம் செய்து பாதகனாகிய என்னால் பல தேவியரைப்
பிரிந்து பலவருஷங்கள் துன்பமடைந்தீர். உமக்கு இத்தகைய துன்
பத்தைத்தந்த என்னிலும் கொடியோர் யாருளர்" எனக் கதறினார்.

இவர் இப்படி கதறும்பொழுது, புண்டரீகாக்ஷர் ஏகநாத
சுவாமிகளைத் தேற்றி, "சுவாமி! பண்டரீபுரம் பக்தர்களில் பக
வானைப் பன்னிரண்டு வருடம் அடிமை கொண்டவர் ஒருவருமே
யில்லை. ஆதலால் உமது பக்தியானது யாவராலும் கொண்
டாடப்பட்டதே. இந்த சமயம் பகவான் உம்மால் வந்திக்கப்
படாதவனாய் லச்சையுற்றகன்றானன்றி, உமக்குச் சேவை சாதிக்
கப்படாதென்று உம்மைவிட்டுப் பிரிந்தவனல்லன். நீர் நினைத்த
காலமெல்லாம் பகவான் சேவை சாதிக்கத் தயாராயிருக்கிறான்.
முன்னம் நீர் சிரார்த்தம் செய்ய இந்த ஊரிலுள்ள பிராமணர்கள்
யாவரும் பஞ்சமர்க்கு பந்தி வைத்து உணவு செய்வித்தீர் என்
பதற்காக, உம்மைச் சாதிப்பிரஷ்டம் செய்தபொழுது விஷ்ணு
ஸ்தானத்திற்காகச் சர்வேஸ்வரனே சங்கு சக்கரத்தோடு வந்து
சிரார்த்த உணவை உமது வீட்டில் புசிக்கவில்லையோ? ஆகையி
னால் நீ நினைக்கும் பொழுதெல்லாம் வந்து சேவை தந்தருளும்
பாண்டுரங்கனை பரமாத்மனைப் பிரிந்ததுபோல் வருந்துவது
தகாது" என்று தேறுதல் செய்ய, ஏகநாதர் ஒருவாறு மனந்
தேறி வந்த வேதியரையும் உபசரித்துத் தன்னுடனே இருத்திக்
கொண்டு விசிஷ்டாத்வைத உண்மைகளை அவருக்கு விளங்கும்
படி சொல்லி, தபசு முதலிய சாதனங்களெல்லாம் சர்வேஸ்வரனை
அடைய விரும்புமவர்க்கு பக்தி மார்க்கம்போல் அத்துணைச்
சிறந்ததில்லையென்று உணரச்செய்து உண்மை வைஷ்ணவத்

தின் நிலையின்னதென்று உபதேசித்து நீர் இந்த மார்க்கத்தை
கைக்கொண்டால் சர்வேஸ்வரனை எளிதில் அடைவீரென்று
சொல்லி புண்டரீகாக்ஷரை அனுப்பிவிட்டுத் தன் மனைவியுடன்
சதா பரமாத்மனையே பஜித்துக்கொண்டிருந்தார்.

ஞானேஸ்வரர் ஏகநாதருடைய கனவில் தோன்றி சமாதி கட்ட நியமித்த அத்தியாயம்

ஏகநாதசுவாமிகள் பைட்டிணபுரத்தில் பகவத்தியானபரராய்
எழுந்தருளி யிருக்கும்பொழுது, சமாதியடைந்த ஞானேஸ்வரர்
இவருடைய கனவில் தோன்றி, "ஏகநாதா! எனது சமாதியா
னது நெடுநாளாய் ஜீர்ணோத்தாரமில்லாமல் போயதால், இடிந்து
விடும் நிலையிலிருக்கிறது. நீ அக்கட்டிடத்தைக் கட்டுவதோடு
சமாதியின் பக்கத்திலிருக்கும் அரசமரத்தின் வேரானது சமாதிக்
குள் வளர்ந்து என்னை நெருக்க வருகிறது. ஆகையால் சமாதியை
நீயே திறந்து பார்த்து அந்த அரசமரத்தை அடிவேருடன்
பெயர்த்து பக்கத்தில் வைத்துவிட்டு விருத்தி அடையும்படிச்
செய்து நல்ல சிற்பிகளால் எனது சமாதியைக் கருங்கல் பணி
யாய்க் கட்டிவைக்க வேண்டும்" என்று சொல்லி மறையவும், ஏக
நாதர் கண்விழித்து ஸ்ரீயப்பதியின் அம்சமான ஞானேஸ்வர
ருடைய தரிசனம் எப்பொழுது எனக்குக் கிடைக்குமென்றெண்ணி
மகிழ்ச்சியடைந்து மறுநாள் பொழுதுவிடியுமுன் தனது நித்திய
கர்மங்கள் யாவையும் முடித்துக்கொண்டு அளகாபுரிக்குப் போய்
அங்கிருந்து சிறிது தூரத்திலிருக்கும் நாமதேவருடைய சமாதியி
னிடம் சென்று அதைப் பிரதக்ஷிண நமஸ்காரஞ் செய்துவிட்டு
ஒருவரு மறியாமல் ஞானேஸ்வரருடைய நியமனப்படி சமாதி
யைத் திறந்து யோகாசனத் தெழுந்தருளியிருக்கும் ஞானேஸ்வர
ரைச் சேவித்து "இது நம் முன்னோர் செய்த பூஜாபலம்," என
மகிழ்ந்து, ஞானேஸ்வரரை நெருக்கிக் கொண்டுவரும் வேரைப்
பார்த்து, அவர் நியமித்த காரியத்தை யன்றே செய்ய நினைந்து
தன் ஊரை அடைந்து பல வேலையாட்களைத் திரட்டிக்கொண்டு
சமாதி யிருக்கு மிடத்திற்குப் போய் அரசமரத்தை அடிவேருடன்
பெயர்த்து சிறிது தூரத்தில் வெட்டியிருக்கும் குழியில் நட்டு
அதற்கென்று சிறிது வேலையாட்களை நியமித்து இலைகள் வாடா
மல் தண்ணீர் வார்க்க, அதைத் தோண்டி வேறிடத்தில் வைத்த
மரம்போல் வாட்டமடைந்துத் தோன்றாது அது அங்கேயே
வளர்ந்த மரம்போலக் காணப்பட்டது. அதுகண்டு ஏகநாத
சுவாமி சந்தோஷித்து சிற்பிகளை அழைத்துவந்து கருங்கல் பணி
யாய் சமாதியைக் கட்டும்படி சொல்லவும், அவர்களும் சம்மதித்
தன்மேல், செங்கல், சுண்ணாம்பு, கருங்கல், யாவும் வந்து குவிந்
தன. சமாதியிற் கட்டடவேலைத் துவக்கியதும் பல வேலையாட்கள்
வேலை செய்யும்படி வந்தனர். வேலை நடக்கும் இடத்திற்கும்

கடைக்கும் சிறிது தூரமாதலால், வேலை செய்த கூலியாட்கள் சாமான் வாங்கிச் சமையல் செய்ய கஷ்டமுற்றனர். அன்றியும் கட்டட வேலையும் தாமதித்தது.

இதை யறிந்த பாண்டுரங்கன் ஒரு வர்த்தகன் உருவந் தரித்துவந்து, வண்டிகளில் அரிசி, கோதுமை, பருப்பு, உப்பு, மாவு, நெய், சர்க்கரை, விறகுகள், காய் கறி முதலிய சாமான் களைப் போட்டுக்கொண்டு சமாதியின் முன்னேயே கடைபரப்பி, வியாபாரம் செய்ய ஆரம்பித்தார். அதிலும் "சமாதி கட்டட வேலை செய்பவர்கள் முன்பணம் கொடாது எவ்வளவு சாமான்கள் வேண்டுமானாலும், கடனாகப் பெற்றுக்கொள்ளலாம். வேலை முடிந்து சம்பளம் கொடுக்கப்பட்டதும் கொடுத்தால் போது மானது" என்று சொல்லி கூலிகளுக்கெல்லாம் எதேஷ்டமான உணவுப் பொருள்களைக் கொடுத்து உதவவும், வேலைசெய்த கூலி யாட்கள் வேலையைத் தாமதமில்லாமல் செய்தார்கள். சில நாட் களில் சமாதி முடிந்தது. பைட்டிணிபுரத்திலிருந்து வந்த கூலி யாட்கள் யாவரும் தங்களுக்கு எஜமானாகயிருந்து வேலை வாங் கிய ஏகநாத சுவாமிகளுடன் ஊருக்குத் திரும்பி வரும்பொழுது வர்த்தகனிடம் வேலை செய்த கூலியாட்கள் தாங்கள் கடனாக வாங் கிய சாமான்களுக்குள்ள கிரயத்தைக் கொடுக்க வரும்பொழுது, நானும் உங்களுடன் பைட்டிணிபுரத்திற்குதான் வருகின்றேன். உங்களிடமிருந்து வரவேண்டிய பணங்களைச் சேர்த்து மொத்த மாக வைத்திருந்தால் இந்த காட்டுவழியில் கள்வர்கையி லகப் படாது தப்பலாம். ஆகையால், உங்கள் ஊரிலே வந்து வாங்கிக் கொள்ளுகிறேன்" என்று சொல்லித் தனது வண்டிகளைக் கட்டி மீதமிருக்கும் சாமான்களையும் அந்த வண்டியில் போட்டுக்கொண்டு அவர்களுடனே தானும் கால்நடையாக நடந்து பேசிக்கொண்டு பைட்டிணிபுரத்தின் சமீபமாக வந்ததும் யாருடைய கண்களிலும் தோன்றாது மறைந்தருளினார். தொழிலாளிகள் தம்முடன் பேசிக் கொண்டே வந்த வர்த்தகனைத் திடீரென்று காணாமையால், சாமா னேற்றும் வண்டிகளைப் பார்க்க, அவற்றையும் கண்டார்களில்லை. இந்த ஆச்சரியத்தை முன்னே சென்றுகொண்டிருக்கும் ஏகநாத சுவாமிகளுக்குச் சொல்ல பண்டரிபுரத்தில் எழுந்தருளி யிருக்கும் பாண்டுரங்கனது திருவிளையாட்டென்று தெரிந்து, கூலிக்கார ரைப் பார்த்து, "உங்களுக்குக் கடனாய்ச் சாமான் கொடுத்த அந்த வர்த்தகன் நீங்கள் கொடுக்கவேண்டிய பணத்தைப் பெற்றுக் கொண்டனரா" என்று கேட்க, "நாங்கள் அவனிடம் வாங்கிய சாமான்களுக்கு ஒரு தம்படியேனும் கொடுக்கவில்லை" என்று சொன்னார்கள். ஏகநாதர், "ஏ! தீனரக்ஷகா! இதுவும் உனது லீலையி லொன்றோ! என்னே" என்று அவரைத் தோத்திரம் பண் ணிக்கொண்டு தன் திருமாளிகைக்கு எழுந்தருளினார்.

ஏகநாத சுவாமிகள் பரமபதம் சேர்ந்த அத்தியாயம்

இப்படி ஞானதேவருடைய சமாதியைக் கட்டி முடித்துவிட்டு பைட்டிணிபுரத்தினிலிருந்து பண்டரிநாதனைப் பஜித்துக்கொண்டு நித்திய திருவாராதனம் நித்திய ததியாராதனம் செய்து அதன் பயன் யாவும் பாகவதார்ப்பணம் செய்து பரம சாந்தராய் எழுந் தருளி யிருக்கும்பொழுது, ஒருநாள் திருவாராதனம் செய்துக் கொண்டிருக்கும்பொழுது, பாண்டுரங்கன் அசரீரியாய் ஏகநாத ரைப் பார்த்து, "பாகவதோத்தமா! நீர் இந்த லீலாவிபூதியில் பிறந்து செய்யக்கடவன யாவையும் செய்து தீர்த்துவிட்டீர். ஆத லால், உமக்கு நித்திய விபூதியாகிய பரமபதம் உம்மை விரும்பு கிறது; அங்குள்ள நித்திய சூரிகள் யாவரும் உமது கைங்கரி யத்தை வியந்து கொண்டாடியும், நீர் எழுதிய ஸ்ரீராமாயணம், பாகவதத்திலுள்ள அரிய சொல்நயம், பொருள்நயம், முதலிய வைகளைக் கேட்டும், ஆசையுடையவராய் உம்மை எதிர்கொண் டழைக்க வருகின்றனர். பரமபதநாதனது திருமார்பில் வீற்றி ருக்கும் பெரிய பிராட்டியார் தேசாந்திரம் சென்ற மைந்தன் வர வைக்கண்ட தாயைப்போல உனது வரவை எதிர் பார்த்திருக் கிறார். ஆதலால், பரமபதத்திற்கு எழுந்தருளுக" என்று சொல்ல ஏகநாதசுவாமிகள் திருவாராதனத்தை முடித்துவிட்டு சன்னதிக் கூட்டத்தில் வந்து இருகரங்களையும் குவித்துக்கொண்டு பாண்டு ரங்கனைத் தியானித்தபடியே நித்தியசூரிகள் எதிர்கொண்டழைக்க பரமபதம் சேர்ந்தார்.

வாழ்த்து

மானிலமறையோர்வாழி மன்னவன்செங்கோல்வாழி
தேனிமிரங்கன்மாலைத் தேவகிமைந்தன்வாழி
பாலனங்கடந்தீந்சொற் பாவைருக்மணியும்வாழி
மானவனேகநாதன் மறையவனடிகள்வாழி.

ஏகநாத சுவாமிகள் சரித்திரம்

முற்றிற்று.

ஸ்ரீ

லதிபூஷா சரித்திரம்

ஆழ்வார் திருநகரி

சிங்கம். ஸ்ரீநிவாச அய்யங்கார் எழுதியது.

பிறையினை வணங்கும் துருக்கர்தம் குலத்தில் பிறந்து மாதவன் புகல்கீதா
மறையினின் பொருளை யறிந்துதம் மதத்தை மாசடைத் தெனத்துறந் தரியின்
புறையறு சரணமதனை யடைந்து தாசன் புன்மையா மறிவினைத் தவிர்ந்த
இறைவனும் லதிபூஷா வெனும் புனிதனின்கதை யெடுத்தியம்பு வாமால்.

உலகமெங்கும் மகம்மதிய ராஜ்ஜியம் மிக்க விளங்கி மகம்மதிய மதம் உன்னத நிலையிலிருக்கும் காலத்தில், அவிந்தியை என்னும் நகரத்திலே லதிபூஷா என்னும் மகம்மதியர் ஒருவர் இருந்தார். அவர் கல்வியினில் மிக்கவராய் சகானுக்குடையவராய்த் தங்களுக்கு உரிய பாஷையாகிய துருக்கேயன்றி சமஸ்கிருத பாஷையையும் கற்று, கல்விதான் தனக்குத் துணை என்னும், இதனாலே அறிவு பெருகி வளர்வதால் இதனினும் சிறந்த செல்வம் வேறில்லை என்று துணிந்து, இரவும் பகலும் நூலாராய்ச்சி செய்துகொண்டு வரும்பொழுது, தத்துவ நூல்களைப் படிக்கவேண்டுமென்று எண்ணம் தோன்ற தங்கள் மதத்தின் உண்மைகளை விளக்கும் குரானை முற்றும் ஐயந்திரிபறக் கற்றார். அதிலே சொல்லும் தத்துவங்களெல்லாம் சாதாரணமாய்க் காமிய நலங்களையே மோக்ஷமென்று பேசுவதைக் கண்டு, தன் மனத்திற்கு அது ஒவ்வாமையினாலே இந்து மதத்திற்கு உரிய தத்துவ சாஸ்திரங்கள் யாது? என்று ஒரு பண்டிதரிடம் கேட்டார். அவர் பகவற்கீதை என்று ஓர் கிரந்தம் கர்மயோகம் ஞானயோகம் என்னும் இரு பிரிவினதாய் கடவுளாகிய கிருஷ்ணபகவான் அருச்சுனனுக்கு உபதேசித்தது. அந்த நூலானது தத்துவங்களைக் கையிலங்கு நெல்லிக்கனிபோல் காட்டக் கூடியதென்று கூறி, தன்னிடமிருந்த பகவற்கீதை ஒன்றை லதிபூஷாவின் கரத்தில்கொடுக்கவும், அதனை வாங்கி வாசிக்கும்பொழுது, தனக்கு சமஸ்கிருதப் பயிற்சி யிருந்தாலும் விஷாதயோகம் சாங்கிய யோகம் என்று பெயர் அமைத்திருப்பது இன்னதென்று தனக்குப் பொருள் விளங்காமையால் இதனை ஆசானால் தெரிந்தாலன்றி விளங்காதென்று நினைத்து, மகா கவியாகிய ஸ்ரீதரரென்னும் பெரியவரிடம் சென்று வணங்கித் தன் சந்தேகத்தைக் கேட்கும்பொழுது, நீ மகம்மதியனா யிருத்தலால் இதனுடைய உண்மை தத்துவங்களை நான் சொல்லேன். இன்றுமுதல் இந்து மதத்தினைச் சார்ந்துகொண்டால் உனக்கு இதன் தத்துவங்கள் முழுதையும் சொல்லுகிறேன் என்று சொல்லினார். இதனைக் கேட்ட லதிபூஷா தனக்கு மகம்மதிய மதத்தின் உண்மை இவ்வளவு என்று முன்னையே தெரிந்துகொண்டு இந்த மதம் சாதா

ரண தர்மங்களைப் போதித்து நின்றுவிட்டது. இது சிறந்த மதமாகாதென்று தெரிந்தவர். ஆதலால் அந்த ஸ்ரீதரனுடைய தாளிணையில் வீழ்ந்து அடியேனை இந்துமதத்தினில் சேர்த்துக் கொண்டு உபதேசித்தருளவேண்டும் என்று பிரார்த்தித்தார். உடனே அவரைத் தீர்த்தமாடி வரச்சொல்லி நெற்றியில் திருமண் காப்பிட்டு திருவஷ்டாக்ஷர மந்திரத்தை உபதேசித்து திருமந்திரார்த்தத்தையும் கீதையிலுள்ள சரம ஸ்லோகத்தையும் அவருடைய மனத்தில் பதியும்படி சொல்லவும், இதனைக் கேட்ட லதிபூஷா பரமானந்த மடைந்து அவரிடம் பகவற்கீதையை முழுதும் நன்றாய்க் கேட்டு சிந்தனை பண்ணிக்கொண்டு தாமஸ குணத்தை விளைவிக்கு மாம்ச பக்ஷணங்களை வெறுத்து சாத்வீக மான ஆகாரங்களை உட்கொண்டு சதா கிருஷ்ண பகவானைத் தியானஞ்செய்துக்கொண்டு பகவற்கீதையை யாவரும் கேட்டுய்ய அதனுடைய தத்துவார்த்தங்களை யெல்லாம் தெளிவாய் யாவருடைய உள்ளத்திலும் பதிய பிரசங்கம் செய்துவந்தார்.

இவ்வண்ணம் லதிபூஷா மகம்மதியர் குலத்திலே உயர்ந்த சந்ததியில் பிறந்து மகம்மதத்தினைவிட்டு வைஷ்ணவ மதத்தில் சேர்ந்துகொண்டு பகவற்கீதையைப் பிரசங்கம் செய்து வரும் பொழுது அவ்வூரிலுள்ள மகம்மதியர்களெல்லாம் ஒன்றுகூடி, தமது குருவாகி காசீமிடம் வந்து லதிபூஷாவானவர் மகம்மதிய மதத்தினை விடுத்து வைஷ்ணவனாகி அந்த மதத்திலுள்ள நூல்களைப் பிறருக்குப் பிரசங்கம் செய்கிறான் நீர் அவனை மீண்டும் நம்மதத்தில் சேரும்படி செய்யவேண்டும் என்று தெரிவிக்கவும், காசீம் பகவற்கீதையைப் பிரசங்கம் செய்துகொண்டிருக்கும் லதிபூஷாவிடம் வந்து, "அடே! லதிபூஷா? நீ என் இப்படி கெட்டு விட்டாய்? நமது மதத்தில் என்னகுறை இருக்கின்றது என்று நினைந்து இந்துமதத்தினில் சேர்ந்தாய்" என்று கேட்டார். அவர் காசீமைச் சலாம்செய்து, இங்கு உட்காரவேண்டும் என்று கூறவும், காசீம் லதிபூஷாவின் முன்னே அமரும்பொழுது லதிபூஷா காசீம் கேட்ட கேள்விகளுக்கெல்லாம் விடைபகர்ந்து உங்கள் மதத்தின் நிலை இவ்வளவுதானே. என் மதத்தினைச் சொல்லுகின்றேன் என்று சாங்கோபாங்கமாக எடுத்து உபன்னியசித்த வார்த்தைகளைக் கேட்டு அவரோடு வாது செய்வதற்கு சக்தியற்றவனாய் காசீம் நான் போய்வருகின்றேன் என்று சொல்லி விடைபெற்றுக்கொண்டு ஆராதகோபத்துடனே நேராக அரசனுடைய கொலுமுகத்தை நாடிவரவும் தனது குருவான காசீம் வருவதைக் கண்டு, அரசன் ஆசனம் விட்டெழுந்து சலாம்செய்து ஓர் ஆசனத்தைக் காட்டி அதில் அமரும்படி சொல்லினர். காசீம் அரசனை ஆசீர்வதித்து ஆசனத்தி லமர்ந்து மன்னவனை நோக்கி, "அரசே! நமது மதமானது அரசாங்கத்தோடு இணைக்கப்பட்டிருக்கிறது என்பதை நீ அறிவாய். நமது மதகுருவாகிய கிலா

பத் என்னும் பதவியானது இதனை விளக்கும். வேறு மதத்தினரை நமது மதத்தினில் சேர்ப்பதுவே நமது நோக்கமாகயிருக்க, நம் மதத்தினிலே பிறந்தவன் ஒருவன் அன்னிய மதத்தில் சேர்ந்துவிட்டால் உனது இராஜாங்கமும் எனது குரு என்னும் பதவியும் வேறு இராஜாங்கத்தினர்களால் பறிக்கப்படுவதோடு கிலாபத்திற்கே கேடு இழைத்ததாக நேரும். இதனை நீ உணர்ந்து நமது மதத்தினைவிட்டு அன்னியமதத்தினை ஒருவன் சார்ந்தானாகில் அவனைத் தக்க சிக்ஷைக்கு உட்படுத்தவேண்டும் என்று காசீம் கூறவும், இதனைக் கேட்ட மன்னவன் மிக்க கோபமடைந்து காசிமை நோக்கி "எனது இராஜ்ஜியத்திலே பிறந்தவனொருவன் நம்மதத்தைவிட்டு அன்னிய மதத்தினில் சேர்ந்துவிட்டால் அவனுக்குத் தக்க சிக்ஷை விதித்தே தீர்வேன்; அப்படிச் சேர்ந்தவன் யார்?" என்று கேட்டார்.. காசீம் மன்னவனை நோக்கி "அரசே! உதுமான் வம்சத்திலே பிறந்தவனும் பூர்வீக மகம்மதியனுமான லதிபூஷா என்பவன் நமது மதத்தினைவிட்டு வைஷ்ணவமதத்தில் சேர்ந்துக்கொண்டு நம்மதத்தினரையும் வருவித்து வைத்துக்கொண்டு அநேக துர்ப்போதனைகளைச் சொல்லி அவர்களையும் கெடுக்கிறான்" என்று கூறினான். இதனைக்கேட்ட அரசன் கடுங்கோபமடைந்து காசிமை நோக்கி "இக்கணமே அவனுக்குத் தக்க சிக்ஷை விதிக்கின்றேன்; தாங்கள் போய் வாருங்கள் என்று அனுப்பிவிட்டுத் தன் முன்னே நிற்கும் நான்கு சேவகர்களை நோக்கி, "இக்கணமே சென்று உதுமான் வம்சத்தினர்கள் வாழும் தெருவில் சென்று லதிபூஷாவின் வீட்டிலுள்ள சாமான்களையெல்லாம் வாரி அரண்மனைக்கு அனுப்பிவிட்டு அவனை அடித்து நகரத்திற்கு வெளியே கொண்டுபோய்விட்டு இராஜ்ஜியப்பிரஷ்டம் செய்து வாருங்கள்" என்று உத்தரவிட்டான். அந்த உத்தரவினைப்பெற்ற சேவகர்கள் நால்வரும் அக்கணமே லதிபூஷாவின் வீட்டிற்குவந்து பகவற்கீதை உபன்னியாசம் செய்வதைக்கேட்டு, அவர் சொல்லுவதெல்லாம் நல்ல நீதி மொழிகளா யிருப்பதைக் கேட்டு, இந்த உத்தமனைக் குற்றவாளியென்று அனியாயமாய் இவருடைய செல்வத்தினை அபகரிக்கக் கருதிய மன்னனே கொடியோன். நபி நாயகம் பிறருக்கு என்ன காரணத்தினாலும் துன்பம் செய்யாதே என்று கூறிய குரானின் சத்தியமொழிக்குக் குற்றம் செய்யாத இவரைத் துன்பப்படுத்தினால் ஆண்டவன் நம்மைத் தண்டித்துவிடுவார். இந்த நீதியற்ற மன்னவனிட மிருந்து வேலைபார்த்து ஜீவிப்பதினும் நமது உயிரையே விட்டுக்கொள்வது மேலானது என்று துணிந்து அவர் சொல்லும் கதாபிரசங்கத்தைக் கேட்டுக்கொண்டிருக்கவும், அரசன் கடுஞ்சினத்துடன் பின்னும் நால்வரை அனுப்பி லதிபூஷாவின் செல்வத்தினைக் கவர்ந்துகொண்டு இராஜ்ஜிய எல்லையைக் கடத்தி அவனை விட்டுவிட்டு வாருங்கள் என்று

சொல்லி அனுப்பினான். அவர்களும் மிக்க கோபத்துடனே லதிபூஷாவின் வீட்டினை நாடிவந்து அவர் செய்யும் பிரசங்கத்தினைக் கேட்டு முன்வந்தவர்கள்போலிருந்துவிடவும் மன்னவன் முன்னே நம்மால் அனுப்பப்பட்டவர்களும் பின்னே சென்றவர்களும் இன்னும் ஏன் வரவில்லை? இதனை நாமே நேரில் சென்று அறிந்து வருவோம் என்று சில காவலருடனே லதிபூஷா பகவற்கீதையைப் பிரசங்கம் செய்துகொண்டிருக்கும் அவன் வீட்டினை நாடி வரவும், இதற்குள் தனது பக்தனாகிய லதிபூஷாவைக் காக்கக் கருதி, நவமணிகள் பதித்துச் செய்த இராதாகிருஷ்ண மூர்த்தியாய்க் கண்டவர்களின் மனம் திக்பிரமை கொள்ளும்படி அரசன் வரும்பொழுது அவர் வீட்டுச் சுவரில் சித்திரரூபமாய்ப் புதிதாகச் சேவை சாதிக்கவும், கதாஸ்ரவணம் கேட்டுக்கொண்டிருந்தவர்களும் அந்தப் படமூர்த்தியின் திவ்விய மங்கள விக்கிரக வடிவினை நோக்கி ஆனந்தமடையும்பொழுது, அரசன் அங்குவந்து லதிபூஷாவை நோக்கி, "அடே! குலத்தைக்கெடுக்கவந்த கோடாரிக்காம்பே! உதுமான் வம்சத்திலே நபி நாயகத்திற்கு அடிமையான நீ இந்த மதத்தினை வெறுத்து வேறு மதத்தில் சேர்ந்தாயா?" என்று கோபத்துடனே கேட்டான். அப்பொழுது சுவற்றினில் விலைமதிக்கவொண்ணாத ரத்தினங்களா லிழைத்து சித்திரித்திருக்கும் ராதாகிருஷ்ண விக்கிரகத்தைக் கண்ணுற்று, அதன் சௌந்தரியத்திலே மயங்கி லதிபூஷாவை நோக்கி, "இது என்ன சித்திரம்?" என்று கேட்டான். "மஹராஜ்! இதுதான் ராதாகிருஷ்ணன்" என்பது என்று சொல்லவும், இந்த ராதாவென்னும் பெண்பிள்ளை கையில் என்ன வைத்திருக்கிறாள்? என்று கேட்டான். அரசே! வெற்றிலை மடித்துத் தன் கணவனுக்குக் கொடுக்கிறாள் என்று கூறினார். அதற்கு அரசன் "இவன்தானா நீவணங்கும் கடவுள். இவள் கொடுக்கும் வெற்றிலையை இவன் வாயைத் திறந்து ஏற்றுக்கொண்டால் உன்மதமே சிறந்ததென்று கொள்வேன்" எனவும், லதிபூஷா அக்கணமே படமூர்த்தியாய்ச் சேவை தந்தருளும் கிருஷ்ணபகவானை நோக்கி, "எனது ஐயனே! என் தாய் பரிவினளிக்கும் வெற்றிலைச்சுருளை ஏற்றுக்கொண்டு என்னைக் காக்கவேண்டும்" என்று துதிசெய்தான். அப்போது படத்தில் திகழும் கிருஷ்ணபகவான் தன் வாயைத் திறக்க, ராதாதேவி வெற்றிலையை வாயில் போடவும், அதைச் சுவைத்து அருந்துவதைக்கண்டு, அரசன் இவரே கடவுளென்று லதிபூஷாவைப் பணிந்துவிட்டுச் சென்றான். பக்தவத்ஸலனான பகவான் சுவற்றினில் படமூர்த்தியாய்ச் சேவைதந்து லதிபூஷாவை இரக்ஷித்துவிட்டு மறைந்தருளினார். லதிபூஷாவும் பகவத் குணானுபவம் பண்ணிக்கொண்டிருந்து முடிவில் பரமபதம் சேர்ந்து பரமானந்தமடைந்தார்.

லதிபூஷா சரித்திரம் முற்றிற்று.

ஸ்ரீ

ஸ்ரீபாண்டுரங்காய நம:

சக்குபாய் சரித்திரம்

ஆழ்வார் திருநகரி

சிங்கம். ஸ்ரீநிவாச அய்யங்கார் எழுதியது.

கவி

பண்ணுறும் பாண்டுரங்க பரம்பொருளைத் தினம்பரவும் பக்தர்க்கெல்லாம்
கண்ணுயந்தணர் குலத்து காரிகையா யவதரித்துக் கசிந்துள்ளுருகுந்
தண்ணாரன்பினிற் பாண்டுரங்கனைத் தன்னுருவாக்கித் தனதில் வைத்தப்
பெண்ணாய சக்குபாய் சரண்வணங்கித் திருத்தொண்டு பேசுவாமால்.

திருமகள் கணவனைத் தினமும் பரவும் உத்தவசித்தர்கள் நாபாசிசித்தருக்குத் தண்டம் சமர்ப்பித்து, ஸ்ரீதரன் திருவடிகளுக்கு அன்பு உடைய அடியார்கள் சரித்திரங்களை அடியோங்கள் கேட்டுய்யும்வண்ணம் உரைக்கவேண்டும்'' எனப் பிரார்த்திக்கும் காலத்தில், நாபாசிசித்தர் உத்தவசித்தர்களைப் பார்த்து, "கண்ணியமிருந்த பண்ணவரே! மணிவண்ணன் உகந்தருளும் புண்ணியரே! விண்ணாட்டவர்களும் மண்ணாட்டவர்களும் வேதியரும் பறைசாதியரும் பேதமின்றி வணங்கும் புண்ணியத்தலமாய், அந்தணரியற்றும் வேள்விகளின் புகை மாறாது வானோங்கும் தேமாஞ்சோலைகளோடு கூடியதாய், கதிரவன் தேரில் கட்டிய புரவிகள் ஏழும் வானத்தில் செல்லும்பொழுது திருமதில் சுவர்தம்கால்களில் இடற, நேராய் பொறுக்கமுடியாமல் உத்தராயணம் தக்ஷிணாயனம் என்று தெற்கும் வடக்குமாக விலகிச் செல்லும் திருமதில்கள் பல உடையதாய், மேலேழு லோகங்களுக்கும் உரிய கோட்டை வாயலின்கண் இவைதான் என்று கூறும்படி அமைந்த எழுநிலைகளுடைய கோபுரங்களை உடையதாய், அன்றியும், பண்டரிபுரத்திற்கு லைவார்த்திகளாய் வரும் பாகவதோத்தமர்களை "வாருங்கள். பண்டரிநாதன் சேவையைக் கண்டு களிகூறுங்கள். பண்டரி பஜனையில் சேருங்கள்,'' எனக் கைநீட்டி அழைப்பார்போல விதம் விதம் விதமான நிறங்களையுடைய கொடிகள் விண்ணிலே ஆடவும், பொன் மணிகளாலமைந்த நிலைக்கதவுகளோடு கூடிய எழு நிலை மாடங்கள் எழில்பெற இயங்கும் இயல்புடையதாய், விண்ணுலகத்தவர்கள் கந்தர்வகானத்தில் மயங்கினவராயிருந்தும், பண்டரி பஜனை கேட்டவுடனே தம்மை மறந்து பரவசமுற்று, ஆநந்தக்கண்ணீர் பெருக, "அரி அரி'' என்று ஆர்ப்பரித்து அங்கை கொட்டி ஆடும் பல வீதிகளையுடையதாய், அல்லும் பகலும் நாம சங்கீர்த்தனமன்றி வேறு ஓசையில்லாத பண்டரிபுரமென்னும் திவ்விய தேசத்தைச் சார்ந்ததாயுள்ள கஞ்சுருணிபுரம் என்று

சொல்லும் ஓர் அழகிய நகரத்தில், அந்தணர் குலத்தில் மகாராஷ்டிர மரபில் பாரத்துவாச கோத்திரத்தில் மத்வமத சம்பந்தமுடையவராய், சதா சர்வேஸ்வரனுடைய சரணாரவிந்தத்தில் அன்புபூண்டு அருமறை கூறும் அறநெறி வழுவாது, அந்தணரொழுக்கம் குன்றாது வாழ்பவர். வறுமைத் துயரால் மெலிந்து தம்மிடம் வந்தவரைக் கண்டு இரங்கி ஆள்பவர். எப்பொழுதும் சாதுக்களையே சூழ்பவர். மண்டலீகரும் மகுடவர்த்தனருமான மன்னவர்களின் பொக்கிஷங்களில் நிதி குறைந்தாலும் இவர் பொக்கிஷத்தில் நிதிகுறையாது. இவர் செய்யும் தானமும் தருமமும் உயர்ந்த சாதுக்கள் விஷயத்தில் சேர்வதால் ஒன்று பத்தாய் பத்து நூறாய் விருத்தி அடைகிறது. இவருடைய நிதிச்சாலையால் இவருக்கு கங்காதரராவ் என்று பெயரிட்டு அழைக்கிறார்கள். அந்தப் பெயர் இவருக்கே பொருத்தமுடையது. சிவபிரானது சடாமகுடத்தில் வீழ்ந்த கங்கையானது, தன்னிடம் வந்து தீர்த்தமாடியவர்களின் கர்மங்களையும் பாபங்களையும் எவ்வாறு தீர்க்கின்றதோ, அன்னதேபோல, கங்காதர ராவிடம் வந்து யாசிப்போராய் முன் ஜென்மத்தில் பாபம் செய்து இந்த ஜென்மத்தில் தரித்திரரானவர்களின் வறுமை தீர்வதினால் இந்தப்பெயர் இவருக்குத் தகுந்தது என்று புகழ வாழ்பவர். இவர் இல்லற தருமத்திற்கு உகந்த மனைவி வாய்ந்தது அவர் செய்த நற்றவப் பயனென்று கொள்ளவேண்டுமேயன்றி வேறல்ல. இல்லறமென்பது தருமம் என்றும் சரக்கு ஏற்றிய வண்டி என்றும் அந்த வண்டியை நாயகன் நாயகி என்னும் இரண்டு எருதுகளைப் பூட்டி இழுக்கவேண்டுமென்றும், அவ்வாறு இழுத்தால் அந்த வண்டி சொர்க்கலோகம் வரை செல்லும் என்றும், இரண்டுமாடு கட்டியிழுக்கும் வண்டியில் ஒரு மாடுகட்டினால் எப்படி சிறிது தூரம் கூட செல்லாதோ அதுபோல, நாயகன் மாத்திரம் தருமம் செய்ய நினைத்தால், இல்லறத்திற்குரிய மனைவி இயல்புடையவளில்லாது போனால் பிரயோசனமில்லை. உத்தவசித்தர்களே! கங்காதரராவிற்கு உரிய மனைவியோவென்றால், நாயகன் உண்டபின் தான் உண்ணும் தன்மையுடையவள். அவன் தூங்கிய பின் தூங்கி அவன் எழுந்திருக்குமுன் தானெழுந்து நாயகனைத் தன்னுடைய தெய்வமென்று தொழுபவள். "தெய்வந் தொழாள் கொழுநற்றொழுதெழுவாள் பெய்யெனப் பெய்யும் மழை'' என்னும் வாக்கியத்திற்கு இலக்கணமாக நடப்பவள். நாயகனுக்குப் பசி வருமுன் சமையல் செய்வாள். சமையல் செய்வதிலும், ஒவ்வொரு பதார்த்தங்களிலும் அறுசுவையும் அமைய சமைப்பாள். நாயகன் வீடு சேர்வதற்குமுன் நாயகன் வருகையை யெதிர் பார்த்திருந்து, அவர் வந்ததும் அவரது திருவடிகளைக் கரகநீர் கொணர்ந்து அலம்பி, நறுமலரிட்டு அர்ச்சித்து மணைப்பலகையில் உட்கார வைப்பாள். நல்ல பரிகலம் திருத்தி, முல்லையரும்பைக் குவித்தது

போன்று பிரசாதத்தை யிலையில் பரிமாறி பல வேறு பொறியல் வகைகளும் பச்சடி வகைகளும் கூட்டு வகைகளும் கைலைமலையை வேறு சில குன்றுகள் சூழ்ந்ததுபோல் சூழவைத்து நெய்யை அந்தக் கைலைமலையில் இருந்து பெருகும் அருவிபோல் பெருக வார்த்து இன்சொலாகிய அமுதத்தைச் செவியிலூட்டி, உபசாரமாகப் பரிமாறும் உணவாகிய அமுதத்தை வாயிலூட்டி உபசரிப்பாள். தாயோடு உண்டு போமென்னும் பழமொழி உத்தமமான மனைவியைப் பெறாத ஒருவனால் எழுதிய 'பழமொழியென்று சொல்ல நடந்துகொள்ளுவாள். மிகுந்த தனவதியா யிருந்தும், ஆடம்பரமான உடை உடுத்தாள். சாதாரணமான ஆபரணங்களை அணிவாளே யன்றி, மேலான ஆபரணங்களின்மீது இச்சை வையாள். அழகிலோ, மலர்மகளான இலக்குமி தன் அழகிற்கு ஒத்தவள். கங்காதரராவின் மனைவி ஒருத்திதான் என்று எண்ணி இவளோடு தோழியாய் இவள் வீட்டைவிட்டு ஒரு நொடிப்பொழுதும் பிரியாது கூடவே யிருந்துவிட்டாள். அதற்கு திருஷ்டாந்தம் கங்காதரராவ் பெரிய தனவந்தராய் இருப்பதுவே. இவள் ஆடம்பரமான ஆபரணங்களை அணியாததுதான் இவளுடைய இயற்கை அழகை பிறர் கண்டு களிக்கும்படியாயிற்று என்று புகழும் வனிதாரத்தினம். இவள் முகமாகிய தாமரையானது அதிதியாகிய சூரியனைக் கண்டு அலரும். வறியவரைக் கண்டால் மலர்முகங்காட்டி வருகவென் றழைத்து மகிழ்வுடனிருத்தி, குறையேதென்று குளிர்ச்சியோடேவி, அரும்பொருளுதவி, ஆதரித்தனுப்புவாள்.

வாழ்க்கைத் துணையான மனைவியுடன் இல்லறம் நடத்தினால் தவம் செய்து அடையும் பலனை விரைவாய் அடையலாமென்று சொல்லும் நீதிவாக்கியங்களுக்குச் சரியான கங்காதரராவின் இல்லறம் நடந்தது. இவர் மனைவியின் பெயரும் கமலாபாய் என்று சொல்லுவார்கள். கங்காதரராவ் செல்வத்தாலும் கல்வியாலும் அறிவாலும் ஞானத்தாலும் மேன்மை பெற்று வனிதாரத்தினமான கமலாபாய் என்னும் கற்புடைய மனைவியோடு வாழ்ந்துவரும் நாளில், ஈஸ்வரன் மிகுந்த செல்வத்தை நம்மிடம் தந்தது பல ஜனங்களைக் காப்பதற்கென்று எண்ணி, அனேக தான தருமங்களைச் செய்து வாழ்ந்துவந்தார். வரும் காலத்தில், இவருக்கும் ஒருகுறைவு வந்தது. உலகத்தில் மானிடராகப் பிறந்தாரானால், நிறைவு இருந்தால் குறைவும் உண்டு. குணமிருந்தால் குற்றமுண்டு என்பது உண்மையானதால், தனக்குப்பின் தன் சந்ததி விளங்கவேண்டுமே என்னும் குறை இவர் மனைவிக்கும் இவருக்கும் சிலநாளாக உண்டாயிற்று. அக்குறையை நீக்கிக்கொள்ள அனேக தானங்களைச் செய்தார்கள். அநேக நோன்புகளை அனுஷ்டித்தார். அநேக விரதங்களை மனம் ஒத்து செய்தார்கள். அநேக தேவாலயங்களுக்கும் பிரார்த்தனை செய்தார்

கள். என்ன செய்தும் பயனில்லாது போகவே கங்காதரராவ் அந்தோ! எத்தனை தானங்கள், நோன்புகள் விரதங்கள் செய்தும் புத்திரப்பேறு கிடைக்கவில்லையே; பாலனில்லாதவருக்குப் பதவியில்லையென்றும், மைந்தனை அடையாதவருக்குவாளுடு இல்லையென்றும், சேயினை அடையாதவருக்கு நேயனை அடைய முடியாதென்றும் உலகம் சொல்லுகிறதே. இனி என்ன செய்வோம்! என்று தன் மனைவியோடும் வருத்தமுற்று முன் ஜென்மத்தில் புத்திரரை அடைய தவம் செய்யவில்லை யாதலால், இப்பிறப்பில் நமக்குச் சந்தான மில்லாதுபோயிற்று. மறுமைக்காவது மைந்தனையடைய தவம் செய்வதுவே சாதனமென்று மனத்தில் நினைந்து, மந்திரோபதேசம் குருவிடம் பெற்று, கானகமடைந்து, ஐம்புலனடக்கி, ஆசனமிட்டு, மூலப்பொருளை முழுமனத்துற்றி, நற்றவமியற்றி, நன்மகவு பெறுவேனென்று தனது இல்லாளான கமலாபாயுடன் தனது ஆசாரியரான மாதவதாசரிடம் சென்று, தவம் செய்வதற்குரிய உபதேசங்களை உபதேசிக்குமாறுவேண்டி, அவர் சரணாரவிந்தத்தில் தன் மனைவியுடன் சாஷ்டாங்கமாக விழுந்து தண்டம் சமர்ப்பித்து பிரார்த்திக்க, ஆசாரியர் கங்காதரராவைப் பார்த்து, "கங்காதரா! உனக்குத் தவத்தில் ஆசைவந்த காரணமென்ன? ஜெகதீசனுடைய சரணாரவிந்தத்தை அடைய வேண்டினால், இந்தக் கலியுகத்தில் தவம்செய்து அடைய வேண்டுவதில்லை. இந்த யுகத்திற்கு பக்தி யொன்றே போதுமானது என்று சொல்லவும், கங்காதரராவ், "சற்குரு நாதா! எத்தனையோ விரதங்களை ஆதரித்து செய்தும், எனக்கு சந்தான விருத்தியில்லாது போயிற்று. எனது குலம் தழைத்தோங்க வொரு புத்திரனை அடையவேண்டி தவம் செய்ய, உம்மிடம் உபதேசம் பெறுவதற்கு வந்தேன்" எனப் பிரார்த்திக்க, இவ்வார்த்தையைக் கேட்ட குருவானவர், கங்காதரா! நீ புத்திரனில்லையே யென்று வருந்த வேண்டாம். நீ புத்திரரை அடைவதற்கு நான் ஒரு மார்க்கம் சொல்லுகிறேன் கேள். உன் ஊருக்கு அடுத்த பண்டரிபுரம் சென்று, உன் மனையாளோடு விட்டல் நாதனைப் பஜிக்கவேண்டும். பாகவதர்களுக்குத் ததியாராதனம் செய்யவேண்டும். மூன்று காலங்களிலும் பீமாநதியில் தீர்த்தமாடி சன்னதியைப் பிரதக்ஷணம் செய்யவேண்டும். திருமஞ்சன அலங்கார பிரசாதத்தால் எம்பெருமானைத் திருப்தி செய்விக்க வேண்டும். சதா பண்டரிநாதன் பஜனை பண்ணவேண்டும். பாகவதாளுடன் உள்கலந்து மெய்மறந்து கைபிணைந்து ஆடவேண்டும். இவ்வாறு தொண்ணூறுநாள் விரதமிருந்தால் விட்டல்நாதன் கருணையால் உங்கள் மனோரதம் ஈடேறும்" என்று ஆசாரியர் அனுக்கிரகம் பண்ணினார். உடனே கங்காதரர் "ஆக்ஞை" என்று விடை பெற்று தம்மனைவியோடு மிகுந்த திரவியங்களை எடுத்துக்கொண்டு பண்டரிபுரம் சென்று, நாதஸ்வரூபமாய் விளங்கும் விட்டல் நாத

னது சன்னதிக்கு அடுத்துள்ள ஒரு பஜனை மடத்தில் தங்கி, பீம நதியில் தீர்த்தமாடி தங்கள் குலாசாரப்படி நெற்றியில் புண்டரமணிந்து, பண்டரிநாதன் சன்னதியை வலம் வந்து, பாண்டுரங்கனுக்குத் திருமஞ்சனம் தளிகை அலங்காரம் இவைகளால் திருப்தி பண்ணி, பகவத்ததியாராதனம் அநேகபக்ஷணம் பாயாச சித்திரான்ன வகைகளுடன் உண்டோர் கொண்டாட உரிமையாய் நடத்தி, கல்லுமுருக இனிமையாய்ப் பாடும் பாகவத குழாங்கள் நடுவிலிருந்து தானும் தன் மனைவியுமாக "விட்டல் விட்டல், ஜேஜே விட்டல்" என்று பாடித் தன்னை மறந்து ஆடி சதா பண்டரிநாதனைப் பஜித்துக்கொண்டு ஆசாரியர் நியமனப்படி தொண்ணூறு நாள் (மூன்று மாதங்களில்) ஆநந்தவெள்ளத்தில் அழுந்தி, அன்பே திரண்ட உருவாய்க் கங்காதரரும் கமலாபாயும் ஆயினர்.

விட்டல்நாதன் கமலாபாயின் கனவில் தோன்றிய சருக்கம்

மலர்தலை உலகில் மாசறத் தாம்செய்யும் உத்தவசித்தர்களை நோக்கி, நாபாசிசித்தர் "சத்துவமிருந்த பக்தர்களே! உத்தவரென்னும் பெருஞ்சித்தர்களே! கங்காதரராவும் கமலாபாயும் பக்தி பரவசராய்ப் பண்டரியில் இருக்கையில், ஓர்நாள், இரவில் கமலாபாய் தூங்கிக்கொண்டிருக்கும்பொழுது, பண்டரி நாதன் திவ்விய தேஜோன்மயமான தனது உருவோடு தோன்றி ஏ கமலாபாய்! உனக்கு மிகப்புனிதவதியான ஒரு புதல்வி பிறப்பாள்" என்று சொல்லி மறைந்தார். உடனே கமலாபாய் திடுக்கென்று எழுந்து, "நாதா! நான் சர்வேஸ்வரனாகிய பாண்டுரங்கனை நேரே சேவித்தேன். எனக்குப் பெண் குழந்தை பிறக்குமென்று சொல்லி மறைந்தார்" எனத் தெரிவித்தாள். கமலாபாயின் வார்த்தையைக் கேட்ட கங்காதரராவ் ஆச்சரியமடைந்து, பிறவிக் குருடனுக்குக் கண் கிடைத்ததுபோலவும், பரம தரித்திரனுக்குப் பாக்கியம் கிடைத்ததுபோலவும் மகிழ்ந்து, தனது விரதத்தை முடித்துக்கொண்டு தனது ஊராகிய கஞ்சுருணிபுரத்திற்கு தன் தேவியோடு போய்ச்சேர்ந்தார்.

கமலாபாய் கர்ப்பவதியாய் மாதங்கள்தோறும் செய்யவேண்டிய சடங்குகளை விதிப்படி சீமந்த முகூர்த்தத்துடன் பத்துமாதமும் வெகு சிறப்பாய் நடத்தப்பெற்றாள். ஆயிரம் வலம்புரிச் சங்குகளின் மத்தியிலிருக்கும் சலஞ்சனம் என்னும் சங்கானது ஒரு முத்தை யீன்றதுபோல ஒருபெண் குழந்தையைப் பெற்றாள். பெற்றவள் உற்றவருத்தம் பெண்ணென்ற போதே மாறிற்று. கங்காதரராவ், குழந்தை பிறக்கும் நாழிகை விநாடி யாவும் நன்றாய்க் கவனித்து, அப்பொழுதே 'புத்திராஸ்சதகுணம், புத்ரீ' என்னும் முதுரையை நினைத்து ஆநந்தம் கொண்டு தன்னிடம் சோபனம் விசாரிக்க வந்தவர்களுக்கெல்லாம் சந்தன தாம்பூலம்

புஷ்பம் சர்க்கரை வழங்கி மகிழ்ந்தார். ஏழாம்நாள் காப்பிடுதல் என்று ஒரு சிறு சடங்கும் அதுவரை தான் செய்யாத குழந்தைகள் அணியும் ஆபரணங்களைப் புதிதாய்ச் செய்து, காப்பரிசி வழங்கிக் காப்பிட்டு மகிழ்ந்தார். பத்தாம்நாள் புண்ணியாகவாசனம் ஆதலால், விசேஷ ததியாராதனம் அவ்வூரிலுள்ள மறையவர் யாவரையும் அழைத்து பீசதானம் கொடுத்துத் தனது ஆசாரியரால் குழந்தைக்கு 'சக்குபாய்' என்று பெயரிட்டு, சாதகமும் கணித்து சாதகர்மமென்று வாசித்துக் கொடுத்தார்கள். குழந்தைக்கு மூன்றுமாதம் நவமணி இழைத்த தொட்டிலிட்டு கண்ணுக்கு இனிய மையிட்டு, கால்களில் சதங்கை தண்டையிட்டு இடுப்பில் பொன் அரைஞாண் பூட்டி, புலி நகத்தை தங்கத்தில் கட்டி, நவமணிகள் இழைத்துசெய்த ஆபரணங்களை ஐம்படையென்னும் பதகத்தோடு அணிகாலில் ஐம்பொற் றண்டை அணிந்து நெற்றியில் சுட்டிகட்டி, திலகமிட்டு தொட்டிலில்கிடத்தி தாலாட்டி பாலூட்டி சக்குபாய் என்னும் குழந்தையைக் கமலாபாயானவள் வளர்த்துவந்தாள். எப்படியென்றால், தரித்திரன் ஒரு வயலுடையவன் அந்த வயலிலிருந்து விளையும் தானியத்தால் தனது குடும்பம் கால்வயிற்றுக்கு உண்ணவேண்டும். அன்றி, வேறு கதியில்லாதவன் அவன் அந்த நிலத்தை எவ்வாறு பாதுகாப்பானோ அதுபோலவும், கல்விதான் செல்வத்தில் மேலானது. செல்வம் அழியும் எடுக்கக் குறையும், கொடுக்க மனம் வராது. கல்வியோவென்றால், என்றும் அழியாது. எடுக்கக் குறையாது. பிரசங்க மேடையில் நின்று பலர்கள் செவியில் கொடுக்க உற்சாகம் கொடுப்பது என்று நினைத்து கல்வியில் பண்டிதனாக வேண்டும் என்னும் விருப்பமுடையவன் எவ்வாறு பாடம் படிப்பதில் கண்ணும் கருத்துமா யிருப்பானோ அதைப்போலவும், நீதி துறந்தானாகிய கொற்றவன் தன் நீதியானது மாறப்படாதேயென்று நினைத்துப் பல ஒற்றர்களைத் தனது சினேகிதர்போல நடத்தியும், யுக்திசாலிகளான மந்திரியர்களைத் தன்கண்போல் நடத்தியும், தானும் இரவில் தூக்கமின்றி மாறுவேஷம் தரித்து, வேறு வேறான இடங்கள் தோறும் திரிந்து தனது இராஜ்யத்தைக் காப்பானோ அதுபோலவும், அருந்தவஞ் செய்து பெற்ற சக்குபாயைக் கமலாபாயானவள் வளர்த்து வந்தாள்.

சக்குபாயானவள் மூன்று வயதளவும், அன்னைமடியினும், தந்தை தோளினும், சேடியர் இடுப்பினும், வளர்ந்து வந்தாள். நான்காவது வயது வந்ததும், தன்னோடு ஒத்த அயலகத்துப் பெண்களுடன் சில விளையாடுக்கருவிகள், சில மரப்பாவைகள், தந்தபிம்பங்கள் இவைகளை வைத்தே விளையாடினாள். 'விளையும் பயிர் முளையிலேயே' என்பதற்கு ஏற்ப, விளையாட்டிலும் பண்டரிநாதன் விக்கிரகத்தை அலங்காரஞ் செய்வதும், இன்று உற்சவம் என்றும், இப்பொழுது அபிஷேகம் செய்யவேண்டுமென்றும்,

இந்த விளையாட்டன்றி வேறு விளையாட்டை விரும்பாள் குழந்தை சக்குபாய்க்கு வயது ஐந்தாயது.

சக்குபாய்க்கு பண்டரிநாதன் மந்திரோபதேசம் செய்த சருக்கம்

சக்குபாயானவள் அயலகத்துப் பெண்களோடு கூடிக்கொண்டு தெருவில் சிறுவீடுகட்டி, விளையாடிக்கொண்டு "பண்டரிபுரத்தின் கோயிலிது" என்று தெருவிலுள்ள மண்ணைக்கட்டி, மதிலென்றும், மணிமண்டபமென்றும், அர்த்த மண்டபமென்றும், மகா மண்டபமென்றும், கர்பக்கிரகமென்றும், தான் குவித்துக் கட்டிய சிற்றிலுக்குப்பெயரிட்டு, தன் தோழிகளோடு விளையாடிக் கொண்டிருப்பாள்.

இவள் இவ்வாறு விளையாடிக்கொண் டிருக்கும்பொழுது, பண்டரிநாதன் தனது அருளால் கங்காதரராவிற்கு புத்திரியாய் கமலாபாயின் கர்ப்பத்திலே திருவவதரித்த சக்குபாயை ஆட்கொள்ள கிழப்பிராமண வைஷ்ணவ சின்னமான திருமண்காப்பை திருமுகம், திருத்தோள், திருமார்பு, திருவயிறு, கண்டம், பிடரி முதலிய பன்னிரண்டு இடங்களில் அணிந்து, வனமாலை திருமணித்தாவடம் திருமார்பிற்றிகழ, எக்யோபவீதம் எழில் பெற விளங்க, பஞ்சகச்ச உடை உடுத்தி ஒருதரம் தன் உருவத்தைத் தானே பார்த்து மகிழ்ந்து, பிறகு தனது தம்பூரை எடுத்துத் தன் தோளில் மாட்டிக்கொண்டு, சிப்ளாவை வலது கையில் முழக்கிக்கொண்டு, திருக்கால்களில் கஜ்ஜை முழங்க, ஆடிக்கொண்டு, பண்டரி கீதங்களைப் பாடிக்கொண்டு, அந்த வீதியில் உஞ்சவர்த்தி பண்ணிக்கொண்டு வருகிறார். அவருடைய பாடலையும் ஆடலையும் கண்டு, இவர் பரமசாது என்று யாவரும் கொண்டாட சக்குபாய் தன் தோழியரோடு விளையாடிக்கொண்டிருக்கும் இடத்திற்கு எழுந்தருளினார். சிறுமியர்களாகிய சக்குபாயின் தோழியர்கள் அவரைக்கண்டு பயந்து ஓடினார்கள். சக்குபாயானவள் சிறிதும் அஞ்சாது அந்த அதிதிமாதவர் முன்னே நின்று தன் பண்டரிநாதனது சன்னதியாகத் தான் கட்டிய சிறு வீட்டை இவர் கலையாவண்ணம் பார்த்து காத்துக்கொண்டிருந்தாள். பாகவதராய்வந்த பரந்தாமன், அகமகிழ்ந்து ஆனந்தக் கூத்தாடிக்கொண்டு அங்குமிங்கும் அசைந்து பஜனை பாடிவரும்பொழுது, சக்குபாய் கட்டிய சிறுவீடு முற்றும் கலைந்தது. சக்குபாய் அதைக்கண்டு, "ஓய் வேதியரே! நீங்கள் மிகுந்த வம்புக்காரராய் இருக்கிறீர்கள்? நீர் உம்முடைய அறிவிற்குப் பொருந்த பண்டரிநாதனைப் பஜனை பண்ணினால், நான் என் சிற்றறிவுக் கேற்ப, மண்ணினால் பண்டரிநாதனது ஆலயம் வகுத்து, பண்டரிநாதனைப் பாவித்து ஒரு கல்லை அதில் நாட்டி

வணங்கிக்கொண்டிருந்தேன். உமது அறிவுக்குத் தக்கது உமது பக்தி. ஆனால், எனது அறிவுக்குத் தக்கது எனது பக்தி. நீர் பக்தியில் மிகுந்தவரென்று எனது பக்தியைப் பழித்து நான் கட்டிய ஆலயத்தை எப்படி நீர் அழிக்கலாம்? உம்மை விடமாட்டேன். என் ஆலயத்தை அழித்ததற்காக உமது தம்பூரா என்னிடம் தந்துவிட்டுப் போம்" என்று பின் தொடர்ந்தாள். அதிதியுருவாய அச்சுதன், "குழந்தாய்! நீ கட்டி விளையாடிய சிறு வீட்டை நான் அழித்தேனென்கிறாயே? நான் வேண்டுமென்று உனது சிறு வீட்டை அழிப்பதற்கு நீ எனக்கு விரோதியா? குழந்தையாகிய உன்னிடம் எனக்கு ஏதாவது குரோதமுண்டா? நானே வேண்டுமென்று அழித்தால் நீ சொல்லியவண்ணம் நான் குற்றம் செய்தவன்தான். நான் என்னை மறந்து பகவன்நாம பஜனம் செய்து பாடி ஆடி வரும்பொழுது நீ கட்டிய சிறுவீடு அழிந்தால் அதற்கு நான் என்னசெய்வேன்? கண்மணி! என்னை நீ வருத்தாதே. நான் ஏழைப் பிராமணன். நான்கு வீடு சென்று உஞ்சிவர்த்திபண்ணி வயிறு வளர்க்கவேண்டியவன். என்னைப் போம்படி அனுப்பு" என்று சொன்னார். இவர் சொன்ன வார்த்தையைக் கேட்டு, சக்குபாயானவள், "சுவாமி! நானோ சிறுமி. உம்மைப்போல் அநேக சாஸ்திரங்களைக் கற்றவளல்ல, நீர் வெகு சாம்பிரதாயமாகப் பேசுவதுபோல, எனக்கு அவ்வளவு சமத்காரமாகப் பேசத் தெரியாது. என்னுடைய ஆலயத்தை அழித்ததற்காக உமது தம்பூராத் தந்துவிட்டு நீர் தடையில்லாமல் போகலாம்" என்று சக்குபாய் சொன்னாள். இதைக்கேட்ட வேதியர் அதிதியாம் வேதமுதல்வன் மனமகிழ்ந்து, "குழந்தாய்! நீ என் மீது வம்பாக வழக்கு தொடுக்கிறாய். நாலு இடத்தில் நான் வாங்கும் பிச்சையைக் கெடுக்கிறாய். நீ கட்டிய மண்வீட்டை நான் தெரியாது கலைத்துவிட்டால், இந்தக் கிழப்பிராமணன்மீது தயவு செய்து என்னிடம் பேசிக்கொண்டிருக்கிற இவ்வளவு நேரத்திற்குள் வேறுவீடு கட்டிக்கொள்ளக்கூடாதா? நான் உனக்குச் சொந்தமான தோட்டத்திலோ கொல்லையிலோ புழக்கடையிலோ நீ சிறுவீடு கட்டி விளையாடிக்கொண்டிருக்கும்பொழுது நான் வந்து கலைத்துவிட்டால் உன்னிடம் நான் தாழவேண்டியதுதான். இது ராசபாதையாக ஜனங்கள் நடமாடுந் தெரு அல்லவா? இதில் நீ சிறுவீடுகட்டி விளையாடினால் நடப்பவர்கள் கால்பட்டு அழியாதா? இதற்கு நான் அழித்தேனென்றும் அழித்ததற்காக நீ தம்பூரைத் தாவென்றும் கேட்கிறாயே; இது நியாயமா?" என்று வாசுதேவனான மறையவன் சொல்ல, இதைக்கேட்ட சக்குபாய், "சுவாமி! இந்த வழக்கெல்லாம் எனக்குத் தெரியாது, என் வீட்டு வாயிலில் நான் கட்டிய பண்டரிநாதனது ஆலயத்தை நீர் அழித்ததற்காக உமது தம்பூரை வாங்கிக்கொள்ளாமல் நான் உம்மை விடமாட்டேன்" என்று மீண்டும் பின் தொடர்ந்தாள். இவ்வார்த்

தையைக் கேட்ட மறையவர் மகிழ்ந்து, "இளமாதே! நீ ஒரு காரியம் செய். உன்னுடைய மனைவிட்டை நான் கலைத்ததாக நீ சொல்லும் எனது குற்றத்தை உனது தாய் தந்தையரிடம் சொல்லு. நம்மிருவரையும் அவர்கள் விசாரித்து நம்மிருவரில் யார்மீது குற்றமிருக்கிறதோ அதை அவர்களே சொல்லட்டும். என்மீது குற்றமிருக்கிறதென்று அவர்கள் சொன்னால், இந்தத் தம்பூரை நானே உன்னிடம் தருகிறேன். என்மீது குற்றமில்லையானால், நான் போகிறேன் வா; உன் தாய் தந்தையர்களிடம் போவோம்" என்று வேதியர் அழைக்க, சக்குபாய் சிரித்துக் கொண்டு, "விப்பிரோத்தமா! நீ மிகுந்த படிப்புடையவரென்று நினைத்திருந்தேன். இப்பொழுது நீர் பேசிய வார்த்தையைக் கேட்டால், எனக்கே நகைப்பாயிருக்கிறது. இந்த வழக்கை எனது தாய் தந்தையரிடத்தில் கொண்டுபோய்த் தீர்க்கிறேனென்கிறீரே? என்னைத் தவிர தங்களுக்கு வேறு உயிர் இல்லை என்று எண்ணியிருக்கும் அவர்கள் என்மீது குற்றமென்று சொல்லுவார்களா? நான் ஒருசொட்டு கண்ணீரை அவர்கள் முன்விட்டால், அதற்கு மாறாக அவர்கள் இருவரும் உயிரை விடுவாரே. இந்த வழக்கை அவர்களிடம்சென்றால், உமக்கு நியாயம் கிடைக்குமா? நாமிருவரும் காதோடு காது பேசிக்கொண்டதுபோல் நாமே தீர்த்துக் கொள்வதுதான் மேல். ஆகையினால் இந்தத் தம்பூரைத் தந்துவிட்டு கௌரவமாகப் போய்விடும் என்று சக்குபாய் சொன்னாள்.

கிழப்பிராமணராய் வந்த பாண்டுரங்கனான அதிதியானவர், அவள் சொல்லியதைக் கேட்டு உளமகிழ்ந்து, "குழந்தாய்! உன்னிடம் இந்தத் தம்பூரைத் தந்தால் நீ என்ன செய்வாய்? உனக்கு இதனால் என்ன பிரயோசனம்?" என மீண்டும் அவளைக் கேட்க, அவள் வணக்கமாய், "சுவாமி! நீங்கள் என்ன செய்வீர்கள்" என்று அவரையே திருப்பிக்கேட்டாள். அவர் பின்னும் புளகாங்கிதமடைந்து, "நான் இதைச் சுருதிகூட்டி அந்தச் சுருதியுடன் பண்டரிநாதன்மீது பாடிய பாடல்களை அதில் இணைத்துப் பாடுவேன்" என்று பதில் சொல்லி, தம்பூரை அவள் கையிலே கொடுத்து, "குழந்தாய்! நான் போய் வருகிறேன்" என்றார். சக்குபாய் அந்தத் தம்பூரை வாங்கிக்கொண்டதும் அவளுக்கு ஒரு உணர்ச்சி பிறக்க, உடனே அவள் அவரை வணங்கி, "சுவாமி! இந்தத் தம்பூரை நீர் என்னிடங் கொடுத்தீரே? இதை வைத்துக் கொண்டு நான் என்ன செய்வது? அதை அடியாள்மீது தயவு செய்து திருவாய்மலர்ந்தருளவேண்டும்" எனப் பிரார்த்தித்தாள். இதைக்கேட்ட பண்டரிநாத வேதியன், "இவளுக்குத் திருமந்திரோபதேசம் செய்ய வேண்டியகாலம் இதுதான்" என்று தன் மனதில் நினைத்தார் என்று நாபாஜிசித்தர்சொல்லி வரும்பொழுது, உத்தவசித்தர்கள் "சுவாமி! ஐந்து வயதாயிருக்கும் சிறுமிக்கு பகவான் திருமந்திரத்தை உபதேசிக்க விரும்பிய காரணம் என்ன? அதைத் தெரிவிக்கவேண்டும்" என்று அடிகளில் விழுந்து அன்புடன் பணிந்து கரமலர் குவித்து கண்ணீர் பெருக்கிக் கேட்கும் பொழுது, நாபாஜிசித்தர் "நற்றவமுடைய உத்தவசித்தரே! உரைக்கின்றேன் கேளுங்கள்: பிராமணகுலத்திலே புருஷனாகப் பிறந்தால், ஐந்தாவது வயதில் உபநயனம் செய்வித்து, பிரம்மோபதேசம் என்று பிரம்ம வஸ்துவான ஈஸ்வரனை அடையும்படி உபதேசிக்க வேண்டுமென்பது வேதத்தில் விதித்திருக்கிறது. ஸ்திரீகளும் மந்திரோபதேசம் பெறுவதற்கு உரிமையுடையவரானாலும் ஐந்தாவது வயதில் பெற்றுக்கொள்ள வேண்டியதுதான் முறையாகும். 'இளமையிற்கல்' என்பதற்கு அருத்தமும், ஆசாரியர் இடத்தில் இளமைப் பிராயத்திலேயே திருமந்திரார்த்தத்தைத் தெரிந்து கொள்ளவேண்டும் என்பதுதான். ஆனால், இந்த மகாமந்திரத்தை ஸ்திரீகளுக்கு ஐந்தாவது வயதில் நான் உபதேசிப்பது வழக்கமாகக் காணப்படவில்லையென்றால், காரணம் சொல்லுகிறேன் கேளுங்கள். ஸ்திரீகளுக்கு எப்பொழுதுமே சுதந்திரம் கிடையாது. விவாகம் நடந்து தன் கணவன் வீடுசேரும் வரையில் தந்தையின் கீழ் அடங்கியிருக்க வேண்டும். விதிவசத்தால் தனக்கு முன்னே கணவன் இறந்து விட்டால் புத்திரன் கீழ் அடங்கி இருக்கவேண்டும். ஸ்திரீகளுக்கு எப்பொழுதுமே சுதந்திரங் கிடையாது. அவர்கள் உடல் பொருள் ஆவி இவையும் பிறருக்கு அடிமை என்று ஏற்பட்டிருப்பதால் திருமந்திரத்தை இவர்கள் சிந்தித்துத் தனது ஆத்மாவை ஈஸ்வரனுக்கு அர்ப்பணம் பண்ண சந்தர்ப்பம் இல்லாது போகிறது. ஆனாலும், நாயகன் செய்கின்ற பக்திக்கு இவள் ஒத்து நடந்தால், இவளும் பரமபதம் சேருகிறாள் என்று தர்ம சாஸ்திரம் கூறுகிறது. மந்திரோபதேசமொன்று பெறவேண்டுமானால், அதற்குரிய பரிபக்குவகாலம் ஐந்தாவது வயதுதான் உரியது என்று சுருதிவாக்கியம் முறையிடுகிறது. ஆதலால் பகவான் சக்குபாய்க்குத் திருமந்திரத்தை உபதேசிக்கவிரும்பி, பின்வருமாறு பேச ஆரம்பித்தார். "கண்மணி! உன்வீட்டில் பண்டரிநாதன் சன்னிதியைப்போலப் பாவித்து வணங்குவதற்கு ஒரு திருவாராதனக்கூடம் வகுக்கவேண்டும். பண்டரிநாதனான பாண்டுரங்கனையும், ஸ்ரீராமசந்திரனையும், கிருஷ்ணபிரானையும், படமூர்த்திகளாக எழுந்தருளப்பண்ணி, இந்தத் தம்பூரையும், பண்டரிநாதன் படமூர்த்தியின் முன்னே வைத்து, பண்டரிநாதனுக்கும் ராமச்சந்திரனுக்கும் கண்ணனுக்கும் தூபதீபங்களால் திருவாராதனம் பண்ணி தம்பூரையெடுத்து சுருதிசேர்த்து மீட்டிக்கொண்டு பஜனை பண்ணவேண்டும்" என்று அதிதியுருவாகிய அச்சுதன் சொன்னார். சக்குபாய் இந்த வார்த்தைகளைக் கேட்டு ஆனந்தமடைந்து எழுந்துநின்று இருகைகுவித்து, "எந்தாய் சரணம்!

இறைவாசரணம்! வினையறுக்கும் வேதியா சரணம்! அனைத்துக்கும் இறையானவனே சரணம்!" எனப் பலவாறு போற்றிப் பணிந்து, "சுவாமி! உமது தரிசனத்தால் பாபவிமோசனமானேன். இந்த மானிடஜென்மம் இந்தப் பிறவியோடு ஒழிய நானடைய வேண்டிய திருமந்திரம் யாது? அதை அடியாளுக்கு உபதேசிக்கவேண்டும்" எனப் பிரார்த்தித்தாள். மாதவ அதிதியும் மன மகிழ்ந்து தன் மடிமீது சக்குபாயை உட்கார வைத்துக்கொண்டு "குழந்தாய்! உனக்கு இந்த இளமைப் பருவத்திலேயே திருமந்திர உபதேசத்தில் விருப்பம் வந்தது என்றால், நீ எத்தனை சென்மங்களில் தவம்செய்தவளாயிருக்க வேண்டும்? என் கண்ணே! உனக்குத் திருமந்திரத்தை உபதேசிக்கின்றேன். சிரத்தையோடு தெளிந்துகொள். திருமந்திரமென்றால் அது எட்டு எழுத்தோடு கூடியது. இதைத்தான் திரு அஷ்டாக்ஷர மென்பார்கள். அந்த அஷ்டாக்ஷரத்தை உனக்குச் சொல்லுகிறேன்" என்று அவள் காதோடு 'ஓம் நமோ நாராயணாய' என உபதேசித்தார். இதைக் கேட்ட சக்குபாய், இதன் உண்மையையும் இதன் மகத்துவத்தையும் தெரிந்துக் கொள்ள வேண்டும் என்று மனதில் நினைந்து, மறுபடியும் எழுந்து மலரடியில் தண்டம் சமர்ப்பித்து, "சுவாமி! நீர் உபதேசித்த இந்த வார்த்தையை யெனது தாய் தந்தையர்கள் அநேகம் தடவை சொல்லக் கேட்டிருக்கிறேன். எனக்கு நீர் உபதேசிக்கும் முன்னே இந்த வாக்கியம் தெரியுமே? அவ்வாறிருக்க, இதைப் பரமரகசியமாக என்னிடம் காதோடு சொன்ன காரணமென்ன? எனக்குரைக்கவேண்டும்" எனக் கேட்ட சக்குபாயை அதிதியான அன்பன் சொல்லுகிறார்: "ஏ மாசற்ற பொன்னே! மந்திரம் என்பது ஏட்டில் எழுதிவைத்திருப்பதைப் பார்ப்பதும், பிறர்சொல்லிக்கொண்டிருப்பதைக் கேட்பதும் அல்ல. ஞானானுஷ்டானமுடைய நல்ல ஆசாரியனிடத்தில் உபதேச வாயிலாகக் கேட்பதுதான் மந்திரமாகும். குழந்தாய்! மந்திரோபதேசம் கேட்கும்பொழுது ஆசாரிய விசுவாசம் முதல்படி. அந்த விசுவாசமாவது என்னவென்றால், நமது உடல் பொருள் ஆவி மூன்றும் ஆசாரியர் சொத்து என்று நினைப்பதல்லாமலும் ஈஸ்வரனே நம்மை இரக்ஷிக்க ஆசாரியனுருவாய் எழுந்தருளினானென்று கருதும் எண்ணம் இவைகளைத்தான் விஸ்வாச மென்பது. ஒருவன் எவ்வளவு நாள் தேடினாலும் நல்ல ஆசாரியன் அகப்படமாட்டான். ஏனென்றால், அவன் பிறவிநோய் தீர்ந்து பரமபதம் சேருவதற்குரிய பக்குவமாகவில்லை. ஒருவன் ஒரு முயற்சியுமில்லாத காலத்தில் ஆசாரியன் வலியவந்து உபதேசிக்கிறான். இவன் மோக்ஷவீடு சேருவதற்கு உரிய பக்குவமடைந்து விட்டானாகையால் இவனுக்கு ஆசாரிய தரிசனம் கிடைக்கிறது. பெண்ணாரமுதே! திருமந்திரத்தின் பெருமையைச் சொல்லுகிறேன் கேள்.

காமம்யாவையும் தருவதும் அப்பதங் கடந்தால்
சேமவீடுறச் செய்வதுஞ் செந்தனல் முகந்து
ஓமவேள்வி யின்னிறுபத முய்வது மொருவன்
நாமமன்னவை கேள்நமோ நாராயணாய.

முக்கட்டேவனும் நான்முகத் தொருவனுமுதலா
மக்கட்காறுமிம் மந்திர மறந்தவர் மறந்தார்
புக்குக்காட்டுவ தரிதிதுபொரு ளுறக்காண்பா
ரொக்கனேக் கினரல்லவிரிதனிலே உணரார்.

இதன்பொருள். ஒருவனுக்கு வேண்டிய இச்சைகளையெல்லாம் பூர்த்திசெய்து வைப்பதும், இந்த இச்சை தீர்ந்தபின் மறுபடியும் பிறவாத நிரதிசய ஆநந்தமய மோக்ஷத்தில் சேர்ப்பதும், பெரிய யாகங்களில் பூர்ணாகுதியாலே பதினான்கு உலகத்திலுள்ள ஜீவராசிகளுக்கும் யாகபலனைச் சேர்ப்பதும், எல்லாம் ஒருவரது திருநாமமே. அதாவது 'ஓம் நமோ நாராயணாய' சோம சூரியாக்கினி யென்னும் மூன்று கண்களையுடைய பரமசிவனும், சதுர்முகத்தேவனான பிரம்மாவையும், முதலாக சாமான்னியர்களான மனுஷ்யாள்வரை இந்த மந்திரம் மறந்தால், மோக்ஷமென்பதை மறந்தவராவர். இந்த மந்திரத்தின் பெருமையை யின்னதென்று தொட்டுக் காட்டுவதுதான் அருமை. இதன் உண்மையைத் தெரியவேண்டுமானால் மனத்தழுக்கற்ற பெரியோரே காண்பார்கள். குழந்தாய்! நீ முன்சென்மங்களில் செய்த பூஜாபலத்தால் இந்த மந்திரம் உனக்குக் கிடைத்தது" எனச் சொல்லினார்.

இந்தத் திருமந்திரங்களின் பெருமைகளை தனது ஆசாரியரால் தெரிந்துக்கொண்ட சக்குபாய், ஆசாரியனுக்குக் காணிக்கை சமர்ப்பிக்க வேண்டுமென்று நினைத்து தான் முன்னம் அவரைச் சிறுவீடு கலைத்த வழக்கில் வென்று அவரிடமிருந்து பெற்றுக் கொண்ட தம்பூரை அவர் கையிலே கொடுத்து "அடியாள் தேவரீருக்கு சமர்ப்பிக்கும் ஆசாரிய சம்பாவனை இதுதான். ஏற்றுக் கொள்ளவேண்டும்." என்று சொல்லி, மீண்டும் "சுவாமி! இந்த மந்திரத்தைத் தியானம்பண்ணும்பொழுது எப்படியிருக்கவேண்டும்? எந்தக்காலங்களில் தியானம் பண்ணவேண்டும்? அதையும் அடியாளான எனக்குச் சொல்லவேண்டும்" எனக்கேட்க, இதைக் கேட்ட பண்டரிநாதனான பிராமணர், மனமகிழ்ந்து குழந்தாய்! இந்த மந்திரம் ஆசாரியர் முகமாகப்பெற்று, புருஷர்கள் தியானிப்பதைப் பார்க்கினும், ஸ்திரீகள் தியானிப்பதில் மிகுந்த கஷ்டமிருக்கிறது. ஏனென்றால், அவர்களுக்குச் சுதந்திரங் கிடையாது. தந்தையின்கீழும் நாயகன்கீழும் புத்திரன் கீழுமிருந்து அடங்கி வாழவேண்டியவராய் இருக்கிறார்கள். இவர்களுக்கு ஒழிவில்லை. இல்லாளென்று சதா கிரக கிர்த்தியங்களைக் கவனிக்க வேண்டியவர்களாய் இருக்கிறார்கள். சற்றுநேரம்கூட இவர்

களுக்கு ஓய்வு கிடைப்பதில்லை. சற்றுநேரம் தியானத்திலிருந்தால் புருஷன் அழைக்கின்றான். குழந்தைகள் 'அம்மா' வென்று அழைக்கும் ஆர்வச்சொல் செவியில் நுழைகிறது. மாமி நாத்தி இவர்கள் கொலுவிருக்க ஆரம்பித்து விடுவார்கள். உற்றார் பெற்றார் இந்தச்சமயத்தில் உறவாட வருவார்கள். இவ்வளவு கஷ்டத்தில் திருமந்திரமாவது தியானமாவது எல்லாம் போய்விடும். இதனால்தான் ஸ்திரீகளுக்கு இந்த உபதேசம் வேண்டுவதில்லை" என்று பெரியவர்கள் விதித்திருக்கிறார்கள். சுந்தரி! நீயும் உனது தந்தை தாயார் இவர்கள் அன்புக்குத்தப்பி உனக்குவரும் மணவாளன் என்ன குணமுடையவனோ அவன் பணிவிடைகளுக்குத் தப்பி, மாமியின் மாச்சரியத்திற்கு இடமில்லாமல் தப்பி நாத்தி வீட்டுக்குவந்த மருமகளைத் தீயால் சுடுவதுபோல நாவால் சுடுவதினால் இவள் நாத்தீ (நாக்கு தீ—என்று பொருள்) அல்லாமலும் தாய் தந்தையர்கள் வீட்டிலுள்ள நிதி நிக்ஷேபங்களையெல்லாம் அள்ளிக் கொடுத்தாலும் கிள்ளிக் கொடுக்கவில்லையே! என்னைப்போல அதிர்ஷ்டம் கெட்டப் பெண்களுமுண்டோ என்று சொல்லி, எதைக் கொடுத்தாலும் ஒன்று கொடுக்கவில்லையோ நாத்தி, (நாஸ்தி என்பது தமிழில் நாத்தி) என்றாயிற்று. நாஸ்தி—இல்லை என்பது பொருள். இத்தகைய நாத்தியின் கொடுமைக்குத் தப்பி குழந்தைகளிடம் செல்லும் அன்புக்குத் தப்பி, நீ எப்படி தியானிப்பது? பசுந்தேனே! தியானமென்றால் அது சுலபமானதா? ஐம்புலனடக்கி, அறிவை ஒடுக்கி, கண்களில் நீர் ததும்ப கசிந்துள்ளுருகி, பொய்ம்மையில் மனத்தொடு மெய்மயிர் சிலிர்ப்பக் கரங்களைக் குவித்து, அச்சுதா! அமலா! அலங்கிருதா!" என்று பச்சைமால் நாமம் பன்னிரண்டோதி திருவஷ்டாக்ஷரம் ஜெபித்திடவேண்டும். நீ எவ்வாறு செய்வாயோ நானறியேன்? பெண்ணாரமுதே! நான் வந்து வெகு நாழிகையாய்விட்டது. நான் போய் வருகிறேன்" என்று சொல்லி தம்பூரைத் தூக்கிக்கொண்டு எழுந்தார். இதைக்கண்ட சக்குபாய், "நாதா! நீர் எழுந்தருளுகிறீரா? ரொம்ப நன்றாயிற்று, உம்மைப் பிரிந்து ஒருகணம் தரியேன்" என்று சக்குபாய் கூவி அழத்தலைப்பட்டாள். அப்பொழுது மாயா அதிதியானவர், சக்குபாய்! நீ மயங்காதே. இன்று முதல் வருஷம் ஐந்து எண்ணிக்கொள். உனக்குப் பத்தாவது வயதில் நான் உன்னிடம் வருகிறேன். நீ பயப்படாதே" என்று சொல்ல, இந்த வார்த்தையைக் கேட்டதே, "ஆ! பிராணேசா! ஐந்து ஆண்டா" என்று அலறி வீழ்ந்து, மூர்ச்சையடைந்தாள். அதிதியாம் அப்பன் சக்குபாயைத் தூக்கி மடிமீது வைத்துக்கொண்டு தன்னிடமிருந்த கந்தல் விசிறியால் வீச மூர்ச்சை தெளிந்தாள். "அடி குழந்தாய்! என்ன? இப்படி கீழே வீழ்ந்து மூர்ச்சை அடைந்தாய்?" என்று பண்டரி நாதனான பாகவதர்கேட்க, சக்குபாயானவள் "பிராணபதே! உம்மை நிமைப்

பொழுதுகூட பிரியேனே! ஐந்து வருஷம் என்றால் எப்படி உயிர் தரிக்க முடியும்? நீரே சொல்லும்" என்றாள். இந்த வார்த்தையைக் கேட்ட மாயா மறையவர், அவளது பக்தி வலையில் பட்டு மறுபடியும் சக்குபாயை அன்புடன் நோக்கி, "கண்மணி! ஐந்து மாதத்தில் வருகிறேன். எனக்கு விடை கொடு" என்றார். இந்த வார்த்தையைக் கேட்ட சக்குபாயானவள், மறுபடியும் பூமியில் சோர்ந்து விழுந்தாள். பகவானும் மறுமுறை எடுத்து சோகத்தை மாற்றி, "பெண்ணே! நீயேன் இவ்வாறு சோக முறுகிறாய்" என மறையவர் கேட்க, சக்குபாயானவள், "சுவாமி! உம்மைப் பிரிந்து ஒரு இமைப்பொழுதும் பிரியேன். உயிர் தரியேன்" எனச் சொல்ல, மாயமறையவர் "காந்தையர் திலகமே! நீ வருந்தாதே, ஐந்து நாளில் வருகின்றேன்" என்று சொல்லவும், சக்குபாயானவள் தனக்கு ஆசாரியராக எழுந்தருளி தன்னை ஆட்படுத்திய சுவாமியின் திருவடிகளில் பணிந்து நமஸ்காரம் பண்ணி எழுந்து இருகரங்களையும் குவித்து நின்று, "சுவாமி! அடியாள் வார்த்தையை மனமுவந்து கேட்டருளவேண்டும். எனது பிதாவானவர் பண்டரிநாதனை நோக்கி, "அருந்தவம் புரிந்து என்னைப் பெற்றார். அளவுகடந்த செல்வம் எம்மிடமிருக்கிறது. அந்தச் செல்வம் யாவும் என்னுடையது. அல்லாமல் வேறு யாருக்கும் சொந்தமல்ல. ஆதலால், எனக்கு ஆசாரியராக எழுந்தருளி வந்து, மூலப்பொருளாய் முத்திவித்தை காட்டியதால், எனது உடல் பொருள் ஆவிமூன்றும் உமதாயிருக்க, நீர் என் வழியவர்போல மனைகள்தோறும் சென்று பிச்சையெடுத்து அமுது செய்ய வேண்டும்." எற்பதிழிவன்றோ? ஆதலால் அடியாள் பணிவிடை செய்ய எனது கிரகத்திற்கு எழுந்தருளவேண்டும்" என்று பிரார்த்தித்தாள். இவ்வாறு சக்குபாய் பிரார்த்திக்க, அவ்வார்த்தைகளைக் கேட்ட பரந்தாமராகிய பிராமணன் சக்குபாயைப் பார்த்து, "அம்மா! நான் ஐந்து நாளில் உன்னிடம் வருகிறேன். நாழிகை ஆகிறது" என்று சொல்லும் வேதியர் வார்த்தையைக் கேட்டு, ஐந்து தினம்தானே பொறுத்திருப்போம் என்று சக்குபாய் பகவானுக்கு விடைகொடுத் தனுப்பினாள். பகவானான பண்டரிநாதனும் சக்குபாயின் கண்கள் மறையும்வரை அந்தணராக நடந்து அவள் திருஷ்டி மறைந்ததும் அவரும் மறைந்தார்.

சக்குபாய்க்கு ஆசாரியனாய் வந்த பண்டரிநாதன் மறைந்ததும், சக்குபாயானவள் அரிய தவம் செய்து பெற்ற தேவாமிர்தத்தை வாயில் போட்டுக்கொள்ளும்பொழுது கைதவறி மண்ணில் வீழ்ந்து மண்ணுடன் கலந்துபோனால் அவன் எவ்வாறு வருந்துவானோ அதுபோலவும், நீங்காத அன்புடையகாதலனைப் போருக்கு அனுப்பிய நாயகியானவள், எவ்வாறு துயருறுவாளோ அதுபோலவும், தனது ஆசாரியனைப் பிரிந்து வருந்துவாளாயினள். சிறிதுநேரம் வருந்தி தனது வீட்டுக்குச்சென்று தனது

விளையாட்டு சாமான்கள் வைத்திருக்கும் ஒரு அறையில் போய் உட்கார்ந்துகொண்டு தனக்கு வந்து மந்திரோபதேசஞ் செய்த ஆசாரியனையே தன் தெய்வமாகிய பண்டரிநாதனென்று நினைத்து இருகரங்களையும் தலையின்மீது குவித்துக்கொண்டு திருவஷ்டாக்ஷர மந்திரத்தைச் சிந்தித்து பலவாறு தோத்திரம் செய்ய ஆரம்பித்தாள். "ஏ! தீனபந்து! உன்னை அடைந்து உய்யவேண்டுமானால் வயது ஒரு காரணமில்லை என்று பெரியவர்கள் சொல்லுகிறார்களே? துருவனென்பவன் மோக்ஷம் பெற்றது ஐந்து வயது என்றும், பிரகலாதன் வேதார்த்தங்களின் உட்பொருள் புறப்பொருள்களைத் தெரிந்து உன்னை வணங்கி தன் தந்தைசெய்த தண்டனைகளிலெல்லாம் தப்பி உம்மை அடைந்து உய்ந்தது ஐந்து வயதென்று புராணங்களை அறிந்த பெரியோர்கள் சொல்லுகிறார்களே? ஆதலால், என்னையும் காப்பது உன் கடனன்றோ? பண்டரிநாதா! நான் உன்னையன்றி வேறு தலைவனை விரும்பேன். நீர் என்னை அன்போடு வந்து தடுத்து ஆட்கொள்ள வேண்டும்" எனத் துதித்துக்கொண்டிருக்கும்பொழுது இவளது தோழிகள் விரைந்தோடி வந்து "அடி! சக்கு! நீ விளையாட வரவில்லையா? நேரமாகிறதே? என்னடி? வெளியில் வா" என்று அழைத்தார்கள். சக்குபாயானவள், தோழிகள் கூறிய வார்த்தைகளைக் கேட்டு முகத்தை சுளித்துக்கொண்டு "என்னை இனி விளையாட அழையாதீர்கள். எனது நாயகன் இன்னும் ஐந்து தினத்தில் என்னிடம் வருவார். அவர் வந்தபின் நான் அவரிடம் உத்தரவு பெற்றுக்கொண்டு உங்களோடு விளையாட வருவேன். அதுவரை நீங்கள் என்னை விளையாட அழையாதீர்கள்" எனச் சக்குபாய் தனது தோழிகளோடு சொன்னாள். இவ்வார்த்தையைக் கேட்ட தோழிகள் சக்குபாயைப் பார்த்து, "சக்கு! உனக்கு புத்தி இப்பொழுது தடுமாறி யிருக்கிறதுபோ லிருக்கிறதே? உனக்கு எங்களுக்குத் தெரியாமல் எப்போ கலியாணமாயிற்று? உனது நாயகன் வந்தால்தான் விளையாட வருவேனென்கிறாயே? உனக்கு நாயகன் ஆரடி? சற்றுநேரத்திற்கு முன்னே உன்னுடன் நாங்கள் விளையாடிக்கொண்டிருந்தபொழுது ஒரு பிச்சைக்கார பிராமணன் பாடி ஆடிக்கொண்டு வந்தானே. அவன்தான் உன்னைச் சொக்குபொடி போட்டு மயக்கிவிட்டாற்போலிருக்கிறதே என்று சொல்ல, அந்தத்தோழிகளைப்பார்த்து, "சீ! வம்புக்காரிகளே? அந்தப்பெரியவரைப் பழித்தால், என் முகத்தில் விழிக்கப்படாது. நானும் விளையாட வரமாட்டேன். நீங்கள் போங்கள்" எனக் கோபத்தோடு கூறினாள்.

அயலாத்துப் பெண்களான தோழியர்கள், அப்பொழுதே சக்குபாயின் அறையிலிருந்து வெளியில் வந்து அவள் தாயாரான கமலாபாயினிடம் சென்று, "அம்மா! உமது குழந்தையான சக்குவானவள் இன்று தெருவிலே சிறு வீடுகட்டி விளையாடும்

பொழுது ஒரு பெரியவர் தம்பூரை மீட்டிக்கொண்டு பாடி ஆடிக்கொண்டுவந்தார். அவரைக் கண்டு நாங்கள் பயந்து ஓடினோம். அவள் மாத்திரம் தைரியமாய் அவர் முன்னே நின்று அவரோடு சண்டைபோட்டுக்கொண்டிருந்தாள். நாங்கள் எங்கள் வீட்டுக்குப் போய்விட்டோம். அந்தத் திருட்டு பிராம்மணன் என்ன சொக்குப்பொடியைப் போட்டுவிட்டானோ என்னமோ தெரியவில்லை. இப்பொழுது நாங்கள் சென்று விளையாட அழைத்தோம். "நான் விளையாட வரமாட்டேன். இன்னும் ஐந்து நாளையில் எனது நாயகன் வருவார், அவரிடம் உத்தரவு பெற்றுதான் உங்களோடு விளையாட வருவேன்" எனச்சொல்லி எங்களையும் வைகிறாள். என்று சொல்லிவிட்டுத் தாங்கள் விளையாடச் சென்றுவிட்டார்கள்.

கமலாபாயானவள், சக்குபாயின் தோழியர்கள் சொல்லிய வார்த்தைகளைக் கேட்டுத் திடுக்கிட்டு ஓடிவந்து சக்குபாயின் அறையில் நுழைந்து, "கண்மணி! சக்கு? தெருவில் என்னம்ம நடந்தது? யாவன் உன்னை மயக்கினான்? அவன் எந்த மார்க்கமாகச் சென்றான்? சொல்லம்மா" என்று கேட்க, சக்குபாயானவள் தன்முன் வந்து பேசுகிற தாய்மொழியையும் கேளாதவளாய், இருகைகளையும் தலையின்மேல் குவித்துக்கொண்டு "என் அன்பா! உன்னை நான் மறந்திடுவேனோ? ஒருபோதும் மறவேன். மறந்தேனாகில், ஒரு கணமும் தரியேன். உன்மீது ஆணையிட்டுச் சொல்லுகிறேன். என் இன்னுயிர்த் தலைவா! நீ என்னை மறந்திடுவாயோ? மறந்திட்டாயானால் நான் எங்கே செல்லுவேன்? யாரிடம் சொல்லுவேன்? தாயினும் மிக்க உன் தயவை நினைந்து எனது உயிரை ஆதரித்துக்கொண்டிருக்கிறேன். இதுவும் சத்தியம்" என்று சொல்லி, கண்களில் ஆநந்தக் கண்ணீர் பெருக, மனமுருகி நின்றாள். இதைக்கண்ட கமலாபாய் ஒன்றுந் தோன்றாதவளாய், "ஓகோ! மோசம் வந்துவிட்டது. நான் இவளிடம் வந்தவுடனே 'அம்மா' வென்றழைக்குஞ் சொல் இன்றையதினம் கிடைக்கவில்லையே! நான் சொல்லும் சொற்களும் அவள் காதுகளில் புகவில்லையே! ஐயோ! இனி நானென்ன செய்வேன்! தெய்வமே" என்று கதறிக்கொண்டு தன் வீட்டுக்கு எதிரிலுள்ள ஒரு அழகிய மாளிகையிலிருக்கும் தன் நாதனிடம் விரைந்தோடி, "ஐயோ! மோசம் வந்துவிட்டதே! நமது குழந்தை சக்குவை யாரோ பிச்சையெடுக்க வந்த பிராமணன் மயக்கிவிட்டுச் சென்றானாம். அந்த நிமிஷம் முதல் பைத்தியம் பிடித்தவளாய் என்னென்னமோ பிதற்றிக் கொண்டிருக்கிறாள். நான் சென்று எத்தனையோ தடவை சக்கு! 'சக்கு' என்று அழைத்தும் எனது வார்த்தைகள் அவள் காதுகளில் விழவில்லை. என்னையும் கண்ணெடுத்துப் பார்க்கவில்லை. ஐயோ! நமக்கு வந்ததே தொல்லை" எனக் கதறும் வார்த்தையைக் கேட்ட கங்காதரராவ், கமலாபாயைப் பார்த்து,

"நீ பதறாதே; காரியம் சிதறாது. அந்தப் பிராமணனை ஒரு கணப் பொழுதில் கொண்டுவரச்செய்து நமது குழந்தையைச் சௌக்கியப் படுத்துகிறேன்" எனச்சொல்லி, தன்னிடமுள்ள அநேக குதிரை வீரர்களை அழைத்து, "இன்று சற்றுநேரத்திற்கு முன்னே உஞ்சவர்த்தி செய்துக்கொண்டு ஒரு வைஷ்ணவ பிராமணர் வந்தாராம். அவர் நமது குழந்தை சக்குபாயை மயக்கி விட்டுப் போய்விட்டார். ஆதலால், நீங்கள் விரைவாகக் குதிரைகளின்மீது ஏறி நாலாபக்கங்களிலும் விரைவாய் ஓடி அவரைத் தேடி அவ்வேதியரைக் கண்டு கூடி அவரை மரியாதையாய் குதிரைமீது ஏற்றி என்னை நாடி வருவீர்கள்" என ஆக்ஞாபித்துத் தான் சக்குபாய் இருக்கும் அறைக்கு ஓடிவந்தார்.

சக்குபாயோ, தானிருக்கும் அறைக்குத் தனது தந்தை வந்தால் 'அப்பா' வென்று ஆர்வமோடு அழைத்து ஆசனமளித்து அவரை அதில் இருத்தி கரமலர் குவித்து காலில் விழுந்து பணிந்து எழுந்து பாவைபோல நின்று புன்னகைகாட்டித் தன்னோடு பேசுவள். இன்றையத்தினம் பிதா தனது அறைக்கு வந்ததையும் பாராது, வாருமென்று அழையாது, வானத்தைப் பார்த்து இருகண்களும் விழித்தபடியே நின்றுகொண்டு இடையிடையே முறுவல் தோன்ற கைகளைக் குவித்துக்கொண்டு பின் வருமாறு பேசினாள்: "எனது கண்ணுக்கினிய காதலரே! எனக்குக் குழந்தை பருவத்தால் சிறுவீடுகட்டி விளையாடிக்கொண்டிருந்த காலத்தில் என்முன் வந்து என்னை ஆளாக்கிக்கொண்டாயே? அறிவு கிஞ்சித்துமில்லாத நான், உம்மை எவ்வாறு அறிவேன்? பிரம்ம ருத்திராதி தேவாதி தேவரும், இந்திரன் முதலாக இஷ்டசித்தி வித்யாதியரும் உன்னைக் காணவிரும்பி அருந்தவம் புரிந்தும் காணமுடியாதவர்களாய் தனித்தனியாகச் சென்று, இருக்கு யஜுர் சாமம் அதர்வணம் என்னும் நான்கு வேதங்களையும் கேட்க, அவ்வேதங்களும் அவர்களைப் பார்த்து "தேவர்களே! என்னை வேதவிருக்ஷமென்பார்கள்; நான் ஆயிரம் சாகைகளாக விரிந்து பரவி சர்வேஸ்வரனது சரணாரவிந்தத்தை யாவது பார்க்கவேண்டுமென்று எட்டி எட்டி உயரவும் என்னாலே காண முடியவில்லை," என்று அவர்களுடனே கூடி வருந்துமாகில், நான் உம்மை எப்படி அறிவேன்? எனப் பலவாறு சொல்லிக்கொண்டிருக்கும் குழந்தையான சக்குபாயின் குணாதிசயத்தைக் கண்டுகொள்ளாமல் தனது புத்திரி என்னும் பாசத்தால் மயங்கி "இவளுக்குப் புத்தி தடுமாறி யிருக்கிறது. வேதியரை அழைக்கச் சென்ற வீரரையும் காணோமே! என்னசெய்வேன்! எப்பொழுது வருவார்கள்?" என்று சொல்லிக்கொண்டே வாயலில் வந்து நான்கு புறங்களையும் திரும்பித் திரும்பிப் பார்த்துக்கொண்டிருக்கும்பொழுது, பண்டரிநாத வேதியனைத் தேடிச் சென்ற குதிரை வீரர்கள் பல காதங்கள் வரையும் தேடி ஒருவரையும் காணாது

ஓடிவந்து கங்காதரராவிடம் தெரிவித்தார்கள். கங்காதரராவ் அவர்கள் வார்த்தையைக் கேட்டு ஆராத துயர்கொண்டு, இது பயந்த தன்மையினால் வந்திருக்குமென்று ஒரு மாந்திரீகனை அழைத்து, "இந்தக் குழந்தைக்கு ஏற்பட்ட குற்றம் என்ன?" எனக் கேட்டார் கங்காதரராவ். உடனே மாந்திரீகன், "இவள் விளையாடிக்கொண்டிருக்கும்பொழுது ஒருநாள் ஊருக்கு கிழக்கே ஒண்டியாய் நிற்கும் அரசமரத்தின் அடியினில் சென்றாள். அந்த மரத்தில் ஆநந்தமாகச் சிலநாள் வாழ்ந்த சடாமுனி ஒன்று பல நாளாகப் பார்த்திருந்து இவளைத் தொட்டது. அதனால் இவள் சோகமடைந்தாள். சுவாமி! நான் அடிக்கும் உடுக்கையிலே ஊருக்குக் கிழக்கேயுள்ள அரசமரத்திலிருந்த சடாமுனி இவளைத் தொட்டுவிட்டதென்று தோன்றுகிறது. இந்தச் சடாமுனி இவளை விட்டு நீங்கவேண்டுமானால்; நாற்பத்தொரு நாள் ஒரு மண்டலம் பூசை போடவேண்டும், கும்பம் வைக்கவேண்டும், மயானத்தில் காவு கொடுக்க வேண்டும். காரியம் ரொம்ப கஷ்டமானது. நான் ஏதோ ஆசான் கிருபையால் தெரிந்தமட்டில் பார்த்து குணப்படுத்தி விடுகிறேன் என்று சொன்னான்.

கங்காதரராவ் இந்தப் பூசாரியின் வார்த்தையைக்கேட்டு, "நல்லது. நீ அவ்வாறே இதற்கு எவ்வளவு ரூபாய் வேண்டுமானாலும் தருகிறேன்" என்று சொல்லி நூறு வராகனை அவன் கையில் கொடுத்தார். பூசாரியானவன் அதை வாங்கிக்கொண்டு, சாராயம் கருட்டு கோழி கோழிமுட்டை எலுமிச்சம்பழம் பொரிகடலை பல வர்ணப்பொடி இவைகளை வாங்கிக்கொண்டு இராத்திரி பத்து நாழிகைக்கு கங்காதரராவின் வீடுசென்று சக்குபாய் பகவத்தியானம் பண்ணிக்கொண்டிருக்கும் அறைக்குள் போய் பலநிறமுடைய வர்ணப் பொடியினால் பெரிய சக்கரம்போட்டு அதில் குத்துவிளக்கு நிறைய நல்லெண்ணையைவிட்டு விளக்கேற்றி அந்தச் சக்கரத்தின் முன்னே வைத்து, தேங்காய் உடைத்து தூபதீபம் கொடுத்து, சாராய புட்டியைத் திறந்துவைத்து, பொரிகடலை கோழிமுட்டை கருட்டு முதலியதும் முன்னே வைத்து, சக்குபாயைச் சக்கரத்தின் முன்னே உட்காரவைத்து, பூசாரியானவன் உடுக்கையை வாசிக்க ஆரம்பித்தான். சக்குபாயானவள் பூசாரிவந்து தனக்குப் பேயோட்டப் போகிறானென்று தெரிந்தும், தன் தந்தையின் அறியாமையை நினைந்து "எனக்குப் பேயோட்ட வந்த இந்தப் பூசாரியை இந்த வீட்டின் திசையை நோக்காத வண்ணம் நான் ஓட்டிவிடவேண்டும்" என மனதில் நினைந்துகொண்டு தன் முன்னே உட்கார்ந்துக் கொண்டிருக்கிற பூசாரியை உற்று சற்றுநேரம் பார்த்த வண்ணமாயிருந்து இந்த உடுக்கையின் அடிக்குத் தக்கவாறு ஆடுவதாக அபிநயித்தாள். இதைக்கண்ட கங்காதரராவும் கமலாபாயும் "பூசாரி கெட்டிக்காரன் நமது குழந்தையை சடாமுனிதான் பிடித்து விட்டது.

இவன் இதைக் கட்டாயம் ஓட்டி விடுவான்" எனப் பேசிக்கொண்டார்கள். பூசாரியானவன், கங்காதரராவ் தன்னை மதித்து விட்டார் என்று அறிந்ததும், உடுக்கையை நன்றாய் அடித்துக்கொண்டு எருமைக்கடா தொண்டையைத் திறந்து, கனைத்து கனைத்து பாடிக்கொண்டு இடையிடையே "உனக்கு என்னவேண்டும் சொல்? இப்பெண்ணை விட்டுச் செல். என் ஆணையில் நில்" என்று சொல்லிக் கொண்டிருக்கும் பொழுது, பூசாரியானவன் தன்னை கங்காதரராவ் மதிப்பதற்காகப் பிடித்துவைத்த ஒரு வெள்ளி பூண்போட்ட வளைதடி ஒன்று மந்திரவாதியின் பக்கத்தில் இருப்பதைச் சக்குபாய் பார்த்து, பேய்கொண்டவள்போல வீரென்று கூவி, வளைதடியைக் கையில் எடுத்துக்கொண்டு, "யாரடா? நீயா யென்னை ஓட்டுகிறவன்? உன் உயிரை நான் வாங்கிவிடுகிறேன்" என்று பூசாரியின் மண்டையில் ஓங்கி அடித்தாள். அந்த அடிபட்டதும் மண்டை உடைந்தது. பூசாரியும் நடுநடுங்கி "சுவாமி! இது கொடிய சடாமுனி. இதை என்னால் ஓட்டமுடியாது" என்று சொல்லி, தனது வீட்டை நோக்கி ஓடிவிட்டான்.

கங்காதரராவும் அவர் மனைவியும் திகிலடைந்து "ஐயோ! பூசாரியும் போய்விட்டான். நமக்கும் மிகுந்த மானம் வந்துவிட்டது. இந்த விஷயம் பிறருக்குத் தெரிந்தால் இவளுக்குக் கலியாணம் நடவாது. இவள் செய்கையைப் பிறர் அறியாமலிருந்தால் நமக்குக் கௌரவம் நிலைக்கும், என நினைத்து தனது மாளிகையின்மேல் உப்பரிக்கையில் சக்குபாயை இருக்கச்செய்து நல்லறிவு ஒழுக்கம் கல்வி இவைகளையுடைய ஒரு சேடியைச்சக்குபாய்க்கு நியமித்து தானும் தன் மனைவியுமாகிய கமலாபாய் இருவரும் சக்குபாயின் விஷயத்திலே கண்ணும் கருத்துமாயிருந்தார்கள். சக்குபாய் தன்னை மேல்மாடத்தில் வைத்ததும் மந்திரவாதியின் துன்பமும் தாய் தந்தையரின் துன்பமும் தனக்கு வாராது என்று மனதில் நினைத்து மகிழ்ந்தாள். தனக்கு ஆசாரியனாக எழுந்தருளிய பண்டரிநாதன் தன்னிடம் வருவதாகச் சொன்ன ஒவ்வொரு நாளையும் ஒவ்வொரு யுகமாகக் கழித்து ஐந்தாவது நாள் வருவதை நினைத்து தனக்கு சேடியாக நியமிக்கப்பட்ட ராதாபாயைப் பார்த்து, "ராதா" என்று அழைக்கவும், "என்ன ஆச்சரியம்! இதுவரை என் முகத்தையும் பாராமல் ஒரு வார்த்தையும் சொல்லாமல் இருந்த சக்குபாய், என் பெயரைச் சொல்லி அழைக்கிறாளே! இவளுக்கு பைத்தியம் நீங்கிவிட்டது போலிருக்கிறது! என்ன இது" என அவளுக்கவளே நினைத்து, அம்மணி! இதோ வந்தேன்" என்று சொல்லிக்கொண்டே முன்னே வந்து நின்றாள். சக்குபாய் அவளைப் பார்த்து, "ராதா! நான் ஆவலோடு எதிர்பார்த்திருந்த தினம் இன்றுதான். என் தனித்தலைவர் வருகின்ற தருணம் இதுதான் தோழி. அவர் வரும் தருணமாகிறது நீமஞ்சத்தை அலங்கரிக்கவேண்டும். நல்ல மணைப்பலகையை நமது மாடத்தின்

முன்னேபோடவேண்டும். அவரை கைலாகுகொடுத்து அழைத்து வந்து மணையில் நிறுத்தி, கரகநீர் கொண்டு கழலிணையைக் கழுவி நோய்தணிய நாவில் வார்த்துக் கொள்ள வேண்டும். நறுமலரிட்டுத் திருவடிகளை அர்ச்சிக்கவேண்டும். ராதா! ஒன்றும் சொல்லாமலிருக்கிறாயே ஏன்? இது நீதியல்ல" என்று சொல்லி எழுந்து நாலாபக்கமும் விரைந்து பார்த்தாள். தோழியான ராதாபாய், இவள் குறிப்பைப் பார்த்து 'இவள் பாண்டுரங்க பேய் பிடித்தவள்; என்று நினைத்து, இவளிடம் விசுவாசமுடையவளாய் "அம்மணீ! அடியாள் வார்த்தையைக் கேட்கவேண்டும். தாங்கள் என்னை உம்முடைய தோழி என்று ஏற்றுக் கொண்டது எனது தவப்பயன் என்று சொல்ல வேண்டும். ஆகையினால் நான் உம் விஷயங்களில் கண்ணும் கருத்துமாக இருக்கிறேன். எந்தவிஷயத்தையும் என்னிடம் ஒளியாமல் சொல்ல வேண்டும் என்று பிரார்த்தித்தாள்.

சக்குபாய், தன்னைப் பிரார்த்தித்த ராதாவைப் பார்த்து, "அடி அம்மா ராதா! நான் ஒருநாள் என் தோழியரோடு விளையாடிக் கொண்டிருக்கும்பொழுது பாண்டுரங்கன் ஒரு பிராமணராக வந்து என்னை ஆட்படுத்தினார். அவர் இன்று, இப்பொழுது வருவதாகச்சொல்லி என்னிடம் ஐந்து நாளைக்குமுன் விடை பெற்றுக்கொண்டு சென்றார். அவரைக் காணாத ஒவ்வொரு நிமிஷமும் அனலிலிட்ட மெழுகுபோல், அங்கம் கரைகிறது, என் மனநோய் நீங்கவேண்டுமானால், தண்ணம் துழா என்னும் மாலை மாலை கொண்டு சூட்டத் தணியும்' என ஆண்டாள் பாசுரத்தில் கூறியவாறு, அவர் திருத்துழாய் மலர்மாலையைக் கொண்டு எனக்குச் சூட்டினால் நான் பழைய சக்குபாயாவேன். உனது மனநோயும் தீரும். வானிடை வாழும் அவ்வானவர்க்கென்று மறையோர்கள் வேள்வியில் வகுத்த 'அவிகானிடை திரிவதோர் நரிபுகுந்து கடப்பதும் மோப்பதும்போல்' என்று தேவர்களுக்கு அவிர்ப்பாகங் கொடுக்க யாகசாலையில் வைத்திருக்கின்ற சேமலதையைக் காட்டில் திரிகின்ற நரியானது தின்ன விரும்பினாற்போல், சர்வேஸ்வரனுக்கு ஆட்பட்ட இந்தச் சக்குபாயை மானிடன் ஒருவனுக்கு மணஞ் செய்யக் கருதினால், நானெப்படி வாழ்வேன்? அடி, ராதா! எந்தனித்தலைவர் என்னிடம் வருவதாகச் சொல்லிய வார்த்தையை மறந்தார். அவர் சுபாவம் அப்படித்தான். அறுபதினாயிரம் கோபிகா ஸ்திரீகளை வஞ்சித்து அவர்களைப்பரிதவிக்கச்செய்யும் தன்மையுடையவருக்கு என்னை வஞ்சித்துப் போவது பெரிதா? நான் உயிருடன் வாழவேண்டுமானால் என்னைப் பண்டரிபுரம் கொண்டுபோய்ச் சேருங்கள்" எனப் பிதற்றினாள்.

தோழியாகிய ராதா, சக்குபாய் சொல்லியவற்றையெல்லாங் கேட்டு, தனக்குள்ளே, "நாம் இவளுக்கு சகியாய் அமைந்ததற்கு இவள் தாய் தந்தையர்கள் நம்மைக் கொண்டாட இவளை வழிப்

படுத்திவிடுவோம்'' என நினைந்து, ஒரு யுக்தி செய்தாள். அதாவது, சக்குபாய்க்கு தூது செல்லுவது என்றும் பண்டரிநாதன் கொடுத்த பிரசாதம் 'இது' என்றும், பண்டரிநாதனைக் கண்டு இவள் செய்தியைத் தெரிவித்தேனென்றும் அவர் சொன்ன வார்த்தை 'இது' என்றும் இவளிடம் சொல்லி, இதற்குச் சமயோசிதம்போல் நடித்து, இவளை வசமாக்கிவிடலாம்; இந்த யுக்தியே தான் சரியானது என்று நினைத்து, சக்குபாயைப் பணிந்து, "அம்மணீ! உம்முடைய மகிமை தெரியாமல் உமக்கு ஜடாமுனி பிடித்துக்கொண்டதென்று நினைந்து வருந்திக் கொண்டிருக்கிறார்கள். நீ ஒன்றுக்கும் வருந்தவேண்டாம். உனது தாய் தந்தையர்கள் மகிழும் வண்ணம் நடந்துகொள்ளும். நான் பண்டரிபுரம் சென்று விட்டல் நாதனுக்கு தண்டம் சமர்ப்பித்து உனது பரிதாபநிலைமையை அவரிடம் சொல்லி, உன்னிடம் அழைத்துக் கொண்டு வருகிறேன். நான் வரும்வரை உனது தாய் மனமுவப்ப சந்தோஷமாய்ப் பேசி விளையாடிக்கொண்டிரு'' என அவள் மனம் தேறுதலடையுமாறு சொன்னாள்.

சக்குபாய் தன்மனம் ஆறுதலடையத் தனது தோழி கூறிய இனிய வார்த்தைகளைக் கேட்டு மகிழ்வடைந்து அவளை இனிது நோக்கி, "என் அன்பான சகி! எனக்கு உன்னைத் தவிர வேறு கதியற்றவளாயிருக்கிறேன். நான் பண்டரிநாதன் சரணாரவிந்தத்திற்கே ஆட்படுமாறு சேர்த்து வைத்தால், நீயே யெனக்குத் தந்தையும் தாயும் குருவுமாவாய். நீ சொல்லிய வண்ணம் எனது தாய் தந்தையரிருவரும் மகிழ நான் நடந்துகொள்ளுகிறேன். நீ தயவுசெய்து பண்டரிபுரம் போய் எனது குறைகளை அவரிடம் சொல்லி என்னை அவர் அணுகும்படி நீ அவரை அழைத்து வரவேண்டும்'' என்று சக்குபாய் ராதாபாயிடம் சொன்னாள். உடனே அவள், அவள் வார்த்தைக்குக் கீழ்ப்படிந்தவள்போல "இதோ பண்டரிபுரம் போகிறேன்'' எனச் சொல்லி விரைவுடன் மேல்மாடியிலிருந்து கீழேயிறங்கி கவலைக்கடலில் ஆழ்ந்திருந்து அன்னாகாரம் இல்லாது சோர்ந்து கிடக்கும் கமலாபாயிடம் வந்து, "தாயே! உமது குமாரிக்குப் பிடித்திருந்த சடாமுனியை நான் ஓட்டிவிட்டேன்; நீங்கள் போய் உங்களுடைய குமாரிக்கு வேண்டிய இதங்களைச் செய்து கொண்டிருங்கள். நான் அந்த சடாமுனிக்கு சிலவு அன்னியில் கழிப்பு கழித்துவிட்டு வருகிறேன். நான்வர இன்னும் மூன்று நாள் செல்லும். அதுவரை உமது குமாரியாகிய சக்குபாய் உம்முடன் உற்சாகமாய்ப் பேசி விளையாடிக் கொண்டிருப்பாள்'' என்று சொல்லி, கமலாபாயை சக்குபாயின் மேல் மாடிக்கு அனுப்பிவிட்டுத் தான் தன் வீட்டில் வந்து மூன்று நாள் தாமதித்திருந்து, நான்காவது நாட்காலையில் எழுந்து தீர்த்தமாடி, திருமண் காப்பிட்டுக்கொண்டு மடியான புடவையை உடுத்தி, ஒரு தட்டிலே தீர்த்தம் திருத்

துழாய்மாலை அபயஸ்தம் முதலியவற்றை வைத்துக்கொண்டு ஒரு மடியான திருப்பரிவட்டால் மூடி "ஜேஜே விட்டல், ஜேஜே விட்டல்'' என்று ஆடிப் பாடிக்கொண்டு கங்காதரராவின் வீடு வந்து சேர்ந்தாள். சக்குபாய் தன் சகியான ராதாவானவள், ஆடிப்பாடி பண்டரிநாமம் சொல்லி வருவதைக் கண்டு எதிரே ஓடிவந்து சாஷ்டாங்கமாகத் தண்டம் சமர்ப்பித்துத் தானும் அவளுடன் சென்று தானும் கைகொட்டி கூத்தாடும் பொழுது, ராதாபாய் தன் எசமானியாகிய கமலாபாயைப் பார்த்து குறிப்பாகக் கீழேபோகுமாறு செய்தாள். கமலாபாயானவள் ராதாவின் இங்கிதத்தைத் தெரிந்து கீழே சென்றாள். அப்பொழுது, ராதாவானவள், சக்குபாயைப் பார்த்து, "உம்முடைய அனுக்கிரகத்தால் பண்டரிநாதன் சேர்வை கிடைத்தது. நான் செய்ததவமே தவம். என்ன சேவை. என்ன! ஆ! இப் பண்டரிநாதனுடைய சேவையிலே ஈடுபட்டவர்கள் திரும்பவும் மண் பொன் பெண் ஆசையில் மயங்குவாரா! நான் பண்டரிநாதனை அடைந்து பரமபதம் சேருவதற்கு நீர்தான் ஆசாரியராயினீர்'' என்று சொன்னாள்.

இவ் வார்த்தைகளைக்கேட்ட சக்குபாய் ராதாவைப் பார்த்து, "தோழி! நீ பண்டரிபுத்திரத்திற்குப் போய் எனது நாயகரைப் பார்த்தாயா? அவரிடம் எனது துயரத்தைச் சொன்னாயா? நீ போனகாரியம் பழமாயிற்றா? என்ன ஆயிற்று'' என அவசரத்தோடு கேட்டாள். அவள், "அம்மா! ஆரமுதே! உம்முடைய வைராக்கியமான பக்தியை யென்னென்று சொல்லுவேன்! நான் பண்டரிபுரம் போனதும், பீமநதியில் தீர்த்தமாடி சன்னதியை பிரதக்ஷணம் செய்து பகவானைச் சேவிக்கச் சென்றேன். அப்பொழுது என் முன்னே ஒரு சோதி தோன்றிற்று. அந்தச் சோதியைப் பார்த்துக்கொண் டிருக்கும்பொழுது, உமது நாயகன் அந்தச் சோதியிலிருந்து வெளிப்பட்டார். அவரை நான் சாஷ்டாங்க நமஸ்காரம் செய்து இருகரங்களையும் குவித்துத் தோத்திரம் செய்தேன். அப்பொழுது பண்டரிநாதராகச் சேவை தந்துக்கொண்டிருந்த பாண்டுரங்கன் தம்பூரும் சிப்பளாவும் ஏந்திய கைகளுடையவராய் என் முன்னே நின்றார். நான் அவர் திருவடிகளில் விழுந்து உமது நிலைமையை எல்லாம் சொன்னேன். அவர் சிரித்துக்கொண்டு "ராதா! சக்குபாயின் வைராக்கியமான பக்தியை நான் அறிந்தேன். இன்னும் ஒரு மாதத்தில் நான் அவளைப் பார்க்க வருகிறேன். நான் அவளைக் கனவிலும் மறவாமலிருப்பதாக நீ அவளிடம் சொல். இந்தப் பிரசாதத்தைக் கொண்டுபோய்க் கொடு என்று என்னிடம் தந்தார்'' என்று சொல்லிவிட்டு, அந்தத் தட்டிலிருந்த தீர்த்தம் திருத்துழாய் அபய அஸ்தம் திருமாலை இவைகளைச் சக்குபாயிடம் கொடுத்து, 'பெற்றுக்கொள்ளும்' என்று மிக்க வணக்கமாய்ச் சொல்லி, பின்னும் "உமக்கு பக்குவம் வந்த

பின் அவரே வந்து உம்மை ஏற்றுக்கொள்ளுவதாகவும் சொன்னார். அன்றியும், நீ இவ்வாறு வைராக்கியமாய் இருக்கவேண்டுவதில்லை. தீர்த்தமாடி ஏதோ சிறிதுநேரம் எனது அஷ்டாக்ஷரத்தை ஜெபம் செய்துக்கொண்டிருந்தால் அதுவே போதுமானது என்பதாகவும் திருவாய் மலர்ந்தருளினார். அம்மா! நான் உனக்குத் தோழியாகாமல் போனால், பண்டரிபுரத்திலிருந்து இந்தக் கஞ்சுணீ நகரத்திற்கு வரவேமாட்டேன். உனக்கு ஊழியம் செய்யும் வேலையில் நான் அமர்ந்துகொண்டதினால், உனக்குத் துரோகம் செய்யப்படாதே யென்றுதான் பண்டரிநாதனைப் பிரிந்து வந்தேன்" என்று சொன்னாள்.

சிறுமியான சக்குபாய், ராதா சொல்லியவற்றையெல்லாம் கேட்டு உண்மைதானென்று நினைந்து, காலை மத்தியானம் மாலை என்னும் மூன்றுகாலங்களிலும் திருமந்திரத்தைத் தியானித்து உள்ளமுருகி பரவசமடைந்து தியானம் செய்தநேரம் தவிர, மற்றையநேரங்களில் சாதாரணமாய்ப் பேசிக்கொண்டும் தாய் தந்தையர்களை ஆதரித்து விளையாடிக்கொண்டும் இருப்பாள். இப்படி இருக்கும்பொழுது, இவளுக்கு வயது பத்தாயிற்று. ராதாவானவள் இடை இடையே தான் பண்டரிநாதனைச் சேவித்ததாகவும் சக்குபாயைத் தன் சரணாரவிந்தத்தில் ஆட்படுத்திக்கொள்ளுவதாகத் தன்னிடம் சொன்னதாகவும் சொல்லி சக்குபாயைச் சமாதானப்படுத்தி வந்தாள். பிராமண தர்மப்படி எட்டாவது வயதிலேயே விவாகம் நடக்கவேண்டியதாயிருக்க, வயது பத்தாகியும் விவாகம் ஆகாததினால் கங்காதரராவ் கவலைக் கடலில் ஆழ்ந்தார். ஒரு வீட்டில் ஒரு பெண் கன்னிகையாயிருந்தால், அந்தப் பெண்ணுக்குடைய ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு விஷயத்தில் கவலை ஏற்படுவது சகஜம். என்னவென்றால், பெண்ணைப் பெற்ற பிதாவானவன் நம் குழந்தைக்கு வாய்க்கும் நாயகன் நான்கு எழுத்து படித்தவனாக இருக்கவேண்டும் என்ற கவலையிலிருப்பான். தாயானவள் மாமி வீடுசென்றால் மாமி நாத்தி இவர்களின் துன்பத்திற்கு ஆளாகாமல் அரைவயிறு கஞ்சிக்கு வழியுள்ள இடமாகக் கிடைக்கவேண்டும் என்ற கவலையுடையவளாயிருப்பாள். பந்துக்களோவெனில், நல்ல குலத்தில் பிறந்தவனாகவும், நல்ல கோத்திர முடையவனாகவும் இருக்கவேண்டும் எனக் கவலைப்படுவார்கள். பெண்ணோவென்றால், கைநிறைந்த பொருளையுடையவனைப் பார்க்கிலும் கண் நிறைந்த கணவன்தான் வேண்டுமென்னும் கவலையுடையவளாயிருப்பள். ஒவ்வொரு குடும்பத்திலும் ஒரு பெண் இருந்தால், இதுபோல் கவலை ஏற்படுவது சகஜமாயிருக்க, கங்காதரராவ், அவர் பத்தினியாகிய கமலாபாய், இவர்களின் நெருங்கிய பந்துக்கள் இவர்களுக்குக் கல்வி செல்வம் குலம் கோத்திரம் அழகு இவைகளுடைய ஒரு மருமகன் தன் மகளுக்கு வாய்க்கவேண்டுமென்கிற கவலை சிறிதுமில்லாமல் எப்படியாவது வருகின்ற மருமகன் மூடனாய் தரித்திரனாய் குலயீனனாய் குருபியாய் இருந்தாலும் சரி, நமது பெண்ணைக் கட்டிக்கொண்டால் போதுமென்னும் நினைப்புடையவராய் எப்பொழுதும் இதே கவலையில் ஆழ்ந்திருந்தார்கள். தான் சென்று ஒரு மருமகனைத் தீர்மானிக்க யாரிடமாவது போகலாமாவென்று சில சமயம் நினைத்தாலும், அவர்கள் "அடே கங்காதரா! நீ உன்னுடைய பேய்மகளை எங்கள் வீட்டில் விரட்டலாமென்று நினைத்து எங்களை மோசம் செய்ய வந்தாயோ" என்று கேட்டால் யான் என்ன செய்வேன்! ஐயோ என வருந்துவர். ஈசன் விட்டபடியே ஆகட்டும். எவனாவது ஒருவன் வந்து கேட்டால் அவனிடத்தில் நமது பெண்ணை தாரைவார்த்துக் கொடுப்போம் எனக் கடைசியாய்த் தன் மனதைத் திடப்படுத்திக்கொண்டு இருந்துவிட்டார்.

இவ்வாறிருக்குங் காலத்தில், கஞ்சுணீ நகரத்திற்கு ஒரு காதவழியிலிருக்கும் ஒரு அக்கிராரத்திலே பிறந்தவனாய் துவைதம் என்னும் மத்துவ மதாசாரியர் திருவடி சம்பந்தியாய், காசிப குலத்திலே பிறந்ததால் காசிபகோத்திரி என்று அழைக்கத் தகுந்தவராய் உள்ள பிரம்மசாரியானவன், கஞ்சுணீபுரத்திற்கு வந்து "பவதிபிக்ஷாம் தேகி" என்று சொல்லிக்கொண்டு வீடு வீடாக நுழைந்து மாதுரம் எடுத்து வருவானாயினன். இவன் இவ்வாறு வீடு வீடாய் நுழைந்து அன்னம் ஏற்றுவரும் பொழுது, கங்காதரராவின் அம்மான் மகனாகிய நாராயணராவென்பவர் வீட்டுக்கு வந்ததும் நாராயணராவென்பவர் அந்தப் பிரம்மசாரியைப் பார்த்து, அவன் வைதீக ஒழுக்கத்தைக் கவனித்து கங்காதரராவின் புத்திரியான சக்குபாயை யெப்படியாவது இவன் காலில் கட்டிவிடவேண்டுமென்று நினைத்து, அவன் குலம் கோத்திரம் சூத்திரம் முதலியவெல்லாம் விசாரித்து கங்காதரராவின் கோத்திர சூத்திரங்களுக்கு ஒத்திருப்பதைக் கண்டு அவனைத் தன்னுடைய கிரகத்திலேயே யிருக்கச் செய்து, கங்காதரராவினிடம் சென்று "அத்தான்! உமது குமாரியாகிய சக்குபாய்க்கு நான் ஒருவனை விசாரித்து வந்திருக்கிறேன். என்ன சொல்லுகிறீர்?" எனக் கேட்டார். இதைக் கேட்டதும், பிறவிக் குருடனுக்குத் திடீரென்று கண்கள் திறந்தால் எப்படி அவன் ஆனந்தமடைவனோ அதுபோல ஆனந்தத்தோடு எழுந்து, நாராயணராவைத் தழுவிக்கொண்டு, "நீர்தான் என் குழந்தைக்குக் கலியாணம் செய்து வைக்கவேண்டும். அந்த வரன் எங்கே யிருக்கிறான்?" எனக் கேட்டார். உடனே நாராயணராவ் கங்காதரரைப் பார்த்து, "அத்தான்! இப்பொழுதே அந்த வரனை அழைத்து வருகிறேன்" என்று சொல்லிவிட்டுத் தன் வீட்டுக்கு வந்து "அப்பா! உன் பெயரென்ன? உனக்கு இன்னும் கலியாணம் ஆகவில்லைபோ லிருக்கிறது? பெரிய தனவந்தர் குமாரியாகவும், மிக்க அழகுடையவளாகவும், நல்ல குணவதியுமாயிருக்

கிற ஒரு பெண்ணை உனக்கு விவாகம் செய்துக் கொடுத்தால் அதற்கு நீ சம்மதப்படுவாயா? சொல்'' எனக் கேட்டார். இந்த வார்த்தையைக் கேட்டதும், 'நம்மை இவர் பரிகசிக்கின்றார்' என நினைத்து, "சுவாமி! நான் ஒரு ஏழை. எனது இளம்பிராயத்திலேயே தாயும் தந்தையும் இறந்துபோயினர். நான் கனந்தம் அத்தியானம் பண்ணியிருக்கிறேன். பிரம்மசரிய ஆஸ்ரம தர்மப்படி மாதுரம் எடுத்து எனது வாணாளைக் கழித்துக்கொண்டு வருகிறேன். என்னைப் பரிகசிக்காதீர்கள்'' என்று சொன்னான். நாராயணராவ், "நான் உம்மைப் பரிகசிக்கின்றேனென்று நினைக்கவேண்டாம். உமது குலம் கோத்திரங்களை நீரே என்னிடம் சொன்னீரல்லவா? அதினாலும் உம்முடைய வைதீக ஒழுக்கத்தினாலும் உமக்கே எங்கள் குலக்கொழுந்தாய் பிறந்த பெண்ணைக் கொடுப்பதென்று தீர்மானித்தோம். நீர் ஏழை என்பதை நாங்கள் கவனிக்கமாட்டோம். பெரிய சக்ரவர்த்திகள் தங்கள் சிலவிற்குக் கடன் வேண்டுமானால் எங்களிடம்தான் வருவார்கள். எங்கள் செல்வத்தையே கொட்ட இடமில்லாமலிருக்கும்பொழுது, உமது செல்வத்தையா நாங்கள் எதிர்பார்க்கப் போகிறோம். இல்லை. உமக்குச் செல்வம் இருந்தாலும் சரி, இல்லாது போனாலும் சரி, அவசியமில்லை. உமது ஆசாரமும் ஒழுக்கமுமே எங்களுக்குக் கோடி விராகன்'' என்று நாராயணராவ் சொன்னார். இந்த வார்த்தையைக் கேட்டதும் பிரமசாரி உண்மைதான் என்று நினைத்து, "உங்களுக்கு விருப்பமிருந்தால் அதற்கு நான் சம்மதிக்கிறேன்'' என்று சொன்னான். உடனே நாராயணராவ் கங்காதரராவிற்குத் திருப்தியுண்டாக உயர்ந்த வஸ்திரத்தையெடுத்துக்கொடுத்து அதை உடுத்தச்சொல்லி, கடுக்கன் காப்பு அரைஞாண் முதலிய விலையுயர்ந்த ஆபரணங்களை அந்தப் பிரமசாரியரான பிராமணனுக்கு அணிந்து அவனைத் தன் கையில் பிடித்துக்கொண்டு கங்காதரராவின் வீட்டுக்கு வந்து சேர்ந்தார். நாராயணராவ் தன் பெண்ணுக்கு வரனைத்தேடி அவ்வரனையும் அழைத்துக்கொண்டு வந்ததும், கங்காதரராவ் தனக்கு மருமகனாக வரும் மருமகனைக் கண்டு அவன் அழகையும் வைதீக ஒழுக்கத்தையும் பார்த்து மகிழ்வடைந்து இருவரையும் உட்காரச் செய்து "நமது குழந்தை சக்குபாயை இவருக்கு விவாகம் செய்து கொடுக்கும் சம்மந்தமான விஷயத்தில் எனக்கும் என் மனைவியான கமலாபாய்க்கும் பூர்ண சம்மதம்'' எனச் சொன்னார்.

மருமகனாக வந்த ராமாராவ், கங்காதரராவைப் பார்த்து "இவர் செல்வத்திற்கும் நம்முடைய ஏழ்மைத்தனத்திற்கும் உள்ள வித்தியாசத்தைப் பார்த்தால், மேருவுக்கும் அணுவுக்கும் உள்ள வித்தியாசம் இருக்கிறதே! இவர் என்னை வரனாக வரித்தால் இதில் ஏதாவது காரணமிருக்க வேண்டும்? என்னவாயிருக்கலாம்? பெண் குருடு செவிடு ஊமை முதலிய குற்றங்களில் ஏதாவது

ஒன்றையுடையவளாகயிருக்கலாமா? அல்லது ஒருவனுக்கு விவாகம் செய்து கொடுத்து அவன் இறந்துபோக பால்யத்தில் விதவையாய்த் தன் குமாரி ஆய்விட அவள் துயர்கண்டு பொறுக்க முடியாமல் புனர்விவாகம் செய்ய உத்தேசித்திருப்பரோ! ஒன்றுந் தெரியவில்லையே. ஆனால், ஒன்று செய்வோம். பெண்ணை அழைத்துவரச்சொல்லிப் பார்த்தால் முதலில் சந்தேகந் தீர்ந்துவிடும். அதன்பின் நாம் விவாகத்திற்கு ஒப்புக் கொண்டாலும் இரண்டாவது சந்தேகத்தை அக்கம்பக்கங்களில் விசாரித்து இவளுக்கு விவாகமாகாதிருந்தால் நாம் விவாகம் செய்து கொள்வோம். எனத் தனக்குத் தானே நினைந்து கங்காதரராவிடம் "உமது குமாரியை நான் பார்க்கவேண்டும்'' எனக் கேட்டார். கங்காதரராவ், உடனே ராதாவென்னும் தோழியை அழைத்து, சக்குபாயை அலங்கரித்து இங்கே அழைத்துக்கொண்டுவா'' என உத்திரவு செய்தார். உடனே ராதாவானவள் மேல் உப்பரிக்கை சென்று பார்க்கும்பொழுது, சக்குபாய் தன்னை மறந்து இருகரங்களையும் தலையின்மேல் குவித்துக்கொண்டு பண்டரிநாதன் திருவடியில் சித்தத்தை வைத்து, மெய் மயிர்சிலிர்ப்ப, கண்களிலிருந்து ஆனந்தநீர் பெருக, உட்கார்ந்துக் கொண்டிருந்தாள். ராதாவானவள், இவளுடைய உடை பெட்டியையும் நகைப் பெட்டியையும் திறந்து தலையில் வைத்துப் பின்னவேண்டிய ராகுடி வைத்துப்பின்னி, அணிந்த ஆபரணங்கள் போக, அநேக ஆபரணங்களை அவளுக்கு அணிந்து அரையில் அவள் உடுத்தியிருந்த பாவாடைக்குமேல் சரிகைவேலை செய்த பாவாடையை உடுத்தி, அவள் மார்பில் ரவிக்கை அணிந்து, இழை ஆயிரம் பொன் பெறும் பீதாம்பர தாவணியை மேலேபோர்த்தி, மெல்ல அவளைத் தூக்கி நிறுத்தவும் அவள் தன் அறிவு அடைந்தாள். தனக்கு அலங்காரம் செய்திருப்பதைத் தெரிந்தாள். தன் முன்னே நின்று கொண்டிருக்கும் தன் தோழியான ராதாவைப் பார்த்து, "ராதா! இன்று எனக்கு இவ்வளவு அழகாய் அலங்காரம் செய்திருப்பதெதற்கு? காரணம் என்ன? இப்பொழுது நான் என்ன சந்தோஷத்திற்காக ஆபரணங்கள் அணியவேண்டும்? நாதனைப் பிரிந்து வருந்தும் நங்கையர்க்கு ஆபரணமும் வேண்டுமோ? இவை எல்லாம் எனக்கு எதற்கு?'' எனக் கேட்டாள். இவ்வார்த்தையைக் கேட்ட ராதாவானவள், 'என் அம்மணி! உமது நாதன் கீழே வந்திருக்கிறார்; உமது பிதா உம்மை அலங்காரஞ்செய்து அழைத்துவரச்சொன்னார். நீர் விரைவாக வரவேண்டும்'' எனக் கூறினாள். இதைக் கேட்டதும் சக்குபாய், "அடி! சகி! நீ சொல்வது உண்மைதானா? எனது நாதன் வந்தாரா? என்னிடம் அவருக்குக் கருணை வந்ததா? அடி! ராதா! போவோம் வா'' எனச் சொல்லிக்கொண்டே ராதாவின் கையைப் பிடித்துக்கொண்டு, உல்லாசமாகப் பேசிக்கொண்டு, திவ்வியாங்க சுந்தரியான சக்கு

பாய் இறங்கி வருவதைக் கண்ட கமலாபாய், அகமகிழ்ந்து, தனது குமாரியான சக்குபாயைத் தூக்கித் தனது உட்கலையில் வைத்துக்கொண்டு தனது நாயகனிருக்கும் இடத்திற்கு வந்தாள். சக்குபாயானவள் பிதாவினிடம் வந்ததும், தாயின் இடையிலிருந்து இறங்கி தனது சேடியான ராதாவினிடம் ஓடிச் சென்று அவள் கையைப் பிடித்துக்கொண்டு "எனது நாயகர் வந்தாரென்று சொன்னாயே? அவர் எங்கே?" எனக் கேட்டாள். அப்பொழுது ராதாவானவள், அங்கு ஒரு ஆசனத்தில் அமர்ந்திருக்கும் ராமாராவென்னும் பிரமசாரியைக்காட்டி "உனது கணவன் இவர் தான்" என்று காட்டினாள். சக்குபாய் அவள் காட்டியவனைப் பார்த்து, அளவுகடந்த கோபமுடையவளாய்க் கண்களில் தீப்பொறிபறக்க விழித்து "அடி! ராதா! நீ என்னை மோசம் செய்தாயே. ஒருமலையின் குகையில் படுத்துத் தூங்கிக் கொண்டிருந்த ஒரு சிங்கமானது அம்மலையிலிருந்து கர்ச்சித்து வளைந்து நிமிர்ந்து எழுந்து வருவதுபோலும் என் முன்னே வரும் நாயகனை மணந்த நான், சுனங்கன்போன்ற இவனை நோக்குவனோ?" என்று சொல்லித் தனது மேல்நிலை மாடத்தில் விரைவாக ஏறி ஒரு சோப்பாவில் போய்ச் சாய்ந்தாள்.

சக்குபாய் பேசியவார்த்தைகளைக்கேட்ட ராமாராவான பிரமசாரியானவர், "சரி, நான் நினைத்தது போலேவே இருக்கிறது. இவளுக்கு முன்னமே கலியாணமாய்விட்டது. இவள் நாயகன் இறந்து இவள் விதவையாக இருக்கவேண்டும்.' இல்லையேல், இவள் நாயகன் தேசாந்திரியாக யாத்திரை சென்றிருக்க வேண்டும். அவன் சென்றதும் இவள் தாய்தந்தையர்கள் இவளுக்குப் புனர்விவாகம் நடத்த விரும்பி யிருக்கவேண்டும். இவள் நமக்கு உதவாது" என்று நினைத்து, தான் உடுத்தியிருந்த வஸ்திரத்தையும் அணிந்திருந்த ஆபரணங்களையும் கழட்டி நாராயணராவிடம் கொடுத்துவிட்டு நாராயணராவ் வீடு சேர்ந்து தன் உடையை உடுத்தி பிக்ஷாபாத்திரத்தை யெடுத்துக்கொண்டு "பவதி பிக்ஷாந் தேகி" என்று சொல்லி நடந்தார்.

ராமாராவ் இவ்வாறு நடந்ததும், கங்காதரராவ், "ஐயோ! என் தலைவிதி இவ்வாறாயிற்றே" என்று சோர்ந்து ஒரு சோப்பாவில் சாய்ந்து விம்மி விம்மி அழுதுகொண்டு பிரலாபித்தார். கமலாபாய் அடைந்த சோகத்தைச் சொல்லவொண்ணாது. இந்த நிலையில் சக்குபாய் ராதா செய்தது எல்லாம் மோசம் என்று நினைத்து அவளையும் நம்பாமல் எப்பொழுதும் பண்டரிநாதனையே பஜித்துக்கொண்டு அவர் வருவார் என்று எதிர்பார்த்துத் தோத்திரம் பண்ண ஆரம்பித்தாள். "என் தனிப் பெருந்தலைவா! முன்னொரு காலத்தில் மயங்கி உம்மை அறியாது வழக்குத்தொடுத்து உமது திருவுள்ளத்தை நோவச் செய்வதற்காக, இந்தப்பேதையை ஆட்கொள்ளப்படாதென்கிற நினைப்போடு என்னை மறந்தீரா? எனக்கு

நீர் வருவதாக வாக்குசொல்லிப் போனீரே? வேதங்கள் உன்னை மெய்யன் என்று கோஷிக்கின்றதே? மெய்யனான நீர் அடியாள் விஷயத்தில் மாத்திரம் கருணைவையாது பொய்சொல்லத் துணிந்தீரா! ஐந்து நாளில் வருகிறேனென்ற நீ, ஐந்து வருஷம் கழிந்தும் வாராதுபோனால் நான் எத்தனை நாள் உம்மைப் பிரிந்திருப்பேன் என்று பலவாறு எண்ணிச் சோர்வாள். அன்றியும், எனக்குப் பருவம் வராதகுறையாலோ, பழவினையின் சம்மந்தத்தாலோ, என்னை விட்டு நீங்காமையினாலோ, மண் பொன் என்னும் இருவகை மயக்கமும் என்னைத் தொடர்வதினாலேயோ, அல்லாமல் யானென்னும்அகந்தை என்னிடம்குடிகொண்டிருப்பதினாலேயோ உனது கருணை அடியாளுக்குக் கிடைக்காதுபோயிற்று. தனிப் பெருந்தலைவரே! நீரே ஆசாரியராய் எழுந்தருளி இன்னது செய்யென்று ஏவிய நிலையில் நான் மாறவில்லையே! அன்புடைத் தலைவர் மோக்ஷம் முதலிய இச்சையெல்லாம் தன்னை அடைந்தவர்க்கு அருளும் சர்வேஸ்வரனுக்கு அடிமைப்பட்டனே. இனி எந்த எந்த சமயத்தவர்கள் வணங்கும் தேவர்களையும் நான் மதிக்கமாட்டேனென்று என் சேடியோடு அகந்தை பேசிய தன்மையினாலோ, அல்லாமல் வேதங்களும் காண்பதற்கரிய நின்னை, ஐந்து வயதுவடைய நான் கண்டேனென்று கர்வங் கொண்டேனே, அதனாலோ நீர் என்னை மறந்தீர்" என்று பலவாறு தியானித்துக் கொண்டிருந்தாள்.

சக்குபாய்க்கு வயது பன்னிரண்டாயிற்று. கங்காதரராவ் தன் குழந்தைக்கு வயது பன்னிரண்டு ஆனதும், எந்த நிமிஷம் பிறவிடை அடைந்து விடுவாளோவென்று எண்ணி சோர்ந்தார்; துயர்க்கடலுள் ஆழ்ந்தார். "இவள் நமக்குப் புத்திரியாய்ப் பிறந்து நமது மானத்தைக் கெடுத்தாள். நான் பிறர் முகத்தில் தலை நீட்ட முடியாதபடி செய்தாள். ஊரெங்கும் என் பேச்சாகவேயிருக்கிறது. எவன் கையிலாவது ஒப்புவித்துவிடலாமென்றால், நமது பத்திராசலம் தாலூக்கா பூராவும் சக்குவின்குணம் பரவியிருக்கிறதே. இந்த நிலையில் இவள் பிறவிடை அடைந்துவிட்டால், நமது சாதியிலுள்ளவர்கள் நம்மை சாதிக்கட்டிலிருந்து விலக்கிவிடுவாரே என்ன செய்வது! என்ன நம்விதி" என்று சதாகவலைக்கடலில் ஆழ்ந்தவராக இருந்துகொண்டிருந்தார்.

சக்குபாய்க்கு விவாகம் நடந்த அத்தியாயம்

சக்குபாயின் மாதா பிதாக்கள் கவலைக்கடலுள் ஆழ்ந்திருக்கும் சமயம், சிந்துதேசத்தில் லோகார்ணவம் என்னும் பட்டணத்திலே பிராமண குலத்திலே மத்துவ மதத்திலே பிறந்தவன். விஸ்வாமித்திர கோத்திரி. இவன்பிறந்த கோத்திரத்திற்கு ஏற்ப, மிகுந்த கோபமும், தான் என்னும் அகந்தையும் படைத்தவன். வஞ்சனையே திரண்ட வடிவினன். பாமலோபி. மூர்த்திராவ் என்

னும் பெயருடையவன். இவனுக்கு இவன் தேசத்தில் யாரும் பெண் கொடுக்க மறுத்தனர். இவனுடைய சுபாவங்களையாவது, நல்ல சாமர்த்தியமுடைய ஒரு ஸ்திரீ தனது சாதுர்யத்தால் மாற்றலாமென்றால், இவன் தாயின் கொடுமை சாற்றவொண்ணாது. இவனுக்கு இரண்டு சகோதரிகள் உண்டு. அவர்கள் மூன்று வயதில் தாலிகட்டி, நான்கு வயதில் நாயகனைக் கொன்று விதவையானவர்கள். ஊர் வம்பு என்று செடியை மூன்றுமுறை நீர் பாய்ச்சி வளர்க்கும் உத்தமிகள். இதையெல்லா முணர்ந்த சிந்து நாட்டினர், இவன் ஒருவன் மணமகனாக எண்ணத் தகுந்தவன் என்பதை மறந்தனர். தாயும் தமக்கைகளும் எத்தனையோயிடம் சென்று பெண் பார்த்தும் ஒன்றும் நடக்கவில்லை. இவன் தாயிடம் வெறுப்புக்கொண்டு, "நானே கலியாணம் செய்துக்கொண்டு வருகிறேன்" என்று சொல்லிவிட்டு ஊர் ஊராய்த் திரிந்து, கடைசியாக கஞ்சனூர் நகரம் வந்து அங்குள்ள அன்ன சத்திரத்தில் சாப்பிட்டுவிட்டு சற்றுநேரம் படுத்து நித்திரை செய்து எழுந்து, சத்திரத்து சமையல்காரனிடம்போய் உட்கார்ந்துக்கொண்டு, "சுவாமிகளே! இந்த ஊரில் ஏதாவது கன்னிகையிருக்கிறதா?" என்று கேட்டான். சமையல்காரனான கிருஷ்ணையர் எப்பொழுதும் கங்காதரராவிடம் உதவிபெற்று வாழ்பவராதலால் மூர்த்திராவைப் பார்த்து, "ஐயா! உமது குலம் கோத்திரம் இதுகளைச் சொன்னால், அதற்குத் தக்க பெண்ணைப் பார்க்கலாம்" என்று சொன்னான். மூர்த்திராவ், நல்லது, சொல்லுகிறேன் கேளுங்கள். நான் இருப்பது சிந்துதேசத்திலே லோகார்ணவம் என்னும் ஊரில் பிறந்தவன். மாராஷ்டிர சாதியில் பிறந்து மத்வமதத்தைச் சார்ந்தவன். எனது கோத்திரம் விஸ்வாமித்திர கோத்திரம். கொஞ்சம் நிலம் செல்வம் இவைகளும் உண்டு" என்று சொன்னான். சமையல்காரனான கிருஷ்ணையன், "நல்லது, இந்த ஊரில் கோடீஸ்வரராய் விளங்கிவரும் ஒருவர், கங்காதரராவ் என்பவர், ஒரு பெண் குழந்தையை வைத்துக்கொண்டிருக்கிறார். அவளுக்கு வயது பன்னிரண்டாகிறது. இன்றைக்கோ நாளைக்கோ ருதுவாய்விடுவாள் என்று நினைக்கும்படியாய் இருக்கிறாள். அழகிலோ இலக்ஷ்மிக்கு நிகரானவள். அவளை மணம்புரிந்து கொண்டவன் பாக்கியமே பாக்கியம். கங்காதரராவின் செல்வந்தான் என் செல்வம்! அவ்வளவு செல்வமும் பெண்ணை மணம் செய்து கொண்டவனே அடைகிறான் என்றால், அவன் செய்த பூசாபலம் சாமான்னியமானதா? நீரே கவனியும்" என்று கிருஷ்ணையர் சொன்னார். மூர்த்திராவ் நான் அந்தப் பெண்ணை விசாரிக்கலாமா" எனக் கேட்டான். கிருஷ்ணையர், "அய்யா! அது பெரியயிடத்துக் காரியம். நேரில் சென்றால் நடவாது. வேறு யாராவது மனிதர்கள் மூலமாய் விசாரித்து விஷயத்தைத் தெரிந்து கொள்ளவேண்டும். இந்தப் பத்திராசலம்

தாலூக்காவில் எத்தனையோ ஜமீன்தார்கள் உங்கள் சாதியில் இருக்கிறார்கள். அவர்கள் கங்காதரராவிடம் 'நமது மைந்தனுக்கு உமது புத்திரியைக் கொடும்' என்று எப்படி கேட்பதென்று பயந்து இருந்துவிட்டார்கள். இந்த சாதியர்கள் ஒரு வைராக்கிய முடையவர்களாதலினால், யாராவது வந்து கேட்டால், கொடுப்போமென்று எண்ணி யிருக்கிறார்கள். ஏதோ உனக்கு நல்ல அதிர்ஷ்டமிருந்து விவாகம் நடந்துவிட்டால் நீதான் ராஜா" என்று கிருஷ்ணையர் சொல்லி, இவனிடம் பணம் பறிக்க விரும்பினார்.

மித்துரு மூர்த்திராவ் பரம லோபியாயிருந்தாலும், "இவன் இந்தக்கலியாணத்தை முடித்துவைத்தால் இவனுக்கு ரூபாய் ஆயிரம் கொடுக்கலாம்" என அவனுக்குள்ளே தீர்மானம் செய்துக்கொண்டு கிருஷ்ணையரைப் பார்த்து, "சுவாமி! நான் நேரில் சென்றால் காரியம் கெட்டுவிடு மென்கிறீர்களே. வாஸ்தவந்தான். எனக்காக கங்காதரராவிடம் பேசுவதற்கு ஒருவரும் இல்லையே என்ன செய்கிறது? இதற்கு நீங்கள் தான் செல்லவேண்டும்" என்றான். கிருஷ்ணையர், "அந்தக் கவலை உனக்கு வேண்டியதில்லை. நான் உனக்கு என்ன பாடுபட்டாவது கங்காதரராவின் குமாரியைக் கலியாணம் செய்துவைக்கிறேன். கலியாணம் முடிவடையும் பக்ஷத்தில் நீ எனக்கு என்ன தருகிறாய்? எனக் கேட்டதும், மூர்த்திராவ், நீர் சொன்னவண்ணம் எனக்குக் கலியாணம் செய்துவைத்தால், உமக்கு ஆயிரம் ரூபாய் தருகிறேன்" என்றான். இவ்வார்த்தையைக் கேட்டதும், கிருஷ்ணையர், தன் சத்திரத்தில் ஒரு அறையை மூர்த்திராவ் தங்கியிருக்கும் விடுதியாகக் கொடுத்து, மூர்த்திராவைப் பார்த்து, "நீர் இங்கு வந்ததும் நாம் பேசியது யாருக்காவது தெரிந்துவிட்டால், கலியாணம் கலைந்து போகும். ஆதலினால், வேறொருவரோடு இதைப் பிரஸ்தாபிக்காதே. நான் வருகிறேன்" என்று சொல்லிவிட்டு நேரே கங்காதரர் மாளிகைக்குப் போனார். கங்காதரர் கிருஷ்ணையரைக் கண்டதும், "என்ன கிருஷ்ணையரே? எங்கு வந்தீர்? என்ன சமாசாரம்?" எனப் பிரியத்தோடு கேட்டார். கிருஷ்ணையர், "எஜமானே! நான் ஒரு காரியமாக வந்தேன். அதாவது, சிந்துதேசத்திலிருந்து மிக்க வடிவழகுடையவனாய், பதினெட்டு வயதுடையவனாய், தங்கள் வம்சத்திலே பெண்கொள்ள யோக்கியமானவனாய், மூர்த்திராவ் என்னும் ஒருவன் வந்திருக்கிறான். எப்படியாவது அவனைச் சரிப்படுத்திக் கலியாணத்தை முடித்துவிடலாம். இந்த விஷயத்தைத் தங்களிடம் தெரிவிப்பதற்கே வந்தேன்" எனச் சொன்னார். கிருஷ்ணையர் கூறிய வார்த்தையைக் கேட்ட கங்காதரர், "கலியாணம் நடத்துவதைப்பற்றி யாதொரு தடையுமில்லை. இந்த ஊரிலுள்ள வம்பர்கள், அவனைக் கலைத்து விரட்டிவிட்டால் என்னசெய்கிறது? இதுதான் என் யோசனை" என்று சொன்னார். கிருஷ்ணையர்,

எனச் சொல்லிவிட்டு, மேளக்காரனை அழைத்து, "பெண் மணவரை வந்ததுமுதல், மாங்கல்யதாரணம் நடக்கும்வரை விடாது மேளம் வாசிக்கவேண்டும். இதற்கு மாத்திரம் தனியான சம்மானம் ரூபாய் நூறு தருகிறேன்" என்று சொல்லி, மறுபடியும் புரோகிதரிடம் வந்து "ஓமசாந்தி யாவும் மாப்பிள்ளையைக் கொண்டே நடத்தும்" என்றார். கங்காதரராவ், மந்திரலோபங்களும் கிரியா லோபங்களும் வழங்கும்படி ஏன் சொன்னார் என்றால், தன் பெண் சித்தபிரமை கொண்டவளாதலால், மணவரையில் அவளைக் கொண்டுவந்து உட்கார வைத்திருந்தால், அவள் எழுந்து ஓடிவிடுவாளென்று மதித்தும், முந்தி தான் உத்தேசித்த இவள் பயந்து ஓடிவிடாமலிருப்பதற்கும், வாத்தியாரையும் மேளக்காரனையும் எச்சரிக்கை செய்து பெண்ணை அழைத்துவருமாறு சொன்னார். புரோகிதர் பெண் வருமுன்னே திருமங்கிலியம் பெண்கழுத்தில் ஏறவேண்டியதுதான் என்னும் வரை முடித்து, "இன்னும் பெண் வரவில்லையா? லக்கினம் வந்துவிட்டது" என்று சொல்ல, மணமகள் மணவரை மண்டபம் வந்தாள். உடனே முன்னம் யாவராலும் ஆசீர்வதித்து கொடுத்திருந்த திருமங்கிலியத்தை மூர்த்திராவின் கையில் கொடுத்து சக்குபாயின் கழுத்தில் தாம் சொல்லும் மந்திரங்களைச்சொல்லிக் கட்டச்சொன்னார். மூர்த்திராவ் அவ்வாறே திருமாங்கல்லியத்தை சக்குபாய் கழுத்தில் கட்டினார். சக்குபாய் அலறினாள். வைதாள் கண்ணீரைப் பெருக்கினாள். ஆனால், அங்கு பதினெண் வாத்தியங்கள் முழங்கும் ஓசையால் ஒன்றும் கேட்கவில்லை. சபை தாம்பூலம் என்று கலியாணத்திற்கு வந்தவர்களுக்கெல்லாம் சந்தனம், புஷ்பம், தாம்பூலம், தேங்காய், பழம், தக்ஷிணை, கற்கண்டு இவைகள் வழங்கப்பட்டன. சுபமங்கையர்கள் சோபனப் பாடல்களைப் பாடினார்கள். சீர் வரிசையாக வைக்கவேண்டிய பக்ஷண வகைகளும், வெள்ளி, வெண்கலங்களாலமைந்த பாத்திர வரிசையும், விதம் விதமாகக் காணப்பட்டன. ஸ்ரீகளுக்கும் தேங்காய், மஞ்சள், குங்குமம், வெற்றிலைப்பாக்கு, பழம், கற்கண்டு சந்தனம் வழங்கி மகிழ்ந்தார்கள். கங்காதரராவ் இப்பொழுது தான் தன்னை ஒரு மனிதனாக நினைத்துத் தலை நிமிர்ந்தார். மூர்த்திராவ் சக்குபாயை மணவரை வந்ததுமுதல், அவள் வடிவழகில் மயங்கி, "இவள் எனக்கு மனைவியாய் அடைய நான் என்ன தவம் செய்தேனோ" என்று எண்ணி மகிழ்ந்தார். சக்குபாயோ வென்றால், தன்னை இந்தப்பதிதனை மூர்த்திராவின் மனைவியாகிய தாய் தந்தையரை வெறுத்து தன்னை ஆட்கொண்ட சர்வேஸ்வரன் வராமையை நினைந்து வருந்தி மணவரை மண்டபத்திலிருந்து எழுந்து தனது மேல்மாடம் சேர்ந்து வருந்தினாள்.

விவாகமாகி ஏழு தினங்கள் வரை, பிராமண சமாராதனையும், அபிநய கச்சேரியினாலும், சங்கீத கானத்தாலும், வாத்திய

கோஷத்தாலும், வெகு சிறப்பாகயிருந்தது. விவாகம் இவ்வாறு கழிந்ததும், பந்து மித்திரர்களென்று வந்தவர்களெல்லாம் தங்கள் தங்கள் உறைவிடம் போய்ச் சேர்ந்தார்கள். மூர்த்திராவ் தனது மாமனான கங்காதரராவை ஒவ்வொருநாளும் அடைந்து, "நான் எனது ஊருக்குச் சென்று வருகிறேன்" எனக்கேட்டதும், அவர், "இன்று போகலாம். நாளைப் போகலாமென்று நாட்கள் கழியும்படி செய்துவந்தார். மாமாவின் கட்டளையை மறுத்துவிட்டு ஊருக்குச் செல்ல மனமில்லாதவராய்த் தனது மாதுலக் கிரகத்திலேயே தங்கிவிட்டார். ஒருநாள் சக்குபாய் புஷ்பவதியானாள். மூர்த்திராவ் தனது மனைவி புஷ்பவதியானாளென்பதைத் தெரிந்து அரு மகிழுடையராய், இனி நாம் நமது ஊருக்குப் போகும் பிரயாணம் ருதுசாந்தி முகூர்த்தத்தோடுதான்" என்று நிச்சயித்துக்கொண்டார். ருதுஸ்நானமும் நடந்து சில நாள் கழிந்தபின், மூர்த்திராவ் தனது மாமனைப்பணிந்து, "நான் ருதுசாந்தி முகூர்த்தத்தை யெனது ஊரில் வைத்து நடத்தலாமென்று எண்ணியிருக்கிறேன். நீங்கள் யாவரும்வந்து விமரிசையாக நடத்திவைக்கவேண்டும்" என்று பிரார்த்தித்தான். உடனே ஜோதிடர்களை அழைத்து முகூர்த்தம்பார்த்து, சிந்து தேசம் நோக்கி பல்லக்கில் சக்குபாயின் தாயும் சக்குபாயும் செல்ல, மூர்த்திராவ் குதிரையில் ஏறிச்செல்ல, அனேக காவலர்கள் வேலைக்காரர்கள் முன்னும் பின்னும் நெருங்க கங்காதரராவ் மூன்றுநாள் அந்த சிந்துதேசத்திற்கு ஆரண்யமார்க்கமாகச்சென்று லோகார்ணவமென்னும் நகரம் வந்து சேர்ந்தனர். மூர்த்திராவ் தனது கிரகத்திற்கு முன்னே சென்று தன் மனைவியாய் வருபவளுக்கும் தனக்கும் ஆலாத்தி யெடுக்குமாறு நியமித்து தான் தனது மனைவியோடு மாமன் மாமி முதலானவர்களோடும் தன் வீடு சேர்ந்தான். ருதுசாந்தி முகூர்த்தம் நடந்து அன்று இரவு பள்ளி அறைக்கு தன் மனைவியான சக்குபாயுடனே சேர்ந்தான். சக்குபாயோ, மூர்த்திராவைக் கண்டதும், புலியின் வாயில் அகப்பட்ட மான் பேடுபோல் நடுங்கி ஒருபுறமாக தலை சாய்ந்து நின்றாள். மூர்த்திராவ் தனது நாயகி நிற்கிறதைக் கண்டு தனது ஆசனத்திலிருந்து இறங்கி சக்குபாயின் முன்னேபோய் நின்றுகொண்டு, "என் கண்ணே! நீயேன் ஒருபுறமாய் ஒதுங்கி யிருக்கின்றாய்? என்னைக் கண்டால் உனக்கு வெட்கமாக யிருக்கிறதா? உனது அழகிற்கு நான் ஏற்றவனில்லையென்று எண்ணி என்னைப் பார்க்க உனக்கு மனமில்லையா? இவன் நம்மிடம் பக்ஷமுடையவனா பார்ப்போம் என்றும் நினைப்பு உடையவளாய் தலைகவிழ்ந்து நிற்கிறாயா? நமது செல்வமென்ன, இவன் நமக்கு மணவாளனாவதற்கு தக்க அந்தஸ்துடையவனில்லை யென்று நினைந்து தலைகவிழ்ந்து நிற்கிறாயா? எனது கண்ணே! என் ஆருயிரே! என்னை உனது அருங் கண்ணாலேபார்? அமுத மழைபோல் என் செவி களிக்க சில

வார்த்தை கூறு. உன்னை எண்ணிப் பலநாளாக வருந்தும் என் மோகத்தைத் தீரு. அன்பாய் ஓடி வந்து என்னுடன் மலரணையில் சேரு. சந்திரவதனா! நீ இவ்வாறு ஒதுங்கி நிற்பது ஆகாது. கண்ணே! உனக்கு நான் என்கையால் தாம்பூலம் மடித்துத் தருகிறேன். இங்கே வா" என்று சமீபம் சென்று சக்குபாயின் கையைப் பிடித்தான். அப்பொழுதும் அவள் தலையைத் தூக்கவில்லை. கண்களிலிருந்து முத்து முத்தாகக் கண்ணீர் பெருகிற்று.

மூர்த்திராவ் அவள் கண்களிலிருந்து நீர் முத்து முத்தாய் ஒழுகுவதைக் கண்டதும், "இவள் இன்றுதான் புதிதாக என்னுடன் பழகுகிறாளாதலினால், லச்சைபெருக, அதினால் நம்முடன் ஒன்றும் பேசாதிருக்கின்றாளென்று நினைத்தால், கண்ணீர் பெருகுவதின் காரணம் தெரியவில்லையே? ஆம். ஒன்று இருக்கலாம். நான் இவளை விவாகம் செய்துகொண்ட அன்றையதினம், மணவரையில் வைத்துப் பார்த்ததே தவிர இன்றுவரையில் இவளிடம் வந்து நான் சம்பாஷியாதலால், என்மீது கோபங்கொண்டு, 'என் அன்பார்ந்த கணவன்' என அழுகின்றாள். எல்லாம் இரண்டு தினங்களில் சரியாய் விடுவாள். ஒரு புஷ்பத்தை அரும்பாக இருக்கும் பொழுது, கையால் அலர்த்துவது அழகல்ல. இவள் தானாகவே என்னிடம் அன்பு பாராட்டும் காலத்தை எதிர்பார்த்திருந்து இவளுடன் கூடி வாழ்வோம்" என நினைத்து, தன் படுக்கையில் போய் படுத்துத் தூங்கிவிட்டான். அவன் தூங்கும் சமயம்பார்த்து, சக்குபாய் தனது கரங்களைத் தலையின்மீது உயர்த்திக்கொண்டு கண்களில் கண்ணீர் சோர பண்டரியில் எழுந்தருளியிருக்கும் பண்டரிநாதனை நினைந்து நினைந்து நெஞ்சு நெக்குருக, அங்கம் முழுதும் அன்பே நிறைய, பரவசமடைந்து பிரார்த்திக்கின்றாள். "ஆ! என் நாத! உன் அருள் இப்படியா ஆயிற்று? இளம்பிராயத்திலே நீர் என் எனது சிற்றிலைக் கலைக்கவேண்டும்! சிறுவீடு என்னும் இதை நீர்கலைத்தால் பெருவீடென்னும் மோக்ஷத்தைத்தருவது உமது கடமையன்றோ? உன்னை அடைந்தபின்னும் பாசபந்தங்களாகிய பிரபஞ்சவாழ்வில்என்னைப்புகவிட்டீரே? இது உமக்கு நீதியோ? பரஞ்சோதியே! உம்மை நான்மறந்து அறிவு தடுமாறி இந்த அற்பனை மணந்தேனா? இவனுக்கு நான் மனைவி ஆயினேன். அதனால் நீர் என்னை ஆட்படுத்த வருவது தகாது என நினைத்து இந்த ஆபத்தான நிலைமையில் என்னிடம் உமக்கு அன்பில்லாது போனது யாதுகாரணம்? ஆ! நான் இவனுக்கு எப்படி மனைவி ஆவேன்? எனது சம்மதத்தின் மேலே இவன் என்னை மணஞ்செய்துகொண்டானா? சிறு குழந்தைகள், உயிரில்லாத மரப்பாவையை மணஞ் செய்வதுபோல, உன்னைத் தியானம் செய்து என்னை மறந்திருக்கும் சமயத்திலே வேறு ஒருவன் கழுத்தில் தாலியைக் கட்டிவிட்டால், அதனாலேயே நான் அவனுக்கு மனைவியாய்விட்டேனென்று நீர் நினைப்பது நீதியாமோ? வேதமந்திரங்களின் பொருள்களெல்லாம், நாயகன் நாயகி என்னும் இருவருக்கும் ஏற்படும் உடன்படிக்கை என்றும், நாயகன் நாயகிக்கு செய்யும் கடமைகள் இன்னதென்றும், நாயகி நாயகனுக்கு செய்ய வேண்டிய கடமை யின்னதென்றும், நாயகனும் நாயகியும் கூடி நடத்தவேண்டிய இல்லற தருமங்கள் இவை என்றும், கூறுகின்றதன்றி, வேறு ஒன்றுமில்லையென்று கூறுகிறார்களே. அவ்வாறிருக்க, நான் இந்த விவாகச்சடங்கில் சம்மதப்படாதிருக்க, எனக்கு இவன் எப்படி நாயகனாவான்? ஆகையினால் நீர் வந்து இந்தசமயம் அடியாளை ஆதரிக்கவேண்டும்" எனப்பிரார்த்தித்த வண்ணமாய் தன்னை மறந்து ஓரிடத்தில் படுத்து அயர்ந்து போனாள்.

மறுநாள் பொழுது விடிந்ததும் கங்காதரராவ், தனது பந்துக்களோடு தனது குமாரியான சக்குபாயை அவள் கணவன் வீட்டிலிருந்து தமது ஊரை அடைந்தார். சக்குபாய் தன்னை அனுப்பிய தாய் தந்தையருடன் பேசாது, தன் மாமி நாத்தி முதலியவருடனும் பேசாது, தனது பிராணநாதனையும் பாராது, சதா பண்டரிநாதனை பஜித்துக்கொண்டு தன் கணவன் வீட்டிலேயேயிருந்து வந்தாள். மூர்த்திராவ், "இவள் புதுப்பெண்ணாதலால், மிக்க நாணத்தால் யாருடனும் பேசாமலிருக்கிறாள் சிறிது நாளில் சரியாய்விடுவாள்" என நினைத்து அவள் பள்ளி அறையில் மூலையில் நிற்கும் பொழுதெல்லாம், ஒவ்வொருநாளும் தன்னால் எவ்வளவுதூரம் வேண்ட முடியுமோ அவ்வளவும் வேண்டினான். அவளை பயப்படும்படி செய்வோமென்று தனது உறையிலிருந்தும் வாளை உருவிக்கொண்டு, "அடி! சக்கு! உன்னை இத்தனை நாளாக என்னால் ஆனமட்டும் வேண்டினேன். நீ வழிக்கு வந்தாயில்லை. இன்று என் சொல்வழி நடவாது போனால், உன்னை இந்த வாளுக்கு இரை ஆக்குவேன்" என்று கோபித்து விரைந்து ஓடினான். அதற்கும் பயப்படாமல் நின்றுகொண்டு பண்டரிநாதனை பஜித்துக்கொண்டிருப்பதைப் பார்த்து, மூர்த்திராவ் தனது தாயானவளை அழைத்து, "அன்னையே! இவள் நமது குடும்பத்திற்கே பெரிய அவமானத்தை உண்டாக்கி விடுவாள். எனக்கு சாந்திமுகூர்த்தமாகி ஒருமாதமாகியும் எனக்கும் இவளுக்கும் ஒருவார்த்தைகூட நடந்ததில்லை" என்று சொல்லிக்கொண்டு தனது பள்ளியறை சென்று அவள் பிடரியைப் பற்றித்தள்ளி வெளியில் இழுத்துவிட்டு தாளிட்டுக்கொண்டு தனது படுக்கையில் போய்ப் படுத்து கவலைக்கடலில் ஆழ்ந்தி வருந்தினான்.

சக்குபாய்க்கு மாமியாய் வாய்த்த மாதரசியான ஆளசிபாய், சக்குபாயைப் பார்த்ததே, "என்னடி குடிகேடி! நீ என் வீடு வந்தது முதல் எங்களை மதிக்கிறாயில்லை. ஒருநாள் என்னையும் உன் நாத்திகளையும் தலைகவிழ்ந்து வணங்கியதுண்டா? சொன்ன சொல்லையாவது கேட்கிறாயா? குனிந்ததலை நிமிராது நிற்பதும்,

எப்பொழுதும் மூலையைத்தேடி முடங்குவதுமாய் இருக்கிறாயே? இது உன் தாய்வீடு என்று எண்ணியிருக்கிறாயா? நாளை விடியசாமப்பொழுதிற்குமுன் எழுந்து வீடு பூராவும் மெழுகவேண்டும். தூர்க்கவேண்டும். கோலம் போடவேண்டும். ஸ்நானம் செய்யவேண்டும். மடியாச பாத்திரங்களைத் தங்கம்போலவிளக்கி அடுப்பு மூட்டவேண்டும். சமையல் செய்யவேண்டும். தெரியுமா? ஞாபகமிருக்குமா?" என்று சக்குபாய்க்கு உத்தரவுசெய்துவிட்டு துளசிபாய் சென்றாள். சக்குபாய் யார் என்ன சொன்னாலும் பதில் சொல்வதில்லை என்று மௌனவிரதம் பூண்டு பகவானை சித்தத்தில் பதித்து வேறு சிந்தனையில்லாது விளங்கினாள். மாமியான துளசிபாய் விடியும் பொழுதளவும், தனது மருமகளான சக்குபாய் வீட்டுவேலை செய்ய எழுந்திருக்காதது கண்டு, படுக்கை அறையில் கவலையோடு படுத்திருக்கும் மூர்த்திராவினிடம் போய் "அடே! மூர்த்தி! உனக்கு இந்ததேசத்தில் பெண்கள் கிடைக்கவில்லையென்று பத்திராசலம் தாலுக்காவைத் தேடிச்சென்று நல்ல பெண்ணைப்பார்த்து விவாகம் செய்து வந்தாய்? உன் தலைவிதி இப்படி ஆனது என்றாலும், என்பாடும் விடியவில்லையே? இவ்வளவு நாள் இந்த வீட்டில் பாடுபடும்படி ஈசன் என் தலையில் எழுதியிருக்கிறானோ தெரியவில்லை. நான் ஏதாவது சொன்னால் அதைக் கேட்கிறாளா இல்லை. தானாவது ஒரு துரும்பை எடுத்து அப்புறம் வைக்கிறாளா? இன்று மெழுகச் சொன்னேன், அதோ பார் என்ன ஒய்யாரமாகப் படுத்திருக்கிறாள்?" என்று பாடினாள். இவள் வார்த்தையைக் கேட்ட மூர்த்திராவ் சிம்ஹம் கர்ஜிப்பது போல் கர்ஜித்துக்கொண்டு சக்குபாய் படுத்திருக்கும் இடத்திற்கு வந்து தன் காலால் அவள் இடை முறியும்படி ஓங்கி மிதித்துவிட்டு "வேலையும் செய்யாது இப்படிப் பாசாங்கு பண்ணுகிறாயா? உனது உயிரை இன்றே வாங்கிவிடுவேன்" என்று சொல்லி, நையப் புடைத்தான். அவன் அடிக்கும்பொழுதெல்லாம் சக்குபாய், "கிருஷ்ணா! கேசவா! முகுந்தா! தீனதயாளா" என்று ஈஸ்வர நாமங்களைச்சொல்லி எழுந்து ஆடினாள். இதற்குள் சக்குபாயின் நாத்தியான சுப்பாயி யென்பவள் ஓடிவந்து, "அடே மூர்த்தி! இவளை அடியாதே; நான் இவளை வசப்படுத்தி விடுகிறேன்" என்று சொல்லி, சக்குபாயின் பக்கத்தில் வந்து அவளைக் கூட்டிக்கொண்டு வீட்டிலுள்ள பாத்திரங்களையெல்லாம் முற்றத்தில் எடுத்து வைத்துவிட்டு, "இதை நன்றாகத் தேய்த்துவை" என்று சொன்னாள். சக்குபாய் உடனே பாத்திரங்களை நன்றாய்விளக்குபவள்போல, உட்கார்ந்துக்கொண்டு ஒரு வெண்கலப்பானையை யெடுத்து மடிமீதில் வைத்து அதைப் பானைத்தாளம் போட்டு பண்டரி பஜனை செய்ய ஆரம்பித்தாள். சுப்பாயி இதைக் கண்டு "இவளுக்கு புத்தி சுவாதீனமில்லை. நல்ல வைத்தியரிடம் மருந்து கொடுத்து வியாதியை சொஸ்தப்படுத்திவிட்டால், இவள் வீட்டு

வேலையையெல்லாம், சரியாகச் செய்வாள்." என அவளுக்கவளே நினைத்து தன் சகோதரனைக் கூப்பிட்டு, "அடே மூர்த்தி! இவளுக்கு புத்தி சுவாதீனத்திலில்லை. ஆகையினால், நல்ல வைத்தியனை அழைத்து மருந்து கொடுத்து ஸ்வஸ்தப்படுத்தினால்தான் சரியாகும். இல்லாமல், வியாதி முற்றிவிட்டால், நம்மால் ஒன்றும் முடியாது. யாராவது ஒரு வைத்தியனைக் கூப்பிட்டுப்பார்" எனச் சொன்னாள்.

மூர்த்திராவ் பரம்பரையாகவே லோபியாதலால், வைத்தியனுக்கு ரூபாய் கொடுத்து வியாதியைப் போக்கவேண்டுமென்று சொன்ன வார்த்தையைக் கேட்டதும் மின்சாரத்தினால் மயங்கி நடுங்குகின்றவன்போல நடுங்கி "அடி! தங்காய்! நமக்கு இப்படி ஆபத்து வருமென்று கனவிலும் கருதவில்லையே? என்ன செய்வேன்? இது என்ன சங்கடம்' என்று சொல்ல, இவள் தாயாகிய துளசிபாய் இவளிடம் வந்து, "மூர்த்தி! நீ யாரிடமாவது சொல்லிக்கொண்டு இவளை விவாகம் செய்தாயா? உனக்குக் கலியாணமானது எங்களுக்குத் தெரியவாவது தெரியுமா? நாங்கள் பெண்ணைப்பார்த்து அவள் சுபாவத்தையாவது தெரிந்துகொள்ளுவதற்குக்கூட இல்லாமல், எல்லாம் தெரிந்தவனைப்போல் இந்தப் பிசாசை இழுத்து வந்தாயே? வண்டி வண்டியாக வரும் வரிசையைக் கண்டு மகிழ்ந்தாயே? இந்தப்பணத்தை வைத்து என்னசெய்வது? நல்ல வைத்தியனை அழைத்துப் பாரு. வியாதியை ஆரம்பத்திலேயே துலைத்துவிடவேண்டும். எவனையாவது அழைத்துப் பார்" என்று சொன்னாள். இவ்வார்த்தையைக் கேட்டதும், இம்மியளவும் ஈயாலோபியான மூர்த்திராவ், "நமக்கு ஆபத்து வந்துவிட்டது. இன்றுமுதல் நமது தனமெல்லாம் வைத்தியனுக்கும் மந்திரவாதிக்கும்தான் ஆய்விட்டது" என ஏக்கம்கொண்டு, ஒரு வைத்தியனைப் பார்ப்போமென்று தன் வீட்டிலிருந்து வெளிப்பட்டு தன் சிநேகிதன் ஒருவனிடம் வந்து 'நேயா! நானொரு பெரிய ஆபத்திலிருக்கிறேன். நான் கலியாணம் செய்துவந்த நாள்முதல் இந்த நிமிஷம்வரை என்னைப் பெரிய கவலை சூழ்ந்துவிட்டது. என் மனைவிக்கு புத்தி சுவாதீனமில்லை. இப்பொழுதுதான் ஆரம்பம்போலிருக்கிறது. இதற்கு நல்ல வைத்தியனிடம் தக்க ஔஷதம் கொடுத்து வியாதியைப் போக்கடிக்கவேண்டும். என்னுடைய வீட்டில் யாருக்கு என்ன வியாதி வந்தாலும் விதிபோலிருக்குமென்று வேதாந்தம் பேசி வைத்தியனுக்கு ஒரு தம்படியாவது கொடுத்தவனில்லை. வீட்டில் யாருக்காவது வியாதி வந்தால் அதனால் எனக்குக் கொஞ்சம் லாபமுண்டு. என்னவென்றால், வியாதி திரும்பும்வரை, அன்னத்தைக் கண்ணிலும் காட்டுவதில்லை. அந்த லாபத்தை நான் அடைவேன். ஊண் மிச்சம் உலைவிலும் இல்லை என்றபடி பத்துதினம் ஒருவன் அசௌக்கியமாயிருந்தால், ஐந்துபடி அரிசி, அதற்குரிய

சாமான்களென்றுகளைக்குபார்த்தால்அப்பொழுதுலாபம்தெரியும். அல்லாமலும், வியாதிக்குக் காரணம் என்னவென்று யோசித்துப் பார்த்தால், அளவுகடந்த ஆகாரத்தை உட்கொண்டு அபத்தியமானபதார்த்தங்களை உபயோகித்தல், சுசியற்று இருத்தல், இந்தக் காரணங்களிலன்றி, வேறு காரணங்களினால் இல்லையென்று எனது கொள்கை. ஆதலினால் என்வீட்டில் காய் கறி பதார்த்தங்கள் வாங்குவதே யில்லை. ஜீரகைக் கருவிக்கு இதமாக ரசம் வத்தல் குழம்பு ஏதாவது துகையல் இந்த மட்டோடு என் வீட்டு ஆகாரமிருக்குமன்றி வேறு அபத்திய உணவு என் வீட்டில் கிடையாது. என்னுடைய வீட்டை ரோகநாயகன் கண்ணெடுத்தும் பார்க்கமாட்டான். அவன் பாராது போனால் வைத்தியனுகிய தண்டல்காரனுக்கு என் வீட்டில் வேலையில்லை. ஆகையினால் வைத்தியன் இன்னானென்று இதுவரை எனக்குத் தெரியாது. எனக்கு ஒரு மனைவி மூதேவியைப்போல் வாய்த்தாள். அவள் வந்ததும் நான் பாடுபட்டுத் தேடிய பொருளெல்லாம் பறந்துபோம்காலம் வந்தது" என்று மிகுந்த துக்கத்தோடு தெரிவித்துக்கொண்டான்.

இவன் சொல்லிய துக்ககரமான வார்த்தைகளைக் கேட்ட சிநேகிதனான ஜகன்னாதராவ், மூர்த்திராவைப் பார்த்து, 'அப்பா! நாம் என்ன செய்யலாம்? முன் ஜென்மத்தில் கடன் வாங்கி அந்தக் கடனைச்செலுத்தாதுபோனால், அந்தக்கடனை நம்மிடம் இந்த ஜென்மத்தில் பெற்றுக்கொள்ளுவதற்காக, பசு பத்தினி புத்திரன் ஆலயம் என்று நான்கு வழியில் அமைந்திருக்கிறது. நீ சொல்லும் வியாதியைப் பார்த்தால், சுக்கு திப்பிலி மிளகு திரிகடுகு என்னும் கடைமருந்தில் தீரும் வியாதியாகத் தெரியவில்லை. இதற்குத் தக்க வைத்தியம்செய்ய இந்த ஊரில் சரியான வைத்தியன் இல்லை. சேதி நகரத்தில் அரிசிங்கென்று ஒருபூனைவைத்தியன் இருக்கிறான். அவன் பார்த்தால் இந்த வியாதி தீர்ந்து போமேயன்றி, வேறு ஒரு வையத்தியர்களால் தீராது". என்றான். இதைக் கேட்டதும் "அவன் இந்த வியாதியை சொஸ்தப்படுத்துவதற்கு ரூபாய் எவ்வளவு கேட்பா"னென்று மூர்த்திராவ் கேட்டான். அதற்கு ஜகந்நாத ராவ், "குறைந்தது ஐந்நூறு ரூபாயாவது வாங்காமல் அவனும் விடமாட்டான். வியாதியும் உனது மனைவியைவிட்டு நீங்காது" எனக் கூறினான். இந்த வியாதிக்கு ரூபாய் ஐந்நூறு செல்லுமென்று சொல்லக் கேட்டதே மூர்த்திராவ் பயந்து, சரீரம்முழுதும் வியர்வைநீர் ஆறுயோட, "ஆ! ரூபா ஐந்நூறு? ஐந்நூறு ரூபாய்க்கு அவள் உயிர் போய் விடுவது நலம்" எனச்சொல்லி பெருமூச்சுவிட்டான்.

இவ்வாறிருக்கும்பொழுது, அந்த ஊரிலுள்ள வைத்தியன் ஒருவன், அந்த வீட்டில் பேசிக்கொள்ளும் வார்த்தைகளைக் கவனித்து கேட்டுக்கொண்டு அந்த வீட்டில் வந்தான். ஜகனாதராவ்,

வைத்தியனைக் கண்டதும், "வாருங்கள்" என்று ஒரு ஆசனத்தைக் கொடுத்து, அதில் உட்காரும்படி செய்து, மூர்த்திராவின் மனைவிக்குள்ள நோயைச் சொல்லாது, "இவர் வீட்டில் இவர் மனைவிக்கு சரீர அசௌக்கியமாயிருக்கிறது நீர் போய்ப் பார்த்து, தக்க மருந்து கொடுத்து வியாதியைச் சொஸ்தப்படுத்துவீர்களா? எனக் கேட்டான். வைத்தியர் ஜெகனாதராவின் வார்த்தையைக் கேட்டு, "சுவாமி! வியாதியஸ்தரை பார்த்து, வியாதி இன்னதென்று நிதானித்து தெரிந்துகொள்ளுமுன், 'நான் தீர்த்துவிடுவேன்' என்று எவ்வாறு சொல்லுவது? போய்ப்பார்ப்போம்" என்றான். உடனே மூர்த்திராவ், "அவனை யழைத்துக்கொண்டு போவோம். இவன் நூற்றுக்கணக்கான பணம் கேட்கமாட்டான்" என்று நினைத்து, "நீர் என் வீட்டிற்கு வாரும்" என்று அவனை அழைத்துக்கொண்டு தன் வீட்டிற்குச் சென்றான்.

சக்குபாயோவெனில், தன்னை தனது மாமியும் நாத்தியும் "சித்த பிரமைப் பிடித்தவள்," என்று சொன்னதே, நாம் சித்தப் பிரமை கொண்டவளாகவே நடித்து, பண்டரிநாதனை பஜிப்போம்," எனக் கைகொட்டி அவளுக்கவளே கூத்தாடி ஜே ஜே விட்டல்! ஜே ஜே விட்டல்! என்று ஆடிக்கொண்டிருந்தாள். இந்தசமயத்தில் மூர்த்திராவ், வைத்தியரை அழைத்துக்கொண்டு வீட்டிற்குவந்தான். வைத்தியன் சக்குபாயின் ஆடலைப் பார்த்து விட்டு, "ஐயா! வியாதியைத் தெரிந்துகொண்டேன். பித்தம் தலைக்கு ஏறி சித்தம் பேதித்துவிட்டது. இஞ்சிரசாயனம் ஒன்று செய்யவேண்டும். இப்படி மருந்துகள் தயார்செய்துஒருமண்டலம் தலை ஸ்நானமும், உள்ளுக்கு ரசாயனமும் கொடுத்தால், வியாதி நீங்கும். பின்னே அந்தவியாதி அணுகாமல் இருப்பதற்கு தான் லேகியம் வேண்டுவது. இவ்வளவு மருந்தும் செய்வதற்குக் குறைந்தது ஐம்பதுவிராகன் செல்லும். வியாதி சொஸ்தமானபின் எனக்கு மரியாதை செய்தால் போதும். ஆனால் ஒன்று. இந்த வியாதி என்னால் தீரவேண்டுமேயன்றி,வேறு ஒருவரால் தீராது. அல்லாமலும்,வியாதி யிப்பொழுதுதான் ஆரம்பமாயிருக்கிறது. ஊரையிலேயே துலைத்து விட்டால்தான் நல்லது. நான் போய்வருகிறேன்" என்று சொன்னான். மூர்த்திராவ் இந்த வார்த்தையைக் கேட்டதே, வைத்தியரைப்பார்த்து, "ஐயா! தாம் இவ்வளவு அவசரமாகப் புறப்படுகிறீரே? உமக்கு மிகுந்த ஜோலிகளிருக்கிறதா? நான் உம்மைக் கொண்டே இந்த வியாதிக்கு மருந்து கொடுப்பதென்று நிச்சயித்துக் கொண்டேன்" என்று சொல்ல "இல்லை, நான் சில வீடுகளுக்குப் போய் மருந்து கொடுக்க வேண்டுவதாகவிருக்கிறது. அதனால்தான் நான் அவசரமாகப் புறப்படவேண்டுவதாக விருக்கிறது. சாயுங்காலம் உம்முடைய வீட்டுக்கு வருகிறேன்" எனச் சொல்லிவிட்டுப் போய்விட்டான்.

இவன் சென்றதும், இவனைக் கவனியாதவளாய், இவன் சொல்லிய வார்த்தைகளையெல்லாம் உடனிருந்து கேட்டுக்கொண்டிருந்த சக்குபாய், "ஒரு மண்டலம் வரையில் நல்ல தைலஸ்நானமும், மருந்தும் கிடைப்பதோடு புருஷன் மாமி நாத்தி இவர்கள் உபத்திரவமில்லாமல் பகவன் நாமபஜனம் பண்ணலாம்," என நிச்சயித்துக்கொண்டு முன்னிலும் பதின்மடங்கு அதிகமாகப் பண்டரிநாதனை பாண்டுரங்கனைப் பாடி ஆடிக்கொண்டிருந்தாள். பரமலோபியான மூர்த்திராவ், இவள் ஆடல்பாடல்களைக் கண்டு பயந்துபோய் "வைத்தியன் ஐம்பது விராகன் கேட்டான். நூறு விராகன் கேட்டாலும் கொடுத்தே தீரவேண்டுவதுதான்" என்று எண்ணி, தனது பொருள் அநியாயமாய் போகிறதேயென்று எண்ணி எண்ணித் துயரடைந்தான். அன்று சாயுங்காலம் வைத்தியனும் வந்தான். மூர்த்திராவ் அவரைக் கண்டதே மிகுந்த பரிதாபத்தோடு முன்னே வந்து "வைத்தியரே! நீங்கள் பார்த்துவிட்டுப்போன பிறகு; வியாதி அதிகரித்திருக்கிறதே? அது என்ன காரணம்?" எனக் கேட்டான். வைத்தியன் "நான்தான் காலையிலேயே சொன்னேனே. இப்பொழுதே என் ஔஷதம் கொடுத்தால்தான் என்னால் குணமாக்க முடியும். அன்றி, இன்னும் இரண்டொரு நாள் கழிந்தால் என்னாலுமாகாது, எனைப்படைத்த ஈசனாலும் ஆகாது" என்று உறுதியாய்ச் சொன்னான். மூர்த்திராவ் "நான் நிரம்ப ஏழை. பத்து விராகன் தருகிறேன். தாங்கள் மருந்து கொடுங்கள்." எனக் கெஞ்சினான். வைத்தியர், "சரி, ஐயா! நான்போய் வருகிறேன். உமக்கு விதி இப்படித்தான் நடக்கவேண்டியதாய் இருக்கிறது. நான் என்ன செய்யலாம்" என்று சொல்லி எழுந்து நடந்தார். அப்பொழுது மூர்த்திராவ், எதிரே சென்று வழிமறித்து, "தாங்கள் சொல்லியபடியே ரூபாயைத் தந்து விடுகின்றேன்" என்று தன் பெட்டியைத் திறந்து, "நான் தேடிய நன்னிதியே! போகின்றாயா" எனப் பெருமூச்சுவிட்டு வைத்தியன் கையில் கொண்டு வந்து கொடுத்தான். வைத்தியன் தான் மருத்துவனாய் அமைந்த இந்த நாள்வரை, ஐம்பது விராகனைக் கண்ணால் பார்த்ததில்லை. இன்று பார்த்ததும், மிகுந்த சந்தோஷத்தை யடைந்து மூர்த்திராவைப் பார்த்து, "உமது தேவிக்கு வந்த வியாதி இன்றோடே தீர்ந்தது என்று நினைத்து கவலையில்லாது இரும், நாளை காலையில் தைலமும் மருந்தும் கொண்டுவருகிறேன்," என்று சொல்லி ரூபாயைச் சுற்றிக்கொண்டு போய்விட்டான்.

பண்டரிநாதன் வைத்தியங்கொண்ட சக்குபாய், இரவும் பகலும் பகவானுடைய நாமங்களைப் பாடுவதும் ஆடுவதுமாக இரவும் பகலும் வேற்றுமையின்றி இருந்துகொண்டிருந்தாள். வைத்தியன் மறுநாள்முதல் தைலம் தேய்த்துக் குளிக்கவேண்டுமென்று ஒரு குப்பியில் தைலமும், இஞ்சிசாற்றை சர்க்கரை

பாகில் கலந்து உரையவைத்து; ரசாயனம் என்னும் மருந்தையும் மூர்த்திராவிடம் கொடுத்து, "இந்த தைலத்தை காலைநேரத்திலே இவளுக்கு தேய்த்து அவாலையாக பத்துக்குடம் சலம் வார்த்து குளிப்பாட்டவேண்டும். அதன்பின் உள்ளுக்கு இந்த மருந்தைக் கொடுக்கவேண்டும் நல்ல ஆகாரத்தை கொடுக்கவேண்டும், இவளை நீங்கள் இப்படி வைத்திருக்கக்கூடாது. ஒரு அறையில் தனியே வைத்திருக்கவேண்டும். இவள் தனியே படுத்து தூங்க ஆரம்பித்தால் அந்த நிமிஷமே வியாதி போய்விட்டதென்று நினைத்துக் கொள்ளுங்கள்." என அவர்கள் அவன் சொல்லை நம்பும் வண்ணம் பக்குவமாய்ச் சொல்லிவிட்டுப் போய்விட்டான். அவர்களும் அவன் சொல்லை உண்மையென நம்பி, அன்றே சக்குபாய்க்கு தைலம் தேய்த்து, இரண்டு நாத்திமார்களும் அவளுக்கு தாரை தாரையாக பத்துக்குடம் ஜலம் கொட்டி, மருந்து கொடுத்து, ஒருகாற்றோற்றமுள்ள அழகான அறையில் அவளைவிட்டு கதவைப் பூட்டிக்கொண்டார்கள். சக்குபாய் அவ்வறையில் சென்றவுடன், ஆடல் பாடலை நிறுத்திவிட்டு சர்வேஸ்வரனை நினைந்து பிரார்த்தித்தாள். எம்பெருமானே, "ஓ! தீனபந்து! நீர் எனக்கு திருமந்திரத்தை உபதேசிக்கும்பொழுது ஸ்திரீகளுக்கு சுதந்தரமில்லையென்றும், தாய் தந்தைக்கும் நாயகனுக்கும் புத்திரனுக்கும் கீழ்படிந்து நடக்கும் அடிமைகள் என்றும், இவ்வளவு கஷ்டநிலைமையிலிருந்து தப்பி ஒத்துக்கொண்டு ஈஸ்வரனை மறவாதிருக்கவேண்டும் என்று தெரிவித்தீரே? அந்த ஆக்கினைக்குக் கீழ்ப்படிந்து இன்றுவரை நான் நடந்தும், உமது கருணை எனக்குக் கிடையாதுபோனால், அடியாள் உய்வதெப்படி? உன்னை அடைந்து உய்யும் நினைவு கனவிலும் இல்லாதவர்களாய், பொருளாசைப் பேய்பிடித்தவர்களாய், எள்ளளவேனும் இரப்போர்க்கு உதவாத லோபராய், எப்பொழுதும் தானே வாழவேண்டுமென்று, பிறரை வஞ்சித்து பொருள் கவரும் கள்வராய், திரியும் இவர்கள் கூட்டத்திலே நான் புகுந்து உன்னை மறவாதிருப்பது எவ்வளவு கஷ்டமென்பதை நீர் சிந்திக்கவேண்டாமோ? உன்னை அடைவது எளிதல்ல. வனத்தில் சென்று தவம் செய்து உன்னை அடையவேண்டும்' என்கிறார் பெரியோர்கள். உற்றுநோக்கினால், வனத்தில் சென்று தவம் செய்வது கஷ்டமாமோ? வனத்தில் சென்று தவம் செய்வோர்கள் மண்ணாசை பெண்ணாசை பொருளாசை யாவையும் விட்டுத் தவம் செய்கிறார்கள். எனது நிலைமையைப் பார்த்தால், நான் விட்டேனென்றாலும் என்னை மனைவி என்று கருதும் ஒருவனும், மாமி என்பாள் ஒருத்தியும், நாத்தி என்பாரும் என்னை விடுகின்றார்களில்லையே. இந்த நிலைமையில் நான் உம்மை பஜிப்பது உமக்குத் தெரியாதா? அடியார் நினைத்தபொழுதே அவர்களை ரக்ஷிக்க விரைந்து செல்லும் உமக்கு நான் மாத்திரம் விரோதி ஆனேனோ

எனக்கு ஒன்றும் புலப்படவில்லையே" எனப் பலவாறு பிரார்த்தித்து தன்னை மறந்துசோர்ந்தாள்.

இவள் என்ன நிலையிலிருக்கிறாளென்று ஜன்னல் வழியாய் உற்றுப்பார்த்த நாத்தியான சுப்பாயி, "அண்ணா! இதோ பார்த்தீரா மதனியானவள் வைத்தியன் கொடுத்த தைலத்தை ஒருவேளை குளித்து, ஒருவேளை உட்கொண்ட மருந்திலேயே மதனிக்கு தூக்கம் வந்துவிட்டது அறையில் அடைத்ததும் ஆடலும் பாடலும் அடங்கிற்று" என்று சொன்னாள். மூர்த்திராவ் வந்து பார்த்ததும், தனது தங்கை கூறியது உண்மைதானென்று தெரிந்தும், "அடி! சுப்பு! வைத்தியர் வந்திருக்கும்பொழுது வியாதி குணமாய்விட்டதென்று சொல்லாதே. நமது பொருளையெல்லாம் பிடுங்கிக்கொள்ளுவான். அவன் வந்து உன்னிடம் 'உன் மதனிக்கு வியாதி குணமா" என்று கேட்டாலும் "குணம் ஒன்றும் இல்லை" என்று சொல்லிவிடு என்று தன் தங்கையினிடம் சொல்லிவிட்டு தனது அறைக்குப்போய் உட்கார்ந்துகொண்டு, "ரூபாயை சில விட்டாலும் வைத்தியன் கெட்டிக்காரன்தான் என்று ஒருவாறு திருப்தியடைந்தவனா யிருந்தான். சக்குபாயும் தனது பகவத்தியானத்திற்கு இடையூறு இல்லாமல் நாள்கள் கழிவதை நினைந்து, ஆநந்தமுற்றாள். ஆடல் பாடல்களில்லை. தூக்கமும் வருகிறது. பித்தமும் இறங்கிவிட்டது என்றாலும் யாரிடமும் பேசாததைக் கண்டு மூர்த்திராவ், வைத்தியர் வந்ததும், "நீர் கொடுத்த மருந்தில் கொஞ்சம் குணமிருக்கிறது, என்றும் சொல்லலாம். இன்னும் யாருடனும் தாராளமாய்ப் பேசவில்லையே?" என்று சொன்னான். இதைக் கேட்ட வைத்தியர் சிரித்துக்கொண்டு, சுவாமி! பண்டிதம் என்பது லேசான காரியமா? இதமாக தேகக்கூற்றை அறியவேண்டும். ஒரு நோவுக்கு ஒரு ஔஷதம் கொடுக்கவேண்டும். என்றாலும், தேகக்கூறு அறிந்து மருந்துகளை உபயோகப்படுத்தவேண்டும். இதுவரை இருபது நாள்தான் ஆயிருக்கிறது. இன்னும் இருபத்தொருநாள் மருந்து உடலில் சேரவேண்டுவதாக யிருக்கிறது. அதற்குள் ஆத்திரப்படுவதென்றால், நான்தான் என்ன செய்வேன்?" என இன்னும் அவன் மயங்குமாறு இதமாகப் பேசிவிட்டு சென்றான். நான்குநாளைக் கொருதரம் வாரத்துக் கொருதரம் மருந்தையும் நிறுத்தாது வந்து கொடுத்துக்கொண்டிருந்தான். நாற்பது நாளாயிற்று. சக்குபாய் அறையிலிருந்து வெளியே வருவதும் இலையில் உட்கார்ந்து சாப்பிடுவதும் பின் அறையில் போய் இருந்து பகவானை பஜிப்பதுமாயிருந்தாள். வைத்தியன் மெழுகு என்று லேக்கியம் என்று ஒன்றை ஒரு தேங்காய் அளவு ஒரு டப்பியில் வைத்து மூர்த்திராவிடம் கொடுத்தான். மூர்த்திராவ் பரம லோபியாயிருந்தும், வைத்தியனிடம் திருப்தி ஏற்பட்டு ஒரு சோமன் சோடு, பத்து விராகன், வெற்றிலை பாக்கு இவைகளை ஒரு தட்டில் வைத்து

வைத்தியனுக்கு மரியாதை செய்தான். வைத்தியனும் அதை வாங்கிக்கொண்டு சந்தோஷமாகப் போய்விட்டான்.

மூர்த்திராவ், தனது மனைவிக்கு வியாதி குணப்பட்டுவிட்டதென்று மனக்கிளர்ச்சியோடு, அன்று இராத்திரி சக்குபாய் இருக்கும் அறைக்குப்போய் "அடி! சக்கு! உனக்கு ஏராளமான திரவியங்களைச் சிலவுசெய்து, 'உனக்கிருந்த பைத்தியத்தையும் மாற்றிவிட்டேன்'. இனியாவது என்னோடு இணங்கி வாழுவையா? என் கண்ணே! என்ன சொல்லுகிறாய்" என்று அவள் உள்ளம் உருக அவளை வேண்டி நின்றான். சக்குபாய், "நாராயணா! கேசவா! இவன் வந்துவிட்டானே" எனக் கைகொட்டி மேகம் குமுறினாற்போல கர்ச்சித்தாள். இதைக் காதாரக் கேட்ட மூர்த்திராவ், நடுநடுங்கினவனாய், "வியாதி தீர்ந்ததென்று நினைத்தேன். இன்னும் இவள் ஆர்ப்பாட்டம் அடங்கவில்லை. முந்தியாவது பண்டரி பஜனை பாடி, பாட்டுக்கு இசைய தாளம் போட்டு நன்றாய் ஆடினாள். இன்று என்னையே சுட்டிக்காட்டி ஆரவாரிக்கின்றாள். இனி நான் என்னசெய்வேன்" என்று பயந்து கதவைப் பூட்டிக்கொண்டு வெளிவந்து தனது தலைவிதியை நினைந்து வருந்தினான். இவன் அறைக்குள்ளிருக்கும்பொழுது சக்குபாய் கர்ச்சித்த கர்ச்சனையை அவன் தாயான துளசிபாய் கேட்டு குடல் நடுங்கி ஓடிவரும்போது, தலைவிதியை நினைந்து வருந்திக்கொண்டிருக்கும் மூர்த்திராவைப் பார்த்து, "மூர்த்தி! நீ என்ன பயந்துவிட்டாயோ? அந்த சண்டாளிக்கு பேய் பிடித்திருக்கிறது. அப்பா! இது நமக் காலக்கொடுமை. நீ தக்ஷிணதேசத்திற்கு யாத்திரையாக போனாயே, எங்கேயாவது சுற்றி அலைந்துவிட்டு வரப்படாதா? யாரோ ஒரு பேய்மகளைக் கொண்டுவந்து வைத்தாயே? வைத்தியன் கடன் தீர்ந்தும், மந்திரவாதி கடன் ஒன்று இருக்கிறது. போகுங்காலம் வந்தால், 'புதைத்து வைத்திருக்கும் பொருளும் போ' மென்று சொல்லும் வார்த்தை எனக்குப் பலித்தது. அந்தோ! வைத்தியன் வந்து வைத்தியமென்று நூற்றுக்கணக்காக பொருளைக் கொண்டுபோய் விட்டான். இவன் அலைந்தும், 'கூட்டோடு போயிற்று குளிரும் காய்ச்சலும்' என்றுசொல்லி ஒரே முழுக்காக முழுகிவிடலாமே என்று வயிற்றிலும் வாயிலும் அறைந்துகொண்டு மகன் காலடியில் விழுந்து புரண்டாள். மூர்த்திராவ், தாய் தன் காலில் விழுந்து கதறுவதையும், தனக்கு வாய்த்தமனைவியின் பேய்க்குணத்தையும், இதுவரை தப்படி சிலவு செய்யாது தேடிய பணம் சிலவாவதையும், நினைந்து நினைந்து பெருமூச் செரிந்து, கண்ணீர் வடித்து, ஒன்றுந் தோன்றாது நின்றுகொண்டிருந்தான். துளசிபாய், தன் மகன் படும் துயரத்தைக் கண்டு "அழுதால் பயனென்ன? இன்னும் எவனாவது ஒரு மந்திரவாதியைப் பார்த்து பேயை ஓட்டிவிட்டால் இவள் சுகப்படுகிறாளா பார்ப்போம்" என்றுசொல்ல, "அம்மா! நான் மந்திர

மென்றும் பேயென்றும் ஒன்று இருக்கிறதென்றும் நான் நம்புவதில்லை. இதுவெல்லாம் ஏமார்ந்தவர்களிடம் பொருள் பறிக்கும் சில பாவியர்களின் தொழிலாகும். இப்படி இருக்கும் நான் மந்திரவாதிக்கு பணத்தை யெப்படி அள்ளிக் கொடுப்பேன்? போனது போதாதா" என்று மூர்த்திராவ் சொன்னார். இதைக் கேட்ட துளசிபாயும், அவர் சகோதரியான சுப்பாயும், மூர்த்திராவைப் பார்த்து, 'தலைவலியும் காய்ச்சலும் தனக்கு வந்தால் தெரியும்' என்பதுபோல, மந்திரம் பொய் என்றும், பேய் இல்லை என்றும், உன்னைப்போல் சொல்லுகிறவர்கள் எத்தனை பெயர்களையோ பார்த்திருக்கிறோம். சொன்னவர்களெல்லாம் கடைசியில் தங்களுக்கு தலைவலி வந்தாலும் ஒரு மந்திரக்காரரிடம் விபூதியை மந்தரித்துப் போட்டுக்கொள்ளப் பார்க்கிறார்கள். உனக்கு வந்திருக்கும் ஆபத்து மலையிலும் பெரிதாயிருக்க, மந்திரத்தை நம்பமாட்டேனென்றால், நமக்கு வேறுகதி என்ன இருக்கிறது, இது தெரிய" வில்லையா எனச் சொன்னார்கள்.

மூர்த்திராவ், தங்கையும் தாயும் சொல்லிய வார்த்தைகளைக் கேட்டதும், ஆறுத்துயருற்று என்ன செய்கிறதென்று ஒன்றுந் தோன்றாதவராய் வீட்டை விட்டு வெளிப்பட்டார். அப்பொழுது எதிரே வந்துகொண்டிருந்த இவன் சினேகிதன் "நீ கவலையில் ஆழ்ந்து போனவன்போலத் தோன்றுகிறதே? என்ன சிந்தனை செய்துகொண்டு நடந்து போகிறாய்? என்னிடம் சொல்லப் படாதா" எனக் கேட்டான். மூர்த்திராவ், அப்பையா வென்பவனைப்பார்த்து, "அப்பையா! நான் உன்னைத்தான் தேடி வருகிறேன். உன்னிடம் சொல்லாதது ஒன்றுமில்லை. என் மனைவிக்கு சித்தப்பிரமை பிடித்ததென்று நினைத்து ஒரு வைத்தியனிடம் இருநூறுரூபாய் செலவுசெய்து பார்த்தேன், ஏதோ குணமானது போல் தோன்றி வைத்தியனுக்கு சம்மானம் கொடுத்து முடிந்ததும், மறுபடியும் வந்துவிட்டது. பார்ப்பவர்கள் பேய் பிடித்ததென்று சொல்லுகிறார்கள். நல்ல மந்திரவாதியைக் கொண்டு பார்க்கவேண்டுமாம். மந்திரமாவது, மாயமாவது? எனக்கு ஒன்றிலும் நம்பிக்கையில்லை." என்று மூர்த்திராவ் சொல்ல, அப்பையா! "நல்லது நம்பிக்கை யில்லையென்று சொல்லாதே. இராமாயணம், மகாபாரதம், இதுகளில் உனக்கு நம்பிக்கை யிருக்கிறதா? உண்மையாய்ச் சொல்" எனக் கேட்டான். மூர்த்திராவ், 'இராமாயணம் மகாபாரதம் இவைகள் பரமபதியான பரந்தாமன் ராம கிருஷ்ணாதி அவதாரம் செய்து தாமே நடத்திக் காட்டிய சரித்திரத்தில் நம்பிக்கை யில்லாது போகுமா? அதில் பூரண நம்பிக்கை எனக்குண்டு. ஆனால், நான் கேட்கும் மந்திரவாதி விஷயத்திற்கும் ராமாயண மகாபாரதத்திற்கும் என்ன சம்மந்த மிருக்கிறது சொல்லு" எனக் கேட்டான். உடனே அப்பையாவானவன், "ஏ! மூர்த்தி! ராமாயணத்தில் இந்த மாந்திரீக

சம்மந்த மிருக்கிற பாகத்தை நீ படித்ததில்லைபோ லிருக்கிறது? இந்திரஜித்தானவன் ராம லக்ஷமணர்களை எழுபது வெள்ளம் படைகளோடு அழிப்பதற்காக சஞ்சீவிமலையை வைத்துவிட்டு வரும் அனுமான் முன்னே மாயாசீதையை வெட்டிவிட்டு பத்து வெள்ளம் படையோடு அயோத்திக்கு பரத சத்துருக்கரைக் கொல்ல செல்லுவதாக அனுமானிடம் சொல்லிவிட்டு பகைவர்கள் ஒருவருக்கும் தெரியாமல் மசானம் சென்று நிகும்பலை என்று ஒரு யாகம் நடத்தினானே என்ன தெரியுமா? அது மாந்திரீக சம்மந்தமான ஒரு மாரணயாகம். என்று நீ நினைத்துக்கொள்ளு. சர்வ சக்தி வாய்ந்த எம்பெருமானும் கூட யாகம் நடந்தால் நமக்கு அழிவு வருமென்று பயந்து தன் தம்பியாகிய லக்ஷ்மணரை படையோடு அனுப்பி யாகத்தையும் அவன் உயிரையும் போக்கும்படி நியமித்தார். மகா பாரதத்திலேயோ வெனில், துரியோதனன் பாண்டவர்களை படைமுகத்தில் வெல்லமுடியாதென்று நினைந்து வனம்சென்று வாள்வீரர்களை ஐவரையும் கொல்ல, காளமா முனிவரென்னும் ஒரு ரிஷியை அழைத்து, வேண்டிய திரவியங்களை கொடுத்து அனுப்ப, அவர் ஒரு மலையின் உச்சியில்போய் ஒரு யாகத்தைச் செய்து, ஒரு பூதத்தை யுண்டாக்கி அனுப்ப, அந்தபூதம் பாண்டவரைவரையும் கொல்லவரும்பொழுது, பாண்டவ சகாயனென்று பெயர்புனைந்த கிருஷ்ணபகவான் தன்னிடம் சுதர்சனம் என்னும் சக்கரமிருக்கிறது. ஆதலால் பூதத்தைக் கொன்று பாண்டவர்களைக் காப்போமென்று நினைத்தார்? அந்த மாரணயாகத்தில் எழுந்த பூதத்திற்கு "பலிகொடுத்து தீரவேண்டும். பாண்டவர்களை இந்த பூதம் கொன்றால், பாண்டவசகாயன் என்னும் பெயர் எனக்குப் போய்விடும். ஆதலால், பாண்டவர்களைக் காக்கவேண்டும். பூதத்திற்கும் புகல வேண்டும், என கிருஷ்ணபகவான் நினைந்து, எமதருமனை வருவித்து, ஒரு நச்சுப் பொய்கை உண்டாக்கி, தருமனை ஒழிந்த நால்வரையும் நச்சு நீரில் மாளச்செய்து, தருமநந்தனனையும் மரணமூர்ச்சை அடையும்படி செய்ய, காளமாமுனி ஏவிய பூதம், இறந்து கிடப்பவர்களைக் கண்டு பெருங் கோபங்கொண்டு மாண்டவர்களைக்கண்டு கொல்லும்படி ஏவின அந்த காளமாமுனிவனைக் கொன்று சென்றதே? இது மந்திர சம்மந்தமான மாரண யாகமல்லவா? ஆகையினால், பூத பைசாசங்களும் உண்டு. மந்திரங்களும் உண்டு. என்று நம்பு" என்பதாக அப்பையா சொன்னதும், 'நீ சொன்னபின் எனக்கும் இதில் நம்பிக்கைவந்துவிட்டது" என்று சொன்னான் மூர்த்திராவ் இவ்வாறு சொல்லவும், "அவ்வாறானால் உனது மனைவிக்கு சரியான மந்திரவாதியை அழைத்து தேவதைக்குப் பூசை போட்டு ரக்ஷாபந்தனம் செய்தால் உனது மனைவி சௌக்கியமடைவாள்" என்று சொன்னான். மூர்த்திராவ், இந்த வார்த்தையைக்கேட்டு, "நல்ல மந்திரவாதி யார்? அவன் எங்கு இருப்ப

வன்? பெயர் என்ன? சொன்னால் அவனையே வருவித்து பார்ப்போம்'' என்றான், அப்பையா சற்று ஆலோசித்து, "ஓகோ! நினைவு வந்தது. நமது கிராமதேவதையான பத்திரகாளிக்கு பூசைசெய்யும் பூசாரியான இருளன் என்பவன் இந்தத் தொழிலில் கைதேர்ந்தவன். அவனைக்கொண்டு பார்க்கலாம்'' எனச் சொல்ல, இவ்வார்த்தையைக் கேட்ட மூர்த்திராவ், "நல்லவேளை நல்லவேளை, அப்பய்யாவும் எனக்கு நல்லவனாயினான்'' என நினைந்து, அப்படியே செய்கிறேன்'' என்றுசொல்லிவிட்டு தனது வீட்டிற்குவந்து தன் தாயிடம் அப்பய்யாவிற்கும் தனக்கும் நடந்த விஷயங்கள் யாவையும் தெளிவாய்ச் சொல்லி, "நாளை வெள்ளிக்கிழமை மந்திரவாதியை அழைத்துப் பார்க்க வேண்டும்'' என்று தீர்மானித்திருக்கிறேன் என்று சொன்னான். இதைக் கேட்ட துளசிபாய், மூர்த்திராவைப் பார்த்து, "கண்மணி! நாம் என்ன செய்யலாம்? நமக்குப் பொருள்போகும் வேளை, வருந்தினால் ஆவதொன்றுமில்லை. நடப்பதைப் பார்'' என அவனுக்குச் சிறிது தைரியங் கூறிவிட்டு போய்விட்டாள்.

தாய்கூறிய தைரிய வார்த்தையால் மூர்த்திராவ் சிறிது திருப்தியடைந்து, அன்று சாயுந்தருவாயில் மூர்த்திராவ் பூசாரி இருளப்பன் வீட்டிற்குப் போய் "அடே! இருளப்பா! என்று அழைக்க; அவனும் வந்து வணங்கி, மரியாதை செய்து, ஒரு ஆசனம் கொடுத்து உட்காரச்சொல்லி, அவன் வார்த்தைகளிலிருந்தே விஷயங்களை கிரகிக்கலாமென்று நினைத்தான். மூர்த்திராவ் ஒன்றையும் நம்பாதவனாதலால் அவன் பேச்சுக்கு இடங்கொடாமல் "நாளைக்காலையில் நீ என் வீட்டிற்குவா'' என்று சொல்லிவிட்டு தனது வீட்டிற்கு வந்தார். சக்குபாய் தனக்குப் பேய் பிடித்ததென்றும், பேயை ஓட்ட வேண்டுமென்றும், அவர்கள் பேசிக்கொண்டிருப்பதைக் கேட்டு, "இதுவும் ஈசன் செயலே மாமி நாத்தி புருஷன் இவர்கள் தொந்திரவு இன்றி, சிலதினம் பகவன்நாம பஜனம் பண்ணிக்கொண்டிருக்கலாம். மந்திரவாதிகள் என்னைத் தாங்கள் முன்னே உட்கார வைத்து தங்கள் திருமந்திரங்களை ஜபித்தால் நான் அவர்கள் மத்தியில் உட்கார்ந்து திருவட்டாக்ஷரத்தை ஜெபிப்பேன். பகலெல்லாம் கைகொட்டி பண்டரி பஜனை செய்து ஆடிக்களிப்பேன். ஆனால் ஒன்று எனது பிராணபதியான பண்டரிநாதன் என்னிடம் வந்து எனக்கு அனுக்கிரகம் செய்யுமுன், நான் இவர்கள் வழியில் கனவிலும் ஒழுகேன். இதுவே எனது வைராக்கியமான விரதம்'' எனத் தன்மனதில் சிந்தித்துக் கொண்டிருந்தாள். மறுநாள், வெள்ளிக்கிழமையாதலால், பூசாரியான இருளன் மூர்த்திராவ் வீட்டுக்குவந்து, அவர் மனைவியான சக்குபாயைப் பார்த்து, "இவளைப் பெரும்பேய் பிடித்திருக்கிறது, இந்த பேயை ஓட்டுவதற்கு இருபத்தொரு நாள் பூசை நடக்கவேண்டும். என்ன பூசையென்றால், தகட்டில் யந்திரமெழுதி, அந்தத் தகட்டிற்குப் பூசை நடத்தி ஜெபம் பண்ண வேண்டும். இருபத்தோராம்நாள் மசானம் சென்று அங்கு பரதேவதைக்கு பூசை நடத்தி காவுகொடுக்க வேண்டும். அதன் பின்னே இந்த ரக்ஷையை கையிலோ அல்லது திருமங்கிலிய கயிற்றிலோ கட்டிவைக்கவேண்டும். அதோடு எல்லாம் சரியாய்விடும்'' என்றான்.

வைத்தியனால் ஏமாற்றமடைந்த மூர்த்திராவ், அவன் சொல்லியதை யெல்லாம் கேட்டுக்கொண்டு, அவனை நோக்கி, "அடே! இருளா! நீ இப்படிசொன்னால், உன் வார்த்தையைக் கேட்டு மயங்கிப் பொருளை அள்ளி இறைக்கும் புத்திகெட்டவன் நான் அல்ல. இவளுக்கு பேய்ப் பிடித்திருக்கிறதென்றாயே! விரோதியாராவது இவளுக்கு இவ்வாறு செய்திருக்கிறார்களா? அல்லது தற்செயலாக பேயே யிவளைப் பிடித்துக் கொண்டிருக்கிறதா? அவ்வாறானால், எந்த ஊரில், எத்தனை வயதில், எவ்விடத்தில் பிடித்துக்கொண்டது? இதைச் சரியாகத்தெரிந்து சொன்னால்தான் நான் இவள் விஷயமாகச் செலவு செய்வேனேயன்றி, இதற்குமுன் ஒரு தம்படியேனும் செலவு செய்ய மாட்டேன்'' என்று மூர்த்திராவ் சிறிது கோபத்தோடு கூறினன். மந்திரவாதி அவர் கோபத்தையும் சொல்லின் முடுக்கையும் பார்த்துச் சிரித்து, இதைச் சொல்லுவதா பெரிய காரியம்? மாலை எழு நாழிகைக்கு வருகிறேன். நான் வந்ததும் வெற்றிலை ஒன்றில் அஞ்சனத்தைத்தடவித் தருகிறேன். நீங்களே பாருங்கள். எல்லா விஷயங்களும் அஞ்சனத்தில் தெரியும். நான் ஒரு பக்கமாகயிருந்து ஜெபம் பண்ணிக்கொண்டிருப்பேன். நீரே பார்த்து விஷயத்தை தெரிந்து கொள்ளும். அஞ்சனம் பார்ப்பதற்கு தேங்காய் பழம் வெற்றிலை பாக்கு கற்பூரம் சாம்பிராணி இவைதான் தேவை. இதை மாத்திரம் மறந்துவிடாமல் வாங்கி வையுங்கள். நான் வந்து சேருகிறேன்'' என்று சொல்லி, பூசாரியானவன் தனது வீட்டிற்குச் சென்றான். மூர்த்திராவ் பூசாரி சொன்னபடி யாவையும் வாங்கி வைத்துக் கொண்டு இருளன் வருகைக்கு எதிர்பார்த்துக் கொண்டிருந்தார். மாலைப்பொழுது நாழிகை ஏழானதும், சிஷ்யர்கள் ஏழுபேருடன் இருளன் வந்து சேர்ந்தான். இதற்குள் மூர்த்திராவின் தங்கையான சப்பாயி, குத்துவிளக்கை நன்றாக விளக்கி திரிபோட்டு தீபமேற்றி கிழக்குமுகமாக வைத்தாள். சக்குபாய் வடக்குமுகமாக உட்கார வைக்கப்பட்டாள். பூசாரியானவன் தேங்காய் உடைத்து தூபம் காட்டி கற்பூரம் கொளுத்தி சிறிதுநேரம் ஜெபம் செய்து ஒரு வெற்றிலையில் அஞ்சனத்தைத் தடவி மூர்த்திராவிடம் கொடுத்து "பாரும்'' என்று சொன்னான். மூர்த்திராவ் அந்த அஞ்சனத்தையே பார்த்துக்கொண்டிருக்க, எதிரே உள்ள தீபத்தின் ஒளி அஞ்சனத்தில் படவும், ஆஞ்சனேயர் தோன்றினார். "ஆஞ்சனேயர் வந்திருக்கிறார்'' என்று மூர்த்திராவ் சொன்ன

தும், சுப்பாயி அண்ணு? அவரிடம், "இவளை எந்த இடத்தில் அந்தப்பேய் பிடித்தது?" என்றுகேளும் என்ருள். அவரும் கேட்டார். ஆஞ்சநேயர் எழுதிக் காட்டுகிருரென்று ஒவ்வொரு எழுத்தாக வாசித்துப் பின்வருமாறு சொன்னுர். "இவள் ஐந்துவயதில் சிறு பெண்களோடு தெருவில் சிறு வீடுகட்டி விளையாடிக் கொண்டிருக்கும்பொழுது ஒரு முனி இவளைப் பிடித்தது" என்று சொன்னுர். இதைக்கேட்ட சக்குபாய், "ஆம் நிஜந்தான். அடே! முனி பிடித்தது! என்று சொல்லாதே இரண்டு எழுத்தை விட்டுவிட்டு வாசிக்கிருயா? முனிவர் பிடித்தாரென்று சொல்லு" என்று கைகொட்டி, "விட்டல், விட்டல்" என்று சொல்லிக்கொண்டே ஆட ஆரம்பித்தாள். இதற்குள் மூர்த்திராவ் பயந்து அஞ்சனத்தைக் கீழே போட்டுவிட்டார்; பூசாரியும் நல்லவேளையாய் இவன் மையைக் கீழே போட்டுவிட்டானென்று தன் ஜெபத்தை முடித்துக்கொண்டு, மூர்த்திராவைப் பார்த்து, இவ்வளவுதானே விஷயம் தெரிய வேண்டியது? ஐந்தாவது வயதில் குழந்தைகளோடு சிறு வீடுகட்டி விளையாடும்பொழுது தெருவில் முனி பிடித்ததாம். நன்ருகத் தெரிந்துகொண்டீரல்லவா? இன்னும் உங்களுக்கு என்ன சந்தேகம்" எனக் கேட்டான். மூர்த்திராவ், "விஷயம் தெரிந்தது. இன்றே பூசைக்கு ஆரம்பம் செய்யலாமா" என்று சொல்ல, மந்திரவாதி, "இப்பொழுது எப்படி முடியும்? நான்கு விரல் அகலம் சம சதுரமாக இரண்டு தங்கத்தகடு உமக்கும், உமது மனைவிக்கும் வேண்டும். அதில் சக்கரம் வரைந்து அக்ஷரம் அடைக்க இரண்டுநாள் செல்லும். பூசைக்கு வேண்டும் சாமான்கள் சேகரிக்க வேண்டாமா? வருகிற செவ்வாய்க்கிழமை முதல், பூசையை வைத்துக் கொள்ளுவேன். சில கரு மருந்துகள் தயார் பண்ண பத்து விராகன் வேண்டும்" என்று சொல்லி மூர்த்திராவினிடம் பத்து விராகன் வாங்கிக்கொண்டு சாராயம் குடித்து ஆடிக்கொண்டு தன் வீடு போய்ச் சேர்ந்தான்.

மூர்த்திராவ் மறுநாள் பொழுது விடியுமுன் எழுந்து, ஆறு களஞ்சு சொக்கத் தங்கத்தை எடுத்துக்கொண்டு தட்டான் வீடுசேர்ந்து, நான்குவிரல் சமசதுரமாக அந்த தங்கத்தை தகடு அடிக்கச் சொல்லி, அதை எட்டுநாழிகைப் பொழுதிற்குள் கையில்வாங்கி பூசாரியிடம் கொண்டுபோய்க் கொடுத்தான். அவன் அதை வாங்கித் தன்கண்களில் ஒத்திக்கொண்டு, 'ஐயா தாங்கள் தங்கள் மனைவியைப்பற்றியகவலை ஒருசிறிதும் அடையவேண்டாம். உங்கள் வீட்டில் கவலையற்றிருங்கள்' எனச்சொல்லி, அவரை அனுப்பிவிட்டு தனது வஞ்சனைதொழிலில் இறங்கினுன். உத்தவசித்தர்களே! இந்த மந்திரவாதியின் வஞ்சனை என்ன வென்பதை சொல்லுகிறேன் கேளுங்கள்" என்று நாபாசித்தர் சொல்லுகிருர். "தங்கத் தகடுகளைத் தான் வாங்கி வைத்துக்கொண்டு, அதே அளவில் இரண்டு

வெள்ளி தகடுகள் அடித்து அதில் சக்கரம் வரைந்து, அக்ஷரம் அடைத்து, ஒரு குன்றி அளவு தங்கம் கலந்த சேனீரில் துவைத்து, பார்வைக்கு பத்தரைமாற்றுப் பசும்பொன் தகடாகக்காட்டி, பூசையில் வைப்பார்கள். தங்கத்தகடு எதற்கென்ருல், சொர்ணதகட்டிற்குத்தான் முப்பது வருஷம் சக்தியுண்டு என்று சொல்லுவார்கள். இதைப் பூசைசெய்து கட்டும்பொழுது தங்கத்தில் ஒரு தாயத்து அடித்து தரச்சொல்லி, அந்தத் தகட்டை இன்ருெருவர் கையில் கொடாமல் தகட்டை விபூதியோடு சேர்த்து மடக்கி, நூல் கயிறுகொண்டு கட்டி, தாயத்திற்குள் அடைத்து, அடைத்தவைநிறைய விபூதியை நிரப்பி மேலே தங்கச்சீல் வைத்து, அந்தச் சீலோடு தாயத்தை மருவி கழுத்திலோ அரைஞாண் கயிற்றிலோ கையிலோ கட்டிவிடுவார்கள். இது முப்பது வருஷத்திற்குச் சக்தியுடையதாதலால், இதை யார் பிரித்துப் பார்க்கப்போகிருர்கள்? இதுவே அவர்களின் முதலாவது மோசத்தொழில். மந்திரவாதியான இருளனும், அவ்வாறே தகட்டைமாற்றி ஆநந்தமடைந்து செவ்வாய்க்கிழமையை யெதிர்பார்த்திருந்தான். பொழுது விடிந்ததே ஸ்நானம் பண்ணி திருநீறு இட்டு, கையில் பிரம்பொன்று தூக்கி தலைநிமிர்ந்து பார்த்துக்கொண்டு மூர்த்திராவின் வீட்டுக்கு வந்து யந்திர தகட்டைக் காட்டி சாமான்கள் வாங்கும் ஒரு சீட்டை மஞ்சள் தடவி அவன் கையிலே கொடுத்துவிட்டு, "எல்லாம் தயாராகட்டும். நான் இரவு ஒன்பது நாழிகைக்கு வருகிறேன்" என்று சொல்லி நடந்தான். அந்த சீட்டில் எழுதியிருக்கும் சாமான் இன்னவையென்று சொல்லுவது முறையாகுனும், நமது சதா நாயகியாகிய சக்குபாய்க்கு செய்யும் போலிப்பூசையில் விரிவாகச் சொல்ல எனக்கு மனம் வரவில்லை. பூசை என்று சக்குபாயைப் முன்னே உட்கார வைத்துக்கொண்டு எட்டுபேர்கள் கூடி வேப்பங்குலைகளை கையில் பிடித்து அடித்து பொழுது விடியும்வரை பூசை முன்னே நிரப்பி வைத்திருக்கும் சாராய குப்பியைத் திறந்து குடித்துக்கொண்டும் இருந்து வீடு சேர்வார்கள்.

இத்தகைய மோசத் தொழிலாளியான இருளன் பூசை முன்னே சக்குபாய் வந்து உட்கார்ந்து திருவஷ்டாக்ஷரத்தை ஜெபம் செய்ய ஆரம்பித்தாள். அவர்கள் வேப்பங் குலையால் தன்னைச் சாடுவதும் தெரியாது தன்னை மறந்திருப்பாள். இவ்வாறு இருபத்தொருநாள் பூசையும் கழிந்து, மசான பூசைக்களிப்பு யாவும் பூசாரிகள் களிக்க நடந்தது. உடனே பூசையில் தங்கத் தகடுபோல பிரகாசித்துக்கொண்டிருந்த வெள்ளித் தகடை இருவருக்கும் கொடுக்கும்பொழுது, மூர்த்திராவ் சிரத்தையோடு வாங்கித் தனது பூணூலில் முடிந்துகொண்டார். சக்குபாயினிடம் கொடுக்கும்பொழுது, இடி முழங்கினுல் போலக் கர்ச்சித்துக் கொண்டு "நீயா என்னை ஓட்டுகிறவன்? உனது உயிரை எமன் திசைக்கு ஓட்டுகிறேன்" என்று பூசாரி கொண்டுவந்த தடியை

யெடுத்து அவன் தலையில் ஓங்கி அடித்தாள். அந்த அடிப்பட்டதே பூசாரியின் மண்டை படாரென்று பிளந்து இரத்தம் தாரை தாரையாக பெருகக் கீழே விழுந்தான். இதைப் பார்த்ததும் மூர்த்திராவ், தன் மனைவியைப் பிடித்திருந்த பேய் தொலைந்து விட்டதென்று மகிழ்ந்திருந்ததுபோய், அவள் கர்ச்சித்த கர்ச்சனையைக் கேட்டு திடுக்கிட்டு, பூசாரியும் விழுந்து கிடப்பதைக் கண்டு இவர்கள் செய்த மந்திரங்கள் யாவும் பொய்யெனத் தெரிந்து பூசாரியுடனே சேர்ந்து குடிவெறியால் மயங்கிக் கிடக்கும் அவர்களையும் தனது கை ஓயும்மட்டும் கையாலும் தடியாலும் அடித்து விரட்டினார். மந்திரவாதி, மண்டை பிளவுபட்டதாலுண்டாகிய பாதையும், மூர்த்திராவ், உதைத்த உதையும் அடித்த அடியுமே தான் பெற்ற பெரிய சம்மானமென்று நினைத்து தன் வீடுபோய்ச் சேர்ந்தான். மூர்த்திராவ், ஆயிரக்கணக்காக நிதியைக் கொட்டியும் தன் மனைவிக்கு வந்த நோய் தீராமையைக் கண்டு வருந்தி, அவள் கையிலும் காலிலும் விலங்கை மாட்டி ஒரு அறையில் அடைத்து வைத்தார்.

சக்குபாய் அவ்வறையில் கைவிலங்கு கால் விலங்குடனே பன்னகசயனனை, “அம்மையே! அப்பா! உனது அடியார்களிடம் பரம கருணை காட்டவேண்டிய திருமாமகள் ஒருவள் செய்த தீவினையால் இவள் உம்மை அடைவதற்கு யோக்கியதை அற்றவளென்று பல தோஷங்களைக் கற்பித்தாலும், நீ அவளிடம் கருணைபூண்டு என்னுடைய அடியார்கள் நீ சொல்லும் குற்றம் செய்பவரில்லை. அப்படி செய்தாலும் அதுவும் நன்றாகத்தான் ஆனது என்று குற்றங்களைப் பொருட்படுத்தாது ஆதரிக்கும் உமது கருணையை அடியாள் மாத்திரம் பெறுவதற்கு உரியவளில்லையோ? நான் படுகின்றபாடு உலகில் பஞ்சுபடுமா? சொல்லப்படுமா? நினைக்கப்படுமா? வலையில் சிக்கிய மான்போல் கலங்குகின்றேனே. நீ இரங்கி ஆளாவிடில் நான் என் செய்வேன்? என்னை நினது கருணைக் கண்களால் நோக்கிக் காத்தருளவேண்டுமென்று பிரார்த்தித்து, திருமந்திரம் அனுசந்தானம், பண்ணிக்கொண்டு இருந்தாள். அப்பொழுது, பண்டரிபுரத்தில் எழுந்தருளியிருக்கும் பாண்டுரங்கன் சக்குபாயை ஆட்படுத்தக் கருதி, முன்போல ஒரு வேதியர் உருவத்தை அடைந்து, கையில் தம்பூர் சிப்ளாவுடனே சிந்துதேசத்தைச் சார்ந்த லோகாரண்யம் என்னும் பட்டினத்திற்கு எழுந்தருளி, தெருவீதியில் பஜனை பாடிக்கொண்டு உஞ்சவர்த்தி செய்துவந்தார். இப்படி வரும்பொழுது, சக்குபாய் அடைப்பட்டிருக்கும் மூர்த்திராவின் வீட்டின் சமீபமாக வந்து, அங்குமிங்கும் சாய்ந்து சாய்ந்து ஆடிப்பாடி அயர்ந்தவர்போல வீட்டின் திண்ணையில்வந்து உட்கார்ந்தார். இவர் இவ்வாறிருக்க, சக்குபாய் லோகநாதனை நினைந்து கண்களில் ஆநந்த நீர்பெருக, கைகளை உயர்த்தி, தலைமீது தூக்கி, “வேதத்தி னுள்ளுறை

விமலா போற்றி! கோதற்ற ஞானக்கொழுந்தே போற்றி! தீதற்றவர்க்கு அருள் தேவே போற்றி! போற்றி போற்றி! புனிதா போற்றி! இளமைப் பருவத்தி லென்னை ஆட்கொண்ட கருணைக்கடலே! கற்பகத்தருவே! மலர்மகள் விரும்பும் மணாளா! சரணம்” எனப் பலவாறு தன்மயமாய்த் தியானித்துக்கொண்டிருந்தாள். பாண்டுரங்கன் சக்குபாயின் வைராக்கியமான புத்தியை நினைந்து, அவள் அடையப்பட்டிருக்கும் சன்னலின்முன் சென்று மரகதமலைபோன்ற தனது திருமேனியில் பல தாமரை பூத்ததுபோல், கரசரணாதி அவயவங்கள் பிரகாசிக்க, திவ்யாபரணங்கள் திருமேனியில் விளங்க வைரமுடி திருத்தலையில் பிரகாசிக்க, தனது இடையில் இருகைகளையும் வைத்துக்கொண்டு சாளரத்தின் முன்னே வந்து நின்றார். சக்குபாய் கண் விழித்து, அந்தச் சாளரத்தினண்டைவந்து எழுந்தருளியிருக்கும் பண்டரிநாதனைக் கண்டதும், “ஆ! என் நாதா! அடியாள்மீது உமக்கு இன்றுதான் கருணை வந்ததோ? நான் இதுவரையிலும் செய்த பக்தி உம்மைப் பண்டரிபுரத்திலிருந்து இங்கு எழுந்தருளும்படி போதித்ததோ? உமக்காகவே நான் இந்தச் சிறை புகுந்தேன். உமது சொல்லைக் கடந்திலாது நான் இத்தனை நாளாக அவதிப்பட்டேன். அதன் பயனாகக் காணாத நற்பொருளை இன்று காணப் பெற்றேன்’ என்று தலைகவிழ்ந்து நாணினவள்போலத் தளர்ந்து தலையைத் தூக்கினாள். பண்டரிநாதனாயிருந்த உருவம் மாறி, முன் சக்குபாய்க்கு உபதேசம் செய்த பாகவத வேஷத்தோடு முன் நின்றார். சக்குபாய் தலைகவிழ்ந்து நின்றவள், தலை தூக்கியதும் பண்டரிநாதனைக் காணாது தன்னை ஆட்படுத்திய அந்தணராய் நிற்பதைக் கண்டு, தன் சரீரம் பூரித்து மகிழ்ந்து புளகாங்கிதமடைந்து, “நாம் சற்றுநேரமாவது இவருடன் பேசப்படாது இவர் நம்மிடம் பொய் சொல்லிப் போனவர். இவரை ஒரு நொடிப் பொழுதாவது பாராமலிருப்போம்” என்று தலைகவிழ்ந்தாள். அந்தணர் வேடந்தரித்த பண்டரிநாதன் தனது வடிவத்தோடு நின்றார். சக்குபாய் மனந்தாளாது தலைதூக்கிப் பார்க்க, வேதியரைக் காணாது, பாண்டுரங்கனாகச் சேவை தருவதைக் கண்டு, களித்து ஆனந்தமுற்றாள்.

இந்தவிதமாகப் பண்டரிநாதன் ஒருதடவையும் தனக்கு உபதேசம் பண்ணிய ஆசாரியனாக ஒருதடவையும் காட்டி, மயங்கும்படிச் செய்து, அவள் கண்ணின்முன் நின்றும், அப்பொழுது மறைந்து உஞ்சவர்த்தி பிராமணனாக மூர்த்திராவின் தெருத்திண்ணையில் வந்து உட்கார்ந்தார். சற்றுநேரம் வெய்யலில் நடந்து வந்ததாலுண்டாய களைப்பால் சோர்ந்தவர்போலிருந்து மறுபடியும் மெல்ல எழுந்து நின்று, “அம்மா! வயிறு பசிக்கிறது. கொஞ்சம் அன்னம் கொடுத்தால் ஆவிதரிக்கும். இந்த ஏழைப் பிராமணன்மீது கருணை செய்து ஒரு கவளம் அன்னம்

கொடுங்கள்" என வேண்டினார். இவ்வார்த்தையைக் கேட்ட மூர்த்திராவின் தாயாகிய துளசிபாய் மிகுந்த கோபத்தோடு ஓடி வந்து; அடே! கிழப்பிராமணா! எழுந்து ஓடுகிறாயா இல்லையா? உனக்குச் சோறுவடித்து இங்கே கொட்டி யிருக்கிறது. வாரிக் கொண்டு போகலாம் என்று வந்தீரா? இப்பொழுதே எழுந்து ஓடிவிடு" என்று கோபத்தோடு சொல்லவும், மாயவ அதிதி யானவர், "அம்மா! என்னைக் கோபிக்க வேண்டாம். அன்னம் இல்லையென்றால் நானே எழுந்து போய் விடுவேன். ஐயோ! இந்த ஊரெல்லாம் சுற்றிப் பகல் பதினைந்து நாழிகை வரை அலைந்தும் ஒரு வீட்டில் ஒரு கவள அன்னம் கொடுப்போ ரில்லையே. அம்மா! நீங்கள் அன்னம் கொடாது போனாலும், கொஞ்சம் தாகத்திற்கு ஜலமாவது கொடுங்கள். ரொம்பக் களையா யிருக்கிறது" என்று சொன்னார். துளசிபாய், "தாகமானால் இதோ சமீபத்தில் குளம் இருக்கிறது. தண்ணீர் குடித்துவிட்டுச் செல்லும். என்குமாரன் மிகப்பொல்லாதவன். ஆகையினால் அவன் கையால் அடிப்பட்டு சாகாதீர்; சீக்கிரம் போய்விடுங்கள். அவன் வருவான்" என்று அவரை மிரட்டினாள். வேதியர் வடி வங்கொண்ட சனார்த்தனன், "அம்மா! தண்ணீரும் கொடுக்க மன மில்லாது போனால், இந்தத் திண்ணை குளிர்ச்சியா யிருக்கிறது. சற்றுநேரம் இங்கே இருந்து இளைப்பாறிவிட்டுப் போகிறேன்" என்றார். "ஓய் பிராமணரே! இது வந்தவர்கள் தங்கும் சத்திர மல்ல. அதோ ஊருக்கு மேற்கே சத்திரம் இருக்கிறது. உம் மைப்போன்ற சோம்பேறிகள் அங்கே தூங்கிக் கொண்டிருக்கிறார் கள். நீரும் போய் தூங்கலாம். எழுந்துபோம்" என்று சொன் னாள். இவ்வார்த்தையைக்கேட்ட வேதியராகியவிமலன், "அம்மா! முற்காலத்திலிருந்த பெரியோர்கள் வீடுகட்டும்பொழுது தெருத் திண்ணை என்று கட்டுவார்கள். கட்டியபின், "இது நமக்குச் சொந்தமல்ல. தெருவில் வழிப்போக்கராக வருபவர்கள் தங்கு வதற்கென்றே கட்டுவார்கள். கொஞ்சம் யோசித்துப் பார்த்தால், இந்தத் திண்ணை எனக்கு நான் இருக்கும்வரை சொந்தமென்று கூடச் சொல்லுவேன்" என்றார்.

மாதவரான வேதியர் சொல்லிய இவ்வார்த்தையானது துளசி பாய்க்குப் பெருங் கோபத்தை யெழுப்பியது. அக்கோபாவேசத் தால் வேதியரைப்பார்த்து "அப்படியா? நல்லது, இன்னும் சற்றுநேரத்தில் இந்த வீடே எனக்குச் சொந்தமென்று சொல்லி விடுவீர் போலிருக்கிறதே? நல்லது, நீஎன்னகதி ஆகிறீர் பாரும்" என்று சொல்லிவிட்டு கவலைக்கடலில் ஆழ்ந்திருக்கும் தனது குமா ரனை மூர்த்திராவினிடம் ஓடிவந்து, "அடே! மூர்த்தி! ஒரு பிரா மணன் வந்து பிச்சை கேட்டான். நான் இல்லை என்று சொன் னேன். அவன் போகாமல் இந்த வீடே எனக்குச் சொந்தமென்று சொல்லி, என்னையும் வாயில் வந்தபடி வைகின்றான்" என்று

சொன்னாள். இவ்வார்த்தையைக் கேட்டதும் மூர்த்திராவ், ருத் ராம்சமான கோபத்தோடு "அவன் உயிரை வாங்கி விடுகிறேன் பார்" என்று ஒரு தடியை யெடுத்துக்கொண்டு "ஆரடா! என் வீட்டுத் திண்ணையில்வந்து வம்பு பேசுகின்றவன்? இப்பொழுதே நீ எழுந்து போகிறாயா அல்லது மண்டை உடைந்து சாகிறாயா? என்ன சொல்லுகிறாய்?" என மிகுந்த கோபத்தோடு கேட்டான். அதிதி வடிவங் கொண்ட அருமறைப்பொருள் அவன் வார்த்தை யைக் கேட்டு, "ஐயா! நான் ஒரு ஏழை பிராமணன். இந்த ஊரெல்லாம் திரிந்து அலைந்தேன். ஒருபிடி அன்னம் கிடைக்க வில்லை. உம்முடைய வீட்டுக்கு வந்தேன். உமது தாய் அன்ன மில்லை என்றாள். ஜலமாவது கொடும் என்றேன், அதுவும் கிடை யாதென்றாள். சற்று இங்கே உட்கார்ந்து விடாய் தணிந்து போகிறேன் என்றேன். அதற்கும் சத்திரம்போய் படுத்துக்கொள் ளென்றாள். சத்திரம் போவதற்குள் என் உயிர் போய்விடும் போலிருக்கிறது. சுவாமி! கொஞ்சம் அன்னமிருந்தால் கொடுங் கள் உங்களுக்கு மிகுந்த புண்ணியமுண்டாகும்" என்றார். மூர்த்தி ராவ் வேதியர் வார்த்தையைக்கேட்டு மிகுந்த கோபங்கொண்டு தடியை ஓங்கி, "உன்னிடம் என்ன சொன்னேன்? இப்பொழுது எழுந்து போகிறாயா இல்லையா" என்று சொல்லி வேதியர் கையைப் பிடித்திழுத்து வெளியே தள்ளினான். வேதியனாய் வந்த விமலன், தட்டித் தடுமாறிக்கொண்டு மறுபடியும் அந்தத் திண்ணையில்வந்து உட்கார்ந்து "ஐயா! நான் சொல்லுவதைக் கேளும். உமதுவீட்டில் ஒரு பெண்ணுக்குப் பேய்கோளார் இருக் கிறதுபோல் தோன்றுகிறதே அப்படி ஏதாவது உண்டா?" எனக் கேட்டார். மூர்த்திராவ், "என் வீட்டில் என்ன இருந்தால் உமக் கென்ன? நீர் போகிறீரா இல்லையா" எனச்சொல்ல, "அப்படி யில்லை, நான் ஒருவர் கஷ்டப்பட பார்க்கமாட்டேன். உம்முடைய மனைவிக்கு பேய்ப்பிடித்திருக்கிறது அதை என் ஒரு பார்வையினா லேயே குணப்படுத்தி விடுவேன்" என வேதியர் சொல்ல மூர்த்தி ராவ், "சுவாமி! நான் உம்மை ஒருபொழுதும் நம்பமாட்டேன். எட்டு மந்திரவாதிகள் கூடி நாற்பதுநாள் மந்திரித்தும், ஏராள மான திரவியத்தைச் செலவு செய்தும், ரக்ஷைகட்டியும், தீராதது உமது பார்வையால் குணமாக்குவேனென்றால், நீர் பிச்சை எடுக்க வருவதற்குக் காரணமில்லையே? அவள் விஷயமாக ஏராளமான பொருளைச் செலவிட்டேன். இனி ஒரு தம்படிகூட செலவு செய்ய மாட்டேன்" என்று உறுதியாய்ச் சொன்னான்.

பார்ப்பனர் வடிவங்கொண்ட பாண்டுரங்கன் அவன் கூறிய உறுதி வார்த்தையைக் கேட்டு நகைத்து "உம்முடைய மனைவிக்கு பிடித்திருக்கும் பேய் முனியாக்கும், அதை ஓட்டுவதற்கு ஒரு தம் படி கூட நீ என்னிடம் கொடுக்க வேண்டாம். வேறு ஏதாவது

செலவு யிருக்குமோயென்னும் பயமும் உமக்கு வேண்டுவதில்லை. நான் போய்ப் பார்த்தவுடனே அவளைப் பிடித்த முனிக்கு சனி பிடித்து, இனி இந்த ஊரின் எல்லையை விட்டுவிட்டு ஓடிவிடும்" என்று சொன்னார். இதைக் கேட்டதும் மூர்த்திராவ், "சிலவு இல்லை என்று இவர் சொல்லுவதினால் பார்ப்போம்" என்று சம் மதித்து, "சுவாமி! நான் சொல்லிவிட்டேன். சிலவு இல்லாது போனால்மாத்திரம் நீர் பார்க்க எனக்குச் சம்மதம். அப்படியானால் மாத்திரம் நீர் பார்க்க எனக்கு சம்மதம். அப்படியானால் வந்து பாருங்கள்" என்றான். வேதியர், "நீ எனக்கு ஒரு கவளம் சாதம் கூட தரவேண்டியதில்லை. நான் பார்க்கிறேன். அந்தப் பெண் எங்கேயிருக்கிறாள்? அவளை என்னிடங் காட்டு" எனக்கேட்டார். மூர்த்திராவ், வேதமுதல்வனான விப்பிரனை அழைத்துக்கொண்டு சக்குபாய் அறையின் முன்னே போய்ப் பூட்டைத் திறந்து உள்ளே அழைத்துச் சென்றான். சக்குபாய் தனது ஆசாரியனாயும், தெய்வமாயும் விளங்கிய பண்டரிநாத வேதியனைக் கண்டதும், எழுந்து ஓடிவந்து மூன்றுமுறை பிரதக்ஷணம் செய்து, அவர் திருவடித் தாமரைகளைத் தனது தலையிலே சூடி, எழுந்து இரு கைகளையும் குவித்து, வணங்குவதற்கு இல்லாத நிலையில் விலங்கு போடப்பட்டிருப்பதினால், கைகளைச் சேர்த்து குவித்துக் கொண்டு தோத்திரம் பண்ணினாள். மூர்த்திராவ் இதைப் பார்த்ததும், அதிசயமும் துன்பமும் அடைந்தான். ஏனெனில், இவரைப் பார்த்ததும், தன் மனைவிக்கு ஏற்பட்ட பேய் விலகியதால் அதிசயமும், இவ்வளவு சக்தியுடைய சாதுவை நிந்தித்து வெளியில் தள்ளியதால் வந்த துக்கமும் அடைந்து, அவர் திருவடிகளிலே சாஷ்டாங்கமாக விழுந்து "சுவாமி! உமது பெருமை தெரியாததினால் உம்மை அபாசமாகப் பேசிவிட்டேன். உமது திருவடிகளுக்கு அபசாரப்பட்டேன். க்ஷமித்தருள வேண்டும்" என்று பிரார்த்தித்தான்.

மாயா மறையோனாகிய வேதியர், மூர்த்திராவை நோக்கி, "அப்பா! உனக்குச் சிறிதும் இரக்கமில்லாமல் கை கால்களில் விலங்கு மாட்டியிருக்கிறாயே? விலங்கைக் கழட்டிவிடு" எனத் தெரிவிக்க, அவன் உடனே கொல்லனை அழைத்துவந்து விலங்கைத் தரித்துவிட்டான். சக்குபாய் பரமாத்மாவாகத் தனக்குச் சேவை தந்த தனது ஆசாரியனை பலமுறையும் கண்டு தண்டம் சமர்ப்பித்து ஆறாத மகிழ்வடைந்தாள். அப்பொழுது மாயா வேதியர் மூர்த்திராவைப் பார்த்து, "நான் இவளிடம் தனித்து சற்றுநேரம் பேசி உண்மையைத் தெரிந்துகொள்ள வேண்டும். அதன்பின் உனக்கு ஒரு தம்படிகூட சிலவில்லாமல் ஒரு சாந்தி செய்யவேண்டும். ஆகையினால் நீயும் உன்னைச் சார்ந்தவர்களும் இவளைத் தனியே இந்த அறையில் விட்டுவிட்டு சற்று விலகியிருங்கள்" எனச் சொன்னார். உடனே மூர்த்திராவும், அவன் தாய்

சகோதரிகளும் சக்குபாயை விட்டு விலகினார்கள். சக்குபாய் இருக்கும் அறைக்கு வேதியரான பண்டரிநாதன் சென்று, "குழந்தாய்! உனது வைராக்கியமான பக்தியின் பெருமையை என்னென்று சொல்லுவேன்! எவ்வளவு துன்பங்கள் அணுகினும் அவற்றையெல்லாம் பொருட்படுத்தாது சர்வேஸ்வரனையும் விடாது பக்தி செலுத்தி, ஆசாரியனாய் அமைந்த என்னையும் என் வார்த்தையையும் காப்பாற்றிய வனிதா ரத்தினமே! நீ பரமபதத்தை அடைவதற்குரிய பக்குவம் அடைந்து விட்டாய்; இவ்வளவே போதுமானது. இனி நீ 'உலகத்தோடொத்து வாழ்' என்பதற்கேற்ப நடந்துகொண்டு என்னையும்மறவாது இருந்தால் அதுவே போதுமானது." எனத் தெரிவித்தார். இவ்வார்த்தையைக் கேட்ட சக்குபாய், தனது கண்களில் நீர்ததும்ப தலைகவிழ்ந்து நின்றாள். வைதியர் வடிவங்கொண்ட விமலன் அதைக்கண்டு அவளை அன்புடன் "கண்மணீ! நீ என் சந்தோஷமாயிராது அழுதுகொண்டிருக்கிறாய்? உனக்கு நான் சொன்ன ஐந்தாவது நாளில் வரவில்லையே யென்று என்மீது கோபங்கொண்டு நிற்கிறாயா? அல்லது சாமான்யமான மானிட நங்கையர்போல் நாளும் ஒரு கணவனுடன் வாழும்படி நேர்ந்ததே யென்கிற கவலையில் ஆழ்ந்தி அழுகின்றாயா? நீ அழுவதின் காரணத்தை என்னிடம் சொல்லு" என உருக்கமாய்க் கேட்டார். அதற்குச் சக்குபாய் பதில்கூறாது முன்னிலும் அதிகமாக விம்மிவிம்மி அழுது கொண்டிருந்தாள். அடியார்க் கிரங்கும் அண்ணல் என்ன செய்வார்? மறுபடியும் அவளை சிறிது நோக்கி, "நங்கையர்க்கரசி! நீ என்னிடம் பேசாமலும் என்னைப் பாராமலும் இருப்பதேன்? நான் உன்னிடம் சொல்லியவாறு வந்து சேரவில்லை என்றும், உன்னை மறந்து விட்டேனென்றும், நினைந்து என்மீது கோபங் கொண்டு நீ வருந்துகின்றனையா என்ன? கண்ணே! நீ என்னை அடிக்கடி பார்த்துக்கொண்டிருந்தால், எல்லாம் நம் குரு இருக்கிறார். அவர் வருவார். வந்தபின் அவரிடங்கேட்டு நாம் பக்தி செய்வோம், என நினைந்து இருப்பதோடு, ஸ்திரீயாகப் பிறந்து விட்டால், "ஊருடன் ஒத்து வாழ்" என்னும் சொற்படி நீ உலகத்தோடு ஒத்து நடப்பதற்கில்லாமல் போய்விடும். ஆசாரியனாய் அமைந்தவர் கொஞ்சம் ஈஸ்வரனை அடையும் மார்க்கத்தைக் காட்டினால் அதை விடாது பற்றிச் செல்லவேண்டியது சிஷ்யருடைய கடமை. எப்பொழுதும் ஆசாரியன் கூடவேயிருந்து பக்தி செய்வதென்றால், தானாகவே செய்த பக்தி என்று சர்வேஸ்வரன் நினைத்து ரக்ஷிக்க வரமாட்டான். மோக்ஷ வீட்டையும் விரைவாக அடைய முடியாது. இப்பிராயத்தில் உபதேசம் பெற்றவர்கள் எல்லாரும் தானே முயன்று பக்தி செய்து ஈஸ்வரனை அடைந்திருக்கிறார்கள். பிரகலாதன் தாயின் கருவிலிருக்கும்பொழுதே பகவான் நாரதரால் உபதேசம்பெற்று

ஐந்து வயதில் சர்வேஸ்வரனை தரிசித்தான். விதுரனும் ஐந்து வயதில் ஆசாரிய உபதேசம் பெற்று சதா பகவத்தியானபரனாய் நின்று, இளம்பிராயத்திலேயே சர்வேஸ்வரனை சேவிக்கப்பெற்றான். அதுபோல நீயும் என்னிடம் உபதேசம்பெற்று உனக்கு வந்த துன்பங்களை பொருட்படுத்தாது சர்வேஸ்வரனை தியானித்து இன்று பண்டரிநாதனைக் கண்டதாய் நினைத்த பொழுதெல்லாம் நான் வந்துகொண்டிருந்தால் இவ்வளவு சீக்கிரத்தில் உனக்கு பாண்டுரங்கன் சேவை சாதிக்கமாட்டான். நீ இதுவரை செய்த பக்தியே போதுமானது. இனி நீ உனது கணவனுக்கும் மாமி நாத்தி இவர்களுக்கும் கீழ்ப்படிந்து,உலகில் பிறந்த உத்தம நங்கையர்போல இல்லறம் நடத்தி, பண்டரிநாதனை பாண்டுரங்கனை மறவாது ஒழிந்த நேரங்களில் பக்தி செய்துக்கொண்டிரு" என்று ஆசாரியராய் எழுந்தருளிய அந்தணர் சொல்ல, சக்குபாய், இவர் சொல்லிவந்த வார்த்தைகளைச் சாவதானமாகக் கேட்டு, இவர் சொன்னவையாவும் உண்மைதானென்றுதெரிந்து, தனது ஆசாரியன் திருவடிகளில் சாஷ்டாங்கமாக விழுந்து தண்டம் சமர்ப்பித்து எழுந்து கரம் குவித்து நின்று, "சுவாமி! நீர் என்னிடம் சொல்லிய வண்ணம் எழுந்தருளாமையினால் உம்மைப் பொய்யரென்றும், வஞ்சனை செய்பவரென்றும், நிந்தித்திருக்கிறேன். அவ்வாறு நான் செய்த பெருங் குற்றங்களை மன்னித்து இரக்ஷிக்க வேண்டுமென்று பிரார்த்தித்தாள்.

பண்டரிநாதனை மறையோன், குற்றங்களை மன்னிக்கும்படி தன்னைப் பிரார்த்தித்த சக்குபாயைப் பார்த்து மீண்டும், "சக்குபாய்! உனது நாயகன் கடவுளை மறந்தவனாய், சாதுக்களை இகழ்ந்தவனாய், லோபியாய், பொருளாசைப் பேயனாய், இருந்தாலும், அவனும் உன்னாலே பரமபதம் என்னும் முத்திவீட்டை அடைய உரியவனாவான். இன்றுமுதல் நாயகனுக்கும், மாமி, நாத்திகளுக்கும் கீழ்ப்படிந்து நடந்து யாவரையும் மகிழச்செய்து சர்வேஸ்வரனையும் மறவாது இரு" என்று சொல்லி, சக்குபாயை அணைத்துக்கொண்டு அவள் அடையப்பட்டிருந்த அறையிலிருந்து வெளியில் வந்தார். சக்குபாய் தனது மாமியாகிய துளசிபாயை நமஸ்காரம் பண்ணி, "மாமி! எனக்கு இப்பொழுதுதான் அறிவு வந்தது. நான் அறிவு இல்லாமல் எதாவது குற்றங்கள் செய்திருந்தால் அக்குற்றங்களை மன்னிக்கவேண்டும்" எனச் சொல்லி வணங்கி நின்றாள். பண்டரிநாதனை பிராமணன் மூர்த்திராவைப் பார்த்து, "உனது மனைவிக்கு ஏற்பட்டிருந்த முனி என்னும் பேயை ஓட்டிவிட்டேன். ஆனால், இவள் மூன்றுநாள் குளத்திற்குச் சென்று ஸ்நானம் செய்யவேண்டும். நான் குளத்திற்கு வந்து இவள்மீது ஒட்டியிருந்த அந்த முனியைக் குளக்கரையிலிருக்கும் அரசமரத்தில் ஸ்தாபனம் பண்ணிவிடுகிறேன். அவ்வாறு செய்வதற்கு பணச்சிலவு உண்டோ என்று நீ பயப்

படாதே. ஒரு தம்படிகூடச் சிலவில்லையென்று சொல்லி, இன்றுமுதல் உனது மனைவியோடு இன்புற்று வாழ்வாய். என்று ஆசீர்வதித்தார். மூர்த்திராவ் தன் தாயோடுவந்த வேதியர் திருவடிகளில் சாஷ்டாங்கமாய் நமஸ்காரம்பண்ணி "தாங்கள் அடியேன் செய்த குற்றத்தை மன்னிக்கவேண்டும்" என்றான். அதிதியாய் எழுந்தருளிய பண்டரிநாதனும் யாவரையும் ஆசீர்வதித்து 'நாளைக் காலையில் வருகிறேன்' என்று சொல்லிச் சென்றார். சக்குபாயும் அன்றுமுதல் தனது மாமி கொண்டாட, நாத்தியர்கள் புகழ, நாயகன் மகிழ காலையிலெழுந்து குளத்திற்குச் சென்று நீர்த்தமாடி வேதியர் சொன்ன வண்ணம் அரசமரத்தைச் சுற்றி வந்து தனது வீட்டுக்கு வந்து பாத்திரங்களைப் பால்போல் விளக்கி, அறுசுவையும் அமைய தளிகைபண்ணி, தன் தந்தையை தனது தாய் எவ்வாறு உபசரித்து அமுது செய்விப்பாளோ, அதுபோல, தன் நாயகனுக்கு உபசரித்து உணவு ஊட்டி, தனது மாமி நாத்தி இவர்களை உபசரித்து வீட்டுக் காரியங்களையெல்லாம் தானே பார்த்து யாவரும் கொண்டாட வாழ்ந்துவந்தாள்.

சக்குபாய் மூர்த்திராவின் தவப்பயன் என்று சொல்லும் வண்ணம் நடந்துவந்தாலும், 'தாயிமனம் தீர்க்குடத்தே தான்' என்னுமாபோல், அல்லும் பகலும் நினைவு பூராவும் பண்டரிநாதன் திருவடியேயன்றி, வேறில்லை; இதுபோல் சக்குபாய் வாழ்ந்துவரும்நாளில், ஒருநாள் அவ்வூரில் உள்ளவர் யாவரும் "சித்திரா பௌர்ணமி உற்சவமென்று, பெருமாள் நதிக்கு எழுந்தருளியிருக்கிறார்" என்று புளியாவரை ததியோதனம் அக்கார வடிசில் பொங்கல் முதலிய சித்திரான்னங்களை எடுத்துக்கொண்டு தங்கள் குடும்பத்தோடு ஆற்றங்கரைக்கு சென்று, சந்தோஷமாக உண்டு தாம்பூலந் தரித்துச் சித்திரைமாதம் பௌர்ணமி சந்திரிகையில் கூட்டம் கூட்டமாக ஆநந்தமாய்ப் பேசி விளையாடிக்கொண்டிருக்கும்பொழுது, சக்குபாய் தன்வீட்டாரோடு ஆற்றங்கரைக்கு வந்து தனது நாயகன் முதலியவர்கள் மகிழ சித்திரான்னங்களைப் பகிர்ந்து கொடுத்துத் தானும் சாப்பிட்டு மாமியின் பக்கத்தில் மரியாதையாக உட்கார்ந்துக்கொண்டு ஏதோ கிரகசம்மந்தமான வார்த்தையை பேசிக்கொண்டிருந்தாள். வேறொருபக்கத்தில் அவ்வூரிலுள்ள பல ஸ்ரீகள்கூடி உட்கார்ந்துக்கொண்டு ஊரிலுள்ள ஸ்ரீகளின் நடத்தையைப்பற்றி அவளப்படி இவளிப்படி என்று பேசிக்கொண்டு பொழுதுபோக்கிக்கொண்டிருந்தார்கள். அந்த இடத்திற்கு மூர்த்திராவ் வந்து ஊர்வம்பு பேசிக்கொண்டிருக்கும் ஸ்திரீகளைப் பார்த்து, "அம்மா! நீங்கள் ஊரிலுள்ள பெண்களையெல்லாம் குறை கூறுகிறீர்களே! எனக்கு மனைவியாய் வாய்த்த சக்குபாயின் குணங்களை நீங்கள் புகழ்ந்து கொண்டாடவேண்டாமா? எனக்கு அவள் கிடைத்ததுபோல இந்த ஊரில் வேறொருவனுக்கும் மனைவி கிடைத்திருக்கிறாளா? அவள் குணங்களை

எனது ஒரு நாவால் புகழ முடியுமா? ஆதிசேஷனைப்போல் ஆயிரம் நாவு இருந்தால் புகழலாம், அவளைப்போல் அழகுபடைத்த பெண்கள் விண்ணுலகத்திலாவது மண்ணுலகத்திலாவது பாதாள உலகிலாவது உண்டா? வசிஷ்டர் மனைவியாகிய அருந்ததியானவள் இவள் கற்புக்குத் தோற்றவள் என்று சொல்ல வேண்டுமேயன்றி, வேறல்ல. அவள் பெரிய கோட்டீஸ்வரன் குமாரியாகயிருந்தும், கௌரவம் பாராட்டுகிறாளா? தனக்குச் சமமான பெண்களுடன்கூடி உங்களைப்போல் ஊர்வம்பு பேசுகிறாளா? எவ்வளவு மரியாதையாகயிருக்கிறாள் பாருங்கள். அவள் குளிர்ந்த முகங் கண்டால் அப்பொழுதே பசி போய்விடும்" எனப் பலவாறு தனது மனைவியைத் தானே கொண்டாடிக்கொண்டான். ஊர் வம்பிகள் அவன் சொல்லிய வார்த்தைகளைக் கேட்டு, "மகாசபைக்கு சபாநாயகமாக விளங்கும் ருக்மணிபாய் என்பவள் மூர்த்திராவைப் பார்த்து, "ஐயா! உமது மனைவியை பதிவிரதையல்லவென்றாவது; அழகில்லை என்றாவது; பெரிய கோட்டீஸ்வரன் பெண்ணல்லவென்றாவது: வேறு ஏதாவது உமது மனைவியைக் குறித்து நாங்கள் பேசிக்கொண்டிருந்தோமா? நாங்கள் எங்களுக்குள் ஏதோ பேசிக்கொண்டிருந்தால் ஆண் பிள்ளையாகிய நீ, பெண் பிள்ளைகளாகிய எங்களிடம் வந்து உமது மனைவியின் பிரபாவத்தை பெரிய நாடகமாகப் பேசுகிறாயே? உன் பெண்ஜாதி அழகானால் உனக்குதானே? உன்னைப்போல ஊரிலுள்ள புருஷர்களுக்கென்ன? இந்த ஊரில் என்னைப்போல அழகும் குணமும் உடைய மனைவியைப் பெறவில்லை என்று யாவரையும் பரிகசிக்கிறாயோ? நாங்களெல்லாம் அழகல்லாதவர்களென்று எங்களை விலக்கி வைத்துவிட்டீர்களா? எங்கள் புருஷர்கள் அவ்வாறானால், நீ எங்களிடம் இவ்வாறு பேசலாம். உன் மனைவி உனக்கு அழகானால், எங்கள் புருஷர்களுக்கு நாங்கள் அழகுதான். அந்த சக்குபாயின் நடத்தை எங்களுக்குத் தெரியாது என்று எண்ணியிருந்தாயா? உன் பெண்டாட்டியின் யோக்கியதையை இன்னும் பத்து தினத்தில் நாங்கள் கையும் மெய்யுமாய்க் காட்டுகிறோம். நீயே பார்த்துக்கொள்" என்று சொல்லிவிட்டு தனித்தனியே பிரிந்து போயினர்கள். மூர்த்திராவ் "அந்த ஸ்திரீகளினிடம் சென்று நான் இவ்வளவு தூரம் என் மனைவியைப் புகழ்ந்து பேசியிருக்கப்படாதென்று" நினைந்து நினைந்து வருந்தினார்.

குளத்தில் விழும் சக்குபாயைக் காத்து ரக்ஷித்த சருக்கம்

சக்குபாய் தனது நாயகன் தீனபந்துவான பண்டரிநாதனே என்று சதா அவனையே நினைந்து நினைந்து உருகியும், அவரைப் பிரிந்திருக்க மனந்தாளாதவளாய் தனது உயிரை மாய்த்து எம்பெருமானை அடைவதென்று தண்ணீர்க்குடத்தை எடுத்துக்கொண்டு குளத்திற்கு வந்து, "ஆ! கிருஷ்ணா! துவாரகவாசா!

பாண்டுரங்கா! வாசுதேவா! முகுந்தா!" என்று தோத்திரம் பண்ணி, குளத்தில் விழுந்தாள். உடனே பண்டரிநாதன், வேதியர் வடிவாய் வந்து சக்குபாயைத் தூக்கி சக்குபாயின் தலையைத் துவர்த்தி, மடிமீது உட்கார வைத்துக்கொண்டு, "சக்குபாய்! நீ என்ன காரியம் செய்துவிட்டாய்? இப்படி நீ செய்தது நியாயமா? குளத்தில் விழுந்து மடிந்தால் பரமபதம் கிடைக்குமென்று எண்ணமா? ஒருவர் எவ்வளவுநாள் கர்மானுபவமாக பூமியிலிருந்து தீரவேண்டுமோ, அவ்வளவு நாளும் இருந்து இறந்தால்தான் பரமபதம் சேரலாம். குளத்தில் விழுந்தோ, கழுத்தில் கயிறு மாட்டி நாற்று நின்றோ, இறந்தால் அது தற்கொலை என்னும் பாதகமாகும். அப்படி இறந்த ஆன்மாவானது, பைசாச ரூபமாய்த்தானிருக்கும் காலம்வரை திரியும். ஆகையினால் நீ இனி இவ்வாறு தற்கொலை செய்துகொள்ளத் துணியாதே" என்று சொல்லிக்கொண்டிருந்தார். இதற்குள் மூர்த்திராவினிடம், சித்திராபௌர்ணமை யன்று சபதம் பேசிய ருக்மணிபாயும் அவள் தோழிகள் சிலரும் தண்ணீர் மொள்ள வந்தார்கள். சக்குபாய் ஒரு பிராமணன் மடியில் உட்கார்ந்திருப்பதைக் கண்டு, ஜலம்கூட மொள்ளாமல் நேராக மூர்த்திராவின் வீட்டிற்கு வந்து, "ஐயா மூர்த்திராவ்! உமது பெண்டாட்டியின் யோக்கியதையை குளக்கரையில் போய்ப்பாரும்" என்று சொல்லிவிட்டுத் தாங்களும் தண்ணீர் மொள்ள குளத்திற்கு மறுபடியும் வந்தார்கள். மூர்த்திராவ் திடுக்கிட்டு ஒரு பெரிய தடியொன்றை எடுத்துக்கொண்டு வாயுவேகமாகக் குளக்கரைக்கு ஓடிவந்து ஒரு பிராமணன் மடியில் உட்கார்ந்திருக்கும் சக்குபாயைப் பார்த்து, ஆறாத கோபம் கொண்டு, 'இந்தப் பிராமணன் உயிரை ஒரே அடியில் போக்கிவிடுகிறேன்' என்று தடியைத் தலைமீது தூக்கிக்கொண்டு ஓடிவந்து, அடே நீ யாரடா? என் பெண்சாதியை நீ என்ன பாத்தியதையுடன் உனது மடியின்மீது தூக்கி வைத்துக்கொண்டிருக்கிறாய்? இதோபார் உன் மண்டையைப் பிளந்து விடுகிறேன் என்று சொல்ல, வேதியர் சிரித்துக்கொண்டு "அடே மூர்த்திராவ்! நான் உனக்குத் தெரியவில்லையா? நான்தானே இவளுக்குப் பிடித்திருந்த முனியை ஓட்டினேன். இன்றைக்கு இவள் தண்ணீர் கொண்டுவர இந்தக் குளத்திற்கு வந்ததும் அந்த அரசமரத்தில் ஸ்தாபனம் பண்ணியிருந்த முனி இவளை இந்தக் குளத்தில் தள்ளிவிட்டது. நான் வந்து இவளைத் தூக்கி மயக்கம்தீர என் மடிமீது உட்காரவைத்துக்கொண்டு காதில் சுக்கு வைத்து ஊதி மூர்ச்சை தெளிவித்துக்கொண்டிருக்கிறேன். இவ்வாறு உன் மனைவிக்கு உதவி செய்துக்கொண்டிருக்கிற என்னை அடிக்கிறேன் என்கிறாய்" என்று மாயமறையோன் சொல்லக் கேட்ட மூர்த்திராவ் தடியைக் கீழே போட்டுவிட்டு தன் மனைவியான சக்குபாயை குளத்திலிருந்து கரையேற்றிக் காப்பாற்றிய

வேதியரை வலம் வந்து பணிந்து மன்னிக்கவேண்டுமென்று பிரார்த்தித்துத் தன் மனைவியை அழைத்துக்கொண்டு தன் வீடு சேர்ந்தான்.

தனது ஆசாரியன் சொல்லிய வண்ணம் வழக்கம்போல் வீட்டுக் காரியங்களைச் செய்து மாயவரும் கொண்டாட சக்குபாய் தன் கணவன் வீட்டில் வாழ்ந்துவரும் காலத்தில் ஒருநாள் தண்ணீர் கொண்டுவரக் குடத்தை தூக்கிக்கொண்டு குளக்கரை செல்லுங் காலத்தில் பரம பாகவதர்களான ராமதாஸ், கபீர்தாஸ், கமால்தாஸ் முதலிய அடியார்கள் ஏகாதசி உற்சவத்திற்காக பண்டரிபுரம் செல்லுகிறவர் சக்குபாயின் முன்னேவர சக்குபாய் அந்த பாகவதோத்தமர்களைக் கண்டு அவர்களை வலம்வந்து சாஷ்டாங்க தண்டம் சமர்ப்பித்து, "சுவாமிகள் எங்கே எழுந்தருளுகிறீர்கள்?" என்று சக்குபாய் கேட்டாள். அந்த தொண்டர்கள் இவளும் தம்மைப்போன்ற தொண்டர் கூட்டத்தில் கூடும் பாக்கியவதி என்று தெரிந்துகொண்டு, 'அம்மா! நாங்கள் ஏகாதசி உற்சவத்திற்காக பண்டரிபுரம் போகின்றோம்" என்று தெரிவித்தார்கள். அவர்கள் வார்த்தையைக் கேட்ட சக்குபாய் பண்டரிநாதனை சேவிக்க வேண்டுமென்னும் ஆசை உடையவளாய் அந்த பாகவதர்களை பார்த்து, "அடியாளும் தங்களுடன் வருகின்றேன். பாண்டுரங்கனுடைய சேவை அடியாளுக்கும் கிடைக்கட்டும்" எனக் கூறினாள். அப்பொழுது ராமதாஸர் சக்குபாயைப் பார்த்து "அம்மா! தாங்கள் எங்களைப்போல் பந்தங்களை விட்டவரில்லை, அப்படி விட்டவராயிருந்தாலும், பண்டரிநாதனான பாண்டுரங்கனுக்கு உம்மைப் பந்தங்களிலிருந்து நீக்குவதற்கு திருவுள்ளமில்லை. நீர் சிறிது நாள் கணவன் மாமி நாத்தி இவர்களுக்கு அடங்கி நடக்கும் வண்ணம் உமக்கு அவர் நேமித்திருக்கிறார். ஆகையினால், நீ எங்களுடன் வரத்தகாது. நாங்கள் சர்வேஸ்வரனுடைய ஆக்ஞையைக் கடக்கமாட்டோம். நீரும் அவ்வாறு கடவாமலிருந்தால் அவர் நேரே உமக்கு சேவை சாதிக்க வருவார். நீர் உம்முடைய நாயகன் மாமி முதலியவர்களின் உத்திரவு கேட்டுவரினும், நாங்கள் உம்மை அழைத்துச் செல்வோம்" என்றனர்.

சக்குபாய் அந்த ஸாதுவான ராமதாஸர் சொல்லிய வார்த்தையால், உள்ளங் கசிந்து, "ஆ! நாம் பண்டரிநாதனைச் சேவிக்க வெண்ணிய வெண்ணம் இப்படி ஆயிற்று" என ஆருத்துயரில் அழுந்தி ராமதாஸரை அனுப்பிவிட்டு தன்னுள்ளே, "அந்த பண்டரிபுரத்தில் நடக்கிற இந்த ஏகாதசி உற்சவத்திற்கு நாம் கட்டாயம் போகவேண்டும். பண்டரிநாதனான பாண்டுரங்கனைச் சேவிக்கவேண்டும்" என ஒரு முடிவு செய்துகொண்டு உடனே குளத்திற்குச் சென்று தண்ணீரை மொண்டுகொண்டு குடத்தை இடுப்பில் வைத்துத் தனது கிரகத்திற்கு வந்து தன் நாதனான மூர்த்திராவிடம் சென்று, "நாதா! அடியாள் சொல்லும் வார்த்தையை திருச்செவி சாத்தி அருளவேண்டும். "வருகின்ற ஏகாதசி அன்று பண்டரிபுரத்தில் பெரிய உற்சவம் நடக்கிறதாம். அந்த உற்சவத்திற்கு ஆயிர மாயிரமாக பாகவதோத்தமர்கள்கூடி பஜனை பண்ணுவார்களாம். பண்டரிநாதனான பாண்டுரங்கனைச் சேவிக்க ஆயிரம் கண்கள் வேண்டுமாம். இந்த உற்சவத்திற்குச் சென்று பார்த்து வரவேண்டும் என்ற ஆசை அதிகரிக்கின்றது. நாதா! இந்த ஜன்மம் அழிவதற்கு முன்னே பண்டரிபுரம் சென்று சேவிக்கவேண்டும். ஜன்மம் அழிவது இப்பொழுதோ எப்பொழுதோ தெரியவில்லை. ஆகையினால், நாம் இந்த ஏகாதசி உற்சவத்திற்குப் போய் வருவோம்" என்று பிரார்த்தித்தாள். இவ்வார்த்தையைக்கேட்ட மூர்த்திராவ், "கண்மணி! பாண்டுரங்கனுக்கு நடக்கும் ஏகாதசி உற்சவத்தன்று ஏராளமான கூட்டம் கூடுமாதலால், நம்மைப்போன்ற சுகவாசிகளுக்கு அந்த உற்சவம் செளகரியப்படாது. உற்சவமில்லாத காலத்தில் சுவாமி சேவை கிடைப்பதுபோல், உற்சவகாலத்தில் கிடைக்காது. எப்படியாவது இன்னும் கொஞ்சகாலத்தில் நாம் குடும்பத்தோடு திவ்விய தேசயாத்திரைக்குப் புறப்படுவோம். நீ கவலைப்படாதே" என்றுசொல்ல சக்குபாய், "நாதா! உற்சவகாலத்தில் விசேஷ பாகவதசேவை கிடைக்குமேயன்றி, சாதாரணகாலத்தில் கிடைக்காது. ஆகையினால், இந்த உற்சவத்திற்குப்போய் சமீபத்திலிருக்கும் உங்கள் மாமா அகம் இருப்பதினால் அங்கேயும் போய் வருவோம். நாம் பண்டரிநாதனைச் சேவித்த பலனோடு என் தாய் தந்தையர்களையும் பார்த்துவிட்டு வரலாம்" என்று சொன்னாள். மூர்த்திராவ், "சக்கு! நீ என்ன சொன்னாலும் நான் இந்த வருஷம் ஏகாதசி உற்சவத்திற்கு போகமுடியாது. அடுத்த வருஷம் பார்த்துக்கொள்வோம்" என்றார். சக்குபாய், "நாதா! நீர் என்ன சொன்னாலும் இந்த வருஷம் ஏகாதசி உற்சவத்திற்கு எப்படியாவது நான் போய்ச் சேவித்துதான் வருவேன்" என்றாள். மூர்த்திராவ், "நீ தனியாய் பண்டரிபுரம் போகத் துணிந்தது என்ன காரணம்" எனக் கேட்டார். சக்குபாய், "துணையோடோ அல்லது தனியாகவோ எப்படியோ நான் சென்று பண்டரிநாதனைச் சேவித்துதான் தீருவேன்" என ஒரே பிடிவாதமாய்ச் சொன்னாள். மூர்த்திராவ், "சக்கு! உன்னைப் பிடித்திருந்த முனி பின்னும் உன்னை வந்து பிடித்துக்கொண்டதா? சரி அப்படியானால் அந்த விலங்கை மறுபடியும் மாட்டிக்கொள்" எனக் கோபத்தோடு சொல்லிக்கொண்டே போய் விலங்குகளைக் கொண்டுவந்து அவள் கைகளிலும் கால்களிலும் மாட்டிப் பழையபடி ஒரு அறையில் தள்ளி, அறையைப் பூட்டிக்கொண்டு, "ஏகாதசி உற்சவதினத்தில் கிடைக்கும் பண்டரிநாதனுடைய சேவைக்கு இப்பொழுது போ பார்க்கிறேன்" எனச் சொல்லிவிட்டு கோபத்தோடு போய் விட்டான்.

சுந்தரியாகவந்து பண்டரிக்கு அனுப்பிய சருக்கம்

மூர்த்திராவ் கதவைப் பூட்டிக்கொண்டு போனதும், சக்குபாய் சர்வேஸ்வரனை பாண்டுரங்கனை நினைந்து, உள்ளம் கசிந்து, "ஏ! பண்டரிபுர வாசா! உன் சேவையைக் கண்டு நான் மனமுவக்க இந்த ஏகாதசிக்கு வரலாமென்று நினைத்தேனே! உன் சேவையை விரும்பிய எனக்கு மீண்டும் இந்த சிறைவாசம் வரவும் வேண்டுமோ! 'கடவுளை நம்பினோர் கைவிடப்படமாட்டார்,' என்பது என் விஷயத்தில் உமக்கு இல்லாமல் போய்விட்டதோ! ஜெகதீசா! உன் சன்னதி வருவேனோ? உனது அன்பைப் பெறுவேனோ?" எனப் பலவாறு பரந்தாமனை வேண்டி வருந்தி மூர்ச்சை யடைந்தாள். வைகுந்தவாசன் இவள் வேண்டுகோளுக்கிரங்கி இவளை ஏகாதசி உற்சவசேவை சேவிக்க விரும்பி, தான் அயலகத்து நங்கையாகிய சுந்தரி வடிவத்தை யடைந்து, ஒருவர் கண்ணிலும் படாமல் மூர்த்திராவின் வீட்டுக்குவந்து சக்குபாயை அடைத்துவைத்திருக்கும் அறையண்டைபோய் நின்று, தனது திருக்கரத்தால் அந்தக் கதவைத் தொட்டதும், கதவு திறந்துகொண்டது. சுந்தரி உருவுகொண்ட தூயவன், சக்குபாய் மயங்கி கிடப்பதைக் கண்டு அவளை வாரி எடுத்து மூர்ச்சை தெளிவித்ததும், "அம்மா! சக்கு! பண்டரிபுரத்தில் நடக்கும் ஏகாதசி உற்சவத்திற்கு நான் போகிறேன், நீ வருகிறாயா" எனக் கேட்டாள். சக்குபாய் அவ்வார்த்தையைக் கேட்டதும், விம்மி விம்மி அழுதுக்கொண்டே "சுந்தரி! நான் என்னசெய்வேன்? என்னை விலங்கில் மாட்டி இந்த அறையில்விட்டு அறையைப் பூட்டிக்கொண்டு என் நாயகன் போய்விட்டான். நான் செய்த குற்றம் என்ன என்பதை நீ கேட்டால் நீயே நகைப்பாய். என்ன தெரியுமா? "நான் பண்டரிபுரம் போகவேண்டுமென்று கேட்டேன். அவர் போகக்கூடாதென்றார். நான் கட்டாயம் போய்தான் தீருவேன் என்று அவர் வார்த்தையைத் தடுத்துப்பேசினேன். இதுதான் நான் செய்த குற்றம். இக்குற்றத்திற்காக என்கைகளிலும் கால்களிலும் விலங்கைப் பூட்டிவிட்டார். என்னசெய்வேன்? இந்த நிலைமையிலிருக்கும் நான் எப்படி உன்னோடு பண்டரிபுரத்திற்கு வருவேன்? நீ வரும் போது நான் எப்படியிருந்தேனென்பதே எனக்குத் தெரியாது" எனத் தன் கண்களில் நீர் சொரியச் சொன்னாள். இவ்வார்த்தையைக் கேட்ட சுந்தரியானவள், சக்குபாயைப் பார்த்து, "அம்மா! உனக்கு பண்டரிநாதனைச் சேவிக்க வேண்டுமென்னும் விருப்பமிருந்தால், நான் ஒரு உபாயம் சொல்லுகிறேன் கேள். எனக்கு உம்மைப் பார்க்கிலும் பண்டரிபுரம் போவதற்கு அவ்வளவு ஆசையில்லை. உமக்கு அவருடைய சேவையில் ஆசையிருந்தால் நீங்கள் சுகமாய்ப் போய்ப் பண்டரிநாதனுடைய சேவையைக் கண்ணால் பார்த்து, அவரையும் தரிசனம் செய்துவிட்டு வாருங்கள். நான் இந்த ஏகாதசி உற்சவத்தை வருஷம் தவறாமல் சேவித்திருக்கிறேன். இப்பொழுதும் என் வீட்டிலுள்ளவர்கள் நான் பண்டரிபுரந்தான்போய்விட்டேனென்று உறுதிப்படுத்திக்கொண்டிருப்பார்கள். அவர்கள் என்னைத் தேடுவார்களே என்ற கவலை எனக்கு எள்ளளவும் கிடையாது. ஆகையால், உம்முடைய கைகளிலும் கால்களிலும் பூட்டியிருக்கும் விலங்குகளை ஓசை கேட்காமல் நான் கழற்றி விடுகிறேன். நீங்கள் அதை என் கைகளிலும் கால்களிலும் மாட்டிவிட்டு அறையின் கதவைப்பூட்டிக்கொண்டு சாவியை உமது நாயகன் மேஜையில் வைத்துவிட்டு பண்டரிபுரம் போய் ஏகாதசி உற்சவத்தைச் சேவித்துவிட்டு சீக்கிரம் வந்து சேருங்கள். அதுவரை நான் உமது நாயகனை ஏமாற்றிக்கொண்டு இவ்வறையிலேயே யிருக்கிறேன். ஆனால் ஒன்று, ஏகாதசி கழிந்த மறுதினம் புறப்பட்டு நீங்கள் இங்கே வராதுபோனால், என்கதி அதோகதியாய்ப்போகும். உனக்கும் அது விபரீதமாக முடியும். அவ்வாதசிபாரணை முடிந்ததும், புறப்பட்டு இங்கு வருவதானால் மாத்திரம் நான் இந்த காரியத்திற்கு உடன்படுவேன்" என்றாள். சக்குபாய் அவ்வார்த்தையைக் கேட்டதும், புளகாங்கிதங்கொண்டு "சுந்தரி! நீதான் என் தெய்வம். உனது வார்த்தைக்கு மாறாய் நடந்தால், ஸர்வேஸ்வரனுடைய கட்டளைக்குமாறாய் நடந்தவளாவேன். பாரணையில் ஆகாரம் பண்ணிவிட்டு புறப்படவேண்டுமென்பதில்லை. பாண்டுரங்கனை சேவித்த அந்தக்ஷணமே புறப்பட்டு வந்துசேருவேன்" என்று சக்குபாய் சொல்ல, சுந்தரியானவள் கைகால்களிலிருந்த விலங்குகளை ஓசையில்லாமல் எப்படியோ கழற்றி, சக்குபாய்க்கு சிரமமில்லாதபடி அந்த விலங்குகளைத் தனது கைகளிலும் கால்களிலும் தானே மாட்டிக்கொண்டு, "சக்கு! ஞாபக மிருக்கட்டும், சொன்னநாள் தவறப்படாது. நீ வெளியில் சென்று கதவைப் பூட்டிக்கொண்டு சாவியை மேஜையில் வைத்துவிட்டு பண்டரிநாதனைச் சேவிக்கப்போவாயாக" என்று சொல்ல, சக்குபாய் உடனே வெளியே வந்து கதவைப் பூட்டி சாவியை தனது கணவன் மேஜையில் வைத்துவிட்டு யாருக்கும் தெரியாமல் பண்டரிபுரத்திற் கேகினாள்.

இவ்வாறு சக்குபாய் பண்டரிபுரத்தை நாடி அடிப்பாடிப் போய்க்கொண்டிருக்கும்பொழுது, தனக்கு சற்றுதூரத்திற்கு முன்னே தான் சந்தித்த கமால்தாஸ் ராமதாஸ் முதலிய பாகவதர்கள் வருவதைக் கண்டு மகிழ்ந்து,சற்றுநேரம் நின்றாள். அப்பொழுது யாவரும் வந்து சக்குபாயைக் கண்டு ஆநந்தங்கொண்டு அவள் திருவடிகளில் விழுந்து நமஸ்காரம் பண்ணி நின்றார்கள். சக்குபாய் தன்னை பெரியோர்கள் வணங்கியதைக் கண்டு மனம் திடுக்கிட மாதவரைப் பார்த்து, "சுவாமிகளே! ஒன்றுமறியாத யிப்பேதையினை வணங்குதல் தகுமோ? என்ன இது" என்று துயரில் ஆழ்ந்து வருந்தினாள். பாகவதர்கள் அவள் வருந்துவதைக்கண்டு,

"அம்மா! உங்கள் பெருமையை நீங்கள் அறியமாட்டீர்கள். நாங்கள் அறிவோம். இப்பொழுது நாங்கள் பண்டரிநாதனைச் சேவிக்கப் போகிறோம். அவர் பண்டரியிலில்லாமல் உம்முடைய வீட்டில் உமக்காக விலங்கைப் பூட்டிக்கொண்டு உம்மையடைத்து வைத்திருந்த அறையில் இருக்கிறார். சுந்தரியைப்போல உம்மிடம் தனது திருவுருவை மாற்றிக்கொண்டார். உமது நாயகனிடம் உமது உருவத்தையடைந்து உம்மைப்போல கைங்கரியம் செய்யப்போகிறார். பண்டரிநாதன் சக்குபாயானால், எங்களுக்கு சக்குபாய்தானே பண்டரிநாதன்? ஆகையினால் உம்மை வணங்கினோம்" என்று அவள் பக்தியையும் வைராக்கியத்தையும் கொண்டாடிக்கொண்டு பண்டரிபுரம் போய்ச் சேர்ந்தார்கள். சக்குபாயும் அவர்களோடு பண்டரிபுரத்திற்கு எழுந்தருளி, அந்தத் தொண்டர்கள் கூட்டத்தோடு பீமநதியில் தீர்த்தமாடி, தமது கர்மானுஷ்டானங்களை முடித்துக்கொண்டு தம்பூர் சிப்பளா ஜாலர் முதலிய தாளக்கருவிகள், சுருதிக்கருவிகளுடன் பஜனை பண்ணி ஆநந்தக் கூத்தாடி, ஆண்டவன் சன்னதியை நாடி, திவ்யாங்கசுந்தரனாய் திவ்யாபரண கசிதனாய், லீலாமானுஷவிக்கிரகமாய், அநந்தகல்யாண குணாகரனாய், ஸ்ரீபூமி நீளாதேவி சமேதனாய் எழுந்தருளியிருந்து அடியவர் மனவிருள் அகல, ஞானச்சுடர் விளக்கேற்றும் நான்மறை நாயகனை சேவித்துத் திருவீதி பிரதக்ஷிணமாக பஜனை பாடிக்கொண்டு ஆநந்தவெள்ளம் கரைபுரண்டோட சக்குபாய் தன்னை மறந்து பாகவதாள் கோஷ்டியில் கலந்து, தான் பார்க்கும் இடமெல்லாம் நோக்கும் பொருளெல்லாம் பண்டரி நாதனாகவே தோன்ற, தனது திருவுள்ளத்தாமரையை பண்டரிநாதனுக்கு ஆலயமாக அமைத்து, அன்பென்னும் பூவால் அர்ச்சித்து வணங்கி, நிரதிசயாநந்தமென்னும் முக்திவழிக்கு ஒரு வித்தாய் விளங்கினாள்.

சக்குபாய் இவ்வண்ணம் பண்டரிபுரத்தில் பாண்டுரங்கன் சேவையையே தன்னை வசமாக்கிக்கொண்டதால், திருநந்தவனங்களிற் சென்று நறுமலர் பறித்து திருமாலை கட்டி பாண்டுரங்கனுக்கு சமர்ப்பித்துக்கொண்டு பண்டரிபுரத்திலேயே சிலநாள் தாமதித்தாள். தான் அயல்வீட்டு நங்கையான சுந்தரியைத் தன் வீட்டில் அடைத்துவிட்டு வந்தோமென்பதையும் மறந்து பண்டரியில் இவள் இருக்கும்பொழுது, பண்டரிநாதன் இவளை இவள் ஊருக்கனுப்ப திருவுள்ளம் கனிந்து, நம்மாழ்வாருக்கு ஆத்மதரிசனம் அளித்ததுபோல இவளுக்கு ஆத்ம தரிசனங் காட்டி, பரமபதத்தையும் கொடுக்க விரும்பி, சக்குபாய் மலர் பறிக்க நந்தவனம் சென்றிருக்கும்பொழுது, தனது சயனமாய் இருக்கும் ஆதிசேஷனைப் பார்த்து, "நீ சென்று சக்குபாயைத் தீண்டிவிடு" என்று தெரிவிக்க, அவ்வாறே திருவநந்தாழ்வார் மலர் பறித்துக்கொண்டிருக்கும் சக்குபாயினை ஒரு சர்ப்பமாக வந்து

தீண்டினார். சக்குபாய் தன்னைப் பாம்பு கடித்ததைப் பார்த்து விஷம் தலைக்கேறுவதையும், தன் அறிவு சோர்வதையும், நினைந்து அந்த நந்தவனத்தில் உயிர்விட மனந்துணியாமல் பண்டரிநாதன் சன்னதிக்கு வந்து பாண்டுரங்கனுடைய திருவடிகளைக் கட்டிக்கொண்டு உயிர் துறந்தாள். சர்வேஸ்வரன் சக்குபாய்க்கு ஸ்ரீதேவியான லக்ஷ்மி சமேதராய் சேவைதந்து, அவள் உயிரைத் தன் வயமாக்கி தனது நிலயமாகிய பரமபதத்தில் அவளை நித்திய சூரிகள் கூடிக்கொண்டு களிக்கச் செய்துகொண்டிருந்தார். சக்குபாய் இந்த நிலைமையிலிருக்க, சன்னதியில் பண்டரிநாதன் திருவடியின் கீழ் ஒரு பிரேதம் விழுந்து கிடக்கிறதென்று அர்ச்சக பரிசாரகர்கள் அந்த பிரேதத்தை ஆலயத்திற்கு வெளியிலே கொண்டுபோய்ப் போட்டுவிட்டு சம்ப்ரோக்ஷணை செய்து, நித்திய திருவாராதனம் முதலிய யாவும் செய்தார்கள்.

இங்கே இவ்வாறிருக்க, மூர்த்திராவ் ஏகாதசி கழிந்த மறுநாள் துவாதசி பாரணை முடிந்ததும், சக்குபாயை அடைத்திருக்கும் அறையைத் திறந்தான். முன்னே சக்குபாயால் சுந்தரி என்று அடைக்கப்பட்ட பாண்டுரங்கன் சக்குபாயாய் கைவிலங்கு கால்விலங்குகளுடன் ஒரு ஆசனத்தில் உட்கார்ந்துகொண்டிருந்தார். மூர்த்திராவ் கதவைத் திறந்துகொண்டு உள்ளே வரும்பொழுதே "அடி! சக்கு! பண்டரி நாதனை சேவித்தாயா? பாண்டுரங்கன் சேவை எப்படியிருந்தது?" எனப் பரிகாசமாய்க் கேட்டுக்கொண்டே சக்குபாயின் சமீபமாய் வந்தான். தான் சக்குபாயான பரந்தாமன் மூர்த்திராவைப் பார்த்து, நாணமடைவதுபோல் பாவனை செய்து, "நாதா! ஸ்திரீகளுக்கு என்ன சுதந்திரமிருக்கிறது? அயலகத்து சுந்தரி பண்டரிபுரம் போவதாக என்னிடம் சொன்னாள். நானும் வருகின்றேன் என்று அவளிடம் சொல்லிவிட்டு உங்களிடம் உத்தரவு கேட்டேன். நீங்கள் "போகப்படாது" என்று சொன்னீர். ஏதோ அவசர புத்தியால் நான் கட்டாயம் "போவேன்" என்றேன். அதற்கு சிக்ஷை சரியாய்க் கிடைத்துவிட்டது. கைகால்கள் நோவுகின்றது. இனி பண்டரிபுரத்தை நான் கனவிலும் நினைக்கமாட்டேன்." என்று மாயா சக்குபாய் சொன்னாள். உடனே மூர்த்திராவ் விலங்குகளை தரித்து சக்குபாயை அன்பாக நடத்த ஆரம்பித்தான். அவளும் நிஜமான சக்குபாய்போல வீட்டு வேலைகளை எல்லாம் சரிவரப்பார்த்து நாயகன் மாமி முதலானவர்கள் மகிழ நடந்துவந்தாள். மூர்த்திராவ் பள்ளி அறை சேர்ந்ததும், மாயா சக்குபாய் நிஜமான சக்குபாயைப் பார்க்கிலும் ஆயிரமடங்கு அதிகமாய் உபசரித்து, வெற்றிலை மடிப்பிலே தேர்போலும், குடைபோலும், கோபுரம்போலும் விதம் விதமாக விசித்திரமாக மடித்து மூர்த்திராவுக்குக் கொடுத்து அருமையான கதைகளால் அவனை மயங்கும்படி தூங்

கச்செய்வாள். இப்படி இருக்கும்பொழுது, அந்த ஊரிலிருந்து பண்டரிபுரத்திற்குப் போயிருந்த வொரு பிராமணன் சக்குபாய் உயிருடனிருக்கும் பொழுதும் இறந்துபோன பொழுதும் பார்த்தவனாதலால், "இவள் எப்படி இங்கு வந்தாள்! இது என்ன அதிசயம்" என நினைந்து சிறிதுநேரம் மயங்கி இருந்து பின் அவளைப் பார்க்கும்போது, அவள் அரவத்தால் மாண்டு தெருவில் கிடப்பதைக் கண்டு, ஒன்றுந் தோன்றாதவனாய் உடனே மூர்த்திராவின் வீட்டிற்கு வந்து, 'அடே! மூர்த்தி! உன் மனைவியான சக்குபாய் பண்டரிபுரத்திற்கு வந்திருந்தாள். பின் அவள் நந்தவனம் சென்று மலர் பறிக்கும் பொழுது அரவத்தால் கடிக்கப்பட்டு இறந்தாள்" என்று சொன்னான். இவ்வார்த்தையைக்கேட்டதும் மூர்த்திராவ், "போய் காணும் பைத்தியக்கார பிராமணா? என் மனைவியா பண்டரிபுரத்தில் அரவின் வாய்ப்பட்டு இறந்தாளா? உமக்கென்ன பைத்தியமா? அடி சக்கு! இங்கே வா" என அழைத்தான். உடனே, "நாதா! இதோ வந்தேன்" எனச் சொல்லிக்கொண்டே மாயா சக்குபாய் வருவதை வேதியன் பார்த்து, "ஸ்வாமி! இது ஆச்சரியமாயிருக்கிறது. நான் அங்கே பார்த்த உமது மனைவிக்கும் இவளுக்கும் கொஞ்சம்கூட வித்தியாசமில்லையே! இது என்ன அதிசயமோ எனக்குத் தெரியவில்லை. நான் போய்வருகிறேன்" என்று சொல்லி தன் வீட்டிற்குப் போய்விட்டான். பண்டரிபுரத்திலோ, பிரேதமாய்க்கிடந்த சக்குபாய்க்கு உரியவர்கள் யாரென்று அவ்வூரதிகாரிகள் விசாரித்துக்கொண்டிருந்தார்கள்.

பண்டரிநாதன் மாந்திரிகனாக வந்து விஷம் தீர்த்த சருக்கம்

பரமபதனான பாண்டுரங்கன் தனது நிலமாகிய பரமபதத்தை சக்குபாய்க்குக் காட்டி, மறுபடியும் அவளை அவள் கணவன் வீட்டில் கொண்டுபோய்ச் சேர்க்கவிரும்பி, ஒரு மந்திரவாதியாய்த் தலையில் ஒரு பெரிய முண்டாசு தரித்து, கஞ்சுகி என்னும் சட்டையை அணிந்து, வெற்றிலை பாக்கு வைத்திருக்கும் ஒருபையை தோளில் தொங்கவிட்டுக்கொண்டு பண்டரிபுரத்தின் தெரு நெடுக வந்து, சக்குபாயின் பிரேதத்தினிடம் போய்நின்று, சற்றுநேரம் அவளை உற்றுப் பார்த்து, "ஐயோ! இவளை அரவம் கடிக்க விஷம் தலைக்கேறி மயங்கிக் கிடக்கின்றாள். ஐயா! யாராவது கொஞ்சம் வேப்பிலை கொண்டுவாருங்கள். நான் அவளை எழுப்பிவிடுகிறேன்" என்றார். உடனே அங்கிருந்த ஜனங்களிற் சிலர் ஓடி பல மரங்களிலுமிருந்து முறித்து ஒரு வண்டி அவ்வளவு கொண்டுவந்து குவித்தார்கள். மந்திரத்தின் பெரும்பொருளாகிய மந்திரவாதியும் சில வேப்பங் கொத்துகளைக் கையிலெடுத்துக் கொண்டு மந்திரிக்க, சக்குபாய் தூங்கி விழிப்பவள்போல விழித்து எழுந்தாள். உடனே அவளை அவ்வூரிலுள்ளவர்கள் பார்த்து

"அம்மா! உங்களைப் பார்த்தால், உயர்ந்த குடும்பத்திற் பிறந்தவராகத் தோன்றுகின்றது. நீங்கள் யாரும் துணையில்லாமல் இங்கு இருக்கப்படாது. நீங்கள் ஊர்போய்ச் சேருங்கள்" என்று வேண்டிக்கொள்ள, சக்குபாய் அவர்கள் வார்த்தைகளைச் சிரமேற்கொண்டவள்போல் "அப்படியே நான் போய்வருகிறேன்" என வணக்கமாய் அவர்களுக்கு பதில் சொல்லிவிட்டு தன் ஊரை நாடி வந்துகொண்டிருக்கும்பொழுது, குளக்கரையில் சுந்தரியானவள் தான் வருவதை ஆவலோடு எதிர்பார்த்துக்கொண்டிருப்பதைக் கண்டு, சக்குபாய் விரைவாக அவள் முன்னே ஓடி "அம்மா! சுந்தரி எனது வீட்டில் நான் ஓடிவிட்டதாக ஏதாவது பேசிக்கொண்டிருக்கிறார்களா? ஏதாவது இருந்தால் சொல்" எனக் கேட்டாள். சுந்தரியாகிய மாயவர், "அம்மா! சக்குபாய் நல்லகாரியம் செய்தாய்? நீ துவாதசி பாரணைகூடப்பண்ணாமல் பண்டரிபுரத்திலிருந்து புறப்பட்டு வந்துவிடுவேனென்றாயே? இன்றைக்கு எத்தனை நாளாயிற்று நீயே யோசித்துப்பார். ஒருபெண் வேறு ஒருத்தியாக ஒருவன் வீட்டில் வஞ்சித்து எத்தனை நாள் வாழமுடியும்? தேனில் விழுந்த ஈயைப்போலல்லவா துடித்துக்கொண்டிருந்தேன்? நல்லவேளைக்கு நீ வந்துவிட்டாய். இன்றைபதினம் என் வீட்டிலுள்ளவர்கள் பண்டரிபுரம் போன நான் இன்னும் வரவில்லையேயென்று என்னைப் பண்டரிபுரம் போய்த் தேட யோசனை செய்துகொண்டிருக்கிறார்கள். நான் உனக்காக இங்கேயிருந்துகொண்டு அவர்களைப் பண்டரிபுரம் போய்த்தேடச் செய்வது அநியாயந்தானே? இதெல்லாம் போகட்டும், நீ ஏன் இவ்வளவுநாள் தாமதித்து வந்தாய்? உனது கணவன் வீட்டில் நீயென்றே என்னை நினைத்துக்கொண்டிருக்கிறார்கள். நீ இந்த குடத்தில் தண்ணீர் மொண்டுகொண்டு உன் வீட்டிற்குச் செல், நான் பண்டரிபுரத்திலிருந்து இப்பொழுதுதான் வருவதுபோல் என் வீட்டுக்கு நான் போய்விடுகிறேன். நாம் செய்தகாரியம் ரொம்ப ரகசியமாயிருக்கட்டும்" என சொல்லிவிட்டு சக்குபாயைப் பிரிந்து, சுந்தரியான மாயவர் மறைந்தார்.

சக்குபாய் வழக்கம்போல் தண்ணீர்க்குடத்தைக் கொண்டு வந்து வைத்துவிட்டு, வீட்டுக் காரியங்களையெல்லாம் குறைவறச் செய்து அன்று இரவு தனது பள்ளி அறைக்குச் சென்று, தனது நாதனுடன் சல்லாபமாகப் பேசிக்கொண்டு வெற்றிலையைச் சாதாரணமாக மடித்துக் கொடுக்க, அதை வாங்கிய மூர்த்திராவ், "அடி" சக்கு! நான் இந்த பள்ளி அறைக்கு வருவது வெறும் காம நுகர்ச்சியை உத்தேசித்தல்ல, நீ விதம் விதமாக தேர் போலும், கோபுரம்போலும், குடைபோலும், நல்ல விமானங்கள் போலும், மடித்துக் கொடுக்கும் உனது கை விஸ்தாரத்தைப் பார்த்து பழகுவதற்குப் பொழுது எப்பொழுது அஸ்தமிக்கு

மென்றிருந்து, பொழுது சென்றதும் நான் இங்கே வந்தேன். நீ இப்படி சாதாரணமாக மடித்துத் தந்தால் நான் வாங்கமாட்டேன்" எனக் கூறினான். சக்குபாய் அவ்வார்த்தைக் கேட்டு "நாதா! எனக்கு இதற்குமேல் வேறுவிதமாய் மடிக்கத் தெரியாது. நீங்கள் சொல்லிய வண்ணம் வெற்றிலை மடிக்கும் சாதுரிகளான ஸ்திரீகள் உண்டென்று நான் கேள்விப்பட்டதுகூட இல்லை" எனச் சொன்னாள். மூர்த்திராவ், "ஏன் நீ பொய் பேசுகிறாய்? நேற்று நீ மடித்துத் தந்த விமானம் போன்ற சுருளையை நான் இன்னும் வைத்துக்கொண்டிருக்கிறேன். அது பொய்யானால் இப்பொழுதே காட்டுகிறேன் பார்" என்று எழுந்துபோய் அலமாரியைத் திறந்து, அதில் வெகு விசித்திரமாக வெற்றிலையால் மடித்து செய்திருக்கும் விமானத்தை சக்குபாயினிடம் கொண்டு வந்து கொடுத்தான். அதை வாங்கிப் பார்த்ததும், ஒன்றுந் தோன்றாமல் திகைத்து நின்றாள். இதைப் பார்த்த மூர்த்திராவ், "அடி! சக்கு! நீ திகைத்து நிற்பதைப் பார்த்தால், எனக்கு ஒன்றுந்தோன்றவில்லை. என்னை சோதிக்காதே? நேற்றையதினம்போல இன்றையதினமும் இந்த வெற்றிலையை வேறுவிதமாக மடித்துக் கொடு" எனக் கேட்டான். அவள், "நாதா! எனக்குச் சாதாரணமாய் மடிக்கத் தெரியுமே தவிர, வேறுவிதமாய் மடிக்கத் தெரியாது. நீ என்னை வஞ்சித்து ஒரு தாசிவீடு சென்று அவளால் மடித்துத் தந்த இந்த வெற்றிலையைப்போல என்னை மடித்துத் தரும்படி சொன்னால், எனக்கு மடிக்கத் தெரியுமா? இந்த வெற்றிலையை மடித்து உம்மிடம் தந்து உமது பொருளைக் கவர்ந்து கொண்டாள்போலிருக்கிறது? உம்மை நான் நீதிவானென்றும், தீய வழியில் செல்லமாட்டீரென்றும் நினைத்திருந்தேன். உமது யோக்கியதை இப்பொழுதுதான் தெரிகிறது. நீர் ஒரு காரியம் செய்யும். இந்த வெற்றிலைச் சுருளை எடுத்துக்கொண்டு உமது சிநேகிதர்கள் கையில் கொடுத்து, "இதைப்போல் யாராவது மடித்துத் தருகின்றவர்கள் உண்டா?" என்று கேளும்; அவர்களில் யாராவது என் மனைவி மடிப்பாளென்றால், நானும் உமக்கு மடித்துத் தருகிறேன். நீ ஒரு வேசி மடித்துத் தந்த வெற்றிலையைப் பத்திரம் பண்ணிவைத்திருந்து இதுபோல் என்னை மடித்துத் தரவேண்டுமென்று சொன்னால், நான் என்ன செய்வேன்? என்றாள். மூர்த்திராவ், "சக்குபாய்! நீ என்னிடம் தகாத வார்த்தைகளைப் பேசாதே. நேற்று இரவு முப்பது நாழிகையும் எனக்கு வெற்றிலை விமானம் செய்யவே சரியாக இருந்தது. நானும் கூடயிருந்து பார்த்துக்கொண்டிருக்க 'இதுதானா பூலோகம்' என்கிறாயே? இதுபோல் வேறு மாதிரியாக மடித்துத் தராமல் போனால், எனது உயிரை மாய்த்துக் கொள்வேன்" என்று உறையிலிருந்த வாளை உருவிக்கொண்டு, "சக்கு! என்ன சொல்லுகிறாய்? மடித்துத் தருகிறாயா யில்லையா? சீக்கிரம் சொல்"

என்று கையிலிருந்த வாளை ஓங்கினான். இதைக் கண்டதும் சக்குபாய், "நாதா! நான் சொல்வதைக்கேளும். நேற்றுவரை உம்மோடிருந்த சக்குபாய் நானல்ல. உம்மை விவாகம் செய்துக் கொண்ட உண்மையான சக்குபாய் நான்தான்" என்றாள். இதன் பொருளைத் தெரிந்துகொள்ளாத மூர்த்திராவ், "நீ சொல்லுகிற வார்த்தையில் என்னமோ ஒரு விஷயமிருக்கிறது. சக்கு! உண்மையை யென்னிடம் சொல்லப்படாதா? நான் கொடியவனா" எனக் கெஞ்சினான். உடனே சக்குபாய் "நாதா சிலநாளைக்கு முன் நான் உம்மிடம் பண்டரிபுரத்தில் நடக்கும் ஏகாதசி உற்சவத்திற்குப் போகவேண்டுமென்று சொல்ல, தாங்கள் 'அடுத்த வருஷம் போவோ'மென்று சொன்னதும், நான் 'நீர் என்ன சொன்னாலும் பண்டரிபுரம் போய்த்தான் தீருவேன்' என்று சொல்ல, நீர் என்னை விலங்குமாட்டி ஒரு அறையில் அடைத்து அவ்வறையைப் பூட்டிச் சென்றீரல்லவா? அப்பொழுது பண்டரிபுரவாசனான பாண்டுரங்கன் அயலகத்துப் பெண்ணான சுந்தரியைப்போல என்னிடம் கதவைத் திறந்துகொண்டு வந்து, நான் பண்டரிபுரம் போகப் போகிறேன். நீயும் வருகிறாயா" எனக் கேட்டாள். நான் வர முடியாத கஷ்டத்தை அவளிடம் சொல்லியதுமன்றி, பண்டரிபுரம் போகவேண்டுமென்னும் ஆசை மாத்திரம் என்னை இரவும் பகலும் பிடுங்கித் தின்னுகிறது. இந்த நிலைமையில் நான் என்ன செய்யமுடியும்? எல்லாம் அவன் செயல்" எனக் கண்ணீர்விட்டழுதேன். உடனே அவள், என்னைப் பார்த்து, "உனக்கு அவ்வாறு ஆசையிருந்தால், உனக்குப் போடப்பட்டிருக்கும் விலங்குகளை நான் கழட்டிக் தருகிறேன், நீ என் கைகளிலும் கால்களிலும் போட்டுவிட்டு கதவைப் பூட்டி திறவுகோலை உமது மேஜையில் வைத்துவிட்டு பண்டரிபுரத்திற்கு என்னைப் போகச்சொன்னாள். நானும் அவ்வாறே நாதனுடைய சேவையைக் காண ஆசைகொண்டு அவள் சொல்லியதுபோலவே செய்துவிட்டு ஏகாதசி உற்சவத்திற்குப் பண்டரிபுரம் போயிருந்தேன். இன்றையதினம் காலையில் நான் குளக்கரையின் பக்கமாக வந்துகொண்டிருக்கும்பொழுது நமது வீட்டுக்குடத்தை யெடுத்துக்கொண்டு தண்ணீர் மொள்ள வந்ததுபோலவந்து என்னிடம் குடத்தைக் கொடுத்துவிட்டுப் போய்விட்டாள். நான் குடத்தில் தண்ணீர் மொண்டுகொண்டுவந்து சேர்ந்தேன் என்று சொல்லி முடித்தாள். மூர்த்திராவ், "அடி! சக்கு! நீ அவளை சுந்தரி என்கிறாயே? அவள் நமது வீட்டில் உன்போன்ற சக்குபாயாக வன்றோ விளங்கினாள். கண்மணி? பண்டரிநாதன் உன் பக்திக்கு உகந்து, தான் சிறைப்பட்டாரல்லவா, ஐயோ! நான் அவரை என் மனைவியென்று நினைத்து அனேக ஊழியங்களைச் செய்யும்படி ஏவினேனே! ஏ! பாண்டுரங்கா! நீர் என் வீட்டில் எனது மனைவியாக யிருந்தும் நான் உன்னை அறியாது போனேனே! நானொ

ன்ன பாவி" எனப் பலவாறு எண்ணி துக்கித்தான். சிறிது நேரம் தன்னை மறந்திருந்து, தனது மனைவியைப் பார்த்து சக்கு! ஸர்வேஸ்வரன் உனக்கு அடிமையைப்போல் ஐக்கியமாயிருக்க உன்னிடமிருக்கும் மந்திரமாவதியாது' அதை எனக்குச்சொல்லு நானும் அந்த மந்திரத்தைத் தெரிந்துகொண்டு உஜ்ஜீவிக்கிறேன்" எனக் கேட்டான். அப்பொழுது சக்குபாய், "நாதா! மந்திரமென்பது சாமான்னியமானதல்ல. கேட்ட்வுடனே சொல்லக் கூடியதுமல்ல. மந்திரமாவது உபதேசம். அந்த உபதேசத்தைப் பெறவேண்டுமானல், நல்ல ஆசாரியனைத் தேடி, அவன் அனுக்கிரகத்தால் அவ்வுபதேசத்தைப் பெறவேண்டும். அந்த ஆசாரியன் பண்டரிநாதனன்றி வேறில்லை. அவனே உம்மைத் தன் திருவடிகளுக்கு ஆட்படுத்த ஆசாரியனுக வருவார்" என்று சொன்னுள். அவ்வார்த்தையைக் கேட்ட மூர்த்திராவ், "மந்திரோபதேசம் எனக்கு இப்போது கிடையாமல் போனுலும், உனக்கு சேவை தந்ததுபோல நான் சேவிக்க, எனக்கு அவர் திருவடிகளை வணங்குமாறு அவரைக் காட்டு; அவர் கருணைக்கு யானும் இலக்காகட்டும்.

உன்னுல் அவர் தரிசனங் கிடைத்தால், எனக்கும் அவர் மோக்ஷவீடு அளிப்பார். அவரை நீ காட்டாது போனுல், உன் வார்த்தை யெல்லாம் பொய்யென்றே நினைப்பேன். ஈஸ்வரன் என் வீட்டில் வந்திருந்தும், அவரைச் சேவியாத நான் உயிரோடிருந்துதான் என்ன பயன்? வேதங்களும் புராணங்களும் கோஷிக்கும் சர்வேஸ்வரனை பாண்டுரங்கனை நான்வேலைசெய்ய யேவிய பாதகம்தீர அவர் திருவடிகளில் விழுந்து மன்னிப்புக் கேட்கவேண்டும். அவ்வாறு மன்னிப்புக் கேளாது என் உயிரை வைத்திருக்கப்படாது. அடிமாதே! நீ என்ன சொல்கிறுய்? பண்டரிநாதனைக் காட்டுகிறுயா? எனது பிராணனை விடட்டுமா?" என்று உறையிலிருந்த வாளை மறுபடியும் உருவிக்கொண்டு, தன் மார்பிற்கு நேரே பிடித்தான். சக்குபாய், அவர் பிரமைகொண்டதையும் உயிர்விடத் துணிந்திருக்கிறுரென்பதையும் கண்டு மனந்திடுக்கிட்டு, "நாதா! என்ன காரியம் செய்யத் துணிந்தீர்? பண்டரிநாதன் சேவை புல்லறிவாளர்களாகிய நாம் நினைத்தபோது கிடைக்குமா? அவன் சேவை ஆயிரம் ஆண்டுகள் கண்ணை மூடிக்கொண்டு உட்கார்ந்திருக்கும் முவ்வாசைகளையும் விட்டுக்கிடக்கும் முனிவர்களுக்கும் கிடைப்பதரிதாயிருக்கிறதே? எதையும் யோசியாது இதுபோல் செய்யத் துணியலாமா? சற்று பொறுங்கள். கட்கத்தை உறையில் போடுங்கள். நான் பண்டரிநாதனைக்காட்டுகிறேன்" என்று சொல்லிவிட்டு தன் இரண்டு கைகளையும் தலையின்மீது குவித்துக்கொண்டு பரந்தாமனை நோக்கித் தோத்திரம் பண்ணினள்.

சக்குபாய் ஸ்தோத்திரம்

மாமகளுறையுமார்பனேபுலவா மாமறைதேடருமாண்பே
காமமாதியபுன்குரும்புடையவர்க்கு காண்கராகற்பகத்தருவே
யோமெனுமுறையெழுத்தினின்மறைந்தே யொளிதருதனிப்பெருஞ்சுடரே
தாமமார்புயனேபேதையாள்தன்னைத் தாங்கியாதரிப்பதுன்சரணே. (1)

பெற்றதாய்தந்தைசுற்றமென்றிவராற் பேணியாதரிக்குமைந்தாண்டில்
கற்பொதனராயென்முன்னேதோன்ற கலந்திகழ்காரணனும
முற்றதாமுனக்கென்றடியவள்தனக்கே யோதியவேதனுயகனே
குற்றமார்மனத்தேனையாதரித்தாட்கொள்வ துன்குறைகழற்சரணே. (2)

என்னையாட்கொண்டுவினைபடிக்கன்பை யென்மனத்திருத்தியவன்றுட்
சொன்னவாசகமறந்துபன்றுநெ் துயருறச்செய்தனையெனினும்
முன்னைவானவருமுனிவருமறியா முதல்வனேபுனைமறந்தனனே
பின்னையாகுேன்றமறிந்திலேனென்னைப் பேணியாதரிப்பதுன்சரணே. (3)

உலகநங்கையர்போலொருவனைமணந்தேசெய் அருந்துயரடைவதற்கஞ்சி
கலகமேபுரிந்துதந்தைதாயருக்குங்கடுந்துயர் விளைத்தனள்கண்டாய்
இலகவானுதலாள்திருமகட்கினிய செல்வமேதேடரும்பொருளே
அலகிலாவன்பர்தமக்குகந்தளிக்கு மடியினையெனைபுரந்தளிக்க. (4)

உன்னையன்றிவேறுமானிடரென் அருவினைதீண்டிடுனெவ்வா.
தென்னையான்பித்துக்கொண்டனைாகியிருட் டறையிருக்குமன்றனிற்
பொன்னையேபொருவும்புண்ணியர்போர் புனிதவேதியனுருவமேவி
என்னையாட்கொண்டவிறைவனேயிந்த வேழையைக்காப்பதுன்சரணே. (5)

கடுஞ்சிறைப்படுத்தியென்னைஎன்கணவன் கைபிடித்தடித்திடும்பொழுது
விடுஞ்சுடர்மகுடகுண்டலமணிந்து வெங்குழலோர்கரத்தேந்தி
கொடுஞ்சடைமாடச்சாளரமுன்றில் குறுகியான்வணங்கிடநின்ற
கெடுஞ்சுடர்விளக்கேகேயனைஎன்னை நிரந்தரங்காப்பதுன்சரணே. (6)

மயல்தருமுலகைாதனைதவிர்த்துன்மலர் சரண்மருவுதல்வேண்டி
அயலகத்தவனைச்சிறையினிலடைத்தே யந்தணர்குழாத்துடன்கலந்து
புயல்தொடுமாடபண்டரிபுரத்திற் போக்தானென்றுனக்களித்தே
வியல்தருநின்கூத்தறிந்திலேனந்தா வேழையைக்காப்பதுன்சரணே. (7)

வனைமனைத்தவனையுளமகிழ்வித்த வென்னுருமேவினையென்றன்
மனைவினியற்றும்பணியெலா ம[illegible]கிழ்வுறச்செய்தனையன்றி
வினையினைத்திடவக்கணுருமென்று அவ வினைவதிந்தினியனபேசி
இனையளவேனும்வேற்றுருதெரியா தின்றனைதேவனேசரணம். (8)

மாமணிமாடப்பண்டரிபுரத்தோர் மாசறைத்தான்மடித்திடுகாட்
தூமணிமத்திரவாதியாய்வந்து துயர்துடைத்தருளினையன்றி
திமைமுடையமாதிரத்தியர்தம் தெளிப்பிலயனையர்வுராவண்ணக்
தூமணித்தடத்தில்மட்குடத்தோடுந் தோன்றிநேனுப்துணைபடிசரணம். (9)

பண்ணமர்வேதப்பானுவலாசரணம் பங்கயக்கண்ணனேசரணம்
விண்ணவர்க்கெல்லாமேலவாசரணம் வேதியர்வேதனேசரணம்
தண்ணமர்கமலத்தையளொளுறையும் தடமணிமார்பனேசரணம்
மன்னவர்தமக்காபண்டரிமேய வரதனேநின்கழல்சரணம். (10)

இவ்வாறு தோத்திரம் பண்ணும் காலத்தில், பண்டரிநாதனை பாண்டுரங்கன் திவ்விய மங்கள விக்கிரகமாய், திவ்விய தேஜோன்மயமாய், திவ்யாலங்காரகசிதனாய், நீலமேக சாமள வர்ணனாய், கிரீடகேயூர வாகு வலைய கடககங்கண ஹாரபதக்கங்கள் தரித்தவனாய், சக்குபாய்க்கு முன்னே சேவை தந்தருள, சக்குபாய் கண்களாரக் கண்டு, கண்ட காக்ஷியில் காதலியாய் தனது நாயகனாகிய மூர்த்திராவைப் பார்த்து, "அதோ பாரும். உமக்காக உமது வீட்டுத் திண்ணையில் பண்டரிநாதன் சேவை தந்தருளுகிறார்." எனச் சொல்ல, மூர்த்திராவ், அந்த நிமிஷமே கதவைத் திறந்துகொண்டு சக்குபாயுடன் வாயலில் வந்து பார்த்து, "சக்கு என்ன மோசம் பண்ணுகிறாயே? பண்டரிநாதன் வாயலில் இருக்கிறாரென்று பொய் சொல்லி என்னை வருத்தலாமோ? இதுவோ உன்னைக் கேட்டதற்கு நீ செய்த உதவி" என உள்ளம் மெலியக் கேட்டான். சக்குபாய், "நாதா! நான் பொய் சொல்லவில்லை. அதோ இருக்கிறார் பாருங்கள்" என்றாள். உடனே மூர்த்திராவ், "நான் ஊனக்கண் படைத்தவனானதால் என் கண்களுக்குத் தோன்றவில்லைபோலிருக்கிறது? கையாலாவது தடவிப் பார்க்கலாமா" எனச் சொல்லிக்கொண்டே அவள் காட்டிய திண்ணையைக் கையால் தடவிப் பார்த்தும் காணாதவராய், "அடி சக்கு! நீ பொய்தான் சொல்லுகிறாய். என்னிடம் பொய் சொல்லி என்னை ஏமாற்றிய உன்னை இந்த வாளுக்கு இரையாக்கிவிட்டுப் பிறகு என்னுயிரையும் அந்த வாளுக்கே இரை கொடுக்கிறேன். என் கொள்கை அவன் சேவையைக் கண்ணாரக்கண்டு அவன் அழகிய திருவடிகளில் விழுந்து எழுந்து அவனை எந்நாளும் மறவாத மனத்தனாய் உன்னோடு கூடி வாழலாமென்றிருக்க, என்னிடமா பொய் பேசுகிறாய்" எனக் கோபம் மிக்கவனாய், உறையிலிட்ட கத்தியை மீண்டும் கையிலெடுத்துக்கொள்ள, சக்குபாய், அவர் சேவையைக் காணாவிடில் தன்னுயிரையும் அவர் உயிரையும் இழக்கச்செய்வது திண்ணமென நன்கு தெரிந்துகொண்டு, "பிராணேசா! பொறுங்கள். நான் சொல்லிய சொல்லிலிருந்து அணுவளவும் தவறுவளல்லள்; எப்படியாவது அவருடைய சேவையை உமக்குக் காட்டுகிறேன்" என அவன் கோபம் தணியச் சொல்லிவிட்டு பண்டரிநாதனைப் பார்த்து, "நாதா! நீ இல்லாது ஒரு அணுவும் அசையாது என்று இருக்க, உனது சங்கல்பமில்லாது நான் இவரை மணந்துகொண்டேனா? இவர் தீயராயினும், தீமையைப் பொறுத்து ஆட்கொள்வது உமது கடனன்றோ? ஒருவன் பாபம் செய்கிறானென்றும், புண்ணியம் செய்கிறானென்றும் சொல்லுகிறார்கள். பாவமும் புண்ணியமும் உமதென்று சொல்வதாகில், பாவம் செய்வோன் இவன். புண்ணியம் செய்வோன் இவன். என்று நீர் பேதம் நினைக்கப்படுமோ? தாய் தன் மைந்தன் தீயவனாயினும் அவனைக்காப்பாற்றாதுவிடுகிறாளா?

அதுபோல, அனைத்துயிருக்கும் தாயாகிய நீ எனக்கு உன்சேவையைத் தந்து, இவருக்கு மாத்திரம் சேவை தாராதுபோனால் உம்மைப் பாரபக்ஷமுடையவரென்று பேசமாட்டாரா? ஆதலினால், எனது நாதனுக்கு உமது திருவடியையாவது காட்டும். அவ்வாறு செய்யாதுபோனால் நான் பொய்பேசுபவளென்பதாக ஆவேதோடு ரக்ஷகனை உன் முன்னே நாங்களிருவரும் உயிர் துறக்கும்படி ஏற்படும்." என அவரை வேண்டிநின்றாள்.

அனைத்தையும் காக்கும் ஆதிமூலப்பொருளாகிய பண்டரிநாதன், தன்னை உள்ளங் கசிந்துருக வேண்டி நிற்கும் சக்குபாயைப் பார்த்து, "பெண்ணே! உனது நாயகனுக்கு நான் சேவை தரவேண்டுமென்று பிரார்த்திக்கிறாயே? அவன் என்னை மறந்தவன். தன்னைப் புகழ்ந்தவன். ஈவு அற்றவன். சாவு பெற்றவன். அடியார்களை இகழ்ந்தவன். மடையரைப் புகழ்ந்தவன். தனத்தில் மாய்ந்தவன். இனத்தைக் காய்ந்தவன். இரக்க மற்றவன், மாறி மாறி பிறக்க உற்றவன். ஆலயம் வராதவன். எனதன்பரைச் சேராதவன். காலையில் குளியான். வேலையில் பழியான். இந்த புல்லனுக்கு நான் சேவைதர வேண்டுமென்று நீ கேட்பது சரியல்ல" எனப் பாண்டுரங்கன் திருவாய்மலர்ந்தருள, சக்குபாய் பரந்தாமனைப் பார்த்து, "தேவே! உமது வார்த்தை நன்றாயிருக்கிறது. இவருக்கு நீர் சேவை தருவீரா, தரமாட்டீரா? இவர் கொல்லையில் சென்றால் தண்ணீர் கொண்டுபோய் வைப்பீர்; பல் துலக்க தண்ணீரைக் கையிலேந்தி நிற்பீர், நன்றாக இவரை குளிப்பாட்டுவீர்; ஜலசுத்தி பண்ணி இலைத்தளிகை சேர்த்து பிரசாதம் சாதிப்பீர்; படுக்கையை விரிப்பீர், தேர்போலவும் விமானம் போலவும் குடைபோலவும் சாமரம் போலவும் விதம் விதமாக வெற்றிலை மடித்துக்கொடுப்பீர்; சேவை மாத்திரம் தரமாட்டீர். உம்முடைய நியாயம் உமக்கே நன்றாயிருக்கிறது. இதைக் கேட்டால் ஊர் உம்மைச் சிரிக்கப்போகிறது. மரியாதையாக உமது திருவுருவை இவர் காணக் காட்டிச் சென்றுவிடும். இல்லையேல் உமது மானத்தைக்கெடுத்து விடுவேன்" என்று சக்குபாய் சொல்ல பரந்தாமனான பாண்டுரங்கன், "கண்ணே! நீ என்னைப்பழிக்கவா? உனக்காக இவ்வளவு நிந்தனையான காரியங்களைச் செய்யப்புகுந்தேன்? இவன் எவ்வளவு பாதகனானாலும் இவனை மன்னித்து ஆட்படுத்துவேன். என்னிடம் அந்தரங்கமான பக்தியுடைய எனது அடியவளாகிய உன்னை விலங்கு மாட்டி சிறையில்வைத்த இவனை நான் மன்னிப்பதெப்படி? உன் கையில் மாட்டிய விலங்கும், உன்னை அடைத்த சிறையும், என்னை அடைந்தது, இது உனக்குத் தெரியாதோ? ஒன்று சொல்லுகிறேன் கேள். என்னைப் பாண்டவ சகாயனென்று சொல்லுகிறார்கள். அவர்கள் அறியாதவர்கள். நான் பாண்டவ சகாயனல்லன். 'பாண்டவ நாசன். எப்படியென்றால், உன்னைப்போல் என்னிடத்தில் அந்தரங்கமான

பக்தியுடையவளான பாஞ்சாலியைத் துரியோதனன், துர்ச்சாதனனைக் கொண்டு சபையில் இழுத்துவந்து, தகாதவார்த்தைகள் சொல்லி வஸ்திரத்தையும் உரியும்பொழுது, பலவான்களான அந்தப் பாண்டவர்கள் அப்பொழுதே துரியோதனாதியர் நூற்றுவரையும் பொடியாக்கி அவள் மானத்தைக் காக்கவேண்டியது கடனாயிருக்க, சத்தியம் சிறந்தது என்று நினைத்து துரௌபதையை மானசம்ரக்ஷணை செய்யாது நின்ற குற்றத்திற்காக இந்த ஐவர்களையும் பாரதப்போரில் அஸ்வத்தாமாவின் பாசறை யுத்தத்தில் அழித்துவிடுவதென்று சங்கல்பித்துக்கொண்டேன். ஆனால் தூதுபோவதற்குமுன், சகாதேவன் பக்தி என்னும் கயிற்றால் என்னைக் கட்டி இந்த பாரதயுத்தத்தில் "நாங்கள் ஐந்துபேராவது சாகாமல் உம்கருணையால் ரக்ஷிக்கவேண்டும்" என்று என்னைச் சரணாகதியடைந்து வணங்கியதால் அந்த ஐவரைமாத்திரம் விட்டுவைத்தேன். பெண்கள் நாயகமே! என்னை ஒருவன் எவ்வளவு நிந்தித்தாலும் நான் பொறுப்பேன். என் அடியாரை நோகச்செய்தால் நான் மனந்தாளமாட்டேன். உனக்கு இவன் செய்த கொடுமைகள் யாவும் நன்றாகத் தெரிந்தும், இவனை நான் மன்னித்து இவனுக்குச் சேவைதருவது இவன் காரணமாக நீ என்னை சரணாகதி பண்ணியதற்கேயன்றி, வேறல்ல. ஆகையால், உனது கணவனைக் கூப்பிட்டு என்னை தரிசிக்கும்படி சொல்லு" எனப் பரந்தாமன் திருவாய்மலர்ந்தருளினார்.

மூர்த்திராவுக்கு தரிசனங் காட்டிய சருக்கம்

பண்டரிநாதனுடைய வார்த்தைகளைக் கேட்ட சக்குபாய், உடனே தன் நாதனைப் பார்த்து, "என் பிராணநாதா! எம்பெருமான் உமக்காக சேவை தந்தருளுகிறார். அவரை தரிசியும் என்றாள். மூர்த்திராவ் பாண்டுரங்கனைக் கண்டான். ஆனந்தம் கொண்டான். திருவடிமுன் விழ்ந்தான். எழுந்து நின்று இரு கரங்களையும் தலையின்மீது குவித்துக்கொண்டு, "அச்சுதா! அமலா! அருட்பெருங்கடலே! பச்சைமாமலைமேனிப் பரந்தாமா! கருதலர்க்கரியே! கமலக்கண்ணா! மருதிடை தவழ்ந்த மாமணிச் சுடரே! எந்தாய் சரணம். இறைவா சரணம், சிந்தாகுலங்களை தேவே சரணம். பைந்தார் துளவப்பரமா சரணம். மலர்மகளுறையும் மார்பா சரணம், சரணம், சரணம் சாமி சரணம் மரணம் தவிர்க்கும் மாதவா சரணம்" என்று பலவாறு தோத்திரம் பண்ணி, பண்டரிநாதன் திருவடிகளில் விழுந்து, "ஏ! கருணாநிதி! அடியேன் குணங்களிலும் பொல்லாதவன்; குற்றமில்லாத நன்மையான விஷயங்களில் செல்லாதவன்: உன்னை அடையும் மார்க்கத்தைக் கல்லாதவன்; உன் அடியார்கூட்டத்திற் கலந்து நில்லாதவன்; காமக்குரோத லோப மதமாச்சரியமென்னும் சத்துருக்களை வெல்லாதவன்; ஞானமென்பது சிறிதும் இல்லாதவன்; இந்த பேதையினிடத்தும் உமக்குக் கருணை பிறந்ததோ! இந்த ஜன்மத்தோடு ஜனன மரணம் என்னைவிட்டுத் துறந்ததோ! நான் புனிதனாயினேனே" என்று தனது கண்களில் ஆனந்தக்கண்ணீர்பெருக, உள்ளம் நெக்குருக அன்பு கனிந்து பெருக ஆசைநோய் ஒருபுறம் கிடந்துமருக, மூர்த்திராவ் நின்றுகொண்டிருக்கும்பொழுது, பண்டரிநாதன் ககனமார்க்கத்திலே அந்தர்த்தியானமானார். உடனே மூர்த்திராவ் தனது மனைவியாகிய சக்குபாயினிடம் ஓடிவந்து, "என் கண்ணே! உன்னாலே சர்வேஸ்வரனை கண்டுகொண்டேன். இனி நாம் காமாந்தகாரத்தில் மூழ்கி வருந்தப்படாது. இப்பொழுதே திவ்விய தேசயாத்திரை பண்ணவேண்டும். புறப்படு" என்று தனது மனைவியோடு அப்பொழுதே பிரயாணப்பட்டு அரித்துவாரம் பதரிகாஸ்ரமம், கோகுலம், பிருந்தாவனம், அயோத்தி என்னும் உத்தரதேசத் திருப்பதிகள்தோறும் சென்று சேவை செய்துகொண்டு பண்டரிபுரத்திற்கு வந்தார். தானும் தன் மனைவியுமாய் பீமநதியில் தீர்த்தமாடி பண்டரிநாதன் சந்நதிக்கு பிரதக்ஷணமாக வந்து பாண்டுரங்கனைத் தரிசித்து பஜனைகோஷ்டியில் கலந்து ஆடிப்பாடி அங்கைகொட்டி இதுதான் மோக்ஷநலம் என்று இன்புற்று வாழ்ந்துவந்தார்கள். அப்பொழுது பண்டரிநாதன் சக்குபாய்க்கு ஐந்தாவது வயதில் திருமந்திர உபதேசம் செய்தபோது எடுத்த வேதியர் உருவத்தை அடைந்து, சக்குபாயும் மூர்த்திராவும் வந்து தங்கியிருக்கும் ஒரு ராமானுஜ கூட்டத்தை நாடி, "ஏ! பாண்டுரங்கா! பரமகிருபாநிதே! கிருஷ்ணா! என்று சொல்லிக்கொண்டே உள்ளே எழுந்தருளினார். சக்குபாய் தனக்கு ஆசாரியனாக எழுந்தருளிய பண்டரிநாதனைக் கண்டதும் ஆர்வத்தோடு எழுந்து அவரது சரணாரவிந்தத்தில் விழுந்து "சற்குருநாதா! அடியாள்மீது கருணைகூர்ந்து உமது திருவடி நோக இங்கு எழுந்தருளியது யான் செய்த புண்ணியமே யானே பாக்கியம் செய்தவள் என்றாள். வேதியரான பெரியவர் சக்குபாயை உற்றுப்பார்த்து, "ஓகோ! நீ கஞ்சனிபுரத்தில் கோட்டீஸ்வரராக விளங்கும் கங்காதரராவின் குமாரியல்லவா? கண்ணே! சிறுவீடு கட்டி விளையாடிக்கொண்டிருக்கும்பொழுது, உனது ஐந்தாவது வயதில் என்னிடம் திருமந்திரோபதேசம் பெற்று எனது தம்பூரை எனக்கு ஆசாரிய சம்பாவனையாகக் கொடுத்தாயல்லவா? குழந்தாய்! பண்டரிநாதன் உனக்கு வெகு சுலபமாய்க் கட்டுப்பட்டானென்றும், உனக்காக உனது நாயகனுக்கும் கூட சேவை தந்தருளினாரென்றும், ராமதாஸ் சுவாமிகள் என்னிடம் சொன்னார்" எனச் சொல்லி, சக்குபாயைப் புகழ்ந்தார். உடனே சக்குபாய் தனது ஆசாரியனை மறுபடியும் தண்டம் சமர்ப்பித்து, "என் தெய்வமே! உம்மைச் சேவிப்பதற்காகவே இந்த பண்டரிபுரத்தில் வந்து காத்துக்கொண்

டிருக்கிறோம். அவ்வாறிருக்க, நிர்ஹேதுககடாக்ஷமென்பது எங்களுக்கு ஏற்பட நீரே எங்களை நாடி எழுந்தருளினீர். இவர்தான் எனது நாதன். இவருக்கு தேவரீர் திருமந்திரத்தை உபதேசித்தருளவேண்டும்" எனப் பிரார்த்திக்க, மாதவமறையோன், "நானே உனது நாயகனுக்கு திருமந்திரோபதேசம் செய்கிறேன்" என்று சொல்லி, அவர்களுடன் அங்கேயே யெழுந்தருளி யிருந்தார். இவ்வாறிருக்க, ராமதாஸ் சுவாமிகள் தனது சிஷ்யர்களுடன் பஜனை பாடிக்கொண்டு கஞ்சுணி புரத்திற்கு எழுந்தருளும் பொழுது கங்காதரராவுக்கு தனது பத்தினியான கமலாபாயுடன் கூடி தனக்கு ஒரு பெண் பிறந்தும், சித்தப்பிரமை பிடித்தவளாய் நாயகன் வீடுசேர்ந்தவள் என்ன கெதியானாளோ! மூர்த்திராவான மூர்க்கன் அவளை உயிருடன் வைத்திருக்கிறானோ அல்லது கொன்றுவிட்டானோ அல்லது விலங்கிட்டு சிறையில் வைத்திருக்கிறானோ அல்லது ஒதுக்கிவைத்து விட்டானோ என்றும் இதே கவலையில் ஆழ்ந்து வேளைக்கு உணவு செய்யாமல் சித்தப்பிரமை கொண்டவர்போல மெத்த வருந்தி தமது செல்வத்தில் சிறிதும் ஆசையில்லாது யாராவது ஒரு குருநாதனிடம் மந்திரோபதேசம் பெற்று உய்யவேண்டுமென்று நினைத்திருந்தார். ராமதாஸ் சுவாமிகள் பஜனைகோஷ்டியோடு எழுந்தருளுவதைக் கேட்டு, தானும் தன் மனைவியுமாகச் சென்று பணிந்தார்கள். உடனே ராமதாஸ் சுவாமிகள் கங்காதரராவைத் தூக்கித் தனது மார்போடு அணைத்துக்கொண்டு, "சுவாமி! உம்மைப்போல பாக்கியம் செய்தவர் இவ்வுலகில் யாரிருக்கிறார்கள்? சக்குபாய் என்னும் எங்கள் தெய்வத்தைப் பெற்றவர் நீரல்லவா? அந்த உத்தமி பண்டரிநாதனைத் தனக்காகக் கட்டுப்படும்படி செய்தாளென்றால், அவளுடைய பக்தி எப்பேர்ப்பட்டது? தனது நாதனுக்கும் பண்டரிநாதனைக்காட்டி சேவைபண்ணிவைத்து, திவ்விய தேசயாத்திரை செய்துக்கொண்டு பண்டரிபுரத்திற்கு தனது நாயகனோடு வந்திருக்கிறாள்; நீரும் அந்த உத்தமியைக் கண்டு உய்வீராக" என்று சொல்லி பஜனை பாடிக்கொண்டு அந்த வீதிவழியாக நடந்தார்.

ராமதாஸ் சுவாமிகள் சொல்லிய வார்த்தையைக் கேட்ட கங்காதர ராவ், தன் பத்தினியோடு அந்தக்கணமே புறப்பட்டு பண்டரிபுரத்திற்கு வந்து சக்குபாய் தன் கணவனோடு தங்கியிருக்கும் ராமானுஜகூடம் வந்து சேர்ந்தார். தாயும் தந்தையும் வருவதைக்கண்டு சக்குபாய், ஆராமகிழ்ச்சியோடு எழுந்துபோய்த் தனது தந்தை தாயார் திருவடிகளில் தனது நாயகனுடன் பணிந்தாள். உடனே கமலாபாய் தனது குழந்தையாகிய சக்குபாயைத் தழுவி மிகுந்த மகிழ்ச்சியடைந்தாள். கங்காதரராவ் தனது மருமகனை மூர்த்திராவைத் தழுவி ஆநந்தமடைந்தார். கங்காதரராவ் கமலாபாய் இருவருக்கும் சக்கு தனக்கு ஐந்தாவது வயதில் திருமந்திரோபதேசம் கிடைத்ததும் தனக்காக பண்டரிநாதன்

தனது உருவம் அடைந்து சிறைப்பட்டதும் தனது கணவனுக்குப் பண்டரிநாதன் சேவை தந்ததும், தாங்கள் திவ்விய தேச யாத்திரை செய்து இங்கு வந்தது வரையில் ஒன்றும் விடாது சவிஸ்தாரமாகச் சொல்லி, தனக்கு ஐந்தாவது வயதில் தன்னிடம் வந்து திருமந்திரத்தை உபதேசித்த தன் ஆசாரியன் நாளை தனது நாயகனுக்கும் திருமந்திரோபதேசம் [செய்யப்போகிறார். நீங்களும் உபதேசம் பெற்று சர்வேஸ்வரனுடைய சரணாரவிந்தத்தைச் சேருங்கள். நாம் யாவரும் இன்னும் அநேக திவ்விய தேச யாத்திரைசெய்து முடிவில் பரமபதம் செல்லுவோம்" என்று சக்குபாய் சொல்ல, அந்த வார்த்தையை வேதவாக்கியமாகக் கருதி, கங்காதரராவும் கமலாபாயும் உடன்பட்டார்கள். மறுநாள் பொழுது விடிந்ததும் எல்லோருமாக எழுந்து பீமநதிக்குச் சென்று, தீர்த்தமாடி, நித்திய கர்மானுஷ்டானத்தையும் முடித்துக் கொண்டு, தம்முடைய தங்குமிடமான ராமானுஜகூடம் வந்ததும் பண்டரிநாதராகிய பிராம்மணர் சக்குபாயுடன் யாவரும் எழுந்து சென்று, இணையடியில் சாஷ்டாங்கமாக விழுந்து நமஸ்கரித்தார்கள். உடனே அவர்களை ஆசீர்வதித்து, சக்குபாயின் கணவன், தந்தை, தாய் மூவருக்கும் தனித்தனியே திருமந்திர உபதேசம் செய்தார். . அந்த உபதேசத்தைப் பெற்ற மூவரும் ஆராத மகிழ்வடைந்து ஆசாரிய சம்பாவனை சமர்ப்பித்து, பண்டரிநாதனுக்கு திருமஞ்சன திருவாராதனங்கள், பிரசாதத்தளிகை யாவையும் சிறப்பாய் நடத்தி, பெரிய ததியாராதனமும் செய்து, பண்டரிநாதனைச் சேவித்தார்கள். அப்பொழுது பாண்டுரங்கன் அரூபியாயிருந்து, "ஏ! சக்குபாய்! உனக்கும் உன் தாய் தந்தைக்கும் உனது நாயகனுக்கும் பரமபதம்தந்தோம். நீங்கள் யாவரும் ஒன்றுசேர்ந்து திவ்விய தேசயாத்திரை செய்து, ஆங்காங்குள்ள சேதனர்களை உங்கள் பக்தியினால் திருத்தி சிலநாளிருந்து பரமபதம் சேருங்கள்" என்று சாதித்தார். இந்த வார்த்தையை இவர்கள் நால்வரும் கேட்டு, ஈஸ்வரனது நியமனப்படி திவ்விய தேச யாத்திரை செய்து, ஆங்குசென்ற இடமெல்லாம் பஜனை செய்து சிலநாள் வாழ்ந்து, இந்நால்வரும் நித்தியசூரியர்களால் அழைக்கப் பரமபதம் போய்ச்சேர்ந்தார்கள்.

வாழி

பண்டரிவாழ் பரம்பொருளை யையாண்டில் கண்டுபதம் பணிந்தாள் வாழி
அண்டர்கள் தனயகனை யருள்கணவ னென்றிருந்த வரிவைவாழி
தொண்டர்களுக் கெளியனெனக் கேசவனை யுலகறியத் தொகுத்தாள் வாழி
எண்டிசையும் தொழுதேத்தும் சக்குபாயி ணையடித்தா ளென்றும் வாழி.

சக்குபாய் சரித்திரம்

முற்றிற்று.

ஸ்ரீ

ஸ்ரீபாண்டுரங்காய நம:

பத்திராசல
ராமதாசர் சரித்திரம்

ஆழ்வார் திருநகரி

சிங்கம். ஸ்ரீனிவாச அய்யங்கார் எழுதியது.

கவி

காரமலைந்திட முன்னாளில் கைக்கனி தளர்ந்து சோர்ந்
தாரவணை துயிலோயென்ன வழைக்கவன்று விறைதாக்க
விராவிய வமலன்றன்னை விருப்பொடு தனக்காட்கொண்ட
விராமதா சன்றாள் போற்றி யியலுவது மவற்சீர்கன்றே.

கோதிலாத பரதகண்டத்தில் ஐம்பத்தாறு நாடுகளிலும் சிறந்ததாய், முல்லை, குறிஞ்சி, மருதம், நெய்தல், பாலை என்னும் அருமையான ஐந்து நிலங்களிலும், அந்தந்த நிலங்களுக்குரிய கருப்பொருள்களால் சிறந்ததாய், மலைவளங்களும் நிலவளங்களும் புஞ்சை வளங்களும் மிஞ்சி என்றும் பஞ்சமில்லாததாய், பல நீரோடைகளும் வாவிகளும் தடாகங்களும் அழகிய கிணறுகளும் தாய் முலைப்பால்போல தன்னாட்டிலுள்ள பிரஜைகளை ரக்ஷிக்கும் மதுரமான ஜலப் பெருக்குடையதாய், விண்ணுறைநரையும் சித்த-வித்தியாதரர்கள் தம் நாட்டிலுள்ள அழகிய கற்பகச் சோலையில் விருப்பமற்று இந்நாட்டிலுள்ள நாக, புன்னாக, தமால, கிருதமால, தால, இந்திரிசால, ரசால, வகுள, மஞ்சுள, திலக, ஆமலக, குடச, லகுத, தக்கோல, கோலகுரவக, மருவக சந்தன சம்பகங்களாய், புஷ்பபல்லவினி பீடமாயிருக்கிற விருக்ஷ சாதியுடன், மல்லிகை, முல்லை, இருவாக்ஷி, சம்பங்கி, சாமந்தி, ரோஜா, மருவு, தவனம் என்னும் மணந்தரு மலர் செடிகளோடு கூடியதாய், சம்பங்கி மாதவி முதலிய கொடிகளால் படர்ந்ததாகக் கிரகங்க ளிடையிடையே யுடையதாய், புனல் விளையாடலுக்கு உரிய பல வாவிகளோடு கூடியதாயுள்ள, பல சோலைகளுடையதாய், நெல் சேரும் கரும்பாலையும் நிரம்பி யுள்ளதாகிய திருமகள் தாண்டவமாடும் தெலுங்க நாட்டில் கொல்லகொண்டபல்ல என்கிற அழகிய நகரம் இருக்கிறது. அந்நகரமானது பெரிய தனிகர்களை தம்மிடம் அடக்கிக் கொண்டிருப்பதால், மாடமாளிகையோடும், கூடகோபுரங்களோடும், சிறப்புற்ற தேவாலயங்களோடும், வந்தவர்கள் மனமார உண்டு உறங்கும் அன்ன சத்திரங்களோடும், பிராமண க்ஷத்திரிய வைசிய சூத்திரரென்னும் தத்தம் வருணாச்சிரம தர்மங்களில் தவறாது, நான்கு வர்ணத்தவர்களால் சிறப்புற்றதாய் ஈஸ்வர பக்தி, பூத தயை, ஈகை, வாய்மை, கல்வி, செல்வம்

இவைகள் நீங்காத ஸ்திரீ புருஷர்களால் சிறப்புற்றதாய் விளங்கும் அவ்வூரிலே வேதியர் குலத்திலே பல தலைமுறையாக ராம பக்தர்களென்று யாரும் வணங்கும் நல்ல பரம்பரையிலே பிறந்து லிங்கன்னவென்னும் நாமதேயமுடையவராய் விளங்கிவந்தார்.

ஸ்ரீராமன் தன்னை அடைந்தவர்களுக்கு இராஜ்யத்தைக் கொடுத்து காப்பவரன்றோ? சுக்ரீவன் தன்னைவந்து சரண் புகுந்தான். அதற்காக வாலியைக் கொன்று கிஷ்கிந்தா இராஜ்ஜியத்தை பட்டம் சூட்டினார். விபீஷணனும்வார் ராவண கோஷ்டியை வெறுத்து, இராகவன் திருவடியில் வந்து விழுந்து சரணாகதி அடைந்தார். அதற்காக இராவணனை வதம் செய்து இலங்கா இராஜ்ஜியத்தைப் பட்டாபிஷேகம் செய்துவைத்தார். அது போல் இவர் சந்ததியாரெல்லாம் இராமபக்தர்களாய் அளவிட முடியாத நிதி நிக்ஷேபங்களுடன் கூடிவிளங்கினாற்போல இவரும் இராகவனடிமையாய் வரம்புகடந்தசெல்வத்தோடு கல்வி, அறிவு ஒழுக்கம், ஞானம் முதலிய யாவும் குறைவர அடைந்தவராய் விளங்கிவந்தார்.

இவர் கோலகொண்டபல்லியில் ஒரு மன்னவன்போல யாரும் போற்ற வளர்ந்துவரும் நாளில் ஸ்ரீ காசி க்ஷேத்திரத்தில் காசி இரகசியமென்னும் கிரந்தத்தைப் படித்துக்கொண்டிருந்த வொரு பிராமணன் ஸ்ரீ காசி க்ஷேத்திரத்திலே மணிகர்ணிகா தீர்த்தக் கட்டத்திலிருந்து ராமநாம ஜெபம் செய்துகொண்டு ஒரேதினத்தில் ஆயிரம் குடம் தீர்த்தம் கொணர்ந்து விஸ்வநாதனுக்கு அபிஷேகம் செய்தால் அப்பொழுதே அவன் சக்ரவர்த்தியாகிறான் என்று எழுதியிருந்தது. இதைப் படித்ததும் "நாம் என் கங்கை ஆற்றுக்குச் சென்று காக்கை முழுவதுபோல் முழுகி, யார் ஏதாவது தானங்கொடுப்பார்கள் என்று அங்குமிங்குமலைந்து கால்கள் சோர, அப்படியே அன்ன சத்திரங்கள்தோறும் வேளைக்கொரு சத்திரத்தில் உண்டு, மடங்களிலுள்ள திண்ணைகளில் படுத்துறங்கி நமது காலத்தை வீணாய்க் கழிப்பானேன்? இந்த காசி இரகசியத்தில் சொல்லிய வண்ணம், மணிகர்ணிகா தீர்த்த கட்டத்திலிருந்து ஆயிரம் குடம் தீர்த்தத்தை ராமநாம ஸ்மரணம் செய்து விஸ்வநாதனுக்கு அபிஷேகம் பண்ணி அப்பொழுதே என் சக்ரவர்த்தியாகப்படாது" என்று நினைத்து, மறுநாள் பொழுது எப்பொழுது விடியப் போகிறதென்று காத்திருந்து, பொழுது விடிவதற்குமுன் மணிகர்ணிகா கட்டத்திற்குப்போய் தீர்த்தமாடி தான் செய்யவேண்டிய அனுஷ்டானங்களைக் குறைவரச் செய்து சூரியன் உதிக்கும்பொழுது குடத்தில் ஜலத்தை மொண்டு தலையில் தூக்கி ராமநாம ஸ்மரணம் செய்துகொண்டு தன்னை மறந்து தீர்த்தத்தைக் கொணர்ந்து விஸ்வேஸ்வரருக்கு அபிஷேகம் செய்தான்.

இவ்வாறு தொளாயிரத்துத் தொண்ணூற்றொன்பது குடமாயிற்று. இன்னுமொரு குடந்தானிருக்கிறது. அப்பொழுது வேதியன் "விஸ்வநாதருக்கு நான் இன்னும் ஒருகுடம் தீர்த்தம் தான் அபிஷேகம் செய்யவேண்டியது. அந்த அபிஷேகம் செய்ததும் நான் சக்ரவர்த்தியாய்ப் போய்விடுவேன். நான் இதுவரை தானம் வாங்கியதுபோல் இந்த ஒரு குடம் தீர்த்தத்தை அபிஷேகம்பண்ணியதே தானம் கொடுப்போனாய் விடுவேன். சத்திரங்கள்தோறும் திரிந்தலைந்து உண்டதுபோய் இந்த ஒருகுடம் தீர்த்தம் அபிஷேகமானதும், நான் சக்ரவர்த்தியாய் அனேக சத்திரங்களைக் கட்டிவைப்பேன். நான் இந்த குடத்திலுள்ள ஜலத்தை விஸ்வநாதன் தலையில் கொட்டவேண்டியது தான் அம்மட்டோடு நான் சக்ரவர்த்தியாய் நல்லகுணமும், மிக்க அழகும் உடைய ஒரு பெண்ணை விவாகம் செய்துக்கொண்டு அநேக மந்திரிகள், சேனாபதிகள் சூழ, மாதர்கள் வணங்க கிரீட கேயூராதி திவ்வியாபரணங்கள் தரித்து, தேர் யானை குதிரை முதலிய வாகனங்களிலேறி, ஊரார் வணங்க பவனி வருவேன். எனக்கு என்ன பாக்கியம் கிடைத்தது" என்னும் பேராசைப் பேய்ப்பிடித்தவனாய், அந்த ஒரு குடம் ஜலத்தையும் கொண்டு வந்து "ஐயா! என்னைப் பிடித்த தரித்திரமாகிய சனி இந்த மட்டோடு தொலைந்தது" என்று நினைத்து தீர்த்தத்தை அபிஷேகம் செய்யும்பொழுது குடமானது தவறி விஸ்வேஸ்வரருடைய தலையில் விழுந்து உடைந்தது. இதை யுணர்ந்த வேதியன்," "அந்தோ! நானென்ன அபசாரம் செய்துவிட்டேன்! தொளாயிரத்துத் தொண்ணூற்றொன்பது குடம்வரை ராமநாமத்தை வந்தித்து, சிரத்தையோடு அபிஷேகம் பண்ணிவிட்டு இந்த குடத்தை தூக்கும்பொழுது ராமஸ்மரணையும் விட்டு, நானும் கெட்டு, ஈசனுடைய தலையிலும் குடத்தைப்போட்டு உடைத்தேனே! அந்தோ! பேராசை என்னைக் கெடுத்ததே" என ஏக்கங்கொண்டு, அன்று பூராநேரமும் பட்டினியுடன் மணிகர்ணிகா கட்டத்திலிருந்து தீர்த்தம் கொண்டுவந்து ஆயிரம் குடம் அபிஷேகம் செய்த களைப்பினாலும் ஒரு சத்திரத்திண்ணையில் போய்ப் படுத்து, புராணத்தை நம்பி மோசம் போனேனே! ஆ! எனக்கு அந்த புராணம் உண்மையானால், இன்னும் ஏன் நான் சக்ரவர்த்தியாகவில்லை! ஓகோ! பூரா அபிஷேகம் செய்யுமுன் ராமநாமத்தை மறந்துவிட்டேனன்றோ! அதனால்தான் பலன் கிடைக்காமல் போயிற்று" என திரும்பவும் முன் நினைந்ததுபோலவே நினைந்து, அதே ஏக்கத்தோடு உயிர் துறந்தான்.

காசி இரகசியத்தில் சொல்லியவண்ணம் ஆயிரம் குடம் தீர்த்தம் மணிகர்ணிகா கட்டத்திலிருந்து விஸ்வநாதருக்கு அபிஷேகம் செய்தும், தொளாயிரத்துத் தொண்ணூற்றொன்பது குடம்வரை ராமநாமத்தை விடாது அபிஷேகம்பண்ணி, ஒரு

குடம் தீர்த்தம் அபிஷேகம் பண்ணுகிறதற்குள் ராமநாமத்தை மறந்து, பேராசையுற்று, தீர்த்தக்குடத்தையும் விஸ்வேஸ்வரன் தலையில் போட்டு உடைத்துவிட்டு, காசி இரகசிய மென்னும் புராணத்தையும் பழித்த காரணத்தால் ஐதராபாத்தை பரிபாலனம் செய்யும் துருக்க மன்னனுக்குப் புதல்வனாய் பாதுஷாவிற்குப் புத்திரனாய்ப் பிறந்தான். பாதுஷாவானவர் தனக்கு ஆண்குழந்தை பிறந்ததென்று அதிக மகிழ்வடைந்து பகீர்களுக்குப் பெரிய மாம்சவர்க்கத்தோடு கூடிய விருந்து நடத்தி மசூதிகளுக்கும் அனேககாலம் தொழுகைக்கு வேண்டிய யாவும்செய்து, தாங்கள் மகம்மதியராயினும், தாம் ஆளுவது இந்திய நாடாதலால், இந்துக்களை சமத்துவமாக நடத்துவது அவர்களுடைய கடமையாதலாலே ஐதராபாத்தைச் சார்ந்த ஜில்லாக்களிலும், தாலுக்காக்களிலும், உள்ள சிவாலய விஷ்ணுவாலயங்களுக்கு அநேக திருவிழா நடத்தி தன்னுடைய மகம்மதியரும், இந்தியராகிய குடிகளும் களிக்க அக்குழந்தைக்கு, 'தானிஷா' வென்று பெயரிட்டு இன்பமாய் அரசாண்டுவந்தான்.

தானிஷாவுக்கு அரசனாவதற்குரிய யௌவன வயது வந்ததும், வீரத்திலும் கல்வியிலும் அழகிலும் ஒழுக்கத்திலும் மதாசாரத்திலும் குறையற்றவனாய் இந்துக்களிடத்தும் அளவுகடந்த அன்புகாட்டி துருக்கரும் இந்துக்களும் தனது இரண்டு கண்களென்று கருதிவருங்காலத்தில், தனது ஒழுக்கத்திற்கும் அழகிற்குமேற்ப, சுந்தராங்கியாய் மிக்க குணவதியாய் விளங்குமொரு மாதை மணந்து இன்பமடைந்து இருந்தான். இப்படியிருக்குங் காலத்தில், பாதுஷாவானவர், தனது மந்திரியர்களை தன் சபைக்கு அழைத்து, "அமைச்சர்களே! அல்லா உதல்லாவின் அருளாலும், உங்களை மந்திரிகளாக அடைந்த பெருமையினாலும், 'இவர்கள் இந்துக்கள். நமது மதத்தைச் சாராதவர்கள்' என்றும், 'இவர்கள் முசல்மான்கள் நமது மதத்தைச் சார்ந்தவர்கள்' என்றும், பேதம் ஒருசிறிதும் கனவிலும் கருதாது, இதுவரை நீதியாய் அரசாண்டேன். எனக்குப்பின் என்னைப் பார்க்கிலும் வேற்றுமையின்றி, அரசாளும் யோக்கியதை வாய்ந்தவனாக என் மகனிருக்கிறான். எனது மைந்தனாகிய தானிஷாவிடம் இந்த நிஜாம் இராஜ்ஜியத்தை ஒப்புவித்துவிட்டு, எங்கள் குலத்தவர்களாகிய பெரியோர்களைத் தொழுவதற்கும், முசல்மான்களாகிய எங்களுக்குரிய புண்ணிய க்ஷேத்திரங்களாகிய மக்கா, மதீனா, கிலாபத் முதலிய க்ஷேத்திரங்களுக்கு யாத்திரை போவதற்கும் ஆசை அதிகரித்திருக்கிறது. என்ன சொல்லுகிறீர்கள் எனக் கேட்க, அமைச்சர்கள் யாவரும் அரசன் வார்த்தைக்கு கீழ்ப்படிந்தவர்களாய் மிக்க வணக்கத்துடன் "அரசே தங்கள் வார்த்தையின்படியே செய்துக" எனத் தாழ்மையாய்ச் சொல்லி, அவர் வார்த்தைக்கு ஒப்புக்கொண்டனர். அரசன் மகிழ்வடைந்து

உடனே, தங்கள் குருக்களாகிய காசிம் முதலானவர்களும் முசல்மான்களும், இந்துக்களும் தன் சபைக்குவந்து சேரும்படி பறை சாற்றுவித்து, எல்லோரும் வந்து கூடியபின், தன் அருமை மைந்தனை தானிஷாவையும் வருவித்து அவர்களுக்கு முன்னிலையில் தனது இராஜ்ஜியத்தை அவனுக்குக் கொடுத்து, யாவரும் போற்றச்செய்து, தன் குமாரனிடம் விடைபெற்று, மக்கா மதீனு கிலாபத் முதலிய தேசங்களுக்கு யாத்திரை சென்று அநேக க்ஷேத்திரங்களை தரிசித்து, சிறிது நாள் யாத்திரை வாசியாகவேயிருந்து கடைசியில், மகம்மது நபி நாயகம் திருவவதரித்த கிலாபத்திற்குச் சென்று, அங்குள்ள பெரியோர்களைக்கண்டு சேவித்து அவர்களால் யோகமார்க்கங்களை உபதேசம் செய்யப்பெற்று, அல்லா உதல்லாவின் அடிமலர் அடைந்தார்.

தானிஷாவானவன், இராஜபதவியை யடைந்ததும், முன் ஜென்மத்தின் வாசனையாலோ, வேறு என்ன காரணத்தாலோ தன்னிடம் மந்திரிவேலை பார்க்கும் முசல்மான்களுக்கு உபகாரச் சம்பளம் கொடுத்து மந்திரி வேலையிலிருந்து நிறுத்திவிட்டு; கல்வி, அறிவு, உலகானுபவம், விடாமுயற்சி, உற்சாகம், சோம்பலின்மை, தைரியம், ஆண்மை பரோபகாரம்; முதலியவைகளெல்லாம் ஒருங்கே அமையப்பட்ட அக்கண்ணா மாதண்ணா என்னும் இரு சகோதரர்களைத் தனக்குரிய மந்திரிகளாக நியமித்துக் கொண்டான். பிராமணர்களாகிய அவ்விரு சகோதரர்களும், மந்திரித்தொழிலை ஏற்றுக்கொண்டதிலிருந்து வெகு திறமையோடு பொக்கிஷங்கள் யாவும் நிதியைக் குவியலாகக்குவித்து. தானிஷாவின் கீர்த்தி விண்ணும் மண்ணும் ஓங்கிப்பரவ; பகைவர்கள் கண்டு பயந்தோட; இராஜரீகம் இந்து முசல்மான்களின் வேற்றுமையின்றி, நீதியோடு நடந்து வருமாறு செய்துவருங் காலத்தில், தானிஷாவுக்கு தனது மந்திரிகளிடம் அளவுகடந்த விசுவாசம் ஏற்பட்டது. மந்திரிகளை ஒரு கணநேரமும் பிரியாது அவர்கள் சொல்லியவண்ணமே அரசாண்டுவந்தான். இவனுக்கு நெடுநாளாக தனது நகரமாகிய ஐதராபாத்தை நன்றாகத் திருத்திப், புதிய நகரமாக்கவேண்டுமென்னும் எண்ணமிருந்தது. இவ்வெண்ணம் நினைவுக்கு வரும்பொழுதெல்லாம் பொக்கிஷதாரரை அழைத்து, பொக்கிஷத்தின் பொருள் ஆதாரநிலையை விசாரிப்பான். தான் உத்தேசித்தபடி நகர நிர்மாணம் பண்ண பொக்கிஷத்தில் திரவியம் போதாதென்று அம்மட்டோடு விட்டுவிடுவான்.

இவ்வாறு தானிஷா இருந்துவரும் நாளில், அக்கண்ணா மாதண்ணா வென்பவர்கள், விடாமுயற்சியாகக் குடிகளும் சந்தோஷப்படும்படி அவர்களுக்கும் மிக்க லாபத்தைக் காட்டி அரசனது பொக்கிஷங்களையும் தனமாய் நிறைத்தபொழுது, "இந்தப் பொருளை நகர நிர்மாணத்திற்குச் செலவிடுவோம் இந்த மந்திரி

கள் காலத்தில் நகர நிர்மாணம் செய்தாலன்றி வேறொருவர் காலத்தில் நடக்கப்போகிறது கிடையாது" என நிச்சயித்து, தனது மந்திரிகளிடம் இதுவிஷயமாகக் கலந்துகொள்ள தூதுவரை அனுப்பினான். பாதுஷாவின் தூதுவர்கள் மந்திரிகளை அழைக்க, மந்திரிகளிருவரும் அந்த நிமிஷமே வந்து அரசனுக்கு சலாமிட்டு மண்டிபோட்டு வணங்கி, அரசே! எங்களைத் தூதுவர்களால் இவ்வளவு விரைவாக அழைத்தது என்ன காரணம்? அதை தயவு செய்து தெரிவிக்கவேண்டும்" எனக் கேட்டார்கள். இவ்வார்த்தையைக் கேட்ட அரசன், எனது அன்புடைய அமைச்சர்களே! நான் சொல்லுவதைக் கவனமாய்க் கேளுங்கள். நான் நெடுநாளாக இந்த நகரத்தைத் திருத்தி, நகர நிர்மாணம் செய்யவேண்டும் என்னும் ஆசை உடையவனாயிருக்கிறேன். முந்தி நினைத்த பொழுதெல்லாம், பொக்கிஷங்களில் பொருள் குறைவாயிருந்ததால், நினைப்பு வீணாயிற்று. தாங்கள் மந்திரிகளாக வந்தபின் பொக்கிஷங்களில் பொருளைக் கொட்ட இடமில்லாது போவதினால், என்னுடைய மனோபீஷ்டப்படி இந்த நகரத்தை நிர்மாணம் செய்யலாம். இதுவிஷயமாக யோசிப்பதற்கே உங்களிருவரையும் வருவித்தேன். வேறு ஒரு காரணமுமில்லை" என்று சொன்னார். மந்திரிகளாகிய மாதண்ணாவும் அக்கண்ணாவும் "அரசே! நாங்களிருவரும் இதை ஆலோசனை செய்துவருகிறோம்" எனச் சொல்லிவிட்டு ஒரு தனியிடம் வந்து, "நகர நிர்மாணம் செய்ய பொக்கிஷப்பணத்தைச் செலவு செய்யும்படி நம்மிடம் கலந்தானே அது மெத்த நல்லதுதான். அந்த நகர நிர்மாணத்தில் பொக்கிஷப்பணம் செலவாகுமேல் இந்த பொக்கிஷங்களிலுள்ள செல்வம் பாதி நம்முடையதே" என்று அவர்களுக்கவர்களே தீர்மானம் செய்துகொண்டு மகிழ்வோடு தானிஷாவிடம் வந்து "நாங்களிருவரும் கலந்துகொண்டோம். நாளையே நல்ல சிற்பிகளை அழைப்பித்து வேலையைத் துவக்குகிறோம்" என்று சொல்லிவிட்டு வெளியே வந்ததும் இருவரும் சேர்ந்து தங்கள் மனம்போன்ற பல சிற்ப சாஸ்திரிகளை வரவழைத்து "ஐதராபாத் நகரம் முற்றும் அரசாங்கத்தின் சிலவிலேயே கட்டிமுடிக்க வேண்டுமென்று உறுதியாய்ச் சொன்னார்கள். அவர்களும் அதற்கொப்புக்கொண்டு கட்டிமுடித்தார்கள்.

புதிதாய் நிர்மாணம் செய்த அந்த நகரத்தின் சிறப்பை ஆயிரம் நாவையுடைய அனந்தனே சொல்ல அஞ்சுவானென்றால், நான் புகழ்வது எவ்வாறு? நாலுமுகச் சதுரமாக சிற்ப சாஸ்திரவிதிப்படி முனை நாட்டி, இராஜவீதியென்றும்; வேதியர் வீதியென்றும், வேந்தர்கள் வீதியென்றும்; வைசியர் வீதியென்றும்; அச்சவதுக்கு, தெருக்கள் சந்திக்கும் சந்திகளை மிக்க அகலமுடையதாய் அமைத்து, அந்த சந்திகளில் நிஜாம் அரசர்களில் பிரசித்திபெற்றவர்களுடைய உருவச்சிலைகளை நிறுத்தி, அதைச்

சுற்றிலும் அழகிய பூஞ்செடிகளை வைத்து, பல இரதங்களும் குதிரைகளும் சுற்றிவருவதற்கு வேண்டிய வசதிகளையும் ஏற்படுத்தி, அந்நகருக்கு நடுநாயகமாக கோட்டை அகழியுடையதாய்; அழகிய கோபிகளுடையதாய்; தங்கத்தினும் மணிகளினும் செய்த இளம்பிறை தோன்ற பல சிகரங்களுடையதாய்; மயன் முதலிய தெய்வத்தச்சர்களும் மயங்கும்படி, இது சபாமண்டபமென்றும்; இது ஆலோசனைமண்டபமென்றும்; அது நகரபரிபாலன மண்டபமென்றும்; அது ஆபரணச்சாலையென்றும்; இது ஆயுதசாலையென்றும்; இது ஸ்நானசாலையென்றும்; அதுவே போஜனசாலையென்றும்; இது கிரீடைசாலையென்றும் அமைத்தும்; அழகிய அரண்மனைகள் வகுத்தும்; அவ்வரண்மனைகள் சூழ மாமதில்களும் கோட்டைவாயில்களும் அழகுற அமைத்து; அக்கோட்டையைச் சுற்றிலும் மணந்தரு மல்லிகை ரோஜா முதலிய செடிகளைக் காண்போர் களிப்புய்ய அமைத்து; அம்மதில்களைச் சுற்றிலும் மாடவீதியாய் நவாபின் சந்ததியார்கள் வாழ்வதற்கேற்ற மாடமாளிகை கூடகோபுரங்கள் வசதிபெற அமைத்து பல மசூதிகள் தங்கள் இளம்பிறைச் சந்திரன்போல் ஒளிதரும் பளிங்குக் கற்களால் பண்பாய் வகுத்து; இதுதான் அமராவதியோ அல்லது அளகாபுரியோ என்று ஐயுறுமாறு கட்டி; இராஜவீதியில் வானமளாவ ஓங்கும் மாடங்கள் மூன்றுலகத்திலுமுள்ள மண்டபங்கள் யாவும் குவிந்தனவென்றிமாறு தோன்ற மிக்க செல்வமுடைய வர்த்தகர்களால் மகிமைபெற அமைத்து, வேதியர் வீதிகளிலும் வேந்தர் வீதிகளிலும் மற்றைய சாதியர் வீதிகளிலும், அவரவர்கள் வழிபடுகடவுளர்க்கு ஆலயங்கள் வகுத்து; அவ்வாலயங்களுக்கு முட்டின்றி ஆறுகாலமும் அபிஷேக அலங்கார பூஜைகளுக்கு வேண்டிய நிதிகளை மோகினி என்று சர்க்கார் கணக்கில் தாக்கீது செய்து அந்த நகரத்தை அக்கண்ணு மாதன்னு என்று இருவரும் அமைத்தார்கள். தானிஷாவானவர் தனது மந்திரிகள் கட்டிய புதிய நகரத்தைக் கண்ணுற்று அருமகிழ்வடைந்து சிற்பிகளுக்கு வேண்டிய சன்மானமளித்து சிறப்பாய் வாழ்ந்து வருவாராயினர்.

இவ்வாறு வாழ்ந்துவரும் நாளில், அக்கண்ணு மாதன்னு என்னு மிருவரும் மந்திரி உத்தியோகத்தில் அளவுகடந்த சம்பத்தைப் பெற்று வாழ்ந்து வருங்காலத்தில், தங்களுடைய தங்கை காமாம்பா ளென்பவளுக்கு வயது பத்தாயதும், நல்ல மணமகனைத் தேடி கலியாணம் செய்து வைப்பதாய் தீர்மானித்து, தனது அந்தஸ்துக்கு தக்கவனாய்; தங்களைப் போல் பெரும் செல்வவந்தனாய்; கல்வி அறிவு ஒழுக்க முள்ளவனாய்; மிகுந்த அழகுடையவனாய் இருக்கும் ஒருவனைப் பார்த்து வருவேனென்று தனது தம்பியான மாதன்னுவிடம் சொல்லி மந்திரிவேலையை சாக்கிரதையாய்ப் பார்க்கும்படி சொல்லி

விட்டு, தனது அரசர் பெருமானிடம் ஒருவாரத்திற்கு விடுமுறை பெற்று பல்லக்கிலேறி பல ஊர்களிலும் சென்று விசாரித்து, ஒருவரும் தன் மனதிற் பொருந்தாததினால், கொல்லகொண்டபல்லா என்னும் கிராமம் வந்து விசாரிக்கவும், லிங்கன்னு என்பவரின் செல்வத்தையும், அவர் கல்வி அறிவு ஒழுக்கங்களையும் அந்த ஊரிலுள்ளவர்களால் தெரிந்துகொண்டு அவர் வீடுசென்று, பல்லக்கை விட்டிறங்கி, லிங்கன்னுவைக் கண்டு, அவரால் உபசரிக்கப்பட்டு, தன் மனதிற்கு அவர் நிரம்ப பொருத்தமாகத் தோன்றியதால், காமாம்பாளை அவருக்குக் கொடுப்பதென தீர்மானித்து லிங்கன்னுவின் சம்மதம் பெற்று ஐதராபாத்திற்கு வந்து, கலியாணத்தை சிறப்பாய் நடத்திவைத்தார். காமாம்பாள் லிங்கன்னுவை விவாகம் செய்து தனது நாயகனுடன் இன்பமாய் இல்லறம் நடத்திவந்தாள். இவளது குணநிசயத்தைக் கண்டோர் மெச்ச வாழ்ந்துவரும் காலத்தில் இவளுக்கு ஒரு ஆண்குழந்தை பிறந்தது. அக்குழந்தைக்கு ஜாதகர்மம் செய்து, கோபன்னு என்று பெயரிட்டு அன்னபிராசனம் சவுளம் உபயனம் எல்லாம் வேதவிதிப்படி செய்து, கல்வி கற்க நல்ல ஆசாரியரிடம் ஒப்புவித்தார்கள். ஸ்ரீராகவன் கிருபையால் திருவவதரித்தவராதலால், கல்வி, கேள்விகளில் தேர்ச்சியடைந்து, தந்தைக்கும் தாய்க்கும் அளவுகடந்த சந்தோஷத்தை யுண்டாக்கி, தாய் தந்தையர்க்கடங்கி, 'தந்தை சொல் மிக்க மந்திரமில்லை' என்றும், தாயிற் சிறந்த தெய்வமுமில்லை என்றும் மதித்து இருவரையும் போற்றி வந்தார். இக்காலத்தில் சில பெரியவர்கள் ஸ்ரீராமச்சந்திரமூர்த்தின் படமூர்த்தியை வைத்து அலங்காரம் பண்ணி, ஒரு பாகவதரை தருவித்து, ஸ்ரீராமாயணத்தைப் பிரசங்கம் செய்யும்படி பிரார்த்திக்க, அவரும் பிரசங்கம் செய்துவரும் முதல் நாளன்று, சங்க்ஷேப இராமாயணமென்று, இராமாயணம் பூராவும் சுருக்கமாய் உபன்யாசிக்க, கோபன்னு அந்த இராமாயணம் கேட்கச் சென்றார். இராமாயணம் முடிந்ததும் தனது வீட்டிற்கு வந்து இராகவனுடைய அநந்த கல்யாண குணங்களை நினைந்து, "ஆ! அந்த இராமனுடைய சௌலப்பியந்தானென்ன! குகனென்னும் வேடனைத் தன்னுடைய தம்பி என்றார். சிற்றினக் குரங்கை தோழமை கொண்டாரே! இராவணன் தம்பியான விபீஷணனை அரக்கர்குலத்தில் உதித்தவன் என்று தள்ளாமல் சிநேகிதம் செய்துகொண்டாரே! நானும் அவர் திருவவதரித்த காலத்தில் பிறந்திருந்தால், நானும் இராமனுக்கு அடிமையாய் என்னாலான கைங்கரியம் செய்வேனே! இராவண யுத்தத்தில் ராமனுக்காக இராவணன்மேலே தாவி யெழுந்து மாய்ந்து விழுந்து எனது ஆவியை மாய்ப்பேனே! உலகமுள்ளளவும் அழியாத பெரும் புகழைப் பெறுவேனே! என்ன தௌர்பாக்கியம் செய்துவிட்டேன்! பாழும் ஜென்மமே? நீ அப்பொழுதே பிறந்திருக்கப்

படாதா?'' எனப் பலவாறு தனியே நின்று சொல்லி அழுவார். இன்னும் சிறிதுநேரம் அவர் குணங்களை நினைந்து கூத்தாடுவார். இப்படியே இருந்து இராமாயணம் பூராவும் கேட்டு, சதா ராமத் தியானத்திலே இருந்துவரும் நாளையிலே இவருக்கு வயது பதினாறாயிற்று. தாய் தந்தையர்கள் கோபன்னாவின் ராம பக்தியைக் கண்டு மிக மகிழ்ச்சியடைந்து இவனாலே நமது ஜென்மம் ஈடேறும் என்றும், நமது சந்ததியானது இவனாலே உலகமழியினும், அழியாது விளங்கும் என்றும் நினைந்து, இவனுக்கு இப்பொழுதே நல்ல குலமகளைத் தேடி விவாகம் செய்து வைக்க வேண்டும். என்று நினைத்து நல்ல உத்தமகுடும்பத்தில் பிறந்தவளும், மிக்க நல்லவளும், நல்ல அழகுடையவளும், பதிவிரதா தர்மத்தைக் காப்பவளுமான காமாம்பாள் என்னும் பெண்ணை விவாகம் செய்துவைத்து, தாய் தந்தையர்களான காமாம்பாளும் லிங்கன்னாவும் மகிழ்ந்திருந்தார்கள்.

லிங்கன்னா இவ்வாறிருக்கும் நாளில், தனது மகனையும் தன் மருகியையும் தனது மனைவியையும் விட்டு, ஸ்ரீராமச்சந்திரன் திருவடி அடைந்தார். கோபன்னாவானவர், தந்தை யிறந்த துயரத்தை ஆற்றுதவராய், தாயைப்பிரிந்த கன்றெனக்கலங்கி, தனது தந்தைக்கு செய்யவேண்டிய பிதுர்க்கடன் யாவும் குறைவறச் செய்து தாய்மொழி தவறாது தந்தையின் திருவாராதனத்தைத் தான் செய்து, அளவுகடந்த செல்வத்தோடு தன் மனைவி பணி செய்ய வாழ்ந்துவரும் நாளில் காமாம்பாளும் ஸ்ரீராமச்சந்திரன் திருவடி அடைந்தாள். தாயாருக்கும் செய்யவேண்டிய நீர்க்கடன் யாவும் செய்து, சிரார்த்தம் முதலியதும் செய்து, வீட்டின் சகல பொறுப்பும் தன்னையே சேர, தான் இராமச்சந்திரனையே தந்தையும் தாயுமாய் நினைத்து விடியற்காலத்தில் எழுந்திருப்பதும் தீர்த்தமாடுவதும் தனது நித்திய கர்மானுஷ்டானங்களை முடித்துக்கொண்டு, நந்தவனம் சென்று, நறுமலர் திருத்துழாய் பறித்து குடலையிலிட்டுக் கொண்டுவந்து, ஸ்ரீராமன் சீதாபிராட்டி இளையபெருமாள் ஆஞ்சநேயன் இந்த மூர்த்திகளை எழுந்தருளச் செய்திருக்கும் பெட்டகத்தை யெடுத்து, விக்கிரகங்களைத் தங்கத் தொட்டியில் எழுந்தருளப்பண்ணி திருமஞ்சனம் செய்வித்து திருப்பரிவட்டம் சாத்தி, திருமாலை யணிந்து, திலகம் சாத்தி தூபதீபங்களால் திருவாராதனை செய்து, ஸ்ரீராம சகஸ்திர நாமார்ச்சனை செய்து, தளிகை அமுதுசெய்யப்பண்ணி, கர்ப்பூர திருவாராதனம் செய்து, பகவத்பாதோதகமான தீர்த்தம் திருத்துழாயைத் தான் சுவீகரித்து தனது மனைவிக்கும் கொடுத்து, பகவானைத் திருப்தி செய்துவிட்டு, பகவத் பிரசாதமாகிய ஸ்ரீராமன் அமுது செய்த பிரசாதத்தை தானும் தன் உறவினரும், தன் வீட்டுக்கு எழுந்தருளிய பாகவதர்களுமாய் அமுதுசெய்து, ஸ்ரீராமத்

தியானம் செய்துக்கொண்டு, வேறு கவலைக ளொன்றுமில்லாதவராய் வாழ்ந்திருந்தார்.

இவர் இவ்வாறிருக்கும்பொழுது கபீர்தாசர், உத்தமராகிய கோபன்னாவின் வைராக்கியமாகிய பக்தியைத் தனது ஞான திருஷ்டியால் உணர்ந்து, கோபன்னாவுக்கு தாரக மந்திரத்தை உபதேசிக்கக் கருதி கொல்கொண்டபல்லாவுக்கு எழுந்தருளி, கோபன்னாவின் வீட்டுக்கு வந்தார். அப்பொழுது கோபன்னா, திருவாராதனத்தை முடித்துவிட்டு மூர்த்திகளை பெட்டியிற்குள் எழுந்தருளப்பண்ணி பெட்டியை மூடிவைத்துவிட்டு தனது இரு கைகளையும் தலையின்மீது குவித்துக்கொண்டு தன்னையும் மறந்து "ஏ! கௌசல ராமா! தசரதராமா! சீதா ராமா! சர்வபூமா! பரந்தாமா! பக்தவற்சலா! வாலிமர்த்தனா! சுக்ரீவப்பிரியா! ஆஞ்சனேயப் பிரியா? விபீஷணமித்துரு! இராவண சத்ரு! யென்று பலவாறு புகன்று கொண்டிருக்கும்பொழுது, கபீர் வந்து "ஏ! ஐயா!'' என்று கூப்பிடவும், ஒன்றும் பேசாமை கண்டு, இவனுக்கு தாரகமந்திரத்தை உபதேசிக்கக் காலம் இதுதான் என்று தெரிந்துகொண்டு மெள்ள திருவாராதனப்பெட்டியைத் தூக்கிக்கொண்டு பக்கத்திலுள்ள குளக்கரைக்குச் சென்று, அக்குளத்திற்குள் திருவாராதனப் பெட்டியை இறக்கி வைத்துவிட்டு அந்த குளத்தின்கரையில் கோபன்னாவின் வருகையை எதிர்பார்த்திருந்தார்.

இப்படியிருக்க, கோபன்னாவானவர் தியானம் கலைந்து கண்களைத் திறந்து பார்க்க, திருவாராதனைப் பெட்டகம் காணாமையினால், அப்பொழுதே வெட்டுண்ட மரம்போல் மண்ணில் வீழ்ந்து உருண்டு புரண்டு ஓலமிட்டு அழுது, "அந்தோ! எங்கள் பூர்விகர்கள் தவம்செய்து தேடிய அருநிதியை யிழந்தேனே! இனியான் என்ன செய்வேன்! ஏ! இராமசந்திரா! இவன் நம்மை அர்ச்சிப்பதற்கு தகுந்தவனல்லவென்று நினைத்து உனது அடியவர்மாட்டு ஓடினையோ? நீ எப்பொழுது அடியவர் நினைத்தபொழுதெல்லாம் எழுந்தோடும் தன்மையானதால், பெட்டியோடு ஓடிவிட்டாயோ? முன்னர் விபீஷணனும்மானை ஆட்கொள்ள நீ கடற்கரை சென்று காத்து நின்றதுபோல இன்னும் யாராவது நினைக்க விடுதேடி பெட்டியோடு ஏகினையோ? சவரியானவள் தானுண்டு எச்சலாக்கியிருந்த கனியே மிகுந்த சுவையுடையதென குவித்து வைத்திருந்து, உன்னைப் பிரார்த்திக்கும்பொழுது அந்த எச்சில் கனியையுண்ண விரைந்தோடினதுபோல இன்றைக்கும் யாராவது எச்சில் கனியோ எச்சில் உணவோ உமக்கு ஊட்டக்கருதி உன்னை அழைக்க, நீ அதற்காகப் பெட்டியோடு விருந்துண்ணச் சென்றீரோ? தனமிழந்து ஏழையிருந்த அண்ணனான வாலியால் துரத்தப்பட்டு, ரிசியமுக பர்வதத்திலிருந்து உம்மைக் கனவிலும் கருதாதிருக்கும்பொழுது, அவனைக் காப்பாற்ற நீரே வலியச் சென்

றதுபோல, இன்றும் உம்மை யாராவது ஒருவர் உன்னைக் கனவி லும் கருதாதிருக்கும்பொழுதே நீரே வெளியச் சென்றீரோ? உம்மைப் பிரிந்து ஒருகணமும் தரியேனே! ஸ்ரீராமச்சந்திரா! இது என்னசோதனை" எனப் பலவாறு சொல்லி துயர்க்கடலில் வீழ்ந்து மீண்டு மெழுந்து ஒருவாறு மனந்தேர்ந்து "எந்தத்திருடனோ திருவாராதனப் பெட்டியைத் தூக்கிக்கொண்டு போய்விட்டான். அதற்குத் தடையில்லை" என உறுதிப்படுத்திக்கொண்டு உடனே தெருவெல்லாம் திரிந்து குளக்கரை வந்து நான்குபுறமும் திகைத்து திகைத்துப் பார்த்துக்கொண்டிருந்தார். இவ்வாறிருக்கும்பொழுது கபீர்தாஸ் கோபன்னாவிடம் வந்து "ஓ! பையா நீ என்னதேடுகிறாய்? உன்னைப்பார்த்தால் ஏதோ பெரிய சம்பத்தையிழந்தவன்போலத் தோன்றுகின்றது. என்ன சமாசாரம்? எதை தாரைவார்த்துவிட்டாய்?" என அவரிடத்தில் இரக்கங்கொண்டவர்போல் கேட்டார். கோபன்னாவானவர் கபீரைப் பார்த்து, "ஐயா எனது திருவாராதனப்பெட்டியை யாரோ திருடன் களவாடிக்கொண்டுபோய்விட்டான். இத்தவழியாக யாராவது ஒருவன் பெட்டியைக் கொண்டுபோகப் பார்த்தீரா?" எனக்கேட்க "அடே! பையா! உனது திருவாராதனப் பெட்டியா காணமல் போயிற்று? அடே! அந்த பெட்டியிலிருந்த மூர்த்திகளின் பெயரென்ன" எனக் கேட்டார். கோபன்னா, "ஸ்ரீராமச்சந்திரமூர்த்தி சீதாபிராட்டி, இலக்ஷ்மணப் பெருமாள்; ஆஞ்சநேயர்; முதலிய மூர்த்திகளிருந்தன. ஐயோ! பெட்டியோடு எவனோ கவர்ந்து சென்றானே! எங்கள் பூர்வீகர்கள் தேடித்தந்த சொத்து அதுதான் என்று நினைத்திருந்தேனே! அந்தோ போயிற்றே" எனச் சொல்லிச் சொல்லி கண்ணீர்பெருக அழுது நின்றான். கபீர் இவனுடைய துயரத்தைக்கண்டு ஆற்றாதவராகி, "அப்பா! நீ உண்மையாக ராமபக்தி செய்திருந்தால், கட்டாயம் திருவாராதனப் பெட்டி வந்துசேரும். நீ இந்த குளத்தின் கரையில் நின்றுக்கொண்டு ஸ்ரீராமபிரானை மூன்றுதடவை கூப்பிடு அவர் வருகிறாரா பார்ப்போம்? எனக் கபீர் சொல்ல, கோபன்னா அவ்வாறே மூன்றுதரம் ராமச்சந்திரரை வருமாறு கூவி அழைத்தார். திருவாராதனப் பெட்டி வரவில்லை. அப்பொழுது கோபன்னா கபீரைப்பார்த்து, "சுவாமி! நீர் சொல்லியபடி நான் அழைத்தும் திருவாராதனப் பெட்டி வரவில்லையே? நீர் என்னைப் பரிகசிப்பது அழகல்ல" என்று சொல்லும் கோபன்னாவைப் பார்த்து". "உனக்கு இன்னும் பக்திவரவில்லை; நீ நல்ல ஆசாரியரிடம் உபதேசம் பெற்றிருந்தால், நீ அழைக்க அவர் வராமலிருக்கமாட்டார்; இதோ நானழைக்கிறேன். அவர் வருகிறாரா பார்" என்று கபீர் மூன்றுதரம் வாருமென்றழைக்கக் குளத்திலிருந்து திருவாராதனப் பெட்டகம் வெளியில் வந்தது. 'கபீர்! கோபன்னாவைப் பார்த்து, "உனது பெட்டியை யெடுத்துக்கொள்" என்று சொல்ல

கோபன்னாவும் பெட்டியை யெடுத்துக்கொண்டு ஆனந்தக்கடலில் ஆழ்ந்தினவராய், கபீர்தாசரை தனக்கு ஆசாரியராக அமைய வேண்டுமென்று நினைத்து, அவர் திருவடிகளில் சாஷ்டாங்கமாக விழ்ந்து, தண்டம் சமர்ப்பித்து, 'சுவாமி! ஞானஹீனனாகிய என்னை ஆட்கொள்ளவேண்டும். குரு உபதேசமில்லாத பக்தி பயனற்றதென்பது நிதர்சனமாயிற்று. பகவான் நான் அழைக்க வாராது, நீர் அழைத்ததும் குளத்திலிருந்து எழுந்தருளினாராதலால், நீரே சற்குருநாதனாக இருந்து அடியேனுக்கு தாரகமந்திரத்தை உபதேசம் செய்தருளவேண்டும்" என்று பிரார்த்தித்தார். உடனே கபீர்தாசர் அந்தக் குளத்தில் தீர்த்தமாடி வரச்சொல்லி கோபன்னாவின் திருச்செவியில் தாரகமந்திரமாய் காசிக்ஷேத்திரத்திலே பார்வதி தேவியார் தனது நாயகரைப் பணிந்து, "நாதா உம்மை யாவரும் பூசித்து உமது பஞ்சாக்ஷர மந்திரத்தை யாவரும் ஜபித்து உய்யும் காலத்தில், நீர் யாருடைய மந்திரத்தை ஸ்மரிக்கின்றீரென்று கேட்டு அந்த மந்திரத்தை அடியாளுக்கு உபதேசிக்க வேண்டும்' எனப் பிரார்த்திக்க, அப்பொழுது, பரமசிவன் பார்வதியின் காதிலே உபதேசித்த மந்திரம் இது" என்று சொல்லி,

சுலோகம்

ஸ்ரீராம ராம ராமேதி ரமே ராமே மனோரமே
சஹஸ்ர நாம தத்துல்யம் ராம நாம மனோரமே.

கோபன்னா! இந்த மந்திரந்தான் தாரக மந்திரம். இதன் பெருமையைச் சொல்லொணாது. இந்த மண்ணுலகமன்றி, மற்றைய உலகத்தாரும் இந்த மந்திரத்தைத்தான் மூலமந்திரமாக ஸ்மரிப்பார்கள். இந்த மந்திரமானது எழுபிறவி என்னும் நோய்மருந்து. இந்த மந்திரபலத்தால்தான் பிறவிப் பிணி கெட்டு மோக்ஷமடையவேண்டும். இதை உனக்கு நான் தந்தேன். அப்பா! நீ ராமசந்திரன் கிருபையால் உலகமெல்லாம் வணங்கும் உத்தம பக்தனாகப் போகிறாய்" என்று சொல்ல, கோபன்னாவானவர் தனது ஆசாரியர் திருவடிகளில் விழுந்து எழுந்து பணிந்து நின்று, "சுவாமி! இன்றுதான் நான் சாபல்லிய மடைந்தேன். என் ஜென்மம் கிருதார்த்தமாயிற்று. பக்தி மார்க்கத்தின் வழி தெரியாது தவித்துக் கொண்டிருந்த இந்த அவிவேகியினிடம் கருணைபூண்டு ஆட்படுத்த எழுந்தருளிய உமது பெருங்கருணைப் பெருந்திறத்தை எங்ஙனம் புகழுவேன்? என் குருநாதனே! நினதருளால் ராமச்சந்திரன் எனக்கு சகாயவிருவான். எனது உடல் பொருள் ஆவியாவும் அவனதாகக் கருதி, அர்ப்பணம் செய்வேன். உமது கிருபாநோக்கமாத்திரம் அடியேனிடம் மாறுதிருக்கவேண்டும்" என்று மீண்டும் அவர் தாட்களில் விழுந்தெழுந்து "சுவாமி! இனி உம்மை அடியேன் சேவிப்பது எப்

பொழுது'' என்று பிரார்த்தித்தான். கபீர்தாஸ் கோபன்னுவைக்
கருணையுடன் பார்த்து "ஏ! பையா! நீ வருந்தவேண்டாம். நான்
வரவேண்டுமென்று எப்பொழுது நினைக்கின்றாயோ அப்பொழு
தெல்லாம் வருவேன். நீ உன் கிரகத்திற்குப் போய்வா'' என்று
விடை கொடுத்தனுப்பிவிட்டு, தான் திவ்விய நாமங்களைப் பாடிக்
கொண்டு பண்டரிபுரத்திற்கு எழுந்தருளினார். கோபன்னுவான
வர் தனது வீட்டிற்கு வந்து திருவாராதனப் பெட்டியை தனது
சன்னதியில் வைத்து சதா தாரகமந்திரமான ராமத்தியானபர
ராய், பகவானை ஆராதித்துக்கொண் டிருக்கும்பொழுது, சில பாக
வதர்கள், தம்பூர் பிட்டில் மிருதங்கம் சிப்பிளா பண்டாரிசாலர் குண்
டுசாலர் முதலிய வாத்தியங்களுடன் ஸ்ரீராமநாம பஜனை பாடிக்
கொண்டு உஞ்சவர்த்தி செய்துவருவதை கோபன்னுவானவர் பார்
த்து; ஆனந்தவெள்ளம் உள்ளத்தில் பொங்க, விரைந்தோடி
வந்து அவர்கள் அடிமலர்களில் விழுந்து தண்டம் சமர்ப்பித்து
அவர்கள் பஜனையுடன் தானும் கலந்து பாடி ஆடிக்கொண்டு
உஞ்சவர்த்திசெய்து முடிந்ததும், தனது வீட்டிற்கு அழைத்து
வந்தார். இவர் மனைவியாகிய காமாம்பாள் நாயகன் குறிப்பின்
வழிநடப்பவளாதலால் வந்த பாகவதர்களுக்கெல்லாம் அறு
சுவை உணவை அன்புடனாக்கி, எதிர் பார்த்திருந்தாள். கோப
ன்னு வந்ததும், அந்த பாகவதர்களுடன் ஸ்ரீராமச்சந்திரமூர்த்
திக்கு திருவாராதனத்தைச் செய்து, ததியாராதனம் செய்து
வைத்து, அவர்களுக்கு சந்தன தாம்பூலங் கொடுத்து, தானும்
தன் மனைவியுமாகச் சேவித்து ஆசீர்வாதம் பெற்றபின், அந்த
பாகவதர்களைப் பணிவோடு, "சுவாமிகாள்! நீங்கள் எழுந்தருள
என் மனை என்ன தவம் செய்ததோ அறியேன். இந்த கொல்ல
கொண்ட பல்லா என்னும் கிராமத்தில் இதுபோன்ற பாகவதக்
கூட்டம் எழுந்தருளக் கண்டிலேன். இன்று காணப்பெற்றேன்.
தாங்கள் எழுந்தருளியிருக்கும் திவ்வியதேசம் யாதோ? உரைத்
தருளவேண்டும். தாங்கள் என்ன காரியார்த்தமாக இவ்வூருக்கு
எழுந்தருளினீர்கள்? அதையும் அடியேன் உணர்ந்துகொள்ள
திருவாய்மலர்ந்தருளவேண்டும்'' என்று வேண்டினார். இவர்
கூறிய வார்த்தையைக் கேட்ட பாகவதர், இவர் வயதில் சிறியவ
ராய்க் காணப்பட்டாலும், இராமச்சந்திரனிடம் நீங்காத பக்தி
யும், பாகவத விசுவாசமும், இருக்கிறதென்று உணர்ந்து,
"அப்பா! நாங்களிருப்பது பக்கத்து ஊராகிய லக்ஷ்மணபுரி.
அந்த ஊரில் ராகவைய்யா வென்று ஒருவர் பெரிய தனிகராய்,
இராம பக்தராய்; பெரிய பஜனை கூடம் கட்டி ஸ்ரீராம பட்டா
பிஷேக மூர்த்தியை எழுந்தருளப் பண்ணி, சனிக்கிழமை
ஏகாதசி முதலிய புண்ணிய தினங்களில் அவர் பஜனை செய்து
ஆயிரக்கணக்கான பிராமண ததியாராதனையுடனே பத்துநாள்
ஸ்ரீராமநவமி உற்சவம் நடத்தி, சதா உஞ்சவர்த்தி பஜனை ஹரி

கதா காலக்ஷேபங்கள் தீபப் பிரதக்ஷணம் முதலிய வைபவங்க
ளோடு சென்ற வருஷம் வரை அநேக பாகவதர்களைக் கொண்டு
சிறப்பாய் நடத்தி ஸ்ரீராமபிரானை திருப்திசெய்து, இந்த வரு
ஷம் ஸ்ரீராகவன் திருவடி சேர்ந்தார். இன்னும் ஒருவாரத்தில்
ஸ்ரீராமநவமி உற்சவம் தொடங்குகிறது. ததியாராதனம் செய்ய
முடியாது போனாலும், படமூர்த்திக்கு நன்றாக பத்துநாளும்
புஷ்பங்களால் அலங்காரமாவது செய்து, பஜனை தீபப் பிரதக்ஷ
ணம் வரை செய்யவேண்டும் என்னும் ஆசை எங்களுக்கிருப்ப
தால், சில ஊர்களில் சென்று உஞ்சவர்த்தி பண்ணி, அதில்
கிடைக்கும் அரிசியை விற்று சுமாராக நடத்தலா மென்னும்
எண்ணத்தோடு இவ்வூருக்கு வந்தோம்'' எனத் தெரிவித்
தார்கள்.

கோபன்னுவானவர், பாகவதர்கள் சொல்லிய வார்த்தைகளை
ஊக்கமுடன் கேட்டதால், "இதுவும் இராகவன் செயல்'' என
உள்ளத்தில் நினைந்து, மீண்டுமெழுந்து வணங்கி, "சுவாமிகளே!
எனக்கும் நெடுநாளாக ஸ்ரீராமநவமி உற்சவம் நடத்தவேண்டு
மென்னு மாசை இருந்து வருகிறது. இந்த ஊரில் இதுவரை
நடத்திராததினாலும், நான் சிறுவனா யிருப்பதினாலும் அந்த
உற்சவபத்தி யிப்படியென்று எனக்குத் தெரியாததாலும் செய்
யாது தவித்துக்கொண் டிருக்கிறேன். நீங்கள் கருணை கூர்ந்து
அந்த உற்சவத்தை யிங்கேயே நடக்கும்படி செய்யவேண்டும்.
இன்னு மொருவார மிருப்பதினால், எந்த எந்த பாகவதர்கள் வர
வேண்டுமோ அவர்களுக்கெல்லாம் பத்திரிகை அனுப்பிவிடலாம்.
எத்தனை ஆயிரம் பிராமணர்கள் வரினும் விசேஷமாக ததியாரா
தனையை நடத்த இராமன் அனுக்கிரகம் செய்திருக்கிறான். நீங்
கள் உற்சவப் பத்ததி பிரகாரம் ஒரு குறைவும் இல்லாமல் உற்ச
வத்தை நடத்திவைக்கவேண்டும்'' எனப் பிரார்த்தித்தான். பாக
வதர்கள் அவ்வார்த்தையைக் கேட்டு ஆச்சரியமடைந்து "அப்பா
அது மிகவும் கஷ்டமான காரியமாயிற்றே? உன்னைப் பார்த்
தால் சிறியவனாக யிருக்கிறாய்; செய்யவேண்டிய விஷயமோ மிகப்
பெரிது. யோசனைபண்ணிச் சொன்னால் உற்சவத்தை நடத்துவ
தற்கு நாங்களிருக்கிறோம். ஏராளமான செல்வம் வேண்டுமே?
அதற்கு என்ன செய்வாய்'' எனக்கேட்டார்கள். கோபன்னு,
"இராகவனிருக்கிறான். ஒன்றும் குறைவுவராது நடத்துங்கள்''
எனப் பதிலளித்தான். பாகவதர்கள் "நமது ஊரில் உஞ்சவர்த்தி
பண்ணி உற்சவம் நடத்துவதைப் பார்க்கிலும், இதுவே சிறந்
தது'' என்று அவர்களுக் கவர்களே தீர்மானம் செய்துக்கொ
ண்டு, "இன்னும் ஒரு வாரமே யிருப்பதால் உற்சவத்திற்கு
வேண்டிய காரியங்களைச் செய்ய இப்பொழுதே ஆரம்பம் செய்து
விடலாம் உத்தரவு வேண்டும்'' என எல்லோரும் ஒருங்கு கூடிக்
கேட்டனர்.

கோபன்னா, இராமசந்திரனிடத்தில் அளவுகடந்த அன்புடையவனாதலாலும், அவனடியே கதியென்று அவனை இடையறாது தியானித்துக் கொண்டிருப்பவனாதலாலும், பாகவதோத்தமர்கள் "நடத்தலாம்" எனச் சொல்லக்கேட்டதும், உள்ளம் பூரித்து, "யாதொரு சந்தேகமுமில்லாமல் ஆரம்பம் செய்துவிடலாம். இராமச்சந்திரன் இருப்பான்" என அவர்களுக்கு உத்தரவு கொடுத்தான். பாகவதர்கள் அவ்வுத்தரவின்படியே ஆரம்பம் செய்தனர். முதலில் அநேக பாகவதர்களுக்கு உற்சவபத்திரிகை எழுதி அனுப்பிவிட்டு, போசனசாலையைப் பெரிதாய்க் கட்டச்செய்து, அதற்குத்தக்க சமையல்காரர்களையும் போட்டு, உற்சவத்திற்கென்று பெரிய கொட்டகைப் போட்டு அதை அலங்காரம் செய்து ததியாராதனத்திற்கு வேண்டிய சாமான்களைக் குறித்தெழுதி அவைகளை வாங்கி பொடிசெய்யவேண்டியவை யாவும் செய்து உற்சவதினத்தை எதிர்பார்த்திருந்தார்கள்.

ஸ்ரீராமச்சந்திரன் திருவவதாரமான சித்திரை மாதம் நவமி திதி புனர்பூச நக்ஷத்திரமும் கூடிய தினமும் வந்தது. அநேக பாகவதர்கள் வந்து கூடினார்கள். ததியாராதனத்திற்கு நூற்றுக்கணக்கான பரிசாரகர்களை நியமிக்கப்பட்டு, பலவகை பக்ஷணவகையுடன் தளிகை நடந்துகொண்டிருந்தது. பாகவதர்கள் எல்லாரும் காலையிலெழுந்து தீர்த்தமாடி, தமது கர்மானுஷ்டானங்களை முடித்துக்கொண்டு, ஸ்ரீராமர் சன்னிதிமுன்னே வந்துகூடி, சாஷ்டாங்கமாக தண்டம் சமர்ப்பித்து, உற்சவபத்திபிரகாரம் ஸ்ரீராமாயணத்தில் பகவான் திருவவதாரகட்டத்தை வாசித்து, திருவவதாரமானதும், பிரசாதம் சந்தன தாம்பூலம் வடபருப்பு பானகம் நீர்மோர் சுண்டல் விசிறி புஷ்ப முதலியது பெற்று, தம்பூர் பிடில் மிருதங்கம் ஜாலர் சிப்ளாவுடனே உஞ்சவர்த்திக்குச் சென்றார்கள். ராமநாமாவளியும் நாமசங்கீர்த்தனமும் கடலொலிபோல் முழங்கிற்று. ஆயிரக்கணக்கான வேதியர்கள் அந்த உஞ்சவர்த்தியில் கலந்துபாட, கோபன்னா தலையில் பரிவட்டம் கட்டிப்பட்டுக்கயிற்றில் கட்டியிருந்த உஞ்சவர்த்திசெம்பைதோளில் மாட்டிக்கொண்டு கையில் சிப்ளாவை முழக்கிக்கொண்டு பாடி ஆடி, உஞ்சவர்த்தி பண்ணினார். அது முடிந்ததும், அதை ராமன் சன்னிதிமுன்வைத்து, உரலிலிட்டு அக்ஷதையாக்கி. அதை யாவரும் தரித்துக்கொண்டு, பின்னே ஸ்ரீ ராமச்சந்திர மூர்த்திக்கு திவ்யாலங்காரம் செய்து, திருவாராதனம் நடத்தி, தளிகை அமுது செய்வித்தபின் ஆயிரக்கணக்காய்க்கூடிய பிராமணர்களுக்குத் ததியாராதனை செய்து, அவர்களுக்கு வேதகோஷத்தோடு சந்தன தாம்பூலமளித்து, அவர்கள் ஆசீர்வாத அக்ஷதையைத் தானும் தனது பத்தினியுமாக தலையில் தாங்கிக்கொண்டு பின் தான் உண்டு மகிழ்ந்தார். ததியாராதனம் முடிந்தது. உடனே கச்சேரியாக பாட்டு பக்கவாத்தியங்களுடன் நடைபெற்

றது. இரவு திருவாராதனம் ததியாராதனம் ஆயினதும் கதாகாலக்ஷேபம் துவக்கி, காலக்ஷேபம் முடிந்ததே, பஜனை தீபப் பிரதக்ஷணம் என பாகவதர்களால் தங்கள் பக்திநயம்தோன்ற நடைபெற்றது. இதற்குள் அருணனும் கீழ்த்திசையில் சூரியனுடைய சாரதியாய் எழுந்தான். யாவரும் ஸ்நானம் செய்ய புறப்பட்டார்கள். இப்படியே ஒன்பது தினங்கள் பகல் இரவு என்னும் வேற்றுமையின்றி நடந்தது. பத்தாம்நாளன்று சீதாகல்யாண மகோற்சவம் என்று கும்பங்களில் ஆவாகனம் செய்து, மிதுலா நகரத்தில் சீதாகல்யாணம் எவ்வாறு நடந்ததோ அதேபோல் நடத்தி, இரவில் சீதாகல்யாண காலக்ஷேபமும் தீபப் பிரதக்ஷணமும் முடித்து மறுநாள் ஆஞ்சநேய உற்சவத்தோடு ஸ்ரீராமநவமி உற்சவத்தைப் பூர்த்தி செய்து, வந்த பாகவதர்களுக்கெல்லாம் மிகுந்த சால்வை தோடா முதலிய மரியாதைகள் செய்து, யாவரையும் அனுப்பிவிட்டு கோபன்னாவானவர் தான் நடத்திய உற்சவத்தை நினைந்து, "இப்படியே வருஷந்தோறும் ஸ்ரீராகவன் கிருபையால் உற்சவம் தவறாது நடக்கவேண்டும்" எனத் தன்னுள்ளே நினைந்து, ஸ்ரீராமனை பஜித்துக்கொண்டிருந்தார்.

கோபன்னாவின் அன்புடையாளான காமாம்பாள் அந்த உற்சவத்திலிருந்தே கர்ப்பவதியாய் மாதந்தோறும் செய்யவேண்டிய சடங்குகள் செய்ய பத்தாமாதம் ஒரு ஆண்குழந்தையைப் பெற்றாள். ஸ்ரீராமநவமி உற்சவத்திலிருந்து பிறந்தகுழந்தையாதலால் ரகுபதியன்னா எனப் பெயரிட்டு அன்புடன் வளர்த்துவந்தாள். அடுத்த வருஷம் ஸ்ரீராமநவமி உற்சவமானது முந்திய வருஷத்திலும் மும்மடங்கு சிறந்தது என்று யாவரும் சொல்ல நடந்தது. அதற்கு அடுத்த வருஷம் உற்சவம் ஆரம்பமாய் ஒன்பது தினங்கள்வரை கோலாகலமாய் உற்சவம் நடந்து பத்தாம் உற்சவம் திருக்கல்யாணமாதலால், விசேஷ சிறப்புடன் திருக்கல்யாணம் முடிந்து, ஆயிரக்கணக்கான பிராமணர்கள் ததியாராதனத்திற்கு உட்கார்ந்து அமுது செய்துக்கொண்டு இருந்தார்கள். காமாம்பாள் அன்று திருக்கல்யாணமானதால், தனது குழந்தைக்கு அழகாய் கஸ்ராகுடி வைத்து, தலை பின்னி, பதக்கத்தோடு கூடிய உச்சிப்பூ முன் அசைந்தாடக் கட்டி, கழுத்தில் மகரணி பதக்கமணிந்து கைகளில் வங்கி வளையல்கள் அணிந்து, தோள்களில் பாஜிபந்து கட்டி, இடையில் அரைஞாண் அரை சலங்கைப், பவளத்தாவடம் அணிந்து, கால்களில் தண்டை சதங்கை, காப்பு அணிந்து, திருக்கல்யாணத்திற்கென்று குழந்தையை அலங்கரித்து, தனது உட்கலையில்வைத்து. உற்சவத்தைக் காட்டி, பாலூட்டி தூங்கவைத்துவிட்டு ததியாராதனத்திற்கு வேண்டிய உதவியாக அங்குமிங்கும் உலாவி பந்தி விசாரித்துக்கொண்டிருந்தாள். இப்படி யிருக்கும்பொழுது குழந்தைகண்விழித்து தாயைக் காணாது அழுதுகொண்டு மெல்ல நடந்து பின்புறம் சென்று தகி

யாராதனத்திற்கு பிரசாதம்வடித்த கஞ்சிதொட்டியில் விழ்ந்துவிட்டது. கொதிக்கின்றகஞ்சியில் விழுந்ததால், உடல்முற்றும்வெந்து இறந்துபோயிற்று. அக்குழந்தையின் தாயாகிய காமாம்பாள் ஒரு காரியமாக வீட்டின் பின்புறத்துக்குவர, தன் குழந்தை மாண்டு கஞ்சிதொட்டியில் மிதப்பதைக் கண்ணுற்றாள். மனங் கலங்கினாள். திக்பிரமை யடைந்து, "அடே பாலா! நீ இங்கு எப்படி வந்து விழுந்து இறந்தாய்! ஐயோ! உன்னைப்பிரிந்து எப்படி யிருப்பேனடா! உனது தந்தைவந்து 'குழந்தை யெங்கே' என்றால் நான் என்ன சொல்லுவேனடா! என்வாயில் மண்ணைப் போட்டுவிட்டாயே! நான் என்ன செய்வேன்! என்கண்ணே! ஸ்ரீராமன் அருளால் பிறந்தனையே! உனக்கு ஒரு குறையும் வாராது என்று எண்ணியிருந்தேனே என் கண்மணி! நான் இனி என்ன செய்வேன்" என்று அடித்தாள்; கீழே விழுந்து புரண்டாள்; இதற்குள் தனக்கு ஒரு நினைவு வந்தது. அதாவது, "நான் இங்கேயிருந்து துக்கித்துக் கொண்டிருப்பேனானால், நமது குழந்தை யிறந்தது யாருக்காவது தெரிந்துவிடும். அப்படித் தெரிந்தால், ஆயிரக் கணக்கான பிராமணர்கள் உட்கார்ந்து உண்ணும் இலையிலேயே கையை உதறிக்கொண்டு எழுந்து விடுவார்கள். உற்சவத்திற்கு விக்கினம் வந்துவிடும். சமாராதனை முடிந்தால், அநேகமாக உற்சவம் பூர்த்தியாய் விடுமாதலால், புத்திர சோகத்தைச் சிறிதுநேரம் மாற்றிக் கொள்ளுவோம்" என நினைத்து, கஞ்சித்தொட்டியில் கிடக்கும் குழந்தையை எடுத்து ஓலைப்பாயில்சுற்றி யாருமறியாமல் வைத்து விட்டு ஸ்நானம் செய்து வேறு ஒன்றையும் தொடாமல், துக்கத்தை முகத்தில் காட்டாம லிருந்தாள். சமாராதனை முடிந்தது. சந்தன தாம்பூலமாகி ஆசீர்வாதம் நடக்கவேண்டும். நிற்க கோபன்னு, தன் பத்தினி அக்ஷதையைத் தன்னுடன் வாங்கிக் கொள்ள வாராததைக் கண்டு ஏதோ காரியமாக யிருக்கிறாள் போலும் என நினைந்து ஆசீர்வாத அக்ஷதையை வாங்கித் தன் தலைமீது போட்டுக்கொண்டு, தன் பத்தினி தலையிலும் குழந்தையின் தலையிலும் போடுவதற்கு தனது முந்தியில் கொஞ்சம் முடிந்துகொண்டு வீட்டிற்குள் வந்ததும், வாடிய முகத்துடனிருக்கும் தன் மனைவி காமாம்பாளைப்பார்த்து கண்மணி! காமா! நீ இன்று ஆசீர்வாதத்திற்கும் வரவில்லை. உன் முகமும் வாடி யிருக்கிறது. இந்த உற்சவத்தில் நீ களைத்துவிட்டாயா? என்னகாரணம்" எனக்கேட்கும் பொழுது, 'நாதா! ஒன்றுமில்லை' என்று சொல்லி, விம்மி விம்மி அழுது கண்ணீரை அருவிபோல் பெருக்கி நின்றாள். இதைகண்ட கோபன்னு, "பெண்ணே! உன்னை மணஞ் செய்த நான்முதல் இதுவரையிலும் உன் முகம் வாடியதைக் கண்டதில்லையே? இன்று உனக்கு என்ன துன்பம் வந்தது? ஒளிக்காது என்னிடம் சொல்" எனக் கேட்டார். தன்னாலும் அடக்க

முடியாத துயரத்தோடு பாமா, "நாதா! ஸ்ரீராமன் எனக்குச் சொந்தமெனத் தந்த ஒருபொருளை மறுபடியும் வாங்கிக்கொண்டார்; ஐயோ! பேச நாவெழவில்லையே! குடல் கொதிக்கிறதே! கைகால்கள் நடுங்குகிறதே! ஐயோ நமது குழந்தை ரகுபதி பிரசாதம் வடித்து கொதித்துக்கொண்டிருக்கும் கஞ்சிதொட்டியில் விழுந்து மாண்டு போயினன்" எனச் சொல்லி, அப்படியே பூமியில் விழுந்து மூர்ச்சையடைந்தாள். இதற்குள் குழந்தை கஞ்சி தொட்டியில் விழுந்திறந்த விஷயம் யாவருக்கும் தெரிந்தது. உற்சவத்திற்கு வந்தவர்களும் ஊரிலுள்ளவர்களும் பந்துக்களும் தமது குழந்தை வீழ்ந்திறந்ததால் எவ்வாறு துக்கிப்பாரோ அதுபோல துக்கித்தார்கள். "பிறர்க்கு யாதொரு தீங்கும் நினையாத இந்த உத்தமர்களுக்கு இவ்வாறு துன்பம் வந்ததே" என்று சிலர் சொல்லி துக்கித்தார்கள். வேறு சிலர், 'ஏ! ராமச்சந்திரா! உனக்கு உற்சவம் நடத்திய பலனா? இது என்ன அநியாயம்" எனச்சொல்லி கதறினார்கள். வேறுசிலர், "கடவுளை நம்புவது இக்காலத்திற்கு அடுக்காது. இந்த உற்சவம், இது என்ன பாழும் உற்சவம். லக்ஷக்கணக்காய் இவன் முன்னோர் தேடி வைத்த சொத்தை தொலைக்கவே இந்த உற்சவம் செய்கிறானன்றி, வேறு என்ன? இந்த உற்சவம் நடத்தாதுபோனால் இவனது அழகிய பாலனிறப்பானா? இதற்கு உற்சவம் தானே காரணம்" எனச் சொல்லி வாடி நிற்பர். பின்னும் சிலர் "ராமா! உனக்குக் கண்ணில்லையா? கருணாநிதியென்று உன்னைச் சொல்லுகிறார்களே, அந்த வார்த்தை பொய்யா' எனக் கடவுளை நினைப்பர். இவ்வாறு அந்த ஊரும் உற்சவத்திற்கு வந்தவர்களும் அடைந்த துக்கத்தைப் பார்த்தால், ஸ்ரீராமச்சந்திரன் கைகேசியின் மொழிப்படி வனம் செல்லுவதாகக்கேட்ட அயோத்தியிலுள்ள ஜனங்கள் எவ்வாறு துன்ப மடைந்தனரோ, அது போலிருந்தது. ஊரும் உற்சவத்திற்கு வந்தவர்களும் இதுபோலிருந்தார்களென்றால், கோபன்னு தன் குமாரனைச் சுற்றி வைத்திருக்கும் ஓலைப்பாயிலிருந்து வெந்துபோன மைந்தனைத் தூக்கிக்கொண்டு ஸ்ரீராகவன் சந்நிதி முன்னே கொண்டுபோய்க் கிடத்திக்கொண்டு, "ஹே! சீதா ராமா! கலியாண ராமா! தசரதராமா! கோசல ராமா! ஜானகி ராமா! இவன் உன்னுடைய சொத்து; அதை நீ வாங்கிக் கொண்டாய். இதனால் எனக்கொரு சிறிதும் கவலை கிடையாது. இரக்ஷகனான உன்னை இங்கு கூடிய சிலர் பழிக்கும்படி வந்ததே யென்கிற துக்கமேதவிர, வேறு துக்கம் எனக்கில்லை. சிலர் உன்னை நம்பப்படா தென்கிறார்கள். உனக்கு கண்ணில்லை யென்கிறார்கள். உனக்கு உற்சவம் நடத்தினால் இப்படிதான் அபத்தவரு மென்கிறார்கள். உனக்கு அடியவரிடத்து கருணையே கிடையாதென்கிறார்கள். இவ்வாறு யாவரும் ஒருமுகமாய் உன்னைப் பழிக்கும் பொழுது, அவர்களை எதிர்த்துப் பேச வாயில்லாதவனாய் இருக்

கிறேனே என்கிற கவலை யொன்றுதான் எனக்கு அதிகமாயிருக்கிறது. நீரேதான் தோன்றி, உமதிஷ்டப்படி செய்யும்" என்று சொல்லிவிட்டு நின்றார்.

கோபன்னு இவ்வாறு சொல்லவும், யாவரும் கண்டு களிக்க தூங்கி விழிப்பதுபோல சன்னதிமுன்னே எழுந்து குழந்தை சந்தோஷமாகப் பிதாவின் கால்களைக் கட்டிக்கொண்டது. கோபன்னு ஆருமகிழ்ச்சியடைந்து, குழந்தையைத் தூக்கி முத்தமிட்டு தனது பத்தினி மூர்ச்சித்துக்கிடக்கும் இடத்திற்கு வந்து, "என்கண்ணே! பாமா! எழுந்திரு. உன் குழந்தையை வாங்கிக்கொள். மறுபடியும் ராகவன் உனது சொத்தை உனக்கே தந்துவிட்டார்" என்று சொல்லும்பொழுது, பாமாவானவள், தன் குழந்தை உயிருடன் தனது மார்பில் வந்து குதித்ததாகச் சொப்பனங்கண்டு திடுக்கிட்டு விழித்தாள். அப்பொழுது தனது நாயகன் மார்பில் குழந்தை விளையாடுவதைக் கண்டு, "அடே பாலா!" என்று அலறி எழுந்து அழைக்க, உடனே குழந்தை பாய்ந்து தாயின் மீது விழக்கண்டதும், நடந்தவை யாவும் நாதனிடம் கேட்டு மகிழ்ந்தாள். இதைக்கண்ட யாவரும் கோபன்னுவின் பக்தியைக் கொண்டாடினார்கள். கோபன்னுவானவர் ராமபக்தியினால் தன்னை மறந்து எப்பொழுதும் ராமத்தியானம் செய்துகொண்டிருக்கும் பொழுது, ஒருநாள் ஸ்ரீராமச்சந்திரனை நேரே கண்டு சேவிக்க வேண்டும். அவர் திருவடிகளில் நறுமலரிட்டருச்சிக்கவேண்டும். அவருக்கு நேர்நின்று திருவாராதனம் செய்யவேண்டும். திருப்பள்ளி அமைத்து அவர் சயனம் செய்ய, நான் திருவாலவட்டம் வீசவேண்டும். அவர் திருச்செவிக்கு இனிமையாய் நாமசங்கீர்த்தனம் செய்யவேண்டும். அவர் திருமேனியில் நறுமணங் கமழும் சந்தனம் பூசவேண்டும். திருமாலையைத் திருத்தோளில் சாத்தவேண்டும்" என்று ஆசைப்பட்டு, தனது ஆசாரியராகிய கபீரை தியானித்தார். அப்பொழுதே கபீர்தாஸ் கோபன்னுவின் வீட்டைநாடி விரைவாய் எழுந்தருள, கோபன்னு கண்டு எதிர்சென்று இணையடி மலரில் வீழ்ந்து, "எந்தாய் சரணம்! எந்தாய் சரணம்! பைந்தார் துளவப் பரமனே சரணம்! சிந்தாகுலம் களை தேவே சரணம்! பழவினையகற்றும் பண்ணவா சரணம்!" என்று தோத்திரம் செய்து, நறுமலர் கொண்டருச்சித்து, திருமனையேற்றி, திருவடி அலம்பி, தீர்த்தம் பருகி, வீட்டினுள் அழைத்து வேதிகையிலிருத்தி, எதிரில் நின்று இருகையும் குவித்து, "எனது ஆசாரியராகிய இறைவனே! நானே பாக்கியசாலி! உம்மை இப்பொழுதே சேவிக்கப்பெற்றேன். எங்கள் மனை என்ன தவம் செய்ததோ நீவிர் எழுந்தருள" எனத் தோத்திரம் பண்ணினார். அப்பொழுது கபீர்தாசர், கோபன்னுவைப் பார்த்து, "அடே பையா! நீ என்னை என்ன காரியத்திற்காக நினைத்தழைத்தாய்?" எனக் கேட்டார். உடனே கோபன்னுவானவர், "குருநாதா! அடி

யேனுக்கு நெடுநாளாய் ஒரு ஆசை என் உள்ளத்தில் உதித்து நீங்காது என் மனத்தே தங்கியிருக்கிறது. அந்த ஆசையைப் பூர்த்திசெய்து வைக்கவேண்டும்" என்று வேண்டினான். கபீர்தாசர் இவ்வார்த்தையைக் கேட்டதும், "அப்பா! உனக்குள்ள அவ்விச்சை யாது? அதை என்னிடம் சொல் என்னால் பூர்த்தி செய்ய முடியுமானால் அவ்வாறே செய்கிறேன்" என்று சொன்னார். கோபன்னுவானவர், தனது ஆசானைப் பணிந்து, "சுவாமி! நீங்கள் நினைத்தால் அடியேன் மனதிலுள்ள ஆசை பஞ்சில் பற்றிய அனல்போல் அழியும்; உம்மாலாகாதது முளதோ? எனக்கு வேறொன்றினும் ஆசையில்லை. ஸ்ரீராமச்சந்திரனை நேரே கண்டு தரிசிக்கவேண்டும். இதுதான் எனக்குள்ள ஆசை. உமக்கு அவர் நேரே நின்று பேசுகிறார் என்று பெரியவர்கள் சொல்லுகிறார்கள். ஆதலால், அடியேனும் தரிசிக்க ஸ்ரீராகவனைக் காட்டவேண்டும்" என்று பிரார்த்தித்தார். இந்த வார்த்தையைக் கேட்ட கபீர்தாசர், சிரித்துக்கொண்டு, "ஏ! கோபன்னு! வேதங்களுக்கு வேதியராகிய மகரிஷிகளின் அறிவிற்கும் எட்டாதவனை சர்வேஸ்வரன் பிரபஞ்ச வாழ்வில் மயங்கித் திரியும் நம்போன்றவருக்குத் தோற்றுவனோ? உனக்கு என்ன பைத்தியமா? ராகவனைப் பார்க்கவேணும் என்னும் நினைப்பை விட்டுவிடு. உனக்கு அந்த நிலைவர இன்னும் சிலநாள் செல்லும். அதற்குள் ஆத்திரப்படாதே" எனச் சொன்னார். கோபன்னு இந்த ஆசாரியன் வார்த்தையைக் கேட்டு, "சற்குருநாதா! அவர் பக்தவற்சலனல்லவா? தேவரீர் அடியேனுக்காக ஸ்ரீராமனிடம் பரிந்துபேசினால் உம்முடைய வார்த்தையைத் தள்ளாது எழுந்தருளுவார். அடியேன் சேவிக்க தேவரீர் கருணை செய்யவேண்டும் என மிக்க வேண்டினான். கபீர் அவன் வேண்டுகோளுக்கிணங்கி, "அப்பா! உன் மனோபீஷ்டத்தின்படியே நாளை பகல் நாழிகை மூன்றாம் சாமத்தில் ஸ்ரீராமபிரானை உன்னுடைய வீட்டிற்கு வரும்படி சொல்லுகிறேன். நீ சாக்கிரதையாக விருந்து சேவை செய்துகொள்" என்று கூறிவிட்டு தனது ஆஸ்ரமத்திற்கு எழுந்தருளினார்.

கோபன்னு, தன்கோரிக்கையை நிறைவேற்றுவதாகத் தனது ஆசாரியன் தனக்கு நல்ல பதில் அளித்தமையால், பெருமகிழ்வடைந்து, நாளையதினம் ஸ்ரீராமச்சந்திரர் தனக்கு நேரேவந்து சேவை சாதிக்கப்போகிறாரென்று அருக மகிழ்வடைந்து, தனது கிரகத்தை அலங்கரித்து வாயலில் பெரிய காவணம் அமைத்து வாழை, மாங்குலை, இளநீர்குலை, கமுகம்பாளை இவைகளால் அலங்கரித்து; பகவான் எழுந்தருளியிருக்க நல்ல ஆசனப்பலகை அமைத்துவைத்து, மாவிலை கட்டியும் புஷ்ப விபதளங்களும் அமைத்து, வாயலில் பூரண கும்பம்வைத்து, பகவானுடைய வருகைக்குக் காத்திருந்தார். இந்த சமயத்தில் கபீர்தாஸ் கோபன்னுவிடம் சொன்ன மறுநாள் தான் திருவாராதனம் பண்ணிக்கொண்

டிருக்கும்பொழுது கோபன்னுவிற்கு ஸ்ரீராமனை வரச்சொல்லிய வார்த்தை ஞாபகத்திற்கு வந்தது. அப்பொழுது இராமச்சந்திரனைப் பிரார்த்தித்தார். உடனே ஸ்ரீராகவன் திவ்வியாங்க சுந்தரனாய்த் தனது வைரமுடியும் கலிக்கத்துராயும் தலையிலிலங்க, காகபக்ஷம்போன்ற தனது அழகிய சிகையானது சரிந்து முன்புறம் தொங்க, நெற்றியில் கஸ்தூரி திலகம் தகதகவென்றுப் பிரகாசிக்க, செந்தாமரை மலர்போன்ற திருக்கண்களினின்று கருணைப்பிரவாகம் கசிந்துவர, கண்ணாடிபோன்ற இருகபோலதமும் தோன்ற, உவாமதிச் சந்திரன்போலத் திருமுகம் ஒளிர்தர, பாஞ்சசன்னியம்போன்ற கண்டத்தில் கண்டபூஷணம் ஆணிமுத்துக்கோர்வை அழகுடன் தோன்ற, கற்பக மரத்தினை நிகர்க்கும் திருக்கைகளின் மேல் பிரதேசமான திருத்தோள்களின் வாகுவலயம், தோள்வளை பாஜிபந்து பிரகாசிக்க, திருமார்பில் மகாஹரி பதக்கங்கள் மகரகண்டிமுதலிய ஆபரணங்கள் வில்லொளிவீச, இடையில் இணையாயிரம் பொன்பெறும் பீதாம்பர உடையும், அதன்மீது நவரத்னப் பட்டை அரைஞாண்முதல் ஆபரணங்களிலங்க, ஆஜானுபாகு என்று முழந்தாள்வரை நீண்ட திருக்கரங்களில் கங்கணம் கடகம் கவின்பெற, விரல்களில் மோதிரங்கள் மின்ன அடியவர் வினையகற்றும் திருக்கால்களில் தண்டைவீரகண்டை முதலிய ஆபரணங்கள் இலங்க, இடது திருக்கரத்தில் வில்லும் வலது திருக்கரத்தில் அம்புமேந்தி, நீலமேகம்போல் கபீர்தாசரின் முன்னே எழுந்தருளி நிற்கும் பரமாத்மாவான ஸ்ரீராகவனைச் சேவித்து, அஞ்சலிஹஸ்தனாய் நின்று, தோத்திரம் பண்ணும்பொழுது பரமாத்மாவானவர் கபீரை நோக்கி, "நீர் என்னை நினைத்ததின் காரணம்யாது?" எனக்கேட்டார். கபீர் "எனதுசிஷ்யனான கோபன்னுவானவன் உம்மை நேரே கண்டு தரிசிக்க ஆசையுற்று என்னிடம் வேண்டிக்கொண்டான். யான் அவனிடம் உம்மை இன்று மூன்றுவது சாமத்தில் வரச்சொல்லுகிறேன் என்று சொல்லி வந்தேன். நீர் கோபன்னுவிற்கு சேவை தந்தருளவேண்டும்" எனப் பிரார்த்தித்தார்.

கபீர் இவ்வாறு பிரார்த்திக்கும்பொழுது பகவான் அப்பொழுதே கபீரிடம் விடைபெற்று ஒரு மேதியின் வடிவத்தை அடைந்து கழனியிலுள்ள சேற்றில் புரண்டெழுந்து கொல்லைகொண்ட பல்லாவுக்கு சென்று கோபன்னுவின் வீட்டினுட்புகுந்து தனக்காக கோபன்னு சயனக்கிரஹம் அலங்கரித்து சப்ரமஞ்சம் போட்டு, மகமல் பட்டால் தைத்த மெத்தை விரித்து, திண்டுதலைக்கணைபோட்டு இருந்த இடத்திற்குச் சென்று அந்தமெத்தைமீது ஏறி படுத்து தன்மீதுள்ள சேற்றை மெத்தை தலையணைகள் முதலியவற்றில் பூசினார். இதைக் கண்ட கோபன்னுவானவர் பார்த்து, பகவானுக்கு விரித்த படுக்கையில் ஒரு எருமை புரண்டுக்கொண்டிருக்கிறதே என்று ஒரு தடியை

யெடுத்து மாறி மாறி அடித்தார். கோபன்னு அடித்த அடியானது பகவான் மேனியில் பட்டதும் இந்த அடியைப்படாதவர் யாருளர்? பிரம்ம ருத்திர இந்திராதிதேவர்கள் அடியுண்டார்கள். வேத இதிகாஸ புராணாதிகளும் அடியுண்டன. பஞ்சமகா பூதங்களும் அடியுண்டன. உலகிலுள்ள சராசரப் பொருள்கள் யாவும் அடியுண்டன கோபன்னுவின் திருமேனியிலும் அடியின் தழும்புகள் தோன்றின. கோபன்னு இதை உணர்ந்தாரில்லை. பகல் நாழிகை ஜாமம் மூன்றாயிற்றே! எனது ஆசாரியர் தெரிவித்தபடி ஸ்ரீராமச்சந்திரன் எழுந்தருளவில்லையே! என்று வாயலில் வருவதும் உள்ளே போவதுமாயிருந்தார். மகிஷ வடிவாய் வந்த ஸ்ரீராமச்சந்திரன், நேரே கபீருடைய ஆஸ்ரமத்திற்குச் சென்று "அப்பா! போதும், உன்னுடைய சிஷ்யன் அடித்த அடியைப்பார், இராவண யுத்தத்தில்கூட இவ்வளவு தழும்பு என்மேனியில் ஏற்படவில்லையே? இது என்ன பலமான அடி பார்த்தாயா" எனச் சொன்னார்.

இவ்வார்த்தையைக் கேட்டதும், கபீர்தாஸ், "சுவாமி! உம்மைக் கோபன்னுவா அடித்தான்? நீர் எந்தஉருவோடு சென்றீர்?" எனக்கேட்டார். ஸ்ரீராகவன் "நான் அவனை சோதிப்பதற்கென்றே மேதியுருவமெடுத்துச் சென்றேன். எனக்கென்று புதிதாய் மகமல்பட்டினால்தைத்த மெத்தை தலையணை திண்டு முதலியவற்றை கழனியிலிருந்து மேனியில் படிந்த சேற்றால் அசங்கியப்படுத்தினேன். அது பொறாமல் அவன் தடியாலடித்தான். அடிபட்டு திரும்பிவந்தேன். கபீர் உன்னுடைய மேனியில் தடியாலடிபட்ட தழும்புகள் தோன்றுகிறதே? நான் கோபன்னுவிடம் அடிபட்டது போல், நீ யாரிடம் அடிப்பட்டாய்? என அவரைக் கேட்க, கபீர்தாஸ், உடல்முழுதும் பார்த்து திகைத்து "சுவாமி! உம்மைக் கோபன்னு அடிக்கும்பொழுது அவனே என்னையும் அடித்தான். இந்த அண்டபிண்ட சராசரம் யாவும் அவனாலின்று அடியுண்டன என்பதற்கு ஐயமில்லை. சுவாமி! நீர்எழுந்தருளுக" என்று வணங்கினார். பகவானும் கபீர் திருவாராதன மூர்த்தமாகி மறைந்தார்.

கோபன்னு, தனது ஆசாரியன் சொன்னபடி ஸ்ரீராமச்சந்திரர் வருவாரென்று சூரியாஸ்தமனமாகும்வரை காத்திருந்து பகவான் சேவை கிடைக்கவில்லையே என்று ஏங்கி, ஆசாரியன்மொழியும் பொய்த்ததே யென்று, சிந்தித்துக்கொண் டிருக்கும்பொழுது கபீர்தாஸ் கோபன்னு முன்னே எழுந்தருள, கோபன்னுவானவர், எதிரே சென்று தண்டனிட்டு துக்கமுகத்தோடிருக்க, கபீர்தாசர், "கோபன்னு! நீ இப்படி என்னை அடிக்கலாமா? உனக்கு தாரகமந்திரத்தை உபதேசித்ததற்கு சமர்ப்பிக்கும் குருதக்ஷிணையா இது?" என்று தனது சரீரத்தில் அடிபட்டு தடித்திருக்கும் தழும்புகளைக்காட்டினார். கோபன்னு நடு நடுங்கி, "சுவாமி! நானொன்று மறியேனே. தேவரீர் இன்று பகல் நாழிகை மூன்றும் சாமத்தில்

ஸ்ரீராமச்சந்திரர் எழுந்தருளுவாரென்றதை நினைந்து வழிபார்த்திருந்தேனே? என் குருநாதா? உமது திருமேனியில் அடித்தவன் யானல்லவோ? உமது திருமேனி அடிக்க அடித்த பாதகன் யார்? அவனை என்னிடம் சொல்லும் இப்பொழுதே அவனுயிரை வாங்கிவிடுகிறேன்" என்று கோபன்னா சொல்ல, "அப்பா! அது இருக்கட்டும், நான் உன்னிடம் சொன்ன நாழிகைக்கு பகவான் வந்தாரோ, தரிசனம் பண்ணினையா? திருவாராதனம் செய்தாயா? அவர் என்ன சொன்னார்?" எனக் கபீர்தாஸர் கேட்டார். கோபன்னா, "குருநாதா! சிறியேனை சோதிக்கலாமா! பகவான் இங்கு வரவில்லையே? எனக்கு அந்த பகவானினும் இந்த பகவானான நீர்தான் என் தெய்வம். உமது மேனியில் இவ்வாறு வடுவுண்டாக அடித்தவன்யார்? அடியேனுக்கு தெரிவிக்கவேண்டும்" என்று அவர் கால்களில் விழுந்து முறையிட்டான். அப்பொழுது கபீர்தாஸர், "கோபன்னா! உனது சரீரத்திலும் என் சரீரத்தில் எந்தெந்த யிடத்தில் அடிபட்டிருக்கிறதோ அந்தந்தயிடத்தில் உனக்கும் அடிபட்ட தழும்புகள் காண்கிறதே உன்னை யாரடித்தார்கள்? உன்மனைவியின் சரீரத்தைப் போய்ப்பார். அவளை யாரடித்தது? உன் குழந்தையின் அழகியமேனியிலும் இரத்தம் சிந்த அடித்தவன்யார்? நீதானே அடித்திருக்கவேண்டும்" என்று சிறிது கோபமுடையவர்போலக் கேட்கும்பொழுது, தனது மனைவியையும் குழந்தையையும் அழைத்தார். காமாம்பாள் தன் குழந்தையை யெடுத்துக்கொண்டு வந்து குரு நாதனான கபீர்தாஸை வணங்கி முன்னிற்க; கபீர்தாஸ், "கோபன்னா! பார்த்தாயா? அடித்த அடிகளின் தழும்புகளை? இப்படியும் குழந்தையை அடிக்கப்போமா? நல்லகாரியம் செய்தாய்" என்று சொல்ல, அவர்களும் "சுவாமி! இவர் இன்று பூராவும் எங்களைப் பார்க்கக் கூடயில்லையே, இவர் எங்களை அடிக்கவுமில்லையே, நாங்கள் வேறொருவரால் அடிப்படவுமில்லையே" எனச்சொல்லி வணங்கினள். கோபன்னா தனக்கொன்றுந் தோன்றாது ஆசாரியன் திருவடியில்வீழ்ந்து, "சுவாமி! எனக்கொன்றும்தெரியவில்லை, இன்று பூராவும் பகவான் எழுந்தருளுவாரென்று காத்திருந்தேனேயன்றி, வேறொன்று மறியேனே! இது ஆச்சரியம். ஆச்சரியம்" எனப் பரதவித்தார்.

கபீர்தாஸ் சிறிதுநேரம் யாதோ யோசிப்பவர்போல் மௌனமாயிருந்து, பிறகு கோபன்னாவைப் பார்த்து, "அப்பா! என்னையும் உன்மனைவியையும் மகனையும் உன்னையும் அடித்தவன் நீதான் இது மாத்திரமா? உன் அடிபடாத பிரமனில்லை. உனது அடிபடாத ருத்திரனில்லை. இந்திராதி தேவர்கள் யாவரும் உனதடியுண்டவர்களே. பதினாலு உலகத்திலுள்ள தாவர ஜங்கமப் பொருள்கள் யாவும் இன்று உனதடிப்பட்டவைகளே, உன் அடி

படாத பொருள் இல்லவேயில்லை. எப்படி யென்றால், சொல்லுகிறேன் கேள். நான் குறிப்பிட்டு சொன்னநேரத்தில் பகவான் எருமையின் உருவந்தரித்துவந்து நீ அவருக்காக விரித்திருக்கும் படுக்கையில் படுத்து புரண்டாராம். நீ பகவானென்றறியாது தடியைக்கொண்டு அடித்துவிட்டனை. அனைத்துலகங்களுக்கும் முதல்வனான ராகவன். மேனியில்பட்ட அடியானது பிரமன் முதல் சிற்றெறும்பீராகச் சொல்லும் ஜீவராசிகளுக்கும் புல் முதல் மலைவரையுள்ள சடப்பொருள்களுக்கும் பட்டன." என்று கபீர்தாஸர் சொல்லக் கேட்டு, கோபன்னா அப்படியே மூர்ச்சையடைந்து கீழே விழுந்தான். கபீர் மூர்ச்சையைத் தெளிவிக்க வேண்டிய சிகிச்சை செய்தும், தெளிந்தானில்லை. இராகவன் தன்னை வெளிப்பட்ட கானகத்திற்குப் போகத்துணிந்தாரென்று கேட்டபொழுதே தசரதர் எவ்வாறு மூர்ச்சை யடைந்தாரோ அதுபோல மூர்ச்சை யடைந்து சிறிதுநேரம் கிடந்தான். கபீர்தாஸர் குளிர்ந்த தீர்த்தத்தை அவன் முகத்தில் தெளித்து, ஆலவட்டத்தால் வீசி, இன்மொழிகளைச் சொல்லத் தரியதாக உயிர் வந்தது. உயிர் வந்ததும் கண்களிலிருந்து கண்ணீர் ஊற்றாகச்சுரந்துபெருக, பின்வருமாறு சொல்லி அழுதான்.

"ஏ! இராமச்சந்திரா! அறுபதினாயிரமாண்டு புத்திரனில்லாது வருந்தி உமது தந்தை புத்திர காமேஷ்டியாகம் செய்ய, ஓமத்தினின்றெழுந்த தேவப்பிரசாதத்தால் கௌசல்யாதேவியின் கருப்பத்தில் தோன்றிப் பிறந்தீரே? உமது அன்னையாரும் உமது தந்தையாரும் உம்மை அடிக்க அடியுண்டீரா? ஏ! சீதாபதே உமக்கு சவுள உபநயனம் செய்து வித்தியா குருவாக வசிஷ்டபகவானை தேடிரானை ஹஸ்திகாச தனுர் சாஸ்திரம், தர்ம சாஸ்திரங்கள் கற்றுக்கொடுக்குங்காலத்தில் பாடம் வரவில்லையே யென்று அவர் அடிக்க அடியுண்டீரா? காகுஸ்தா! உமது சகோதரர்களாகிய பரத லக்ஷ்மண சத்ருக்கனோடு நீர் விளையாடும்பொழுது அவர்கள் சினந்து உன்னை அடிக்க அடியுண்டீரா! உமது பாலப்பருவத்திலும் மூன்று பரம்பொருளுக்கும் முதல் முதல்வன்போல மூன்று தம்பியருக்கும் முதல்வனாக யிருந்தீரே? அடியேன் தடிகொண்டடிக்க அடியுண்டீரே? உமது தந்தை உம்மையல்லாது தனக்கு உயிரில்லை என்று கருதி உன் திருமேனியின் முன்னழகையும் பின்னழகையும் பார்த்து மகிழ்ந்த ஒவ்வொரு நேரத்திற்கும் உன் திருமேனிக்கு உவப்ப, உடை தரிப்பாரே? அந்த அருமருந்தன்ன திருமேனி அடியேன் கையால் அடியுண்டதே! உமது தாயாகிய கௌசல்யாதேவி உனது மேனிக்கு இசைய ஆபரணங்களை அணிந்தணிந்து திருப்தி ஏற்படாமல் உனது திருமேனிக்கு ஆபரணமே தேவையில்லையென்று நினைத்து மகிழும் திருமேனியானது இன்று என் கரங்களால் அடியுண்டதே! ஆ! ஏ ராகவா! நான் கொடிய அபசாரம் செய்து

விட்டேன். என்னை மன்னித்தல் தகாது. உம்மை அடித்துவிட்டு உயிர் வாழத் துணிந்தால், என்னினும் கொடிய வஞ்சகன் இந்த உலகத்தினில்லாதவனுவேன்" என்று தன துயிரைவிடத் துணிந்தான். அப்பொழுது கபீர்தாஸ், கோபன்னுவைப்பார்த்து, "அப்பா! நீ உயிரை விட்டுவிடுகிறேனென்கிறாய்; உன்னிலும் மேலான ஞானமுடையவர்கள்; அவதார விசேஷமுடையவர்கள் கூட ஈஸ்வரனை அடித்ததற்காக உயிர் விடவில்லையே? யசோதை தனக்கு மைந்தனுய் வாய்த்த ஸ்ரீ கிருஷ்ணனைக் குளிப்பாட்டும் பொழுது, மஞ்சளால் நாக்கை வழித்தாள். அப்பொழுது அவன் வாயைத்திறந்து தானே சர்வேஸ்வரன் என்று யசோதைக்கு ஏழுலகத்தவரையும், ஏழுலகத்தையும் காட்டினுன். அப்பொழுது யசோதையானவள், 'இவன் நமது மைந்தனல்லன். தெய்வமேயாவன்" என்று உணர்ந்தும், ஸ்ரீகிருஷ்ண பரமாத்மாவை எத்தனை தடவை கட்டினுள்; எத்தனைதடவை அடித்தாள்; அதற்கு அவள் உயிர் துறந்தாளா? மகாபாரதத்தில் அர்ச்சுனன் பாசுபதாஸ்திரம் வாங்குவதற்காக கைலாசபர்வதம் சென்று சிவபிரானை நோக்கி அரியதவம் செய்தபொழுது, சிவபிரான் உடனே அவன் தவத்திற்கு மகிழ்ந்து, உமாதேவியுடன் தனது கணநாதர்களையெல்லாம் வேடுவர்களாக உருவெடுக்கச் செய்து, தானும் பார்வதியும் வேடுவர் தலைவனும் தலைவியுமாய் உருவெடுத்து பார்த்தன் தவம்பண்ணிக்கொண்டிருக்கும் இடத்திற்குச் சற்று தூரத்தி லிருந்தபடியே தனது கணநாதர்களில் ஒருவனைப் பன்றியாக்கித் துரத்திவர, அப்பன்றி அர்ச்சுனனுடைய பாதத்தில் அபயமெனப் போய் விழ, அர்ச்சுனன் தவத்தைவிட்டு அதைக் காக்கும் சமயம், சிவபிரானுகிய வேடன் அங்குசென்று, "என் பன்றியைவிடு. நீ யார் அதைப் பிடிப்பதற்கு" எனச் சிறிது கோபமுற்றவர்போற் கேட்க, அர்ச்சுனன் அவர் கோபத்திற்குச் சிறிது மஞ்சாது, "என்னை அபயமென்றடைந்த இப்பன்றியை விடேன். உன் கோபத்திற்குப் பயப்படேன். இவ்விடத்தைவிட்டுப் போய்விடு" என் அவனும் கோபத்தோடு பதில்சொல்ல, இருவருக்கும் வார்த்தை அதிகமாக, அர்ச்சுனன் சிவபிரானென்றறியாது கோபாக்கிராந்தனுகித் தனது கையிலிருந்த வில்லை எடுத்து ஓங்கி அவர் தலையிலடித்தான். பின் வந்தவர் சிவபிரானென்று உணர்ந்தான். உணர்ந்தும், தான் செய்த பெருங்குற்றத்திற்காகத் தன் னுயிரை மாய்த்துக் கொண்டானு? யசோதை ஈஸ்வரனென்று தெரிந்தும் அடித்தாள். அர்ச்சுனன் மானிட உருவத்தோடு வந்திருந்ததைக் கண்டும் தன்னுடன் போராடிய வீரத்தைப்பார்த்து, ஈசனென்றெண்ணுது அடித்தான். நீ அவ்வாறு செய்யவில்லை; ஸ்ரீராமச்சந்திரன் எருமைக்கடா உருவெடுத்து பரிசுத்தமாய் அவருக்கென்று நீ போட்டுவைத்திருந்த படுக்கையில் வந்து புரண்டதால், அவரிடங்கொண்ட பிரீதியால் அவரை அடித்தாய். இது

குற்றமாகாது. இதற்கொரு பிராயச்சித்தமிருக்கிறது. சொல்லுகிறேன் கேள்:

"அப்பா! கோபன்னு! பதினெண் புராணங்களிலொன்றான பிரமாண்ட புராணத்தில் சூதபுராணிகர் சவுனகாதி முனிவர்களுக்கு தெரிவித்தது:—இப்புவி யுலகத்தில் தண்டகாரண்ணியத்தைச் சார்ந்ததாய் சான்றவருள்ளப் போல்தெளிந்து, கௌதமனது கரகனீரினின்றும் தோன்றி பஞ்சவடி என்னும் மலையினின்று அருவியாக புவியில் வந்து பூமண்டலத்தை செழிப்புறும்படி செய்யும் கோதாவரிநதி தீர்த்தத்திலே பத்திராசல மென்றொரு பர்வதமிருக்கிறது. அது வேங்கடமலைமேல் சீதாசமேதரான ராமச்சந்திரன், இளையபெருமாளுடன் எழுந்தருளியிருக்கும் சிறப்புடையது. இந்த பத்திராசலத்தின் பெருமையைச் சொல்லுகிறேன் கேள்: முன்னொருகாலத்தில் பதினன்கு உலகத்திற்கும் ஒரு சமமாய், சாம்பூநதமென்று ஆயிரத்தெட்டுமாற்று சொர்ணமயமான, நவரத்தினமயமான ஆயிரம் கொடிமுடிகளுடன் கூடியதாய், சூரிய சந்திரர்கள் வலம்வரும் சிறப்புடையதாய், சித்த வித்தியாதர பன்னக சாரண யக்ஷகந்தர்வ கிம்புருடர் கூட்டம் கூட்டமாகத் தங்கும் சிறப்பு உடையதாய், தன்னைச்சூழ குலாசல பர்வதங்களென்றும், சக்கிரவாள பர்வதங்களென்றும், சொல்லுகின்ற பர்வதங்களுக்கெல்லாம் ராஜாவாய் பிரம்மலோகம் முதல் எல்லா உலகங்களும் தன் ஆதாரத்தில் தங்கும் பெருமையுடையதாய் விளங்கும் பொன்மலையான மேருபர்வதமானது, தனக்கு புத்திரனில்லாத குறையால் வருந்தி, தன் மனைவியான மேருதேவியோடு பிரமனை நினைந்து பதினுயிரமாண்டு பஞ்சாக்கினி மத்தியில் நின்று பசிதாகத்தை நீக்கி, ஐம்புலனடக்கி, மனத்தில் கமலாசனன் கழலிணையைப் பதித்து, விடாது தவம் செய்யும்பொழுது, மேருதேவனது தவத்திற்கு மெச்சி, சதுர்முகன் அம்சவாகனருடனுய் தனது பத்தினியாகிய கலைமகளுடன் எழுந்தருளி, "ஏ! பர்வதராஜனே! உன் தவத்தை வியந்து வரம்தர விரும்பி உன்முன் வந்தேன். உனக்கு வேண்டிய வரம் யாது சொல்லுதி தருகிறோம்" என்று கமலாசனன்கேட்க, பர்வதராஜன் தவநிலையைவிட்டு, தன் மனைவியோடு எழுந்து பிரம்மனது திருவடிகளில் விழுந்து, பலவிதமாகத் தோத்திரம் செய்து தனது இருகரங்களையும் குவித்துக்கொண்டிருக்கும்பொழுது, பிரம்மாவானவர் "உனக்கு வேண்டிய வரங்கள் எவை" என்று பின்னும் கேட்க, பர்வதராஜன், "என்னருந் தெய்வமே! அடியேனுக்கு ராமபக்தனுகிய வொருபுத்திரனைத் தந்தருளவேண்டும்" எனப் பிரார்த்தித்தான். பிரம்மதேவன், மேருராஜனது பிரார்த்தனையைக் கேட்டு, நல்லது, பர்வதராஜனே! அவ்வாறே ராம பக்தனுகிய மைந்தன் பிறப்பான் என்று சொல்லி, அம்சவாகனத்து சரஸ்வதி சமேதராய் சத்தியலோகத்திற் கெழுந்

தருளினர். மேருராஜனும் தனது மனைவியான மேருதேவியுடன் தவத்தைவிட்டு தன்னிடம் வந்து சேர்ந்து இன்புடன் வாழ்ந்து வந்தான்.

இப்படி இருக்கும்பொழுது, திரேதாயுகத்திலே ஸ்ரீராமச்சந்திரர் சீதாசமேதராய், தம்பியான இலட்சுமணருடன் மாதுர்வசன பரிபாலன, பிதுர்வசன பரிபாலனம் செய்யவும், துஷ்டநிக்கிரக சிஷ்டபரிபாலனம் செய்யவும், ஆரண்ணியத்திற் கெழுந்தருளி தண்டகாரண்ணியத்திலே அகஸ்தியாச்சிரமத்தை நாடி வந்துகொண்டிருக்கும்பொழுது, வழி நடந்து வரும் சிரமத்தை மாற்றிக்கொள்ள அங்கே தோன்றிய ஒரு பளிங்கு கற்பாறையைக் கண்டு அதில் தங்கி இளைப்பாற சீதாசமேதராய்ச் சென்று அதில் அமர்ந்தார். இளையவீரராகிய இலட்சுமணரும் அந்தப் பாறையில் தங்க பகவான் ஜானகியைப் பார்த்து, "ஏ! சீதா! இந்தப்பாறை எவ்வளவு குளிர்ச்சியாக இருக்கிறது பார். இதில் வந்து தங்கியதும், நாம் வழியை நடந்துவந்த சிரமமெல்லாம் போய் விட்டது. நீயும் நானும் சந்தோஷமாய் இளைப்பாறியிருப்பதற்காக எனது தந்தையாகிய உனது மாமன் கட்டிய பளிங்குமண்டபம் இவ்வளவு குளிர்ச்சி உடையதாயில்லை. இந்த பளிங்கு பாறையானது, தானே தோன்றி சிவனுடன் ஓங்கி வளர்வதினால், நமது பளிங்கு மண்டபத்தைக் காட்டிலும் இதுவே குளிர்ச்சியுடையதாயிருக்கிறது. இவ்வாறு நமக்கு வழி நடந்துவந்த சிரமத்தைத் தீர்த்த இந்த பாறைக்கு நாம் என்ன கைம்மாறு செய்யப் போகிறோம்?" என்று சொல்ல, சடவஸ்துவாயிருந்த அந்தப் பாறையானது, ஒரு அழகிய மானிட வடிவத்துடன் வெளியேவந்து, சீதா சமேதராய் இளவீரருடன் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீராமசந்திரனுக்கு தண்டமிட்டு "சுவாமி! வேதங்களாலும், தேடற்கரிய தேவரீர் திருவடி அடியேன் முடிமீதுபட்டதே என்னினும் பாக்கியம் செய்தவருண்டோ? நானே தன்னியனானேன். சடமாயிருந்த எனது ஜன்மம் சாபல்லியமாயிற்று. அடியேனுக்கு ஒரு வரம் தரவேண்டும். மாமணிவண்ணா!" என்று பிரார்த்தித்தான். பகவான் "உனக்கு யாது வரம் வேண்டும்? இந்த சமயம் கேள் நான் தருகிறேன்" என்றார். உடனே பிரம்மசாரி வடிவங்கொண்ட அந்த பாறையானது, "சுவாமி! நீர் ஒருகாலத்திலும் என்னை விட்டு நீங்காதிருக்கும் வண்ணம் நான் வேண்டுகிறேன். அந்த வரத்தைத்தந்தருளவேண்டும்" என்று பிரார்த்தித்தான். பகவான் "அப்படியே தந்தேன்" என்று சொல்லி, சீதையோடும் லக்ஷ்மணனோடும் சூரியாஸ்தமனமானதும் ராமசந்திரர் அகஸ்தியாச்சிரமம் சென்றார்.

பாறையாயிருந்த புருஷன், ஸ்ரீராகவன் கிருபையால் பர்வதராஜன் பாரியையாகிய மேருதேவியின் கர்ப்பத்தில் தங்கி புத்திரனாய்ப் பிறந்தான். மேருகிரிநாயகனும் மேருதேவியும் தங்

களுக்கு பிரம்மதேவன் வரத்தால் கிடைத்த பாலனை 'பத்திரன்' என்று பெயரிட்டு அருமையாய் வளர்த்துவரும் நாளில், பகவானை நாரதர், அந்த பத்திரனிடம் வந்துசேரவும், நாரத பரப்பிரம்மத்தைக்கண்டு அருமகிழ்வுட னடிமேல் பணிந்து, "மாதவத்தரசே! மறையவர் தலைவா! பாதகம் தவிர்க்கும் பரமதயாளா! முத்திவீடளிக்கும் சாஸ்வததயாபரா! சரிகமபதநி பாடல் பாடிவரும் மகதிவீணைவல்லவா! சரணம். பிரம்ம தனையனும் பெரியோய் சரணம். பாரகமுய்ய பலகால் வருந்திய நாரதமுனிநாதா சரணம்" எனப் பலவாறு புகன்று தோத்திரம் பண்ணினர். அப்பொழுது, நாரதமுனிவர் பத்திரனைப் பார்த்து, அப்பா! நீர் பர்வதராஜனாகிய மேருகிரிக்கு மைந்தனாகப் பிறந்தாய். அவன் உன்னைக் கண்ணிமைப்போலக் காத்துக்கொண்டு வருகிறான். நீ முத்திவீடு பெறுவதெப்படி? பிரபஞ்சத்தில் பிறந்துவிட்டால், பிரபஞ்சமாயையிலிருந்து தப்பி மோக்ஷவழியை யெவன் நாடுகிறானோ, அவனே உலகில் பிறந்தவனாவான். அப்படியில்லாது அழிகின்ற செல்வத்தை நம்பி, காமம் வெகுளி மயக்கங்களால் கட்டுண்டு, அறுவகை பிணியான காமக்குரோத லோப மோக மதமாச்சரியங்களால் மிதியுண்டு, நானென்றும், எனதென்றும் செருக்குற்று, பெரும் பாவங்களை மூட்டையாகக் கட்டிக்கொண்டு, மாறி-மாறி பிறக்கும் மானிடரே பிறந்தும் பிறவாதவராகிறார். ஏ! பத்திரா! ஒருவன் ஆறு அறிவோடு மானிடவர்க்கத்திலே பிறந்திருக்க, அந்த பகுத்தறியும் அறிவைக்கொண்டு உண்மை வஸ்துவான கடவுளை அறிந்து உய்யும் மார்க்கத்தைக் கருதாது, அழிந்துபோகும் பொய்ப்பொருளை நினைந்துருகி, சேதனராய் மாள்கின்றார்களே? அந்தோ! இதைப் பார்த்தால் என் மனம் பெரிதும் வருந்துகின்றது. உன்னைப்போல் புண்ணிய சீலர்களாய்ப் பிறந்தவர்கள் கூட, இந்தப் பிரபஞ்ச மாயையிலிருந்து தப்ப முடியவில்லை யென்றால், வெறு சாமான்னியர்கள் எப்படி தப்புவார்கள்? இது அரிதல்லவா" எனக் கேட்டார்.

பர்வதராஜ குமாரனாகிய பத்திரன் இவ்வார்த்தையைக் கேட்டதும், நாரதமுனிவரின் சரணாரவிந்தத்தில் விழுந்து, "சுவாமி! அடியேனை உமது உபதேசத்தால் இனி இந்த பிரபஞ்ச மாயையில் மூழ்காவண்ணம் நான் தப்பித்துக்கொண்டேன். அடியேனுக்குத் தவம் செய்யும் ஆசை மேலிட்டிருக்கிறது. அதற்குத் தாங்கள் சற்குரு நாதனாயிருந்து தாரக மந்திரத்தை உபதேசம் செய்யவேண்டும்" என்று பிரார்த்தித்தான். உடனே நாரதமுனிவர் அவன் செவியில் தாரக மந்திரமாகிய இராமமந்திரத்தை உபதேசிக்க, அவன் அவ்வுபதேசத்தைப் பெற்று அருக மகிழ்வடைந்து, தனக்கு உபதேசம் பண்ணிய ஆசாரியனை அனுப்பிவிட்டு தனது தாய் தந்தையரிடம் சென்று, "நான் தவம்செய்ய செல்லவேண்டும். எனக்கு விடை

தாருங்கள்" எனக் கேட்டான். அவர்கள் அருந்தவம் செய்து பெற்ற தமது மைந்தனைக் கானகத்திற் கனுப்ப மனந்தாளாதவராய் வருந்தும்பொழுது, தாய் தந்தையர்களைத் தனது இதமான மொழிகளால் தேற்றி, தென்றிசை நாடிவந்து கோதாவரிநதி சமீபமாயுள்ள தண்டகாரண்ணியத்தைச் சார்ந்ததாய், ஒரு ஆரண்யத்தில் தவத்தினர்களின் பர்ணகசாலைகளும், எக்ஞ சாலைகளும் நிறம்பியுள்ளதாய், விளங்கும் ஒரு அழகிய வனத்திலிருந்து பஞ்சேந்திரியங்களையும் அடக்கித் தனது சித்தத்தில் தாரகமந்திரத்தை தியானித்து விடாது பல வருஷங்கள் தவம் செய்யவும், அப்பொழுது பாற்கடலில் சேஷசயனத்தில் பெரியபிராட்டி திருக்கால் வருட, பள்ளிகொண்டு யோகநித்திரை செய்யும் ஸ்ரீமந் நாராயணன்; பத்திரன் தன்னை நோக்கி தவம் செய்வதையும், தான் ராமாவதாரத்தில் அவனுக்குக் கொடுத்த வரத்தையும் நினைந்து, தான் ஸ்ரீ ராமச்சந்திரனாய் சதுர்புஜங்களில் இரண்டு புஜங்களை மறைத்து, சங்கு சக்கரத்தை பாற்கடலிலேயே வைத்து வில்லும் அம்பும் இடக்கரத்திலும் வலக்கரத்திலும் பிரகாசிக்க, திவ்வியாபரணலங்காரமுடையவராய் ராமச்சந்திரனாக அமைந்து, தன் பத்தினியாகிய திருமகளைப் பார்த்து, "என் கண்மணி! நான் பத்திரனது தவத்திற்குமெச்சி அவனை ஆட்கொள்ள ஸ்ரீராமனாய் உருவத்தை மாற்றிக்கொண்டேன். ஆதலால் நீயும் ஜானகியாக உருவத்தை மாற்றிக்கொள்ளு" என்று தெரிவிக்க, லக்ஷ்மியும் சதுர்புஜங்களில் இரண்டுபுஜங்களை மறைத்துக்கொண்டு ஜனகராஜன் திருமகளாய்த் தனது உருவத்தை மாற்றிக்கொண்டாள். அப்பொழுது ஆதிசேஷன் லக்ஷ்மணனாய் உருவத்தையடைந்தான்.

இப்படி மூவரும் மூன்று உருவமெடுத்துக்கொண்டு, பத்திரன் தன்னை நோக்கி அரிதாய் தவம்பண்ணிக்கொண்டிருக்கும் வனத்தை நாடி எழுந்தருள, பத்திரன் தாரக நாமப்பொருளான ஸ்ரீராமச்சந்திரனை சீதாலக்ஷ்மண சமேதராய் எழுந்தருளக்கண்டதும் மிக்க மகிழ்ச்சியடைந்து, சுவாமியான ராமச்சந்திரன் திருவடியில் விழுந்து, தண்டனிட்டு இருகரங்களையும் தலையின்மீது குவித்துக்கொண்டு "ஏ! தாசரதே! தசரதபுத்ரா! கௌசல்லியாப்பிரியா! ககுஸ்தா! சீதாமனோகரா! பதிதபாவனா! ஜானகிரமணா! சுக்கிரீவப்பிரியா! வாலிமர்த்தனா! இராக்ஷதகுல சம்ஹாரா! விபீஷணப்பிரியா! பாத சகோதர பாவனா! பவித்திர ஸ்தோத்திரம் செய்யும்பொழுது, ஸ்ரீராகவன் கருணையுடன் நோக்கி, "ஏ! பத்திரா! உன்னுடைய தவத்தைக் கண்டு வியப்புற்று வந்தேன். நீ என்னிடம் விரும்பும் வரம் யாது சொல்லு தருகிறேன்" எனக் கேட்டார். இதைக் கேட்டதும் பத்திரன் இருகரங்களையும் சிரசின்மேல் வைத்துக்கொண்டு "சுவாமி! நீர் என் தாயான சீதாபிராட்டியோடும், இளவீரரான லக்ஷ்மணரோடும் என்னை விட்டுப்

பிரியாதிருக்க வரம் தரவேண்டும்" எனப் பிரார்த்தித்தான். உடனே பரந்தாமன் பத்திரனைப் பார்த்து, "நீ கோரிய வரமானது, உனக்கு சாம்மிய நலத்தை, விரும்பாததாய் உலகத்திலுள்ள சேதனர்கள் உய்யவேண்டிய காரியமாயிற்று. இந்த பூமண்டலமானது தருமத்தை மறந்து பாபத்தில் சிறந்து களவில் களித்து பொய்யில் செழித்து வஞ்சனையில் மலர்ந்து பஞ்சையை நலிந்து சாதுக்களை இகழ்ந்து பாவியரைப் புகழ்ந்து நானென்னு மகந்தை நாடெல்லாம் பரவ நற்கதி சேருவதற்கு வழியின்றி பாழாகின்றது. அவர்கள் உஜ்ஜீவிப்பதற்கு உனது தவமும், அந்த தவத்திற்கு மெச்சி நான்தரும் வரமும், உதவுமாறு அமைந்தது தபசென்றால், தான் மாத்திரம் ஒரு பலனைப் பெறச்செய்வது அதமமாகும். அத்தவத்தால் உலகத்தினர்களுக்கு இதம் செய்வது மத்தியமமாகும். அந்த தவத்தினாலே அடையும் பலனை பிறர்கள் மோக்ஷ வீடடையும்படி செய்வதுதான் உத்தமமாகும். உனது தவமானது உலகத்தவர்களை ஈடேற்றுவதற்கே உபயோகப்படுவதால், இதுதான் உத்தமமான தபசு என்று சொல்லவேண்டும். நீ மேருபர்வதத்தின் குமாரனானதால், பத்திராசலம் என்னும் பெயரோடு கோதாவரி தீரமாகிய இந்தவிடத்தில் அமைந்துகொள்ளு நானும் என் பத்தினியும் தம்பியுமாக உன்னையே கோயிலாகக்கொண்டு உனது சிகரத்திலேயே யிருந்து விடுகிறோம். அது உலகத்திலுள்ள பாமரர்கள் உஜ்ஜீவிப்பதற்கு ஒரு வழியாகும். பஞ்சமகா பாதகம் செய்தவரேனும், தாய் தந்தையரைக் கொன்று மாதுர்ஹத்தி பிதுர்ஹத்தியென்னும் பாபம் செய்தோரும், பிராமணர்களைக் கொன்றதால், பிரம்மஹத்தி தோஷம் செய்தவர்களும், ஸ்திரீகளையும் பாலர்களையும் வதைசெய்வதால், வரும் ஸ்திரீஹத்தி சிசுஹத்தி செய்தவரும், பிராயச்சித்தங்களால் விலகாத பாபம் செய்தவர்களும், உன்னை மூன்றுமுறை கிரிப்பிரதக்ஷிணமாகச் சுற்றிவந்தால், அவர்கள் செய்த பாவங்களெல்லாம் நசித்து பரமபாகவதராய் முடிவில் என் சரணாவிந்தத்தையும் அடைவார்கள்; பஞ்சவடி என்று சொல்லும், ஐந்து ஆலமரங்களால் அழகுறவிளங்குவதாய், முன்னம் நாங்கள் வனவாசம் செய்யவந்தபோது தங்கியிருந்த புண்ணிய பூமிக்கு மேற்கேயுள்ள மலையில் தோன்றி, கிழக்காக நாசிக் என்னும் இடம் வரை செல்லும் கோதாவரியானது உன்னை நோக்கி, நேர் தெற்கே வந்து உன்னைப் பணிந்துவிட்டு கௌதமி என்னும் பெயரோடு சென்று மறுபடியும் கீழ்திசை நோக்கிச்செல்லும். இந்த தீர்த்தகட்டத்தில் தீர்த்தமாடி உனது சிகரத்திலேறி என்னை தரிசிப்பவர்க்கு இஷ்ட காம்யார்த்த சித்திபலன்கள் யாவும் அளித்து முடிவில் மோக்ஷத்தையும் அடைவார்கள். இந்த புண்ணிய தீர்த்தக்கட்டமே பரமபதத்திலுள்ள விரசாநதியாகும். பத்திராசலமே பரமபதமாகும். அதில் கோயில்கொண் டுறையும் நானே இந்த

பூலோகத்திலுள்ளவர்களுக்கு பரமபத நாதனாவேன்" என்று பகவான் கூற, பத்திரன் கேட்டு மகிழும்பொழுது பாற்கடல் துயிலும் பரம்பொருளாகிய ஸ்ரீராமச்சந்திரன் சீதா சமேதராய் இலக்ஷ்மணனுடன் பத்திரனுக்கு வரம் கொடுத்துவிட்டு பாற்கடலுக்கெழுந்தருளினார்.

பத்திரன் பகவான் நியமனப்படி பர்வத ரூபமானதும், சுயம்பு மூர்த்தியாய் சிலாரூபமடைந்து, ஸ்ரீராகவன் சீதாபிராட்டி லக்ஷ்மணன் அனுமான் என்னும் மூர்த்திகளாகி அந்த பத்திராசலத்தைக் கோயிலாகக்கொண்டு எழுந்தருளியிருக்கிறார் என்று பிரமாண்ட புராணத்தில் கூறப்பட்டிருக்கிறது. "கோபன்னா! நீ ஸ்ரீராமச்சந்திரனை அடித்ததற்குப் பிராயச்சித்தமாக உனது பத்தினியோடும் குழந்தையோடும் பத்திராசலத்திற்கு யாத்திரையாகச் சென்று கௌதமியாற்றில் தீர்த்தமாடி, பத்திராசலம் என்னும் பர்வதத்தை மூன்றுமுறை கிரிபிரதக்ஷிணம் செய்து, பத்திராசலவாசனான ஸ்ரீராமச்சந்திரனையும் சேவித்துவிட்டு வந்தால் அதுவே பிராயச்சித்தமாகும்" என்று கபீர்தாஸ் சொல்ல, இவ்வார்த்தையைக் கேட்டு கோபன்னாவானவர், கபீருடைய திருவடிகளில் பணிந்து, "இன்றே பத்திராசலத்திற்கு யாத்திரை செய்கிறேன்" என்று சொல்லி தன் ஆசாரியனை அனுப்பிவிட்டு, யாத்திரைக்கு வேண்டுவனவெல்லாம் சேகரித்துக்கொண்டு, நல்ல முகூர்த்தகாலத்தில் தானும் தனது பத்தினியாகிய காமாம்பாளும் தன் குழந்தை ரகுபதியுமாய் வேண்டிய சாமான்களுடன் வண்டியேறி பலநாள் கடந்து பத்திராசலம் சேர்ந்து ஒரு பிராமணன் வீட்டில் தங்கி, தானும் தன் மனைவியும் குழந்தையுமாக கௌதமி நதியில் தீர்த்தமாடி, திரிபுண்டரமிட்டு, கர்மானுஷ்டானங்களை முடித்துக்கொண்டு பத்திராசலத்தைக்கிரிப்பிரதக்ஷிணமாக மூன்றுமுறை வலம் வந்து பர்வதத்திலேறி பத்திராசல ராமபத்திரனை சேவித்து அவருக்கு அபிஷேக அலங்காராதிகள் செய்து திருவாராதனமும் ததியாராதனமும் சிறப்பாய்ச்செய்து, தான் ஆசாரியரிடம் ஸ்ரீராமச்சந்திரனை நேரே கண்டு தரிசிக்கவேண்டுமென்று வேண்டிய பிரார்த்தனையை பத்திராசலத்தில் சேவித்து மகிழ்ந்தவராய், தனது ஊராகிய கொல்லைகொண்ட பல்லாவுக்கு வந்து சேர்ந்தார்.

இவர் பத்திராசலம் சென்று ராமச்சந்திரனை சேவித்த நாள் முதல் இவர் மனம் புத்தி சித்தம் எல்லாம் ராகவனிடமே சேர்ந்தது. அவர் சேவை தனது கண்களைவிட்டு நீங்கவேயில்லை. இதனால் ராமபக்தியும் வர வர தடித்தது. இந்த அல்பமான செல்வம் பூராவும் ராமச்சந்திரனுக்கே அர்ப்பணம் செய்துவிடவேண்டும் என்று தீர்மானித்தார். இவர் நினைப்புக்கு ஏற்ப, ஸ்ரீராம நவமி உற்சவமும் நெருங்கிவந்தது. இந்த உற்சவத்தைப்போல் எங்கும் நடந்ததில்லை என்று சொல்லுமாறு நடத்த விரும்பினார்,

நமது பந்துவர்க்கத்தவர்களெல்லாம் தவறாது இந்த உற்சவத்திற்கு வரவேண்டிய ஏற்பாடுகள் செய்து அவர்களுக்கு வேண்டிய சகலவித சௌகரியத்திற்கும் வேண்டிய யாவும் அமைத்து அனேக பாகவதர்களுக்கெல்லாம் பத்திரிகை அனுப்பி பெரிய காவணமான பத்து உற்சவபத்ததி பிரகாரம் ஆயிரக்கணக்கான அந்தணர்களுடனும், பாகவதர்களுடனும், உற்சவம் ஆரம்பமாகி நடந்து வந்தது. இவர் பந்துவர்க்கத்தவர்களெல்லோரும் பெரிய பிரபுக்களாதலால், அவரவர்கள் அந்தஸ்துக்கு தக்க சிப்பந்திகளுடன் வந்து தங்கினார்கள். இவருடைய மாமாவான அக்கன்னா மாதன்னா என்னும் இருவரும் ஐதராபாத்திலிருந்து மந்திரிகளென்கிற அந்தஸ்தில் அளவுகடந்த படை விருது சிப்பந்திகளோடு ஸ்ரீராமநவமி உற்சவம் சேவிக்க வந்துசேர்ந்தார்கள்.

கோபன்னா இவர்களையெல்லாம் எதிர்பார்த்திருந்தவராதலால், யாவரும் வந்து சேர்ந்ததும், அவரவர்களுக்குத் தக்க மரியாதைகள் செய்து, பத்து நாள் உற்சவத்தை வெகு விமரிசையாக நடத்தினார். அப்பொழுது அக்கன்னாவானவர், மாதன்னாவைப் பார்த்து, "தம்பி! இவ்வளவு விமரிசையாக இவன் உற்சவம் நடத்துகிறானே, இதற்குவேண்டிய நிதியின்வருமானமெங்கே என்று பார்த்தால், நமது அறிவிற்கு ஒன்றும் புலப்படவில்லையே? இங்கு நடக்கும் செலவைப் பார்த்தால் நமது செல்வம் பூராவும் ஒருநாள் செலவிற்குப் போதாதென்று தோன்றுகிறதே? இவர் ஆறுவருடமாக இதுபோலவே உற்சவம் நடத்தி வருகிறாரென்று உற்சவத்திற்கு வந்தவர்களெல்லோரும் இன்று நடப்பது போலத்தான் ஒவ்வொரு வருஷமும் நடந்ததாகச் சொல்லுகிறார்கள். இதற்குரிய பொருள் ஆதாரம் மாத்திரந்தான் எனக்குப் புலப்படவில்லை" என்றார். மாதன்னாவும், "நானும் அதைத்தான் யோசனை செய்துகொண்டிருக்கிறேன். என் புத்திக்கும் ஒன்றும் ஏற்படவில்லை. அதுவுமன்றி, இவர் பாடும்பொழுது, ஒவ்வொரு பாட்டையும் கவனித்தால், அவைகளிலுள்ள சொற்சுவையும்பொருட்சுவையும் என்னும் தன்மையற்றதாயிருக்கிறது. ஒவ்வொரு பாட்டின் முடிவிலும் முத்திரையாக இவர் பெயரே காணப்படுகிறது. இதனால் எனக்கு என்ன தோன்றுகிறதென்றால், இவர் பக்தியோடு பரவசமடைந்து ராகவன்மீது பாடிய பாடலுக்கெல்லாம் ஸ்ரீராகவன் அக்ஷரலக்ஷம் பொன் கொடுத்திருக்கவேண்டும். அதனாலேயே இந்த உற்சவத்தை இவ்வளவு விமரிசையாக நடத்துகிறாரென்று நினைக்கிறேன்" என்றார்.

அக்கன்னா இவ்வார்த்தையைக் கேட்டதும் "கவி நன்றாயிருக்கிறதென்றால், இதற்கு அக்ஷரலக்ஷம் பொன் கொடுப்பாருமுண்டோ" எனக் கேட்டதும், மாதன்னா மனம் கசிந்து, "ஸ்ரீராமன் கொடுப்பது இருக்கட்டும், இவர் இதேமாதிரி கவியை என்மீது பாடினால் நான் அக்ஷரலக்ஷம் பொன் கொடுப்பேன்.

உனக்குக் கவிதா ஞானம் கிடையாததலால், கவிகளின் பெருமை நீ அறியாய். இவர் வாயால் நம்மீது மாத்திரம் ஒரு வாழ்த்துக் கவி சொன்னால், அந்த நிமிஷமே நாம் மந்திரி வேலையிலிருந்து சக்ரவர்த்திகளாக மாறிவிடுவோம். இவ்வளவு சிறப்பு இவர் கவிகளுக்கிருந்தால் அக்ஷரலக்ஷம் கொடுக்கப்படாதோ?" என, பேராசைக் கொண்ட அக்கன்னா, "தம்பி! எனக்குக் கவிதாஞானமில்லாததினால், கவிகளின் பெருமை தெரிய முடியவில்லை. நீ சொல்லிய வண்ணம் சக்ரவர்த்திபட்டம் வருமானால் எவ்வளவானாலும் நாமே கொடுக்கலாம். இவர் வாயால் ஒரு வாழ்த்துக்கவி மாத்திரம் பெற்றுக்கொள்ளுவோம்" எனச் சொன்னான். மாதன்னா அதற்கிசைந்து கோபன்னா தனியாயிருக்கும் சமயம் பார்த்து, இருவருமாக அவரிடம் தமதெண்ணத்தை விண்ணப்பம் செய்தார்கள். கோபன்னா, தனது மாமன்மாரிருவரையும் கண்டதும், எழுந்து சாஷ்டாங்க நமஸ்காரஞ் செய்து, "அடியேனை நாடி இங்கு எழுந்தருளியது என்ன காரணம்? அதை எனக்குத் தெரிவித்தால் நானே வந்து தரிசித்துக்கொள்ளமாட்டேனா?" என வினவினார். அவர்களிருவரும் "ஒன்றுமில்லை, எங்களுக்கு ஒரு சந்தேகமிருக்கிறது. அதாவது, நேற்று இராத்திரி நடந்த பஜனையில் ஸ்ரீராமச்சந்திரன்மீது நீ பாடிய பாடல்களெல்லாம் நிரம்பிய சொற்சுவை பொருட்சுவையோடு கூடியதாயிருந்ததோடு, அக்கவிகள் தெய்வப்புலமையும் விளங்கியது. அன்றியும் ஒவ்வொரு கவியின் முடிவிலும் உனது பெயரையே முத்திரையாக வைக்கப்பட்டிருந்தது. இந்த சாயித்தியங்களை செய்தவர் நீதானா? இதையே தெரிந்துகொள்ள வேண்டுமென்னுங் கருத்தால் உன்னிடம் வந்தோம்" என்றனர். கோபன்னா, "மாமா! நான் விசேஷமாக ஒன்றும் படியாதவன். ஏதோ வாயில் வந்தபடி கிருஷ்ணா ராமா என்று உளறுவேனன்றி, கவிகளையும் அதன் லக்ஷணங்களையும் நான் தெரிந்தவனல்ல" என வணக்கத்தோடு கூறினார்.

இவ்வார்த்தையைக் கேட்டதும், இருவரும் சற்று கிலேசத்தையடைந்து, பின் ஒருவாறு தேர்ந்து மாதன்னாவானவர் "கோபன்னா! நீ அவ்வாறு சொல்லத்தகாது. உமது கவிகள் பூராவும் சந்தவின்பமுடையதும், பிராசச் சேர்க்கையுடையதும், எதுகை மோனைகளின் அமைப்புடையதுமாக யிருந்ததோடு, ஒவ்வொரு கவியும் பக்தி என்னும் மணம் கமழ்ந்துகொண்டேயிருந்தது. நான் அநேக கவிகளை நன்றாய் ஆராய்ந்து அதிலுள்ள குணதோஷங்களைக் கவனிப்பதே எனது இயற்கைகுணம். அப்படிக்கிருக்க, நீ நேற்றிரவு பாடிய ஒவ்வொரு பாடலும் என்னறிவைக் கொள்ளைகொண்டு போயிற்று. ஒரு உயர்ந்த வஸ்துவிருந்தால், அதை அறிகிறவர்களிடத்தே காட்டவேண்டும். அதுபோல் உமது கவிநயங்களை அறிகிற திறமையுடைய எங்களிடத்தில் உனது கவியிருக்கவேண்டும். உன்னை நாங்கள் நினைத்துக்

கொண்டிருப்பதற்கு நீ எங்கள்மீது ஒரு வாழ்த்துக்கவி பாடவேண்டுமென்று கேட்டார்கள். இவ்வார்த்தையைக் கேட்டதும் கோபன்னா, "அரி, ஹரி" என்று தனது காதுகளைப் பொத்திக்கொண்டு, தனது மாமனைப் பார்த்து, "சுவாமி! ஸ்ரீராகவனைப் பாடிய வாயால், அழியும் வாழ்வினையுடைய மானிடர்களைப் பாடுவதில்லை என்பது சங்கல்பம். நீங்க ளிருவரும் என் திருவாராதனமூர்த்தியாகிய இராமச்சந்திரனைக் கேட்டால் கொடுத்துவிடுவேன். ஒரு கவியாவது மானிடர்கள்மீது பாடிக் கொடுக்கேன். என்னை மன்னிக்க வேண்டும்" என மிகத் தாழ்மையாய்க் கூறினார். இருவரும் அவரைப் பின்னும் வற்புறுத்தினால் கெடுதி சம்பவிக்குமென்று நன்கு உணர்ந்து, உடனே அவரிடம் விடைபெற்றுக்கொண்டு தங்கள் உறைவிடமாகிய ஐதராபாத்துக்குச் சென்றார்கள்.

ஸ்ரீராமநவமி உற்சவம் யாவராலும் சிறப்புடன் புகழ்ந்து கொண்டாட நிறைபெற்றதும், உற்சவத்திற்கு வந்திருந்தவர்கள் எல்லோரும் தங்கள் தங்கள் இருப்பிடம் போய்ச் சேர்ந்தார்கள். கோபன்னாவும் பரம சந்தோஷத்தோடு உற்சவம் சிறப்பாய் நிறைவேறியதை நினைந்து நினைந்து சதா ராகவனையே தியானித்துக்கொண்டு எப்பொழுதும் பாகவதசேவையும் ததியாராதனமும் செய்து, கொல்லகொண்டபல்லாவில் எழுந்தருளியிருந்தார். இப்படி இருக்கும் நாளில் இவர் செல்வமும் குன்றிற்று. தருமசாஸ்திரங்களும் வரும்படிக்குத் தக்க சிலவு செய்யவேண்டுமென்று சொல்லியிருக்க தங்கள் முன்னோர்கள் தர்மவழியால் சம்பாதித்த அளவிடற்கரிய செல்வங்களையெல்லாம் ஈஸ்வர கைங்கரியத்திலும், பாகவத ததியாராதனத்திலும், செலவிட்டு முடிவில், ஸ்ரீராமன் திருவாராதனத்திற்குக் கால்படி அமுதுகூட இல்லையென்று சொல்லும் தன்மையில் வறியவரானார். இந்த நிலையிலும் இவர் பத்தினியாகிய காமாம்பாள் நாயகனைப் போலவே இந்த செல்வமெல்லாம் ராகவனுடையதே. நமக்கொரு சம்மந்தமும் கிடையாது. அவர் சொத்தை நமது வாயிலாக அவர் சிலவு செய்தாரென்று மகிழ்வடைந்து, தன் நாயகனிடத்தில் முன்னிலும் மேலான அன்புடையவளாய் துக்கமென்பதைக் கனவிலும் கருதாது தானும் ராமச்சந்திரனிடத்தே அன்புடையவளாயிருந்துவந்தாள்.

கோபன்னா வறுமையால் உடுத்தக்கூட வஸ்திரமில்லாமலும், உண்ணுவதற்கும் உணவில்லாமலும், கட்டை மடியுங்காலத்திலும் தன் மனைவியானவள், செல்வமிருந்த காலத்தி லிருந்த அன்பைக்காட்டிலும், பதின்மடங்கு அன்பைத் தன்மீது காட்டும் தன்மையை நினைந்து, அருமகிழ்வடைந்தார். ஒருநாள் உணவிற்கு ஒருவழியும் தோன்றாமல் வீட்டிலிருந்த பருப்புப் பானை

யைத் துடைத்து, அதிலிருந்த இரண்டு மூன்று பருப்பை நனைத்து பகவானுக்கு நைவேத்யம் செய்து, தானும் தனது பத்தினியும் குழந்தையும் பட்டினியோடு பகலெல்லாம் கிடந்து இரவானதும் படுத்து நித்திரை போயினார்கள். அப்பொழுது பகவானை ஸ்ரீராமசந்திரன் கோபன்னாவின் கனவில் தோன்றி, "நீர் ஐதராபாத்துக்குச்சென்று அவ்வூர் மன்னவனான தானிஷாவைப் போய்ப் பார். அவர் உனக்குப் பெரிய உத்தியோகம் தருவார்" எனச் சொல்லி கொஞ்சம் பொன்நாணயமுள்ள முடிப்பொன்றை அவர் முன்னே வைத்துவிட்டு மறைந்தார். கோபன்னா திடுக்கிட்டு கண் விழித்துப் பார்த்தார். முன்னே ஒரு முடிப்பு இருக்கக் கண்டு, அதைப் பிரித்துப் பார்க்க, அதிலுள்ளவைகளெல்லாம் தங்கநாணயமாயிருக்கிறதைத் தெரிந்ததோடு, பகவான் ஐதராபாத்துக்குத் தன்னைப் போகச்சொன்னதை நினைத்து, உள்ளே "தானிஷாவை எனக்கு அறிமுகம் செய்துவைப்பதற்கு நமக்கு அறிந்தவனென்று யோசித்தகாலத்தில் தனது மாமாவாகிய அக்கன்னா மாதன்னா இருவரும் நிஜாம் ராஜ்ஜியத்து தானிஷாவிடம் மந்திரிகளாக யிருப்பதால், அவர்கள் சிபார்சு செய்வார்கள். தானிஷாவிடம் நல்ல உத்தியோகத்தைப் பெறலாம்" என்று தீர்மானம் செய்துகொண்டார். மறுநாள் பொழுது விடிந்ததும், தனது மனைவியான காமாம்பாளைப் பார்த்து, "கண்மணி! வறுமை நோயால் வருந்தும் நம்மிடம் பகவான் கருணைகூர்ந்து கனவில் வந்து என்னை எழுப்பி, 'நீ ஐதராபாத்திற்குப் போய் தானிஷாவைக் கண்டுகொண்டால் உனக்குப் பெரிய உத்தியோகம் கொடுப்பார்' என்று சொல்லியதுமன்றி நான் போய் உத்தியோகம் பெற்று வரும்வரை செலவிற்காக இந்த பொன் முடிப்பையும் தந்து மறைந்தார். ஈஸ்வரனுடைய நியமனப்படியே நான் ஐதராபாத்துக்குப் போகவேண்டும். வீட்டிற்கு வேண்டிய சிலவெல்லாம் வாங்கி வருகிறேன்" என்று தன் மனையாளிடம் சொல்லிவிட்டுக் கடைக்குச் சென்றார். வீட்டிற்கு வேண்டிய அரிசி முதல் சமஸ்தமான சாமான்களையும் வாங்கிக்கொண்டதுமன்றி, தனக்கும் தன் பாரியாளுக்கும் வேஷ்டி புடவையும் வாங்கிக் கொண்டுவந்து சேர்ந்ததும், சாமான்களையெல்லாம் ஒரு இடத்தில் வைத்துவிட்டு தனது திருவாராதனத்தைமுடித்துக்கொண்டு போசனம் செய்துவிட்டு தன் மனைவியிடம் விடை பெற்றுக் கொண்டு கொல்லகொண்டபல்லாவிலிருந்து ஐதராபாத்திற்குச் சென்று, தனது மாமாவாகிய அக்கன்னா மாதன்னா இருக்கும் மாளிகையை விசாரித்துக்கொண்டு அவர்கள் வீடுபோய்ச் சேர்ந்தார். மாதன்னாவும் தனது மருமகனை கோபன்னாவைக் கண்டு அடங்காத மகிழ்ச்சியோடு எதிர்சென்று அழைத்துத் தனது இல்லத்திற்கு வந்து அக்கன்னாவான தன் தமயனிடம் தனது மருமகனாகிய கோபன்னாவை அழைத்துக்கொண்டு போகவும்,

கோபன்னா தன் தாய்மாமனான அக்கன்னாவைப் பணிந்து நின்றார்.

அக்கன்னா தாய்மாமனானதால் கோபன்னாவைக் கண்டதும் பெருமகிழ்ச்சி யடைந்து, தன் மருகனுக்கு வேண்டிய ஆசி வழங்கி, மருகனைப் பார்த்து, "ராமபக்தனாகிய உன்னைக்காண நாங்கள் என்ன தவம் செய்தோமோ? அறியோம். எங்கள் வீடு இன்று தான் பரிசுத்தமாயிற்று. நீர் இராமசந்திரனைத் தவிர யாரையும் மதித்து வருபவரல்லவே! அப்படிப்பட்ட நீர் என்னில்லந்தேடி எழுந்தருளியது யாது காரணமோ? எங்கள்மீது தயவுசெய்து சொல்லவேண்டும்" என மிக்க இரக்கத்தோடும் தாழ்ந்த குரலோடும் கேட்டார். அப்பொழுது கோபன்னாவானவர் மாமா இருவரையும் பார்த்து, "எனது செல்வங்கள் யாவும் ஸ்ரீராம கைங்கரியத்திலும் பாகவத ததி யாராதனத்திலும் செலவாய்விட்டதினால் ஏதாவது உத்தியோகம் பார்த்து ஜீவிக்கலாமென்று இங்கு வந்தேன்" என்றார். இதைக் கேட்டதும் அக்கன்னா, "அப்படியா நல்ல விஷயத்தில் தானே செலவாய் விட்டது? குற்றமில்லை. நீ தீர்த்தமாடி, உனது திருவாராதனம் யாவையும் செய்து முடித்துக்கொள்ளும். நானும் வருகிறேன். இன்று தானிஷாவின் சபைக்கு நாமும் போகவேண்டும். நீ போய் அனுஷ்டானம் செய்துக்கொள்" என்று சொல்லி அனுப்பிவிட்டு, இராஜாங்க விஷயமாக செய்யவேண்டிய காரியத்தை விரைவாய்ச் செய்து முடித்துக்கொண்டு, தானும் தீர்த்தமாடி தனக்குமுன் தன் காரியங்களை முடித்துக்கொண்டு சித்தமாய்க் காத்துக்கொண்டிருக்கும் கோபன்னாவோடு வயிறார உணவுசெய்து சந்தன தாம்பூலங் கொடுத்து தனது மருகனைப் பார்த்து, "நீ இந்த உடைகளைக் களைந்துவிட்டு, நான் கொடுக்கும் உடைகளைத் தரித்துக்கொண்டு நாங்களிருவரும் தானிஷாவின் சபைக்குப் போனதும், நீர் வந்துசேரும். இன்றையதினமே உமக்குப் பெரிய உத்தியோகம் வாங்கித் தருகிறோம்" எனச் சொல்லி விடைபெற்றுக்கொண்டு, தானும் தம்பியும் மந்திரி உடை தரித்துக்கொண்டு பல்லக்கிலேறி தானிஷாவின் சபாமண்டபம் சென்று, தங்கள் அரசர் பெருமானான தானிஷாவை சலாம் செய்து அவருடைய மரியாதை நோக்கத்தோடு தமக்குரிய ஆசனத்தில் அமர்ந்தார்கள்.

இவ்விருவரும் சொல்லியதுபோலவே கோபன்னா உயர்ந்த உத்தியோகஸ்தர்கள் அணியும் விலையுயர்ந்த உடைகளை அணிந்துக்கொண்டு தானிஷாவின் தர்பார் மண்டபத்திற்கு வந்து மண்டியிட்டு சலாம்செய்து மிக்க மரியாதையோடு வணங்கி நின்றார். இவரைக் கண்டதும் தானிஷாவுக்கு, தன்னை அறியாத உற்சாகமும், அவரிடம் மிகுந்த விசுவாசமும் ஏற்பட, கோபன்னாவைப் பார்த்து, "நீர் யாவர்? உமது

பெயரென்ன? எங்கிருந்து இங்கு வந்தீர்? இங்கு என்ன காரியமாக வந்தீர்? என்னால் உமக்கு ஆகவேண்டிய காரியம் ஏதாவது இருந்தால் சொல்லும்? நான் செய்துவைக்கிறேன்'' என முகமலர்ச்சியோடு வினவினர். இவருடைய முகமலர்ச்சியையும் குளிர்ந்த வார்த்தைகளையும் கண்டும் கேட்டும் உள்ளே மகிழ்வடைந்து "இது என்ன ஆச்சரியம்! இவர் என்னை அறிமுகமில்லாதபோழுதே இவ்வளவு அன்பாய்ப் பேசுகின்றாரே! இது ராகவன் செயலன்றி வேறில்லை'' என அவருக்கவரே உணர்ந்து, தானிஷாவுக்கு மறுபடியும் சலாம் செய்து, "இராஜபிரபுவே! நான் இருப்பது கொல்லகொண்டபல்லா. ஏராளமான செல்வநிலையிலிருந்து, இப்பொழுது கொஞ்சம் கைதளர்ந்துவிட்டதால், ஏதாவது இந்த இராஜசமுகத்தில் உத்தியோகம் பெற்று ஜீவிக்கலாமென்று வந்தேன். என்பெயர் கோபன்னா என்று சொல்லுவார்கள்'' எனத் தாழ்மையோடு தலைவணங்கி சொன்னார்.

இவர் கூறிய இனிய வார்த்தையானது தானிஷாவின் மனதை உருக்கியதுமன்றி, மரியாதையையும், தன் தன்மையின்னதென்பதையும் நன்கு பெருக்கிக் காட்டியதால், தானிஷா சிறிதுநேரம் அவர் வார்த்தைக்கு மயங்கியிருந்து பின்பு, "உன்னபடியே இவர் உயர்ந்த குடும்பத்திற் பிறந்தவரோ; ஏதோ கால வேற்றுமையால் கொஞ்சம் அவர் சொல்லியதுபோலவே கை தளர்ந்துவிட்டாரென்று நன்குவிளங்குகிறது. இவர்கூறிய அனைத்தும் பொய்யன்று. இவருக்கு இப்பொழுதே பெரிய உத்தியோகத்தைக் கொடுத்து இவரைக் காப்பதுதான் நமது கடமை'' என அவருக்கவரே மனதில் நினைந்து மந்திரிகளாகிய அக்கன்னா மாதன்னா என்னும் இருவரையும் பார்த்து, "இவருக்கு உத்தியோகம் கொடுக்க வேண்டுமென்று நினைத்திருக்கிறேன். எங்கேயாவது உத்தியோகம் காலியாயிருக்கிறதா? சீக்கிரம் சொல்லுங்கள்'' எனக்கேட்டார். அக்கன்னாவானவர் வணக்கத்துடன் எழுந்து, "ராஜேஸ்வரா! பத்திராசலம் தாலுக்காவுக்கு தாசில்தார் உத்தியோகம் நேற்றுதான் காலியாயிற்று. அந்த தாலுக்காவுக்கு யாரும் கிடையாது'' என சொன்னார். இவ்வார்த்தையைக் கேட்டதும் தானிஷா, கோபன்னாவைப் பார்த்து, "உம்மைப் பத்திராசலம் தாலுக்காவிற்கு தாசில்தாராக நியமித்திருக்கிறேன். அந்த தாலுக்காவின் குற்ற விசாரணையும், நிலவரி வாங்கும் முறையும் உம்மைச் சார்ந்தது; குடிகளுக்கு நீதியாய் நடந்து, இராஜாங்கத்திற்கும் துரோகம் நினையாமல் வரிப்பணத்தைக் கஜானாவிலிருந்து ஊருக்கனுப்பி, உமது தாலுக்காவானது மற்றைய தாலுக்காக்களிலும் சிறந்தது என்று சொல்லும்படி நடந்துக்கொள்ளுவீராக. உம்மைத் தாசில்வேலைக்கு நியமனமானதை பதிவு செய்துக்கொள்ளும் புத்தகத்தில் கையெழுத்திட்டு, அரசாங்க முத்திரையைப் பெற்றுக்கொண்டு, நாளையே சென்று

வேலையை ஒப்புக்கொள்ளுவீராக. நீர் திறமையாக வேலைசெய்வதைப்பார்த்து, விரைவாக உமக்கு மேல் உத்தியோகமும் உயர்ந்த சம்பளமும் உமக்கு நான் தருவேன். பத்திராஜலம் ஜில்லா தாசில்தாருக்கு ஏற்பட்ட மாதச்சம்பளம் நூறுவிராகனும் பெற்றுக் கொண்டு வாழ்வீராக'' என தானிஷா உத்தரவுபண்ணினார்.

அக்கன்னா, ஒரு புத்தகத்தில் தாசில்தார் வேலைக்கு இவரை நியமிக்கப்பட்டதை, இராஜ ஆக்ஞை பத்திரமொன்றெழுதி அந்த தாலுக்கா கஜானாவுக்கு அனுப்பிவிட்டு, வேறொரு புத்தகத்தில் இவர் ஊர், பெயர் உத்தியோகம் வேலை, நியமனமான காலம், வேலையை ஒப்புக்கொண்டதின் தேதி, முதலியவற்றை பதிவுசெய்துக்கொண்டு, கோபன்னாவினிடம் படித்துக் காட்டி, கையெழுத்து போடச்சொல்லி, அரசாங்க முத்திரையை எடுத்து கோபன்னாவின் கையில் கொடுத்து, 'நீர் போம்' என்பதைக் கடைக்கண்பார்வையால் காட்ட, அக்குறிப்பைக் கோபன்னா தெரிந்துக்கொண்டு தானிஷாவின் முன்னேபோய் நின்று சலாம் செய்து, அவர் மரியாதை நோக்கம்பெற்று திரும்பி, தனது மாமாவின் மாளிகைக்கு வந்து மாமா அவர்களின் வருகைக்காகக் காத்திருந்தார். அக்கன்னா மாதன்னா இருவரும் தர்பாரில் செய்யவேண்டிய காரியங்களை விரைவாகச் செய்து தானிஷாவிடம் விடைபெற்று, தர்பாரைக் கலைத்துவிட்டு தமது கிரகத்திற்கு வந்து, தனது மருகனான கோபன்னாவை நல்ல பல்லக்கிலேற்றி அக்காலத்து வழக்கப்படி பகல் தீவட்டி, அரசாங்கசேவகர்கள், நியமித்து பத்திராசலம் போகும்வரை இவருக்கு தங்குமிடந்தோறும் யாவும் போதிய சௌகரியங்கள்செய்ய அந்தந்த கிராமாதிகாரிகளுக்கு தாக்கிதை யனுப்பி, தனது மருகனை உபசரித்தனுப்பினார்.

கோபன்னா தனது மாமா இருவரையும்பணிந்து, விடைபெற்றுக்கொண்டு பல்லக்கிலேறி, பல கிராமங்களில் தங்கி, பத்திராசலம் தாலுக்கா என்று சொல்லும் எல்லையையுடைய கிராமத்தோறும் வரும்பொழுதெல்லாம், கிராமாதிகள் ஊராருடன் எதிர்கொண்டு பூர்ணகும்பம் பழவர்க்கங்கள் மாலைகள் இவையுடனே வந்து கண்டுகொள்ள அவர்களுக்கு வேண்டிய உபசார வார்த்தைகள் சொல்லி, அவர்கள் பின்தொடர்ந்து வந்து வழியனுப்ப, இவ்வாறே சென்று பத்திராசலத்தின் சமீபமாய் வரும்பொழுது தானே சிந்திக்கின்றார். "ஸ்ரீராகவன் கருணை யிருந்தவாறென்னே! ஒரு நாள் ராகவனை அறியாது பிரம்பாலடித்த பாவத்திற்கு பிராயச்சித்தமாக இந்த பத்திராசல ராமனை சேவிக்க வேண்டுமென்று எனது ஆசாரியன் நியமித்தார். அவர் நியமனப்படி இந்த பத்திராசலத்துக்கு வந்து கௌதமி நதியில் தீர்த்தமாடி, பத்திராசல மலையை கிரிப்பிரதக்ஷிணம் செய்து, பத்திராசல ராமனை சேவிப்பேன். அந்த நாள்

முதல் இந்நாள் வரையிலும் எனது உள்ளத்தையே அவர் கோயிலாகக்கொண்டு தங்குவாராகில் நான் பத்திராசலத்தையே சிந்தையில் நினைந்துக்கொண்டிருக்க இந்த தாலுக்காவிற்கே தாசில்தார் உத்தியோகம் எனக்குக் கிடைத்ததே! என் பாக்கியமே பாக்கியம். ஸ்ரீராகவன் என்னிடம் காட்டிய கருணையே கருணை என்று ஆநந்த வெள்ளத்தில் ஆழ்ந்தினவராய் பல்லக்கிலிருந்தார். பல்லக்கானது பத்திராசலத்திற்கு அடுத்தாற்போல வந்ததும், கோபன்ன பத்திராசலமலையையும், அம் மலைமீதுள்ள கோபுரங்களையும், ஏறும் படிக்கட்டுகளையும், மதில் சுவர்களையும், தங்கஸ்தூபியோடு கூடிய விமானங்களையும், அர்த்தமண்டப மணிமண்டபங்களையும் கண்டு, ஆனந்தங்கொண்டு, பல்லக்கை யிறக்கச் சொல்லி, அதிலிருந்து இறங்கி பாபவிமோசனமாகும் கோபுரதரிசனம் செய்து, தனது சேவகர்களை கூவியழைத்து "இதுதான் பத்திராசலம். சர்வலோக சரண்யனு சக்ரவர்த்தித் திருமகன் சீதாபிராட்டியோடும் லக்ஷ்மணப் பெருமாளோடும் சுயம்புமூர்த்தமாய்த் தானே தோன்றியிருக்கிறார். இந்த ஸ்தலத்தின் பெருமையை பிரம்மருத்திர இந்திராதிகளாலும் புகழ்ந்து சொல்லுதற் கருமையேயாயின், நான் புகழ்வது எங்ஙனம்? நீங்கள் நல்ல புண்ணியம் செய்தவர்களாதலால் பத்திராசல ராம சேவை உங்களுக்குக் கிடைத்தது" என்று சொல்லி, ராமத்தியானம் செய்துக்கொண்டு கௌதமி நதிக்குச் சென்று தீர்த்தமாடித் தனது கர்மானுஷ்டானங்களைச் செய்து, சன்னிதிக்கு மலையேறிச் சென்று பகவானைச் சேவித்துவிட்டு வந்து, தனக்கென்று அவ்வூர் கிராமாதிகாரியால் விசித்திரமாக அலங்கரிக்கப்பட்ட வோரழகிய மாளிகையில் போய் தங்கினார். சிரஸ்ததார் தனது எஜமானனாய் வந்திருக்கும் கோபன்னனைக் காண வந்து, அவருக்கு புஷ்ப ஆரம் சூட்டி, எலுமிச்சம்பழத்தைக் கையில் கொடுத்து முன்னே நிற்கவும், பக்கத்திலுள்ளவரால் தனது தாலுக்கா உத்தியோகஸ்தர்களில் தலைமை உத்தியோகஸ்தரென்று தெரிந்து, அவருக்கு மரியாதை கொடுத்து உட்காரச்சொல்லி, தான் போஜன முடித்துக்கொண்டு தாலுக்காவிற்குச்சென்று, ஸிரஸ்ததார் வசமிருக்கும் தன் பதவியை ஏற்றுக்கொண்டு நாள்தோறும் காலந்தவறாது கச்சேரிக்கு செல்வதும், நீதியாய் குற்றவிசாரணை செய்வதும், சர்க்கார் நிலவரிப் பணங்களை இருசால் தவறாமல் இதமாய்த் தனது கீழ் உத்தியோகஸ்தர்களைக்கொண்டு வசூல்செய்து கஜானாவில் நிரப்பி ஆகுருக்கு வாய்தா தவறாமல் அனுப்புவதும், ஜனங்களிடத்தில் மிகவும் அன்பாய் நடந்துகொள்ளுவதுமாய், தனது உத்தியோகத்தை யாவரும் கொண்டாட நடத்தி வந்தார். இதற்கு இடையிலேயே தனது பல்லக்கைத் தனது சேவகர்களிடம் அனுப்பித் தனது மனைவியான காமாம்பாளைக் குழந்தையுடன் கொல்லகொண்ட

பல்லாவிலிருந்து பத்திராசலத்திற்கு வருவித்துக்கொண்டு மிக்க களிப்போடு தனது மனைவி மைந்தனுடன் ராமத்தியானம் பத்திராசல ராமசேவை இவைகளுக்கும் விக்கினமன்னியில், தனது உத்தியோகத்தையும் சரிவர நடத்தி, தானிஷாவின் அன்பை முழுதும் கொள்ளைகொண்டார்.

இவர் வெளியூருக்குச் சென்று, அங்கு நடக்கவேண்டிய வேலைகளையெல்லாம் நடந்துகொள்ளும் முறையிலிருந்தே பத்திராசலத்தில் நடைபெறும் உத்தியோகத்தையும் கவனித்து வந்தார். சிறிது நாளில் இவருடைய குணம் ஒழுக்கம் நீதிமுதலியவைகள் பத்திராசலம் தாலுக்கா முற்றும் பரவிவிட்டன. அந்த தாலுக்காவிலிருக்கிற மிராஸ்தார்களோ, நிலச்சுவான்களோ யாவரும் இவரிடம் அளவுகடந்த விசுவாசமுடையவராய், இவரையே தங்கள் அரசனாகவும், தெய்வமாகவும் நினைந்து வந்தார்கள். இவரும் அவர்களைத்தான் பெரிய உத்தியோகஸ்தர்கள் என்னும் நினைப்பு ஒரு சிறிதுமில்லாதவராய், சிலரைத் தன் சிநேகிதர்களாகவும், சிலரைத் தனது சகோதரராகவும், சிலரை மாமன் பாட்டன் முறைவைத்தும் நேசித்து வருவதால், இவர் செய்யவேண்டிய காரியங்களை அவர்களே இவரிடம் வராமல் தாங்களே நடத்திவருவார்கள். அநேகமாக இவர் குடிகளுக்கு ஒற்றுமைவளர்ந்தோங்கும்படி செய்துவந்ததினால், அந்த தாலுக்காவில் குற்ற வழக்கு விசாரணை குறைந்தேபோயின. இப்படி வெகு கௌரவமாய்த் தனது உத்தியோகத்தை நடத்திவருங்காலத்தில், தனது தாலுக்காக்களிலுள்ள ஒவ்வொருகிராமத்தவர்களும் பத்திராசலத்தின் மகிமையையும், அந்த தீர்த்த கட்டத்தின் பிரபாவத்தையும், சுயம்புவாய் உதித்த ராமபத்திரருடைய பெருமையையும், அவர் திருவடிகளில் பக்தி செய்யவேண்டிய மார்க்கத்தையும், அடிக்கடி சொல்லி, அவர்களைப் பத்திராசலத்திற்கு வரும்படிக்கும், ராம சேவை செய்யும்படிக்கும் செய்துவந்தார்.

இவர் இதுபோல் செய்துவந்ததால், சிலநாளைக்குள்ளே அந்த தாலுக்காவிலுள்ளவர்கள் எல்லோரும் ராமபக்தர்களாய் ஆய்விட்டார்கள். சர்க்கார்பணம் யாவும் வாய்தா தவறாமல் மற்ற தாலுக்காக்களிலிருந்து வருவதற்கு முந்தியே பத்திராசலம் தாலுக்காவிலிருந்து ஆகுருக்கு பணம் வந்துசேருவதைக் கண்டதும், அக்கன்னாவும் மாதன்னாவும் தானிஷாவிடம் பத்திராசலம் தாலுக்கா தாசில்தாரரான கோபன்னவைப் பற்றிப் புகழ்ந்தும், அவன் நீதிஸ்தலத்தில் நியாயமாய்ச் செய்யும் தீர்ப்பினால் நியாயம் வழங்கப்படுவதால் அந்த தாலுக்காவின் வழக்குகள் மாத்திரம் நமது மேல்விசாரணைக்கே வருவதில்லை யென்றும் சொல்லிக்கொண்டிருந்தார்கள். இவர்கள் இதுபோல் சொல்லிக்கொண்டிருக்கும் பொழுது, பத்திராசலத்தில் கோபன்னவானவர், பத்திராசல ராமன் சன்னதிக்குப் போய் அந்த சன்னதியிலுள்ள

திருப்பணிகள் இலமாயிருப்பதைக்கண்டு, இந்த திருப்பணி கைங்
கரியம் செய்தவர்கள் யாரோ! எவ்வளவு காலமாயிற்றோ! இன்
னும் சிறிது நாளில் இந்த கட்டடங்கள் விழுந்துவிடும்போலிருக்
கிறதே! நமது காலத்திலேயே இந்த திருப்பணிவேலை முடிந்தா
லன்றி, வேறு யார் சிரத்தையோடு செய்யப்போகிறார்கள்? கட்
டடவேலை இலேசானதா? இதை அன்போடு யார்கட்டி முடிக்கப்
போகிறார்கள்?' இன்னும் இதே கவலையாகத் தன் வீட்டிற்கு வரு
வார். இப்படியே இவர் உள்ளம் பூராவும் பத்திராசல ஆலயத்
திருப்பணியிலேயே பதிந்து பதிந்துகிடந்ததினால், முந்தி திருப்
பணி செய்தவர் யாரென்றும்; அவர் அத்திருப்பணி செய்வதற்கு
முன் எப்படியிருந்ததென்றும் அறிய ஆசைகொண்டார். இந்த
ஆசைக்குச் சாதகமாகத் தான் திருவாராதனம் பண்ணிக்கொண்
டிருக்கும்பொழுது, அந்த பத்திராசலத்தில் பிறந்தவரும் சமஸ்
கிருதத்திலும் ஆந்திரபாஷையிலும் வல்லவராகிய சகலசாஸ்திர
பண்டிதரென யாவரும் கொண்டாடும் சாமசாஸ்திரி யென்பவர்,
கோபன்னவுடைய வீட்டிற்கு வந்தார். கோபன்னாவானவர் சாஸ்
திரிகளைக்கண்டதும், வரவேண்டும் என்று உபசரித்து அழைத்து
ஒரு ஆசனத்தில் உட்காரச் செய்து, "சுவாமி! தங்களையே இந்த
பத்திராசலத்தி லுள்ளவர்கள் யாவரும் பண்டித சிரோமணி
யென்று கொண்டாடுகிறார்கள். எனக்குத் தங்களால் ஆகவேண்
டிய ஒரு காரியமிருக்கிறது. அதை நான் சொல்லுகிறேன். தயவு
செய்து கேட்டு அதன் உண்மையைத் தெரிவிக்கவேண்டும்" என
இரக்கமாய்க் கேட்டார். சாஸ்திரிகள் "எசமானே! என்னிடம்
என்ன விஷயத்தைக் கேட்கவேணு மென்றாலும் கேளுங்கள்.
எனக்குத் தெரிந்தமட்டும் சொல்லுகிறேன்" என்றார்.

சாஸ்திரியார் சொல்லிய இந் நன்மொழியைக் கேட்டதும்
கோபன்ன புளகாங்கித மடைந்து, "சுவாமி! நான் தங்களைக்
கேட்கப்போகிறது வேறொன்றுமில்லை. இந்த பத்திராசலமானது
புராதன ஸ்தலமென்றும் சீதா ராம லக்ஷ்மண மூர்த்திகள் சுயம்பு
மூர்த்திகளென்றும் தெரிகிறது. இந்த மூர்த்திகளை ஆதியில் கண்
டவர் யாரென்றும், கண்டபின் இந்த ஆலயத்தைக் கட்டினவர்
கள் யாரென்றும் தெரிந்துகொள்ள மிகுந்த ஆசையுள்ளவனாய்
இருக்கிறேன். அதை மாத்திரம் தயவுசெய்து எனக்குத் தெரி
விக்கவேண்டும் எனச் சொல்லினார். சாஸ்திரியார் "அப்படியா!
ஆனால் சொல்லுகிறேன் கேள். 'நீர் பத்திராசலத்தின் பிரபாவத்
தைக் கேட்டிருப்பீர். ஸ்ரீராமச்சந்திரன் சீதா லக்ஷ்மண சமேத
ராய் இந்த பத்திராசலத்தில் எழுந்தருளி நெடுநாளான பின்பு,
இந்த ஊரிலே பிராமண குலத்திலே பிறந்தவராய், ராமபக்தி
யிலே சிறந்தவராய், மிக்க ஏழ்மை உடையவராய், தன் மகளு
டன் உபாய ஜீவனம் செய்துவரும் நாளில் ஓர்நாள் இரவிலே
ஸ்ரீராமச்சந்திரன் சுப்பக்காவின் கனவிலே தோன்றி, "ஏ பெண்

கள் நாயகமே!' நான்தான் பத்திராசல பர்வதத்தில் சீதா லக்ஷ்
மண சமேதனாயிருக்கும் ராகவன். இந்த மலை சிகரத்தில் மறைந்
திருக்கிறேன். நீ இந்த ஊரார்களுக்குத் தெரிவித்து புதர்களைத்
திருத்தி என்னை வெளியில் யாவரும் சேவிக்குமாறு செய்து,
ஆரண்யமாயிருக்கும் மலையில் வழியுண்டாக்கி, எனக்கு நீயே திரு
வாராதனை பண்ணிவந்தால் உனக்கும் பரமபதம் தருகிறேன்"
எனத் தெரிவித்து மறைந்தார்.

இவள் இவ்வாறு சொர்ப்பனத்தில் கண்ட விஷயத்தை,
சொர்ப்பனம் என்று விட்டுவிடாது, பகவன்னியமனம் என்று
நினைத்து பொழுது விடிந்ததும், ஒவ்வொரு வீடாகச்சென்று
தான் கண்ட சொர்ப்பனத்தைச் சொல்லி நீங்க ளெல்லோரும்
வாருங்கள். ஸ்ரீ ராமபிரானை சேவிக்கலாமென்று யாவரையும்
தன்னோடழைத்துக்கொண்டு பத்திராசல சிகரத்திற்குச் சென்று
சிகரத்தை யடைந்து பார்க்க, மூன்று விக்கிரகங்களின் சிரசு
மாத்திரம் தோன்றுவதைக் கண்டு, சுற்றிலும் அடர்ந்தி
ருந்த செடி கொடிகளை அறுத்தெறிந்து விட்டு, திவ்விய மங்
கள விக்கிரக சொரூபமாய் எழுந்தருளி யிருக்கும் ஸ்ரீராமச்
சந்திர மூர்த்தியைச் சேவித்து அந்த ஊரிலுள்ளவர்கள் யாவ
ரும் அறாத மகிழ்வடைந்தவர்களாயிருக்க பகவானைக் கண்டு
சாஷ்டாங்கமாய் சேவித்து பகவானுடைய நியமனப்படி திருவா
ராதனத்தைத் தானே செய்துவந்தாள். ஏனென்றால், அக்காலத்
தில் இந்தவூரில் பிராமணவீடு ஒன்றுதான் உண்டு. அந்த வீட்டி
லும் ஆண்மக்களில்லை. தாயும் மகளுமான இந்த இருவரே பக
வானுக்கு திருவாராதனை செய்ய வேண்டியதாயிற்று. அப்
பொழுது அந்த ஊரிலிருந்த கிராமத்தலைவனான பத்திரரெட்டி
என்பவன் ஒரு மண்டபம் கட்டி மூன்று மூர்த்தங்களையும் எழுந்
தருளப்பண்ணி, தாமிரத்தால் மூன்று விக்கிரகங்களையும் வார்த்து,
பல வேதியர்களுக்கு தெரிவித்து சம்ரோக்ஷணை செய்துவைத்
தான். ஏதோ பூசைக்குக் கொஞ்சம் திரவியத்தை ஸ்ரீராமசந்
திரன் பேரால் பதிவுசெய்துவர தம்மக்கள் பூசையை நடத்தி
பக்கத்து ஊர்களில் சென்று சில திரவியம் சேகரித்து பிரம்மோற்
சவமும் நடத்தி வந்தனன். இவனுக்கு அந்தியகாலம் வரும்
பொழுது நித்தியசூரிகள் எதிர்கொண்டழைக்க பரமபதத்திற்
சென்று பரமபதநாதனை சதா சேவை செய்துகொண் டிருந்
தான். இதற்குப்பின் பல்வராட்சிகாலத்தில் பல்லவராயன்
என்பவரால் இந்தப் புராதன கட்டடங்கள் கட்டப்பட்டது. இது
பத்திராசல புராணமென்னும் இந்த ஊர்ஸ்தலபுராணத்தில்
சொல்லப்பட்டிருக்கிறது என்று சாஸ்திரிகள் அதியோடந்த
மாகச் சொல்லினர். கோபன்ன இவ்விருத்தாந்தங்களைக் கேட்டு
சாஸ்திரியாரைப்பணிந்து, "சுவாமி! எனக்கு நெடுநாளாகத்
தெரிந்துகொள்ள வேண்டுமென்றிருந்த இந்த புராதன விஷ

யத்தை உம்மால் நான் தெரிந்து கொண்டேன்" என்று சொல்லி விட்டு அவருக்கு ஒரு சோடி சால்வையைச் சன்மானமாகக் கொடுத்து அவரைச் சேவித்து அனுப்பிவிட்டுத் தான் தனியே யிருந்து கீழ்வருமாறு சிந்திக்கலானார்.

"ஒருவன் செல்வமுடையவனாக யிருந்தால், அவன் உலகமுள்ளளவும் அழியாத பொரு தருமம் செய்யவேண்டும். மடம் தடம் சோலை அன்னசத்திரம் முதலிய தருமங்களைச் செய்து, தான் இறந்தும் தன்னுடைய பெயர் என்று மழியாதிருக்க தருமஞ்செய்கிறான். இது இறந்ததாயினும் சன்மம் மாத்திரம் இந்தத் தருமம் செய்கிறவர்களை விட்டு ஒழியவில்லை. புண்ணியபலன் அனுபவிக்கும் காலம்வரை சொர்க்கானுபவம் செய்து மறுபடியும் பூமியில் பிறக்கிறான். பிறவிக்கு ஏதுவாகிய தருமங்களைப் பார்க்கினும், மோக்ஷத்திற் கேதுவாகிய தருமமிருக்கிறது. மோக்ஷமென்பதை ஒருவன் அடையவேண்டின், அவன் தியானம் செய்யவேண்டும். அர்த்த பஞ்சகஞானமுடையவனா யிருக்கவேண்டும். வைராக்கிய பக்தி வேண்டும் என்பது போல் ஈஸ்வர கைங்கரியமும் ஒன்று யிருக்கிறது. அதுவும் உடலால் செய்வது பொருளால் செய்வது என கைங்கரியங்கள் இரண்டு. உடலால் செய்யும் கைங்கரியம்; திருவிளக்கிடுதல், திருமாலைக் கட்டிச்சாத்தல், திருநந்தவன கைங்கரியஞ்செய்தல், திருத்துழாய் பறித்து சமர்ப்பித்தல் போன்ற கைங்கரியமாகிறது. பொருளால் செய்யும் கைங்கரியம்; பகவானுக்கு சன்னதி கட்டல் என்று மதில், கோபுரம், துஜஸ்தம்பம், மகாமண்டபம், அர்த்த மண்டபம், கர்பக்கிரகம், விமானம், தாயார் சன்னதி, ஆழ்வாராசாரியர்கள் சன்னதி இவைகளைக் கட்டி மகா கும்பாபிஷேகம் நடத்தி திவ்யாபரணங்களால் பகவானை அலங்கரித்து உற்சவாதிகளால் பகவானைத் திருப்திசெய்வது பொருளால் செய்யும் கைங்கரியமாகிறது. உடலால் செய்யும் கைங்கரியமும் பொருளால் செய்யும் கைங்கரியமாகிய ஆலயமில்லாதகாலத்தில் போதிய வளவு செய்யவொண்ணாது. இந்த பெரிய கைங்கரியங்களெல்லாம் செய்தவர் பெரும்பாலும் மன்னவராகவே யிருக்கிறார்கள். இந்தகாலமோ இந்திய மன்னவர்களாய் பெரிய பெரிய ஆலயங்களைக் கட்டித் தனது குடிகள் உஜ்ஜீவிக்கக் கருதிய காலமில்லாது மகமதிய ராஜ்யமாய் பூர்வீக ஆலயங்களை இடிப்பதும் விக்கிரகங்களை அரண்மனை அந்தப்புர நங்கையர்களுக்கு விளையாடும் பொம்மைகளாகக் கொண்டுபோய்க் கொடுக்கும் காலமா யிருக்கிறது. ஆதலால், நாம் செய்யவேண்டியது ஒன்றுதானிருக்கிறது. முன் அரசாங்கத்திலிருந்து ஆலயங்கள் கட்டியதுபோல நாமும் அரசாங்கப் பணத்திலிருந்தே இந்த ஆலயத்தைக் கட்டுவோம். இதனால் தானிஷா கொலைக்குற்றம் சாட்டி தண்டித்தால் உடனே எனக்கும் பரமபதம் கிடைக்கும். வேறு சிறையில் வைத்து ஹிம்

சித்தாலும் அதையும் பொறுத்துக்கொண்டு பகவானை சவுத்தியம் பண்ணுவது என்று தீர்மானித்துக் கொள்வோம். இருக்கட்டும். முதலில் சில சிற்பிகளை வரவழைத்து இந்த ஆலயத்தை புனருத்தாரணம்செய்ய கணக்கெடுக்கவேண்டும்" என அவருக் கவரோ மனதில் திடப்படுத்திக்கொண்டு தன் சிநேகிதர்களிடம் "நல்ல சிற்பிகள் எந்த ஊரிலிருக்கிறார்கள்? அவர்களை வரவழைத்தால் என்ன சிலவாகும்?" எனக் கேட்டுத் தெரிந்துகொண்டு அவர்களுக்குத் தக்க மனிதர்களை அனுப்பித் தன்னிடம் வரும்படிசெய்து அவர்களையழைத்துக்கொண்டு பத்திராசல மலை ஏறி சிற்பிகளைப் பார்த்து, "இந்த ஆலயத்தை சாஸ்வதமாகக் கருங்கல் பணியாலே சிறிதாயும் சாஸ்திரோத்தமாயும் மிக்க வனப்புடையதாயும் கட்டுவதற்கு நீங்கள் அச்சுவகுத்து கணக்கெடுத்து இவ்வளவு சிலவாகுமென்பதை எனக்குச் சொல்லவேண்டும்" என்று கேட்டார். சிற்பிகள் அவ்வாறே திருமதில் கோபுரம் துஜஸ்தம்பம் மகாமண்டபம் அர்த்தமண்டபம் கர்ப்பக்கிரகம் விமானம் தாயார் சன்னதி இதுயாவும் நன்றாகக்குறித்து, தச்சு முழப்படி கணக்குப்பார்த்து, ஆறு லக்ஷம் விராகன் மொத்தம் சிலவாகுமென்று சொல்ல, கோபன்னாவானவர் தாலுக்காவுக்கு வந்து ஷராப்பை அழைத்து நேற்றுமாலையோடு கஜானாவில் மொத்தத்தொகை எவ்வளவென்று கேட்க, ஏழுலக்ஷத்து ஐயாயிரம் விராகன் என்று சொல்லி கணக்கையும் காட்ட இது ராகவன் சொத்தே யென்று சந்தோஷத்துடன் சுற்று கிராமங்களிலிருக்கும் மிராசுதாரர்களுக்கும் நிலஸ்வான்தார்களுக்கும் தனது சேவகர்களை அனுப்பி அவர்களை வரவழைத்து அவர்களுக்கு ஆசன மளித்து மரியாதை செய்து, "என்னுடைய நண்பர்களே! நான் இந்த பத்திராசலராமன் சன்னதியை சாஸ்வதமாக கருங்கல்லால் கட்டி முடிக்க உத்தேசித்து, வருகிற சித்திரைமாதம் நான் செய்வதாக உத்தேசித்திருக்கிறேன். நீங்கள் ஒவ்வொரு கிராமத்திலிருந்தும் உங்களுடைய பண்ணைக்காரர்களையும் வேலையாட்களையும் அனுப்பவேண்டும். நீங்களும் வந்திருந்து விசாரணை செய்யவேண்டும். உங்கள் கிராமத்திலுள்ள கல்தச்சர்கள் கோபுரவேலை செய்வோர்கள் யாவரையும் அனுப்புவிக்கவேண்டும். இது ராமகாரியமாதலால், உங்கள் சொந்த காரியமாகப் பாவித்து நடத்தவேண்டும்" எனச் சொன்னார். இதைக்கேட்ட மிராஸ்தாரர்களும் நிலஸ்வான்களும் சந்தோஷத்துடன், "நம்மிடம் பணம் கேளாமல் மனிதர்களைத் தானே கேட்டார் கொடுப்போம்" என்று சொல்லி, தங்கள் எஜமானை கோபன்னாவிடம் தங்களுக்குச் சிரமமில்லாமலே திருப்பணிகைங்கரியத்தை நாங்களே பார்த்துக் கொள்ளுவோமென்று சொல்லி, திருப்பணிக்காக தான் செய்யவேண்டிய தினத்திலேயே ஆயிரக்கணக்கான வேலையாட்களும் வந்து வாளம் வெட்டி விரைவாக வேலையைச் செய்ய ஆரம்பித்தார்கள்.

இவர்கள் சொல்லியதுபோலவே ஒவ்வொரு கிராமங்களிலிருந்து வந்த கல்தச்சர்கள் திருப்பணி வேலைசெய்யும் சிற்பிகளோடு பல மாதங்கள் செய்யவேண்டிய வேலையைச் சில தினங்களிலே செய்து விரைவாய் முடித்தார்கள். ஆலயம் பூராவும் கட்டி முடிந்தது. சம்புரோக்ஷணைக்கு தினம் வைத்து கணக்கைப் பார்க்க சிற்பிகள் தெரிவித்தபடி ஆறுலக்ஷம் விராகன் திருப்பணிக்கு செலவாயதென்று தெரிந்தும் மீதமிருக்கும் ஒருலக்ஷத்தி ஐயாயிரத்தில் லக்ஷம் விராகனை திருவாபரணத்திற்கும், சன்னதி திருவாராதன பாத்திரங்களுக்குமாகச் செய்யச் சொல்லி கொடுத்துவிட்டு, மீதமிருக்கும் ஐயாயிர விராகனை சம்புரோக்ஷணைக்கென்று வைத்துக்கொண்டு தனது சகாக்களான பெரிய மனிதர்களுக்கு கிராமங்கள் தோறும் ஆளனுப்பி அவர்கள் யாவரையும் வருவித்து உங்கள் கைங்கரியமும் இதில் சேரவேண்டுமென்று சொல்ல, அவர்கள் ஒவ்வொருவரும் கும்பாபிஷேகத்திற்கும் ததியாராதனத்திற்கும் வேண்டிய ஒவ்வொரு சாமான்களுக்கு தாங்கள் தாங்களென்று ஒப்புக் கொண்டார்கள். கும்பாபிஷேகமும் வெகு விமரிசையாக ஐந்துநாள்வரை சமமென்றும் பாட்டுக்கச்சேரியென்றும் மேளக்கச்சேரியென்றும் இப்படி கோலாகலமாய் நடந்து கும்பாபிஷேகத்தன்று இரவு ராமச்சந்திரபகவானைப் பட்டாபிஷேகக்கோலமாய் அலங்காரம் செய்து திருவீதியெழுந்தருளப்பண்ணி, எல்லோரும் சேவித்து இன்புறச் செய்து கும்பாபிஷேகம் பூர்த்தியாயிற்று.

ஸ்ரீராமச்சந்திரனுடைய திருவாபரணத்திற்கென்று தனியாய் எடுத்துவைத்த லக்ஷம் விராகனைத் தக்க பெரிய மனுஷர்கள் கையில் கொடுத்து செய்யச் சொல்லி, செய்து முடிந்ததும், ஸ்ரீராமனுக்கு வைரமுடி; பிராட்டிக்கு கோணக்கொண்டை; இளையபெருமாளுக்கு நவமணிக் கிரீடம்; பிராட்டிக்கு சடை நாகம் சடைபில்லை விந்துசரம்; சந்திரபிரபை; சூரியபிரபை; நெத்திச்சுட்டி; பட்டுக்குச்சு; வைரக்கம்மல்; வைரமூக்குத்தி; புலாக்கு; ஜிமிக்கை; கண்டசரம்; சரப்பளி, மாணிக்கப்பதக்கம்; தோள்வளை; கடகம்; காப்பு; கொலுசு; பாஜிபந்து; ஒட்டியாணம்; பவளத்தாவடம்; காலுக்கு தண்டை; சதங்கை கொலுசு; பாதசரம் முதலியதும், ஸ்ரீராமனுக்கும் லக்ஷ்மணனுக்கும் கலிக்கத்துராய்; முருகல்; வைரக்கடுக்கன்; திலக்கல் திலகம்; கண்டாபரணம்; முத்துமாலை; அத்திப்பதக்கம்; மகாணிப்பதக்கம்; சரப்பளி; வைரமகரகண்டி; மாணிக்கமாலை; மரகதமாலை; தோள்வளைகள்; பாஜிபந்து; கடககங்கண தோடா; காப்பு; கொலுசு; திருக்கரத்திற் கிசைந்த நவரத்தின தனுசு; நவமணிப்பாணம்; அரைப்பட்டை; தண்டை; மூவருக்கும் ஸ்வர்ணகவசம் இவைகளுடன் வெள்ளியிலும் தங்கத்திலும் செய்த திருவாராதன பாத்திரங்கள் யாவும் வந்ததும், மேளவாத்தியத்தோடு நகர்வலமாக ஆபரணங்களையும் திருவாரா

தனப் பாத்திரங்களையும் சன்னதிக்குக் கொண்டுபோய் ஸ்ரீராமனுக்கும் சீதாபிராட்டிக்கும் லக்ஷ்மணனுக்கும் அலங்காரம்செய்து, திருவாபரணங்களைச் சாத்தி, திருவாராதன பாத்திரங்களைச் சமர்ப்பித்து அன்று ஒரு மகோத்சவம் நடத்தி, பெரிய ததியாராதனமும் செய்து களிப்புற்று, "என் ஜென்மமின்றுதான் சாபல்லியமாயிற்று. எனது உத்தேசமும் பலித்தது. இனி எதுவரினும் வரட்டும்" என்று மகா மனோதிரத்துடன் கோபன்னுவானவர் ராமத்தியானபரராய் பத்திராசலத்தில் எழுந்தருளியிருந்தார்.

இங்கிப்படி யிருக்க, ஐதராபாத்து ஆகூருக்கு மற்றைய தாலூக்காக்களின் கிர்வைப்பணம் பூராவும் வந்துவிட்டது. பத்திராசலம் தாலுக்காவின் பணம் மாத்திரம் வாராதது கண்ட அக்கன்னா மாதன்னாவென்னும் இருவரும் "இது என்ன விபரீதமோ தெரியவில்லை. மற்றைய தாலுக்காக்களுக்கெல்லாம் முதலில் வந்துகொண்டிருந்த பத்திராசலம் தாலுக்கா பணம் இந்த வருஷம் இவ்வளவு நாளாகியும் வந்து சேராத காரணம் என்ன? என்ன ஆபத்தில் சிக்கிக்கொண்டாரோ தெரியவில்லையே? என்ன இருக்கும்" என யோசித்து, தானிஷாவுக்குத் தெரியாமலே தன்னிடம் அந்தரங்கமான தூதனொருவனை அழைத்து, "நீ இங்கு நின்றும் பத்திராசலத்திற்குப் போய் எங்கள் க்ஷேம சமாசாரங்களைச் சொல்லி, கிஸ்திபணம் வாராத காரணத்தை விசாரித்துக்கொண்டு சீக்கிரம் வந்து சேர்" எனச் சொல்லி அனுப்பினார்கள். தூதன் காற்றினும் கடிய வேகமாய்ப் பத்திராசலம் போய்ச்சேர்ந்து கோபன்னாவைக் கண்டு, தான் ஐதராபாத்திலிருந்து வந்தவனென்றும், உனது மாமாவாகிய மந்திரிகளால் அனுப்ப வந்தேன் என்றும் சொல்லி, அவர்கள் க்ஷேம சமாசாரமும் சொன்னான். கோபன்னுவானவர் தூதனுடைய வார்த்தையைக் கேட்டதும் "இவன் நமது மாமாவினால் ஏவப்பட்டு வந்தவனே. நாம் சர்க்கார் பணத்தைச் செலவு செய்ததை உணர்ந்து, மந்திரி நிலையில் என்னை விசாரித்து வருமாறு எனது மாமா இருவரும் இவனை அனுப்பினார்கள்" எனத் தெரிந்துக்கொண்டு, "நீ ஐதராபாத்திலிருந்து என்ன காரியமாகவந்தாய்? அவர்கள் உன்னை அனுப்பிய காரணம் என்ன? உண்மையைச்சொல்" எனக்கேட்டார். தூதுவன், "ஐயா! தங்களிடம் தான் வந்தேன். இதற்குமுன்னெல்லாம் மற்றைய தாலூக்காக்களின் பணம் வருவதற்கு முந்தியே உம்முடைய பணம் ஆகூருக்கு வந்துவிடுமென்றும், இந்த வருஷம் சர்க்கார் கிஸ்தி இன்னும் ஆகூருக்கு வாராத காரணம் என்ன என்றும், தெரிந்துகொண்டு வரும்படி உமது அம்மான் இருவரும் என்னை இங்கு அனுப்பினார்கள். உம்முடைய பணம் ஆகூருக்கு வாராத காரணமென்ன? அதை தயவுசெய்து தெரிவிக்கவேண்டும்" எனப் பிரார்த்தித்தான்.

கோபன்னு இவ்வார்த்தையைக் கேட்டதும், சிறிதும் அஞ்சாமலும், தன் தலை போய்விடுமே என்று எண்ணாமலும், முன்னமே இவைகளெல்லாம் வருமென்று தெரிந்தவராதலால், தெளிவான முகத்தோடு "தூதுவனே! சர்க்கார்பணம் ஒரு தம்படிகூட 'அநுவசியமான செலவாய்விடவில்லை. நல்ல வித்தை நல்ல நிலத்தில் விதைத்துப் பயிர் செய்வது போல, தானிஷாவின் பொக்கிஷம் பூராவும், செல்வ பாக்கிய தானியத்தைக் குவிக்கும் தானியச் சேர்களாக்குவதற்கு நல்ல நிலம் பார்த்து பூரா பணத்தையும் விதைத்து இருக்கிறேன். நன்றாய் முளைத்து விட்டது. இரவும் பகலும் ஒருவன் அந்த வயலின் நடுவேயே மனைவியோடும் தம்பியோடும் காத்து நின்று தண்ணீர் பாய்ச்சிக்கொண்டிருக்கிறான். அவன் பாய்ச்சிவரும் தண்ணீர் நம் வயலில் பாய்ச்சுகிற தண்ணீர் போன்றதன்று. நல்ல கருணை நீராகுமது. கூடியசீக்கிரம் அந்த செல்வநிலம் விளைந்து விடும். அம்மட்டே தானிஷாவின் பொக்கிஷங்களில் கொணர்ந்து கொட்டவேண்டியதுதான், பொக்கிஷங்கள் பூராவும் நிரம்பிவிடும்" என்று சொன்னார். இதுபோல் இவர் சொல்லியதைக் கேட்ட தூதுவன், "இவர் சொல்லுவது நமக்கொன்றும் விளங்கவில்லையே. தானியங்களை சாகுபடி செய்வதுபோல, செல்வத்தை சாகுபடி செய்தவன் ஒருவனிருந்தானென்று நான் கேட்டதுமில்லையே! இவருக்கு சித்தப்பிரமை ஏற்பட்டுவிட்டதோ! அதனால் சர்க்கார் கிஸ்தி ஆஜுருக்கு வர தாமதமாயிற்றே! அல்லது இவர் சொல்லியபடியே பணத்தைத் தான் விதைத்துவிட்டாரோ! ஒன்றும் தெரியவில்லையே" எனச் சிந்தித்து, "சுவாமி! பாதுஷாவின் செல்வத்தை யெங்கேயோ விதைத்திருக்கிறேன். அது சாகுபடியாகி நன்றாய் முளைத்திருக்கிறது. என்றுசொல்லுகிறீரே எந்தவிடத்தில் விதைத்திருக்கிறீர்? அந்த நிலத்தை நான் பார்க்கலாமா" எனக்கேட்டான். கோபன்னு அவனைப் பார்த்து, "என்னுடன் வா. அந்த நிலத்தை உனக்குக் காட்டுகிறேன்" எனக் கூறி, அவனை அழைத்துக்கொண்டு பத்திராசல மலையின்மேலேறித் தன்னால் சர்க்கார் பணத்தைக்கொண்டு கட்டிய ஸ்ரீராமன் சன்னிதியைக் காட்டி, "பார்த்தாயா பயிர் எவ்வளவு நன்றாயிருக்கிறது?" எனச் சொல்லியதுமன்றி, "இந்த மலையாகிய நிலத்தில்; தானிஷாவின் சொத்தாகிய விதையை விதைக்க, அந்த விதை பயிராகி ஆலயமாய்த் திருமதிலென்றும் கோபுரமென்றும், துஜஸ்தம்ப மென்றும், அர்த்த மண்டபமென்றும், கர்பக்கிரகமென்றும், பெயருடையதாய்ச் செழித்து, பரந்த பயிராயிருக்கிறது. ஆலயநடுவில் சீதா லக்ஷ்மண சமேதனாய் மத்தியில் நின்றுக்கொண்டிருக்கும் ஸ்ரீராமனென்னும் உழவன் இந்த நிலத்திற்குக் கருணை நீர் பாய்ச்சிக் கொண்டிருக்கிறான். இன்னும் சிறிது நாளையில் நன்றாய் விளைந்துவிடும் விளைந்ததும் ஒன்றுக்குப் பத்தாக ஆஜுருக்கு சேரவேண்டிய தொகையாகிய

வெள்ளிநாணயத்திற்குப் பதிலாக தங்கநாணயமாய்க் கொண்டு வந்து குவிக்கப் போகின்றான். இதை நீ எனது அம்மான்மாரிடம் சொல்லு" எனக் கோபன்னு சொல்ல, தூதன், "ஓகோ! நிரம்ப நன்றாயிருக்கிறது. சர்க்கார் கிஸ்தியைக் கொண்டு ஆலயத்தைக் கட்டிவிட்டு, "தட்டை விதைத்திருக்கிறேன். விளைந்தவுடன் தருகிறேன்" என்று சொல்லுகிறீர். "இது உமக்கு அழகாயிருக்கிறதா? நீர் சத்புருஷராதலால், பகவானுடைய கைங்கரியத்தில் செலவுசெய்ய உமக்கு மனம்வந்தது. நீர்ஒரு இந்து மன்னவர் காலத்திலிருந்து இதே தாசில்தார் உத்தியோகம் உமக்குக் கிடைத்து, இவ்வாறு கைங்கரியம் செய்திருந்தால், அந்த மன்னவர்கள் உம்மையே பத்திராசல ராமனாகப்பாவித்துப் பணிந்து உமக்கு உபசாரப் பணம்கொடுத்து சுகமாய் ராமபக்தி செய்யும்படி ஆதரிப்பார்கள். ஐயோ! இந்தக்காலம் மகம்மதிய ஆக்ஷியாயிருக்கிறதே? நல்ல விஷயங்களில் செலவு செய்துவிட்டேனென்றால் அவன் கேட்கமாட்டானே? உமக்குக் குரூரமான தண்டனையை விதிப்பானே; இப்படியும் யோசியாது செய்யப்போமோ? ஐயோ" எனத் துதிக்கும்பொழுது, கோபன்னு தைரியமாகவும் உற்சாகமாகவும் தூதுவனைப்பார்த்து, பின் வருமாறு சொல்லுகிறார்.

"தூதுவனே! நான் அரசாங்க நிதியில் எனக்கென்று ஒரு முந்திரி அளவாவது வியாபிக்கவில்லை. அரசன் சொத்தை அரசனிடமே சேர்த்தேனன்றி, வேறு ஒருவருக்கும் ஒரு இம்மியளவு நான் கொடுக்கவும் இல்லை. பதினான்கு உலகத்திற்கும் அரசனாய், சர்வரக்ஷகனாய் விளங்கும் அரசனிடம்தான் இந்த சொத்து பூராவும் ஒப்புவித்திருக்கிறேன். நான் சக்ரவர்த்தி என்றால் எப்படி சக்ரவர்த்தி என்று நீ கேட்டால் சொல்லுகிறேன் கேள். இவன் மாத்திரம் சக்ரவர்த்தியில்லை. இவன் தந்தை அவன் தந்தையென்று முப்பத்திரண்டு தலைமுறையாக சக்ரவர்த்திகளாகவேயிருந்தரசாண்ட குலத்தில் பிறந்தவனுக்கும். ஆக்கலும் அழித்தலும் அளித்தலும் அவன் தொழிலேயாம். அவன் எவ்வரசனுக்கும் மேலான அரசன். எனக்கும் தானிஷாவால் ஏதாவது ஆபத்துவருங்காலத்தில் என்னைக் காக்கவும் காவாது தண்டனைக் காட்படுத்தவும் அவனுக்கு சுதந்தரமுண்டு" எனச் சொல்லினர். இவ்வார்த்தையைக் கேட்டதும் தூதுவன் கோபன்னுவிடம் பேச முடியாது விடைபெற்றுக்கொண்டு ஐதராபாத்திற்குச் சென்று, அக்கன்னு மாதன்னு இருவரையும் பணிந்து, தான் பத்திராசலம் சென்றதும் கோபன்னுவைக்கண்டு ஆஜுருக்குக் கிஸ்தி பணம் வராத காரணம் கேட்டதும், அதற்குக் கோபன்னு ஆலயத்தைக்காட்டி "செல்வம் பூராவும் இதோ இருக்கிறது" என அவர் சொன்னதும், இப்படி சர்க்கார் கிஸ்தியைச் செலவு செய்யலாமா? எனத் தான் கேட்டதற்கு, அவர் தைரியத்தோடும் முக

மலர்ச்சியோடும் பதில் சொன்னதும், எல்லாவற்றையும் ஆதியோடந்தமாகச் சொல்லிவிட்டு தன்னிருப்பிடம் போய்விட்டான்.

அக்கன்னா மாதன்னா இருவரும் தூதன் சொல்லியதைக் கேட்டு கோபன்னாசெய்த காரியத்தை நினைந்து "நமது ராஜுனை தானிஷாவிற்கு நாம் என்னசொல்லுகிறது? அவனை எந்த முறையிலும் காப்பாற்ற முடியாதே? பத்தா, நூறா, சரிப்படுத்தி விடுவதற்கு? ஏழுலக்ஷத்தி ஐயாயிரம் விராகனை எப்படிச் சரிப்படுத்துகிறது? 'யானை கொழுத்தால் தன் தலையில் தானே மண்ணை வாரிப் போட்டுக்கொள்ளும்' என்பதுபோல கோபன்னா, தன் வாயில் தானே மண்ணைவாரி போட்டுக்கொண்டானே? நாம் என்னசெய்கிறது?" என இருவரும் சிந்தித்து அவனைத் தண்டனையிலிருந்து தப்புவிப்பதற்கு ஒரு மார்க்கமும் தோன்றாது வருந்திக் கொண்டிருந்தார்கள். இப்படி இருக்கும்பொழுது, தானிஷாவானவன் தனது தர்பாருக்கு வந்து, ஆகூருத்தியோகஸ்தரைப் பார்த்து, "இந்த வருஷம் சர்க்காருக்கு சேரவேண்டிய கிஸ்தி பூராவும் ஆகூருக்கு வந்து விட்டதா?" எனக் கேட்டான். ஆகூர் உத்தியோகஸ்தர், "அரசர் பெருமானே! பத்திராசலம் தாலுக்காவைத் தவிர, மற்றத் தாலுக்காக்களிலிருந்து ஒரு தம்படி பன்னியில் வந்து விட்டது" எனப் பதில் சொன்னான். தானிஷா, "பத்திராசலம் தாலுக்காவிலிருந்து வரவேண்டிய பாக்கி எவ்வளவு?" எனக் கேட்டான். "ஏழு லக்ஷத்து ஐயாயிரம் விராகன் வரவேண்டியது இருக்கிறது" என்றான். அப்படியா? இவ்வளவு பெருந்தொகையை கோபன்னா என் அனுப்பவில்லை? மற்றைய தாலுக்காக்களுக்கு முந்தியே அவன் தாலுக்காபணம் ஒரு சிறிது குறைவுபடாது வந்து விடுமே? அப்படி வந்துகொண்டிருந்த கிஸ்திபணம் இந்தவருஷம் என் தவக்கப்பட்டது? காரணம்" என்ன என்றான். ஆகூராதிகாரிகள், "அரசே! நாங்கள் முன்னமே பத்திராசலத்திற்குச் சேவகரை அனுப்பிக் கேட்டுவரச் சொன்னோம். கோபன்னா நாங்களனுப்பிய சேவகர்களிடம் சரியான முகாந்தரம் சொல்லி அனுப்பவில்லை. அவர்கள் பணம்போனவழி என்ன என்று அறிய, பத்திராசலம் ராமசன்னதியை பூராவுமிடித்து கருங்கல்லாலேயே பலமாய்க் கட்டிவைத்து ஆறுலக்ஷம் விராகனைத் திருப்பணியில் செலவுசெய்து, ஒரு லக்ஷம் விராகனுக்குத் திருவாபரணங்களும் திருவாராதன பாத்திரங்களும்செய்து முடித்ததாகவும், மீதமுள்ள ஐயாயிர விராகனை சம்புரோக்ஷணைக்காக செலவு செய்தாரென்றும் அவ்வூர் ஜனங்களெல்லாம் சொல்லக் கேட்டு கோபன்னாவால் புதிதாயக் கட்டிய ஆலயத்தையும் பார்த்து விட்டு இன்று தான் சேவகர்கள் வந்தார்கள்" என ஒன்றுகூட விடாது ஆகூராதிகாரிகள் சொன்னார்கள்.

தானிஷா இவ் வார்த்தைகளைக் கேட்டதும், அளவுகடந்த கோபத்தையடைந்தான். அவனிரு கண்களும் கோவைப் பழம் போல் சிவந்தன. சாயமேற்றிய தனது மீசை துடிதுடித்தன. நிமிஷத்திற் கெல்லாம் உறையிலிருந்த வாளை உருவிக்கொண்டு, "கோபன்னாவா இவ்வாறு செய்தான்? மிக்க நல்லவன்போல நம்மிடம் அபிநயித்தது எல்லாம் நமது பொருளை அபகரித்துக் கொள்ளுவதற்கா? நல்லது. நீ அனுப்பிய சேவகர்களெங்கே?" எனக்கேட்டதும், சேவகர்கள் நடுநடுங்கி ஓடிவந்து மண்டியிட்டு சலாம் செய்து வணக்கத்துடன் நின்றார்கள். தானிஷா அவர்களைப் பார்த்து, "நீங்களா பத்திராசலம் போயிருந்தீர்கள்? கோபன்னா என்ன சொன்னான்? நீங்கள் அவனைக் கிஸ்தி பணம் கேட்டீர்களா? அங்கே என்ன நடந்தது?" என ஆக்கிரஹத்தோடு கேட்டான். சேவகர்கள், "அரசே! நாங்கள் தங்கள் சட்டப்படியே ஆகூருக்கு சேரவேண்டிய கிஸ்தி பணத்தை ஏன் இதுவரையில் அனுப்பவில்லை எனக் கேட்டதற்கு அவன், "ஆகூருக்குக் கட்டவேண்டிய பணத்தை நல்ல நிலத்தில் முளைக்கப் போட்டிருக்கிறது. கூடிய சீக்கிரம் அறுவடையாகும். ஆனதும், வெள்ளி நாணயத்திற்குப் பதிலாய்த் தங்க நாணயமாகக் கொணர்ந்து கட்டுகிறேனென்றார். இவர் சொல்லியது ஒன்றும் சரியாயில்லாததினால், அப்பொழுது அந்த ஊரில் சென்று விசாரித்தோம். அவர்கள் "பத்திராசல ராமன் கைங்கரியமாக எல்லாபணங்களையும் செலவு செய்துவிட்டார்" என்கிறார்கள். அதைக் கேட்டுக்கொண்டு தங்களிடம் தெரிவிக்க வந்தோம்" என மிகு பயபக்தியோடு மறுபடியும் மண்டியிட்டு சலாம் செய்து சொன்னார்கள்.

தூதுவர்கள் சொல்லிய வார்த்தைகளைக் கேட்டதும், பாம்பைக்கண்ட சிறிபோல், தானிஷாசீறியெழுந்து, அடங்காக் கோபத்துடன் தனது துருக்க சிப்பாய்கள் இருவரையழைத்து, "நீங்களிந்த நிமிஷமே பத்திராசலத்திற்குப் போய்க் கோபன்னாவைக் கண்டு கிஸ்தி பணம் பூராவும் கொடுத்தால் பெற்றுக்கொண்டு வந்துவிடுங்கள். இல்லையேல், அந்த வாரண்டைக் காட்டி கைதி செய்து என்னிடம் கொண்டுவாருங்கள்" எனக் கடுமையாய்ச் சொல்லி, வாரண்டில் தனது முத்திரை வைத்து சிப்பாய்களின் கையில் கொடுக்க, அவர்கள் சலாம் செய்துவிட்டு வாயுவேகமாக வழி நடந்து குற்ற விசாரணை செய்துக்கொண்டிருக்கும் கோபன்னாவிடம் வந்து, "அரே! பொம்மன் உட்டோ, உட்டோ (எழுந்திரு, எழுந்திரு) நம்மோ ராஜாக்கி சொன்னாயில்லே? கிஸ்தி பணம் இருக்கிறங்கோ? அதை நீகளவு செய்ரா என்று நம்போங்களே அனுப்பினா இல்லே. அரே! நம்பனுக்கு தமில் வரான் இல்லே. இதில் இருக்கிறான் பார்" என்று வாரண்டை அவரிடங் காட்டி அதில் கையெழுத்து போடும்படி சொன்னார்

கள். கோபன்னு சிறிது அஞ்சாது கையெழுத்திட்டு "நீங்கள் இப்பொழுது என்ன சொல்லுகிறீர்கள்? நீங்கள் சொல்லுவது இன்னதென்று எங்களுக்குத் தெரியவில்லை" என்றார். "அரே! பொம்மன் நாங்கள் சொல்றான் இல்லே, கஜானாவிலே இருக்கும் சர்க்கார் கிஸ்தியை நீ திருடிட்டா இன்னு தானிஷா ரூபாய் கேகிறான் இல்லே. என்ன சொல்றே? இஸ்துக்கொண்டு போறான் தம்பொ, என்றார்கள். உடனே கோபன்னுவானவர், தனது பல்லக்கைக் கொண்டுவரும்படி போயிகளுக்குச் சொல்ல, அவர்கள் உடனே பல்லக்கைக் கொண்டுவந்தார்கள். அப்பொழுது சிப்பாய்கள்பார்த்து, "அரே! பொம்மன் பல்லக்கு ஏர்றான்? நில் தும்குகிஸ்திபணம் இருக்கிறான் இல்லே? அதைக்கொடு. இல்லே? நம்மகூட நடந்துவா" என தானிஷாவைப் பார்க்கிலும் மடத்தனமாயும் குரூரமாயும் சொன்னார்கள்.

இந்த மகம்மதிய சிப்பாய்கள் சொல்லிய சுடுமொழியைக் கேட்டதும், கோபன்னுவானவர், "நாம் சர்க்கார் தீர்வைப் பணத்தை வியாபித்துக் கொண்டதாகக் குற்றம்சாட்டி வாரண்டு பிறப்பித்திருக்கிறது. கிஸ்திப்பணத்தைப் பூராவும் கட்டும்வரை நாம் குற்றவாளி குற்றவாளியே" என அவருக்கவரே மனதில் உறுதிப்படுத்திக்கொண்டு, சிறிதும் மனங்கலங்காது, 'எல்லாம் பத்திராசல ராமனுடையதே என நினைந்து அவர்கள் கூடவே நடந்து சென்றார். பத்திராசலம் தாலுக்காவிலுள்ள குடிஜனங்கள் இரண்டு சிப்பாய்களின் நடுவே கோபன்னு தலை கவிழ்ந்துகொண்டு போவதைக் கண்டு, மனம்பொறாதவர்களாய்க் கண்களில் நீர் தாரை தாரையாகச் சொரிய, கைகளை முறித்துக் கொண்டும், முகத்தி லடித்துக்கொண்டும் ஆற்றொணாத் துயரத்துடன், "அந்தோ! இந்த சாதுவானவர் கொடிய வெங்கைப் புலியை யொத்த சிப்பாய்களின் கையில் சிக்கிக்கொண்டாரே! ஸ்ரீபத்திராசல ராமனுக்குக் கண் தெரியவில்லையோ! இந்த பாபிகள் அவரைக்கொண்டு போய் என்ன செய்வார்களோ! என்ன பாடு படுத்துவார்களோ! அவர்மனம் என்ன வருந்துமோ! மாசற்றமனம் புண்படுவதை ராமனுக்கும் இஷ்டமோ! ஆ! அவர் பாதம் இக்கொடிய வெய்யிலில் எப்படி நடக்குமோ! பணத்தைக்களவாடிய கள்வரென்று இவரை ஏசுவார்களேயானால் அவர் எப்படி பொறுப்பார்! அந்தோ! இவர் பத்தினியாகிய உத்தமி காமாம்பாள் இவரைப் பிரிந்து தனியாய் வாழ்வாள்! அவர் குழந்தை ரகுபதி தகப்பன் முகங்காணாது எப்படி தவிப்பனோ! கொடிய தானிஷா, இவருக்கு கொலைக் குற்றஞ்சாட்டிக் கொலைஞர்கள் கையில் ஒப்புவிப்பானோ! அல்லது கொடிய சிறையில் வைத்து நிர்ப்பந்திப்பானோ! 'கடவுளை நம்பினோர் கைவிடப்படமாட்டார்' என்னும் முதுமொழி பொய்யாயிற்றோ! இந்த பாபியர்கள் கையில் அகப்பட்டசெய்தி இவர் பத்தினியாகிய காமாம்பாளுக்குத் தெரிந்திருக்குமோ! இவ

ருடைய காலவித்தியாசத்தால் ஆதுருக்குச் சேரவேண்டிய சர்க்கார் கிஸ்தித்தொகையைத் தனது சொந்தநிதியாகப் பாவித்தார் போலும். நூறு ஆயிரமாகயிருந்தாலும் நாம் வரிவைத்துக் கொடுக்கலாம். எழுலக்ஷத்தி ஐயாயிரம் விராகனை எப்படித் தேடுவது? இந்தவூரைவிற்றாலும் இவர்பட்ட கடனுக்கு ஒரு சிறிது தொகைக்கும் போதாதே? இவருக்காக நம்மில் யாராவது சிறை செல்லுவது என்று துணிந்தாலும், தானிஷா ஒப்பமாட்டானே?" என அந்த நகரத்திலுள்ள குடிஜனங்கள் பேசாதாரும் அழாதாருமில்லை. இவர்கள் அவர் பின்னே ஓடிவருவதையும் கண்ணீர் விட்டழுவதையும் அருகில் சிப்பாய்கள் இருவரும் அவர்களுக்குள்ளே அவர்கள் இந்துஸ்தான் பாஷையில், "இவர் இவ்வூர் குடிஜனங்களுக்கு மெத்த நல்லவரானதால்தான் இவரைக் கண்டு அழுகிறார்கள். இவர் பின்னாலேயே ஓடிவருகிறார்கள். இவர் முகத்தைப் பார்த்தாலே சாதுவாய்க் காணப்படுகிறது" எனப் பேசிக்கொண்டு அவர்களும் அவரிடத்தில் இரக்கமடைந்து இவரை ஒன்றும் வருத்தாது பத்திராசலத்தைக்கடந்து ஐதராபாத்போய்ச் சேர்ந்தார்கள்.

இவர்கள் சென்றதினம் தர்பார் கலைந்து விட்டதால், மறுநாள் கோபன்னுவை நியாயசபைக்குக் கொண்டுவரும்படி இராஜ ஆக்கினை ஏற்பட்டது. அவ்வாக்கினையின்படியே கோபன்னுவை ஒரு பாராவில் காவல் வைத்துவிட்டு, அவ்விரு சிப்பாய்களும் மந்திரிகளாகிய அக்கன்னு மாதன்னு என்னும் இருவரிடம், தாங்கள் பத்திராசலம்போய்க் கோபன்னுவைக் கைது செய்துக் கொண்டுவந்ததையும், காவலில் வைத்திருப்பதையும் தெரிவித்து விட்டுப் போய்விட்டார்கள். காவலில் வைக்கப்பட்ட கோபன்னு தனது நிலையை நினைந்து பலவாறாக, "நான் நினைத்ததுபோலவே இதுவரை நடந்திருக்கிறது. நான் எழுலக்ஷத்தி ஐயாயிரம் விராகன் கிஸ்திதுகையை ஸ்ரீராமன் சொத்தென்று அவன்கைங்கரியத்தில் செலவுசெய்து விட்டதால், தானிஷா என்னைக் கைதிநிலையில் காவலரை வாரண்டுடனனுப்பி என்னை இந்தப் பாராவில் அடைத்து காவலில் வைத்துவிட்டார்கள். என் விஷயத்தில் ராகவன் என்ன நினைத்திருக்கிறானோ அறியேன். தானிஷாவின் சபையில் இராஜாங்கப்பணத்தைக் களவாடிய கள்வனென்று குற்றம் சுமத்தி சிறைக்கூடத்தி லடைப்பானோ! தனக்கு வாய்த்தரக்ஷக ரென்னும் பெயருக்குப் பழுதுவாராமல் தானிஷாவின் மனதில் புகுந்து என்னை இரக்ஷிப்பானோ! அன்றி, தான் நடுவுநிலைமை யுடையவனாய், நீதி செலுத்தும் தனிக்கோ லுடையவனாதலால், தான் தானிஷாவின் செல்வத்தை அபகரித்து தனக்கு அலங்காரஞ்செய்தது குற்றமென்று திருவுள்ளத்தில் நினைந்து, தானிஷாவின் தண்டனைக்குக் கீழ்ப்படிந்திருக்க வேண்டியதுதானென்று நினைத்திருக்கிறானோ அல்

லது இராஜாங்கத்தில் சேர்கிற பொருள்களெல்லாம் தருமமான சொத்தல்ல. குழந்தையில்லாத விதவையின் சொத்தும் பூதங்கள் காத்து, பூமியில் புதைந்திருக்கும் பொருள்களும், பிச்சை யேற்று உண்போனாகிலும், அநாதையாய் தெருத் திண்ணைகளில் இறந்துபோனவனுடைய இடுப்பில் முடிந்திருக்கும் சில்லரையும் தங்கள் கர்மங்களைத் தொலைப்பதற்கென்று சில தருமஸ்தாபனங்களை ஏற்படுத்தி அதற்குரிய சொத்தை பிறரிடம் ஒப்புவித்தால், தருமங்கள் சரியாய் நடவாது. அரசர் பெருமான் பொக்கிஷத்தில் சேர்த்துவைத்தால் சரியாய் நடக்கும் என்று கருதிவைத்த சொத்துக்களும், கள்வரைப் பிடித்து வீட்டைப் பரிசோதனை செய்யும்பொழுது, அவர்கள் வீட்டிலகப்பட்ட திருட்டுச் சொத்து இவையெல்லாம் சர்க்கார் கஜானாவில் இருக்கிறதாதலால், இந்த சொத்தை யெடுத்து எனக்கு ஆலயங்கட்டினனே யன்றி, இவன் தருமவழியாகச் சம்பாதித்த சொத்தையோ அன்றி, பூர்வீகமாக இவன் சந்ததியார்கள் சம்பாதித்து வைத்திருந்த நிதியோ இதை சிலவு செய்து நமக்கு ஆலயங் கட்டவில்லையென்று நினைத்து என்னை இரக்ஷிக்கவேண்டிய தன் பாரத்தை இறக்கிவிட்டாரோ! அப்படியானால் இவரும் சூரியகுலத்திலே தசரத புத்திரராய்த் திருவவதரித்து பொக்கிஷங்களை நிதிகளால் நிரப்பி ஆண்டாரே! இவர் பொக்கிஷங்களில் இம்மாதிரியான பாபசொத்துக்கள் சேராதோ! அந்த சொத்தை இவர் தருமஞ் செய்யவில்லையா! இவர் செய்தால் அது நீதியாய்விடுமா! நான் மாத்திரம் செய்யப்படாதா! இந்த தாசில்தார் உத்தியோகம் இருக்கும் வரை நான்தான் பத்திராசலத்திற்கு அரசன். அந்த நிலையில் சிலவு செய்தால், அது தருமமாகாதா! அன்றியும், அடியவர்கள் என்ன குற்றஞ்செய்யினும் பொறுத்து ரக்ஷிப்பது தனது கடமையெனக் கருதி, அடியவர்களுக்குத் துன்பம் வரும்பொழுதெல்லாம் விரைந்து ஆதரிக்கும் கருணைக்கடலான ஸ்ரீராமச்சந்திரன் என்னைமாத்திரம் ஆதரியாமல் விட்டுவிடுவாரா''? என மனம்போனவாறு பேசிக்கொண்டிருக்கும்பொழுது, தானிஷாவின் மந்திரிகளாகிய அக்கன்னா மாதன்னா இருவரும் பாராவை நாடிவர, காவலர்களாகிய சிப்பாய்கள் மந்திரிகளைக் கண்டதும் சலாம் செய்துவிட்டு நின்றார்கள். அப்பொழுது திருவருட் பாராவிற்குள்ளே சென்று, மிக்க துக்கமுடையவராய்க் கோபன்னாவை அடைந்ததும், கோபன்னா தனது மாமன்மார் இருவரையுங் கண்டு வணங்கி நின்றார்.

மந்திரிகளாகிய இருவரும் தனது மருகன் சிறையடைந்திருப்பதா லுண்டாகிய வருத்தத்தை வெளிக்காட்டாது உள்ளே அடக்கி அவரைப் பார்த்து, "நீ அப்பா! என்ன காரியம் செய்துவிட்டாய்? அப்படி லக்ஷக்கணக்கான பொக்கிஷப் பணத்தை ஈஸ்வர கைங்கரியத்தில் செய்துவிட்டாயே? ஒரு விதத்திலும்

உன்னை தப்புவிக்க முடியாதுபோலத் தோன்றுகிறதே. இப்படியும் செய்யலாமா? பொல்லாத துருக்கமன்னனது கொடிய தண்டனைகளுக்குள்ளாய்விட்டாயே? ஐயோ! எல்லாம் தெரிந்த உனக்கு, கஜானா பணத்தை அபகரித்து தருமம் செய்தால் ஆபத்து வருமென்று உனக்குத் தெரியாமலா போய்விட்டது? விதி ஒருவரையும் விடாதென்பதை நன்கு விளங்கச் செய்தனையே" எனப் பலவாறு துக்கத்தோடும் சொல்ல, இவ்வார்த்தைகளைக் கேட்ட கோபன்னா "மாமா! என் மனதில் இப்படிச் செய்வதால் ஒரு குற்றமுங் கிடையாதென்று தோன்றியதால் செய்துவிட்டேன். ஒவ்வொருவனும்ஒவ்வொருகாரியங்களை செய்யும்படி தூண்டுவதும் அவன் பூர்வசென்மத்தில் செய்த புண்ணியபாவங்களின் சம்மந்தமான கர்மத்தால் நடக்கிறது. 'புத்திக் கர்மானுசாரிணி' என்று வாக்கியங்களிருக்கவில்லையா? யான் சிறையிலடைப்பட்டு துன்பப்படவேண்டுமென்னும் கர்மமிருந்தால் அது விடுமா? ஒருக்காலும் விடாது. வருவது வந்தேதீரும். இதற்கு நாம் கவலைப்படுவதால் ஆவதென்ன? நம்மாலாவது ஒன்றுமே யில்லை. யாவும் ஈசன் செயலே எனச் சொன்னார். அக்கன்னா, "அப்பா! நீ சொல்லுவது நியாயமே. ஆயினும், கடவுள் நமக்குப் பகுத்தறிவு ஒன்றைத் தந்திருக்கிறான். இது நல்லது, இது கெட்டது, என்று ஆராய்ந்து அதன் வழியே நடந்தால் ஒரு துன்பமும் வராது. இது சர்க்கார் பணமாயிற்றே? இதை நாம் எடுத்து சிலவு செய்தால் குற்றம் சம்பவிக்குமே என்று இது கூடவா உனக்குத் தெரியாது போயிற்று? இதுவரை நீ பத்திராசலம் தாலுக்காவில் தாசில்தார் உத்தியோகம் செய்ததுபோல மற்றைய தாலுக்காக்களிலோ, அதே பத்திராசலம் தாலுக்காவிலோ வேறொருவர் இவ்வளவு நீதியாகவோ, சர்க்காருக்கு துரோகஞ் செய்யாமலோ, நடந்தவர்கள் ஒருவருமே இல்லையென்று தானிஷாவும் நாங்களும் மனப்பூர்வமாக உன்னை மதித்துப் பேசிக்கொண்டிருந்தோமே? உன்னிடம் தானிஷாபிரபு வைத்திருந்த அன்பையெல்லாம் அடியோடு அழித்துக்கொண்டாயே? ஆயிரமென்றால் உன் விஷயத்தில் தானிஷா பொருட்படுத்தவே மாட்டாரே? ஏழு லக்ஷத்து ஐயாயிர விராகன் என்றால் யாருக்குதான் மனம் சகிக்கும்? உன்னைப்போலொத்த வேறு தாசில்தார் ஒரு விராகனைக் கையாடி விட்டதாகத் தெரிந்தாலும், அந்த விராகனை அவனிடம் வசூலிப்பதோடு, கஜானாபணத்தைக் களவாடினானென்று குற்றம் சாட்டி சிறைத் தண்டனை விதித்துவிடுவான். உன் விஷயத்தில் அவ்வாறு செய்ய தானிஷாவுக்கு மனந் துணியவில்லை. எப்படியாவது உன்னிடமிருந்து பணத்தை வசூலித்துக் கொண்டு அதே தாசில் உத்தியோகத்திலேயே நீ யிருக்கும்படி செய்ய பரிபூரணமான மனமுடையவராய் இருக்கிறார். உனக்கு ஏழு லக்ஷத்து ஐயாயிரம் விராகனையும் கட்ட வழியிருக்கிறதா? அந்த

பணத்தை கட்டினால் கௌரவமாய் உத்தியோகத்திலேயே மறுபடியு மிருந்துகொள்ளலாம்" எனச் சொல்ல, கோபன்னா "மாமா! எனக்கு பத்திராசல ராமனன்றி, வேறு சொத்தில்லையென்று தங்களுக்குத் தெரியாதா? இவ்வாறுயிருக்க, நான் எவ்வாறு ஆகுருக்கு பணம் கட்டுவேன்?" என்றுசொன்னார். இவர் வார்த்தையைக் கேட்ட அக்கன்னாவானவர், மாதன்னாவுடன் கலந்து யோசித்து கோபன்னாவிடம் வந்து "நான் ஒரு வார்த்தை சொல்லுகிறேன் அதைக்கேட்டு அவ்வாறே நடந்தால், உனக்குச் சிறைச்சாலைத் துன்பம் வராது; உனது வேலைக்கும் ஆபத்தில்லை. அதாவது நாங்கள் இந்த மந்திரி வேலையிலிருந்து கோடிக்கணக்காக சம்பாதித்திருக்கிறோம். இதுவரை ஒரு தம்படியேனும் நாங்கள் தருமம் செய்ததில்லை. நீ பத்திராசலம் ராமனுக்கு சர்க்கார் பணத்தைக்கொண்டு விசேஷமாக ஆலயங்கள் கட்டி, திருவாபரணங்கள் செய்து திருப்திசெய்திருக்கிறாய். நீ சர்க்கார்க்குக் கட்டவேண்டிய கிஸ்தி தொகை பூராவும் நாங்கள் கட்டிவிடுகிறோம். நீ அந்த ஆலயங்கட்டிய பலனை எங்களுக்கு தாரை வார்த்துக்கொடு. அதுவே போதுமானது" என இருவரும் கேட்க, கோபன்னா, "மாமா! இது உங்களுக்குத் தருமமா யிருக்கிறதா? ஒருவன் மோக்ஷம் வேண்டாமென்று கூறுவதுபோ லிருக்கிறதே? நீர்கேட்பது எனக்கு என்ன துன்பம் வரினும், நான் செய்த புண்ணிய பலன் என்னைக் காப்பாற்றும். முடிவில் எனக்கு மோக்ஷத்தையும் தரும். அத்தகைய புண்ணியத்தைக் கேட்டால், நான் எப்படித் தருவேன்?" என்று சொல்ல, அக்கன்னாவானவர், மறுபடியும் கோபன்னாவைப் பார்த்து, "நியாயந்தான். உனக்கு அதை கொடுக்க மனம் வராது. இன்னொன்று சொல்லுகிறேன் கேள். அதாவது எங்கள் இருவர்மீதும் உனதுவாயால், ஒரு வாழ்த்துக் கவியாவது பாடு. நீ கட்டவேண்டிய கிஸ்தி பூராவையும் நாங்கள் கட்டி விடுகிறோம்" எனச் சொன்னார்கள். இந்த வார்த்தையையும் கோபன்னா கேட்டு, மனந்தளராது, "மாமா! எனக்கு என்ன துன்பம் வரினும் வரட்டும்; அதை அனுபவிக்கிறேன். ஸ்ரீராமனைப் பாடியவாயால், வேறுமானிடரைப் பாடேன்" என உறுதியாய்க் கூறினர், இருவரும் பெருங்கோபத்தையடைந்து "கோபன்னா நாங்கள் சொல்லிய வார்த்தைகள் ஒன்றையும் நீ கேட்கிறாயில்லை. உனது அகம்பாவம் உன்னைவிட்டு நீங்கவில்லை ஆகையினால், நீ சிறையில் கஷ்டப்படவேண்டியதுதான்" எனச் சொல்லிவிட்டு தங்கள் மாளிகைக்குப் போய்விட்டார்கள்.

கோபன்னா இரண்டு மூன்று நாளாக வழிநடந்துவந்த களைப்பினாலும், வேளைக்கு உணவில்லாமையினால் உண்டாகிய களைப்பினாலும் பாராவிலேயே படுத்து நித்திரை போய்விட்டார். மறுநாள் பொழுது விடிந்தது. தானிஷாவானவர் வழக்கம்போல் தர்பாருக்கு வந்ததும் கோபன்னாவைக் கைது செய்துவைத்த

தாருக்கி சிப்பாய்கள் தானிஷாவின் முன்னே கோபன்னாவின் கையெழுத்து வைத்த வாரண்டைக்கொடுக்க, அதை வாங்கிப் பார்த்து சேவகரை நோக்கி "கோபன்னா எங்கே" எனக் கோபத்தோடு கேட்டான். "மகாராஜ்! அவன் டாணாவிலிருக்கிறான்" என விடை கொடுத்து விட்டுப் போய்விட்டார்கள். உடனே தானிஷா தன்னிடமுள்ள ஒரு சேவகனை டாணாவுக்கனுப்பி, காவலரிடம் சொல்லி கோபன்னாவைத் திரை அழைத்து வருவதுபோல் கொண்டு வரச்சொன்னான். அவ்வாறே காவலர்கள் சென்று டாணாக்காரரிடம்சொல்ல, டாணாக்காரர்கள்கோபன்னாவைஅழைத்துக்கொண்டு தர்பார் வந்து சேர்ந்தார்கள். கோபன்னா தர்பார்மண்டபம் வந்ததும், பாதுஷாவைப்பார்த்து மண்டியிட்டு சலாம்செய்து மிகமரியாதையோடு நின்றார் தானிஷாவிற்கு கோபன்னாமீது லக்ஷக்கணக்கான செல்வத்தை அபகரித்துக் கொண்டானென்னும் கோபமானது, அவர் முகத்தைப் பார்த்ததும் பறந்து போய்விட்டது. குற்றவாளியாகத் தன்னால் கருதப்படும் கோபன்னாவுக்குத் தானும் பதில் சலாம் செய்தான் அவ்வாறு செய்து சொல்லுகிறான். கோபன்னா! நீ பத்திராசலம் தாலுக்காவிற்கு தாசில்தார் உத்தியோகம் செய்யச்சென்ற நாள் முதல் இந்த நாள் வரை உமது கிஸ்திதொகை ஆகுருக்கு முன்னதாகவே வருமே? இவ்வருஷத்திய கிஸ்திபணம் என் ஆகுருக்கு வரவில்லை?" கோபன்னா சொல்லுகிறார். "ஏ! மண்டலேஸ்வரா! நான் இந்த அரசாங்கத்தின் தாசில்தார் உத்தியோகத்திலே அமர்ந்த நாள் முதல், எங்கள் அரசர்பெருமானது பொக்கிஷங்கள் என்றைக்கும் அழியாது நிறைந்திருக்கவேண்டும். மன்னர் பெருமான்கீர்த்தி மண்டலமெல்லாம் பரவவேண்டும் என்னும் நினைப்பே பெரிதுடையவனாகக் காத்திருக்கிறேன்" என்றார். தானிஷா, "நீசொல்லுவது ஆச்சரியமாயிருக்கிறது. கஜானாவிலிருந்த லக்ஷக்கணக்கான நிதியைக் களவு செய்ததுபோல அபகரித்துக்கொண்டு ஆகுருக்கு ஒரு தம்படியும் அனுப்பாதிருக்கிறாய். இப்படிச்செய்த நீ பொக்கிஷங்களில் என்றும் குறையாத நிதி நிறைந்திருப்பதை நாடுகிறவர்களில் நானும் ஒருவன் என்று சொல்லுகிறாயே? உன் தாலுக்காவில் நடந்ததுபோல இன்னும் ஒரு தாலுக்காவில் நடந்தால், அந்த நிமிஷமே பொக்கிஷம் காலியாயிருக்குமென்பதை உணரமாட்டாயா? அப்படிக்கிருக்க நீ செய்த தப்பு காரியம் உனக்கே தெரியவில்லையோ?

கோப:—"எங்கள் ஆண்டவனே! உமது பொக்கிஷத்திலிருந்து ஒருதம்படியேனும் நான் களவாடி எனது சொந்தத்திற்கு செலவு செய்யவில்லை. குடிகள் வாழ்கிற இடங்களிலெல்லாம் ஆலயங்களைக் கட்டி. குடிகளை வணங்கச்செய்வது அரசன் கடமையென்று முன்னாளிலிருந்த இந்து அரசர்களெல்லாம்புராதனமாகப் பெரிய பெரிய ஆலயங்களைக் கட்டியிருக்கிறார்கள். அவர்கள் கட்

டிய ஆலயங்கள் தான் தேவாலயங்களென்று வணங்குகின்றனர். அன்றியும் இந்த ஆலயம் இந்த மன்னவனால் கட்டப்பட்டதென்று சிலாசாசனமாக அந்த ஆலயச்சுவர்களில் கல்லிலேயே வெட்டி எழுத்துக்கள் எழுதப்பட்டிருக்கிறார்கள். தற்காலம் பத்திராசலத்திலுள்ள ராமன் சன்னதி ஜீரணமாய் விழுந்துவிடும் நிலையிலிருந்ததால், அதைப் புதுப்பிக்கவேண்டுமென்று நினைத்து கஜானாவிலுள்ள பொருளையெல்லாம் தங்கள் ஊழியனாயிருந்து ராமன் சன்னதி விஷயத்தில் சிலவுசெய்தேன். இதனால் "தங்கள் கீர்த்தி விண்ணும் மண்ணும் பரவு" மென்றார்.

தானிஷா:—"கோபன்னா! நீசொல்லுவது சிறிதாவது நியாயமாயிருக்கிறதா? ஆலயம் கட்டவேண்டுமானால் அது என்காரியமே தவிர உன்காரியமில்லை. உனது சொந்தபணத்தைக்கொண்டு ஆலயம் கட்டவேண்டும். அப்படியிருந்தாலும், பத்திராசலம் சன்னதி என்னைச் சேர்ந்திருப்பதால், என்னுடைய உத்திரவில்லாமல் ஜீரணமான கட்டடத்தின் பக்கத்தில் போகப்படாது. அவ்வாறிருக்க என்னுடைய உத்தரவின்றி ஆலயத்தை யிடித்த குற்றம் ஒன்று. என் பணத்தைக்கொண்டு ஆலயம் கட்டிய குற்றம் ஒன்று. ஆக இரண்டு குற்றம் நீ செய்தவனாயிருக்கிறாய். நீ எப்பொழுதும் நீதியையே ஆதரித்து வந்திருக்கிறாயாதலால், நீ செய்த குற்றங்களை நான் மன்னிக்கிறேன். அதூருக்கு சேரவேண்டிய கிஸ்தி பூராவும் இந்தநிமிஷமே கட்டிவிட்டால், உனக்கு மீண்டும் அந்தத் தாசில்தார் உத்தியோகத்தையே தருகிறேன் சாக்கிரதையாக வேலையைப் பார்த்துக்கொண்டு சுகமாயிரு, என்ன சொல்லுகிறாய்."

கோப:—"மன்னுயிர் காக்கும் மன்னவர் மன்னனே! ஒரு தாலுக்காவில் வசூலாகும் கிஸ்திதொகை பூராவும் ஒருவனிடம் குவிந்திருந்தால், அவன் வேலைபார்த்து ஜீவனம் செய்யவேண்டுமோ? ஏழுலக்ஷத்து ஐயாயிரம் வராகன் செல்வத்தை நான் அடைந்திருந்தால், இந்த தாசில்வேலைசெய்து ஜீவிக்க வருவேனா? எனக்கு சொத்தென்று அமைந்தது பத்திராசல ராமன் தான். தங்களுக்கு செலுத்த வேண்டிய தொகை பூராவும் அவரிடந்தானிருக்கிறது. நீங்கள் அவரிடமே வசூல் செய்துகொள்ளலாம். ஒன்றுக்கு பத்தாகக் கொடுக்கும் வள்ளல் அவர்தான். அவரே யாவருக்கும் மேலான அரசன்.

தானிஷா:—நீ சொல்லுவது சரியல்ல. அதூருக்குச் சேரவேண்டிய கிஸ்திபணம் யாருடையதென்று நினைத்திருக்கிறாய்? அந்தபணத்திற்கு சொந்தக்காரனில்லை. அந்தப் பணமெல்லாம் குடிகளுடையது. குடிகளை காப்பாற்றுவதற்காகவே அவர்கள் இந்த பணத்தை என்னிடம் ஒப்புவித்திருக்கிறார்கள். அரசன் என்றால், அவனுக்கு உயர்ந்த அந்தஸ்து இருப்பதாக நீ கருத வேண்டாம். நீ எப்படி என்னிடம் சம்பளம்வாங்கி எனதுவேலைக்

காரனாக யிருக்கிறாயோ அதுபோல் நான் குடிகளிடம் பணம் வாங்கி குடிகளுக்கு வேண்டிய வேலையைச் செய்ய நானும் ஒரு வேலைக்காரனேயன்றி மற்றல்ல. என்னிடம் அவர்கள் ஒப்புவித்த சொத்தை நான் அவர்கள் சௌக்கியத்திற்கும், அவர்களுடைய அறிவு பெருகுவதற்கு வேண்டிய கல்விக்கும், சுகாதாரத்திற்கும் செலவிட வேண்டுவதோடு பகையரசர்களாலும் கள்வர்களாலும் குடிகள் துன்பப்படாமலிருக்க அவர்களை ரக்ஷிப்பதற்கும் என்னைக் குடிகள் நியமித்து ராஜாவென்று ஒரு பட்டத்தையும் கொடுத்து குற்றம் செய்வோரை தண்டிப்பதென்றும், ஒரு அதிகாரத்தையும் கொடுத்திருக்கிறார்கள். பொக்கிஷங்களிலுள்ள பொருள்களை நானுங்கூட என்மனம்போல் செலவுசெய்ய அதிகாரம் கிடையாது. எதாவது சிலவுசெய்யவேண்டுமானால் சபைக்கு வந்து மந்திரிகளுடன் கலந்து தீர்க்காலோசனை செய்து சிலவுசெய்யும் பணத்தால் குடிகளுக்கும் இராஜாங்கத்திற்கும் நன்மை ஏற்படுவதாகத் தெரிந்தாலன்றி, சிலவு செய்யமாட்டோம். குடிகளுக்கு ஆதரவு செய்து குடிகள் விஷயத்தில்சிலவுசெய்யாது இதுவரைவசூல்செய்த தீர்வைப்பணங்களைப் பொக்கிஷங்களில்கொட்டிவைத்திருந்தால், பொக்கிஷங்களினிடம் போதுமா? நீயே யோசித்துப்பார்! ஒரு வருஷத்திய வரவு என்று வந்தவற்றைப் பெற்று சிலவு என்று கணக்கெழுதி சிலவு செய்தால் இரண்டும் சமமாக நிற்குமே தவிர, வரைமாத்திரம் செய்து சிலவுசெய்யாது போனால் அவனே கொடுங்கோல்மன்னனாகிறான். இதை உணர்ந்து நான் குடிகளின் ஊழியன் என்று எவனொருவன் கருதுகிறானோ அவன்தான் நீதி மன்னனாகிறான். ஆகையினால் இந்தகிஸ்திபணமாகிய நீசெலுத்த வேண்டியதுகையை நான் தயவுசெய்து மன்னிப்பதற்கு எனக்கு அதிகாரமில்லை. ஆகையினால், கிஸ்திபணம்பூராவையும் ஒருகாசு கூட பாக்கியன்னியில் கொடுத்துவிட்டு உத்தியோகம் பார்க்க மனமிருந்தால் மறுபடியும் வேலையை ஒப்புக்கொண்டு வேலையைப் பார். இல்லையேல், உனக்கு நீதிப்பிரகாரம் சிறைதண்டனை ஏற்படும். என்ன சொல்லுகிறாய்? எப்பொழுது நீ கட்டவேண்டிய பூராதொகையும் அதூருக்கு வந்து சேருகிறதோ அப்பொழுது தான் உன்னைச்சிறையிலிருந்து விடுதலை செய்யப்படும். அதுவரை நீ சிறைச்சாலையைத் தான் உறைவிடமாகக் கொண்டிருக்கவேண்டும். நான் சொல்லுவது விளங்குகிறதா? சீக்கிரம் யோசனைச் செய்து சொல்.

கோப:—"மன்னவர்பணியும் மண்டலாதிபனே! நான் பத்திராசலம் ராகவன் கைங்கரியமாக சிலவு செய்தது நீதிக்கு மாறானதுதான் என்று தெரிந்துகொண்டேன். இந்த ஏழையின்மீது கருணைசெய்து திருப்பணி கணக்கில் அதைப் பதிவு செய்துக்கொண்டு என்னை மன்னிக்கப்படாதா?

தானிஷா:—நீ சொல்லியவண்ணம் செய்யலாம், நீ ஒரு காசு கூட உன் குடும்பச்செலவுக்கு அபகரித்துக்கொண்டவனென்றுவது வேறொருவருக்குக் கொடுத்தாயென்றுவது நான் நினைக்கவில்லை. நீ பத்திராசல ராமன் விஷயமாகவே செலவு செய்தாயென்பதை, நான் பூர்ணமாக உணருவேன். ஆனால் இன்னொன்று,—நீ நிரம்ப யோக்கியனுதலால் நீயே வியாபித்துக்கொள்ளாது ஆலயத்தின் திருப்பணி விஷயத்தில் செலவுசெய்தாய். உன்னைப்போல் மற்றையத் தாலுக்காக்களிலிருக்கிற தாசில்தார்கள் தங்கள் சொந்தத்திற்கு கஜானுபணம் பூராவையும் வியாபித்துக்கொண்டு, "நான் இன்ன ஆலயத்தைக் கட்டினேன், இந்த சத்திரம் கட்டினேன், என்று பொய்கணக்கெழுதி காட்டிவிட்டால் அவர்களையும் மன்னிக்கவேண்டியதே யன்றி, அவர்களையும் தண்டிப்பதற்கு நியாயமில்லை. தண்டனைமாத்திரம் விதிப்பது பணத்தை வசூலியாது போனால் இராஜ்ஜியம் பாழாய்ப் போய்விடும். பொருளாசையின் நிலைமைச் சொல்லுகிறேன் கேளும். ஒருவன் தனது உள்ளந் துணிந்து இன்னொருவனைக் கொலை செய்கிறான். கொலை செய்ததால் குற்றவாளியாய் தூக்குத்தண்டனையைப் பெறுகிறான். இது எல்லோருக்கும் நன்றாய்த் தெரிந்த பயமான விஷயமே. இப்பெரும் பாபம் எல்லோருடைய மனதில் இருந்தும் கொலைசெய்யாது இருக்கிறார்களா? பயத்தைநீக்கி படுகொலையே மிகுதியாய் நடக்கிறது. தன்னுயிரையும் கருதாது பிறருயிரைப் போக்கத் துணியச் செய்வது அப்பாழும் பொருளாசையல்லது வேறில்லை. நிற்க, ஒருவன் களவு செய்கிறான். அகப்பட்டுக்கொண்டால் காவல் தண்டனை கட்டாயம் கிடைக்குமென்று அவனுக் கவனே உணர்கிறான். உணர்ந்தும் களவாடுவது பொருளாசை யல்லவா? ஆயிரம் ஐயாயிரம் லக்ஷம் என ஒருவனை ஒருவன் மயக்கி அவன் பொருளை யபகரித்துண்டு வாழவெண்ணி, உண்மைநெறி தவறுதவன்போல் எதிரிலேயே கையொப்பமிடுவதும், பொய்க் கையெழுத்து செய்வதும், பயத்தை அற மறந்து துணிந்து அப்பொருளை மோசம் செய்வதும் பொருளாசை யல்லவா? தனது உயிர் போனால் போகிறது, லக்ஷக்கணக்கான பொருள்வந்தால் போதும் நமக்குப்பின் நமது சந்ததியார்கள் சுகமாய் உண்டும் உடுத்தியும் உல்லாசமாய் உலாவியும் வாழ்வார்களெனக் கருதி தூக்கில் விழுந்து இறந்தவர்கள் எத்தனைபேர்? இப்பொருளாசையால் என்னென்ன தியகாரியங்கள் நெஞ்சம் அஞ்சாமலும், ஐந்து பூதங்களும்அறியக் கடவுளுக்குப் பயப்படாமலும் நடக்கிறதென்பதை நீயே யோசித்துப் பார். ஆகையால், அரசருக்கு சேரவேண்டிய தொகை பூராவும் வசூலிப்பதே நியாயமாகும். ஒருகாசுகூட இவ்விதி பணத்தில் குறையாது கட்டிவிட வேண்டும். கட்டும் வரையில் உன்னைச் சிறைச்சாலைக் கனுப்பியிருக்கிறது," எனக் கடைசியாய்த் தானிஷா தீர்ப்பு சொன்னான். உடனே சேவர்கள் கோபன்னா

வின் கைகளில் விலங்கைப் பூட்டிக்கொண்டுபோய் சிறைச்சாலையிலடைத்துவிட்டார்கள்.

சிறைச்சாலை யதிகாரி மகம்மதியனானதால், பாதுஷாவுக்கு உண்மையாய் உழைப்பவன்போல் தன் அறிவீனத்தால், "இவரா? நமது கஜானா பணத்தை எல்லாம் வாழைப்பழம்போல சாப்பிட்டு ஏப்பமிட்டவர்? தானிஷா சங்கதிதெரியாது எழுலக்ஷத்து ஐயாயிர ரூபாயையும் வாய்ச்சொல்லால் அரசனை மயக்கி மறைத்துவிடலாமென்று நெஞ்சம் அஞ்சாது செய்ய எண்ணங்கொண்டவர் இவரைக் கொண்டுபோய் ஒரு இருட்டு அறையில் அடையுங்கள்" என இவனே தானிஷாவாக நினைத்துக்கொண்டு பெருங்கோபத்துடன் கடுமையாய் உத்திரவுசெய்தான். 'மூர்க்கரை மூர்க்கர் முகப்பர், முதுகாட்டிற் காக்கை யுகக்கும்பிணம்' என்பது போல் மூர்க்கனைச் சார்ந்த மூர்க்காளானதால், அவன் சொற்படியே சேவகர்கள், படுக்க இடமில்லாததாய், ஒருவனே உட்கார்ந்திருப்பதற்குப் போதிய இடமில்லாததாய், இருள்மூடியதாய், சுவாசிப்பதற்குச் சொற்பமாகக் காற்று மாத்திரம் வரக்கூடியதாய், இருக்கிற ஒரு அறையில் கொண்டுபோய் அடைத்துவிட்டுப் போய்விட்டார்கள்.

கோபன்னவானவர், அவ்வறையில் தட்டுண்டு மோதுண்டு முட்டுண்டு பல நாளாகத் துப்புறவு செய்யாது புழுதி படிந்திருக்கும் இருட்டறையில் உட்கார்ந்துக்கொண்டு கீழ்வருமாறு ஸ்ரீராமனைத் தோத்திரம்பண்ண ஆரம்பித்தார்.

"ஸ்ரீராமச்சந்திரா! உன்னை ஒருவன் மனதால் நினைத்தால் அவனுக்கு வருகிற இடையூறுகளெல்லாம் அப்பொழுதே நீங்குகிறது என்று ராமாயணத்தில் "வைகலு மனையாள் பேரினால் வருமிடையூறு பெயர்கின்ற பயத்தால்" என எழுதப்பட்டிருக்கிறதே? உன்னைச் சதா பஜித்துக்கொண்டிருக்கும் எனக்கு இந்தச் சிறைவாசம் செய்ய காலம் வந்ததே? இது உமது பெருங்கருணைத் திறத்திற்குக் குறைவல்லவா? உனது மந்திரமான ராமநாமத்தைத் தவிர, மூன்றுலகங்களிலு முள்ளவர்களுக்கும் வேறு மந்திரங்களில்லை என்று பெரியோர்கள் யாவரும் போற்றுகிறார்களே? இந்த மந்திரத்தை தியானிப்பவர்களுக்கு ஒரு குறையும் வாராதென்றிருக்க, நான் இப்பொழுது அடையுந் துன்பம் எனக்குத் துன்பமாய்த் தோன்றவில்லையா? எனக்கு இந்தச் சிறைவாசம்கூட துன்பமில்லை, ராமா! உன்னை அடிக்கடி வந்து சேவிக்கும் பாக்கியம் என்னைவிட்டு நீங்கியதே என்னும் துன்பமே பெரிதுடையவனா யிருக்கிறேன் உனக்கு ஆலயங் கட்டி சம்ப்ரோக்ஷணை செய்த குற்றத்திற்காகவா நான் சிறைபுகுந்தேன்? பரந்தாமா! பரமதயாளுவாகிய நீ என்னை சிறையிலிருந்து விடுவிப்பது பெரிய காரியமோ? அல்லது, இவனுக்குப் பல துன்பங்களையும் கொடுப்போம். அதில் இவன் கலங்காமல் நம்மை

நினைத்துக்கொண்டிருக்கிறானா? பார்ப்போமெனக் கருதி இந்தச்
சிறைச்சாலையில் வைத்தீரா? நீர் எனக்கு இன்னும் என்ன துன்
பங்கள் விளைக்கினும் உம்மை நான் மறவேன். உம்மையன்றி
வேறொரு தெய்வத்தைப் பாடேன். உன் சரணாரவிந்தத்தை
அடைந்த பலனால் இனி இந்தக் கர்மபூமியில் பிறவேன். இருட்
டறையான சிறையிலடைபட்டாலும், அன்றி, உயர்ந்த உப்பரி
கையில் அம்ஸதூளிகா மஞ்சத்திலே சயனித்திருந்தாலும்
அனேக ஜனங்கள் என்னைக் கள்ளனென்று பழித்தாலும்,
அன்றி, அனேக சாதுக்கள் இவரே பரமசாது என்று கொண்
டாட வாழ்ந்தாலும், பாழும் சிறைவாசத்தில் உணவின்றி குடல்
துடிக்கும் தன்மை வந்தாலும், பஞ்ச பக்ஷண பரமான்னத்தோடு
பலருடனே பரிந்துண்டு வாழும் செயலிலே வாழ்ந்தாலும்,
ஸ்ரீராமா! உன்னை மாத்திரம் நான்மறவேன். நீ என்னை சோதிக்க
வேண்டாம்'' எனத் தனக்குண்டாகிய துக்கமேலீட்டால் மனம்
போகும் வழியே சொல்லிக்கொண்டிருக்கும்பொழுது, சரிபாதி
யாக உப்பும் அரிசியும் கலந்து படியென்று அரிக்கால் படி அரி
சியை ஒரு மண்பாண்டத்தில் போட்டுக் கோபன்னாவிடம் கொடுத்
தான். கோபன்னா அதைப் பெற்றுக்கொண்டு அந்தச் சிறைச்
சாலையிலுள்ள கிணற்றில் குளித்து அந்தச் சட்டியில் ஜலத்தை
யெடுத்துக் கொண்டுவந்து இருட்டறையில் தானே கொதிக்க
வைத்து ஸ்ரீராமனுக்கு நைவேதனம் செய்யும்பொழுது, "ஏ!
ராகவா! உனக்குநான் பஞ்ச பக்ஷண பரமான்னத்தோடு திருவா
ராதனம் செய்தேன். அதை மனமுவந்து, அங்கீகரித்தீர். இன்று
உமக்கு இந்த அசுசியான சிறைச்சாலையில் சரிபாதியாக உப்பும்
அரிசியும் கலந்து பொங்கிய பிரசாதத்தை நான் சமர்ப்பிக்கின்
றேன்; அதை யேற்றுக்கொள்ளவேண்டும்'' என்று பிரார்த்தி
த்து, இராமனுக்கு நிவேதனம்பண்ணி சாப்பிட்டு அந்த சிறையி
லேயே சதா ராமஸ்தோத்திரம் செய்துக்கொண்டிருக்குங் காலத்
தில், தானிஷாவானவர், சிறைக்கூட அதிகாரிக்கு கோபன்னாவின்
பணம் ஆரூருக்கு வருவதற்கு என்ன சிக்ஷை விதிக்க முடியுமோ
அவ்வாறெல்லாம் செய்யென்று உத்திரவிட்டான்.. இயற்கையி
லேயே துஷ்டனான சிறைச்சாலை யதிகாரிக்கு அரசனுடைய ஆக்
ஞையும் கிடைத்தவுடனே பற்றியெரியும் நெருப்புக்கு காற்றும்
கூடியதுபோலாயிற்று. உடனே எமகிங்கிலியர்களைப் பார்க்கிலும்
கொடிய துருக்க ஜவான்கள் இருவரை அழைத்து, "இருட்டறை
யில் அடைத்து வைத்திருக்கும் கோபன்னாவை இழுத்து வாருங்
கள்'' என்று உத்திரவிட்டான். ஜவான்கள் இருவரும் காற்றி
னுங் கடிய வேகமாய்ச் சென்று, கோபன்னாவை அடைத்துவைத்
திருக்கும் இருட்டறைக்கு வந்து, கதவைத்திறந்து கோபன்னாவின்
பிடரியைப் பிடித்து வெளியில் தள்ளி சிறைச்சாலை அதிகாரியிடம்
கொண்டுவந்தார்கள். சிறைச்சாலை அதிகாரியானவன்,மிகுந்தகோப

த்தோடு கோபன்னாவைப் பார்த்து, "ஆரூருக்கு நீ கட்டவேண்டிய
கிஸ்தி பணத்தைக் கட்டுகிறாயா யில்லையா? கட்டாவிட்டால் உன
க்குக் கொடூரமான பல சிக்ஷைகள் விதிக்கப்படும். பணத்திற்கு
என்ன சொல்லுகிறாய்'' எனக் கேட்டான். கோபன்னா, "எஜமா
னனே! என்னிடம் சர்க்கார் கிஸ்தியைக் கட்ட வழியிருந்தால்
நானிந்த சிறைச்சாலைக்கு வருவேனா? நீங்கள் என்ன சிக்ஷை
விதித்தாலும் அதை ஏற்றுக்கொள்ள தயாராயிருக்கிறேன். இல்
லாத என்னிடம் பொருள் கேட்டால் அது எப்படி கிடைக்கும்?''
எனக் கூறினார்.

மூர்க்கனைச் சார்ந்த மூர்க்கனான ஜெயில்திகாரி, அவ்வார்த்
தையைக் கேட்டு, முகத்தில் கோபத்தனல்வீச, "பொருள்வராதா?
இதோவரும்படி செய்கிறேன் பார். எனச் சொல்லிக்கொண்டே
இரண்டு ஜவான்களையும் பார்த்து, "இவனைக் கொண்டுபோய்
நான்கு தெருவும் கூடும் நாற்சந்தியில் முக்காலிகட்டி கசையினால்
இருபது அடி அடியுங்கள்'' எனக் கடுமையாய் உத்திரவு செய்
தான்'' உடனே கோபன்னாவை எமகிங்கிலியர்கள் நரகத்திற்குப்
பாபிகளை யிழுத்துச் செல்லுவதுபோல, கோபன்னாவைத் தள்
ளிக்கொண்டு நாற்சந்தியினிடம் வந்து, அங்கிருந்த முக்காலி
மரத்தை நட்டு கோபன்னாவின் கைகளையும் கால்களையும் அதில்
கட்டி தனது கையிலுள்ள திருக்கைவால் கட்டிய கசையைக்கொ
ண்டு அடித்தார்கள். கோபன்னாவானவர் அந்த முக்காலிமரத்
தில் தன்னைக் கட்டும்பொழுதே, மானாபிமானம் விட்டுத் தனது
மனதில் ஸ்ரீயப்பதியான சீதாராமனை தியானித்து உள்ளமுருக,
தனது கண்களிலிருந்து ஆனந்தக் கண்ணீர் பெருக, தனது உள்
ளத்தில் அமுதம் சுரந்து பெருக, "ஏ! கல்யாண ராமா! ஏ! தச
ரதராமா! ஏ! சீதாராமா! ஏ! கோசலராமா! ஏ! ஜானகி ராமா!
எனப் பலவாறு அடிக்கும் பொழுதெல்லாம் சொல்லிக்கொண்டு
அடியின் வேதனை யென்பதே தோன்றாதவராய் இருப்பதைக்
கண்ட சிறைக்கூட அதிகாரியானவன், கோபன்னாவைப் பார்த்து
"இவன்பலமான சரீரமுடையவனாக யிருக்கிறான். சர்க்கார் பணத்
தைத் தின்று கொழுத்தவன். இவன் சரீரத்தில் இன்னும் இருப
தடி அடியுங்கள்'' என உத்திரவிட்டான். மறுபடியும் அச்சேவ
கர்கள் சிறிதும் நெஞ்சம் அஞ்சாது கசையைக்கொண்டு மாறி
மாறி சரீரம் முற்றும் இரத்தம் தாரைதாரையாகப் பெருக அடித்
தார்கள். அப்பொழுது கோபன்னா ராமநாமத்தையும் வாயால்
சொல்வதைவிட்டு, தன்னை மறந்து ஆனந்த வெள்ளத்தழுந்தி
துடியாமலும் வாய்திறந்து கதறாமலும் இருப்பதைக் கண்டு,
சிறைச்சாலை அதிகாரி கோபன்னாவுக்குப் உயிர்போய்விட்டதோ?
கைதியாகிய இவன் உயிர்துறந்தால் அந்தமட்டோடு என்வேலை
போய்விடுமே? இவன் ஆரூருக்கு சேர்க்கவேண்டிய எழுலக்ஷத்தி
ஐயாயிரம் கட்டும்வரை உயிருட னிருக்கவேண்டியவ னல்லவா?

ஒருவனுக்கு இவ்வளவு கொடுமையாய் நாற்பது அடி அடிக்கும்படி நான் உத்திரவிட்டதில்லையே யென்று பயந்து விரைவாய் ஓடி முக்காலியில் கட்டியிருந்த கட்டைத் தானே அவிழ்த்து கோபன்னாவை மெல்ல வெளிப்படுத்த, அவர் உணர்ச்சி அடைந்து கண்திறந்து முன்னே நிற்கும் சிறைச்சாலை அதிகாரியைப் பார்த்து, சலாம் செய்து "ஐயா! நீங்கள் என்னைக் கசையடி அடிக்கவேண்டுமென்று என்னை முக்காலியில் கட்டினீரே? ஏன் என்னை மன்னித்து ஓர் அடியும் அடியாமல் உமது கையாலேயே யென் கட்டை அவிழ்த்துவிட்டீர்? நான் கட்டவேண்டிய கிஸ்தி பூராவையும் வேறாராவது கட்டிவிட்டார்களா? என்ன காரணம்?" எனக் கேட்டார்கள். சிறைச்சாலை அதிகாரி இவர் சொல்லிய வார்த்தையைக் கேட்டதும், "நாம் அடித்த அடி இவன்மீது ஒன்றுகூட படவில்லையோ? ஐயோ! இவர் சரீரத்தைப் பார்த்தால் இரத்தம் ஒழுகுகிறதே! இவர் சிறிதும் அடித்த அடியால் உண்டாகிய வாதையும், நாம் அடித்த அடியும் அறியாதவர்போல் "என்னை என் அடிக்காது மன்னித்தீர்கள்? நான் கட்டவேண்டிய தொகையையாராவது கட்டிவிட்டார்களா? எனக்கேட்கிறாரே! இதென்ன ஆச்சரியமாயிருக்கிறது" எனச் சிறிது யோசனையிலிருந்து பிறகு கோபன்னாவைப் பார்த்து, "கோபன்னா! நாங்கள் அடித்தது உனக்குத் தெரியவில்லையா உனது சரீரத்தைப் பார்த்துக்கொள்" என்று சொன்னான். ஸ்ரீராகவன் செயலால் கோபன்னாவின் சரீரத்தில் பட்ட அடிகளின் தழும்பும் இரத்தத் துளிகளும் தோன்றவில்லை. கோபன்னா, "என் சரீரம் முன்னிருந்ததுபோலிருக்கிறதன்றி, வேறொன்றும் எனக்குத் தோன்றவில்லையே? நீங்கள் சொல்லுவதைத்தான் நான் கேட்கிறேன்" எனச் சொல்லினர். சேவகர்கள் பயந்து, "ஓகோ! இவர், கடவுளினிடம் நீங்காத அன்புடையவர், நன்றாய்த் தோன்றுகிறது" என்று அவரைச் சிறைச்சாலையில் கொண்டுபோய் அடைக்கும்படி உத்திரவு செய்ய ஜவான்களும் பழையபடி கோபன்னாவை முன் அடைத்து வைத்திருந்த இருட்டறையில் கொண்டுபோய் அடைத்து விட்டார்கள்.

கோபன்னா, அங்கிருந்த வொரு சிறிய திண்ணையில் உட்கார்ந்துக்கொண்டு "வாஸ்தவம். பெரியோர்கள் தியானம் செய்ய தனியிடத்தையே நாடுகிறார்கள். இதுபற்றியே துறவிகளும் தவம் செய்யவேண்டின் வனத்தையே நாடுகிறார்கள். மனைவி மக்கள் சுற்றம் சினேகிதர் பந்துக்கள் இவர்களெல்லாம் வந்து தவத்திற்கிடையூறு செய்யாமலிருக்குமிடம் வனந்தான். இதுபோலவே இந்தச் சிறைவாசத்தையும் நினைக்கவேண்டும். நாம் உத்தியோகமில்லாமல் ஊரிலிருக்கும்போதும் தியானம் செய்வேன். மனைவி பக்கத்தில் வருவாள் தியானம் மறந்துபோகும். இல்லை, குழந்தை வந்து காலைக் கட்டிக்கொள்ளுவான். அப்பொழுதே தியானம் அழியும். இல்லை, வீட்டு சோலிகள் சற்றுநேரம்கூட தனியா

யிருக்க விடுவதில்லை. சில சினேகிதர்கள் வருவார்கள். அவர்களுடன் பேச்சில் வீணே பொழுது கழியும். இதைவிட்டு உத்தியோகம் செய்யும்பொழுதோ தியானம் அடியோடு போயிற்று. வாய் தியானமாக ராமா, ராமா, என்று சொல்ல; கண்ணொன்று பார்க்க; காது ஒன்று கேட்க; மந்திரம் ஜபிக்கும் வாயொன்றைப் பேச; கண்கள் நேரத்தை நோக்க; வேலைக்குச் செல்லவேண்டுமே என்று நினைந்து திருவாராதனம் விரைந்தோட; இங்ஙனம் நாள் கழிந்ததன்றி, ஒரு நாளாவது அரைநாழிகை விடாமல் தியானம் பண்ணினேனென்று சொல்ல முடியாது. இப்பொழுது நாமிருப்பது சிறைச்சாலையேயானாலும், உணவுவுண்ணும்நேரம் தவிர, ஒழிந்த நேரமெல்லாம் தியானமாகவேயிருக்கிறது. எந்தநிமிஷமும் நிஜமான கோதண்டராமன் என்னுடைய முன்னேவந்து நிற்பதும், என்னுடன் பேசுவதும், என்னையே பார்ப்பதும், என்னை நோக்கி சிரிப்பதும் என்னுடனேயே யிந்த சிறைச்சாலைக்கு வந்து இந்த இருட்டறையில் அடைப்பட்டாரோ வென்று சொல்லும்படியாய் என்னைவிட்டு நீங்காமலிருக்கிறார். அவரும் இச்சிறைச்சாலையில் அடைப்பட்டிருப்பதுதான் நீதியாகும். எப்படியெனில், ஒருவன் ஒரு சொத்தைத் திருடி வேறொருவனிடம் கொடுத்தால், களவு துலங்கிய பின், எப்படி சொத்தைக் களவு செய்தவனும், களவாடிய சொத்தை வாங்கியவனும் இருவரும் குற்றவாளியோ; அதேபோல நாம் கஜானா பணத்தைக் கையாடிய குற்றத்திற்காக நாம் சிறை புகுவோமாகில், களவுப்பொருளை அங்கீகரித்து அனுபவித்தவரானதால், அந்தக்குற்றம் அவரையும் சார்ந்ததில்லையா? ஆனதால், நீ பரம்பரையில் பிறந்தவரானதால், அவரும் இந்த சிறைபுகுந்து எனக்குக்காக்ஷி தந்தருளுகிறாரா? இல்லையேல், என் மனமானது இரவும் பகலும் விடாது அவனையே தியானித்துக்கொண்டிருப்பதால், எனது தியானத்தின் முதிர்ச்சியைத் தெரிந்து, சேவை தந்தருள முன் வந்திருக்கிறாரா? இது உண்மையானால் சிறைவாசமே மிக நல்லது. இச்சிறைச்சாலையை தவச்சாலைக்கு மேலானதாக நினைக்கவேண்டுமேயன்றி வேறில்லை. இதுபற்றிதான் பெரியோர்களெல்லாம் செல்வத்தை வெறுக்கிறார்கள். வறுமையானது ஈஸ்வரனை நினைப்பூட்டு மென்கிறார்கள். அன்றியும், இந்த சிறைவாசமானது என்மட்டில் பகவத்தியானத்திற்கு யோக்கியமானதாக எல்லா வசதிகளும் அமைந்திருக்கிறது. உண்டிசுருங்கல், தூக்கமின்மை, ஐம்புலனடக்கல், காமக்கேட்டின்மை, முதலிய சாதனங்களெல்லாம் அமைந்திருக்கிறது. என் தியானம் அதிகரித்ததால்தான் ராமபிரானும் எனது உள்ளத்தையே கோயிலாகக் கொண்டுவிட்டான்; முனி மாண்டவ்வியரென்பவர், களவு செய்ததாகக் குற்றஞ் சாற்றப்பட்டு ஒரு அரசனால் கழுவிலேற்றப்பட்டகழுவில் தனதுமார்பு அழுந்தியவண்ணை

மாக இருந்து தவம் செய்துகொண்டிருந்தார் என்றும், அக்கழுமுனை அவரிதயத்திலே அழுந்தி புதைந்து போயிற்றென்றும், பின் அவர் தபோதனரென்றறிந்து கழுவிலிருந்து வெளிப்படுத்த முயன்ற பொழுது, இவர் நெற்றியிலே பதிந்திருப்பதைக் கண்டு, அந்தக்கழுமுனையை அரத்தாலே அறுத்து அவரை கழுவிலிருந்து இறக்க, அவர்மார்பிலே கழுமுனையானது ஆணிகரைந்ததுபோல அவர் மார்பில் பதிந்திருந்ததினாலே ஆணிமாண்டவ்யரென்கின்ற திருநாமம் பெற்றாரென்று மகாபாரதத்தில் சொல்லவில்லையா! ஆகையினால் ஈஸ்வரனை தியானிப்பதற்கு சுத்தமான இடந்தான் வேண்டுமென்பதுகூட இல்லை. எந்தவிடத்திலும் எந்தக்காலத்தும் எந்த நேரத்திலும் தியானிக்கலாமென்று சிந்தித்து ராமதியானபரராய், இது இராவென்றாவது, இது பகலென்றாவது, தனக்குத் தெரியாதநிலையில் வரவர உண்டியை யொழித்து, தனது இருதயத்திலே பகவானை ராமச்சந்திரமூர்த்தியை யெழுந்தருளி யிருக்கச்செய்து, அன்பென்னுந் தீர்த்தத்தால் ஆயிரகலசமாட்டாக திருமஞ்சனம் செய்து, ஞானச்சுடர் விளக்கேற்றி, வேதமும் முடிவும் காணா மெய்யனைக் கண்டு ஆநந்தங்கொண்டு ஆடிப்பாடி அப்பனே என்று தோத்திரம் செய்துக்கொண்டிருந்தார். இதற்குள் அடுத்த கிஸ்தி கட்டவேண்டிய காலமாகிய ஒரு வருஷம் கழிந்ததும், தானிஷா கொலுக்கூடம் வந்து, ஆகூரதிகாரிகளைப் பார்த்து, 'சர்க்கார் கிஸ்தி முற்றும் வந்துவிட்டதா? எதாவது தாலுக்காக்களில் பாக்கி விழுந்துவிட்டதா'' எனக் கேட்டான். ஆகூரதிகாரிகள், "எல்லாத் தாலுக்காக்களிலுமிருந்து கிஸ்திபணம் பூராவும் வந்துவிட்டது. ஆனால் சென்றவருஷம் பத்திராசலம் தாலுக்காவிலிருந்து கோபன்னாவினால் செலுத்தவேண்டிய ஏழுலக்ஷத்தி ஐயாயிரம் வராகனையும் அவன் தாலுக்கா கணக்கில் பாக்கி கட்டியிருக்கிறது. அந்தப் பணத்திற்கு வழி ஒன்றும் பிறந்ததாக தெரியவில்லை. அதனால் இந்த வருஷத்து கணக்கையெப்படி முடித்து விடுவதென்று தோன்றாமலிருக்கிறது'' என்றார்கள். தானிஷா அந்த ஆகூரதிகாரிகளைப் பார்த்து, இன்னும் கோபன்னாவின் பணம் வரவில்லையா நல்லது, நான் பார்க்கிறேன். நீங்கள் கச்சேரிக்கு போங்கள்'' என்று சொல்லி அனுப்பிவிட்டு, அப்பொழுதே சிறைச்சாலை அதிகாரிக்கு ஒரு உத்தரவு எழுதினார். அதாவது, "உன் மனம்போல கோபன்னாவை எந்த சிக்ஷையும் செய்து, ஆகூருக்கு பணம் வரவேண்டிய வழியைத் தேடவேண்டும் என்று உனக்கு அதிகாரம் கொடுத்திருந்தும், கோபன்னாவின் பணமின்னும் வராத காரணமென்ன? நீ அவனை ஒன்றும் செய்யாது சிறையில் வைத்துக் காப்பாற்றி வருகிறாயென்று தெரிகிறது. இனி அவனுக்கு எந்த சிக்ஷையும் செய்ய உனக்கு சுதந்தரம் கொடுத்திருக்கிறேன். கூடிய சீக்கிரம்

ஆகூருக்கு பணம் வரும்படி செய்யாதுபோனால், உன் வேலைக்கே ஆபத்து வந்துவிடும். இதை நன்றாய் மனதில் வைத்துக்கொள்'' என எழுதி தனது முத்திரை வைத்து ஒரு சேவகனிடங் கொடுத்து, "இதை சிறைச்சாலை அதிகாரியினிடம் கொண்டுபோய் கொடு'' என்று தானிஷா அவன் கையில் கொடுத்தான். சிப்பாய் அந்த லிகிதத்தை வாங்கிக்கொண்டு சிறைச்சாலைக்குச் சென்று, சிறைச்சாலை அதிகாரியினிடம் அந்த உத்திரவைக் கொடுத்தான். சிறைச்சாலை அதிகாரி அதை வாங்கிப் படித்துப் பார்த்து, தன் வேலைக்கே ஆபத்து வந்துவிடுமோவென்று பயந்து, சிறைச்சாலையில் அடைக்கப்பட்டிருக்கும் கோபன்னாவை இரண்டு ஜவான்களை அனுப்பி, தன் முன் கொண்டுவரச் செய்து, கோபன்னாவைப் பார்த்து, "நீ ஆகூருக்குக் கட்டவேண்டிய பணத்தை ஒரு வருஷமாகியும் இன்னும் கட்டவில்லை; பொருளைக் கட்டவேணுமென்னுங் கவலை ஒரு சிறிதும் உனக்கு இல்லையென்று தோன்றுகிறது. பொருளைக் கட்டுகின்றையா? இல்லையா? அல்லது கொடூரமான தண்டனைகளுக்கு உள்ளாகிறாயா? என்ன சொல்லுகிறாய்?'' எனக் கோபத்தோடு கேட்டான்.

எல்லாம் பத்திராசல ராமனே யெனத் தன்னைமறந்து, எத்தண்டனைக்கும் தயாராயிருக்கும் பரம சாதுவான கோபன்னா, அவன் சொல்லிய வார்த்தையைக் கேட்டதும், எஜமானே! ராஜாங்க சொத்தில் ஒருதம்படியேனும் எனக்கென்று எடுத்து உபயோகித்துக் கொண்டவனுமல்ல? அதைப் புதைத்துவைத்து பத்திரப்படுத்தியவனுமல்ல? அப்படி நானெடுத்துப் பத்திரப்படுத்தியிருந்தால், அந்த பணம் ஆகூருக்கு வந்து சேர்ந்திருக்கும். எல்லாம் பத்திராசலத்தில் ராமசன்னதி கட்டடத்தில் செலவாய் விட்டதே? என்னைக் கட்டும்படி சொன்னால், நான் எங்கிருந்து கட்டுவேன்? மன்னிக்கவேண்டும்'' எனத் துக்கக் குரலோடு கூறினர். சிறைச்சாலை அதிகாரி, கோபன்னா! நீ கட்டமாட்டாயா? இதோ என்ன செய்கிறேன்பார்?'' என்று சொல்லி தன்னிடமுள்ள இரண்டு சிப்பாய்களை அழைத்து, "இவன் கைகால்களைக்கட்டி, பகல் பதினைந்து நாழிகை நேரத்தில் பொரிகின்ற மணலில் கொண்டுபோய் உருட்டி விட்டு விடுங்கள். வெய்யலின் கொடுமை தணிந்ததும் கட்டை அவிழ்த்து அழைத்து வாருங்கள்'' என உத்திரவு செய்தான். உடனே கொடிய சிப்பாய்கள் கோபன்னாவைப் பிடித்துக் கொண்டு ஐதராபாத்திற்கு ஐந்து நாழிகை வழியிலுள்ள ஒரு மணல் மேடு பொடி மணலால் குவிந்திருக்கும் மலைபோன்றது. அந்த இடத்திற்குத் தள்ளிக்கொண்டு போய் கைகால்களை வரிந்து கட்டி அந்த மணலில் பகல் நாழிகையான உச்சிப்பொழுதில் கோபன்னாவை உருட்டி விட்டார்கள். கோபன்னா கைகால்களைக் கட்டும்வரை தன் உணர்ச்சியோடிருந்தார். கட்டி உருட்டியதும்

ஸ்ரீராமச்சந்திரனை தியானித்துத் தன்னை மறந்தவராய் ராமனை நினைந்து, "ஏ! ராமச்சந்திரா! துன்பத்தால் வருந்துகின்றவர்களைக் காப்பாற்றுவதற்கு உன்னையன்றி வேறு கடவுளுமுண்டோ? இவ்வாறு கொதிக்கும் மணலில் நான்கிடந்து புரள, உனக்கென்ன குற்றஞ் செய்தேன்? உமது திருமேனிக்கு பாலபிஷேகம் செய்தேனே? அதற்குப் பதிலாக நீர் என்னை மணலில் புரளும்படி செய்தீரா? நீர் என்னை இன்னுமென்ன துன்பத்திற்காளாக்கினாலும், உம்மை நான் மறவேன்; துன்பத்தின் முடிவிலேதான் இன்பமிருக்கிறதென்று எனக்கு நன்றாய்த் தெரியும். துன்பமானது உன்னை அடைவதற்கு சாதனமென்பதையும், நான் கண்டு கொண்டேன். கஷ்டப்பட்டால்தான் கூலி கிடைக்குமென்று எனக்கு அனுபவம் வந்துவிட்டது. ஹிரணியன் பிரஹலாதாழ்வானுக்கு அளித்த தண்டனையைப் பார்க்கிலுமா இந்தச் சிறைக் காவலன் எனக்கு சிக்ஷை விதிக்கப் போகிறான்? அந்த சிக்ஷைகளை ஐந்து வயதுடைய குழந்தையாகிய அவன் பொறுத்திருக்க, எனக்கு இந்தச்சிக்ஷை எவ்வளவு? இவன் எனக்குச்செய்யும் தண்டனைகளில் உனக்கும் பங்குண்டென்பதை நான் கண்டு கொண்டேன். நானே நீயானபின், எனக்குவருந் தண்டனையெல்லாம் உனக்குற்றதென்று உணர்ந்துகொள்ளவேண்டுவதைத் தவிர, வேறு வழியில்லை என்று தன்னிடம் கூட நிற்கின்ற ஒருவனிடம் மற்றொருவன் பேசுவதுபோல் பேசிக்கொண்டிருக்கும்போது, இமயமலையின் பனிப்பாறையானது எப்படி குளிர்ந்திருக்குமோ, அதே போல கோபன்னாவின் சரீரமுற்றும் குளிர்ந்தது. தன்னை மறந்து ராமனுடன் நேரே பேசிக்கொண்டிருந்த கோபன்னாவின் சரீரமானது வெம்மை நீங்கி குளிர்ந்ததும், "ஆ! நமக்கு ராகவன் ரக்ஷகனாகயிருக்கிறான், நம்மைக் காப்பதுதான் கடனென நினைத்து, இந்த மணலிலுருட்டும்போதும், காப்பாற்றினாய்" எனப் பின்னும் ராமச்சந்திரனை ஸ்தோத்திரம் பண்ண ஆரம்பித்தார். "ஏ! பரந்தாமா! உனது கருணைப் பிரவாகத்தில் அடியேனொருவனையும் அழுந்தும்படி செய்த உமது அருட்பெருந்தன்மையையென்னென்று கூறுவேன்? எந்தாய்! கங்கையாற்றின்கரையிலும்மைச் சேவிக்கவந்த வேடனான குகனுக்கு நீர் காட்டிய அன்பு எனக்கு நீர் காட்டமாட்டீரா? திருத்தேவியாகிய ஜானகியின் மடியில் தலைவைத்து சித்திரகூடத்திலே நீர் சயனித்து நித்திரை செய்துக் கொண்டிருக்கும் பொழுது, சயந்தனென்னும் பெயருடைய இந்திரன் மைந்தனானவன் காக்கையின் உருவத்தை யடைந்து ஜானகியின் திருமார்பைத் தனது மூக்கினால் குத்தும் பொழுது, மார்பிலிருந்து வழிந்தொழுகிய இரத்தமானது கன்னத்தில்விழ உடனே நித்திரை தெளிந்து, இரத்தக்கறை படிந்திருக்கும் மூக்கோடு நின்றுகொண்டிருக்கும் காக்கையைக் கண்டு ஒரு புல்லில் பிரம்மாஸ்திர மந்திரத்

தைப் பிரயோகித்து, அவன்மீது பிரயோகிக்க, காகாசுரன் அந்த பிரம்மாஸ்திரத்திற்கு ஆற்றாது மூன்று மூர்த்திகளிடமும் சென்று சரணாகதிசெய்ய அவர்களால் கைவிடப்பட்டவனாய்க் கடைசியில் உனது சரணாரவிந்தத்தில் விழுந்தகாலத்தில், அவனையும் மன்னித்தீரே? உமது திருக்கருணை இருந்தபடியென்னே! நான் உமதருளால் ஆதாரவில்லாது போவேனா? அருட் பெருங் கடலே! அனாதரக்ஷகனே!" என்று ஸ்ரீராமன் தன்னை மணலில் புரளும்பொழுது காத்தருளிய தன்மையை நினைந்து வருந்தி நின்றார்.

பாபத்திற்குச் சிறிதும் அஞ்சாத நெஞ்சையுடைய கொடிய மகம்மதிய சிப்பாய்கள், கோபன்னா கொஞ்சமும் தளர்ச்சியடையாது இருப்பதைக்கண்டு, அவன் அக்கினிக் கட்டுடையவன்போலிருக்கிறது. இவ்வளவு நாழிகையாகப் பொரியும் மணலில் கட்டியுருட்டியும், இவன் சரீரத்தில் வியர்வைகூட காணவில்லையே! என்ன அதிசயம்" என நினைத்து அவரைப் பழையபடி இருட்டறையில் கொண்டுபோய் அடைத்துவிட்டு தங்கள் அதிகாரியினிடம், "மணலில் இருபத்தைந்து நாழிகைவரை உருட்டியிருந்தோம் பயன்படவில்லை. குளிர்ந்த தண்ணீரில் படுத்திருந்தால் தேகம் எவ்வாறு குளிர்ந்திருக்குமோ, அவ்வாறு அவன் மேனி குளிர்ந்திருந்ததன்றி, ஒருசொட்டு வியர்வைகூட அவன்தேகத்திலிருந்து வரவில்லை" என ஆச்சரியத்தோடு சொன்னார்கள். கோபன்னாவோ, சிறைச்சாலையைத் தவச்சாலையாக மனதில் நினைத்துக்கொண்டு தனது தியானத்தை செய்துவந்தாலும், இடையிடையே பத்திராசல ராமனை சேவிக்கவேண்டும். அவருக்குத் தன்னாலான கைங்கரியங்களைச் செய்யவேண்டும் என்னும் ஆசை ஒவ்வொரு நாளும் அவர் உள்ளத்தில் உதித்துக்கொண்டேயிருந்தது. இந்த காலங்களிலெல்லாம் தானிஷாவின் உத்திரவால், சிறைச்சாலை அதிகாரியானவன், பெரிய கருங்கல்லொன்றை எடுப்போர்களைக்கொண்டு தூக்கி கோபன்னாவின் முதுகில் வைத்து அவரை ஊரைச் சுற்றிவரச் செய்தான். அப்பொழுதும், ராகவனருளால் அது சிறிதளவும் பாரமில்லாது போயிற்று. முள்ளுகளைப் பரப்பி அதன்பேரில் நடக்கச்செய்தான். சாம்பரிந்த மலரைப் பரப்பி நடக்கச்செய்ததுபோல, ராமநாமத்தைவிடாது சிந்தித்துக் கொண்டிருந்த கோபன்னாவின் காலுக்கு இதம் செய்தது.

இப்படி சிறைச்சாலையின் அதிகாரியால் ஏற்படும் துன்பங்களையெல்லாம் ராகவன்கருணையால் ஒருவருத்தமுமில்லாது அனுபவித்து வந்தபோதிலும் தான் அச்சிறைச்சாலையிலிருந்து வெளிப்பட்டு பத்திராசல ராமனுடைய சேவையைக்கண்டு ஆனந்தக் கூத்தாடி மகிழவேண்டுமென்னும் ஆசையே அவர் மனதைவிட்டு நீங்காது குடிகொண்டிருந்ததால், அவர் கண்களின் முன்னே பத்திராசலராமனும், இவர் கட்டிய ஆலயமுமே தோன்றிற்று.

தான் இந்த சிறையிலிருந்து வெளிப்படவேண்டுமானுல், ராகவனே வந்து வெளிப்படுத்தவேண்டுமேயன்றி, வேறு வழியில்லை என்று கண்டுகொண்டவராய்ப் பின் வருமாறு பகவானை நிந்தனு வசனமாக பிரார்த்திக்தார். அதாவது:—

ஏ! ராமச்சந்திரா! உனக்கு வைரமணியிழைத்த மணிமகுடம் செய்து சாத்தினேனே, அது உன்பிதாவாகிய தசரதர் உனக்கென்று செய்து தன்கரத்தால் உனக்கு ராஜ்ஜியாபிஷேகம் பண்ணி உன் தலையில் அவர் சூட்டிய முடியா? தானிஷாவின் ஆளுக்கு சேரவேண்டிய கஜான பணத்திலிருந்து பதினுயிர விராகன் என்று நான் செலவிட்டுசெய்த முடியன்றோ? நீ உன் தலையில் தரித்துக்கொண்டு அழகு பார்க்கிருய். தானிஷாவின் கடனுக்காக நான் சிறைப்பட்டிருக்கும்பொழுது, அந்த பணத்தை நீ கொண்டுவந்து கட்டவேண்டாமோ? மரகதபச்சையிழைத்த பாஜிபந்து ஐயாயிர விராகனில் செய்து தோள்களில் மாட்டிக்கொண்டிருக்கிருயே? அது உனது பாட்டனை உத்தர கோசல ராகவன் பண்ணிக் கொடுத்ததென்று நினைத்திருக்கிருயா? உனது கழுத்திற்கு வயிர மிழைத்த கண்ட பூஷணம் இருபதினுயிரம் விராகனில் செய்துபோட்டேனே? அதை உன்மாமனை ஜனகன் போட்டதென்று மதித்திருக்கிருயா? உனது தேவியாகிய சீதைக்கும், இளவீரருக்கும் என்று புதிதுபுதிதாக நகைகளைச் செய்து அணிந்து உலகம் நகைக்க சிறைபுகுந்தேனே? நீ நமக்கு வந்ததென்னவென்றிருந்தால், என் கெதியென்ன? இப்படியே சிறையில் அழுந்தி உயிரைவிடுவதா? இது உனக்குச் சம்மதமா? வருஷம் பன்னிரண்டாயிற்றே? பன்னிரண்டு வருஷம் வீட்டைவிட்டுப் போய்விட்டால், அவன் மீண்டும் வீட்டிற்கு வருவதாயிருந்தால், அதற்குப் பிராயச்சித்தம் சொல்லியிருக்கிறதே? உன்னைச் சேவித்துப் பன்னிரண்டு வருஷமாயிற்றே? உனது சன்னதிக்கு மீண்டும் வரப்படாதென்கிற எண்ணத்தால் என்னை மறந்தாயா? உனது சன்னதியடைந்து உன்னைச் சேவை செய்யாத ஜென்மமிருந்தென்ன? உனக்கு நான் மரணமடையவேண்டுமென்று விருப்பமிருந்தால், இன்றே என் உயிரை மாய்த்துக்கொள்ளுகிறேன். அப்படியே உண்டவுடன் உயிரை ஒழிக்கும் விஷத்தை ஒருகிண்ணத்தில் கலக்கி வைத்து இந்தச் சிறைச்சாலையில் காவல் புரிவோர் யாவரும் தூங்கியபின் குடித்து இறந்து விடுவோமென்று மதித்துத் தன் பக்கத்தில் வைத்துக்கொண்டு ஸ்ரீராமனையே தியானித்துக் கொண்டிருந்து அப்படியே நித்திரை போய்விட்டார்.

ஸ்ரீராம லக்ஷ்மணர்கள் கோபன்னுவின் சிப்பாய்களாய் வரும் அத்தியாயம்

தாசரதியான பத்திராசலநாதன் கோபன்னுவை சிந்தனை செய்யாதிருக்கும்பொழுது, சீதாபிராட்டியானவள், ஸ்ரீராமபிரா

னைப் பார்த்து, "நாதா! கோபன்னுவானவன் உம்முடைய அந்தரங்க பக்தனன்றோ? அவன் சிறைச்சாலையில் கிடந்து கதறும்படி நீர் அவனை உபேக்ஷித்திருப்பதின் காரணமென்ன? என்னிடம் சொல்லப்படாதா?" எனக் கேட்டாள். ஸ்ரீராகவன் சிரித்துக்கொண்டு, "ஜானகி! ஒவ்வொரு அடியாரையும் ரக்ஷிக்கவேண்டும்பொழுது, நீயே சிபார்சு செய்வது முறையாயிருக்க, கோபன்னுவின் விஷயத்தில் உனக்கு இன்றுதான் கருணை பிறந்து அவனைச் சேர்த்துக்கொள்ளப்படாதா என்று கேட்கிருய்? சரி, அடியார்களை ஆதரிக்கும் விஷயத்தில், புருஷகாரியாக விருக்கும் உன் சம்மதம் தெரியாது நானே சென்று ரக்ஷிப்பது வழக்கமில்லையே? வழக்கத்திற்கு மாறுதலாக நடந்தால், எங்கே உனக்குக் கோபம் வருகிறதோ என்றெண்ணி யிருந்தேனன்றி வேறில்லை. இப்பொழுதே அவனை ரக்ஷிக்கச் செல்லுகிறேன்" என சீதாபிராட்டியிடம் சொல்லிவிட்டு தன்னுடைய தம்பியாகிய லக்ஷ்மணனைப் பார்த்து; "அப்பா! ஐதராபாத்தில் சிறைப்பட்டிருக்கும் கோபன்னுவை சிறையிலிருந்து விடுவிப்பதற்கு தானிஷாவிடம் அவன் கட்டவேண்டிய ஏழுலக்ஷத்தி ஐயாயிரம் விராகனையும் கட்டிவிட்டு வரவேண்டும். ஆதலால், அதற்காக நாமிருவரும் சிப்பாய் உருவம் அடைவோம்" எனக்கூறினர். "அப்படியே யான் தயாராயிருக்கிறேன்" என பதில் சொன்னுர். ஸ்ரீராகவன் தலையில் பாகைகட்டி, விலைமதிக்க முடியாத துராயை அந்தப் பாகையில் பொருந்தக் கட்டி நெற்றியில் செந்தூரப் பொட்டிட்டு, இரண்டு காதுகளிலும் கடுக்கன் பச்சைமுருகு ஒளிபெற வணிந்து, கண்டத்தில் முத்துத் தாவடம் துத்திப் பதக்கம் அணிந்து, கஞ்சுகமென்னும் உடைதரித்து, தோள்களில் பாஜிபந்து வளைமுதலிய ஆபரணங்கள் அணிந்து, கைகளில் நவமணிக்கடகம் புரள, விரல்களில் மோதிரங்கள் மின்ன வணிந்து, தோளில் நவமணி அழுத்திய வில்லையுடைய டவாலியென்னும் பட்டையை மார்பில் அணிந்து, இடையில் கச்சைவரிந்துகட்டி, நவமணி அழுத்திய பிடியையுடைய சுரிகை யென்னும் கத்தியைக் கச்சையில்சொருகி, கால்களில் வீரக்கழல் முழங்க வணிந்து, தனது வடிவத்தை நிலைக்கண்ணுடியில் நோக்கித் தானே மகிழ்ந்து, ஜானகியிடம் சென்று, "ஏ! சீதா! என்னைப் பார்த்தாயா? நான்தான் கோபன்னுவின் சிப்பாய், இந்த வேஷம் உனக்கு எப்படியிருக்கிறது? சொல் பார்ப்போம்" எனக்கேட்க, "உமக்குப் பொருந்தாத வேஷமும் இருக்கிறதோ? நீர் திருக்கலியாணம் செய்யும்பொழுது உமது திவ்யாபரணலங்கார உருவைக்கண்டு களித்தேன். அன்றியும் அயோத்தியில் அரசிளங் குமாரர்கள் வேளைக்கொரு மாதிரியாக அலங்காரம் செய்வதுபோல், நீர் அலங்காரம் செய்து எனக்குக் காட்டியதைக் கண்டு மிகக் களித்தேன். இராஜ்ஜியமிழந்து கானகம் செல்லும்பொழுது தவத்தினர் புனையும் சடைமுடி மர

வரி புனைந்து நிற்கும் உமது திருக்கோலத்தையுங் கண்டு பெரிதும் மகிழ்ந்தேன். இன்று நீர் சிப்பாய் உடைதரித்து எனக்குக் காட்டியதைக் கண்டு நான் பெரிதும் மகிழ்ந்தேன். ஆனால் முதலில் நீர் கொண்ட கலியாணக் கோலமானது உமது திருமேனியின் அழகை முற்றும் மறைத்துவிட்டது, என்று சிந்தித்து வருந்தினதுகண்டு, அயோத்தியில் வந்தபின், விதம் விதமாக நீர் அணிந்த ஆபரணங்களும் உடைகளும் ஒவ்வொரு நிமிஷமும் என்னை மயக்கி உமது கோலத்தைப் பார்ப்பதைக் கூட வெறுத்ததுமுண்டு. அல்லாமலும், நாதா! இந்தக் கோலம் உமது திருமேனிக்கு நன்றாகவில்லையென்று சொன்னதுமுண்டு. மூன்றாவதாக நீர்கொண்ட தவவேடமானது உமது திருமேனியின் அழகை முற்றும் கண்டு, இடையில் மாத்திரம் மரவுரியும், இயற்கையான சிகையை முடிந்த சடைமுடியுமேயன்றி, வேறு இல்லாததினால் களிக்கச்செய்தது. அந்த தவவேடத்தைக் காட்டிலும் மிகுந்த அழகாயிருக்கிறது. அதற்குக் காரணமுண்டு. கலியாணக்கோலம் யாவரும் கண்டு களிக்கப்பூண்டது. அயோத்தியில் விதம் விதமாய் நீர் அணிந்துக்கொண்டது என்னைத் திருப்தி செய்ய மூன்றாவதாக நீர்கொண்ட வேஷம் அடியவரைக் காப்பதற்காக அடைந்த வேஷமென்று தெரிகிறது. இந்த அலங்காரங்கள் மூன்றினும் அடியவரை இரக்ஷிக்கக்கொண்ட வேஷமானதால், இந்த சிப்பாய் வேஷமே நன்றென்று என் மனதில் தோன்றுகிறது" எனச் சீதாபிராட்டி சொல்ல, இவ்வார்த்தையைக்கேட்ட ஸ்ரீராமர், "ஜானகி! நான் கோபன்னவை ரக்ஷிக்கப் போகவேண்டும். உன்னுடன் சந்தோஷமாய்ப் பேசிக்கொண்டிருக்க சமயமில்லை" என்று சொல்லிவிட்டு தன்னுடைய தனுசையும் பாணத்தையும் எடுத்துக்கொண்டு லக்ஷ்மணனிடம் வர லக்ஷ்மணனும் ஸ்ரீராமனைப்போலவே சிப்பாய் வேஷம் தரித்துக் கொண்டிருந்தாராதலால், அண்ணன் தன் பக்கத்தில் வந்ததும், அவர் சரணாரவிந்தத்தில் சாஷ்டாங்கமாக விழுந்து பணிந்து எழுந்து அண்ணாவுடன் ஐதராபாத்திற்குப் பிரயாணமாயினர். இருவரும் புறப்பட்டுப் போய்விட்டார்கள்.

ஐதராபாத்திற்கு அரசனான தானிஷாவானவன் தனது மனைவியோடு இரவுநேரத்தில் சப்பிரமஞ்சத்தில் படுத்து நித்திரை போய்க்கொண்டிருக்கும்பொழுது, திடீரென்று, "ஆ! என்ன ஆச்சரியம்!" எனச் சொல்லிக்கொண்டே எழுந்து உட்கார்ந்தான். அவன் பத்தினியானவள், "நாதா! என்ன இது? இப்பொழுது அயர்ந்து நித்திரை போய்க்கொண்டிருந்தீரே? திடீரென்று எழுந்து உட்கார்ந்து, "இது என்ன ஆச்சரியம்" என்று சொல்லுகிறீரே? ஏதாவது சொப்பனம் கண்டீரா? நீர் நான்கு பக்கமும் மருண்டு மருண்டு விழிக்கப் பார்க்கிறீரே? ஏதோ ஒரு பொருளை இழந்தவர் அப்பொருளைக் காணாது திகைப்பது

போல் நீரும் திகைத்துப்போயிருக்கிறீரே? அடியாள் அதைத் தெரிந்துகொள்ளுமாறு என்னிடம் சொல்லவேண்டும்" என வினவினள். தானிஷா தன் பத்தினியைப் பார்த்து "என் கண்மணி! நான் இன்று தூங்கும்பொழுது கண்ட காக்ஷியையும், நடந்த அற்புதத்தையும், என்னென்று கூறுவேன். நான் ஒரு மஹா புருஷனைக் கண்டேன். அவருடைய திருமேனியின் நிறத்தை என்னென்றுகூறுவேன். கருங்கடலோ! காயாம்பூவோ! மேகமோ! இந்திர நீலக்கல்லோ! குவளைப்பூவோ! பானல்மலரோ! அன்றி, மரகதநிறந்தானோ! பிரியசுந்தரி! அவருடைய இரண்டு கரங்களும் கற்பகத்தருவோ! கனகத்தூணோ! யானை துதிக்கையோ! என்னும்படி முழந்தாள்வரை நீண்டு ஆசானுபாகு என்று சொல்லுவது அவருக்குத்தான் சாரும். ரமணீ! அவருடைய இரண்டுநேத்திரங்களும் அழகிய செந்தாமரையிதழைப்போன்று காதுவரை நீண்டு செவ்வரி கருவரிபடர்ந்து கருணை ததும்பிக் கொண்டிருந்தது. அவர் தலையில் தரித்த பாகையில் ஒரு கலித்துராய்க் கட்டிக்கொண்டிருந்தார். அதிலிருக்கிற வைரம் பச்சைமுதலிய இரத்தினங்களுக்கு விலை மதித்தால் இந்த இராஜ்ஜியமே ஒரு இரத்தினத்திற்குப் போதாது. அவருடைய திருவடியை நோக்கினால், யாரும் அவரே ஈஸ்வரனென்று விழுந்து பணிவரேயன்றி, வேறு அவருடைய அழகைப் பார்த்து நின்றுவிடமாட்டார்கள். கமலமலர்போன்ற இடக்கரத்தில் வில்லும் வலக்கரத்தில் அழகிய பாணமு முடையவராய்க் காணப்பட்டார். அவர் விலைமதிக்கமுடியாததாய் இழையாயிரம் பொன்பெருமான உயர்ந்த சரிகை வேலைசெய்த கஞ்சுகி என்னும் சட்டையைத் தரித்து இடுப்பில் நவமணிப்பட்டை வரிந்துகட்டி, இரத்தினமயமாய் விளங்கும் பிடியுடன் கூடிய உடைவாளை அந்த கச்சையில் சொருகியிருந்தார். அவர் திருவாயின் அழகும் அவர் தந்தபந்திகளின் ஒளியும், அவை தோன்றச் சிரித்த சிரிப்பும், என் அறிவைக் கொள்ளைகொண்டதே! நங்காய்! இதுவெல்லாம் ஆச்சரியமல்ல; அவர் தோளில் ஒரு டவாலி மாட்டியிருந்தார். அந்த டவாலியில் வைரங்கள் பதித்த எழுத்துக்களிருந்தன. அதை ஒவ்வொன்றாகவாசித்துப்பார்த்தேன். அதுவேபெரிய ஆச்சரியமாயிருக்கிறது. பன்னிரண்டுவருஷங்களுக்குமுன் பத்திராசலந்தாலுக்காவுக்குகோபன்னவென்னும் ஒருபிராமணனைதாசில்தாராக நியமித்திருந்தேன். அவன் அந்ததாலுக்காவில் வசூலான ஏழுலக்ஷத்தி ஐயாயிரம் வராகன் கிஸ்தித்தொகையைக் களவாடிவிட்டான். அதற்காக நான் அவனைச் சிறைச்சாலையிலடைத்து வைத்திருக்கிறேன். இன்னுமவன் சிறையில்தானிருக்கிறான். அந்த கோபன்னவின் சிப்பாய் என்று அந்த பில்லையில் எழுதியிருந்தது. இம்மட்டோ? அவர்கூட மற்றொருவர் வந்து அவருக்குப் பின்னே மிகுந்த வணக்கமாய் நின்றுகொண்டிருந்தார். அவருடைய நிறமானது

பசும்பொன் நிறமாகக் காணப்பட்டதெனினும் உடைகளையும் அணிந்திருக்கும் வேஷத்தையும் பார்த்தால், முன் சொன்னவரை ஒத்தவராகவே காணப்பட்டார். அவர்கள் பெயரென்னவென்று கேட்டேன். ஒருவர் பெயர் ராமசிங்காம், மற்றொருவர் பெயர் லக்ஷ்மண சிங்காம், அவரும் கோபன்னாவின் சிப்பாய் என்று தோற்றவே கெம்பெழுத்துக்களால் அவருடைய டவாலியில் எழுதியிருந்தது. இவ்விருவரும் நமது பள்ளியறைக்கு வந்து, "அரசே! கதவைத்திறக்கவேண்டும்" எனக் கதவைத் தட்டினார்கள். நான் இந்த நள்ளிருளில் அநேக காவல்களைக் கடந்து யாரும் அறியாமல் வந்தவராரோ வென்றையுற்று மனதை தைரியப்படுத்திகொண்டு மெள்ள எழுந்து கதவைத் திறந்தேன். அவர் அவர்களில் ராமசிங் கென்பவர் எனக்கு சலாம் செய்து, தான் பத்திராசலத்திலிருந்து வந்தவரென்றும், கோபன்னாவின் சிப்பாய் என்றும், அவர் ஆகுருக்குக் கட்டவேண்டிய தீர்வையைக் கொண்டுவந் திருக்கிறேனென்றும், நீர் ரசீது கொடுத்துப் பணத்தைப் பெற்றுக்கொள்ளுமென்றும் என்னிடம் சொன்னார். "சரி நான் ரசீது கொடுப்பதில் தடையில்லை. பணம் பூராவும் வந்துவிட்டதா" என்றேன். அவன், "மகாராஜ்! யாவும் வந்துவிட்டது. தாங்கள் எண்ணிப் பார்த்து பெற்றுக் கொண்டதின்பேரில் ரசீது கொடுத்தால் போதுமானது" என்றான். உடனே பின்னே நின்றுகொண்டிருந்த லக்ஷ்மணசிங்கானவர், ஒரு பெரிய பையை எடுத்து அதை அவிழ்த்து கொட்டினார். நமக்குச் சேரவேண்டிய வெள்ளி நாணயத்திற்குப் பதிலாய் எல்லாம் தங்கநாணயமாகவே கொட்டினார். நான் அந்த நாணயங்களை எல்லாம் எண்ணி, யாவும் சரியாயிருப்பதைக் கண்டு ரசீது கொடுத்தனுப்பினேன். அவர்கள் உடனே எனக்குச்சலாம் செய்துவிட்டு ரசீதைப் பெற்றுக்கொண்டு போய்விட்டார்கள். அந்தோ! நான் மோசம் போனேன். வந்தவர்களிருவரும் மானிடர்களாகிய கோபன்னாவின் சிப்பாய்களென்றல்லவோ என் மூடமதியால் எண்ணி விட்டேன்? ஐயோ! அவர்கள் மானிடர்களல்லவே? பத்திராசலம் கோயிலிருந்து எழுந்தருளிய ஸ்ரீராமனும் லக்ஷ்மணனுமே, நான் உறுதியாய்ச் சொல்லுவேன், நான் என்ன கசடன். ஆ! அவர்களுக்கு ஒரு ஆசனமும் கொடுத்தேனில்லையே! அவர்களை உபசாரமாய்ப் புகழ்ந்தேனில்லையே! என் அறிவின்மையால் நான் ஏமார்ந்து போயினேன்!" எனச் சொல்லிக்கொண்டிருக்கும்பொழுது கதவைத் தட்டும் சப்தம் அவன் காதில் விழுந்தது. அவன் திடுக்கிட்டு தன் மனைவியைப்பார்த்து, "ஏ! பெண்கள் நாயகமே நான், சொர்ப்பனத்தில் கண்டதை உன்னிடம் சொல்லியது விளையாட்டல்ல; அதோகேள். உண்மையாகவே யாரோ கதவைத் தட்டுகிறார்கள். நீ அடுத்தஅறைக்குப் போய்விடு, நான் கதவைத்திறக்க

வேண்டும்" எனச் சொல்லினான். அவள் அதுபோலவே அடுத்த அறைக்குச் சென்றனள். உடனே தானிஷா வெகு தைரியத்தோடு எழுந்துபோய் கதவைத் திறந்தான். தான் சொற்பனத்தில் கண்ட அதே உருவத்தையுடைய யிரண்டு மகா புருஷர்கள் கையில் வில்லும் அம்புமாய் இருப்பதைக் கண்டு, ஆஹா! இவர்களைத்தானே சற்று நேரத்திற்கு முன் என் சொற்பனத்திற் கண்டேன்; இவர்கள் பாதகமலங்களைத் தொட்டு சலாம் செய்யவேண்டும். இவர்களுக்கு அந்தஸ்தான ஆசனம் போடவேண்டும். நான் செய்த புண்ணியத்தால்தான் இந்த மகாபுருஷர்கள் என்னை இரக்ஷிக்க வந்திருக்கிறார்கள்" என அவன் மனதில் நினைந்தவனாய் மிக்க மரியாதையோடு உள்ளே அழைத்து அவர்களுக்குத் தக்க ஆசனங் கொடுத்து அமரச்செய்தான். வினைவிடா தென்பதுபோல் அவன் எண்ணிய நல்லெண்ணம் மாயைபோல மறைந்து, அவர்களை நோக்கி, "நீங்கள் யார்? இந்த நள்ளிருளில் கொஞ்சங்கூட அச்சமின்றி, எனது பள்ளியறையினிடம் வந்து கதவைத் தட்டி என்னை எழுப்பினீர்கள்? இப்பொழுது இரவு பதினைந்து நாழிகையாயிருக்குமே? கோட்டைக் கதவுகளெல்லாம் சட்டப்படி சாத்தப்பட்டிருக்குமே? நீங்கள் எப்படி அரண்மனைக் கோட்டைக் கதவுகளைத் திறந்துகொண்டு சிறிதும் பயமில்லாது இங்கு வந்தீர்கள்? கோட்டைவாய்க் காவலர்களென்றும், அரண்மனைக் காவலர்களென்றும், நகர் காவலர்களென்றும், பலவிதமாய் நம்மால் நியமிக்கப்பட்ட ஆயுதவீரர்கள் ஆயிரமாயிரமாக ஆங்காங்கு உலாவிக்கொண்டிருப்பார்களே? அவ்வீரர்கள் ஒருவர் கண்ணிலும் அகப்படாமல் நீங்கள் இங்கே வந்தது எனக்கு ஆச்சரியமாயிருக்கிறது. அப்போக்கிரிப் பயல்கள் இரவில் என்ன காவல் புரிகிறார்களோ தெரியவில்லையே; இவ்வளவு அஜாக்கிரதையாகவா கோட்டையையும் அரண்மனையையும் காவல் காத்து வருகிறார்கள்; என்ன சோம்பேறிகள்; மூதேவி பிடித்த தடியன்கள்; என் விஷயம் நன்றாய் தெரிந்திருந்தும் உங்களை உள்ளே அனுப்பினார்களா? எனது பள்ளியறை காவலர்களுமா அப்போர்க்கொத்த பெருந் தூக்கம் தூங்கிக்கொண்டிருக்கிறார்கள். ஒருவனாவது கண் விழித்திருக்கவில்லையா? அவன் கண்களிலாவது நீங்கள் அகப்படவில்லையா? என்ன சாமார்த்தியமுடையவர்கள் நீங்கள். உங்கள் சாமர்த்தியம் இருக்கட்டும். நான் பின்னால் பார்த்துக்கொள்ளுகிறேன். இருக்கட்டும் நீங்கள் இந்த நிசிவேளையில்வந்து, பள்ளி அறையில் படுத்துக்கொண்டிருக்கும் என்னை என் தூக்கத்திலிருந்து எழுப்ப என்ன அவசரம் ஏற்பட்டது? நீங்கள் வந்த காரியம்யாது? சீக்கிரம் சொல்லுங்கள்" என்று தானிஷா சற்றுகோபத்தோடு கேட்டான். ராகவன் தானிஷாவின் வார்த்தையைக்கேட்டு, "அரசே! நாங்கள் பத்திராசலத்திலிருந்துவந்தோம்" என்றனர்.

தானிஷா, "நீங்கள் இந்த இராத்திரி காலத்தில் கள்வர்கள்போல,
நகர் காவலர்கள், கோட்டைக் காவலர்கள், அரண்மனைக் காவலர்
கள், பள்ளியறைக் காவலர்கள், ஆக இவ்வளவு காவலர்களுக்கும்
மறைந்துவந்த அவ்வளவு அவசரமான காரியம் உங்களுக்கு ஆக
வேண்டியது என்னுல் என்ன இருக்கிறது? சொல்லுங்கள்"
என்றான்.

ஸ்ரீராமபிரானுகிய சிப்பாய் ராம்சிங், "ஐயா! ஒருவனுக்கு
ஒரு காரியத்தில் மிகுந்த சிரத்தையிருந்தால், அவன் அக்காரியம்
முடியும்வரை, வேளைக் குறைவு கொள்ளான். இரவென்றஞ்சான்.
காவலர் கண்களிலும் அகப்படான். வேறொருவனுக்கு நிர்பந்
தம் ஏற்படுமென்றும் நினையான். தனது சிரமத்தையும் நோக்
கான். இது தரும நூற்களில் சொல்லப்பட்டிருக்கிறது. ஆகையி
ஞல், நாங்கள் ஒருகாரியத்தில் ஆத்திரமுடையவர்களா யிருப்பதி
ஞல், இரவென்று நினைக்கவுமில்லை; இரவில் காவலர்கள் கண்
விழித்திருந்தால் கடுந்துன்பம் நேருமேயென்று யோசிக்கவு
மில்லை; எங்கள் ஆத்திரம் எங்களுக்கு பயத்தையும் கொடுக்க
வில்லை. அப்பயம் எங்கள் மனதில் ஏற்படாததினுலேயே உங்கள்
அரண்மனைக் காவலர்களின் கண்களில் அகப்படாது வந்து தம்
மைத் தமது தூக்கத்திலிருந்து எழுப்பி நித்திரைபங்கம் செய்யும்
படி ஏற்பட்டது, மன்னியுங்கள்" என்று தாழ்மையாய்க் கூறினர்.

மகா கோபியாகிய தானிஷா, அவரை "நீங்கள் வந்தகாரி
யம் என்னிடத்திலா? அல்லது வேறு யாரிடத்திலா? என்னிட
மாயின் என்னகாரியமாய் வந்தீர்கள் சொல்லுங்கள்? மறைக்காது
சொல்லுங்கள்" எனக் கேட்டதும், ராம்சிங், "வேறு ஒருவரிடம்
காரியமிருந்தால், தங்களிடம் வந்து தங்களை நித்திரையிலிருந்து
எழுப்புவானேன்? தங்களிடத்திலேயே காரியமாய் வந்தோம்.
நீர் அநியாயமாக கோபன்னவென்னும் பிராமணனைப் பன்
னிரண்டுவருஷமாகச் சிறைச்சாலையில் அடைத்துவைத்து இடை
யிடையே கொடூரமான தண்டனைகளையும் தந்து அவனை ஹிம்
சித்து வருகிறுயே? இது நியாயமா? அவனிடம் பொருளில்லை
யென்பது தெரிந்தும், இப்படிக் கொடூரமாக நடத்துவது பாப
மில்லையா? பொருளில்லாதவனைக் கஷ்டப்படுத்துவதும், கண்டிப்
பாய்க் கொடுத்துதான் தீரவேண்டுமென்று வற்புறுத்தி அவனை
அவமானப்படுத்துவது பெரும் பாதகமல்லவா? மானமுடை
யோன் மானத்தைக் காப்பாற்றிக்கொள்ள முயல்வானே யல்லது,
சிறைக்கூடம் போகத் துணியான். இறந்து உண்டாலும் உண்
பானே யல்லது, கையிலிருக்கும் பொருளை மறைத்துக் காவற்
சாலையிலிருந்து கசையடிபடவிரும்பான். அரசன் என்ருல் என்ன?
நீதியைக் கடந்து தனக்கேற்படும் கோபத்தால் தன் மனம்போன
வழியே போய்த் தன்னைக் கெடுக்கவும், இழுக்கவும், நிரகில்
கொண்டுபோய்ச் சேர்க்கவும், நீதியைப்பிரட்டி நிந்தனைக் காளாக்

கவும், நிலையைக் கெடுக்கவும், கெடுத்தபின் தான் நிற்குமிடத்தில்
இருந்தபடியேயிருந்ததையும் போனதையும் நினைந்து நினைந்து
துன்புறச் செய்யும் கொடிய கோபத்திற்கு உன்னையே உறையிட
மாக்கி, அக்கோபத்தையே முன்வைத்து உன்னை மறந்து உன்
னிஷ்டம்போல் ஒவ்வொருவரையும் நீதியில்லாமல் தண்டித்து
ஹிம்சிப்பதோ அரசன் என்பது? அரசே! அரசனென்றல் எல்
லாம் அரசனல்ல. இதை விரித்துச் சொல்லின் இங்கு பயன்படா
தாதலால், நிறுத்திறேம். போகட்டும், நாங்கள் சிறையி
லிருக்கும் கோபன்னவைச் சிறை மீட்டுக்கொண்டுபோகவே உங்க
ளிடம் வந்தோம். வேறு எங்களுக்கு உம்மிடம் வரவேண்டிய
காரியம் எங்களுக்கு ஒன்றுங் கிடையாது" என அவனுக்குச்
சிறிது மஞ்சாது, அவன் நெஞ்சே அவனை அடிக்கவும், அவர்
சொல்லிய வெல்லாம் அவனறிவுக் கெட்டாது அவனைக் கஷ்டப்
படுத்தவும் ஒருவாறு பேசினர்.

இவைகள் யாவையும் உணராத தானிஷா, "சிப்பாய்! நீ
சொல்வது உனக்கே நீதியாயிருக்கிறதோ? அரசுருக்குச் சேரவேண்
டிய ஏழுலக்ஷத்து ஐயாயிரம் வராகனை, கஜானுவில் சேர்க்காது
களவாடித் தன் சொந்த காரியத்திற்குச் செலவுசெய்துவிடலாமா?
தன்பணமா? தனக்கென்ன அதிகாரமுண்டு? களவாடினவன்
கள்ளனல்லவோ? கள்ளனை என்ன செய்கிறது? அவன் செய்த குற்
றத்திற்காக அவனைச் சிறைச்சாலையில் அடைத்து வைத்திருக்கி
றேன். அவன் எனக்கு செலுத்தவேண்டிய தொகை பூராவும்
என்னிடம்வந்து சேர்ந்துவிட்டால் நான் அவனைச் சிறைச்சாலையி
லிருந்து வெளியே அனுப்ப யாதொரு ஆக்ஷேபனையும் கிடை
யாது. அந்த நிமிஷமே விட்டுவிடத் தயாரா யிருக்கிறேன்.
அதிருக்கட்டும், நீங்கள் உங்களிடமிருக்கும் வில்லையும் வாளையும்
காட்டி என்னைப் பயமுறுத்தி சிறைமீட்கவந்தீரா? அல்லது நியாய
மான முறையில் பணத்தைப் பூராவும் கட்டிவிட்டு சிறைமீட்க
வந்தீரா? நீங்கள் என்ன அபிப்பிராயத்தோடு வந்தீர்கள்? வில்
லுக்கும் வாளுக்கும் பயந்தவன் நானல்ல. உண்மையைச் சொல்
லுங்கள்" எனச் சிறிது தானிஷா கடூரமாய்க் கேட்டான்.

உலகரக்ஷகராகிய ஸ்ரீராமன், தானிஷாவை உற்று நோக்கி
"இராஜாதிபனே! நீங்கள் உண்மையறியாமலும் யோசியாமலும்
உங்களுக்குண்டாகிய கோபத்தால் கோபன்னவிற்குச் செய்த தண்
டனைக்காக உன்னை நாங்கள் எதுவும் செய்ய முடியும். ஆனல்
பணத்தைப் பூராவும் கட்டிவிட்டு சிறை மீட்கவேண்டுமெனக்
கருதி வந்தவர்களேயல்லது, உம்மைப்போல் நீதி கெட்டு, எங்
கள் வாளையும் வில்லையும் கொண்டு உன்னை பயப்படுத்தி அவ
ரைக் காவற்சாலையிலிருந்து விடுவித்துக் கொண்டுபோக வந்த
வர்களல்ல. உம்மைப்போல் அநீதி அரசன், கொடுங்கோன் மன்
னன், கொடிய கோபி, எனப் பலரும் விளம்ப, பணத்தையே

பெரிதெனக்கொண்டு பொன்ரைக் கெடுத்துக்கொள்ளப்பட்டவர்கள் நாங்களல்ல. நன்றாய் உங்கள் மனதில் வைத்துக்கொள்ளுங்கள். நாங்கள் பணத்தை பூராவும் கட்ட சித்தமாயிருக்கிறோம். கோபன்னுவை விடுதலைசெய்ய யென்ன சொல்லுகிறீர்கள்? நாங்கள் சீக்கிரம் போகவேண்டும்" எனக் கேட்டார்.

அரசன் என்னும் அகம்பாவத்தையுடைய தானிஷாவானவன், தான் காட்டிய கோபத்திற் கஞ்சாது "நீங்கள் கோபன்னுவைச் செய்த தண்டனைக்காக நாங்கள் உன்னை எதுவும் செய்ய முடியும்" எனச் சொல்லிய தீரவார்த்தையாலும், அவர்களின் ஒள்ளிய கம்பீரத் தோற்றத்தினாலும், அவர்கள் யாராயிருக்குமென்றுஞ் சிறு சந்தேகத்தை மனதில் கொண்டு ராம்சிங்கைப் பார்த்து "நீங்கள் கோபன்னுவிற்காகக் கொடுக்க வேண்டிய தொகை பூராவையும் கட்டுவீர்களென்று எனக்கு நன்றாய்த்தெரிகிறது. இருந்தாலும் நீங்கள் அவசரப்படாது, சிறிது பொறுமையோடு உட்காருங்கள். நான்கேட்கும் கேள்விக்கு மன ஆறுதலுடன் தயவுசெய்து தக்க விடை கொடுங்கள். உட்காருங்கள். நீங்கள் யார்? உங்கள் உண்மையான பெயரென்ன" என்றான்.

ராம்சிங், "ஐயா! நாங்கள் உங்கள் கேள்விகளுக்கு பதில் சொல்லிக்கொண்டிருக்க எங்களுக்கு அவகாசமில்லை. தவிரவும், அரசர் பெருமானை உம்முடன் உட்கார்ந்து பேச அந்தஸ்துடையவர்களல்ல. உம்மிடம் உத்தியோகம் பார்த்துக்கொண்டிருந்த கோபன்னுவென்னும் புண்ணியவானுடைய சிப்பாய்கள். நாங்கள் அவர் கட்டவேண்டிய பணத்தைக் கட்டிவிட்டு தங்களிடம் ரசீது வாங்கிக்கொண்டு போவதற்கு வந்திருக்கிறோமென்றார்.

தானிஷா, "நான் ரசீது கொடுக்க யாதொரு ஆக்ஷேபனையும் கிடையாது. ஆனால், எனக்குச் சேரவேண்டிய தொகை பூராவும் உங்களிடமிருக்கிறதா? அவ்வளவு தொகையையும் உங்களோடு சுமந்துகொண்டு வந்தவர்கள் யார்? அந்த கிஸ்தி தொகை பூராவும் எங்கே வைத்திருக்கிறீர்கள்?"

ராம்சிங், "உமக்குக் கோபன்னு கொடுக்கவேண்டிய தொகை வந்து சேரவேண்டுமே யொழிய, அது எங்கிருக்கிறது? அவ்வளவு தொகையையும் யார் சுமந்துகொண்டு வந்தது? என்னும் இந்த கேள்விகளெல்லாம் உமக் கென்னத்திற்கு? உமக்கு சேரவேண்டிய தொகையைப் பெற்றுக்கொண்டு ரசீது கொடுத்துவிட்டால் எங்களுக்குப் போதுமானது.

தானிஷா, "அதற்கல்ல, ஒரு வண்டியில் கட்டவேண்டிய பணம் பூராவும் ஏற்றினால் மாடு இழுத்துக்கொண்டுவர கஷ்டப்படுமே? ஏழுலக்ஷத்தி ஐயாயிரம் வராகனல்லவா? எவ்வளவு பாரமிருக்கும்? அவ்வளவு பாரமுள்ள தொகையை நீங்களிருவரும் தூக்கிக்கொண்டு எப்படி வரமுடியும்? இந்த சந்

தேகத்தினால்தான் 'தொகை பூராவும் வந்திருக்கிறதா' என்று உங்களைக் கேட்டேன்.

ராம்சிங், "அரசர் பெருமானே! உங்களுக்கு அந்த சந்தேகங்களெல்லாம் வேண்டாம். நாங்கள் கொண்டுவந்த தொகையை தயவுசெய்து எண்ணிக்கொள்ளுங்கள். அதில் ஒரு காசு குறைந்தாலும் நான் கொடுக்கத் தயாராயிருக்கிறேன்.

தானிஷா, "ஐயா! நீங்கள் நிரம்ப நல்லவரா யிருக்கிறீர்கள். உங்கள் பெயரென்ன? அதை யின்னமும் சொல்லமாட்டேன் என்கிறீர்களே? பெயரைச் சொல்லுங்கள்."

ராம்சிங், "மகுடமுடி மன்னவா! என் பெயர் ராம்சிங். இவர் பெயர் லக்ஷ்மண சிங். இன்னும் என்ன சொல்லவேண்டும்?

தானிஷா, "நீங்களிருவரும் சகோதரர்களோ? அல்லது நெருங்கிய பந்துக்களோ? அல்லது அன்னியர்களா? அல்லது அத்தியந்த பிரிய சினேகர்களா? நீங்களிருப்பது பத்திராசலம் தானா? அல்லது வேறு அந்த பத்திராசலத்தை யடுத்த ஊரா?"

ராம்சிங் "கோவே! நாங்கள் பிரிய சினேகிதர்களும், உறவினர்களும், நெருங்கிய பந்துக்களும் அன்னியர்களுமல்ல. சகோதரர்களே. இவன் என்னுடன் பிறந்த இளைய சகோதரன். எனக்குத்தம்பி. நாங்களிருவரும் கோபன்னுவின் சிப்பாய்களாய் அமர்ந்ததிலிருந்து பத்திராசலத்தில்தான் இருக்கிறோம். ஆனால், எங்கள் சொந்தவூர் பத்திராசலமல்ல. உத்தரதேசத்திலே அயோத்திமா நகரமென்றொருபட்டணமுண்டு. அந்தபட்டணத்தில் இருப்பவர்கள்தான் நாங்கள். எங்கள்சொந்தவூரும் அதுதான். பிழைப்புக்காகவந்து பத்திராசலத்திலிருக்கிறோம்.

தானிஷா. "அப்படியா? சரி, நீங்கள் கோபன்னுவிற்காகக் கொடுக்கவேண்டிய முழுதொகையும் எங்கே? நான் சரியாய் எண்ணிக்கொண்டு உங்களுக்குக் கொடுக்கவேண்டிய ரசீதைக் கொடுத்துவிடுகிறேன். நீங்கள் பெற்றுக்கொண்டு சுகமாய் ஊர்போய்ச் சேருங்கள்.

ராம்சிங். "உடனே, இளைய பெருமாளாகிய லக்ஷ்மணனை ஸ்ரீ ரகுநந்தனன் பார்த்து," அப்பா! லக்ஷ்மணசிங், நீ வைத்துக்கொண்டிருக்கும் அந்த பணத்தை அவரிடம் கொடுத்துவிடு, எனக் கூறினர். அக்கணமே லக்ஷ்மணசிங், ஓர் மூலையில் நிறுத்தி வைத்திருந்த வொரு பெரிய பையை யெடுத்து, தானிஷாவின் முன்னே அவிழ்த்து ராமடங் கென்னும் பத்தரைமாற்றுத் தங்க மோகராவாகக்கொட்டி ஒரு அம்பாரமாகக் குவித்தார். தானிஷா, தனக்கு வரவேண்டிய வெள்ளிநாணயத்திற்குப் பதிலாக எல்லாம் தங்கநாணயமாகக் குவித்திருப்பதைப்பார்த்து வியப்படைந்தார். "நான் சிம்மாசனம் ஏறியதிலிருந்து இந்நாள்வரை இவ்வளவு பெருங் குவியலான தங்கநாணயங்களைக் கண்டேனும் பார்த்தது

மில்லை. இவ்வளவையும் எண்ணவேண்டுமென்றால், யாரால் முடியும்? கோபன்னா வெள்ளி நாணயங்களுக்குப் பதிலாய்ப் பொன் நாணயங்களாகக் கொடுத்து வைத்திருக்கிறேன், என்று சொல்லியது உண்மையாகவல்லவோ யிருக்கிறது. அவன் இவ்வளவு பொன் நாணயங்களையும் நமக்குக் கொடுக்கவேண்டிய வெள்ளி நாணயங்களுக்குப் பதிலாய் எங்கே சம்பாதித்து இவர்களிடம் கொடுத்து வைத்தான்; இது வெகு விந்தையா யிருக்கிறதே! அவனை எத்தனை முறைக்கேட்டேன்? கேட்கும்போதெல்லாம் தன்னிடம் ஒரு காசுங் கிடையவே கிடையாதென்று நம்மால் விதிக்கப்பட்ட தண்டனைகளையெல்லாம் அனுபவித்தானே? இவ்வளவு திரண்ட செல்வத்தை யுடைய யிவன், எல்லாவற்றையும் இவர்களிடம் கொடுத்து தான்சிறைச்சாலையில் வாசம் செய்வானேன்? அவன் ஈவு இரக்கம் பச்சாதாபம் என்னும் குணங்களால் தனது செல்வங்களையெல்லாம் தானமாகக் கொடுத்துவிட்டு தான் தம்படிக்கும் வழியில்லாத ஏழையாயினனோ! இதன் காரணம் ஒன்றும் விளங்கவில்லையே" எனப் பலவாறு யோசனை செய்துக்கொண்டிருந்து மதத்திற் கேற்ற தனது இயற்கைக் குணமாகி முன்கோபத்தால் இவனெண்ணங்களெல்லாம் மறைந்து, ராம்சிங்கைப் பார்த்து "கோபன்னா செலுத்தவேண்டிய தொகை பூராவும் சரியாய் இதில் இருக்கிறதா?" என்றான்.

இவன் மகம்மதியனானதால், அவன் சாதிக்கேற்ற முன்கோபமும், அவசரமும், அறிவில்லாப் பேச்சும் இயற்கையாதலால், அவனிடம் ஒன்றும் நியாயம் சொல்லப்படாதென்றும், அவன் கேள்விக்குமாத்திரம் பதில் சொல்லவேண்டுமென்றும் தீர்மானித்துக்கொண்டு, "ஐயா! என்னைக் கேட்பானேன்? தாங்கள் எத்தனை தடவை வேண்டுமானாலும் எண்ணிக்கொள்ளுங்கள். உங்கள் மனம் திருப்தி யடைந்தபின் எனக்குக் கொடுக்கவேண்டிய ரசீதைக் கொடுத்தால் போதுமானது" என அவன் கேள்விக்கு மாத்திரம் பதில் சொல்ல, தானிஷா, "ஐயா! நான் இந்த பணத்தை எண்ணவேண்டுவதில்லை. உங்கள் வார்த்தையை நான் நம்புகிறேன். ஆனால், உங்களுக்கு ரசீது கொடுக்க வேண்டுமல்லவா? அதற்குரிய பத்திரமும் எழுதுகோலும் மைக்கூடும் என்னிட மில்லையே? என்ன செய்கிறது" எனச் சொல்லக் கேட்டதும், ராம்சிங், ஏ! குடிகளின் இறைவனே! தாங்கள் இப்படி சொல்லுவீர்களென்று எங்களுக்கு முன்னமே தெரியுமாதலால் நாங்கள் வரும்பொழுதே பத்திரம் எழுதி தங்கள் கை எழுத்து மாத்திரம் போடவேண்டுமென்னு மட்டில் எழுதிக்கொண்டு வந்திருக்கிறோம். அதை நீங்கள் படித்துப் பார்த்துத் தங்கள் கையெழுத்து மாத்திரம் செய்தால் போதுமானது" எனச் சொல்லிக் கொண்டே தன் சொக்காய் ஜேபியில் வைத்துக்கொண்டிருந்த பத்திரத்தை யெடுத்து தானிஷாவிடம் கொடுத்தான். அவன்

அதை முற்றும் படித்துப் பார்த்து, "நீங்கள் எழுதியிருப்பதெல்லாம் எழுதவேண்டிய இராஜாங்க சட்டவழியே நல்ல யோசனையோடு இனி ஒருவர் பிழை திருத்தஞ் செய்யாமல் வெகு நன்றாய் எழுதியிருக்கிறீர். எனக்குத் திருப்தியே. ஆனால், நான் கையெழுத்து போட எழுதுகோலும் மையு மில்லையே?

எங்கும் நிறைந்த பரம்பொருளும், பைந்நாகத்தையே பாயாய்க் கொண்டவனுமான பரந்தாமனாகிய ஸ்ரீராமன் மடமதியனாகிய தானிஷா சொல்லும் ஒவ்வொரு சாக்குபோக்கையும் கேட்டு, உள்ளே "இன்னும் இவன் என்ன சாக்குகள் சொல்லுகிறான் பார்ப்போம்" என தனக்குத்தானே ஒருவித சந்தோஷத்தை யடைந்து, "இராஜ பிரபூ! அதற்காக நீங்கள் கவலைப்பட வேண்டாம். எழுதுகோலும் கொண்டு வந்திருக்கிறேன்" என்று சொல்லி, மிகவும் அழகான எழுதுகோலொன்றை தானிஷாவின் கையில் கொடுத்து, "ஐயா! மைக்குப் பதிலாக நீர் தாம்பூலமருந்தி துப்பின வட்டிலில் இதைத் தோய்த்து கை எழுத்திட்டால் போதுமானது" என்று சொல்லவும், அவ்வாறே தானிஷா தான் தம்பலம் உமிழும் வட்டிலில் எழுதுகோலைத் தோய்த்து, கையெழுத்திட்டு ராம்சிங்கென்னும் தீனதயாளனது கையில் கொடுத்தான். அவர் அதை வாங்கித் தனது சட்டைப்பையில் போட்டுக்கொண்டு, "மஹாராஜ்! (சலாமாலேகோ) போய் வருகிறோம்" என்று சொல்லிவிட்டு இருவரும் தானிஷாவிடமிருந்து போய் விட்டார்கள்.

அண்ட சராசரங்களையும் வயிற்றில் வைத்துக்கொண்டிருக்கும் ஸ்ரீமன் நாராயணன் அவ்விடத்தைவிட்டு நீங்கியதும், தானிஷா அதுவரை அவருடைய மாயையில் மயங்கியிருந்து, பின் தெளிந்து எழுந்து தனது மாளிகை போய்ச் சேர்ந்தான். சேர்ந்தவன் தனது பத்தினியோடும் மற்றிதரரோடும் பேசாது ஒரு தனி அறையில்போய் உட்கார்ந்துக்கொண்டு அவர்கள் யாரென்பதை சிந்திக்கலாயினன். அவன் மனதில் என்ன தோன்றியதோ தெரியவில்லை. சிறிதுநேரம் சென்றதும், அவனுக்கவனே பெருமூச்சுவிட்டு, "ஆ! இது என்ன அச்சரியம்! அவர்கள் கோபன்னாவின் சிப்பாய்கள்தானா? என்ன! அவர்களையும் அவர்கள் அணிந்திருந்த ஆபரணங்களையும், உடுத்தியிருந்த உடுப்புகளையும் பார்த்தால்; பெரிய சக்ரவர்த்திகளுக்கும் கிடைப்பதரிதாயிருந்ததே? ஆ! அவர்கள் திருமுகங்களையும், அம்முகங்களிலுள்ள கண்களையும் நோக்கில், இவ்வொரு உலகென்றி, பதினான்கு உலகங்களுக்கும் சக்ரவர்த்திகள் அவர்கள்தானென்றல்லவோ தோன்றியது. இது என்ன விந்தை! நம்போன்ற எத்தனையோ அழகுடைய அரசர்களை நாம் பார்த்திருக்கிறோம். இவர்களைப்போல் பதினாறு கலைகளை யுடையவனும், குறைதல் வளர்தலாகிய சாபத்தைப் பெற்றவனுமான சந்திரனும் மயங்கி

நிற்கும் அழகினையும் அண்டசராசரங்களிலுள்ள எல்லா ஜீவன்
களும் அவர்கள் காலடியில் விழுந்து வணங்கும் வசீகரத்தையு
முடைய அழகிய முகங்களை நானிதுவரையிலும் பார்த்ததில்
லையே. கனவிலும் கண்டதில்லையே. என் புத்தி நிலைதடுமாறு
கிறதே. ஆ! அவ்வொள்ளிய முகங்களில் காதளவோடி நின்ற
கண்கள் செந்தாமரை மலரைப்போலல்லவோ யிருந்தது.
அச்செந்தாமரை மலரினை யொத்த கண்களில் கருணையே
ததும்பியிருந்ததே. என்ன பேரழகு. அவ்வழகினுக் கேற்ற
உருண்டு திரண்டெழுந்த புஜங்களும் அகன்ற மார்பும், அதற்
கேற்ற அளவோடு கூடிய கரங்களும், தேஜோமயமான திரு
மேனியும், கம்பீரத் தோற்றமும், என்னையும் என் புத்தியை
யும் மயக்கியதே. என்ன என்ன திர்ஷ்டம்? இவர்கள்
நேரில் வருவதற்கு முன்னமேயே சொர்ப்பனங்கண்டும் நான்
ஏமார்ந்து விட்டேனே என் பேதைமையை யென்னென்று
கூறுவேன்? அவர்கள் திருப்பாதங்களில் விழுந்து அவர்களைத்
தரிசியாது "நீங்கள் யார்? எந்த ஊர்? உங்கள் பெயரென்ன"
எனப் பலவாறு எதிர்த்துப் பேசினேனே! அப்படி என் மதியீ
னத்தால் கேட்டும் அவர்கள் சினங்கொள்ளாது பொறுமையோடு
பெயர் இராம்சிங் லக்ஷ்மண சிங்கென்றும் உண்மை கூறினரே.
ஊர் கேட்டதற்கும் அயோத்தியெனத் தெளிவாய்ச் சொன்னார்
களே. இதனாலேயே கோபன்னாவின் பக்திக்காக ராமலக்ஷ்மணரே
சிறையிலிருந்து விடுவிக்க வந்தாரென்று என் மூடமதிக்கு முன்
னமே எட்டாதுபோயிற்றே. ஆ! ஆரூருக்குப் பன்னிரண்டு வரு
ஷமாய்க் கட்டவேண்டிய தொகையைக்கட்டாது சிறையிலிருக்கும்
கோபன்னாவின் பக்திக்கு வியந்து அவன்பால் கருணைகொண்டு
அவரது சிப்பாய்களென்று தன் பெருமையையும் கவனியாது
இழிவாய்க் கூறினரோ. அந்தோ! அவர்கள் திருவழகையும் திரு
மேனியையும் கண்டும், அவர் சொல்லியது போலவே அவரை
இழிய உத்தியோகஸ்தரென்றே நினைந்தேனே. வேத வேதங்க
ளும் காணுதற்கரியதாய் ஈஸ்வரன் ஸ்ரீராமனாக என்னிடம் வந்
தும், என் அறிவின்மையால் "வாருங்க" ளென்று சொல்லி,
அவர்களுக்கு உபசாரணை செய்யாமலும் மனமாரவும் வாயாரவும்
அவர்களைப் புகழாமலும், அவர்கள் போகும்போது அவர்களுக்
குப் பிரதி மரியாதையாக சலாம் செய்யாமலும் இருந்துவிட்
டேனே. இனி நானந்த பரமபுருஷர்களை எப்பொழுது காண்
பேன்? அவர்களைக் காணாது எவ்வாறு நான் வாழ்வேன்! நான்
பார்க்கும் ஒவ்வொரு பொருளும் அவர்களாகவே என் கட்புல
னுக்குத் தோன்றுகிறதே! அப்புருஷோத்தமர்களைப் பார்த்த கண்
கள் பிறிதொரு பொருளைப் பார்க்க விரும்பவில்லையே! அப்படிப்
பார்த்தாலும் எல்லாம் அநித்திய மானதென்றும், அசுசி உடைய
தென்று மல்லவோ தோன்றுகிறது! இப்படியே யென்னிருகண்

களும், அநித்தியமும் அசுசியுமான பொருள்களைப் பாராது,
எங்கும் நிறைந்த அகண்ட பரிபூரண சச்சிதானந்த சிவப்பிர
காச வெள்ளலை மீண்டும் பார்க்கும் வரையில் என்னை மற்றொரு
பொருள்களைப் பார்க்கவொட்டாது, அந்தகனைப்போல் வைத்தி
ருக்கப்படாதா; இதற்கு நான் என்ன செய்வேன்? சரி, சரி, அவ
னது அடியவனான கோபன்னாவிருக்கும் சிறைக்கூடம் சென்று,
அவன் இருதாட்களிலும் விழுந்து சலாம் செய்து, "கோபன்னா!
நீ எனது ஆரூருக்குக் கொடுக்கவேண்டிய ஏழுலக்ஷத்து ஐயாயி
ரம் விராகனையும் ஒரு செம்பால்செய்த தம்படியும் குறை
யாது நீ சொல்லியதுபோலவே வெள்ளி நாணயங்களைக் கொண
ராது எல்லாம் பத்தரை மாற்றுப் பசும்பொன் நாணயங்களா
கவே என் கண்முன் ஒரு மலையாகக் கொட்டிக் குவித்துவிட்டு
ரசீதுபெற்றுச் சென்ற பரமபுருஷர்களைக் காட்டு" என்று அவனை
இரஞ்சி கேட்டால் அவன் மனமிரங்கி ஒருவேளை காட்டினாலும்
காட்டுவான். ஆமாம்!—வாஸ்தவம்!...அவர் எப்படி நமக்குக்
காட்டுவார்? அவர்கள் நம்மிடம் வரும்பொழுது அவரிடம்
சொல்லிவிட்டா வந்தார்கள். அவர்கள் பேசிய பேச்சினாலேயே
அவர் அறியாது அவர் கொடுக்கவேண்டிய பணத்தை மாத்திரம்
கொடுத்துவிட்டுப் போய்விட்டார்களென்று நன்கு விளங்குகிறது.
அவரை எப்படி நாம் அந்த மஹா புருஷர்களைக் காட்டென்று
கேட்பது? நாம் நம் அறிவின்மையால் அவர் கோபிகா நேசனு
டைய பரம பக்தரென் றுணராது நமது அகம்பாவத்தாலும்,
மமதையாலும், அவருடைய பொறுமைக் குணத்தையும், நம்மி
டம் பேசும்போது அவர் திருவாயிலிருந்து வந்த அமுதம்போ
ன்ற வென்மொழியையும், சாந்தமான பெருந்தன்மையையும்
கவனியாது அவருக்கு நம்முடைய முன்வினைப் பயனால் கொடூர
மான தண்டனைகளை விதித்துத் துன்பக்கடலில் வீழ்ந்து வருந்
தும்படி செய்தோமே. அந்தோ! நான் அந்தத் தண்டனைகளை
விதித்த காலத்தில் சிறிதும் மனங் கலங்காது தன் மனம் புண்
பட்டபோதிலும் வெளிக்காட்டாது என்னாலளிக்கப்பட்ட தண்
டனைகளை யேற்று அநுபவித்த பொறுமைக் குணங்கள் கூட நமக்
கில்லாது போய்விட்டதே. ஈசனுடைய அடியார்களுக்கு துன்பம்
செய்தால், ஈசன் பொறுப்பானா? என்னவானாலுஞ் சரி; கோப
ன்னாதான் எனக்கு ஆசாரியன் அவரைக்கொண்டுதான் ஸ்ரீராம
லக்ஷ்மணனைக் கண்டு சேவை செய்யவேண்டும். வேறு வழி
கிடையாது" என அவன் மனம்போனபடி சொல்லி
யும், வருந்தியும், அயர்ந்தும், அழுதும், ஆசையால் ஆரவாரித்
துப் புகழ்ந்தும்; தான் ஏமாந்ததையால் தன்னைத்தானே நிந்
தித்தும், நெஞ்சம் கலங்கியும்; சிறிதுநேரம் ஒன்றுந் தோன்
றாதிருந்து, மீண்டும் ஸ்ரீராம சேவையில் மயங்கி, ஏ! பாழும்
இரவே? நீ எப்பொழுதுதான் விடிவையோ தெரியவில்லையே;

நீ விடிந்தாலன்றி, நான் கோபன்னவைப் பார்க்க முடியாதே? இல்லை. இப்பொழுதே எழுந்து சிறைச்சாலை அதிகாரிக்குச் சொல்லி அனுப்பி கோபன்னவை சிறையிலிருந்து விடுத்து அவரை விசாரித்து அந்த மஹா புருஷரைத் தெரிந்துகொள்ளலாமென்றால், நாம் இரவில் செய்யும் காரியமானது ஊரெங்கும் தெரியுமே. மேலும் குற்றவாளிகளை வாரண்டுடன் பிடிக்கவோ; அவர்களுக்கு சிக்ஷை விதிக்கவோ, சிறையிலிருந்து வெளிப்படுத்தவோ, இவைகளுக்குரிய காலம் பகல்காலமென்று சட்டமிருக்கிறதே. சிறைச்சாலையின் கதவை சூரியோதயத்தின் பின்னே திறக்க வேண்டுமென்று நாமே உத்தரவு செய்திருக்கிறோமே. அவ்வுத்திரவை நாமே மாற்றுவதென்றால், அதற்குப் போதிய காரணம் சொல்லவேண்டுமே. நான் மகம்மதிய மதத்தில் பிறந்துவிட்டதால் சொல்ல முடியாது போயிற்றே. என்னைச் சார்ந்தவர்கள் நான் இந்துமதத்தில் பற்றுடையவனென்று இசுலாத்திற்கு மாறுதலாய் நடப்பவனென்று என்மீது குறை கூறி, நான் இராஜ்ஜிய மாளுவதற்கு உரியவனில்லை. இக்காலத்திற்கு மாறுதலாக நடந்தானென்று சொல்லி என்னை இராஜ பதவியிலிருந்து விலக்குவதற்கும் மகம்மதிய சட்டம் இடம் தருமே. பட்டாபிஷேகத்தின்போது செய்துக்கொடுத்த பிரமாணத்திற்கு மாறுதலாக நாம் நடந்தால், அது அசம்பாவமாயிற்றே. நான் தர்பாரிலிருந்து மகம்மதியர்களுக்கும் இந்துக்களுக்கும் சமமாக நடந்தாலன்றி, நம்மை நீதிவானென்று கருதார்கள். நாம் தர்பாரிலிருந்து கோபன்னவை வருவித்து அவரிடம் நேற்று வந்தவர்களைக் காட்டென்று கேட்கவும், அவர் செய்த குற்றத்தை விடுவித்து அவருக்கு மரியாதைசெய்யவும், எனக்கதிகாரமுண்டன்றி, இந்த இராத்திரியில் சென்று சிறையிலிருக்கும் கோபன்னவைக் காண்பதுவும், அவருடன் பேசுவதும், உனது சிப்பாய்களைக் காட்டென்று கேட்பதுவும், எனது நீதிக்கு மாறாகும்” எனப் பலவாறு யோசனை செய்துக்கொண்டே விடியும் நேரத்தை யெதிர்பார்த்திருந்தான்.

கோபன்னவின் சிப்பாய்களாய் வந்து தானிஷாவுக்குக் கொடுக்கவேண்டிய ஏழுலக்ஷத்து ஐயாயிரம் பொன் நாணயங்களைக் கொடுத்துவிட்டு ரசீது பெற்றுச் சென்ற இரு சகோதரர்களாகிய ஸ்ரீராம லக்ஷ்மண ரிருவரும் நேராய்க் கோபன்னவை அடைத்து வைத்திருக்கும் சிறைச்சாலைக்குப் போய்த் தன்னையே தியானித்து சோர்ந்து மயங்கிப் படுத்துக்கொண்டிருக்கும் கோபன்னவின் இருட்டறைக்குள் போய் நின்று ஸ்ரீராகவன் தம்பியைப் பார்த்து, “லக்ஷ்மணா! நமக்கு சர்க்கார் பணத்தைக்கொண்டு ஆலயம் அபரணமெல்லாம் அமைத்த காரணத்தால் சிறைச்சாலை புகுந்து பன்னிரண்டு வருஷமாகக் கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கிறான். இவன் நமது சேவையை யிழந்து உயிருடன் வாழத்

தரியாதவனாகி இன்று இரவிலேயே விஷத்தை யருந்தி உயிரை விட்டுவிடத் துணிந்து, விஷத்தை ஒரு கிண்ணத்தில் குழப்பித் தன்பக்கத்தில் அதோ வைத்துக்கொண்டிருக்கிறான் பார். ஆகையினால், நீ ஆதிசேஷனாகையாலே சர்ப்பரூபமாய் சன்னலின் வழியாய் நுழைந்து, சிறைக்கூடத்துட் சென்று விஷக்கிண்ணத்தை உருட்டிவிட்டு அந்தக் கிண்ணமிருந்த விடத்தில் இந்த ரசீதை வைத்துவிட்டு வந்துவிடு” என்று சொல்ல, லக்ஷ்மணர் உடனே ஒரு சர்ப்ப ரூபத்தை யடைந்து, சிறைச்சாலைக்குள்ளே நுழைந்து விஷக்கிண்ணத்தை உருட்டிவிட்டு அந்த கிண்ணமிருந்த யிடத்திலேயே ரசீதை வைத்துவிட்டு திரும்பிவந்து ஸ்ரீராமனுடன் சேர்ந்துகொண்டார். இருவரும் அந்த நிமிஷமே சிறைச்சாலையிலிருந்து மறைந்து சென்றார்கள்.

பரமபக்தரான கோபன்னவானவர், ராமத்தியானத்தினிடையே தன்னை மறந்து அயர்ந்து தூங்கிக்கொண்டிருக்கும்பொழுது தான் தானிஷாவுக்குக் கட்டவேண்டிய ஏழுலக்ஷத்து ஐயாயிரம் வராகனையும் பத்திராசலத்திலிருக்கும் ஸ்ரீராமச்சந்திரன் தன்னுடைய சிப்பாயாக வந்து தானிஷாவிடம் பணத்தைக் கட்டிவிட்டு தன்னிடம் வந்து ரசீதைக் கொடுத்துவிட்டு சென்றதாகவும் பொழுது விடிந்ததும் தானிஷாவானவன் சிறைச்சாலையிலிருந்த தன்னை வருவித்து அனேக மரியாதை செய்து தன்னைப் பத்திராசலம் தாலுக்காவிற்கு அனுப்பத் தான் சென்று, கௌதமிநதியில் ஸ்நானமாடி பத்திராசல பர்வதத்தைப் பிரதக்ஷணம் செய்து, பத்திராசல ராமன் சன்னதியில் சென்று ஸ்ரீராகவனைச் சேவை செய்துக் கொண்டிருப்பதாகவும், சொர்ப்பனங் கண்டு விழித்தெழுந்தார். இவர் கண்டது சொர்ப்பனமானதால், தான் சிறையிருப்பதை யுணர்ந்து கோபன்னவானவர், “ஆ! நான் கண்டது சொர்ப்பனமா? உண்மைபோல் தோன்றிற்றே! பன்னிரண்டு வருஷமாய் நானிழந்திருந்த பத்திராசலத்தில் எழுந்தருளி யிருக்கும் ஸ்ரீராமனுடைய திவ்விய சேவையைக் கண்டு தரிசித்துக்கொண்டிருந்தேனே! அந்தோ! பின் கண்விழிக்க சிறையி லிருந்தவன் சிறையி லிருந்தவாறேயிருக்கிறேனே! இந்த பாவிக்கு மறுபடியும் சேவைதர விரும்புவனோ! மீண்டும் தன் திருப்பணி கைங்கரியங்களைச் செய்து அவன் திருத்தாட்களில் விழுந்து கிடக்கக் கிருபை செய்வனோ! இனி கிடையாது. விஷத்தை யருந்தி மரணத்தை யடையவேண்டுவதேதவிர வேறு வழியில்லை. ஏ சிதாபதே! இதோ உன் திருவடியை வந்தடைகிறேன்” எனச் சொல்லிக்கொண்டே அந்த நள்ளிருளில் தனது பக்கத்தில் வைத்திருந்த விஷக்கிண்ணத்தை தடவிப் பார்க்க விஷக்கிண்ணம் காணுமல் ஒரு பத்திரமொன்று தன் கையில் அகப்பட்டது. உடனே தன்னிடமிருந்த சக்கிமுக்கி கல்லை தட்டி விளக்கேற்றி அந்த வெளிச்சத்தில் அந்த பத்திரத்தைப் படித்

துப் பார்த்து, தான் கட்டவேண்டிய பணத்தைப் பெற்றுக் கொண்டு தானிஷா கொடுத்த ரசீதென்று தெரிந்துகொண்டார். வெளிச்சத்தில் விதைக்கின்ன மெங்கே என்று பார்த்தார்? அது ஒருவர் கையால் உருட்டப்பட்டதுபோல் உருண்டு கவிழ்ந்திருப்பதையுங் கண்டார். ராகவனுடைய கருணையை நினைந்து ஆரு மகிழ்வடைந்தார். "எம்பெருமானே! அடியேனிடத்து இன்று உமக்குக் கருணை பிறந்தது. என்னுடைய சிப்பாய்களைப்போல உருவெடுத்துத் தானிஷாவிடம் சென்று நான் கட்டவேண்டிய கிஸ்தி தொகை முற்றும் கட்டி அவரிடமிருந்து ரசீதும் பெற்று என்னிடம் தந்தீரே! உம்மை ரக்ஷகனென்று சொன்னாலன்றி, வேறு ஒருவரை ரக்ஷகனென்று சொல்லத்தகுமா? தகாது. அநந்த கல்யாணகுணமுடைய உன்னை, தஞ்சமென் றடைந்தவர்களுக் கொரு குறைவுமில்லை என்று உலகத்திலுள்ள சேதனர்கள் அறிவதற்கு நானொரு சாக்ஷியாயினேன். ஆ! ஆ! உன் பெருமையே பெருமை. உன் கருணையே கருணை" என நினைந்து ஆநந்த வெள்ளத் தழுந்தியிருந்தார்.

எப்பொழுது பொழுது விடியுமென்று எதிர் பார்த்துக் கொண்டிருந்த தானிஷாவானவர், "எப்பொழுது பரமசாதுவான ராமதாசரை சேவிப்பேன்? ஐயா! இவ்விரவு சீக்கிரம் நீங்கவில்லையே?" என நினைந்து அன்றிரவெல்லாம் நித்திரையின்றி வருந்தும்பொழுது, இவன் பத்தினியானவள் தன் பக்கத்தில் போய் நின்று, "நாதா! உம்மைப்பார்த்தால் ஏதோ வொரு அபூர்வமான பொருளை யிழந்தவர்போலக் காணப்படுகின்றீர்? அன்றியும், இந்துமதத்தைச் சேர்ந்தவர்கள் தங்கள் கோயிலின் முன்னே சென்றால், கரங்களைக் குவித்து வணங்குவதுபோல, ஒன்றுந் தோன்றாத இடங்களை நோக்கிக் கைகுவிக்கின்றீர்? இதைக் கவனித்தால், உமது சித்தம் பேதித்திருப்பதுபோலத் தோன்றுகிறது. பிராணேசா! கவனிக்கும் உம்முடைய அறிவையும் மயக்கும்படியான வஸ்துவும் இந்த உலகத்தில் இருக்கிறதோ? பைத்தியங் கொண்டவன் இரவிலெப்படி படுத்துத் தூங்கமாட்டானோ அதுபோல நீரும் நித்திரையின்றி அவதிப்படுகின்றீரே? பத்திராசலம் தாலுக்காவில் தாசில்வேலைபார்த்த கோபன்னவென்னும் பிராமணன், ஆசூருக்கு சேரவேண்டிய பொருளைக் கையாடி விட்டானென்றும்; அக்குற்றத்திற்காக அவனைச் சிறைச்சாலையில் நீர் வைக்க, அவன் சிப்பாய்கள் அந்த பணத்தை உம்மிடங் கட்டி ரசீது பெற்றுக்கொண்டு போனார்களாயின், அது அபூர்வமான விஷயமாக என் புத்திக்கு எற்படவில்லையே? ஒவ்வொரு இராஜ மாளிகையிலும் இது நடப்பதுதானே முறையாயிருக்கிறது. நான் கோஷாவென்னும் நிலைமையில் வேறு அறையில் இருந்தாலும், வந்தவர்களைப் பார்க்கவில்லையா? தவிர விஷயமெல்லாம் நானறிந்துதா னிருக்கிறேன்; அதில் நீர் இவ்வாறு

திகைத்து நிற்கும்படியான விஷயம் ஒன்றுமே இல்லையே? இருவர் வந்து கதவைத் தட்டினார்கள். நீர் திறந்தீர். அவர்கள் கோபன்னா உமக்கு செலுத்தவேண்டிய தீர்வைப்பணத்தைக் கொண்டு வந்து கொடுத்தார்கள். நீங்கள் அதை யேற்றுக்கொண்டு ரசீது கொடுத்தீர்கள். அவர்கள் அதை வாங்கிக்கொண்டு போய்விட்டார்கள். இது தானே இங்கே நடந்த விஷயம்? இதற்கா தாங்கள் திகைத்திருக்கிறீர்கள்? உங்கள் மனோதைரியம் எங்கே போய் விட்டது? சஞ்சலப்படும்படியான காரணம் என்ன ஏற்பட்டது?" எனக் கேட்டார். தானிஷா, தனது பிரியமகிஷி கேட்ட கேள்விகளைக்கொண்டு அவளைச் சிறிது நோக்கி, "வனிதா ரத்தினமே! பொருளை ஒருவன் கட்டுவதாக வந்தால், அவன் பகலில் நான் தர்பாரிலிருக்கும்பொழுது கொண்டுவந்து கட்டுவான். அநேக தேசமன்னர்கள் எனக்கு கப்பம் கட்டவேண்டிய காலத்திலும் தர்பார்வாயிலிலே ஒருநாளையபோல பலநாளும் தாம் கொண்டுவந்த தீர்வைப் பணத்தை வைத்துக்கொண்டு காத்திருந்து என் ஆக்ஞை கிடைத்ததும் என்முன்னே வந்து மண்டியிட்டு பகுதிபணத்தைக் கட்டிவிட்டுப் போவார்கள். கட்டிய பணத்திற்கு என்னை ரசீதும் கேளார்கள். அப்படியிருக்க, என்னால் குற்றஞ்சாட்டி சிறைச்சாலையில் பன்னிரண்டு வருஷமாய் அடைபட்டிருக்கும் கோபன்னாவின் சிப்பாய்களாம்; அவர்கள் தீரச்செயலைப் பார்த்தால், நான் திகைக்க வேண்டாமோ? நகர் காவலென்றும், மதில் காவலர்களென்றும், கோட்டைக் காவலர்களென்றும், பள்ளியறைக் காவலர்களென்றும், இத்தனைக் காவலர்கள், ஆயிரமாயிரமாக இருந்தும், இமைகொட்டாது உருவிய கத்தியுடன் இரவெல்லாம் என் ஆக்ஞையின்படியே கண்விழித்துக் காவல் புரிந்துகொண்டிருக்கும் காவலர்களின் கண்களிலகப்படாது வந்து என் பள்ளி அறைக்கதவைத்தட்டிய அவர்கள் மனோதீரத்தைக் கண்டு நான் திகைக்க வேண்டாமா? அருகில் சிப்பாய்களைக் கண்டாலே இரவில் இந்தவூரை அணுக எமனும் அஞ்சுவானே? அப்படியிருக்க, இந்த யிரண்டு சிப்பாய்களும் என்ன தைரியமாய் ஒருவர்கண்ணிலும் அகப்படாது என் பள்ளியறையண்டை வந்து என் நித்திரையைக் கெடுத்தார்களே? இதை நினைத்தாலே நான் திகைக்கவேண்டியதாய் இருக்கிறது. என்ன செய்யலாம்? இவ்வளவு காவலையும் கடந்துவந்த அந்த வீரர்கள் இந்த இராஜ்யத்தின்மீது ஆசைகொண்டவர்களாயிருந்தால், இந்த நிமிஷமே அவர்கள் அரசாளமுடியும். அரசை அடைவதற்கு வேறு யுத்தம் செய்யவேண்டுமோ? என்னிடம் வந்துவிட்டார்கள். அவர்களுடைய சூரிகையால் என்னைக் குத்திக் கொன்றுவிட்டு தானே அரசனென்று சிம்மாசனத்திலமர்ந்தால் அவர்களைச் சிம்மாசனத்திலிருந்து இறக்குவதற்கு யாரால் முடியும்? யாருக்கு அதிகாரமுண்டு? இதை நினைத்தாலும் நான் திகைக்கவேண்டி

யதா யிருக்கிறதே? மதிவதனி! இதெல்லா மிருக்கட்டும். வந்த
வர்கள் யார்தெரியுமா? சொல்லுகிறேன் கேள்; சூரியகுலத்தோன்
றல், தசரதன்மதலை, கோதண்ட தீக்ஷாகுரு, மூவுலகத்திற்கும்
நாயகனும், விண்ணுட்டவரைத் தனது ஊழியராக்கிக்கொண்டு
மும்மூர்த்திகளாலும் வெல்லுதற் கரியனும், பிரதாப லங்கேஸ்வ
ரனைத் தனது ஒரேவில்லால் வென்றவன். வாலியின் மார்பிற்கும்
மாரீசனுயிருக்கும், ஏழு மரத்திற்கும், ஒரேகணை தொடுத்தவன்.
பதினுன்கு உலகத்திற்கும் தனிநாயகன். தான்மாத்திரமன்று.
தம்பியான லக்ஷ்மணனுடன் என்முன்னே வந்து நின்றால், அவர்
களைக்கண்டு பயந்து திகைப்படையாமல் என்னசெய்ய முடியும்?
எ! பெண்கள் நாயகமே! நாம் எந்த குலத்தாராயினும் என்ன?
ஈஸ்வரனென்று கண்டுகொண்டால், பணிந்து மரியாதைசெய்ய
வேண்டியது நமது கடமை. அவர் இந்துக்கள் வழிபடுங் கட
வுளாயிருந்தாலும், நாம் மகம்மதியராதலால், அவரை வணங்
கப்படாதென்று ஏதாவது சட்டமிருக்கிறதா? அப்படி வணங்கி
ஞல், வணங்குகிறவர்களுக்கு தண்டனை யிருக்கிறதா? ஒன்றுங்
கிடையாது. கடவுள் சமயா அதீதனென்றும், மதங்களில் சிக்
குண்ட மதியினர்களுக்குக் கடவுள் அருள் செய்யாரென்று நமது
சாதியிலுள்ள பகிர்களும் சொல்லியிருக்கிறார்கள். அந்தக் கட
வுளே என்னைத் தேடிவந்து வலிய தூங்குகின்றவனை எழுப்பி
பேசும்படிநேர்ந்தால், அவருக்கு ஆசனம்கொடுக்கவோ, அவர்
பாதத்திற்கு சலாம் செய்யவோ அவரை நறுமலர்கொண்டு தூவி
வணங்கவோ, அவர் திருமேனிக்கு சுகந்த பரிமளத் தைலங்க
ளைப் பூசவோ, நல்ல தகடியை விரித்துப் போர்த்தவோ, செய்
யாதுபோவேனுகில், கைக்கெட்டிய பொருளை நான் இழந்தவளா
வேன். இவ்வரிய பொருளை யிழக்கநேரிட்ட எனது தரித்திர
த்தை நான் நினைத்தால் திகைக்காது என்ன செய்ய முடி
யும்? நங்காய்! அந்த ராகவனுடைய வடிவழகை என்னென்று
சொல்லுவேன்? அவருடைய திருமேனியைக் கண்டவர் யாரோ
அவரின் திருவடிக்கு ஈடுபடாதவர்? உவாமதியைப் பழிக்கும்
அவரது முகாரவிந்தமும், நீண்டு குழைந்து இருண்டு நெரிந்து
சரிந்து நீலம்பூண்டு கடை சுருண்டு தோன்றும் குடுமியையும்,
பங்கஜதள நயனனென்று செந்தாமரை மலர்போன்ற நேத்தி
ரங்களும், எள்ளுப்பூவை நிகர்க்கும் நாசியும், பவளத்துண்டை
நிகர்க்கும் அதரமும், முத்தைவென்ற தந்த பந்திகளும், கண்
ணாடியையொத்த கபாலமும் வள்ளை இலையை யொத்துத் தோன்
றும் கால்களும், சங்கை நிகர்க்கும் கண்டமும், மேருமலையெ
னத் திரண்டெழுந்த தோள்களும், மலையினு மகன்ற மார்பும்,
சிறுகிய இடையும், ஆசானுபாகுவென்று முழந்தாள் வரையி
லும் நீண்ட கைகளும், யானைத் துதிக்கைபோன்ற தொடைகளும்,
பாணம்செறிந்த அம்புக்கூடு போன்ற முழந்தாளும், சுவடி

போன்ற புறவடியும், அமைந்த அவர்மேனியில் நானீடுபட்
டேன். இன்றொருகால் கண்பெற்றாலன்றி, இந்த அறிவு மயக்
கம் என்னைவிட்டு நீங்காது. என் கண்களில் காணும் ஒவ்வொரு
பொருளும் அவர் உருவாகவே தோன்றுகிறது. அன்றியும்,
தோன்றித் தோன்றி என்னை மயக்குகின்றன'' என்று சொல்லிக்
கொண்டிருக்கும்பொழுது, கீழ்த்திசையில் வெண்மை நிறம்
போன்ற, கங்குலென்னும் நங்கையானவள், மெள்ள நாணிச்
சென்றதுபோல இருட்படலங்கள் வரவரக் குறைந்தன. வானத்
தில் தோன்றிய நக்ஷத்திரங்கள் ஒவ்வொன்றாய் மறைந்து
போயின. அருமையான தடாகங்களில் தாமரைகள் இதழ்
விரித்து மலர ஆரம்பித்தன. பலவகைப் பக்ஷியினங்கள் இன்
னிசையுடன் கூவிக்கொண்டு சோலைகளில் உலாவ ஆரம்பித்தன.
பிறமரங்கள் சோலையில் படுத்துறங்கும் தூக்கமொழிந்து தாம
ரைத் தடாகத்தில் சென்று ஆங்காங்கு மலர்ந்திருக்கும் தாமரை
மலர்களில் புகுந்து இன்னிசைபாடி தேனுண்டு மயங்கி சுழன்
றன. தனது குலத்தில் பிறந்த ஸ்ரீராகவன் தனது அந்தஸ்தை
முற்றும் விட்டுவிட்டு சிறைச்சாலையில் அடையப்பட்டிருக்கும் ஒரு
பிராமணனுக்கு சிப்பாய் நானென்று சொல்லி அந்த அந்தண
னைப் பார்க்கவேண்டுமென்னு மாசையோடு புறப்பட்டவன்போல
சப்தமா வென்னும் ஏழுகுதிரைகள் பூட்டிய தேர்மீது ஏறி உதயக்
குன்றில் கதிரவன் தோன்றினன்.

இரவைக் கழித்துப் பொழுது புலர்ந்ததும், சிப்பாய்களைப்
போல் வந்து தரிசனம் கொடுத்து மறைந்த ஸ்ரீராம லக்ஷ்மண
ளைக் காட்டும்படி கோபன்னவின் பாதகமலங்களில் விழுந்து
கேட்கவேண்டுமென்று மனதில் தீர்மானஞ்செய்துகொண்டிருந்த
தானிஷா, பொழுது விடிந்ததும், தனது சேவகர்களில் ஒருவனை
அழைத்து, "நீ போய் எனது மந்திரிகளிருவரையும் சீக்கிரம்
அழைத்து வாருங்கள்'' என உத்திரவு செய்தான். சேவகன் அவ்
வுத்திரவைச் சிரமேற்கொண்டு அவனுக்கு சலாம்செய்துவிட்டு,
அதிவிரைவாய் அக்கன்ன மாதன்ன வென்னும் இருமந்திரிக
ளிருக்கும் மாளிகைக்கு ஓடி, அவர்களைக் கண்டு சலாம் செய்து
"மகாராஜ்! உங்களிருவரையும் அரசர் பெருமான் அதிசீக்கிரம்
அழைத்து வரச்சொன்னார்'' என்றனன். மந்திரிக ளிருவரும்
அவன் சொல்லிய அவசரத்தைக் கண்டு உள்ளே திகிலடைந்து
ஒன்றுந்தோன்றாது உடனே தங்கள் உடைகளை உடுத்திக்கொண்டு
தங்கள் பல்லக்கிலேறி தானிஷாவின் மாளிகை வந்து சேர்ந்தார்
கள். தானிஷா தனதுமந்திரிகளின் வருகையை ஆவலோடு எதிர்
பார்த்திருக்க, வந்தவர்கள் தானிஷாவுக்கு மண்டியிட்டு சலாம்
செய்துவிட்டு தங்களுக்குரிய ஆசனத்தில் அமர்ந்தார்கள். அப்
பொழுது தானிஷாவானவர் தனது மந்திரிகளை நோக்கி,
"அமைச்சர்களே! நேற்று இரவு நான் பள்ளியறையில் எனது

பத்தினியோடு சயனித்துக்கொண்டிருக்கும்பொழுது இரவு பதினைந்து நாழிகைக்கு அரண்மனைக் கதவுகளையெல்லாம் காவலர்கள் தாளிட்டுவிட்டு காவல் புரிந்துகொண்டிருந்தார்கள். நமது காவல் எவ்வளவு பயங்கரமானதென்றும், காவலர்கள் பொழுது விடியும்வரையில் கண்மூடாது உருவிய கத்தியுடன் காவல் புரிந்து வருகிறார்களென்றும், நீங்கள் அறிந்த விஷயமே. இவ்வளவு கடுமையான காவல்களைக்கடந்து இரண்டு வீரர்கள் ஒரு காவலன் கண்ணிலாவது அகப்படாமல் எனது பள்ளியறையண்டை வந்து பள்ளி அறையின் கதவைத் தட்டி என்னைத் தூக்கத்திலிருந்து எழுப்பிவிட்டார்கள். நான் திடுக்கிட்டு இராணியை யெழுப்பி அடுத்த அறைக்குப் போகும்படி அனுப்பிவிட்டு கதவைத்திறந்தேன். இரண்டு மகா புருஷர்கள் சிப்பாய் உடை தரித்துக்கொண்டு இந்த இராஜ்ஜியத்தை விலையாகக்கொடுப்பினும் இணையாகாத ஒவ்வொரு இரத்தினங்களாலும் இழைத்து செய்த திவ்வியாபரணங்களை அணிந்தவர்களாய்; நான் இதுவரையிலும் பார்த்திராத பட்டில் சரிகைவேலை செய்த கஞ்சுகி என்னும் சொக்காய் அணிந்து, வில்லும் அம்பும் கையில் தோன்ற, என் முன்னே நிற்கக்கண்டேன். அவர்கள் செய்கை அமானுஷமாகவிருந்தது. இவ்வளவு காவலையும் லக்ஷியம் செய்யாது எனது பள்ளியறைக்கு வந்திருந்தார்கள். அவர்கள் எவ்வளவு தீரமான நெஞ்சை உடையவர்களாயிருக்கவேண்டும். நீங்களே யோசித்துப் பாருங்கள்? இவ்வளவு நெஞ்சுதீரமுடையவர்களை நான் "நீங்கள் யார்?" என்றுவிசாரித்ததில், கோபன்னாவின் ஊழியர்களான சிப்பாய்களென்றும், கோபன்னா தங்களுக்கு செலுத்தவேண்டிய கிஸ்தி தொகையைக் கொண்டுவந்திருக்கிறோமென்றும் அதைப் பெற்றுக்கொண்டு ரசீது கொடுங்களென்றும் சொன்னார்கள். அவர்கள்பெயர் என்னவென்று கேட்டேன். ஒருவன் பெயர் ராம்சிங்கென்றும், மற்றொருவன் பெயர் லக்ஷ்மண சிங்கென்றும் சொன்னார்கள். 'உங்கள் ஊரெது' எனக் கேட்டதற்கு, தற்காலம் இருப்பது பத்திராசலமென்றும், அவர்கள் பிறந்தவிடம் உத்தர தேசத்திலே அயோத்தியா நகரமென்றும் சொல்லி கோபன்னா செலுத்தவேண்டிய ஏழுலக்ஷத்து ஐயாயிரம் வராகனையும் வெள்ளி நாணயத்திற்குப் பதிலாக ராமடங்கென்று சொல்லும் பத்தரை மாற்றுத் தங்க நாணயங்களாகவே என் எதிரில் கொட்டிக்குவித்து என்னையே யெண்ணிக் கொள்ளும்படி சொல்லி ரசீது கேட்டார்கள். நான் பத்திரம் எழுதிக் கொடுக்க, பத்திரம் எழுதுகோல் மைக்கூடு என்னிடமில்லையே யென்றேன். எல்லாம் எம்மிடமிருக்கிறதென்று, எனது இராஜாங்கசட்டத்திற்கு விரோதமில்லாமல் நன்றாய் எனதுசட்டப்படி எழுதிய ஒருபத்திரத்தையும் நான் இது வரையில் பார்த்திராத வோரழகிய எழுதுகோலையும் என்னிடம் கொடுத்து பத்திரத்தை நன்றாய் படித்துப் பார்த்து

அதில் உமது கை எழுத்தைப் போட்டு எங்களிடம் கொடுங்களென்றார்கள். நான் கை எழுத்து செய்ய மைக் கூடில்லையே என்றேன். தாங்கள் தம்பலம்தின்று உமிழும் வட்டிலில் தோய்த்து கை யெழுத்திடுங்கள் என்றார்கள். அதுபோலவே என் தம்பலத் தட்டிலில் தோய்த்து கை எழுத்துப்போட்டு அவர்கள் கையில் கொடுத்தேன். அவர்கள் அதைப் பெற்றுக்கொண்டு எனக்குச் சலாம் செய்துவிட்டு போய்விட்டார்கள். நான் அவர்களுக்கு பிரதி சலாம் செய்யவில்லை. ஆனால், அவர்கள் ஸ்ரீராமச்சந்திரனும் லக்ஷ்மணனுமேயன்றி சிப்பாய்களல்ல வென்பதை மாத்திரம் கண்டுகொண்டேன். என் அறிவின்மையால் நான் அவர்களுக்கு ஒரு ஆசனங்கூட கொடுத்து மரியாதை செய்யவில்லை. நான் மோசம் போயினேன் எனத் தன்னாலும் ஆற்ற முடியாத துக்கக் குரலோடு கூறினன்.

அக்கன்னா மாதன்னா என்னும் இருமந்திரிமார்களும் தானிஷா சொல்லியவற்றை யெல்லாங்கேட்டு, அளவுகடந்த ஆச்சரியத்தை யடைந்து, தமது மருமகனான கோபன்னாவின் பக்தியைக் கொண்டாடி, நமது அரசர் பெருமானுக்கு ராமசேவை கிடைத்ததே என்று மனமகிழ்ந்தவராய் எழுந்து, தானிஷாவுக்கு சலாம்செய்து, "இராஜேஸ்வரரே! சீதாபதியாகிய ஸ்ரீராமச்சந்திர மூர்த்தியை அவருடைய தம்பியாகிய இளையபெருமாளோடு சேவிக்கப் பெற்ற உம்முடைய பாக்கியமே பாக்கியம். உம்மைத் தரிசித்தவர்களுக்கு அந்த ராகவனுடைய கிருபை யேற்பட்டு மோக்ஷ வீடெய்துவர்களென்பது நிச்சயம்" எனக் கூறினார்கள். தானிஷா "நான் இந்த நிமிஷமே பரமபாகவதோத்தமரான கோபன்னாவைச் சேவிக்கவேண்டும். ஆகையினால், நீங்களிருவரும் சிறைச்சாலைக்கு சென்று கோபன்னாவுக்கு தீர்த்த மாட்டிவைத்து, திவ்வியாபரணங்கள் பூட்டி, உயர்ந்த சால்வையைப் போர்த்தி, முத்துப் பல்லக்கிலேற்றி, நமது இராஜ பிருதுகளோடு சிறப்பாய் அழைத்துவரவேண்டும். நான் தர்பாருக்கு வருமுன் கோபன்னா அங்கே எழுந்தருளியிருக்க வேண்டும். நான் வந்ததும் அவருக்கு சலாம் செய்துவிட்டுதான் தர்பாரில் அமரவேண்டும். இன்று அவரைக் காணாத ஒவ்வொரு நிமிஷமும் ஒவ்வொரு யுகமாகத்தோன்றுகிறது. ஆதலால், விரைவாகச் சென்று நான் சொல்லியவண்ணம் கோபன்னாவிற்கு அலங்காரஞ்செய்து அழைத்து வரவேண்டும்" எனத் திட்டம் செய்தார். அத்திட்டத்தை அக்கன்னாவும் மாதன்னாவும் சிரமேற்கொண்டு தானிஷாவுக்கு சலாம் செய்துவிட்டு அவரிடம் விடைபெற்றுச் சென்று, கோபன்னாவை அடைத்து வைத்திருக்கும் இருட்டறைக்குள் போம்போது, கோபன்னா தனது அம்மான்மார் தன்னைத் தேடி வருவதைப் பார்த்து, தன்னைச் சிறையிலிருந்து விடு

விப்பதற்காகவே வருகிறார்களென்று தெரிந்ததால், அவர்கள் வருகையை ஆவலோடு எதிர்பார்த்திருந்தார்.

எமதூதனைப் பார்க்கிலும் அஞ்சா நெஞ்சையுடைய கொடிய சிறைச்சாலை அதிகாரி தானிருக்கும் அறையின் கதவைத் திறந்து கொண்டு உள்ளே வந்ததும், தனது தீய குணத்தையும், மமதையால் முன்பின் யோசியாது அகங்கரித்துப் பேசும் இழிய சொற்களையும் முன் கோபத்தையும் கட்டிச் கடலில் போட்டுவிட்டு மிக்க வாஞ்சையுடனும் மரியாதையுடனும் அவருக்கு சலாம் செய்து, "மஹாராஜ்! உம்மைக் காவற்சாலையி லிருந்து விடுவித்துக் கொண்டு போக எங்கள் மந்திரிகள் வந்திருக்கிறார்கள். நீங்கள் வெளியே வரலாம்" எனத் தாழ்மையாய்ச் சொல்லியதைக்கேட்ட கோபன்னா, அவன் முன் தன்னைத் தண்டனைக் காளாக்கி வருத்தியதையும், தன் மனம் புண்படப் பேசியதையும் ஒழித்துத் தனக்கு சலாம் செய்து தன்னை மரியாதையோடு அழைப்பதால், எல்லாம் சிவன் செயலே யெனத் தன்மனதில் நினைந்து அவ்வறையை விட்டு வெளியே வந்து அக்கன்னா மாதன்னா இருவரையும் பணிந்து நின்றார். அக்கன்னா மாதன்னா இருவரும் தமது அருமை மருகனைப் பார்த்ததும், அவருடைய சுய உருவமே மாறி, பன்னிரண்டு வருஷங்களாய் நீண்டு வளர்ந்த சடையையுடைய தலைமயிரையும், தாடி மீசையையும், கைவிரல்களில் அப் பன்னிரண்டு வருடமாய் நீண்டு வளைந்துத் தொங்கும் நகங்களையும், உலர்ந்து வாடிய சரீரத்தையும் கண்டு ஆராத்துயரத்தில் ஆழ்ந்திருந்தவர்களாய் "அந்தோ! இந்தப் பரம சாதுக்கு இவ்வளவு துன்பம் வரப் பார்த்து மனந் துணிந்திருந்தோமே! கோடிக் கணக்கான செல்வங்களிருந்தும், இவர் சிறைச்சாலைக்கு வந்தபொழுது, அதுருக்குக் கட்டவேண்டிய பணத்தை நாம் ரகசியமாய்க் கட்டிவிட்டு இவரைச் சிறையிலிருந்து மீட்டு இவர் பத்திராசலத்திற் கட்டிய ஆலய தர்மத்தை அடைய நமக்கு மனம் வராது போயிற்றே! பொருள் பேய் பிடித்த புல்லரானோமே! அந்தோ! இரக்கமில்லா நெஞ்சையுடைய சிறைச்சாலை அதிகாரி எவ்வளவு கொடூரமான தண்டனைகளை இவருக்கு விதித்து இவரைத் துன்பப் படுத்தினான்! நமது சகோதரியின் குழந்தை இவனென்றுகூட எண்ணாது போனோமே! பொருளாசைப் பேய் அன்றோ ஈவு இரக்கம் பச்சாதாபம் பரோபகாரம் பாவம் வறுமை முதலியவற்றைக் கருதவொட்டாது கன்னெஞ்சாக்கியது. ஏ! கொடிய பணமே! உன் ஆசைப் பேய் ஒருவனையும் பிடியாதிருக்க நான் உன்னை வேண்டுகிறேன்" எனப் பலவாறு நினைந்து வருந்தி, கடைசியாய் "இவருக்கு நற்காலம் பிறந்தபிறகு நாம்வருத்தப்படுவதால் யாது பயன்?" எனத் தங்கள் மனதைத் தாங்களே திருப்திப் படுத்திக் கொண்டு கோபன்னாவைத் தமது மாளிகைக்கு அழைத்துக் கொண்டு போய் நாவிதனைக் கூப்பிட்டு நன்றாக க்ஷவரம் செய்து

வைத்து, நல்ல உயர்ந்த வாசனையுடைய சம்பங்கி தைலம் கொண்டு தேய்த்து அவர்களிருவருமே தங்கள் கைகளால் சடைப்பட்டிருந்த தலைமயிரை நன்றாய்ப் பிரித்து நல்ல பனிநீரால் திர்த்தமாட்டி வைத்து, உயர்ந்த வஸ்திர முடித்தச் செய்து, திருமண்காப்பு தரித்தருளியபின் தானிஷா இவருக்கென்றனுப்பிய ஆடை ஆபரணங்களை யணியாமல், தங்களிடமிருந்த ஆபரணங்களை அணிந்து உயர்ந்த சால்வையை அவர் மேனியில் போர்த்து தாங்களிருவருமாய் முத்துப் பல்லக்கிலேற்றி, அனேக வாத்திய கோஷங்கள் முழங்க, இராஜவிருதுகளான குடை கொடி ஆலவட்டம் சாமரை திவட்டி முதலியன பிடிக்க, கோபன்னாவின் பல்லக்கை இரண்டு மந்திரிமார்களும் பிடித்துக்கொண்டு நகர்வலமாகவந்து, தானிஷாவின் சபாமண்டபத்தில் உயர்ந்த வோராசனத்தி லமர்ந்திருந்தார்கள். இவர் அந்த ஆசனத்தி லிருக்கும் பொழுது, தானிஷாவானவர் தர்பார் உடை உடுத்திக்கொண்டு சூதமாகதர்கள் புகழ, இருபுடையும் வெண்சாமரைவீசத் தனது கொலுக்கூடம் வந்ததும் நல்ல தவமெலாம் இரண்டு ஒரு உருவாய்ப் பிறந்ததுபோல் விளங்குகின்றவரை, பக்தியென்னும் விதையானது முளைத்து செடியான பின்னை மரமாக வளர்ந்து பூத்து காய்த்து பழுத்து உதிர்ந்த அப்பழத்தை தானிஷாவானவர் உண்ண இரு மந்திரிகளால் வருவிக்கப்பட்டிருக்கிறதோ! அன்றி, பத்திராசல ராமனாகிய அழகிய செடிபடர, ஒரு கொள்கொம்பு வந்து நிற்கிறதோவென்னும்படிவீற்றிருக்கும்ராமதாஸ் சுவாமிகளை தானிஷாவானவர்கண்டுசலாம்செய்துதனக்குரியசிம்மாசனத்திலேறி அமர்ந்து, குளிர்ந்த முகத்தோடு கோபன்னாவைப் பார்த்து, "ராகவன் கழல்பணி நற்றவரே! உமக்காக நேற்றைய தினம் பத்திராசலராமன் தனது தம்பியோடு சிப்பாய் உடை தரித்துக்கொண்டு என்னிடம் வந்து நீர் கட்டவேண்டிய கிஸ்தி தொகை பூராவும் செலுத்திவிட்டு ரசீது பெற்றுக்கொண்டு போய்விட்டார்கள். நீர் இவ்வளவு ராமபக்தரென்று பேதையாகிய நான் தெரியாமல் உமக்கு அனேக தண்டனைகளை விதித்திருந்தேன். உம்மைத் தகாத வார்த்தைகளாலும் பேசியிருப்பேன். நான் பேசியும் செய்துமுள்ள குற்றங்களைப் பொருட்படுத்தாது பொறுத்தருள வேண்டும். நான் மிலேச்ச சாதியில் பிறந்திருப்பதால், தங்களைப் போன்ற சாதுக்களைத் தெரிந்துகொள்ளுவதற்குச் சக்தி கிடையாது. பரமபக்தராகிய நீர் மனம் நொந்து ஒரு வார்த்தை சொன்னால் நானும் இவ்வரசும் என் சுற்றமும் அடியோடு அழிந்துவிடும். ஆகையால் என்னை மன்னிக்கவேண்டும்" என்று தன் சிம்மாசனத்தி லிருந்தபடியே மண்டியிட்டு சலாம் செய்தார்.

பரமபக்தரும் சாந்தகுணசீலரும், சதா சீதா சமேதனையே தனது இருதயத்திற் கொண்டவருமான கோபன்னாவானவர், அவ்வார்த்தை கேட்டதும் தான் உட்கார்ந்துகொண்டிருந்த ஆ

னத்திலிருந்து குதித்து, தானிஷாவின் முன்னே நின்று, மண்டியிட்டு சலாம் செய்து, "ஏ! ராஜ ராஜேஸ்வரா! ராஜபிரபுடீகா! ராஜ கம்பீரா! ராஜமார்த்தாண்டா! நீர் என்னைப் பார்த்து மன்னிக்கும்படி சொல்லுவது அழகா? நீரன்றோ ஸ்ரீராம பக்தர்? உமது பக்திக்கு மெச்சி ஸ்ரீராகவன் உம்மிடம் வந்தாரன்றி, என்னிடம் வந்து எனக்கு சேவை தந்தருளினரா? இதனால் எனது பக்தி குறைந்தது என்று நான் நினைத்து வருந்தவேண்டியதிருக்க, நீர் என்னை மன்னிக்கும்படி சொல்லுவ தழகல்ல. நீர்தான் எனக்கு ஆச்சாரியனாக யிருந்து ராமச்சந்திரனை நான் காணுமாறு செய்யவேண்டும். இன்னொரு விஷயம் இருக்கிறது. நான் பத்திராசலத்தில் ஆலயங்கட்டிய திருவாபரணங்கள் எல்லாம் உம்முடைய சொத்தாதலால், யாருடைய அளவுகடந்த நிதியை அனுபவித்து ஆநந்தத்தையடைகிறேனோ நமது ராமன் அவனுக்கு அருள் சுரந்து தரிசனம் கொடுக்கவேண்டிய கடமை அவருடையதானதுபற்றி அவர் உமக்கு சேவை தந்தருளினர். நான் பன்னிரண்டு வருஷமாய்ச் சிறைச்சாலையில் இருந்து கதறி அழுதும் அவன் சேவை எனக்குக் கிடைக்கவில்லை. உமது பாக்கியமே பாக்கியம்" எனக் கோபன்னா தானிஷாவைப் புகழ்ந்து பேச, தானிஷா, கோபன்னாவைப் பார்த்து, "நீ எனக்கு செலுத்திய ஏழுலக்ஷத்து ஐயாயிரம் விராகனை ராமடங்கு மோகராவை உனக்கே நான் சேர்த்துவிடுகிறேன். அதைப் பெற்றுக்கொள்ளும். பத்திராசலம் தாலுக்காவை உமது பேரால் ஸ்ரீராமசந்திரனுக்கு நான் அர்ப்பணம்பண்ணி யிருக்கிறேன். அதையும் பெற்றுக்கொள்ளும். நீரே அந்தத் தாலுக்காவிற்கு தாசில்தாராக அமைந்து அந்தத் தாலுக்காவில் வரும் வருமானத்தை உமது ததியாராதனத்திற்கும் ஸ்ரீராம கைங்கரியத்திற்கும் உபயோகப்படுத்திக்கொள்ளும்" என்று சொன்னார். கோபன்னா, அவ்வார்த்தையைக்கேட்டு "அரசர்பெருமானே! ஒருவன் தன்செயலாலேயேயெல்லாம் நடக்கிறதென்று நினைக்கிறான். இது அறியாமைத் தன்மையாம். நேற்று இரவு விஷத்தைப் பருகி இறந்துவிடவேண்டுமெனக் கருதி எப்படியோ தயாரித்துவைத்து, ஜெயில் காவலர்கள் யாவரும் தூங்கியபின் பருகி உயிரை யிழக்கலாமென்று பக்கத்தில் ஒரு கிண்ணத்தில் வைத்துக்கொண்டு என்னை மறந்திருந்தேன், என் செயலின்படி நடந்ததா? ஸ்ரீயப்பதியாகிய இராகவன், என் சிப்பாய்களைப்போலத் தம்பியும் தானுமாய்வந்து நான் செலுத்தவேண்டிய சிர்வைப் பணத்தைச் செலுத்திவிட்டு, உம்மாலே கொடுத்த ரசீதை வாங்கிக்கொண்டு நான் விஷம்வைத்திருந்தவிடத்தில் வைத்துவிட்டு, விஷக்கிண்ணத்தையும் கீழே உருட்டிவிட்டு போய்விட்டார்கள். தானிஷா பிரபுவே! தாங்கள் ராமார்ப்பணமாகத் தருவதையேற்றுக்கொள்ளுவது என்னுடைய காரியமல்ல. அந்த ராகவன் காரியமே. எல்லாம் அவன் செயல்.

அவனுடைய கட்டளையே" என்றார். உடனே தானிஷா ஏழுலக்ஷத்து ஐயாயிரம் விராகனையும் ராமடங்கு மோகராவையும் கோபன்னாவின் கையில் கொடுத்து பத்திராசல தாலுக்காவையும் அவருக்கே உரியதென்று அவருடைய கையில் தாரைவார்த்துக் கொடுத்து, ஸ்ரீராகவனுக்கே அர்ப்பணமாக தகடிகள் பீதாம்பரங்கள்யாவும் கொடுத்து அவருக்கு சலாம் செய்தார். அப்பொழுது அக்கன்னாவானவர் எழுந்து நின்று, தானிஷாவுக்கு சலாம் செய்து, கீழ்வருமாறு சொல்ல ஆரம்பித்தார்.

இராஜ பிரபுடீகா! இப்பொழுது உம்மாலே கௌரவிக்கப்பட்டு மிகுந்த சம்மானம் பெற்றவராகிய கோபன்னா வென்பவரை சாதாரணமான ஒரு பிராமணனென்று மாத்திரம் நீங்கள் அறிவீர்களன்றி இவருடைய பூர்வசரித்திரம் உமக்கு இன்னதென்று இதுவரையிலும் தெரியாதென்று நான் எண்ணுகிறேன். ஆதலால் நான் சொல்லுகிறேன் தயவுசெய்து கேளுங்கள். இவர் எனது மருமகனாகிறார். எங்க ளிருவருக்கும் அருமருந்தன்ன தங்கை காமாம்பாளென்பவள் ஒருத்தி யிருந்தாள். அவளுக்கு அமைந்த குணத்திற்கும் அழகிற்கும் அறிவிற்கு மேற்ற ஒரு மணமகனைத் தேடி விவாகம் செய்துவைக்க வேண்டுமென்று நினைத்து, சில வருஷத்திற்குமுன் தங்களிடம் லீவு வாங்கிக்கொண்டு பல ஊர்களிலும் சென்று விசாரித்து, கடைசியில் கோலகொண்டபல்லாவென்னும் சிறு கிராமத்தில்போய் விசாரித்ததில், லிங்கன்னா வென்னு மொருவர் கோமஸ்வரனாகவும், கல்வி அறிவு ஒழுக்கம் முதலிய நற்குணங்கள் ஒருங்கே அமையப்பெற்றனராகவும் இருக்கிறாரெனக் கேள்விப்பட்டு அவர் வீடுசென்று அவரைக் கண்டதும், எங்கள் மனத்திற்கு உடனே திருப்தி ஏற்பட்டதால் எனது தங்கையை விவாகம் செய்துகொள்ளும்படி அவரிடம் சொல்லினேன். அவரும் என்னை யாதொரு கேள்வியும் விவாகத்திற் கெப்படியென்று கேளாது சொல்லியவுடனே என் வார்த்தைக்கு உடன்பட்டார். அரசர் பெருமானே! முப்பத்தைந்து வருஷங்களுக்குமுன் எனது கிரகத்தில் மிக்க விமரிசையாக நடந்த விவாகமஹோற்சவம் தங்களுக்கும் ஞாபகமிருக்கலாம். தாங்களும் அந்த கலியாணத்திற்கு வந்திருந்து அநேக சம்மானங்கள் செய்திருக்கிறீர்கள். அந்த கலியாணந்தான் காமாம்பாளின் கலியாணம். அந்த காமாம்பாளின் திருவயிற்றில் உதித்தவரே இந்த கோபன்னாவென்பவர். இவர் பிறந்து கல்வி அறிவு ஒழுக்கங்களால் மேம்பட்டுவரும் நாளில், உத்தமமான சந்ததியில் பிறந்தவளும் பாமாம்பா ளென்னும் பெயருடையவளுமான சிறுமியைத்தேடி இவருக்கு விவாகம் செய்வித்துவிட்டு சிறிது நாள் இருந்து இருவரும் உயிர் துறந்தனர். தந்தையிடமிருந்த கோடிக்கணக்கான ஆஸ்திமுற்றும் இவரே அடைந்து பாமாம்பாளோடு இல்லறம் நடத்திவரும் காலத்தில் உங்கள் குலத்திலே

பிறந்தவரும் கபீரென்னும் திருநாமம் பெற்றவரும், ஸ்ரீராம பக்தருமான மகானுபாவரிடம் தாரகமந்திரத்தை உபதேசமாகப் பெற்று, அதுமுதல் ராமகைங்கரியத்திலும், பாகவத ததியாராதனத்திலும் செலவு செய்ததன்றி, வருடந்தோறும் ஸ்ரீராமநவமி உற்சவம் நடத்தி லக்ஷக்கணக்கான பிராமணர்களுக்கு ததியாராதனமென்றும், கதா காலக்ஷேபங்களென்றும் நடத்திவந்தார். நாங்கள் கூட இவர் நடத்திய ஸ்ரீராமநவமி உற்சவத்திற்கு போயிருந்தோம். தங்களைப்போன்ற சக்ரவர்த்தி இவர் செய்ததுபோல் செய்ய விரும்பினால் முடியவே முடியாது என்று நாங்கள் அப்பொழுது எண்ணினோம். இவர் இந்த உற்சவங்களிலும் ததியாராதனங்களிலும் ஸ்ரீராம கைங்கரியங்களிலுமே இவருக்கிருந்த கோடிக்கணக்கான செல்வங்கள் யாவற்றையும் செலவு செய்துவிட்டு வறியராயினர். இவர் வறுமையால் உணவில்லாமல் வருந்தும்போது, அந்த ஸ்ரீராமச்சந்திரனே இவர் கனவில் தோன்றி "கோபன்னா! நீ ஐதராபாத்திற்குச் சென்று மஹாராஜாவான தானிஷாவைக் கண்டால், உனக்கு தாசில் உத்தியோகம் கொடுப்பார் என்று சொல்லி, ஒரு பணமுடிப்பையும் அவர்பக்கத்தில் வைத்துவிட்டு மறைந்தார். உடனே இவர் கண்விழித்து பணமுடிப்பை எடுத்து பிரித்துப்பார்த்து, அதிலிருந்த பொருளை யெடுத்து வீட்டுக்கு வேண்டிய சாமான்கள் வாங்கி வைத்து எஞ்சிய பொருளைக் கொண்டு தனக்கும் தன் மனைவிக்கும் வேண்டிய உடைகளை வாங்கிக்கொண்டு வீட்டில் வைத்துவிட்டு ஐதராபாத்திற்கு வந்து எங்களைக் கண்டுகொண்டார். நாங்களிருவரும் அவருக்காக ஒரு முயற்சியும் செய்தவர்களல்ல. அவரும் தனக்கு ஏதாவது ஒரு உத்தியோகம் சிபார்சு செய்யும்படி எங்களைக் கேட்டவருமல்ல. அவரே உம்மிடம் வந்தார். நீங்களே தாசில் உத்தியோகம் கொடுத்தீர்கள். உங்களிருவருக்கும் இவ்வளவு தொந்த மேற்படுவதற்குக் காரணம் கூடயிருக்கிறது. இவர் ஆசாரியர் உங்கள் சாதியில் பிறந்தவராய் ராமபக்தராய் விளங்கும் கபீர்தாசரால் இவர் உமக்கும் தொந்தமுள்ள சம்மந்தம்பெற்றுரென்று நினைக்கிறேனென்று மந்திரியான அக்கன்னாவானவர் சொல்ல, இந்த வார்த்தையைக் கேட்ட தானிஷாவானவர் "இவர் காமாம்பாளின் புதல்வரா? அந்தோ! முன்னமே சொல்லியிருந்தால் இவருக்கு இந்த சிறைச்சாலைவாசம் கிடைத்திருக்காதே? முன்னம் நான் அறியாதுபோனேனே? உங்கள் அருமைமருகன்விஷயத்தில் தயவுகாட்டி நீங்களாவது இவனைச் சிறைச்சாலைக்கு அனுப்பாமலிருக்கும்படி செய்திருக்கக் கூடாதா?" எனக் கேட்டார். அக்கன்னாவானவன் தானிஷாவைப் பார்த்து, "அரசர் பெருமானே! தங்கள் சொத்தை அபகரித்துக்கொண்ட குற்றவாளியை, எங்கள் உறவினரென்று நாங்கள் அபிமானித்தால், இராஜநீதியை நாங்களே தள்ளிவிட்டவராய்விடுவோம். என்னு

டைய மருமகனாயினுஞ் சரி, மைந்தனாயினுஞ்சரி, உங்கள் குற்றவாளியாய்விட்டால் நாங்களும் குற்றவாளியென்றே கருதுவோம். தங்கத்தை புடம்வைக்க எவ்வாறு மாற்றுயர்ந்த ஒளியுடன் பிரகாசிக்கிறதோ, அதுபோல் இவருக்கும் இந்த சிறைவாசத்தாலே ராமதாசரென்னும் பெயரோடு உலகம் உள்ளளவும் நீங்காத பெரும்புகழைப் பெற்று வாழ்வார். இவரது பக்தியும் சிறைவாசத்தில் தான் முதிர்ந்தது. சிறைச்சாலையில் அடைப்பட்டவர்களின் செய்கைக்கு எவ்வளவோ வித்தியாசமாகிறது. மோசம் செய்தோர் களவுசெய்தோர் தப்புக் கையெழுத்திட்டோர் பலாத்காரப் புணர்ச்சியை விரும்பினோர் முதலியவர்கள் சிறைக்குற்றம் சாட்டப்பட்டு சிறைச்சாலையி லடைப்பட்டால் மாத்திரம் சிறைச்சாலை வாசமாகும். ஈஸ்வர கைங்கரியம் செய்தோ, தேச சேவை செய்தோ, பல ஜனங்களின் க்ஷேமத்தைக் கருதியோ! தன்னலம் மறந்து சிறைக்கூடம் புகுந்தால், அந்த சிறைச்சாலை அவர்களுக்கு தவச்சாலையாகும். இவர் ஈஸ்வர கைங்கரியம் செய்து சிறைச்சாலை யடைந்ததால் அந்த சிறைச்சாலையானது இவரது தியானத்திற்கு மிகுந்த உதவியாயிருந்தது. ஸ்ரீராமனை சிறைச்சாலையிலிருக்கும் தானே கண்டு களிப்பதோடு நிறுத்தாது தன்னைச் சிறைச்சாலைக் கனுப்பிய உம்மையும் கண்டு களிக்கும்படி செய்தார். இவருக்கு வைராக்கியமான பக்தி சிறைக்கூடத்தில் தான் முதிர்ந்தது என்று சொல்லி மீண்டும் தானிஷாவுக்கு சலாம் செய்து, "நான் உம்மைக் கேட்கும் மனுவொன்றிருக்கிறது. அது என்ன தெரியுமா? இவரை இன்றையதினமே இந்த ஊரிலிருந்து பத்திராசலத்திற்கு அனுப்பி விடப்படாது. எங்கள் மருமகனை நாங்கள் சிலதினம் எங்கள் மாளிகையில் வைத்திருந்து அவருக்கு செய்யவேண்டிய மரியாதைகளையும் விருந்துகளையும் செய்து அனுப்ப மிக்க ஆசையுடையவர்களாயிருக்கிறோம் இந்த மனுவுக்கு உத்திரவு தரவேண்டும்" என்றார்.

குடிகளுக் கிறையோனும், துஷ்டநிக்கிரக சிஷ்டபரிபாலனும், சீதா சமேதனான ஸ்ரீராமச்சந்திரனுடைய மாயாமயக்கில் சிக்கியவனுமான தானிஷா, அக்கன்னா சொல்லிய வார்த்தையைக் கேட்டதும்; சிரித்துக்கொண்டே, "மந்திரி! நீ சொல்லுவது நியாயமா? உனது தங்கையாகிய காமாம்பாளின் திருவயிற்றில் உதித்த செல்வ சிகாமணியும், கோட்டமல்வாரனாகிய லிங்கன்னாவின் குலத்தைவிளக்கவந்த குணமணியுமான கோபன்னாவின் செல்வத்தையும், அந்தஸ்தையும் பெருந்தன்மையையும் புகழையும் பிரத்தியக்ஷமாய்ப்பார்த்திருந்தும், அவர் வினைவலியாலோ அல்லது முன் சன்மத்திற்செய்த புண்ணிய பலத்தினாலோ தன் குலமும் தந்தையின் பெயரும் உலகம் அறியும்வரை புகழ்பெறத் தன் செல்வத்தையெல்லாம் தீயோர்களைப்போல் தீய வழியில் செலவுசெய்து இழிவடையாது ஈஸ்வரனுடைய கைங்கரியங்களி

லும், அவருடைய அடியார்களின் ததியாராதன கைங்கரியங்களிலும் செலவு செய்துவிட்டு வறியவராகி உணவிற்கும் இல்லாராகி வருந்த கண்ணாக்கண்டு, கடைசியில் கார்வண்ணன் கருணையால் பத்திராசல தாலுக்காவுக்கு தாசில்தாராகி வறுமை நீங்கிய காலத்தில் மீண்டுமக் கார்வண்ணன் மாயா மயக்கில் சடுபட்டு மயங்கி, பத்திராசலத்தி லெழுந்தருளியிருக்கும் ராமன் சன்னதியைக் கட்டவும், அவனை ஆபரணாதிகளால் அலங்கரிக்கவும், வருடத்திற்கொருமுறை பிரம்மோற்சவம் நடத்தி எல்லோரும் கண்டுகளிக்க திருவீதி எழுந்தருளச்செய்யவும், என்பணத்தைக் கையாடிவிட்டு என்னறிவின்மையால் யான் கொடுத்த தண்டனையை யேற்று மனங்கலங்கி நின்றதையும் பார்த்து, "அவருக்கு வந்தாலென்ன, நமக்குவந்தாலென்ன, உலகத்தார் 'நம்மை என்னசொல்லமாட்டார்கள்' என்று சிறிதும் அவரிடத்தில் இரக்கமடையாமலும் உங்களிடத்திலிருக்கும் கோடிக்கணக்கான செல்வங்களில் அவர் கொடுக்கவேண்டிய எழுலக்ஷத்து ஐயாயிரம் விராகனைக் கொடுத்து அவரை அவ்வாபத்திலிருந்து மீட்காது அவரைச் சிறைச்சாலைக்கனுப்பிவிட்டீர்கள். அவர் தன் பெருமையை யிழந்து, காவற்சாலையில் அனுபவியாத கஷ்டங்களை அனுபவித்து மானமழிந்து, மாதவன் சகாயத்தால் மன்னாதி மன்னனாய் வெளிவந்தபின், "என், மருமகன் இவ்வளவு மேன்மையோடும் அந்தஸ்தோடும் கௌரவத்தோடும் இருந்தவன் வாழ்ந்தவன் நான் அவனுக்கு விருந்து செய்யவேண்டும், எனக்கு மனுவை கொடுக்கவேண்டும் என்கிறீரே? உமக்கு ஒழுங்காயிது? நீங்கள் கோட்டீஸ்வரர்களாயிருந்து உங்கள் மருமகப்பிள்ளையை ஜெயிலுக் கனுப்பலாமா? பரமயேழையும் செய்யானே? பணத்தைத் தானே பார்த்தீர்கள்? மானம் போனபின் பிராணனிருப்பது எதற்கென்று நினைக்கவில்லையே? இப்பொழுது எப்படி பணத்தைச் சிலவுசெய்து மருமகனுக்கு விருந்து வைப்பீர்கள்? நீங்களே பாருங்கள்" என்று எல்லா விஷயங்களும் அடங்கியிருக்கவும், அவர்களுக் கவர்களே அறிவு திருந்தவும் சிலேடையாய்ப் பேசுவதுபோல் பேசிப் பின் "இருக்கட்டும், நீங்கள் உங்கள் மருமகப் பிள்ளைக்கு வைக்கும் விருந்தில் முதல் விருந்து என்னதாகவே யிருக்கவேண்டும். அப்படி நீங்கள் சம்மதித்தால் நான் உங்கள் மனுவுக்கு உத்திரவு தருவேன்" என்றார். அக்கன்னா சலாம் செய்து "இராஜகம்பீரா! இராஜேஸ்வரா! சாதி என்பதே கிடையாது. உலகம் உற்பத்தி செய்தபோது ஆறு அறிவையுடைய மானிடப்பிறவியில் ஆண் சாதி ஒன்று பெண்சாதி ஒன்று ஆக ஆண்பெண் இரண்டுதான். இதுதவிர மற்றெல்லா ஜீவன்களிலும் ஆண் பெண் இரண்டையே சர்வேஸ்வரன் சிருஷ்டித்ததாகச் சொல்லியிருக்கிறது. சாதி மதம் குலம் கோத்திரம் முதலியவைகள் இடையில் ஒருமனுஷியால் உண்டாயதே. ஔவை என்னும் மூதாட்டியானவள்

"சாதி யிரண்டொழிய வேறில்லை" எனத் திருவாய்மலர்ந்திருக்கின்றாள். எல்லா சாதியும் ஒன்றே. நீங்கள் வேறல்ல, நாங்கள் வேறல்ல, எல்லோரும் ஒன்றே. உங்கள் உத்திரவின்படியே நாங்கள் நடத்தும் முதல் விருந்தை தங்கள் விருந்தாகவே நடத்துகிறோம்" என தானிஷாவுக்கு திருப்தியடையுமாறு சொல்லி அவரிடம் விடைபெற்றுக்கொண்டு கோபன்னாவுக்கு தானிஷா கொடுத்த ராமசிங் மோகராவையெல்லாம் கோபன்னா கணக்கில் பற்றெழுதிக்கொண்டு ஆகுருக்கு அனுப்பிவிட்டு கோபன்னாவை அழைத்துக்கொண்டு தமது மாளிகை போய்ச்சேர்ந்து, தனது குமாரியை அழைத்து "பெண்ணே! நீ உனது பல்லக்கிலேறி அனேக காவலருடன் பத்திராசலம் சென்று உனது அத்தை மருமகளான காமாம்பாளை குழந்தையோடு நீ அழைத்துக்கொண்டு வீடுவந்துசேர். இங்கே விருந்து நடத்தவேண்டும்" எனச் சொல்லினர். உடனே அவள் பரம சந்தோஷத்தோடு கோபன்னாவைப் பணிந்து, அவருடைய ஆசீர்வாதம் பெற்று, தனது பல்லக்கிலேறி சில காவலருடன் பத்திராசலத்திற்குச் சென்று தனது அத்தான் மனைவியை அன்புடன்பணிந்து, அவளிடம் நடந்த விஷயங்களை யெல்லாம் ஆதியோடந்தமாகச் சொல்லி, அவளையும் குழந்தையையும் பல்லக்கி லேற்றிக்கொண்டு பத்திராசலத்தை விட்டு பிரயாணப்பட்டு ஐதராபாத்தில் தனது மாளிகைக்கு வந்து சேர்ந்தாள்.

பன்னிரண்டு வருஷகாலமாய்ப் பிரிய நாயகனைப் பிரிந்து, தன் மைந்தன் சன்னதியில் கைங்கரியம் செய்துகொண்டு வரும் பிரசாதத்தை தனது வீட்டிலுள்ள திருவாராதன மூர்த்திக்கு திருவாராதனம் செய்து, அந்த பிரசாதத்தை ஒருவேளை உண்டு தனது வாழ்நாளைக் கழித்துக்கொண்டு வந்த காமாம்பாள் தனது நாயகனைக் கண்டதே, மிகுந்த ஆரவாரத்தோடு சென்று பணிந்து நின்றாள். கோபன்னாவாகிய ராமதாசர், தன் பத்தினியைப் பார்த்ததும் பன்னிரண்டு வருஷமாய் யிழந்திருந்த பெரும் பொக்கிஷத்தை மீளப் பெறக்கண்டால் எவ்வளவு மனக்கிளர்ச்சியும் உடல் பூரிப்பும் உண்டாகுமோ, அதுபோல், அவளிடத்தில் வைத்திருந்த அன்பு அவரை அறியாது பிடர் பிடித்துத் தள்ள, அவர் ஆ! காமாம்பா! என் அன்பே! உன்னைப் பன்னிரண்டு வருஷகாலம் உன்னை மறந்திருக்கவும், மாநரகிற் கொப்பாகிய கொடிய காவற்சாலையிலுள்ள இருட்டறையில் அடைப்பட்டு வாசம் செய்யவும், அக்காவற்சாலைக்கதிபன் கடுமையாய்க் கருணையென்பதுசிறிதுமில்லாது கன்னெஞ்சுடன்கொடுத்த தண்டனைகளையெல்லாம் அனுபவிக்கவும் அயன் என் தலையில் எழுதியிருந்தபடி நடக்க, நானும் அதை உணர்ந்து மனம் வருந்தாது அனுபவித்தப்பின் ஸ்ரீராகவன் கிருபையாலும், உன்னு

டைய கற்பின் மகிமையாலும், நான் அச்சிறைவாசத்திலிருந்து விடுதலையடைந்து, தானிஷா பிரபுவினால் பெரிதும் கௌரவிக்கப்பட்டு நமது மாமன் வீட்டில் தங்கியிருக்கிறேன் இனி நமக்கு ஒரு குறைவுமில்லை" என்று சொல்லிக்கொண்டிருக்கும்பொழுது, இவர் மைந்தனான ரகுபதியானவன், விரைந்துவந்து தனது தந்தையான ராமதாசர் கால்களில் விழுந்தெழுந்து நமஸ்காரஞ் செய்தான். தன் மைந்தனை எடுத்து மார்பில் அணைத்துக்கொண்டு மகிழ்ந்தார். தன் மாமாவான அக்கன்னுவால் பெரிய விருந்து செய்யப்பட்டது. முதல்நாள் தானிஷாவின் விருந்தென்று ஆயிரம் பிராமணர்கள் பஞ்ச பக்ஷண பரமான்னத்தோடு கோபன்னுவின் விருந்தினராய் அமர்ந்துண்டனர். மறுநாள் மந்திரிகளாகிய அக்கன்னு மாதன்னு இவர்கள் விருந்தென்றும் பலநாள் கோபன்னுவானவர் ஐதராபாத்திலேயே தங்கியிருந்து, மாமா அவர்களிடம் உத்திரவு பெற்று தனது ஊருக்குப் புறப்பட விரும்பி, மாதன்னு அக்கன்னு இவர்களிருவரிடத்திலும் சொல்லிக்கொண்டு தானிஷாவின் சபைக்குச் சென்று, தானிஷாவை சலாம் செய்து பத்திராசலம் போவதாகத் தெரிவிக்க, தானிஷாவானவர் அக்கன்னுவைப் பார்த்து, "இவர் பணமாக அகூரிலிருக்கும் பணம் பூராவும் கொடுத்து தக்க சிப்பாய்களுடன் பத்திராசலத்திற்கு மரியாதையோடு அனுப்புங்கள்" என்று உத்திரவு கொடுத்துவிட்டு தர்பாரைவிட்டு தனது மாளிகைக்குப் போய்விட்டார். தர்பார் கலைந்து எல்லோரும் தத்தம் இடம்போய்ச் சேர்ந்தார்கள்.

தானிஷாவின் உத்திரவைப் பெற்ற அக்கன்னு அகூரிலிருந்த ராமடங் மோகராவைப் பூராவும் எடுத்துப் பெட்டிகளில் பூட்டி பெரிய வண்டிகளிலேற்றி, நல்ல சிப்பாய்கள் காவலுடன் பெட்டிகளை பத்திராசலத்திற்கு அனுப்பிவிட்டு, அநேக இராஜ விருதுகளுடனும், இராஜமேள கோஷங்களுடனும், கோபன்னுவையும் அவர் மனைவி மைந்தனையும் அனைவரும் கண்டு ஆச்சரியமடையும்படியான ஓர் அழகிய பல்லக்கிலேற்றி மிக்க மரியாதையுடன் எல்லோரையும் அனுப்புவித்தார். கோபன்னு ஐதராபாத்தைவிட்டுப் புறப்பட்டு பத்திராசலத்திற்கு வந்துகொண்டிருக்கும் மார்க்கமானது பயங்கரமான ஓர் ஆரண்ணியம். அந்த விடத்தில் கோபன்னுவின் மோகராக்களேற்றிய வண்டிகள் முன்னேசெல்ல, கோபன்னுவானவர் சில பரிவாரங்களுடன் வண்டிகளுக்குப் பின்னே போய்க்கொண்டிருக்கும்பொழுது, இதையறிந்து முன் சாக்கிரதையாக கோபன்னுவின் செல்வம் முழுமையும் அபகரிக்க வேண்டுமென்னும் நினைப்புடனே ஒரு பெரிய கள்ளர்கள் கூட்டம் கூரிய ஆயுதங்களுடன் வந்து பணப்பெட்டி வைத்திருக்கும் வண்டிகளையும் கோபன்னுவையும் மடக்கி சூழ்ந்துகொண்டார்

கள். கோபன்னுவானவர் இந்த கள்ளர் கூட்டத்தைக் கண்டதும் "தானிஷா ராமார்ப்பணமாக நம்மிடம் கொடுத்த பணம் பூராவும் இந்த கள்வர் வசமாய்விட்டதே? நான் என்ன செய்வேன்?" எனத் தன் மனதில் நினைந்தார். இவ்வாறு நினைத்தபொழுது, ஒரு இராஜ்ஜியத்திலிருந்து மற்றொரு இராஜ்ஜியத்தின்மீது படையெடுத்து செல்லும் ஒரு அரசனது படையானது, வாள்வீரர் ஈட்டிவீரர் வில்வீரர் கதைவீரர் எனச் சொல்லும் பல வீரர்களோடு அந்த ஆரண்ணியத்தில் திடீரென்று தோன்றி, கள்வரால் வளைப்புண்ட கோபன்னுவின் பணப்பெட்டிகள் வைத்திருக்கும் வண்டிகளுக்கு முன்னே தோன்றி புலிக்கூட்டங்கள் பாய்ந்து வருவதுபோல வந்து அக்கள்வர் கூட்டத்தைச்சுற்றி நின்றுகொண்டு தமது ஆயுதங்களால் ஒவ்வொருவரையும் சேதிக்க, கள்வர் யாவரும் இறந்தனர்கள். இப்படையை நடத்திவந்த அரசன், பல்லக்கிலிருக்கும் கோபன்னுவைக்கண்டு, தனது தேரினின்றிறிந்து, அவரைப் பணிந்து, அவர் விஷயங்களைக்கேட்டு மகிழ்வடைந்து தனது சேனாதிபதியைப்பார்த்து, "இங்கிருந்து இன்னும் அரை நாழிகை வழிதூரம் ஆரண்ணியமாக விருப்பதால், தமது படையை இவருடன் அனுப்பிக் காத்துப்போம்படிசெய்து, ஆரண்ணியம் கழிந்ததும் திரும்பி வந்துவிடுங்கள்" என அவர்களுக்கு திட்டஞ்செய்து அவருக்குத் துணையாய் அனுப்பினன். சேனாதிபதியும் அரசன் வார்த்தையின்படியே தனது வீரர்களை அழைத்துக்கொண்டு கோபன்னுவுக்குப் பெருந்துணையாய் அவரையும் அவர் பணப்பெட்டிகள் நிறைந்தவண்டிகளையும் வெகுசாக்கிரதையுடன் அக்கொடிய பயங்கரமானகாட்டைக்கடக்கும் வரையில் காபந்து செய்துக்கொண்டு காட்டைக் கடந்ததும், கோபன்னுவையும் அவர் செல்வங்களையும் ஒருயிடத்தில் நிறுத்தி, "பிரபு! தங்களையும் தாங்கள் கொண்டுபோகும் பெருஞ் செல்வங்களையும் எங்கள் அரசன் கட்டளையின்படியே செல்வங்களுக்கு அழிவும், தங்களுக்கு இடையூறும் இல்லாது அப்பயங்கரமான காட்டைக் கடக்கும் வரையில் காத்து இங்கு கொண்டுவந்துவிட்டோம். இனி நீங்கள் யாதொரு பயமுமில்லாமல் தங்கள் பெருஞ் செல்வங்களைக் கொண்டுபோகலாம். நாங்கள் போய்வருகிறோம்" என்று சொல்லிவிட்டுப் போய்விட்டார்கள்.

கோபன்னு தன் பத்தினியுடன் பயமின்றி அந்த ஆரண்ணியத்திலிருந்து தப்பி சிறிதுதூரம் சென்றதும், பத்திராசலம் என்னும் சிகரத்தைக் கண்டு பல்லக்கை நிறுத்தச்செய்து உடனே கீழே இறங்கினர். அவர் பத்தினியாகிய காமாம்பாளும் தன் பல்லக்கை நிறுத்தச்செய்து தானும் இறங்கி நாதனை வந்து பணிந்து நின்றாள். அப்பொழுது ராமதாசர் தனது மனையாளைப் பார்த்து, "என் அருயிர்த்தலைவி! என் வாழ்க்கைத் துணையே

நமது கலிதீர்த்த கடவுள் எழுந்தருளியிருக்கும் ஆலயமுடைய மலையிதுதான். வாலியை வென்ற மலர்க்கண்ணாய்! எனது உயிர்த்துணைவனாகிய ராகவன் தம்பி பணிகொள் தனிநாயகம் செலுத்தும் இம்மலையைக் காணாது பன்னிரண்டாண்டாய்ப் பரதவித்திருந்தேன். இன்றுதான் காணப் பெற்றேன். இம்மலையின் பெயரைச் சொன்னாலும் பிறவிப்பிணி நீங்கிவிடும். இனி நமக்கு யாதொரு துன்பமு மணுகாது. நாம் தூயவனாகிய இராமனருள் பெற்றாய்விட்டது. நமது தீவினையெல்லாம் நம்மைவிட்டு நீங்கியது.'' எனத் தன் பத்தினியாகிய காமாம்பாளோடு பரம சந்தோஷத்துடன் சொல்லிக்கொண்டே பத்திராசலத்தின் அருகாமையாக வந்து கௌதமி நதியில் தீர்த்தமாடி நித்திய கர்மானுஷ்டானங்களை எல்லாம் முடித்துக்கொண்டிருக்கும்பொழுதே அக்கன்னாவானவர் அந்த ஊரில் தாசில்வேலை பார்க்கும் தாசில்தாருக்கு ஒரு உத்திரவு அனுப்பியிருந்தார்.

அதாவது—"ஐயா! தாசில்தார் அவர்களுக்கு, இந்த பத்திராசலம் தாலுக்காவை இராமார்ப்பணமாக தானிஷா அவர்கள் கோபன்னாவிற்கு தாரைவார்த்துத் தானமாகக்கொடுத்துவிட்டதால், நீங்கள் அங்குவரும்கோபன்னாவிடம் உமது அதிகாரத்தைக்கொடுத்துவிட்டு நேராக ஐதராபாத்திற்கு வந்தால், உமக்கு வேறு வேலை கொடுப்பதாகச் சொல்லியிருக்கிறார். நீங்கள் அவர் வந்ததும் யாதொரு தடையும் சொல்லாமல் உமது அதிகாரத்தை அவரிடம் ஒப்புவித்துவிட்டு இவ்விடம் வந்துசேரவும்'' எனத் தாசில்தாருக் கெழுதியது மன்றி, கிராமாதிகாரிக்கும் கோயில் தர்மகர்த்தருக்கும், "ஐயா! நீங்கள் கோபன்னா ஊர்வந்து சேர்ந்ததும் கோவிலிலிருந்து பூரணகும்பம் மற்றைய பிருது மேளங்களோடு மரியாதைசெய்து அழைத்துப்போய் கோயிலின் சர்வாதிகாரத்தையும் அவரிடம் ஒப்புவித்துவிடவேண்டியது.'' என அவர்கள் இருவருக்கும் தாசில்தாருக் கெழுதியதுபோலவே உத்திரவு சீட்டு எழுதிவிட்டார்.

இவ்வுத்திரவு சீட்டு மூவருக்கும் போய்ச்சேர்ந்ததும், தாசில்தாரும் கோவில் அதிகாரிகளும் தரும கர்த்தர்களும் ஊரிலுள்ள ஸ்திரீகளும் புருஷர்களும் இன்னுமுள்ள பக்கத்து கிராமங்களிலிருக்கும் குடிஜனங்களும் பன்னிரண்டு வருடகாலமாய்ப் பார்க்க வேண்டுமென்று ஆவல் கொண்டிருந்த அவர்களின் ஆவலின்படியே கோபன்னா மீண்டும் அப்பத்திராசலத்திற்கே உரியாராய் வருவதைக்கேட்டு பெருமகிழ்வோடு சமஸ்தமேள வாத்தியங்களோடும் குடைகள் கொடிகள் பிருதுகள் ஆலவட்டங்கள் மகர தோரணங்கள் சாமரங்களோடு கோபன்னாவை எதிர்கொண்டழைக்க, பூரணகும்பமேந்தி வேதியர்கள் சொஸ்திவாசம்

செய்ய கௌதமிநதியை நாடிவந்தார்கள். கோபன்னா தன்னை எதிர்கொண்டழைக்க கோயிலிலிருந்து விருதுகளுடன் தீர்த்தப் பிரசாதம் வருவதைக்கண்டு எழுந்து அந்ததிசையை நோக்கி வணங்கி நின்றார். பத்தினியும் அவ்வாறே வணங்கி நின்றாள். கோவிலதிகாரிகளும் அர்ச்சகர்களும் அந்த ஊரிலுள்ளவர்களும் கோபன்னாவைப் பன்னிரண்டாண்டாகப் பிரிந்து வருந்திய துக்கத்தையெல்லாம் ஆற்றிக்கொண்டு ஆனந்தக்கடலில் ஆழ்ந்தார்கள். அர்ச்சகர் கோபன்னாவினுடைய கையில் பூரண கும்பத்தைக் கொடுத்துப் பின் ராகவனுடைய பிரசாதமாகிய பூமாலையை அவர் கழுத்திலே போட்டு பகவானுடைய அபயாஸ்தமும் கொடுத்து, "நீரில்லாது பத்திராசலத்தை விட்டுப்போனதும் உம்முடைய ராமனும் இந்த ஊரைவிட்டுப் போய்விட்டார். நானே அவருக்குக் கைங்கரியம் செய்யக் கூடியவனாதலால், இந்த உண்மை என்னொருவனுக்கே தெரியும். இந்த மாலையை உமக்காக நான் பகவானுடைய திருமேனியிலிருந்து படிகளையும்பொழுது அவர் திருமுகமண்டலத்தைப் பார்த்தேன். நீர் பத்திராசலத்தி லெழுந்தருளியிருக்கும் காலத்தில்கண்ட திருமுகமண்டலத்தை இன்று தான் கண்டேன். இனி எங்கள் கவலை ஒழிந்தது'' என்று கண்களில் கண்ணீர்பெருகச் சொல்லி நின்றார். கோவிலுள்ள வேலைக்காரர்க ளெல்லோரும் கோபன்னாவைப் பார்த்தும், அழுகையும் உவகையும் இரண்டும் அடைந்தார்கள். அந்த ஊரிலுள்ளவர்கள் எல்லோரும் கோபன்னாவைப் பார்த்ததும், பன்னிரண்டு வருஷமாக தேசாந்தரம் சென்றிருந்த புத்திரனை நினைந்து நினைந்து உருகிக்கொண்டிருந்த தாய் தந்தையர்கள் மீண்டும் அப்பிள்ளை அவர்களிடம் வரக்கண்டால் அவர்கள் எவ்வளவு ஆனந்தத்தை அடைவார்களோ? அவ்வளவு ஆனந்தத்தை அடைந்தார்கள். பொதுவாக பத்திராசலமானது கோபன்னாவைப் பிரிந்த காலத்து, அயோத்தியாபுரி ராமனைப் பிரிந்த காலம்போலிருந்தது. ஸ்ரீராமன் சீதாபிராட்டியோடும் இளவீரரோடும் விபீஷண சுக்ரீவரோடும் எழுபது வெள்ளம் வானரப் படையோடும் சிருங்கிபேரிபுரத் துறைவனான குகனோடும் புஷ்பவிமானத்தில் வரக்கண்ட அயோத்தியிலுள்ள ஜனங்கள் என்ன ஆநந்தத்தை அடைந்தார்களோ அதேபோல் கோபன்னாவானவர் சிறையிலிருந்து வெளிப்பட்டு தானிஷாவால் பெரிதும் சன்மானிக்க மீண்டும் அந்த பத்திராசலத்திற்கே இராஜாவாக வந்ததைக் கண்டு ஆநந்தமடைந்தார்கள்.

மண்ணுலக மாந்தர்களும், விண்ணுலகத்தேவர்களும், விராண்டபத்தையுடைய அருச்சுனனின் பிரிய மாமனாகிய ஸ்ரீகிருஷ்ணனாலும் புகழ்ந்துகொண்டாடப்பட்ட பரம சாதுவும், பரம பக்தருமான கோபன்னாவானவர், சிறியோர் முதல் வயோதிகர்

வரையிலுமுள்ள எல்லோரையும் பணிந்து, தன்னில் சிறியோருடைய கள் யாவரும் தன்னை வணங்க அவர்களை ஆசீர்வதித்து தம்பிரீத் பல்லக்கிலேற்றி அனேக பாகவதர்கள் பஜனை பாட, பல வாத்தியங்கள் முழங்க, திரள் திரளாகக்கூடிய ஜனங்கள் வீத்ரும் ராம்ராம் என்று ராமபஜனம் செய்துக்கொண்டு பின்றொடர்ந்து வர, பத்திராசல வீதியில் பட்டினப் பிரவேசம் செல்லுங்காலத்தில், ஒவ்வொரு வீட்டிலும் முத்து ஆலாத்தி யெடுக்க, பத்திராசல கிராமத்தில் பவனிவந்து தன் வீட்டிலிறங்க, கிராமாதிகாரியானவன் சந்தன புஷ்ப தாம்பூலம் கோபன்னாவின் பவனியோடுகூட வந்தவர்களுக்கெல்லாம் கொடுத்து மரியாதை செய்தான். கோபன்னாவிற்குப் பின்னே பத்திராசலம் தாலுக்காவிற்கு தாசில்தாராக நியமிக்கப் பட்டிருந்தவருக்கு கோபன்னாவிடம் தனது பதவியை ஒப்புவிக்கவேண்டு மாதலால், தனது முத்திரை பொக்கிஷ சாவிமுதலிய எல்லாவற்றையும் கொடுத்து கஜானா ஷராப்பினிடமுள்ள வரவு செலவு கணக்கையும் சொல்லச் சொல்லி கோபன்னாவிடம் ஆசீர்வாதம் பெற்று ஐதராபாத்திற்குப் போய் விட்டான்.

கோபன்னாவானவர், திரள்திரளாகத் தன்னைச் சூழ்ந்து கொண்டிருக்கும் ஜனங்களைப் பார்த்து, "ஏ! பிரஜைகளே! சர்வேஸ்வரனான ராமச்சந்திரனன்றி வேறில்லை. ராம நாமத்தில் சிறந்த தாரகமந்திரம் வேறொன்றில்லை. அவர்தான் மனிதர்களுக்கு இடை இடையே வரும் இடையூறுகளை நீக்கிக் காக்கக்கூடியவர். அவரை அன்றி வேறு காக்குந் தெய்வமுங் கிடையாது. மோக்ஷ வீட்டை அடைய வேண்டுமானாலும் அவர்தான் கொடுக்கவேண்டும். ஆதலினால் சதா ராமசேவையைச் செய்யுங்கள். நிற்கையிலும் இருக்கையிலும் உண்கையிலும் உறங்கையிலும் ராமநாமத்தை மறவாதேயுங்கள். அந்த ராம நாமம் எப்பொழுதும் உங்கள் மனதை விட்டு அகலாதிருக்கவேண்டும் இந்த சம்சார பந்தத்தை உங்களுக்கு மோக்ஷமென்று நினையாதீர்கள். இது எல்லாம் மாயையாகும். இந்த மாயையில் மயங்கி மோசம்போகாதீர்கள். வைராக்கியமாய் ராமபக்தி செய்யுங்கள் என்னைப் பாருங்கள். நான் அந்த ஸ்ரீராமனை மறவாது என் மனதிலேயே வைத்து எனது வைராக்கியமென்னும் பெரிய விலங்கை அவர்காலிலே மாட்டி அவர் என் மனதைவிட்டு ஓடாதபடி என்மனதையே உறைவிடமாகக்கொண்டு என்னுடனேயே யிருக்கச் செய்துகொண்டேன். அவர் தன்னை மறவாத அடியவனை அவனிடத்திலேயே கட்டுண்டு கிடப்பவர். அடியார்களுக்கே ஊழியனாயிருந்து அவர்களுக்கு வரும் துன்பங்களை நீக்கி அவர்களைக் காப்பதே அவருடைய தொழில். அடியார்களை யாராவது ஒருவர் துன்பப் படுத்துகிறார்களோ அது அவரைத் துன்பப்

செய்ததியதே யாகும். அவர் எங்கும் நிறைந்தபொருள். அவரை எதிலும்நிஜமாய் நினைந்து பக்தி செய்கிறார்களோ அவ்விதமே அவர் பிரத்தியக்ஷமாய்த் தோன்றி அவர்களுக்குக் காக்ஷியளிக்கும் கண்கண்ட தெய்வம். அவரை விடாதீர்கள். ராமநாமத்தை மறவாதீர்கள். நான் சொல்லுவதை கவனியுங்கள். நான் மறவாதிருந்ததினாலேயே நான் கொடிய பாவிகளும் துன்மார்க்கர்களும் அடைப்பட்டு அவதிப்படும் பொல்லாச் சிறைச்சாலையில் அவர்களைப்போலவே நானுமொருவனாய் அடைப்பட்டு பன்னிரண்டு வருஷகாலமாய்க் காவற்சாலைக் கதிகாரியால் நியமிக்கப்பட்ட எல்லாக் கொடிய தண்டனைகளையும் ஏற்று அனுபவித்தேன். என் மனதை விட்டு நீங்காது எனது வைராக்கியமான பக்தியென்னுங் கயிற்றால் கட்டுண்டுகிடந்த ஸ்ரீராகவன், அவராலும் பொறுக்கமுடியாது என்னை அக்கொடிய சிறையிலிருந்து மீட்க எண்ணி எனது சிப்பாய்களைப்போல் தானும் தனது தம்பி இளையபெருமாளும் உருவெடுத்துக்கொண்டு தானிஷாவிடம் சென்று, நான் அவருக்குக் கட்டவேண்டிய தீர்வைப்பணம் பூராவும் கட்டிவிட்டு ரசீது பெற்றுக்கொண்டு, அந்த ரசீதை உண்டாலும் பொறுக்கமுடியாது விஷத்தை உண்டு இறப்பதே சரியென்று மனதில் உறுதிப்படுத்திக் கொண்டு விஷத்தையும் சேகரித்து ஒரு கிண்ணத்தில் வைத்துவிட்டு அப்பொழுதும் அவனுடைய ராமநாமத்தை மறவாது சொல்லிவிட்டுப் பிறகு விஷத்தை உண்ணக்கருதி ராமத்தியானஞ் செய்திருந்து என்னை நான் மறக்கும் சமயமறிந்து நான் அடைப்பட்டிருந்த இருட்டறைக்குள்ளே விஷக்கிண்ணமிருந்த விடத்தில் தான் தானிஷாவிடமிருந்து வாங்கிவந்த ரசீதை அவ்விடத்தில் வைத்துவிட்டு நான் உண்ணவிருந்த விஷக்கிண்ணத்தை உருட்டிவிட்டு சென்றார். அன்றியும், இந்த பத்திராசலம் தாலுக்காவையும் அவர் கட்டிய ஏழுலக்ஷத்து ஐயாயிரம் வராகனுள்ள ராமடங் மோகராக்களையும் என்னிடமே திருப்பி கொடுக்கும்படி செய்ததுடன் இந்த பத்திராசலம் தாலுக்கா என்று பார்வையிலேயேயிருக்கவும் எனக்கே உரியதாகத் தாரை வார்த்து சத்தியஞ்செய்து கொடுக்கவும் செய்த அந்த கருணாநிதியை தியானிக்காமல் நமது வாழ்நாளை வீணாகக்கழிக்காதீர்கள். ஏ! பிரஜைகளே! தித்திய உபாயர்களே! நம்மை எப்பொழுது ஸ்ரீமந் நாராயணன் இம்மண்ணுலகில் பிறப்பித்தானோ அதுமுதல் அவன் திருவடியில்போய்ச்சேருமவரையிலும் உழைக்கப்பட்டவர்களாயிருக்கிறோம். அவ்வுழைப்போடு அவனுடைய ராமநாமத்தை மறவாது சதாவில்லாமல் போய்விட்டாலும், ஒரே வைராக்கியமாய்க் காலையிலோ, மாலையிலோ, இரவிலோ ஒருவேளை ஒரே மனதுடன் ஒருகவலையும் பற்றும் சித்தனையும் இல்லாது தன்னைமறந்து ஒரே நிமிஷம் ராமநாமத்தைச் சொல்ல வேண்டியது. இதை யெப்போதும் மறவாமலும் இருக்கவேண்

டும். உங்கள் உழைப்போடு அவன் திருநாமத்தைச் சொல்லுவதும் நித்தியதொழிலாகக் கொள்ள வேண்டியது. இதுவே உங்களுக்குப் பலனைக்கொடுப்பது. மறவாதீர்கள். ராம நாமத்தை மறவாதீர்கள். சுகமாய்ப்போய்வாருங்கள்" என எல்லோரையும் ஆசீர்வதித்து நன்மொழிகூறி, ஸ்ரீராமபக்தியில் ஈடுபடச்செய்து அனுப்பிவிட்டு, தான் பத்திராசல ராமனை சேவிக்க தனது பத்தினியான கமலாம்பாளுடனும் தனது குமாரனான ரகுபதியுடனும் அந்த ஊரிலுள்ள சாதுக்களுடனும் சென்று, கிரிப்பிரதக்ஷிணம் செய்து, பத்திராசல மலையிலேறி இராமச்சந்திரனை சேவித்து, தீர்த்தம் சடாரி திருத்துழாய் பரிவட்டம் மாலை சந்தனம் பழம் பிரசாதம் இவைகளைச் சாதிக்கப்பெற்றும் ராமச்சந்திரனை தோத்திரம்பண்ணி நிற்கும்பொழுது, பகவான் அசரீரியாக, "கோபன்னா! நீ எனக்குச் செய்த கைங்கரியத்திலும் உன்னுடைய வைராக்கியமான பக்தியிலும் ஈடுபட்டே உனக்கு நான் வேலைக்காரனாய் தானிஷாவிடம் சென்றேன். இன்றுமுதல் உன்னை யாரும் "ராமதாசர்" என்று அழைக்க நீர் எனது சரணங்களை சேதனர்கள் அடைந்து, உய்யும்படி சிறிது நாளிருந்து சேவை செய்து முடிவில் உமக்கென்று நான் அனுப்பும் புஷ்பகவிமானத்திலேறி யாவரும் காண எனது பரமபதம் வந்து சேர்வீராக" என இராகவன் திருவாய் மலர்ந்தருளியதை அங்கு வந்திருந்த யெல்லாசனங்களும் சாதுக்களும் காதாரக்கேட்டு ஆச்சரியத்தையடைந்ததுமன்றி, "இந்த மகானுபாவரிடம் சர்வேஸ்வரரான இராகவன் நேருக்குநேராய்ப் பேசுகிறாரே! என்ன இவருடைய பக்தி! என்ன இவருடைய வைராக்கியம்! என்ன இவருடைய மனோநிலையின் உறுதி! ஒரே நிலையிலிருந்து எல்லா பாசபந்தங்களையும் நீக்கி ஒருமனதுடன் ஒரு நினைவும் இல்லாது இராகவனுடைய தியானத்திலிருக்கும்பொழுது தனது ஐம்புலன்களையும் அவன் பாத கமலங்களில் நிறுத்தி, அப்பூதங்கள் ஐந்தும் அவர் சொற்கடவாது அந்த ராகவனுடைய கமலபாதங்களை விட்டகலாது அடக்கி, ஒரேமனதுடன் பக்திசெய்து ராகவனைத் தன்வசமாக்கிக்கொண்ட இவருடைய சாமார்த்தியமும் பிடிவாதமும் அன்பும் யாருக்கு வரும்! எவ்வளவு தவம்செய்தால் இவருடைய உறுதி மனோநிலையும் வைராக்கிய பக்தியும் நமக்குவரும்! இவரல்லவோ பக்தன்! இவரல்லவோ தெய்வம்! இவரே ஆசாரியன், இவருடைய திருவடியே மோக்ஷவீடு. இவருக்கு செய்யும் வந்தனை வழிபாடு ஈஸ்வரனுக்கு செய்யும் வந்தனை வழிபாடாகும்" எனப் பலவாறு நினைத்து கோபன்னாவைத் தங்களுக்கு ஆச்சாரியனாகக் கொண்டார்கள். இவர் அடைந்த பேற்றை எல்லோரும் அடைய வேண்டுமென்று நினைத்தார்கள். கோபன்னாவானவர், தனக்கு பகவானான ராகவனால்கொடுத்த பெயராகிய "ராமதாஸ்" என்னும் பெயரால் எல்லோரும் அழைக்கப்பட்டு பத்திராசலத்தி

லுள்ளவர்கள் எல்லோரும் தன்னிடம் தாரகமந்திரோபதேசம் பெற்று அதையே யிடைவிடாமல் சிந்தித்து முத்தியையுலக்கோர் விந்தையாய் விளங்கி வந்தார்கள். ராமதாசர் பத்திராசலம் தாலுக்கா கச்சேரி சென்று, வெகு கவனமாய் இராகவன் சொத்தாயிற்றே! சேதம்போக விடப்படாதே! என்று பார்த்து வந்ததோடு, தானிஷா தன்னிடம் கொடுத்த ஏழு லக்ஷத் தையாயிரம் வராகனை ராமடன் மோகராக்களை இராகவன் பேரால் கணக்கில் வரவு வைத்து சர்க்கார் கஜானாவில் சேர்த்துவிட்டு, ஒவ்வொருநாளும் ததியாராதனம் நித்தியோத்சவம் நடத்தி பரமானந்தமாய் இராகவனைச் சேவித்துக்கொண்டு பத்திராசலத்திலேயே யெழுந்தருளியிருந்தார்.

இதுபோல் இவர் தானிஷாவால் கொடுக்கப்பட்ட பெருஞ்செல்வத்தைக் கொண்டு ராகவனுடைய கைங்கரியங்களைச் செய்துகொண்டிருக்கும்போது முதல் முதல் இவருக்கு தாரகமந்திரத்தை உபதேசிக்க வேண்டுமென்று இவரிடத்தில் அன்புகொண்டு இவரைத் தேடிக்கொண்டு இவரது மாளிகை சென்றிருந்தபோது இவர் தன்னைக் கவனியாது ராமத்தியானபரராய் இருந்ததைக் கண்டு, இவரது திருவாராதனப்பெட்டியை யெடுத்துக்கொண்டுபோய்க் குளத்தில் மறைத்துவிட்டு இவருடைய வருகைக்கு எதிர்பார்த்துக்கொண்டிருந்து இவர் திருவாராதனப் பெட்டியைத் தேடி வருவதைக்கண்டு அவரால் சங்கதிதெரிந்துகொண்டு திருவாராதனப் பெட்டியை மீண்டும் அவரிடமே கொடுத்து அவருக்கு தாரகமந்திரத்தை உபதேசித்தருளிய கபீர்தாஸ் தனது சிஷ்யனாகிய இந்த கோபன்னாவானவர் பத்திராசல ராமனுக்கு சர்க்கார் பணத்தைக்கொண்டு ஆலயங்கட்டியதையும், அதற்காக தானிஷா இவரைச் சிறைச்சாலையில் அடைத்ததையும், ஸ்ரீராமனே தானிஷாவுக்குக் கட்டவேண்டிய இவ்வளவு பணத்தைக் கோபன்னாவுக்குப் பதிலாய் கோபன்னாவின் சிப்பாயைப்போல் உருவெடுத்துக்கொண்டு தானிஷாவிடம்சென்று பணத்தைக் கட்டிவிட்டு கோபன்னாவை சிறையிலிருந்து விடுவித்ததையும், தானிஷா கோபன்னாவுக்கு மிகுந்த மரியாதைசெய்து அனுப்ப அவற்றைப் பெற்றுக்கொண்டு பத்திராசலம் வந்து சேர்ந்ததையும், ஸ்ரீராமன் அசரீரியாய் ராமதாஸென்று திருநாமம் கொடுத்ததையும், முடிவில் பரமபதமும் கொடுப்பதாகச் சொல்லியதையும், தனது ஞானதிருஷ்டியால் உணர்ந்து தனது சிஷ்யராகிய ராமதாசரிடம்வந்தார். ராமதாசர் கபீரைக்கண்டதும், "ஆ! வருக, வருக, எனது பாக்கியமே பாக்கியம். நான் எனது ஞான தேசிகரைத் தரிசிக்க என்ன தவம்செய்தேனோ தெரியவில்லையே!" என்று அதிக மகிழ்ச்சியடைந்து ஆசாரியனுடைய அடிகளில் விழுந்து வணங்கி ஆனந்தமுற்று நின்றார். மீண்டும் தன் பத்தினியைத்

தீர்த்தம் கொண்டுவரச் சொல்லி திருவடிகளை அலம்பி, தன் தலையிலும் மனைவியின் தலையிலும் புரோக்ஷித்துக்கொண்டு, அவருக்குக் கைலாகு கொடுத்து உள்ளே அழைத்துவந்து திவ்வியாசனத்தில் உட்காரச்செய்து அவரை உள்ளன்போடு தோத்திரம் பண்ணினர்.

சிஷ்ய வர்க்கத்தில் மிகச் சிறந்தவராகிய கோபன்னுவைப் பார்த்து கபீர்தாஸ், "ராம்தாஸ்! உன்னுடைய அன்பையும்; உனது பரிசுத்தமான உள்ளத்தையும்; வைராக்கிய நெறியிலிருந்து சிறிதும் பிறழாது செய்துவரும் பக்தியையும்; நான் மிக்க மெச்சினேன். நீ செய்துவந்த இந்த பக்தியானது உலகம் உள்ளவரையும் பாமரர்கள் கடைத்தேற வழியாய் அமைந்தது. ராமனை கலியுக வரதனென்று இனி எல்லோரும் நம்பி வந்து சரணாகதி அடைவார்கள். ஒவ்வொருவரும் அந்த ராகவனுடைய பக்தியில் ஈடுபட்டு கடைசியில் மோக்ஷ வீட்டையும் பெறுவார்களென்று நான் உறுதியாய் நம்புகிறேன்" எனச் சொல்லினர். இவ்வார்த்தையைக் கேட்டதும் ராமதாஸ் மறுபடியும் ஆசாரியன் திருவடிகளில் விழுந்து பணிந்து, "சுவாமி! அடியேனுக்கு நெடுநாளாக ஒரு சந்தேகம் இருந்துகொண்டிருக்கிறது. அதாவது ராமன் அடியவர்களை சிறிதுநேரம் கூட அவதிப்படப் பார்க்கமாட்டாரென்று நீங்கள் கூட தெரிவித்திருக்கிறீர்களே? அவ்வளவும் அப்படியிருக்க, நான் பன்னிரண்டுவருஷம் சிறையில் அவதிப்படும்படி அவர் என்பார்த்துக் கொண்டிருந்தார்? கடைசியில் தானிஷாவின் அரசுக்கு சேரவேண்டிய கிஸ்தி தொகையை அவரே நேராய் கொண்டுபோய்க் கொடுக்க என் நேர்ந்தது? அவர் இப்பொழுது கொண்டுவந்து கட்டிய கிஸ்தி தொகையை என் முதலிலேயே கட்டி என்னைச் சிறையிலிருந்து விடுவிக்கப்படாது? அப்படிச் செய்திருந்தால் நான் சிறைச்சாலைத் துன்பம் அடையாதிருந் திருப்பேனே? இதன் காரணத்தை அடியேனுக்குத் தெளிவாய்த் தெரிவிக்க வேண்டும்? சுவாமி! நான் சிறையில் அடைப்பட்டது அவருக்குத் தெரியாதோ? தெரிந்தபின் வந்தாரென்றால், அவர் சர்வக்ஞானி, எல்லாம் தெரிந்தவர் என்னும் அவருடைய பெருமைக்கே குறைவு வருகிறது. ஆதலால், அவருக்கு நான் சிறைப்பட்டது தெரியாதென்று எண்ணுவதற்கு நியாயமில்லை. அப்படியிருக்க, அடியவர் நினைத்தவுடனே விரைந்து வந்து ரக்ஷிக்க வேண்டியவனான ஸ்ரீராமன் பன்னிரண்டு வருஷமாக நான் கதறி அழுதும் வராததற்குக் காரணம் என்ன? இதையும் தேவரீர் திருவாய் மலர்ந்தருள வேண்டும்" எனப் பிரார்த்தித்தார்.

சிஷியனாகிய ராம்தாஸ் இதுபோல் சொல்லியதைக் கேட்டதும், கபீர்தாஸ் அவரைப் பார்த்து, "ராம்தாஸ்! ஒருவன்

ஈஸ்வரனிடத்தில் நீங்காத பக்தியுடையவனானாலும், அவன் முற்பிறப்பில் செய்த கர்மத்தை அனுபவித்துத்தான் தீரவேண்டும். அனுபவியாது ஒன்றுமே தள்ளமுடியாது. ஈஸ்வரனையே நம்பினால் முற்பிறப்பின் கர்மங்களை அனுபவிக்கும்பொழுது வரும் இடையூறுகள் அவ்வளவாக அவனை பாதிக்காது. ஆனால் முற்றும் நீங்கவும் நீங்காது. அது அநுபவத்திலேயே தெரியும். தானிஷா சிறையிலிருக்கும்படி உன்னைக் கொடுமையாக முக்காலி கட்டியடித்தும், தாங்கமாட்டாத கொடிய வெய்யிலில் கொண்டுபோய் உருட்டியும், முதுகில் பாரமேற்றியும், முள்ளில் நடக்கச் செய்தும், இப்படி பலவாறாக உன்னைத் துன்பப்படுத்தியபோது அந்த உபாதி உமக்கில்லாது காப்பாற்றியது தான் திருஷ்டாந்தமாகும். நீர் பன்னிரண்டு வருஷம் சிறையிலிருந்ததற்குக் காரணம்; முன்ஜென்மத்தில் அவந்தி நகரத்தில் பெரிய தனவந்தனான மாதவப்பட்டரென்னும் ஒரு வைஷ்ணவருக்கு நீர் புத்திரராய்ப் பிறந்து அளவிட முடியாத செல்வமும் கல்வியும் ஒழுக்கமும் அறிவும் ஆசாரமும் ஈஸ்வரபக்தியும் உடையவராக இருந்தீர். உமக்கு ஒரு அருமையான அழகிய கிளிப்பிள்ளையின்பேரில் ஆசை ஏற்பட்டது. அதைக் கிரயம் கொடுத்து வாங்கி பன்னிரண்டு வருஷம் ஓர் கூட்டில் அடைத்துவைத்து, அதன் இனத்தைப் பிரித்தும் தன்னிஷ்டப்போல் பறந்தோடி இரைதேடி உண்டு உலாவாமலும், தன் மனைவியைப் பிரிந்து வருந்தவும் செய்தீர். அந்த கர்மமானது இந்த பிறப்பில் உம்மை வந்து கூடிற்று. கேவலம் ஒரு கிளியைக் கூட்டிலடைத்துவைத்தால் நான் சிறையில் வருந்தும்படி கர்மம் ஏற்பட வேண்டுமோ என்று நினைக்கலாம்; கிளிக்கும் மனிதனுக்கும் உயிர் ஒன்றேயன்றி வேறில்லையாதலால், இவ்வாறு நேர்ந்தது. ராமதாஸ்! நான் வந்து நெடுநாழிகையாயிற்று. போய் வருகிறேன்" என்று சொல்லி ராமதாசின் வந்தனத்தோடு தனது ஆஸ்ரமத்திற்கு எழுந்தருளினர். ராமதாஸ் தனது ஆச்சாரியரை அனுப்பிவிட்டு தான் பத்திராசல ராமனுக்கு கைங்கரியங்கள் செய்துகொண்டு தாசில் உத்தியோகத்தையும் பார்த்துக்கொண்டு தானே ஆசாரியராய் பத்திராசலத்தி லுள்ளவர்களையெல்லாம் பரமபாகவதர்களாக்கி, பகவானுக்கு பிரம்மோற்சவம் நடத்தி, ஸ்ரீராமனைச் சர்வகாலமும் தியானித்துக்கொண்டிருக்கும் காலத்தில், இவருக்கு வாதநோய்வந்து பத்திராசல மலையின்மேல் ராமசேவை செய்ய சௌகரியமில்லாது போயிற்று. அதனால் அவர் வருந்தி "இறைவனே! உன்னைச் சேவை செய்யவும் கொடுத்து வைக்கவில்லையே. ஏ! பன்னகசயனா! என் காயம் இருக்கும் வரையிலாவது என் கண்ணால் உன்னைச் சதா பார்த்துக்கொண்டும், உனக்கு செய்ய வேண்டிய கைங்கரியங்களைச் செய்துக்கொண்டும், உன் திருநாமத்தை யிடைவிடாது பஜித்துக்கொண்டும், உன்னை வழிபடக் கருதி

யிருக்கும் பாகவதோத்தமர்களைச் சேவித்துக்கொண்டும் இருக்க எனக்கு நோய் வராது கிருபைசெய்யப்படாதா? என்னைப் பிணியிலும் வருத்தப்படச் செய்யவேண்டுமோ? நான் இன்னும் உனக்குக் கொடியவனோ" என வருந்தும் பொழுது, அவருக்கு அந்த வாதநோய் அதிகரிக்கவே வாதை பொறுக்க முடியாது தனது சிஷ்யர்கள் யாவரையும் அழைத்து "ஸ்ரீராமச்சந்திரன் இந்த வியாதியை யெனக்குத் தந்தது தனது சரணாரவிந்தத்திற்கு ஆட்படுத்திக் கொள்ளுவதற்கென்றே நினைக்கிறேன். நீங்கள் எல்லோரும் ராம பக்தியை விடாதீர்கள். சதா ராமநாம பஜனம் பண்ணுங்கள்" என்று எல்லோருக்கும் போதித்து தானும் ராம நாம பஜனம்பண்ணிக் கொண்டிருக்கும்பொழுது நித்திய சூரிகளும், முப்பத்து முக்கோடிதேவர்களும் ஆகாயத்தில் வந்து கூடினார்கள். தேவ துந்துபி வாத்தியங்கள் ஆகாயத்தில் முழங்கின. அப்பொழுது ஆகாயத்திலிருந்து நவரத்தின மணிமயமான ஒருரதம் சுழன்றுகொண்டு ராமதாஸ் சுவாமிகளின் வீட்டு வாயலில் வந்து நின்றது. இந்த இரதமும் சுழன்று வரும் பொழுது அந்த ஊரிலுள்ளவர்கள் யாவரும் அப்புதுமையைக் கண்டு ராமதாஸ் சுவாமிகளின் வீட்டு வாயலண்டை வந்து கூடினார்கள். ராமதாஸ் இரதம் வந்ததை நினைந்து அருமகிழ்வடைந்து யாவரையும் பார்த்து, "ஏ! ஸ்ரீராமபக்தர்களே! வைகுந்தத்திலிருந்து எனக்காக இரதம் வந்திருக்கிறது. நீங்கள் ராம நாமத்தை மறவாது நான் சொல்லியதுபோல் பஜித்துக்கொண்டிருந்தால் உங்கள் ஒவ்வொருவருக்கும் இந்த இரதம்வரும். நித்திய சூரிகளும் முப்பத்து முக்கோடி தேவர்களும் வந்து உங்களையும் பரமபதத்திற்கு அழைத்துச் செல்வார்கள். "என்று சொல்லி தனக்கு வாழ்க்கைத்துணையாயிருந்துகொண்டிருந்த காமாம்பாளையும் தன்னுடன் கூட பரமபதத்திற்கு அழைத்துச் செல்லவேண்டுமென்னும் ஆசையால், "ஏ! பாமா! என் வாழ்க்கைத்துணைவே!" என அழைத்தார். அவ்வம்மையார், "சுவாமி! சாதம் வடித்துக் கொண்டிருக்கிறேன். வடித்து நிமிர்த்திவிட்டு வருகிறேன்" என்று சொல்லினாள். ராம்தாஸ், "நீ கொடுத்து வைத்தது அவ்வளவுதான்" எனச் சொல்லிக்கொண்டே எழுந்தார். அப்பொழுது தேவர்கள் யாவரும் அந்தர வீதியிலிருந்து ராமநாம பஜனைபண்ணி ஆநந்தக் கூத்தாடினார்கள். ராமதாஸ் சிஷ்யர்களெல்லாம் தம்புரு வீணை பிட்டில் முதலிய வாத்தியங்களுடன் ராமநாமாவளி பாடினார்கள். ராமதாஸ் சுவாமிகள் அந்தரத்தில் வந்து ஏறினார். இரதமானது ஆகாயத்தில் கிளம்பி பத்திராசலம் பர்வதத்தை பிரதக்ஷிணமாக வரும்பொழுது யாவரும் ராமதாஸ் சுவாமிகளுக்கு ஸ்ரீராமன் அனுக்கிரகம் செய்ததை நினைத்து "ராம் ராம் என்று கோஷித்தார்கள். இரதமானது மறுபடியும் ராமதாஸ் திருமாளிகைக்கு முன்னேவந்து ஆகாயத்தில் அந்தர

மாய்ச் செல்ல ஆரம்பித்தது. இந்தக்காலத்தில் இவர் பத்தினியான காமாம்பாள் பிரசாதத்தை வடித்து விட்டு தன் நாதன் அழைத்தாரே என்று ஓடிவந்து பார்க்க, நாதனைக் காணாது தெருவில்லவர் யாவரும் ஆநந்தக்கடலில் ஆழ்ந்து வானத்தையே பார்த்து ராமநாம பஜனை செய்துகொண்டிருப்பதைக்கண்டு தானும் ஆகாயத்தினைப் பார்த்தாள். தனது நாயகன் இரதத்தில் பரமபதத்திற்கு எழுந்தருளுவதைக்கண்டு, "அந்தோ! மோசம் போனேனே, எனது நாயகர் என்னைத் தன்னுடன் பரமபதத்திற்கு அழைத்துச் செல்லுவதற்காக அழைத்தாரே! அவர் அழைத்தவுடனே வாராமல் இருந்துவிட்டேனே! நான் என்ன பாவி" என வருந்தினாள். ராமதாஸ் சுவாமிகள் ரதத்திலெழுந்தருளி நித்திய சூரிகள் எதிர்கொள்ள லீலாவிபூதியை விட்டு நித்திய விபூதியாகிய ஸ்ரீவைகுந்தத்திற்கு சென்று திருமாமணி மண்டபத்தில் திருமாமகளுடன் அமர்ந்திருக்கும் ஸ்ரீயப்பதியாகிய பரமபதநாதனை சேவித்து சாருபமென்று பகவானைப்போல சங்குசக்கரம் சதுர்ப்புஜம் முதலியவைகளோடு கூடியவர்களாய் நித்தியசூரிகளோடு கலந்து வீற்றிருந்தார்.

இப்புண்ணிய புருஷனுடைய மனைவியான காமாம்பாள் தனது நாயகன் தன்னைப் பிரிந்து பரமபதம் சேர்ந்ததும் தனது மைந்தன் ரகுபதியோடு ராகவன் சன்னதிக்குச் சென்று ராமத்தியானம் செய்துக்கொண்டிருக்க, ராமன் அவள் முன்னே ஒரு மறையவர் உருவோடு தோன்றி, "நீ வழிபடு கடவுள் நான்தான். உன்னுடைய குமாரனுக்கு தக்கவயது வந்தபிறகு இந்த தாலுக்காவின் பொறுப்பையும் எனது கைங்கரியத்தின் பொறுப்பையும் ஏற்றுக் கொள்ளச் செய்தபின் நானே உனக்குப் பரமபதம் தருகிறேன். நீ உன் வீட்டிற்கு செல்" என்று சொல்ல, காமாம்பாள் அந்த வார்த்தையைக் கேட்டு தனது குமாரனுடன் வீட்டிற்கு வந்து தனது பந்து மித்திரர்களுடன் தனது குமாரனை ரகுபதியன்னவிற்கு நல்ல பெண்ணொருத்தியை விவாகம் செய்துவைக்க வேண்டுமென்று தீர்மானித்து, மாதன்னாவின் குமாரத்தியான கோசலாம்பாளை அக்கன்னாவும் மாதன்னாவும் கொடுக்க சம்மதித்ததால் நல்ல சுபமுகூர்த்தத்தில் கலியாணம் நடத்தி தனது மைந்தனும் தனது மருகியும் தன்னை அன்புடன் ஆதரிக்க சிலநாளிருந்து ஸ்ரீராமனருளால் காமாம்பாளும் பரமபதமடைந்தாள்.

தானிஷாவானவர் ராமதாசருக்கு ஸ்ரீராமச்சந்திரர் பரமபதமளித்ததையும் அவருக்காக பரமபதத்திலிருந்து நேரே இரதம் வந்ததையும் யாவரும் காண அவர் ரதத்திலே வானுலகில் சென்றதையும் கேள்வியுற்று, நாமும் பத்திராசலம் செல்லவேண்டும். ராமனை சேவிக்கவேண்டும். மோக்ஷ வீடாகிய பரமபதத்திற்குப்

போகவேண்டும், என்று இதே எக்கங்கொண்டு, நாம் துலுக்க சாதியில் பிறந்து இஸ்லாம்மதத்தைக் காக்கவென்று நம்மை யிந்த சிம்மாசனத்தி லேற்றியிருக்கிறார்களே! நான் இந்துக்கள் ஆலயத்தின் பக்கம் சென்றாலும், நமது மார்க்கத்தை விட்டு விட்டானென்று நம்மை நிந்திப்பார்களே! என்றுவருந்தி நாம் ஒருவருக்கும் தெரியாமல் பத்திராசல ராமனைச் சேவித்து அவருடைய நியாயமான பரமபதத்தினை யடைகிறேனென்று ஒருவரோடும் சொல்லாமல் விடியற்காலத்தில் தனது பள்ளியறையிலிருந்து எழுந்து குதிரை லாயத்திற்குப் போய் தான் ஏறும் குதிரையை அவிழ்த்து அதற்கு சேணம்கட்டி ஏறிக்கொண்டு பத்திராசலம் வந்து ஆலயத்தின் முன்னே நிற்க, ஸ்ரீராமன் தானும் தம்பியும் சீதாபிராட்டியுமாக தானிஷாவுக்கு சேவை கொடுத்தார். தானிஷாவானவர் குதிரையை விட்டிறங்காமலே அவரைக்கண்டதும் அவர் மாயையால் அவனை மறந்து பரவசமானான். உடனே தானிஷாவை ஸ்ரீராகவன் தானிஷா ஏறிவந்த குதிரையுடனே தனது திருமேனியில் மறையும்படி செய்து அவருக்கு பரமபதத்தைத் தந்தருளினார்.

வாழ்த்து கவி

பன்னலஞ் செறிந்த பத்திராசலத்தமர் பரமன் வாழி
மன்னிய வன்னுள் போற்று மாண்பினர் வாழியென்றுந்
துன்னியவன்பால் மாயன் தொண்டொடு வருமாகண்ட
நன்னயன் வாழி யன்னு நற்கதை கவினுரைப்போர் வாழி.

பத்திராசல ராமதாசர் சரித்திரம்

முற்றிற்று.

ஸ்ரீ

ஸ்ரீபாண்டுரெங்காய நம:

போசலபாவா சரித்திரம்

ஆழ்வார் திருநகரி

சிங்கம். ஸ்ரீனிவாச அய்யங்கார் எழுதியது.

கவி

மாளிகைத்தை யறன் வளம்படுத்து வேளாண்மை
தானிளிய நெனவுகந்து தாளாண்மையால் வருந்து
மேனியராய் வந்தடைந்தோர் தமக்களிக்கு மேதகையா
மோனகிலே போசலபாவா சரித்திரம் மொழிகுவாமால்.

பாகவதர்களின் மன்னோசையும், விண்ணாட்டவரான தேவர்களின் துந்துபி யோசையும், வேதியர்கள் பாராயணஞ் செய்யும் வேதநாத வோசையும், சாதுக்கள் "ஜெ ஜெ விட்டல், ஜெ ஜெ விட்டல்" என்று விட்டல் நாதனைப் பரவும் ஓசையும், யாகம் செய்வோர்களின் மந்திர ஓசையும், மாறாது ஒலிக்கும் சிறப்புடையதாய், சென்று வணங்கினும் அன்றி மகிழ்ந்து பேசினும் மனத்தால் நினையினும் முத்திவீட்டைத்தரும் சிறப்புடையதாய் வேதியரென்று யாவரும் பேதமின்றி தழுவவும், வாழ்த்தவும், தோத்திரிக்கவும், ஆடவும் பாடவும் அமைந்த சர்வேஸ்வரனுடைய வாசஸ்தலமாய் பல தேசங்களிலிருந்தும் திரளாக பாகவதர்களும் சாதுக்களும் வந்து சேவை செய்யவுமமைந்ததாய் பீமநதியின் சார்பாக அமைந்த பண்டரிபுரமென்னும் திருப்பதியை யடுத்துள்ள பால்காடு என்னும் ஒரு நகரத்திலே ஆயிரங்காணி நிலங்களுடையவராய் ஆயிரம் பேருக்கு அதிபனென்று யாவரும் தன்னைச் சொல்லவும், நான்காவது வர்ணமான சூத்திரர் மரபிலே உதித்து, முகம் தோள் துடை முதலிய மூன்று உறுப்பிலும் தோன்றிய பிராமண க்ஷத்திரிய வைசியர்களென்னும் மூன்று குலத்தவரையும், கால்கள் மற்றை உறுப்புகளை எப்படித் தாங்குகிறதோ; அன்னதேப்பால உணவின் வன்மையினாலே தாங்கிக் காப்பவராய் எப்பொழுதும் அருந்தவர் பேணல், விருந்து புரந்தரல், சுற்றம் தழுவல், வறியோர்க்கு வழங்கல், தெய்வந்தொழல், பிதிரரை பேணுதல் முதலிய இல்லறத்தார் செய்யவேண்டும் சத்கர்மங்களை நன்கு தழுவினவராய் எந்தநேரமும் பாண்டுரங்கனுடைய சரணாரவிந்தத்தையே நம்பினவராய் தனது செல்வம் முதலிய யாவுமே அவனது. நம்மிடம் அவன் ஒப்புவித்தது பிறருடைய துன்பத்தை நீக்குவதற்கன்றி, வேறல்ல என்னும் நினைப்புடையவராய் எந்தநேரமும் வந்த விருந்தை உபசரிக்க எதிர்பார்த்து நிற்பவராய், அன்பே ஒரு வடிவம் எடுத்து

வந்ததென்று நினைக்கத் தகுந்தவராய், அருட்பெருந்தகையராய், பாவலர் வறுமை நோய்க்கு மருந்தாய், இவருடைய மலர்முகம் நோக்கினும் பசி யகலுமென்று சொல்லத்தகுந்தவராய், தனது குலம் என்ன தவம் செய்ததோவென்று அதிசயிக்கத் தகுந்தவராய், மனம் தூய்மை யுடையவராய், மாசற்றவராய் பானுகோசி போசலபாவா வென்னும் திருப்பெயர் தரித்தவராய் விளங்கினர்.

இவர் செல்வத்தாலும் கல்வியாலும் அறிவாலும் ஒழுக்கத்தாலும் கொடையாலும் பக்தியாலும் அருளாலும் அன்பாலும் மிக்கவராயினும் இவருடைய நன்மனையாட்டியின் குணங்களை நாவாயிரமுடைய ஆதிசேடனும் சொல்ல நாணுவன். அழகிலோ திருமகளெனலாம். பொறுமையிலோ புவிமகளெனலாம். கல்வியிலோ கலைமகளெனலாம். கற்பிலோ அருந்ததியெனலாம். நாயகன் சொல் கடவாமையிலோ சந்திரமதியே யெனலாம். ஒருவன் எவ்வளவு தனம் படைப்பினும், உலகமெல்லாம் கொண்டாடும் நன்மதிப்பிருப்பினும், நற்குண நற்செய்கையுடைய மனைவியை அடையாது போவானாகில் அவன் எல்லா முடையவனாயினும், ஒன்றுமில்லாதவனென்றுதான் சொல்லவேண்டும். நற்குண நற்செய்கையுடைய மனைவியை அடைந்தவன் ஒன்றுமில்லாதவனாயினும், எல்லாம் உடையவனென்றே கருதவேண்டும். போசலபாவா செல்வத்தாலும் புகழாலும் ஏற்றம்பெற்றது பெரிதன்று; இவர் அடைந்த மனைவியின் குணங்களே இவருடைய புகழை விரிப்பதற்குக் காரணமாகுமென்று சொல்லவேண்டும். இல்லறமானது வாழ்க்கைத் துணையான மனைவியுடனிருந்து செய்வதன்றி வேறில்லை. ஆதலால், மனைவியுடனிருந்து செய்வதாலே அறங்கள் யாவும் குறைவறச்செய்து பெரும்பேறு அடையுமாறு அமைந்தவன்.

கவி

கருமமெனும் பண்டியிற் சகடமாமனை வாழ்க்கை
கருமனிசைப் பிணைத்ததனுங் காலனுந்தானுமா
யிருவரால் பூண்டிழுப்பில் எத்தனை தூரமுஞ் செல்லும்
ஒருவரால் பூண்டிழுப் பிலோரிடமும் செல்லாதால்.

என்று கூறியதற்கேற்ப, மனைவியும் தானுமாகவே கருமமெனும் சரக்கேற்றிய வண்டியை யிரண்டெருதாக இழுத்துச் செல்லுவதால் மோக்ஷ உலகம்வரை செல்லத் தகுதியுடையவன். இவளை மமதாபாய் என்று சொல்லுவார்கள். இத்தகைய வனிதாரத்தினத்துடனே இருந்து இல்லற தருமத்தைக் குறைவின்றி, நடத்திவருங்காலையில் புத்திரச் செல்வம் பெறாமையை நினைந்து தன் சந்ததி தன்னோடு முற்றுப்பெற்றதென்று வருத்தமுற்று தனது மனைவியுடனே அனேக நோன்பு நோற்று பாண்டுரங்கனுடைய

சன்னதியில் விரதமிருந்து அவருடைய அனுக்கிரகத்தால் ஒரு ஆண்குழந்தையை யடைந்தனர். அந்தக் குழந்தை தாய் தந்தையராலும், பந்துக்களாலும், ஏமாசி என்னும் பெயரால் அழைக்கப்பட்டு வளர்பிறை சந்திரன்போல மமதாபாயால் வளர்க்கப்பட்டு வளர்ந்தனன். தந்தை செய்யும் கருமமெல்லாம் திரண்டு ஒருமகனுருவமெடுத்ததென்று சொல்ல, ஏமாசி இளம்பிராயத்திலே அழகிலும் அறிவிலும் ஈகையிலும் மிக்கவனாய் பள்ளிச்சாலைசேர்ந்து கற்பனவாய கலைகளைக்கற்று வித்வானாகி மேன்மையுற்றனன். இவனுக்குப் பதினாறு வயதாயதும், இவனுக்கு விவாகப்பருவம் வந்ததென்று நினைந்து, அந்த ஊரிலே தன்னைப்போல தனவந்தனாய், அனேக பண்ணை நிலங்களுடையவனாய், பலராலும் நன்கு மதிக்கத் தகுந்தவனாய் அமைந்த கோவர்த்தனபாவா வென்பவனுடைய புத்திரியாகிய பாகீரதிபாய் என்னும் வனிதையர் திலகத்தின் அழகு, அன்பு, குணம், தயை முதலிய செயல்களை எல்லாம் நோக்கி, "இவளே எனது மைந்தனாகிய ஏமாசிக்கு உரியவள்" என்று நினைத்து, போசலபாவாவானவர், தன்மைந்தனை ஏமாசிக்கு கோவர்த்தன பாவாவிடம் சென்று, பாகீரதிபாயை மணப்பேசி பந்துக்களுடனே நிச்சயித்து, நற்பந்தலிட்டு, நன்னாள் தன்னில் நாவலர் புகழ, நறுமணஞ்செய்து ஏமாசியையும் பாகீரதிபாயையும் ஆசிர்வதித்து மகிழ்ந்தனர்.

பாகீரதிபாய் நற்குடியிற்பிறந்த நன்மகளானதால், போசலபாவாவிற்கு மமதாபாய் அமைந்ததுபோலவே அவர் மைந்தனாகிய ஏமாசிக்கு பாகீரதிபாய் அமைந்து இல்லறவாழ்க்கைத் துணையாய் மன்னி தனது மாமன் மாமியாரிடம் மிகுந்த பக்ஷமுடையவளாய், அன்னோர் சொல்லும் மொழியே வேதமொழி என்று போற்றி, விருந்தினர் முகம் காணும் பொழுதெல்லாம் கதிரவனைக் கண்ட தாமரை மலர்வதுபோல, தனது முகம் மலர்ந்து நோக்கி உபசரித்து பெருமை யடைந்தனள். போசலபாவாவும், மமதாபாயும், தாங்கள் செய்த புண்ணியத்தின பயனே பாகீரதியின் வடிவமடைந்தது என்று நினைந்து அவளைப் பொன்னேபோல் போற்றி வந்தனர். போசலபாவா, மமதாபாய், ஏமாசி, பாகீரதி, ஆகிய நால்வரும் இணைபிரியாத நேசமுடையவராய், களங்கமற்ற அன்பு ஒவ்வொருவருக்கும் ஓங்கி வளர, மிகுந்த சந்தோஷமுடைய இல்லறம் ஏமாசியுடனே யமைந்த போசலபாவாவின் கிரகமென்று யாவரும் கொண்டாடி வாழ்ந்து வந்தனர்.

போசலபாவாவிற்கு ஏமாசிமைந்தனாய்ப் பிறக்குமுன், இவன் பிறப்பதற்காக போசலபாவாவானவர், பண்டரிபுரத்திற்கு தசமியன்று, காலையிலே தனது மனைவியுடனே சென்று பீமநதியில் தீர்த்தமாடி, அன்று உபவாசத்தை ஆரம்பம் செய்து மறுநாள் ஏகாதசி முழுதும் பண்டரிநாதனையே தியானித்துக் கொண்டிருந்து இரவெல்லாம் ஹரிகதா காலக்ஷேபத்திலும், பகவன்

நாம சங்கீர்த்தனத்திலும், நித்திரையின்றி, பக்தியுடன் கலந்து கேட்டு, மறுநாள் துவாதசியன்று, சூரியோதய மாவதற்குள் அனேக பிராமணர்களுக்கு அனேக கறியமுது வகைகளுடனும், பக்ஷணங்களுடனும், பெரிய சமாராதனை நடத்தி தேங்காய் தக்ஷிணை தாம்பூல சந்தன மளித்து அவர்களை யனுப்பிவிட்டு, ஏழைகளுக்கும் அன்ன மளித்துப் பின்னே தானும் தன் பரிவாரமுமாக உணவு செய்துவிட்டு, பண்டரிபுரத்திலிருந்து பால்காடு என்னும் நகரத்திற்கு வருவார்கள்.

இப்படி இவர்கள் பாரணை விரதம் நடத்துவதின் பலனாகவே தனக்கு மைந்தன் பிறந்தானென்னும் நினைப்பு தனக்கு இருப்பதாலே தமது உயிருள்ளவரை பண்டரிபுரத்தில் வந்து முன்னே கூறியவண்ணம் ஒவ்வொரு ஏகாதசியும் தவறாது வந்து பாரணை விரதம் நடத்திவிட்டு செல்வது வழக்கமாதலால், அன்று தசமி வந்தது. போசலபாவா வழக்கம்போல வண்டிகளில் ததியாராதனத்திற்கு உரிய எல்லாச் சாமான்களையும் ஏற்றிக்கொண்டு பால்காட்டிலிருந்து பண்டரிபுரத்திற்கு வந்து, வழக்கமாகத் தாங்கள் தங்கும்படியான திருமடத்திற்கு வந்து சாமான்களை யிறக்கிவைத்துவிட்டு பீமநதிக்கு நால்வருமாகச் சென்று தீர்த்தமாடி மடிவஸ்திரம் தரித்து நெற்றியில் புண்டரமிட்டு நதிக்கரையிலிருந்து 'ஜே ஜே விட்டல்' என்று பகவன் நாமத்தைப் பாடிக்கொண்டு பாண்டுரங்கனுடைய சன்னதியை வலமாக வந்து சன்னதிக்குள்ளே சென்று ராதா ருக்மணீ சமேதராய் எழுந்தருளியிருக்கும் பாண்டுரங்கனைச் சேவித்து அவருடைய பிரசாதமாக தீர்த்தம் திருத்துழாய் இவை இரண்டுமே அன்று தாம் உண்ண வேண்டிய ஆகாரமாக உட்கொண்டு ஆலய பிரதக்ஷணம் செய்து பாண்டுரங்கனை இடைவிடாது தியானித்துக்கொண்டு தமது திருமடத்தில் வந்து ஹரிநாம சங்கீர்த்தனம் செய்துக்கொண்டு பண்டரிநாதனுடைய திருவடித் தாமரையன்றி வேறு சிந்தனையின்றி, உபவாசமிருந்து இரவில் பஜனையும் கதா காலக்ஷேபமும் கேட்டு தம்மை மறந்திருந்து விடிவதற்கு ஒருசாமமிருக்கும்பொழுது ஸ்ரீவைஷ்ணவ ததியாராதனத்திற்காக பரிசாரகர்களாகிய வைதிகர்களை தீர்த்தமாடி வரச்செய்து தளிகை ஆரம்பித்து சூரியோதயத்திற்குள் தனது திருவாராதனத்தையும் செய்து ததியாராதனமும் முடிந்ததும், சந்தன புஷ்ப தாம்பூலம் தேங்காய் தக்ஷிணை கொடுத்து அனுப்பிவிட்டு, அவர்களை அனுப்பிய பின் ஏழைகளுக்கு வயிறார உணவு செய்வித்து அதன்பின் தாங்களும் ஆகாரம் செய்துவிட்டு சற்றுநேரம் பகவத்தியானபரராய் பண்டரிபுரத்திலேயே தங்கியிருந்து, பாத்திரங்கள் யாவும் சுத்தியானதும், சாமான்களை வண்டிகளில் ஏற்றிக்கொண்டு தனது ஊராகிய பால்காட்டிற்கு வந்து தனது மைந்தனுடனே பரமானந்தராய் வாழ்ந்திருந்தனர்.

இப்படி இவர் பண்டரிபுரத்திற்கு தனது குடும்பத்துடனே சென்று துவாதசி விரதத்தை நடத்திக்கொண்டு வருங்காலத்தில், அந்த நாட்டில் கொடிய பஞ்சம் வந்தது. வானத்திலிடம் மேகக்கூட்டங்கள் வந்து பறந்து மின்னி இடிவோசை எழுப்பி வருஷிக்கும் மழைத்துளியை காணப்பெறாது போனதால் ஆறுகளிலும் குளங்களிலும் ஏரிகளிலும் நீர்பசைகூட இல்லாமல் வற்றிப்போய் விளைவுமில்லாது உணவுப்பொருள்களைக் காண்பதுகூட அரிதாய்ப் போய்விட்டது. அனேக சனங்கள் பசிப்பிணியோடு ரோகத்தின் வாய்பட்டு மாண்டனர். அநேக சனங்கள் அயல் தேசங்கள் சென்று பிழைப்பதாய்த் தங்கள் தங்கள் இருப்பிடங்களை விட்டகன்றனர். எங்குபார்த்தாலும் கள்வரின் கொடுமை அதிகரித்தது. வயிற்றிற்கு உணவில்லாது போகவே அனேகர்கள் சாமியார்களாகவும் சாதுக்களாகவும் உருவம் மாறி சென்றனர். அந்தோ! கொடிய பஞ்சத்தால் தெருக்கள்தோறும் நூற்றுக் கணக்கான ஜனங்கள் பசி பசியென்றலைந்து துடித்துக்கொண்டு வருந்தும் காலத்து, போசலபாவாவானவர், தனது மனைவியையும் மைந்தனையும் மருகியையும் நோக்கி, "எனது மனை வாழ்க்கைத் துணையாக அமர்ந்த உத்தமர்களே! கடவுள் இந்த உலகத்திற்குச் சொந்தமுடையவராய் இந்த உலகத்தில் தோன்றும் ஒவ்வொரு வடிவாயும் சர்வாந்தரியாமியாய் வியாபித்திருக்கிறார். எந்த வஸ்துவைப் பார்த்தாலும், அவனில்லாதது ஒன்றுமே இல்லை. மலரில் மணமும் எள்ளில் எண்ணெயும்போல ஒவ்வொரு பொருளிலும் பரவி நிற்கிறான். ஆதலின் இந்த உலகமும், உலகிலுள்ள பொருள்களும், அவனது சொரூபமேயன்றி, வேறல்ல. வைஷ்ணவனாக அமர்ந்தவன் மன்னனாயினும் கல்லாயினும் வேறெவனாயினும் நாராயணனாகக் கருதவேண்டும். இந்த நிலைமையுடையவன்தான் சர்வேஸ்வரனை அடையத் தகுந்தவன். நமது நாட்டில் பஞ்சம் வந்து புகுந்து ஜனங்களெல்லாம் வயிற்றுக்கின்றி பரிதவிக்கின்றனர். இந்தப் பரிதாபமான நிலையில் நமது களஞ்சியத்தில் ஏராளமான தானியங்களை வைத்துக்கொண்டு நல்ல விலைக்கு விற்றால், நமது தானியக்களஞ்சியம் நாணயக்களஞ்சியமாக நிரம்பிவிடும். இது ஏழைகளைக் கொலைசெய்து பொருளீட்டுவதற்கு நிகராகுமேயன்றி, வேறல்ல. இந்தச் சமயத்தில் நமது தானியங்களைச் சிக்கனமாக உணவுக்குரிய அன்னமாக்கி வறியோர்களுக்கு உணவளித்து ஆன்ம திருப்தி செய்துவைத்தால், சர்வேஸ்வரன் நம்மீது கருணை பாலிப்பார். அவருடைய கிருபையால் நாம் மோக்ஷவீடு பெறலாம். இந்த செல்வமெல்லாம் அழியும் தன்மையுடையதேயன்றி, என்றும் ஒருபடித்தாக நிலைத்திருப்பதன்று. இந்த உலகத்திலே இதுவரை தோன்றியவர்கள் எத்தனை கோடியரோ இறந்தனர். அவர்கள் கணக்கை நான்முகன் இருந்து உலகம்

அழியும்வரை எண்ணினும் அடங்காதவர்கள். அங்ஙனமாயினும், சிலருடைய பெயர்மாத்திரம் அவர்கள் எக்காலத்தில் இறந்தவராயினும் இன்னும் அன்னவர்கள் பெயர் மறைந்துவிடாதிருப்பதோடு இந்த உலகம் அழிந்து மறு உலகம் தோன்றினும், அப்பொழுது அவர்கள் பெயர் அழியாது நிலவி வருகிறது. அது என்ன காரணத்தாலெனில், அவர்கள் தங்கள் உயிரைப்போல எவ்வுயிரையும் பார்த்து, எவ்வுயிர் அயரால் வருந்துகிறதோ அந்த உயிருக்கு தனது உடல் பொருள் ஆவி மூன்றையும் கொடுத்து காப்பாற்றியதால் அன்னவர்கள் இறந்தும் அவர்கள் புகழ் பல்லாயிர மாண்டாக இன்னும் பேசப்படுகின்றது.

உடலையும் உயிரையும் அழித்து பிறரைக் காத்தோர் ஒருவருண்டோவெனில், சிபி சக்ரவர்த்தி என்று சூரியகுலத்தில் தோன்றிய மன்னவனொருவன், வசந்தகாலத்தில் ஒருநாள் மாலைப் பொழுதில், தனது மேனிலை மாடத்தில் நின்றுகொண்டு தன் நந்தவனத்தில் அருமையாய்ப் பூத்திருக்கும் மலர்களையும் அம்மலர்களில் வண்டுகள் மதுவுண்டு களிகொண்டு பாடுவதையும் தேமாமரங்களில் பொன் தகடுகள் தோன்றினாற்போல எழுந்த இளந்தளிர்களை குயில்கள் கூரிய அலகால் கோதிமென்று தின்று அந்த தளிரிலுள்ள துவர்ப்பினால் தன் சாரீர கம்மல் நீங்க இனிய குரலோடு பஞ்சம சுரமாகப் பாடுவதையும், அந்த பாடலுக்கு உகந்து பொன்மாரி வழங்கும் வள்ளியோர் போன்று கொன்றை மரங்கள் மலர்களைத் தூற்றுவதையும், கண்ணுற்று மகிழ்ச்சியடைந்து வசந்தருதுவின் பாடல்களை நினைந்து ஆனந்தமடைந்து கொண்டிருக்கும்போது, ஒரு புறாவானது, ஒரு கழுகால் துரத்தப்பட்டு நடுக்கமுற்று மன்னவனுடைய அடிகளில் வந்து விழ்ந்துகிடக்கவும், சிபிசக்ரவர்த்தி அந்த புறாவை எடுத்து தனது மார்புடன் அணைத்து, அதன் தேகத்தை தடவி அதனிடம் அன்பு பாராட்டிக்கொண்டிருக்கும்போது அதனையே பின்பற்றி வந்த ஒரு கழுகு அரசன் முன்னே பறந்துவந்து நின்று அரசனைப் பார்த்து, "அரசர் பெருமா! நான் இந்த புறாவை உணவு செய்யக்கருதி இதையே தொடர்ந்து வருகிறேன். இதை நீர் ஆதரிக்கப்படாது. என்னிடம் விட்டுவிடு" என்று சொல்லவும், சிபி சக்ரவர்த்தி கழுகினை நோக்கி, "எனது அடியில் அபயமென்று வீழ்ந்த இந்தப் புறாவை நான் உனக்கு உணவாகத் தரமாட்டேன். இந்த புறாவின் நிறைக்கோ அதற்கு மேலேயோ நீ எந்த மாமிசத்தின்மேல் இச்சையோ அதைச் சொன்னால், நான் அம்மாமிசத்தைக்கொடுக்கிறேன்" என்றுசொல்லவும், கழுகானது அரசனை நோக்கி, "நீர் சொல்லுவது நியாயமல்ல, நான் நெடுநாளாக இதை உண்ணவேண்டுமென்று இதையே தொடர்ந்து வருகிறேன்; எனது உணவாகிய அதை எனக்குக் கொடுத்தால் போதும். நான் வேறு மாமிசத்தை விரும்பேன்" என்று சொல்லவும், அரசன்

கழுகினை நோக்கி, "என்னை வந்து சரணமடைந்த இந்த புறாவிற்காக எனது உயிரைத் தரவேண்டுமென்று கேட்டாலும் நான் தருவேனேயன்றி, இப்புறாவை மாத்திரம் உனக்குக் கொடுக்கமாட்டேன்" என்று உறுதியாய்க்கூறவும், இதைக்கேட்ட கழுகானது, "மன்னா! நீர் இதைக் காக்க விரும்பினால், ஒரு திராசை நிறுத்தி இந்தப் புறாவை ஒரு தட்டில்வைத்து, அதற்கு சமமெடையாக குறையாமல் உம்முடைய சரீரத்திலுள்ள மாமிசத்தை நிறுத்துத் தருவீராகில், நான் ஒப்புக் கொள்ளுவேன். இல்லையேல், இந்த புறாவை என்னிடம் விட்டுவிடும்" என்று பதில் சொல்லவும், இதைக் கேட்ட சக்ரவர்த்தி, ஆனந்தமடைந்து முக்காலி நிறுத்தி அதில் சரியான எடையைக் காட்டும் திராசை மாட்டிப் புறாவை ஒருதட்டில்வைத்து தனதுகத்தியால் தன்சரீரத்தைதானேயறுத்து அம்மாமிசத்தை ஒருதட்டில்வைக்கவும், புறாவிருக்கும் தட்டுதாழ்ந்தது. இதனைக்கண்டமன்னவன் திகைத்து,இதுஒருசோதனை என்றுஉன்னி தனதுகண்கள் இரண்டையும் விட்டுவிட்டு தன் உடல் முழுமையும் அரிந்து அரிந்து தட்டில்வைத்தான். அப்பொழுதும் புறாவிருக்கும் தட்டே தளர்ந்தது. தானே அந்த கழுகிற்கு இரையாவதென்று துணிந்து திராசில் ஏறி உட்கார்ந்தான். இந்த சமயத்தில் தட்டிலே வைக்கப்பட்டிருந்த புறாவானது இந்திரன் உருவுடன் தோன்றவும் கழுகு வடிவாயிருந்த பக்ஷி எமதர்மனாகத் தோன்றவும் அமைந்தகாலத்தில், அரசனால் அறுத்துத் தட்டில் வைக்கப்பட்ட மாமிசமும் அவன் சரீரத்தில் பொருந்தி அவர் அனுக்கிரகத்தினால் பழைய சரீரமாக மாறிற்று. அப்பொழுது இந்திரன், சிபிசக்ரவர்த்தியை நோக்கி, "தன் உயிரைப்போல மன்னுயிரளிக்கும் மன்னவர் இந்த மண்ணுலகில் உண்டோவென்று சோதிக்கவே நாங்கள் வந்தோம். உன்னை அன்றி வேறு ஒரு மன்னனையும் கண்டோமில்லை. அந்த மன்னவர்கள் ஒவ்வொருவரிடம் புறாவாய்ச் சென்று விழ்வேன். எனது நண்பனாகிய எமதர்ம ராசன் கழுகாய் வந்து என்னை வேண்டுவான். அவர்கள் உன்னைப்போல "இந்த புறாவிற்காக எனது உயிரைத் தருவேன்" என்று சொல்லுவர். எமதர்மன் உன்னிடம் கேட்டதுபோலவே உடலை அரிந்து திராசில் புறாவின் எடை நிறுத்து தந்தால் போதுமென்று சொல்லுவான். அன்னவரெல்லோரும் தம் உடலிருக்கும் அபிமானத்தால் என்னைக் கழுகினிடம் விட்டுவிடுவார்கள். ஆதலின் நீயே தன்னுயிர்போல மன்னுயிர் பிறந்தவன், என்று வாழ்த்தி தம் இருப்பிடத்திற்கு ஏகினார்கள். எனது வாழ்க்கைத் துணையாயமைந்தவர்களே! அந்த சிபி சக்ரவர்த்தியின் காலம் இரண்டு யுகங்களுக்கு முந்தியது. அப்படியிருந்தும் அவன் உடல் முழுமையும் ஒரு கழுகுக்கு இரையாக்க நினைந்தான். இதுபோல் தனது உயிரை பிரித்துக்கொண்டு உடலைக் கொடுத்தவனும் உண்டு. அவன் யாரெனில், ததீசிமுனிவர் என்ப

வருடைய சரீரத்திலுள்ள முதுகெலும்பில் வஜ்ராயுதம் அமைந்து கிடக்கிறதென்று அறிந்த இந்திரன் தன் விரோதியாகிய விருத்திராசுரனைக் கொல்ல விரும்பி ததீசி முனிவரிடம் வந்து அவரைப் பிரார்த்தித்து "உமது முதுகெலும்புடனே வஜ்ராயுதமானது கலந்திருக்கிறதாதலால் உமது சரீரத்தை எனக்குத் தர வேண்டும்" என்று வேண்டிக்கொள்ள, ததீசிமுனிவர் இந்திரனை நோக்கி, "அமரேசா! நீ கோரிவந்தது உலக சம்ரக்ஷணார்த்தமாதலால், என் சரீரத்தை உனக்குத் தருகிறேன்" என்று சொல்லி தனது உயிரை உடலிலிருந்து பிரித்து பரமபதத்திற்கு எழுந்தருளவும், இந்திரன் ததீசிமுனிவருடைய முதுகெலும்பாலே வஜ்ராயுதம் செய்து விருத்திராசுரனை வதைத்து மூவுலகிற்கும் அவனால் நேர்ந்த யிடையூறுகளைத் தடுத்துக் காத்தான்.

எனது அன்பிற்குரிய என் வாழ்க்கைத் துணையாளர்களே! சிபிச்சக்ரவர்த்தியின் சரித்திரத்தால் பறவையான புறவிற்கு தன் உயிரைக் கொடுத்தான் என்பதை தெரிகிறீர்கள். ததீசிமுனிவருடைய சரித்திரத்தால் இந்திரனுக்காக தனது உடலை வழங்கினான் என்பதை உணர்கிறீர்கள். இனி பொருளை வழங்கினவனுடைய சரித்திரத்தைச் சொல்லுகிறேன் கேளுங்கள். முன்னே கருணன் என்பவன் தானகரனென்று பெயர்பெற்று தன்னிடம் உள்ளனவெல்லாம் வந்து கேட்போர்க்கு வழங்கும் காலத்தில் உலகாதிபனை இந்திரனுக்கும் தன்னையின்ற தாயாகிய குந்தி இவர்களுக்கும் கேட்பதைக் கொடுத்து பேரிசைபெற்றதோடு பெரும் புண்ணியமாகிய தனத்தை திரட்டி வைத்திருந்தனன். முடிவில் பாரத யுத்தத்திலே ஜெயவிஜய காண்டீபனோடு எதிர்த்து போராடும் போது காண்டீபன் விடுங்கணையால் தனதுசக்தியாவும் குறைந்து உடலும் பிளவுற்று தேர்தட்டில் மூர்ச்சையாய் விழுநேர்ந்த சமயத்தில் 'தர்மம் தலைகாக்கும்' என்பதற்கு ஏற்ப இவன்செய்த புண்ணிய மெல்லாம் திரண்டு கருணனுக்கும் அருச்சுனனுக்கும் தோன்றாது ஒரு மலைபோல் இருவருக்கும் முன்னே நின்று தனஞ்செயன் கணைகளைத் தடுக்கும்பொழுது இதை சவ்வியசாசியின் தேர்த்தட்டிலிருந்து, சாரத்தியம் செய்துகொண்டிருந்த கண்ணபிரான் அருச்சுனனை நோக்கி, "நீ சிறிதுநேரம் யுத்தத்தை நிறுத்து. யான் இதோ வருகிறேன்" என்று சொல்லிவிட்டு அருச்சுனனுக்கு தெரியாமல் ஒரு வேதியன் உருவடைந்து கருணன் முன்னே சென்று, தான் மேருமலையின் சாரலிலிருந்து தவஞ்செய்பவரென்றும்; வறுமை நோயால்வருந்திவந்தவரென்றும், உனது வள்ளல்தன்மையைக் கேட்டுவந்தேனென்றும், இந்தசமயம் உன்னால் இயன்றதைக் கொடுக்க வேண்டுமென்றும்; இரந்து கேட்க" இம்மொழிகள் இருசெவிக் கமுதெனக் கொண்டு வேதியரை நோக்கி, கரங்குவித்து வணங்கி, "நற்றவர் செல்வமே! யான் உள்ளனவெல்லாம் வறியவர் பெறும்படி உதவிய காலத்திலே

வராது போயினீர். அந்தோ! உமது வறுமையை நான் தீர்ப்பதற்கு அசக்தனாய் தனஞ்செயன் விடும் கணைகள் பட்டு, உயிர் சரீரத்திலுள்ளே இருக்கின்றதோ அல்லது சரீரத்தை விட்டு நீங்கியதோ என்னும் நிலையிலிருக்கும் என்னிடம்வந்தீரே? சுவாமி! என்னிடம் உள்ளது ஏதுவோ அதைக் கேட்கவேண்டும். நீர் எதைக் கேட்பினும் அதைக் கொடுக்க எனக்கு விருப்ப மிருந்தாலும், இந்தத் தேர்த்தட்டில் குற்றுயிருடன் சாய்ந்திருக்கும் யான், ஒன்று செய்யாது போயினேனென்னும் பெயர் ஏற்படாமல் என்னிடம் உள்ளதைக் கேட்கவேண்டும்" என்று வேண்டவும், மறையவனான கோபாலன், கருணனை அன்புடனே நோக்கி, "நீ ஒப்புக்கொண்டபடி இதுவரை செய்த புண்ணியத்தையெல்லாம் வழங்குக" என்று சொல்லவும், வேதியர் மொழியை விரும்பிக்கேட்ட கருணன், பரமானந்த மடைந்து, "இதோ தந்தேன் பெற்றுக்கொள்ளும்" எனவும், மறையவர் கருணனை நோக்கி "வாயால் வழங்கினால் போதாது. இது கண்களால் காணப்படும் பொருளல்ல. ஜலத்துடனே தாரை வார்த்து தந்தாலன்றி, கொடுத்தும் நான் பெற்றதுமாகாது" என்று சொல்லவும், உடனே கருணன் தன் மார்பினில் பதிந்து கிடக்கின்ற பாணத்தை உருவி அந்த மார்பிலிருந்து பெருகும் இரத்தத்தை தாரையாக வார்க்கவும், மாயவனாகிய வேதியன் அதைக் கையினில் தாரையாய் வாங்கிக்கொண்டு தனது நிஜரூபத்தைக் காட்டி அவனுக்கு வரந்தந்து மீண்டும் அருச்சுனனுடைய தேர்தட்டில் சாரதியாக வந்தமர்ந்தார்" ஆதையினாலே தருமம் செய்வோன், உடலையாயினும் பொருளையாயினும் ஆவியையாயினும் வழங்க இச்சைகொள்வான். பலிசக்ரவர்த்தியிடம் மாயவன் குறளுருவாய் வந்து மூன்றடிமண்ணை யாசிக்கும் பொழுது, அவனுடைய ஆசாரியனான சுக்கிரன் பலிசக்ரவர்த்தியைநோக்கி, "மன்னா! நின்முன்னே வந்திருப்பவன் குள்ள வடிவினனான வேதியனல்லன். மாயவன் நின்னை வஞ்சிக்க இந்தமாணிட உருவுடனே வந்தனன். வழங்காதே" என்று சொல்லவும், கேளாது வழங்கவில்லையா? முன் கூறிய கருணனிடம் கிருஷ்ணனுடைய மொழிப்படி கவசகுண்டலங்களை வாங்குவதற்கு இந்திரன் வேதியர் வடிவினனாய் சென்று கருணனிடம் கவசகுண்டலத்தைத்தா" வென்று கேட்கும்பொழுது அசரீரியானது, கருணனை நோக்கி, "மன்னவா வந்தவன்மறையவனல்லன். மாயவனேவலால். உனது உயிரை அருச்சுனன் கவரக்கருதி அவன் தந்தையான இந்திரன் இந்த பொய்யுருவெய்தி வந்தனன், கொடுக்காதே" என்று தடுத்து சொல்லவும் கொடுக்கவில்லையா?

எனது அருமையான மனைவி மக்களே! இதுகளை யெல்லாம் நாம் படித்திருத்தும் செல்வம் பெரிதல்ல. பஞ்சத்தால் வருந்தும் ஏழைகளுக்கு உணவளித்துக் காப்பாற்றுவதே பெரிதென்று

தோன்றுகிறது. நீங்களும் மனமுவந்து இந்த தருமத்தை செய்யில், இம்மையில் நாம் வறியவராய் வருந்த நேரினும் மறுமையில் சொர்க்கநலனும், மீண்டும் புவியில் தோன்றினால், இராஜ செல்வமும் பெறுவோமென்று கூறினர். இந்த மொழிகளைக் கேட்ட இவர் மனைவியான மமதாபாயும், மைந்தனான ஏமாசியும், மருமகளான பாகீரதிபாயும், பரமானந்தமடைந்து போசலபாவாவை நோக்கி, தாங்கள் எது செய்யும்படி ஏவினும் செய்ய காத்திருக்கின்ற எங்களுக்கு இவ்வளவு தூரம் எடுத்துச் சொல்ல வேண்டுவதில்லை. எதையும் தாங்கள் இஷ்டம்போல செய்யலாம். இந்த சத்காரியத்தில் நாங்கள் என்ன பாடுபடவேண்டுமானாலும் மனம்சலியாது செய்வோம்” என்று மகிழ்ச்சியுடனே சொல்லிவிட்டு அன்று முதலே எவ்வளவு ஏழைகள் வரினும் அவர்களுக்கு உணவளிப்பதென்று களஞ்சியத்திலுள்ள தானியத்தை யெல்லாம் குத்தி அரிசியாக்கி இவர்களே சமைத்து ஏழைகளுக்கு உணவளித்து வந்தனர். இவர்கள் பஞ்சத்தால் பாதகிக்கும் ஜனங்களுக்கு உணவுகொடுக்கிறாரென்பதும் அந்த நாட்டில் ஆயிரமாயிரமாய் வருந்தும் ஏழைகளெல்லாம் இவர் வீட்டு முன்னே வந்து குவிந்தனர். வந்தவர்களில் ஒருவரேனும் பட்டினியுடனே செல்லாமல் மூன்று மாதம்வரை தனது களஞ்சியத்திலுள்ள எண்ணாயிரம் கலம் நெல்லையும்குத்தி அரிசியாக்கி ஏழைகளுக்கு வார்த்து காப்பாற்றவும், களஞ்சியம் காலியாய்விட்டது. தனது வீட்டிலுள்ள அணியும்பணிகளை விற்று தானியம் வாங்கி ஏழைகளைக் காத்தனர். பணிகளெல்லாம் தீர்ந்ததும், வீட்டிலுள்ள வெள்ளி வெண்கலம் தாமிரசாமான்களையும் விற்று ஏழைகளுக்கு தானியம் வாங்கி கஞ்சி காய்ச்சி வார்த்துவந்தனர். இதற்குள் அந்த நாட்டில் பஞ்சமும் தீர்ந்தது. நல்ல மழை பெய்து நஞ்சை புஞ்சைகள் சாகுபடிக்குரிய தன்மை வந்ததும், விதை முதலில்லாததால் இவருடைய ஏர்கள் மாடுகள் இவையெல்லாம் ஏழைகளுக்கு உணவளிக்க விற்றுவிட்டதாலும் இவருடைய நிலங்கள் முற்றும் தரிசாய்க் கிடந்தன. இந்த நிலையில் இவர் குடும்பம் ஜீவிப்பதற்கு யாதொரு வழியும் இல்லாது போகவே மலைகளில் சென்று விறகு வெட்டி கிராமங்களில் கொண்டுபோய் விற்று அதில் கிடைத்ததைக் கொண்டு அரை வயிற்றுக்குக் கஞ்சி காய்ச்சி குடித்துக் கொண்டிருந்தனர். போசல பாவாவின் செல்வ நிலை எல்லாம் மாறி ஆயிரமேருக்கதிபன் அரைவயிற்று கஞ்சிக்கு விறகுவெட்டி ஜீவனம் பண்ணவேண்டிய நிலைமை வந்ததினால் அந்த ஊரிலுள்ளவர்கள் யாவரும் இவரைக் காணும்பொழுதெல்லாம் இவர் புத்தியில்லாமல் தனது செல்வ முழுமையும் ஏழைகளுக்கு உணவளித்துக் கெட்டனர் என்று பழித்துக்கொண்டிருந்தனர்.

போசலபாவாவும், இவர் மனைவியான மமதாபாயும், மைந்தனான ஏமாசியும், மருமகளாகிய பாகீரதிபாயும், தமக்கு வந்த வறு

மையை மோக்ஷ நிலத்திற்கொரு வித்தென்று நினைத்து மிக்க வைராக்கியமுடையவர்களாய் எந்த நேரமும் பண்டரிநாதனையே தியானித்துக்கொண்டு சதாவும் அவனுடைய பஜனை செய்துக் கொண்டு மிக்க சந்தோஷத்தோடு ஒற்றுமையாய் வாழ்ந்து வந்தார்கள். இவர்கள் செல்வமுடையராய் இருக்கும்பொழுது ஏகாதசிக்கு முதல்நாள் காலையில் பண்டரிபுரத்திற்கு சாமானேற்றிய பல வண்டிகளுடனே சென்று விரதமிருந்து துவாதசிக்கு பாரணை விரதத்திற்காக ஆயிரக் கணக்கான மறையவர்களுக்கும் சாதுக்களுக்கும் ஏழைகளுக்கும் பஞ்ச பக்ஷ பரமான்னத்துடன் போசனம்பண்ணிவைப்பது வழக்கமாகயிருந்ததுபோய் வறுமை வந்ததால் பண்டரிபுரத்திற்கு வழக்கம்போல் ஒரு ஏகாதசியாவது தவறாது வந்து பக்தியுடனே உபவாசமிருந்து துவாசி விரதத்தன்று ஒரு வேதியனுக்கு உணவளித்து தாமும் உண்டு வீட்டிற்கு வருவார்கள்.

இப்படி வழக்கம்போல பண்டரிபுரத்திற்கு வந்து பக்தியுடன் விரத முடித்துக்கொண்டு இருக்கும்பொழுது இவருடைய பக்தி விரதத்தை அங்கீகரித்துக் கொள்ளுவதற்காக பாண்டுரங்கன் தனது திரு உள்ளத்திலே நினைந்து இவர்கள் விறகு வெட்டி விற்கும்பொழுது வாங்குபவர்கள் ஒருவரும் இல்லாது செய்யவும், மமதாபாய், ஏமாசி, பாகீரதிபாய், மூவரும் விறகை விற்கமுடியாமல்; தம் வீடுவந்து சேர்ந்தனர். மறுநாள் தசமியாதலால், பண்டரிபுரம் செல்லவேண்டும் கையினில் ஒரு தம்படிகூட கிடையாது. இந்த நிலையிலும் பகவத்தியானத்தை மறவாமலிருக்கும்பொழுது, போசல பாவாவானவர், காட்டில் சென்று கட்டைகளிகளை முறித்து கட்டாகக் கட்டி அதைக் கொணர்ந்து ஒரு வேதியனிடம் விற்று மூன்று துட்டு வாங்கிக்கொண்டு தனது வீட்டிற்கு வந்து தனது மனைவியையும் மக்களையும் நோக்கி, “இன்று பகவான் நமக்கு மூன்று துட்டு தந்தனர். நாளை தசமியாதலால் நாம் பண்டரிபுரம்போய் ஏகாதசி விரதத்தை பூர்த்திசெய்து விட்டு வரவேண்டும்” என்று சொல்லவும், மமதாபாய் தனது கணவனைப் பணிந்து, “நாதா! நாங்கள் மூவரும் கொணர்ந்த விறகு விற்கவில்லை. இன்று பகவானுடைய சோதனைபோலிருக்கிறது. நாளை பண்டரிபுரம் போய் விரதம் முடித்து வருவதற்கு நம்மிடமிருப்பது மூன்று துட்டாதலால், இது சங்கல்பத்திற்கும் பகவான் நைவேதனத்திற்கும் பிராமணர் சந்தர்ப்பணைக்கும் நமது குட்சிபாதைக்கும் போதாதென்று தோன்றுகிறது. ஆதலால், நாங்கள் எல்லோரும் வந்து விரதம் முடிப்பதற்கு இல்லையாயினும், எங்களுக்கெல்லாம் தலைவராகிய தாங்கள் மாத்திரமே சென்று விரதபங்க மடையாமல் செய்துவருவதுவே மேலானதாகும்” என்று சொல்லவும், இந்தமொழி தன் செவிக்கு இசைவாயிருந்ததால், தனது மனைவியிடமும் மைந்தனிடமும் சொல்லிக்

கொண்டு மறுநாள் விடியற்காலையிலே புறப்பட்டு பண்டரிபுரத்திற்கு வந்து சந்திரபாகா நதியில் சங்கல்பம்பண்ணி, தீர்த்தமாடிவிட்டு தன்னிடமிருந்த மூன்று துட்டில் ஒரு துட்டை தக்ஷிணையாகக் கொடுத்துவிட்டு, நிவேதனத்திற்காக வாழைப்பழம், பேரிச்சம் பழம், இவைகளை ஒரு துட்டுக்கு வாங்கிவந்து பாண்டுரங்கனுடைய சன்னதியை வலமாய் வந்து சன்னதிக்குள்ளே சென்று பகவானை சேவித்து, தான் வாங்கிவந்ததை நிவேதனம் செய்து, அதைத் தன் குடும்பத்தவர்களுக்குப் பிரசாதமாக முடிந்து வைத்துக்கொண்டு, அன்று மறுநாளான ஏகாதசியும் உபவாசமிருந்து பாகவத கோஷ்டியுடனே கலந்து பகவந்நாம சங்கீர்த்தனம் செய்துக்கொண்டிருந்து சாயங்காலம் கடைக்குச்சென்று, அரைப்படி மாவு வாங்கிக்கொண்டு தன்னிடமிருந்த ஒரு துட்டையும் கடைக்காரர் கையிலே கொடுத்துவிட்டு உப்பு வாங்கக் காசில்லாததால் இதுவும் ஈசன் செயலென்று மகிழ்ச்சியடைந்து அன்று இரவுமுற்றும் பாகவதர்களுடனே பாடியாடி பலபல நாமம் பாடி பரவசராய்ப் பக்திபண்ணிக்கொண்டிருந்து, விடியற்காலமானதும் சந்திரபாகா நதிக்குவந்து மாவு பொட்டலத்தை கரையிலே வைத்துவிட்டு நதியில் இறங்கி தீர்த்தமாடி கரைக்குவந்து வஸ்திரத்தை உலர்த்தி உடுத்திக்கொண்டு பகவத்தியானபரராய் இருந்தனர். பண்டரிபுரத்திலிருக்கும் ருக்மணீ நாதனுடைய திருபாகடாக்ஷத்தால் ஆயிரக்கணக்கான வேதியருக்கு விருந்தளித்து, விரதம் முடிந்தது. "இன்று என்னிடமிருப்பது உப்பில்லாத மாவேயாகும். இதை எந்த அதிதியாகிய வேதியருக்குக் கொடுப்பேன்! இன்று அநேக புண்ணியசீலர்கள் பஞ்சபக்ஷ பரமான்னத்துடனே சமையல் செய்துவைத்துக்கொண்டு வேதியர்களை வாருங்கள் வாருங்களென்று வழிமறித்து அழைத்து செல்லும்காலத்து, இந்த மாவை வாங்கி உண்ணுவதற்கு எந்த வேதியர் என்னிடம் வருவார்! எனது செல்வமெல்லாம் பண்டரிநாதனுடையது என்று நினைத்து. பஞ்சகாலத்தில் பசியால் வருந்தும் ஏழைகளை பண்டரிநாதனது பிம்பவடிவமாகக் கண்டு உபசரித்து வறுமையாளனென்று ஊரார் நகைக்க நான் மகிழ்ச்சியடைந்திருந்த இன்றுவரை ஒரு த்வாதசிவிரதமானது ஒரு வேதியரை திருப்திசெய்துவைக்காமல் நான் உண்டதில்லையே! இன்று எனது விரதம் போய்விடும்போலிருக்கிறதே! விரதகாலங்களில் விருந்தினராய் வரும் வேதியரை வேதமுதல்வனை பாண்டுரங்கனைப் பாவித்து பூசிப்பதும், அவருண்ணும் உணவு பாண்டுரங்கனுக்கு நிவேதனம் செய்ததாக நினைப்பதுமன்றோ நேர்மையாகும். அங்ஙனமிருக்க, இன்று சர்வேஸ்வரனை திருப்திசெய்து வைப்பதற்கு இல்லாமல் நான் எனது பாழும் கும்பிக்கு இரையாக இந்த மாவை உண்ணுவேனோ! கடவுளும் செல்வமுடையவர்க்குத்தான் உண்டோ? செல்வமில்லாதோன் கடவுளை திருப்திசெய்து வைக்க

அருகதையடையான்போலும்! ஏ செல்வமே! உன்னுடைய மகிமைதானென்னே! நீ இருந்தால் ஒரு வேதியரை திருப்திசெய்துவைக்காத காரணத்தால் எனது விரதம் பங்கமடையுமாவென்று சொல்லி பகவத்தியானத்தையும் விடாதவராய் நகைத்துக்கொண்டிருந்தார்.

பாண்ரேங்கன் வேதியராய்வந்து மாவை வாங்கிய அத்தியாயம்

இவ்வண்ணம் போசலபாவா சிந்தித்துக் கொண்டிருக்கும் பொழுது பாண்டுரங்கனான ருக்மணீவல்லபன் போசலபாவாவின் மனதை திருப்திசெய்துவைப்பதற்காக மிக்க வயதுசென்ற கிழவராய் கந்தையின்றி வேறு உடையை அறியாராய், மிக்க வைதிக வடிவத்தினராய், தமது மேனிமுற்றும் திருமண்காப்பினாலே பொலிவெய்தியவராய், தனது சரீரம் தள்ளாடுவதுபோல் கால்களும் தள்ளாடுவதால் ஒரு கோல்பூன்றியவராய் கண்டம் மட்டும் துளசிமாலை திருமணித்தாவடம் திருப்பவித்திரமாலை முதலியன அணிந்தவராய், பலநாள் உணவின்றி வருந்தும் பசிப்பிணியால் உறங்கிய மேனியுடையவராய், ஏழைகளுக்கோர் ஏழையாய், ஏத்தனுக்கோர் ஏந்தலாய், அமைந்த விறைவன் சந்திரபாகாநதியின் கரையை நாடிவந்து போசலபாவாவின் முன்னே எழுந்தருளவும், விருத்த வேதியராய் தம் முன்னேவரும் பகவானைப் பார்த்து, தான் செய்ததவமே இவ்வுருவாய் வந்ததென்றெண்ணி முன்னேசென்று முறைமையிற் பணிந்து, என்னே யான் செய்த பாக்கியமென்று நல்லுரை வழங்கி நாதனை முக்கால் வலஞ்சூழ்ந்தேத்தி மகிழ்ச்சியிலிருக்கும்போது, வேதியரான மேலோன் நடுங்கிய குரலுடனே போசலபாவாவைப் பார்த்து, "இந்த ஏழையைப் புகழ்கின்ற நீ யார்? பலநாளாகப் பசியால் வருந்தும் என்னைக் கடவுள் உன்னிடம் அனுப்பியிருக்கிறான். நீ இன்று எனது குசிபாதையை நீக்குவாயோ" வென்று சொல்லவும், போசலபாவாவானவர், "சுவாமி! அடியேனிடம் கொஞ்சம் மாவேயிருக்கின்றது. அதைத் தருகிறேன். பெற்றுக்கொண்டு கிருபைபாலிக்க வேண்டும்" என்று சொல்லவும், வேதியரான ராதாவல்லபன், போசலபாவாவைக் கண்ணுற்று, மலர்முகங் காட்டி, அப்பா! இந்த ஏழைபிராமணன் எங்கு சென்று யாரிடம் கேட்டாலும் இல்லை என்னும் மொழியேற்றனேயன்றி, உண்டென்னு முறை சொல்லக் கண்டிலன். நானே நீ கொடுக்கும் மாவு எனக்கிருக்கும் பசியால் தேவாமிர்தமாகும். சர்வேஸ்வரனான பண்டரிநாதன், இன்று நடத்தவேண்டிய பாரணை விரதத்திற்காக புண்ணியசீலனை உன்னிடம் அனுப்பியிருக்கிறான். மனத்தூய்மையுடைய நீ கொடுக்கும் மாவு அறுசுவை உணவிலும் அருமையுடையதே; அதை யென்னிடம் கொடு. நான் அதைச் சூரியோதயத்திற்குள்

விரதகாலம் தவறுவதற்கு முன்னே நானே பக்குவம் செய்து உண்ணுகிறேன் என்று கூற, போசலபாவாவானவர், ஒரு துட்டுக்கு வாங்கிய மாவு முற்றும் அவர் சொன்ன செம்பிலே கொட்டினார். அதைப் பெற்றுக்கொண்ட பண்டரிநாத வேதியன், போசலபாவாவைநோக்கி "இந்தத் தோட்டத்திற்குள்ளேசென்று பட்டை சுள்ளிகள் இருந்தால் கொணர்ந்து கொடு. தீமூட்டி ரொட்டி சுடுகிறேன். நான் உண்டதும் உனக்குந் தருகிறேன்." என்று மொழிந்து ஒரு மண்டபத்திற்குச் சென்று மூன்று கற்களைக் கூட்டிவைத்து அந்த இடத்தினைப் பசுவின் சாணமிட்டு மெழுகி முடியவும், போசலபாவாவானவர், கொஞ்சம் சுள்ளிகளைக் கொணரவும், வேதியரான பாண்டுரங்கன் தன்னிடமிருந்த சக்கிமுக்கி கல்லினால் தீயுண்டாக்கி நெருப்பு மூட்டியதும், ருக்மணி பிராட்டியானவர் தனது நாயகர் நிவேதனம் செய்யவேண்டிய காலத்தில் எழுந்து சென்றது, இந்த அடியவருடைய விருந்து உணவை உண்ணுவதற்கோ; அதை அறிந்து வருவதற்கோ தெரியவில்லை, தனது நாதனுக்குப் பின்னே ஒருவர் கண்ணினும் தோன்றாமற் வெளியே வந்து சந்திரபாகா நதிக்கரையிலே போசலபாவா கொடுத்த மாவை வாங்கி வேதியராய் அடுப்பு மூட்டிக்கொண்டிருப்பதைக் கண்டு, அவர் மூட்டிய தீ நன்றாய்ப் பற்றாமையினால் வேய்ங்குழலூதிய தனது திருவாயால் அடுப்பூதி அவதிப்படுவதும் கண்ணுற்று, மனந் தாளாதவளாய் அவருடைய பத்தினிபோல விருத்தபிராமண நங்கையாய், அவரைப் போலவே கந்தை ஆடை யுடுத்திய திருவுருவுடையவளாய், மங்கையர்கள் மஞ்சள் பூசுவதும், மலர் முடிப்பதும், மணிபணிகளணிவதும், ஆகிய இவையெல்லாம் தான் அவர்கள் கழுத்தில் மாங்கிலியமென்னும் பொருளுடையதாக அமைந்திருக்கும் பொழுதன்றி வேறில்லையாய் இருக்கத் தன் கழுத்து மஞ்சள் சரடு ஒன்று, வேறு பணியைப் பெறாத தோற்றமுடையவளாய், மெல்ல நடந்து வந்து தனது நாயகனை வேதியரிடம் வரவும் பண்டரிநாத வேதியன் பார்ப்பனியைப் பார்த்து, "அடி ருக்மணி! நீ இங்கு எப்பொழுது வந்தாய்? நான் உண்ணும் உப்பில்லாத உணவை நீயும் உண்ணுவதற்கோ? நல்லதாயிற்று; இந்த உத்தமன் கொடுத்த மாவை நான் மாத்திரம் உன்னைப் பிரிந்து தனித்து உண்ணவேண்டியதாக நேர்ந்துவிட்டதே யென்னும் கவலையுடனேயிருந்தேன். நீயும் வந்துவிட்டாய். இந்த அடுப்பு சரியாகத் தீ பிடிக்கமாட்டேனென்கிறது இதை மூட்டு; நான் மாவு பிசைந்து தருகிறேன். இருவருமாக ரொட்டிசெய்து சாப்பிட்டுவிட்டு எஞ்சியதை இவருக்கும் போட்டுவிடுவோம்" என்று சொல்லவும், ருக்மணி பிராட்டியானவள், தனது கணவனுன பண்டரிநாதனுடைய மொழியைக் கேட்டு விரைவாக அடுப்பை பற்றவைத்தாள். இதற்குள் வேதியர் செம்பிலிருந்த மாவில் கொஞ்சம் ஜலவிட்டு

விட்டு பிசைந்து உருண்டைகளாக உருட்டி; கைகளால் ரொட்டி தட்டி ருக்மணிதேவியின் கையில் கொடுக்கவும், அவளும் மூட்டிய நெருப்புத் தணலைப் பரப்பி, அதில் தட்டிய ரொட்டியைப்போட்டுச் சுட்டுக்கொண்டிருக்கும்பொழுது, போசலபாவாவானவர், தனது வறுமையை நினைந்து, "அந்தோ! இன்னும் ஒரு துட்டுக்கு விறகுவிற்றிருக்கப்படாதா! மூன்றுதுட்டிலே ஒருதுட்டு மாவு வாங்க நேர்ந்ததன்றி, அதிகம் வாங்குவதற்கில்லாமல் போயதே! அந்தோ! இந்த மாவினுல் சுடும் ரொட்டிகள் ஒருவர் உணவிற்கே போதாது" என்று நினைக்கும்பொழுது வேறொருவரும் வந்தால் எப்படிக்காணும்! இருவரும் அரைவயிற்றிற்குக்கூட உண்ணப் போதாமலன்றோ அமையும்! என்று வருத்தமுற்றவராய் இருக்கும்பொழுது, வேதியர் உருட்டிய மாவு குறைவின்றி பெருகவும், இவர் மனைவியார் சுட்ட ரொட்டியும் மிகுதியாய்க் குவிந்தன. அப்பொழுது வேதியரும் உப்பில்லாது சுட்ட ரொட்டியைத் தனது மனைவியான ருக்மணிதேவி பரிமாற வயிறார உண்டனர். பின்னே ருக்மணி பிராட்டியும் தனது கணவன் உண்ட மிச்சத்தை உண்டு மீதமுள்ள ரொட்டிகளை ஒரு இலையில் பொதிந்து போசலபாவாவிடம் கொடுக்கவும், அவர் அதை வாங்கிக்கொண்டு நதிக்கரைக்கு வந்து இலையைப் பிரித்துப் பார்க்கவும், அதில் இன்னும் நான்கு பெயர்கள் திருப்தியாக உண்ணுவதற்கு வேண்டிய ரொட்டிகள் இருப்பதைக்கண்டு வியப்புற்று, "நாம் கொடுத்த மாவில் ரொட்டி சுட்டால் நாலுரொட்டி சுடலாம். இப்பொழுது என் கையிலிருப்பதுவோ நாற்பது ரொட்டிகளுக்குக் குறையாது. இவ்வளவின்றி அவர்கள் திருப்தியுடன் சாப்பிட்டும் இருக்கிறார்கள். இவ்வளவு ரொட்டிகள் எங்கேயிருந்து வந்தன! வந்தவரும் அவர் மனைவியும் வேதியர் குலத்தினரல்லர். சர்வேஸ்வரனான பாண்டுரங்கனும் அவர்தேவியாகிய ருக்மணிபிராட்டியும் அடியேனிடம் கருணையுடனே வந்து என் விரதம் பங்கப்படாது நான் கொடுத்த மாவினை தாமே ரொட்டிசுட்டு உண்டுவிட்டு என்னிடமும் தந்தனர். அவர்களை இனி விடப்படாது. அன்னவருடைய பூரண கடாக்ஷம் பெறுவதற்கு இதுவே நல்ல சமயம்" என்று மண்டபத்தினை நோக்கவும், அங்கு நின்றோர் இருவரும் தனது கண்களில் தோற்றாது மறைந்தனர். இதைக்கண்ட போசலபாவாவானவர், அதிசயமுற்று, சர்வேஸ்வரனைப் பெரிய பிராட்டியாருடனே கண்டும், தரிசிக்க பாக்கியம் படைத்திலேனுயினேன். இன்னும் நமக்கு பரிபக்குவம் வரவில்லை. நமது பக்தியானது இன்னும் பழுக்கவில்லை. அதனுலேயே பகவானையே அறிந்து பூசிக்கப் பெறாது போயினேன்." என்று எண்ணி, அந்த ரொட்டிகளில் சிலவற்றை உண்டுவிட்டு தனது மனைவி மக்களுக்கும் கொண்டுபோய்க் கொடுக்கலா மென்று நினைத்து ஒரு ரொட்டியை விண்டு தனது வாயில் போடவும், நறுமண முடையதாய் அது

சுவையும் அமையப்பெற்று மிருதுவாகியும் இருக்கக்கண்டு, உப்பின்றிச் சுட்ட ரொட்டிக்கு இந்த மதுரம் எங்கே யிருந்து வந்தது! நாம் முன்னே அவாதசி விரதத்தன்று நடத்திய ததியாராதனத்தில் சமைத்த அறுசுவை உணவிலும் மிக்கதாக இந்தரொட்டியன்றோ யிருக்கிறது!'' என்று தன் பசிதீரத் தணிய வயிறார உண்டு தண்ணீர் பருகிவிட்டுத் தனது அருகுவந்த தன் மனைவி மக்களான மமதாபாய் எமாசி பாகீரதிபாய் இவர்களைப் பார்த்து தான் பண்டரிபுரத்திற்குச் சென்றதும், சந்திரபாகாநதியில் ஒரு துட்டைக் கொடுத்து சங்கல்பம் பண்ணியதையும், மீதமுள்ள இரண்டு துட்டிலே ஒரு துட்டுக்கு வாழைப்பழம் பேரிச்சம்பழம் இவைகள் வாங்கியதையும், அவாதசி விரதத்திற்காக உப்பு வாங்கக்காசின்றி ஒரு துட்டுக்கு மாவு வாங்கியதையும் சொல்லி, இந்த விரதத்தைப் பூர்த்திசெய்துவைக்க பண்டரிநாதனே ருக்மணி பிராட்டியுடனே பிராமணவடிவம் தாங்கி வந்து தன்னிடமிருந்த மாவை வாங்கி ரொட்டி சுட்டதும், அவர்கள் உணவு செய்தபின், தன் உணவிற்காகக் கொடுத்த ரொட்டிகளில் சிலவற்றை உண்டதும் சொல்லி, மீதமுள்ளவற்றை இது பகவத்பிரசாதமாய் நான் கொடுத்த மாவிலே தட்டிய ரொட்டிகளிலிருந்தது என்று மமதாபாயினிடம் கொடுத்து, ''இதை நால்வரும் உண்ணுங்கள்'' என்று சொல்ல, அவர்களும் ஒரு துட்டுமாவில் மூவைந்து மீந்தரொட்டிகளாயினதைக் கண்டு, ''இது பாண்டுரங்கனுடைய மகிமையோ. இந்த மகிமையை நாங்கள் காணக்கொடுத்து வைக்கவில்லையோ'' என்று சொல்லிக்கொண்டு தனது மகனுக்கும் மருமகளுக்கும் கொடுத்துத் தானும் உண்ணும்பொழுது அதில் உள்ள ருசி யின்னதென்றே அறியமுடியாது பரமாநந்த மடைந்தவராய் அதை உண்டு மகிழ்ந்தனர்.

பாண்டுரங்கனும் ருக்மணிபிராட்டியும் சுட்டுத்தின்று மீந்ததை போசல பாவாவிடம் கொடுக்கவும், அதை அவர்கள் உண்ட அளவே அவரும் உண்ணமேலிட்டதால் கவிதாஞானமும் பாடல் நயமும் ஏற்பட்டது. அன்றுமுதல் இந்த நால்வரும் பாண்டுரங்கன்மீது அபூர்வமான சாகித்தியங்களைச் செய்து, அழகான அலங்காரங்களமைந்த பாடல்களைப் பஜனை செய்துகொண்டு தமது வாழ்நாளைக் கழித்து வந்தனர். மறு ஏகாதசி வந்ததும், அதிலும் தானே சென்று அவாதசிவிரதம் முடிப்பதற்குச் சந்திரபாகாநதியின் கரையில் நின்றுகொண்டு பகவானைத் துதிக்கும்போது பாண்டுரங்கன் ருக்மணி தேவியுடனே தனது உருவுடன் நின்று சேவைதந்தருளி, போசலபாவாவினிடமிருந்து மாவை வாங்கி, தானும் ருக்மணிபிராட்டியுமாக ரொட்டிசுட்டு அமுது செய்துவிட்டு போசலபாவாவிடம் வந்து நிற்கவும் அவர் பாண்டுரங்கனுடைய சரணாரவிந்தத்தில் வீழ்ந்து நமஸ்கரித்து அஞ்சலி யஸ்தனாய் நின்றுகொண்டு 'சுவாமி! உமது சன்னதியில் பாது

டன் சமைத்த அக்காரவடிசிலும் அடியேன் கொடுத்த மாவும் ஒன்றென மதித்தீரே. இன்று உமது சன்னதி முன்னர் பதினாயிரவர் உணவுண்ண எத்தனையோ தனவான்கள் ததியாராதனம் செய்யும்பொழுது உப்புவாங்க வழியில்லாத இந்த ஏழையின் மாவினை உகந்து உண்டீரோ? தேவாதி தேவனே!'' என்று தோத்திரம் பண்ணும்பொழுது பாண்டுரங்கன் அவருடைய கையைப் பிடித்துக்கொண்டு அதோ ஒரு பந்தல்போட்டிருக்கிறது பார். அங்கே போகலாம் வாவென் றழைத்துக்கொண்டு சென்றனர். அந்தவிடத்திலே ஒரு வர்த்தகன் ஆயிரம் பிராமணர்களுக்கு ததியாராதனம் என்று பெரிய பந்தல் போட்டு அறுசுவையுடைய உணவுப்பொருள்களைச் சமைத்து பஞ்சபக்ஷணங்களுடன் பந்தல் நிறைய ஆயிரம் பிராமணர்களை உட்காரவைத்து இலைபோடும்சமயம். அப்பொழுது பாண்டுரங்கன் முன்னே தன்னிடம் வந்த கந்தலாடை உடுத்திய கிழப்பிராமணன்போல் உருவடைந்து போசலபாவாவைநோக்கி 'நீ இங்கேயேசற்றுநேரம் இரு' என்று சொல்லிப்பந்தலுக்குவெளியே நிறுத்திவிட்டுதான்பந்தலுக்குள்ளே சென்று வரிசையாக பிராமணர்கள் உட்கார்ந்திருக்கும் பந்தியில் போய் நின்றுகொண்டு பரிமாறுகிற பரிசாரகர்களைப் பார்த்து ''சுவாமிகளே! நானிருப்பது துவாரகை, திவ்விய தேசயாத்திரையாக வந்தேன். இந்த விடத்தில் சகஸ்ர பிராமண போஜனம் நடக்கிறதென்று கேள்விப்பட்டு வந்தேன். நான் சாப்பிட்டு மூன்றுநாளாகிறது. எனக்குக் கொஞ்சம் அன்னமளிக்கவேண்டும்'' என்று சொல்லவும், அவர்கள் கோபத்தோடு பதிவுப்படி ஆயிரம் பெயர்களும் கணக்கெண்ணி உட்காரவைத்தாய்விட்டது. உமக்கு இடமில்லை. நீர் வெளியே போய்விடும்'' என்று சொல்லவும், பாண்டுரங்கனான வேதியன், அவர்களைப் பார்த்து, ''ஐயா! ஆயிரம் பெயர்களுக்கும் சமையல் செய்து வைத்திருக்கும் பதார்த்தங்களில் பசியால் வருந்தி வந்த எனக்கு கொஞ்சம் சாதம் போட்டால் குறைந்துவிடும்? யாத்திரிகனாய் வந்தவனல்லவா? நான் வேறு எங்கே போய் உணவு செய்வேன்? இதைவிட்டுப்போவதற்குக்கூட சக்தியற்றவனாயிருக்கிறேன். கொஞ்சம் இலையில் குழம்பைவிட்டு கலந்தாவது கொடுங்கள். இந்த பந்தியில் உட்கார்ந்து சாப்பிட எனக்கு கிடைக்காது போயினும் சந்திரபாகாநதிக்காவது சென்று சாப்பிட்டுவிட்டு தண்ணீர் குடித்துவிட்டு போகிறேன்'' என்று சொல்லவும் பரிசாரகர்கள் ஒரு பருக்கை அன்னமாவது நாங்கள் கொடுக்கோம் வெளியில் போம்'' என்று சொல்லவும், வர்த்தகன் கேட்டு புலிபோல் பாய்ந்துவந்து, ''இந்த வம்புக்கார பார்ப்பானை வெளியில் தள்ளிவிடு'' என்று கோபத்துடனே சொல்லவும், ஒரு பிராமணன் கழுத்தில் கையைவைத்து வெளியில் கொண்டுவந்து தள்ளிவிட்டு இந்த ஊரில் இந்த அநியாயந்தான் யிருந்துபோயிற்றென்று சொல்லிக்கொண்டு வெளியி

விருந்து பந்தலினுள்ளே சென்றனன். பாண்டுரங்க வேதியன், அவன் தள்ளியதால் தடுமாறி விழுந்து திரும்பி எழுந்து போசல பாவாவினுடனே சந்திரபாகா நதியிலுள்ள ஒரு மணல் மேட்டில் போய் உட்கார்ந்துகொண்டு போசலபாவாவைப் பார்த்து, "அன்பனே! இங்கு ஒரு வர்த்தகன் ஆயிரம் பிராமணர்களுக்கு சமாராதனை செய்துவைக்கிறான். அவன் பகட்டாரவாரமாகச் செய்கிறானன்றி, சிரத்தையுடனே செய்கின்றானா என்பதை அறிய வேண்டுமென்று நினைந்து நான் சென்றேன். நீயும் பார்க்கும் பொழுதே அந்த வர்த்தகன் என்னை வெளியில் தள்ளிவிட்டான். இந்த வர்த்தகன் செய்யும் சமாராதனையை நான் எப்படி அங்கீகரிப்பேன்? இவன் தன்னைப் புகழவேண்டுமென்று செய்கிறானன்றி, சிரத்தையுடன்செய்கின்றானில்லை. உனதுசெல்வமெல்லாம் பஞ்சகாலத்தில் ஏழைகளுக்கு உணவளித்து வறுமையடைந்த உனது அன்புடைமைக்கும் நானும் ஆயிரம் பிராமணர்களுக்கு அன்னம் அளித்தேன் என்று டம்பம் பேசும் வர்த்தகனுடைய தர்மத்திற்கும் எவ்வளவு வித்தியாசமிருக்கின்றது? நீ கொடுத்தது மாவாயினும் அது அமுதினும் மிக்கதாய் அங்கீகரித்தேன். நாம் இன்று அநேக வேதியர்களுக்கு அன்னமளிக்கவில்லையேயென்று கவலைப்படவேண்டாம். எனது குக்ஷிக்குள்ளே பதினான்கு உலகும் இருக்கின்றது. உன் மாவானது அப்பதினான்கு உலகிலுள்ள ஜீவராசிகளுக்கும் ஆத்மதிருப்தி செய்யவே என் வயிற்றில் உணவாய்ச் சென்றது; இவன் ஆரவார நீர்மையாக செய்யும் சமாராதனை இவனுக்கு அவமானமும் பிராமண சாபமும் விளைக்கப்போகிறது பாரும்" என்று சொல்லி, வாயுவை மனத்தில் நினைந்தார். அந்த நிமிஷமே ஒரு சூறைக்காற்று விரைந்தடித்து அப்போசனம் வாங்கிக்கொண்டிருக்கும் பிராமணசமாராதனையின் பந்தலை அப்படியே தூக்கிக்கொண்டு ஆகாயத்தில் சென்றது. அன்றி சமையல் செய்து வைத்திருந்த பதார்த்தங்களையும் பிராமணர்கள் முன்னே பரிமாறியிருக்கும் இலைகளையும் மணல்களால் மூடி, அவர்களையும் தள்ளவும் யாவரும் நடுக்கமுற்று கையை உதறிக்கொண்டு எழுந்தோடினார்கள். இந்த நிலையில் போசல பாவாவானவர், வர்த்தகன் பகவானுக்குச்செய்த கொடுமையை வேண்டிக்கொண்டார். உடனே பாண்டுரங்கன் "நீகூறியபடியே அவனுக்கு நல்லறிவு கொடுத்து அவனையும் காப்பாற்றுகிறேன்" என்று சொல்லி "நீ உனது வீட்டுக்கு செல்லுக" என்று அவருக்கு விடைகொடுத்தனுப்பிவிட்டு மறைந்தார். போசலபாவாவும் தனது வீட்டிற்கு எழுந்தருளினார்.

போசலபாவாவின் சோளத்தோட்டத்திற்கு பாண்டுரங்கன் தீர்வை செலுத்திய அத்தியாயம்.

இப்படி போசலபாவாவானவர் கஷ்டஜீவனம் பண்ணினாலும், தன்னிடம் வந்தவர்களுக்கும் ஏதாவது உபகரித்துக்கொண்டு

மனைவியுடனே மனையறம் நடத்திவரும்பொழுது இவருடைய சம்பந்தியாகிய கோவர்த்தன பாவாவானவர், தனது கொல்லைகளில் சோளம் விதைத்துவிட்டு மீதம்மிருந்த சோளவிதைகளை போசல பாவாவினுடைய தரிசாயிருந்த சோளக்கொல்லையில் விதைத்து விட்டு தன்வீடு செல்லவும், உழுது பயிரிட்ட தனதுகொல்லையைப் பார்க்கினும் உழவின்றி இறுகி தரிசாய்க்கிடந்த போசலபாவாவின் கொல்லையானது, சோளப்பயிரால் செழித்து மிகுந்த கதிர்களை நீட்டின. அப்பொழுது போசலபாவாவின் மனையாட்டியாகிய மமதாபாய், போசலபாவாவைப் பார்த்து, "நாம் முயற்சி செய்யாமலே சோளக்கொல்லை தானே பயிர் முளைத்து கதிரீன்றிருக்கிறது. கதிர்களை வழிபோக்கர்களும் பக்ஷிகளும் கவர்ந்து கொண்டு போகாமல் பரண்கட்டி, பரண்மீதிருந்து காவல் காக்க வேண்டும். கடவுளின் கருணையால் விளைந்த தானியத்தை தள்ளப்படாதென்று சொல்லவும், போசலபாவா தனது வீட்டிலிருந்து கழிகளையும் கால்களையும் எடுத்துச்சென்று ஒரு பரண் கட்டி, அதில் இருந்து பகவத்தியானம் பண்ணிக்கொண்டிருந்தார்.

இவர் பாடிய பாடல்கள் பண்டரிநாதனுடைய விஷயமானதாக இருந்தாலும், இவருடைய கண்டத்தொனியானது குயிலின் இனிய நாதமாக இருந்ததால், தொனிகேட்ட பறவைகள் 'ஆத்திரா" சோளக் கொல்லையையே தங்களுடைய இடமாகக் கொண்டு தங்கின. இவர், பரண்மீதிருந்து பகவன்நாம பஜனம் செய்கின்றனரன்றி, பக்ஷிகளைக் கவண்கல்லால் விரட்டாதிருக்க அவைகள் தங்கள் இஷ்டம்போல் கதிர்களை மேய்ந்தன. அன்றியும், வழிப்போக்கர்கள் அந்த கொல்லையின் பக்கமாகவரின், போசலபாவா அவர்களை அழைத்து ஒவ்வொருவருக்கும் வேண்டியவற்றைக் கொடுத்தனுப்பவும், கொல்லையிலுள்ள கதிர்கள் யாவும் அழிந்துபோயின. அரசனுக்குக் கட்டவேண்டிய தீர்வை தரிசாய் கிடக்கும்பொழுது இல்லாதுபோயிற்று. இப்பொழுது தீர்வை நன்றாயும் வந்தது. எல்லா கொல்லைகளிலும் இதுவே கதிர்களால் நிரம்பியது என்று யாவரும் கொண்டாடுவதுபோய் கொல்லையில் அரசனுக்கு செலுத்தும் தீர்வைக்கு வழியில்லாமல் போயிற்று" என்று சொல்லும் வண்ணமாயிற்று. இந்த செய்கையை உணராது தனது வீட்டிற்கு இந்த வருஷத்து உணவிற்குரிய சோளம் வந்ததென்று சந்தோஷித்து ஒவ்வொரு நாளும் தனது நாயகனுக்கு உணவுகொண்டு போய்க் கொடுத்து உபசரித்துவந்தவள் சோளக்கொல்லையைச் சுற்றிவந்து நோக்கவும், கொல்லையிலுள்ள கதிர்களெல்லாம் ஒடிக்கப்பட்டிருப்பதும், பக்ஷிகள் கூட்டமாகக் கதிர்களைக் கொய்துக்கொண்டு போவதும், இவர் கவனியாது பஜனை செய்துகொண்டிருப்பதும் கண்டு ஆற்றாதவளாய் வருத்தத்துடனே தனது கணவன் முன்னே

சென்று "நாதா! நான் பாண்டுரங்கன்மீது ஆணையிட்டிருக்கிறேன். உமது கைகள் வழிப்போக்கருக்கென்று கொய்து கொடுக்காமலிருப்பதற்காக என்று சொல்லிவிட்டு தனது வீட்டிற்குச் சென்று தான் கணவன் முன்னே பகவான்மீது ஆணையிட்டதை நினைத்து ஓ! நான் என்ன தவறிழைத்துவிட்டேன்! பதினாயிரம் கலம் தானியம் குவித்திருக்கும் களஞ்சியத்தைத் திறந்து ஏழைகளுக்குப் பஞ்சகாலத்தில் உணவளித்து பேரிசைகொண்ட தாளாளனான எனது கணவனுடைய கைகள் பசியினால் வழிநடந்து வரும் பாட்டைசாரிகளுக்கு இரண்டு மூன்று சோளக்கதிர்களை முறித்துக் கொடுக்க இல்லாதபடி பாண்டுரங்கன்மீது ஆணை வைத்துவிட்டேனே? இது என் பேதமையன்றோ? இரவும் பகலும் ஓய்வில்லாமல் உணவுசமைத்து பஞ்சகாலத்தில் ஏழைகளுக்கு உணவளித்து தானியங்கள் போய்விட்ட பின்னும், வீட்டிலுள்ள நகைகள் வெள்ளி வெண்கலப் பாத்திரங்கள் சாகுபடிக்குரிய ஏர்கள் மாடுகள் யாவற்றையும் பார்க்கிலும் இந்த சோளக்கதிர் சிறந்ததென்று நினைத்து எனது நாயகனது வள்ளல் தன்மையை மாற்றினேனே! அவர் உள்ளம் எப்படி வருந்துமோ! என்னைத் தீயவளென்று எண்ணினரோ! நமது சிரதர்மம் போயிற்றென்று வருந்துவரோ! மாசற்ற மனமுடைய மணாளனுக்கு வன்கண்மை பூண்டேனே! என்று வருத்தமுற்று நாயகனிடம் வந்து அவருடைய பாதத்தில் வீழ்ந்து பணிந்து, நாதா! நான் பேதைமதியால் சோளக்கதிர்களை யொடித்து வழிப்போக்கர்களுக்கு ஒடித்துக்கொடுக்க இல்லாதபடி பாண்டுரங்கன்மீது ஆணைவைத்துவிட்டேன். அடியாள் செய்த குற்றத்தை மன்னித்து க்ஷமித்தருளவேண்டும் என்று வேண்டிக்கொண்டனள்.

போசலபாவாவானவர், தனது மனைவியை நோக்கி நீ எனக்கு யாதுகுற்றஞ் செய்தனை? வருந்தாதே நான் பாண்டுரங்கனை யிடையறாது பஜிப்பதற்குரிய மார்க்கத்தையே நாடி ஆணையிட்டாய். இந்த கொல்லையினிடம் வருவோர்கள் நான் பகவத்தியானத்திலிருக்கும்பொழுது தங்களுக்கு கதிர்மீதுள்ள ஆசையால், என்னுடைய தியானம் கலைய கதிர்வேண்டுமென்று கேட்பார்கள். நான் பரணிலிருந்திறங்கிவந்து கேட்பவர் ஒவ்வொருவருக்கும் கதிர்களை முறித்துக் கொடுப்பதும், பரண்மீது ஏறுவதுமாக எனது தியானம் சிறிதுநேரமாவது நிலைத்து நின்று வளர்ப்பதற்கில்லாது போயிற்று. நீ செய்த நன்மை என்கைகள் வழிப்போக்கர்களை கதிர்களை முறித்து கொடுக்கப்படாதபடி பண்டரிநாதன்மேல் ஆணையிட்டனையாதலால், பரணைவிட்டிறங்காமல் தியானம் செய்துக்கொண்டே வந்துகேட்பவர் சப்தம் கேட்டதும் கண்ணைக்கூட விழித்து நோக்காது "உங்களுக்கு வேண்டியகதிர்களைப் பறித்துக்கொண்டு போங்கள்" என்று கைகாட்டுவேன். அவர்கள் தமக்கு வேண்டுவனவற்றை பறித்துக்கொண்டு

செல்லுவார்கள். நீ ஆணையிடுமுன்னே ஒரு நாளைக்கு ஒருதரம் கூட பகவானைக்காண முடியாமலிருந்தது! ஆணையிட்டது முதல் நான் கண்களைமூடி தியானிக்கும் ஒவ்வொரு நிமிஷமும் பகவான் என் முன்னே நின்று சேவைதந்து இனியமொழி கூறிக்கொண்டிருக்கிறார். நீ எனக்கு செய்த உதவி ஆசாரியன் சிஷ்யனுக்கு செய்திருக்கமாட்டான். நீயே யெனக்கு ஈஸ்வரதரிசனத்தை இடைவிடாது காட்டுகின்றாயாதலால், உன்னையே ஆசாரியனாகக் கொள்ளவேண்டுமென்று நினைத்திருக்கிறேன். இங்ஙனமாக நீ குற்றம் செய்தாயென்று உன்னை நான் முனிவேனோ? எனது அன்புடைய கண்மணி! என்று சொல்லி அவளை அனுப்பிவிட்டு தான் பரண்மீதுவீற்றிருந்து பகவத்தியானம் செய்துகொண்டிருந்தார்.

இப்படியிருக்க குடிகள் அரசனுக்கு செலுத்தவேண்டிய இருசால் காலம் வந்தது. இராஜசேவகர்கள் இந்த சோளக்கொல்லைக்காக செலுத்தவேண்டிய ஏழுவிராகனை இவரிடம்வந்து கேட்கவும், தன்னிடம் மூன்றுவிராகன் இருந்ததால், இன்னும் சிறிது நாளில் நான்குவிராகன் சேகரித்து சர்க்கார் தீர்வையைச் செலுத்திவிடலாம் என்று நினைத்து சேவகர்களை மரியாதையாக, "ஐயா! இன்னும் சிலநாள் பொறுத்து வாருங்கள் நான் தருகிறேன்" என்று சொல்லவும், அவர்கள் இவருடைய இனியமொழிகளைக் கேட்டு, "நல்லது" என்று சொல்லிச் சென்றனர். இதைப் பார்த்துக்கொண்டிருந்த சிலர், போசலபாவாவை அவமானப்படுத்தவேண்டுமென்று நினைத்து சேவகர்களிடம் வந்து "நீங்கள் புதியவராக இருக்கிறீர்கள். போசலபாவாவின் சோளக்கொல்லையைப் போய்ப்பாருங்கள். அதில் ஒரு கதிர்கூடக் கிடையாது. வயிற்றிற்கே விறகு வெட்டி வந்து ஜீவனம் பண்ணவேண்டிய நிலையிலிருக்கும்பொழுது உங்களுக்கு எங்கிருந்து தீர்வைப்பணம் கொடுக்கப்போகிறார்? நீங்கள் அவரிடம் தீர்வை வாங்கினாலன்றி, நாங்கள் ஒரு காசுகூட கொடோ"மென்று சொல்லவும், சேவகர்கள் போசலபாவாவினிடம் மீண்டும் வந்து, "நீர் கொடுக்கவேண்டிய தீர்வைப்பணத்தைத் தந்தாலன்றி, இந்த ஊரில் ஒருகாசுகூட வசூல் செய்ய முடியாது. ஆதலால், நீங்கள் பணத்தைக் கொடுத்துவிடவேண்டும்" என்று கேட்கவும், போசலபாவா சேவகர்களை நோக்கி "ஐயா! பணம் என்றைக்கும் கொடுக்கவேண்டியதே; என்னிடம் மூன்று விராகனிருக்கிறது. இன்னும் நான்கு விராகன் யாரிடமாவது வாங்கி நாளைத்தருகிறேன். நீங்கள் என் பணத்திற்காகச் சிரமப்படவேண்டாம்" என்று சொல்லவும் அவர்கள், "நாளைத் தந்துவிடவேண்டும்" என்று சொல்லிப் போயினர். அவர்கள் போனதும் போசலபாவாவானவர் நான்கு விராகன் சேகரிக்க வேண்டும். இதற்கென்ன செய்வதென்று யோசித்து அந்த ஊரில் ஏராளமான செல்வத்தை மண்

ணைத் தோண்டிப் புதைத்து வைத்துக்கொண்டு யாராவது பணம் கடன் கேட்க வந்தால் ஒன்றுமில்லாதவன்போல் வட்டி மிகுதியாக வாங்குவதற்காக நடித்து, உங்களுக்காக யாரிடமாவது கடன் வாங்கித்தருகிறேன் என்று சொல்லி இரண்டொருநாள் அலைய வைத்து அநியாய வட்டிக்கு சாசன மெழுதிக்கொண்டு கடன் கொடுக்கும் அமங்கலியான நாகாபாய் என்னும் ஒரு வைசிய நங்கையிடம் வந்து, "அம்மா! எனக்கு நான்கு விராகன் வேண்டும். ஒரு மாதத்திற்குள்ளே வட்டி சேர்த்து தந்துவிடுகிறேன்" என்று சொல்லி கேட்கவும், அவள் இவருடைய வார்த்தையைக் கேட்டும், இவர் பெரிய தனவந்தராயிருந்து ஏழைகளுக்கு பஞ்சகாலத்தில் உணவளித்து வறுமையுற்றவர். நம்மிடம் ஒன்றும் இது வரை கடன் கேளாதவர். இன்றுதான் தன் வாய்திறந்து கேட்கிறார். கொடுப்போம்; மோசம் செய்கின்றவ ரில்லையென்று நிர்மானித்து "ஐயா! நாளை வாரும். நான்குவிராகன் தருகிறேன்" என்று சொல்லி அனுப்பவும், போசலபாவாவானவர் அவள் வார்த்தையை நம்பி தனது வீட்டிற்குவந்து திர்வைப் பணத்தின் கவலை தீர்ந்ததென்றெண்ணியிருந்தார்.

இப்படியிருக்கும் பொழுது போசலபாவாவிடம் அசூயை கொண்ட சிலவம்பர்கள் போசலபாவா நாகாபாயிடம் திர்வைப் பணத்திற்காக கடன்வாங்கச்சென்றிருக்கின்றனரென்று அறிந்து, அவர் கடன் கேட்டுவிட்டுப் போனதும் நாகாபாயின் வீட்டிற்கு வந்து, அடி! நாகாபாய்! "நீ ஊரிலுள்ளவர்களுக்கெல்லாம் அநியாய வட்டிக்குக் கொடுத்து புதைத்துவைத்திருந்த பொருள்களையெல்லாம் பாழாக்கக் கருதிவிட்டனையோ?" இந்த போசலபாவாவிடம் என்ன சொத்திருக்கிறதென்று கடன் கொடுக்கத் துணிந்தாய்? உள்ளதையெல்லாம் கொள்ளைக்கிரைத்து ஓட்டாண்டியாய் உணவின்றி திண்டாடுகிறது உனக்குத்தெரியாதா? அவன் சம்மந்தக்காரன் தன் புஞ்சைக்கு விதைத்தது போக மீத மிருந்த விதையை இவன் தோட்டத்தில் விதைத்தான். அதுவும் இரண்டொரு கதிர்களை நீட்ட அதைப் பத்திரமாய் பாதுகாக்கத் தெரியாமல் வழிப்போக்கரும் காக்கை குருவிகளும் கவர்ந்து கொண்டுபோக, திர்வை செலுத்த பணமில்லாமல் உன்னிடம் கடன் கேட்கிறான். நீ இவனுக்குக் கடன் கொடுத்துவிட்டு இவனிடம் நீ கொடுத்த பணத்தை எந்த யுகத்திலே வாங்கப்போகிறாய்? இவன்போல் சில தரித்திரர்க்கு கடன் கொடுத்தால் அம்மட்டோடு பணமில்லாமல் பாழாய்ப் போய்விடும்" என்று சொல்லவும், இவர்கள் வார்த்தையைக் கேட்ட நாகாபாய், "நான் அவருக்குக் கொடுக்கிறேனென்று சொல்லிவிட்டேன். நல்லநேரத்தில் நீங்கள் வந்து அவருடைய நிலைமையைச் சொல்லிவிட்டீர்கள். இனிநான் அவருக்கு தம்படியேனும் கொடுக்கமாட்டேனென்று சொல்லி அவர்களையனுப்பிவிட்டு போசலபாவாவிற்காகக் கொடுக்க

வேண்டியதற்காகத் தான் பூமியில் புதைத்திருந்ததைத் தோண்டி நான்கு விராகனை எடுத்து முந்தியில் முடிந்திருந்தாளாதலால், அதை அவிழ்த்து ஒரு அடுக்குச்சட்டியில் போட்டு யாருக்கும் தெரியாதபடி மறைத்து வைத்துவிட்டு போசலபாவா வந்ததும், பணம் கிடைக்க வில்லையென்று சொல்லிவிடுவோமென்று நினைத்திருந்தாள்.

மறுநாள் பொழுதுபுலர்ந்ததும் போசலபாவா நாகாபாயின் வீட்டிற்குவந்து, "அம்மா! நேற்று நான் உம்மிடம்வந்து நான்கு விராகன் கடன் கேட்டபொழுது இன்று தருவதாகச் சொன்னீர்களே தயவுசெய்து இப்பொழுதே கொடுத்தால் மிக்க உதவியாயிருக்கும்" என்று சொல்லவும், நாகாபாய் இவருடைய மொழியைக் கேட்டு, தனக்குள் இவர் அவசரப்படுவதைப் பார்த்தால், வாங்கின பணம் கொடுப்பவராகத் தோன்றவில்லை. நேற்று நம்மிடம் வந்து சொன்னதுபோலவே ரூபாயை அடித்துக்கொண்டு போகிறவரென்றே தோன்றுகிறது. நமது முதல் நல்ல முதலாதலால், இவர் கையில் சிக்காது தப்பிற்று" என்று தனக்குள் சந்தோஷித்து போசலபாவாவை நோக்கி, "ஐயா! நான் நேற்று உம்மிடம் நாளை வந்தால் பணம் தருவதாகச் சொன்னேன். இரண்டு மூன்று இடங்களில் கொடுத்திருந்த பணம் வருமென்று நினைத்து உம்மிடம் சொன்னேன். ஒருவரும் பணம் கொணர்ந்து தரவில்லை. இதுசால்காலமாதலால் பணம் வருவது கஷ்டமென்று தோன்றுகிறது. என்னிடமிருந்தால் உமக்குத் தடையின்றிகொடுப்பேன்" கையிலில்லாத சமயம் நீர்கேட்கவும், உமக்குக் கொடுத்துதவுவதற்கு இல்லாமல், போயிற்றே என்பதை நினைந்து வருத்தத்துடன் நின்றுகொண்டிருக்கிறேன்" என்றாள்.

போசலபாவா நாகாபாயின் வார்த்தையைக் கேட்டு நிலத்திர்வைக்கு வரும் சேவகர்கள் நமது வீட்டிற்கு வந்துவிடுவரே! அவருக்கு இன்று தருவதாகச் சொல்லி அனுப்பியிருக்கிறேனே! இதற்கென்ன செய்வது! யாரிடம் சென்று இனி கடன் கேட்பது! இவள் தருவாளென்று நினைத்து ஏமாந்து, மடையும்படி நேர்ந்ததே!" என்று வருந்தமுற்று, "நாம் நான்கு விராகன் கடன் வாங்காமல் வீட்டிற்குப் போகக்கூடாது; என்று நினைத்து நான்கு நாழிகைவழி தூரத்திலிருக்கும் விராவைப் என்னும் கிராமத்திற்குச் சென்று அங்கு மிகுந்த தனத்தை கொடுக்கல் வாங்கல் செய்து வியாபாரியாக வமைந்த விட்டல் பாவா வென்பவரிடம் சென்று கேட்போமெனத் துணிந்து, தன் னூரைவிட்டு வழிநடந்து விராவைத்திற்கு வந்து விட்டலபாவா வென்பவரைக் கண்டு தான் பால்காடு என்னும் அடுத்த கிராமத்தி லிருப்பவரென்றும், தன் பெயர் போசலபாவாவென்றும் தனது ஜீவனம் விவசாயமென்றும், தனக்கு நான்கு விராகன் கடன் தரவேண்டுமென்றும் சொல்ல, விட்டலபாவா இயற்கையிலேயே போசலபாவா முன்

பெரிய தனவந்தராயிருந்து ஏராளமான செல்வங்களையும் தானியங்களையும் பஞ்சகாலத்தில் ஏழைகளுக்குக்கொடுத்து காப்பாற்றி வறுமையுற்றாரென்பதை, அறிந்தவனாதலால் இவர் இதுவரை யாரிடமும் கடன் வாங்கி யிருக்கமாட்டார். இப்பொழுதுதான் நம்மிடம் வந்து கடன் கேட்கின்றார். நாம் இவருக்கு நான்கு விராகன் கடனென்று சொல்லிக் கொடுப்போம். இவர் திரும்பி கொணர்ந்து தந்தால் வரவு வைத்துக்கொள்வோம். தாராவிடில், இந்த சாதுவினிடம் நமது நான்கு விராகன் நம்முடைய பணமாகவே யிருந்தால், அது நமக்கும் பெரும் புண்ணியமே, அதை நமது செலவு கணக்கில் எழுதிவிடலாம்" என்று நினைந்து அவரை, உட்காரவைத்து உபசாரமான வார்த்தைகளைப் பேசி நான்கு விராகனையும் அவர் கையில் கொடுத்து, "இது உமக்குக் கடனாகத் தந்தது" என்று ஒருமொழியும் சொல்லாமல் 'போய் வாரும்' என்று விடைதந்தனுப்பவும், போசலபாவா நான்கு விராகனையும் வாங்கிக்கொண்டு, "நான் போய் வருகிறேன்" என்று வர்த்தகனிடம் விடைபெற்று தனது ஊரை நாடி வந்து கொண்டிருந்தார்.

இதற்குள் இவரிடம் அருமைகொண்ட வர்ப்பர்கள் தாகப்பாய் பணம் கொடுக்காததைக் கண்டும், இவர் தன் வீட்டிற்கு வாராமல் எங்கேயோ போனதைக் கண்டும், விரைந்தோடி வந்து தண்டல் சேவகர்களை நோக்கி, போசலபாவா இன்று உங்களுக்கு தீர்வைபணம் தருகின்றேனென்றானே; அவன் இந்த ஊரிலாவது இருக்கின்றானா; தீர்வை செலுத்த சக்தியின்றி ஊரைவிட்டு ஓடி விட்டானா" என்று சொல்லவும், சேவகர்கள், மிகுந்த கோபமுடையவராய் போசலபாவாவின் வீட்டு வாயல் படியினில் வந்து உட்கார்ந்துக்கொண்டு வீட்டிலுள்ளவர்களைப் பார்த்து, சர்க்காருக்கு செலுத்தவேண்டிய ஏழு விராகன் தீர்வை பணத்தை செலுத்தாமல் வீட்டிலிருந்து தண்ணீர் கொணரவோ, நெருப்பு வாங்கவோ, ஒரு காரியமாகவோ, வெளியில் போகப்படாது, அரசன்மீதும் குலதெய்வத்தின்மீதும் ஆணைவைத்திருக்கிறோமென்று சொல்லி உட்கார்ந்துவிட்டனர்.

அப்பொழுது பக்தவத்சலனை பாண்டுரங்கன் ராஜசேவகர்களால் போசலபாவாவின் குடும்பம் அவதிப்படுவதை நினைந்து, தாமே தீர்வைப்பணமாகிய ஏழு விராகனையும் போசலபாவா செலுத்தியதாக செலுத்தி இவர்களிடம் ரசீது வாங்கிக்கொள்ளுவோமென்று நினைந்து அந்த ஊர் வெட்டியானுடைய உருவம் அடைந்து தனது திருவரையில் கந்தலாடையைக்கட்டி தலையில் கந்தல் துணிகளைத்து சுற்றிய தலைப்பாகை தோன்றவும், கையிலே ஒரு தடியைப் பிடித்துக்கொண்டு விரைவாக நடந்துவந்து போசலபாவாவின் வீட்டுவாசலை யடைந்து சேவகர்களை நோக்கி, "இந்த வீட்டுக் குடையவராகிய போசலபாவா வென்பவர்

சோளக் கொல்லைக்காக கட்டவேண்டிய தீர்வைப்பணம் ஏழுவிராகனையும் எனது எஜமானனாகிய கிராமாதிகாரியிடம் கொடுத்துவிட்டார். அவர் பணம் பெற்றுக்கொண்ட ரசீது இதோயிருக்கிறது. இதில் பணம் வந்துவிட்டதற்கு கையெழுத்திட்டு என்னிடம் கொடுத்துவிட்டு கிராமாதிகாரியிடம் சென்று பணத்தைப் பெற்றுக்கொள்ளுங்கள் என்று சொல்ல பணம் வாங்கிக்கொண்டு கிராமாதிகாரி கொடுத்த ரசீதை சேவகர்கள் கையிலே கொடுக்கவும், அவர்கள் அதை வாங்கி வாசித்துப்பார்த்துவிட்டு இவர் பணம் வந்துவிட்டதென்று ரசீதில் கையெழுத்து வைத்து வெட்டியானிடம் கொடுத்துவிட்டு கிராமாதிகாரியினிடம் வந்து போசலபாவா கட்டிய தீர்வை பணத்தை வாங்கிக்கொண்டு மற்ற வீடுகளுக்கு தீர்வை பணம் வாங்க வந்தனர்கள்.

அப்பொழுது போசலபாவாவானவர், அயலூர் சென்று நான்கு விராகன் கடன் வாங்கிக்கொண்டு விரைவாக சேவகர்கள் வருவதற்கு முன்னே வீட்டிலிருந்து அவர்கள் வந்ததும் தீர்வையை செலுத்தி ரசீது வாங்கிவிடுவோமென்று அவ்வழியாகவந்து கொண்டிருப்பதை சேவர்கள் பார்த்து, அவரிடம் சென்று, நீர் சோளக் கொல்லைக்காக செலுத்தவேண்டிய ஏழுவிராகன் தீர்வைப் பணத்தையும் வெட்டியான் மூலமாக கிராமாதிகாரிக்கு செலுத்தி ரசீது பெற்றுக்கொண்டாராதலால் நாங்கள் பணம் வந்துவிட்டதற்கு கையெழுத்து போட்டு வெட்டியானிடம் கொடுத்திருக்கிறோம். நீர் அவனிடமுள்ள ரசீதை வாங்கிக்கொள்ளும்" என்று சொல்லவும், போசலபாவா திகைத்து, "நமது மனைவியிடம் நான்கு விராகன் இருக்கலாம்போலும். நான் வைத்திருந்த மூன்று விராகனையும் சேர்த்து வெட்டியானிடம் கொடுத்து கிராமாதிகாரியிடம் ரசீதுவாங்கி இவர்களுக்குக் காட்டி கையெழுத்து வாங்கி யிருக்கலாம்" என்று நினைத்து தன் வீட்டுக்கு வந்து தனது மனைவியையும் மைந்தனையும் பார்த்து, "நீங்கள் தீர்வைக்கு பணம் கொடுத்ததுண்டோ" என்று கேட்கவும், அவர்கள் திடுக்கிட்டு, போசலபாவாவைப்பார்த்து, "தாங்கள் வெளியே சென்றதும், தண்டல் சேவகர்கள் வீட்டு வாசற்படியில் வந்து உட்கார்ந்துக்கொண்டு, "தீர்வை பணம் செலுத்தாது தண்ணீர் எடுக்கவோ நெருப்பு வாங்கவோ வெளியில் போகப்படாது" என்று அரசன்மீதும் தெய்வத்தின்மீதும் ஆணை வைத்துத் தடுத்தனர். நாங்கள் தண்ணீர்கொண்டுவரவும் வழியின்றி, அவஸ்தையடைந்துக்கொண்டிருந்தோம்.

இதற்குள் நீர் கிராமாதிகாரியிடம் தீர்வைசெலுத்தியதாக இவ்வூர் வெட்டியான் ரசீது வாங்கி வந்து தண்டல் சேவகர்கள் கையிலேகொடுத்து பணம்வந்ததற்கு கையெழுத்து போடச்செய்து அந்தரசீதை உமக்குக் கொடுப்பதற்காகக் கிராமாதிகாரியிடம் கொடுத்திருப்பன். நீர் வந்ததும் ரசீதை வாங்கிக்கொள்

றும்படி சொல்லிவிட்டு சென்றனன். தண்டல் சேவகர்களு போயினர்கள் என்று சொல்லவும், இந்த வார்த்தைகளைக் கேட் போசலபாவாவானவர் ஆச்சரியத்தை யடைந்து இது பாண் ரங்கனுடைய செயலாக யிருக்கலாம். என்று நினைத்து கிராமா காரியினிடம் சொல்லவும், அவன் போசலபாவாவைக் கண்டது மரியாதையுடனே வரவேற்று நீர் வெட்டியான் மூலமாக சோள கொல்லைக்கு செலுத்திய எழு விராகனுக்கும் ரசீது இருக்கிறது இதோ என்று தன்னிடமிருந்த ரசீதை போசலபாவாவிடம் கொடுத்து அனுப்பவும், அவர் அதை வாங்கிக்கொண்டு "இந்த பணம் செலுத்தியவர் பாண்டுரங்கனேயன்றி வேறல்ல. வெட்டி யானிடம் நமக்காக வேறு யாராவது பணம் கொடுத்து ரசீது வாங்கச்சொல்லி யிருக்கின்றனரா? அதை விசாரிக்கவேண்டும்" என்று நினைத்து வெட்டியானைவிசாரிப்போமென்று அவனுடைய வீட்டிற்கு வந்து அவனைக் கண்டு "நீ எனக்காகப் பணம் கட்டி ரசீது வாங்கி தண்டல் சேவகர்களிடம் கையெழுத்து வாங்கி உனது எஜமானிடம் ரசீதைக் கொடுத்தனையோ? தயவு செய்து சொல்லவேண்டும்" என்று கேட்கவும், அவன், போசலபாவா வைப் பார்த்து, "சுவாமி! நான் ஒன்றுமே அறியேன். இந்த ஊரிலுள்ளவர்கள் செய்கின்ற வம்பினால் எங்களுக்கு வேலை குறை ந்துவிட்டது. முன்பெல்லாம் நானே வீடு வீடாகச் சென்று தீர்வைப்பணத்தை வாயிதாவிற்கு முன்னே வாங்கி ரசீதும் கிரா மாதிகாரியிடம் பெற்று வீடுதோறும் கொண்டு கொடுப்பேன். இவர்கள் வாயிதா கழியும்வரை பணம் செலுத்தாததினால் இரா ஜாங்கத்திலிருந்தே தண்டல் சேவகர்கள் வந்து ஊரிலுள்ளவர் களை நிர்ப்பந்தித்து பணம் வாங்கும்படி நேர்ந்தது. எங்கள் பாடு முழங்கால் தேயாது கவலையுமில்லாது வீட்டில் படுத்துத் தூங்கவேண்டியதேயன்றி வேறு காரியமில்லை" என்று சொன் னான்.

இம்மொழிகளைக் கேட்ட போசலபாவா வியப்படைந்து, 'நமக்காக சர்வேஸ்வரன் வெட்டியானுடைய உருவத்தினையடை ந்து தீர்வைப்பணத்தை நான் கொடுத்ததாக கிராமாதிகாரியிடம் கொடுத்து ரசீதும் வாங்கி தண்டல் சேவகர்களிடம் காட்டி கை யெழுத்தும் வாங்கிக்கொண்டு கிராமாதிகாரியிடம் ரசீதைக் கொண்டுபோய்க் கொடுத்துவிட்டு மறைந்தனர்' என்று தெரிந்து தனக்காகச் சர்வேஸ்வரன் வெட்டியான் உருவமடைந்ததை நினை ந்து மனம் தாளாதவராய் பகவானை தோத்திரம் செய்ய ஆரம் பித்தார். அதாவது, "ருக்மணீவல்லபா! இந்த எழுவிராகன் கொடுப்பதற்கு இல்லாது போயின் நீர் என்னை காப்பதற்கு முன் வரவேண்டியது கடமையாகும். முன்னர் பாதுஷாவிற்குச்செலுத்த வேண்டிய தீர்வைப்பணத்தை முழுதும் பத்திராசலத்திலுள்ள ஆலயத்தைக் கட்டி சம்புரோக்ஷணை செய்தவராகிய ராமதாசரை

அரசருக்கு சேரவேண்டிய பணத்தை யபகரித்தாரென்று குற்றம் சாட்டி சிறையில் அடைத்து நிர்ப்பந்திக்கும்பொழுது அவரைக் காப்பதற்கு நீர் உமது தம்பியான லக்ஷ்மணனுடனே சேவகர் உடைதரித்துவந்து பாதுஷாவிடம் பள்ளி அறையிலே பணத்தை செலுத்தி ரசீது வாங்கிச்சென்று அவரை சிறை மீட்டீர். அது தக்கதே. ராமதாசர் நீர் பணம் செலுத்தாது போயின், சிறையிலேயே உயிர் விடத்தகுந்த நிலையில் விஷத்தை யும் கிண்ணத்தில் வைத்துக்கொண்டு குடிப்பதற்குரிய சமயத்தை எதிர் பார்த்திருந்தார். அடியேனுக்காக இந்த வெட்டியான் உருவம் அடையப்போமோ? எந்தலே! முன்னர் தாமாஜிபண்டி தர் சர்க்கார் களஞ்சியத்திலுள்ள தானியங்களையெல்லாம் பஞ்சத் தால் வருந்திய ஏழை ஜனங்களுக்கு உணவிற்காகக் கொடுத்துக் களஞ்சியங்களை காலியாக்கியதை அறிந்த அரசன் தனது சர்வாதி காரியை கைதுசெய்து வரும்படி வாரண்டுடனே சேவகர்களை யனுப்பவும் நீர் தலையாரியின் உருவத்தை யடைந்து அவர் செலுத்தவேண்டிய கவைக்கிறந்த நிதியை அரசனிடம் கொடுத்து ரசீது வாங்கி அவரைக் காத்தீர். நீர் காவாது போயின் தாமாஜி பண்டிதர் ராசதண்டனைக்குள்ளகப்பட்டு வருந்துவர். ஆதலின், அவரைக் காத்தது உன் கடனேயாயிற்று. இந்த ஏழை செலுத்தவேண்டியிருந்த எழுவிராகனுக்காக வெட்டியான் உரு வம் அடையப்போமோ? உமக்கு அடியேன் மிகுந்த வருத்தத் தையே தந்தனன். கருணாநிதியே! கார்மேகவண்ணனே!" எனப் பலவாறு பகவானை நினைந்து துதிசெய்துகொண்டிருந்தார்.

பக்த பராதீனனான பாண்டுரங்கன் தனது திருவறையிலே வைத்திருந்த சகாக்களுடனே புன்முறுவல்காட்டி முன்னே நின்று, போசலபாவாவினை நோக்கி, "எனது அன்பா! நான் எழுவிராகனை நீ கட்டமுடியாமல் அவதிப்படுகிறாயென்று நினைந்து நான் கட்ட வரவில்லை. இந்த ஊரிலிருக்கும் துஷ்டர்கள் உம்மிடம் அநுஞை கொண்டு சேவகர்களிடம் நீர் ஊரைவிட்டு ஓடிவிட்டதாகச்சொல்லி தண்டல் சேவகரை வீட்டுவாயலில் மறியல் செய்யும்படியாகச் சொல்லித் தாங்களும் வீட்டின் முன்னின்று உம்மைப் பரிகசித்து கைகொட்டி நகைத்தனர். அன்றியும், நீர் நாகாபாயிடம் சென்று கடன் கேட்கவும் அவள் மண்ணில் புதைத்திருந்த நாணயங் களில் நான்கு நாணயத்தை எடுத்து உமக்குத் தருவதற்காக அடு க்குசட்டியில் போட்டிருக்கவும் அவளிடம் இவர்கள் சென்று அவளுக்கு அநேக துர்ப்போதனைகளைப் போதித்து உமக்கு பணம் கொடுத்தால் பணம் வராதென்று போகவும் அவள் அவர் கள் வார்த்தையைக்கேட்டு உம்மை நாளைவாரும் தருகிறேனென்று சொல்லியவள் நீர்போய் கேட்கும்பொழுது பணம் இல்லை; எனக் குக் கொடுக்க வேண்டியவர்களிட மிருந்து பணம் வரவில்லை. இருசால் காலமாதலால் பணம் கிடைப்பது கஷ்டமென்று போக்

குச் சொல்லி யனுப்பவும், அப்பொழுது இவர்கள் நீர் பணம் கட்டுவதற்கே முடியாது என்று நினைத்து இகழ்ச்சி செய்தனர் அவர்களுக்கு ஒருத்தி வருவதற்கென்றே ஏழுவிராகன் ரொம்ப சிரமப்பட்டு சம்பாதித்துக்கொண்டு தலை அதிகாரியின் வெட்டியானுருவத்தை யடைந்து அவனிடம் ஏழுவிராகனையும் செலுத்தி ரசீதுவாங்கி உமது வீட்டு வாசலிலே மரியல் கிடக்கும் தண்டல் சேவகரிடம் வந்து ரசீதைக்காட்டி பணம் வந்ததற்கு கையெழுத்து பெறும்படிசெய்து அந்த ரசீதை கிராமாதிகாரியிடம் கொடுத்துவிட்டுச் சென்றேன்" என்று சொன்னார்.

இந்த வார்த்தையைக் கேட்ட போசலபாவாவானவர், "சுவாமி! எனக்கொரு சந்தேகம்; ராமதாசருக்கு அளவுகடந்த மோகராவை பாதுஷாவிடம் செலுத்தி ரசீதுவாங்கினீர். தாமாசி பண்டிதருக்காக அவருடைய தலையாரியின் உருவத்தை யடைந்து அவர் கட்டியதாக பணத்தை மலைபோல் குவித்து மன்னவனிடம் ரசீது வாங்கினீர். இவ்வளவு மிகுந்தபொருளை நீர் கஷ்டப்பட்டு சம்பாதிக்கவில்லை என்று தெரிகிறது. அன்றியும், நரசிம்மமேதாவானவர் காசி யாத்திரை செல்லப் பிராமணர்களிடம் வாங்கிய பணத்திற்காக அவர்களுக்கு உண்டியல் கொடுக்கவும், அந்த உண்டியிலுள்ளதை காசியில் பணம் செலுத்தினீர். அந்தக் காலத்திலும் பணம்தேட வருந்தியதாகத் தெரியவில்லை. அப்படியிருக்க, இந்த ஏழு விராகனுக்கு நீர் சிரமப்பட்டு சம்பாதித்தேன் என்றீர். உமக்கு இந்த ஏழு விராகன் கிடைப்பது கஷ்டமாயிற்றோ? சர்வ ரக்ஷகனை நீயும் வறியவனாயினையோ" யென்று கேட்கும்போது பாண்டுரங்கன் நகைத்தருளி, போசல பாவாவைப் பார்த்து, "பாகவதோத்தமா! உன்னாலே தெரிவிக்கப்பட்ட ராமதாசர், தாமாசி பண்டிதர், எல்லோரும் பணம் கட்டமுடியாத நிலைமையில் சிறைவாசத்திற்கு ஆட்பட்டவர். நீர் பணம் கட்டுவதற்குரிய நிலையில் இருக்கிறீராதலால் உமக்கு நான் கட்டவேண்டிய பணம் கஷ்டப்பட்டு தேடவேண்டிய தாயிற்று" என்று, சொல்லவும், போசலபாவா பக்தவத்சலனைப் பார்த்து "நீர் பட்டதுன்பம்யாது, அதை அடியேனுக்குச் சொல்லவேண்டும்" என்று கேட்கவும் பகவான் சிரித்துக்கொண்டு, "பாகவதோத்தமா! நீர் உமது முந்தியில் மூன்று விராகன் முடிந்திருந்தீரா? அது இருக்கிறதா? பாரும் எனச் சொல்லவும், அப்பொழுது போசல பாவாவானவர், தனது முந்தியைத் தொட்டு பார்க்கவும், தாம் முடிந்திருந்த மூன்று விராகனையும் காணாதவராய்த் திகைத்து, "சுவாமி! எனது முந்தியில் முடிந்து பத்திரமாகச் சொருகியிருந்த மூன்று விராகனும் எனக்குத் தெரியாமலே எங்கேயோ தவறியிருக்கிறது. ரொம்பவும் சாக்கிரதையாக நான் வைத்துக்கொண்டிருந்தது எப்படி தவறிவிட்டதென்று எனக்கே தெரியவில்லை" என்று சொன்னார்.

இந்த மொழிகளைக் கேட்ட பாண்டுரங்கன் போசலபாவாவைப் பார்த்து, "உமது முந்தியிலிருந்தது உமக்குத் தெரியாமலேபோய்விட்டதென்றால், அதைத் திருடிய கள்ளன் யாரென்று தெரிய விரும்பினால், முடிவில் யாரென்றே அமையும். உமக்குத் தெரியாதபடி உம்மிடமிருந்த மூன்றுவிராகனையும் கவர்ந்துகொண்டேன்" என்றுசொல்லவும், போசலபாவாவானவர் ஆச்சரியத்தை யடைந்து பாண்டுரங்கனைப் பணிந்து எனது முந்தியில் முடிந்திருந்த மூன்று விராகனைத்தான் நீர் கவர்ந்துகொண்டீர். இன்னும் நான்கு விராகனுக்கு என்ன செய்தீர்" என்று கேட்கவும், பாண்டுரங்கன் நகைத்து உம்மிடம் நான் மூன்று விராகன் திருடியதுபோலவே வேறொருவரிடம் நான்கு விராகன் திருடினேன். முன்னம் இந்தவூரிலிருக்கும் நாகாபாய்என்னும் விதவையினிடம் நீர் கடன் கேட்கும்பொழுது நல்ல எண்ணத்துடனே உமக்குக் கொடுக்க வேண்டுமென்று பூமியில் புதைத்துவைத்திருந்த செல்வத்திலே நான்கு விராகனை எடுத்து அடுக்குசட்டியில் போட்டிருந்தாள். அதன்பின் இந்த ஊரிலுள்ள அசூயைப் பிடித்தவர்கள் உமக்குக் கொடுக்கப்படாதென்று சொல்லவும், அவர்கள் பேச்சினைக்கேட்டு உனக்குக்கொடுக்க மறுத்துவிட்டாள். இந்த நிலையில் இதுதெரிந்த நான் அவளுக்குத்தெரியாது அவள் வீட்டினுள் நுழைந்து அடுக்குச் சட்டியில் போட்டிருந்த நான்கு விராகனையும் எடுத்துவந்து உமது இருசால் செலுத்தினேன்" என்று சொன்னார்.

இவ்வார்த்தைகளைக் கேட்ட போசலபாவாவானவர், ஒரு விதவை,பணத்தையே தெய்வமென்றெண்ணியிருப்பவள் அவள் பணம் எனக்கு வேண்டியதில்லை. இதோ நான்குவிராகன் அடுத்த ஊரிலுள்ள வர்த்தகனிடம் கடனாக வாங்கி வந்திருக்கிறேன். இதை நான் நாகாபாய்க்குக் கொடுத்துவிடுகிறேன்" என்று சொல்லவும், பாண்டுரங்கன் சிறிது கோபமுற்றவர்போல போசலபாவாவைப் பார்த்து, அந்த அமங்கலி அனேகம் பெயர்களிடம் அநியாய வட்டி வாங்கி எத்தனையோ குடும்பங்களை வறியராக்கிவிட்டாள். அவள் பூமியில் புதைத்து வைத்திருக்கிற சொத்துக்கோரளவில்லை. இந்த நிலையில் நீர் கேட்கும்பொழுது கொடுக்கிறேனென்று சொல்லி உம்மை அவள் ஏமாற்றியதற்காக இந்த நான்குவிராகன் அவளுக்கு அபராதமாக விதித்திருக்கிறேன். நீர் எனது ஆணையைக்கடந்து நான்குவிராகனை அவளிடம் கொண்டுபோய்க் கொடுப்பீராயின் அவள் பூமியில் புதைத்து வைத்திருக்கும் திரவியங்கள் முழுமையும் பூதத்தின் வசமே ஒப்புவித்துவிடுவேன். இந்நிலையில் அவள் பூமியைத் தோண்டிப் பார்க்கவும் ஒருகாசேனும்காணாதவளாய் தனது உயிரையே மாய்த்துக்கொள்ளுவாள். அவள் இறத்தற்குக் காரணம் நீரே யாவீர்" என்று சொல்லிவிட்டு பாண்டுரங்கன் சன்னதிக்கு எழுந்தருளும்பொழுது போசலபாவாவின் பழைய செல்வநிலை வரும்படி

நினைந்து கருணைக் கண்களால் நோக்கிவிட்டு பண்டரிபுரத்திற்கு எழுந்தருளினார்.

போசலபாவா ருக்மணிநாதனுடைய கிருபாகடாக்ஷத்தால் தனது வயல்களெல்லாம் சாகுபடி செய்யாமலிருக்கும்பொழுதே தானியங்களாக கதிர்களை நீட்டின. முன்னம் இவர் காத்தசோளக் கொல்லை பக்ஷிகளுக்கும் வழிப்போக்கர்களுக்கும் உணவிற்கு உதவியதால் ஒரு கதிர்கூட இல்லாதிருந்தது. அது மற்றோருடைய கொல்லைகளைக் காட்டிலும் மிகுந்த தானியமாகக் குவிந்தது. போசலபாவாவானவர் எவ்வளவு தானியங்கள் விளைந்துவிடினும் அவற்றை ஏழைகளுக்கு உதவி பண்டரிநாதனைப் பூசித்துக்கொண்டு பெரிய பஜனை மடமொன்று கட்டி அதில் நித்தியோற்சவம் நடத்தி பிரதிதினமும் பகவன் நாம சங்கீர்த்தனம், ஹரிகதா காலக்ஷேபம், தீபப்பிரதக்ஷிணம் முதலியது செய்தும், பகவானை இவ்வலங்காரத்தால் மகிழச்செய்தும், அனேக விநியோகங்களால் பஜனை கேட்க வருபவர்களை மகிழ்ச்சி செய்து வரும்பொழுது அந்த ஊரில் இவர்மீது அருளை கொண்டவர்கள் எல்லோரும் இவர் கடவுள் தன்மை வாய்ந்தவர். இவர் பக்கில் பாண்டுரங்கனிருக்கிறான்" என்று நினைந்து இவருடைய பஜனை மடத்திற்கு வந்து இவருடனே பகவன் நாம பஜனம் செய்துகொண்டு பக்தியில் மேம்பட்டவர்களாயினர்.

போசலபாவா பகவன்நாம சங்கீர்த்தனம் செய்துகொண்டிருக்கும்பொழுது பாம்பு கடித்திறந்தவன் எழுந்த அத்தியாயம்

இப்படி பால்காடு என்னும் கிராமத்தில் போசலபாவா பஜனைக்கூட மமைத்து பண்டரிநாதனை எழுந்தருளப்பண்ணி பகவன் நாம பஜனம் செய்துகொண்டிருக்கும்பொழுது அந்த ஊரிலுள்ளவர்கள் யாவரும் பக்தி பரவசராகும்படி செய்து தனது செல்வ முற்றுமே பாண்டுரங்கனுக்கு அர்ப்பணமென்று ஒவ்வொருநாளும் மகோற்சவம்போல புஷ்பங்களால் படமூர்த்தியை அலங்கரித்து, தம்பூர், பிட்டில், சார்ந்தா, பண்டரிசாலர், குண்டுசாலர், மிருதங்கம், சிப்ளா, முதலிய வாத்தியங்களுடனே பஜனை செய்துகொண்டிருக்கும்பொழுது அன்று சனிக்கிழமையாதலால், விஷ்ணுதினமென்று விசேஷமாக கொண்டாடப்படும் என்று அந்த ஊரிலுள்ளவரே யன்றி பக்கத்து கிராமத்திலிருப்பவர்களும் போசலபாவாவின் பஜனை கூட்டத்திற்கு வந்தனர். இப்படி வரும்பொழுது ஒரு ஊரிலிருந்து பஜனை கேட்பதற்காக வந்துகொண்டிருக்கும்பொழுது அவர்களுடன் பஜனைகேட்க வந்தவனொருவன், பாம்பு கடிக்க மாண்டனான். உடன் வந்தவர்கள் அவன் மாண்டதைக்கூட நோக்காமல் பஜனைமீதுள்ள ஆசையால் இறந்தவனை ஒரு துணியால் மூடி தூக்கிக்கொண்டு பஜனை கூட்டத்திற்கு வந்து ஒரு மூலையிலே பாம்பால் மாண்ட பிணத்தை

சாத்தி வைத்துவிட்டு பஜனை பாடுவதையே கவனித்து கேட்டுக்கொண்டிருந்தனர். அப்பொழுது போசலபாவாவானவர் யாவரையும் பார்த்து, சாதுக்களே! பகவன் நாம சங்கீர்த்தனம் செய்யுமிடத்தில் தூங்கினால் அதுவே மகாபாதகமாகும். நாமாவளி சொல்லும்பொழுது யாவரும் கரதாளம் போட்டு ஆனந்தக்கூத்தாடவேண்டும். என்று சொல்லிவிட்டு தான் கரதாளம் போட்டுக்கொண்டு "ஜேஜேவிட்டல் ஜேஜேவிட்டல், பாண்டுரங்கன் விட்டல்" என்று தன்னை மறந்து பாடி ஆடினார். அப்பொழுது யாவரும் பகவத்தியானபரராய் நாமாவளி பாடிக்கொண்டு ஆடினார்கள். மூலையில் சாத்தியிருந்த பிணமானது எழுந்து ஆடாததை நோக்கி, போசலபாவாவானவர் இவ்வளவு பாகவத கூட்டத்திலே எவனோ ஒருவன் மூலையில் சாய்ந்து தூங்கிக்கொண்டிருக்கிறானென்று நினைத்து அந்தப்பிணத்தின் முன் சென்று, "ஐயா! இவ்வளவு ஜனங்கள் பகவன் நாம சங்கீர்த்தனம் செய்து ஈடேறும்பொழுது நீர்மாத்திரம் இப்படி மூலையில் சாய்ந்து தூங்கலாமா? எழுந்து கைகொட்டி நாமாவளி பாடு என்று சிப்பிளாவை அந்த பிணத்தின் காதில் படும்படி அடித்து 'ஜேஜே விட்டல்' என்று நாமாவளியை உரக்கச் சொல்லவும், பிணமானது பாண்டுரங்கனுடைய கிருபையால் உயிர்பெற்று கைத்தாளம் போட்டு 'ஜேஜே விட்டல்' என்று பாடி எழுந்தாடவும், இதுகண்டு, பாம்பு கடித்திருந்த இவனைத் தூக்கிக்கொண்டு வந்தவர்கள் பரமானந்தமடைந்து போசலபாவாவைப்பார்த்து, "சுவாமி! இவன் உம்முடைய பஜனையைக்கேட்பதற்கு எம்முடனே வரும்பொழுது இடைவழியில் பாம்பு கடித்து மாண்டனன். நாங்கள் உமது பஜனையினிடமுள்ள ஆசையினால் பிணமான இவனை தூக்கிக்கொண்டு வந்து ஒருவருக்கும் தெரியாமல் மூலையில் சாத்திவைத்துவிட்டு பஜனை கேட்டு முடிந்தபின்பு தூக்கிக்கொண்டு போவோமென்று நினைத்திருந்தோம். உமது அனுக்கிரகத்தால் இறந்த இவன் உயிர்பெற்றெழுந்தனன்" என்று சொல்லவும், போசலபாவா ஆச்சரியத்தை யடைந்து பாண்டுரங்கனுடைய மகிமையைக் கொண்டாடிக்கொண்டிருந்தார். பஜனை கேட்க வந்தவர்களெல்லோரும் போசலபாவாவின் பக்திக்கு வியந்தவராய் அவரை தோத்திரம் பண்ணினார்கள். பஜனை முடிந்து மங்களம் பாடி கர்ப்பூர ஆலாத்தியானதும் யாவர்களும் பிரசாதம் வாங்கிக்கொண்டு தமது வீடுகளுக்குச் சென்றனர்.

மோதக மகாளென்னும் நிலசுவன் அடிமையான ஆசியை ஆட்கொண்ட அத்தியாயம்

போசலபாவா செல்வத்தாலும் நிலங்களின் விளைவாலும் ஏற்றமடைந்து பாண்டுரங்கனை எப்பொழுதும் மறவாது பஜனை செய்துகொண்டு வரும்நாளில், அவர் ஊருக்கடுத்த நாதாமணை

மென்னும் பட்டிணத்திலுள்ளவரும், இவர் பந்துவாக அமர்ந்தவருமான மோதகமகானென்பவருக்கு பால்காட்டில் அவருடைய வயலுக்கு அடுத்த வயலொன்றிருக்கிறது. அந்த வயலுக்குப் பின்னே வேலை செய்வதற்காகத் தனது அடிமையாகிய ஆசி என்பவளை நியமித்திருந்தான். இவள் தனது எஜமானனுடைய கட்டளைப்படி தனது அடிமை வேலையைச்செய்து, வயலைக் காவல் காத்து வரும்போது போசலபாவாவின் பிரபாவங்களைக் கேட்டு பூர்வசன்மத்தில் செய்த புண்ணியமுளதாதலால், போசலபாவாவின் அடிகளில் வீழ்ந்து, "சுவாமி இந்த அடிமை கடைத்தேறுவதற்கு ஏதாவது ஒரு வழி சொல்லவேண்டும்" என்று வேண்டிக் கொள்ளவும், அவர் இவளுடைய சிரத்தையை நினைந்து, "பெண்ணே! நீ சதா பாண்டுரங்கனை இடைவிடாது தியானம் செய்துகொண்டிருக்கவேண்டும். ஏகாதசிதினம் முழுமையும் சாப்பிடாமலிருந்து, துவாதசியன்று சூரியோதயத்திற்குள் குளித்துவிட்டு கஞ்சியோ, ரொட்டியோ செய்து பகவானுக்கு நிவேதனம் செய்த பிறகு நீசாப்பிடவேண்டும். இதுதான் நானுனக்குச்சொல்லவேண்டியது" என்று சொல்லவும், அவளும் அப்படியேசெய்து பகவத்தியானம் செய்துகொண்டு பகலெல்லாம் பண்ணைவேலை பார்த்து, இரவிலே போசலபாவாவின் பஜனையிலே உள்ளமுருகி தன்னை மறந்திருப்பாள். இப்படியிருக்கும்பொழுது இவளது எஜமானனை மோதகமகான் என்பவர் நோயால் மாண்டனர். இவருக்கு இரண்டுசகோதரர்கள் உண்டு. அவர்கள் துர்நடத்தை உள்ளவர்களாக எப்பொழுதுமே சண்டையில் பழக்கமுடையவராதலின், தமயன்மாண்டதும் தம்பியாரிருவரும்சொத்தை மத்தியஸ்தர்கள்முன்னிலையில் பாகம் செய்துகொள்ளவும், தமக்கு அடிமையான 'ஆசி' யென்னும் பெண்ணை அவள் மகளுடனே விற்று பணத்தைப் பங்கிடுவதென்று தீர்மானித்துக் கொள்ளவும், இதையுணர்ந்த ஆசியானவள், அளவுகடந்த துயர் வெள்ளத்தில் ஆழ்ந்தவளாய் போசலபாவாவின் அடிகளில்வீழ்ந்து, 'சுவாமி! என் எஜமானன் மாண்டபின் அவர் தம்பியர் இருவரும் சொத்தை பாகம் செய்துகொண்டு என்னை விற்பனை செய்ய வெண்ணினர். என்னை வாங்குவதற்காக தூரதேசத்திலிருந்து ஒரு தனவந்தன் வந்திருக்கின்றான். அந்தோ! தேவனைப் பிரிந்து ஒருநாள் எப்படியிருந்திருப்பேன்? உம்முடைய பஜனையைக் கேளாது எப்படி உணவுசெய்வேன்? என்று அழும்பொழுது போசலபாவா அவளைத்தேற்றி, நீ எஜமானன் அடிமைத் தன்மையைக் கடந்துவிடாது அவர்கள் யாருக்கு உன்னைவிற்றாலும் அவருடன் சென்று பாண்டுரங்களை மறவாமல் தியானம் செய்துகொண்டிரு" என்று சொல்லவும் மனம் தாளாதவளாய், "பாண்டுரங்கனை தியானித்துக்கொண்டிருக்கிறேன். உம்மைப் பிரிந்து உயிர் தரியேன்" என்றுசொல்லிவிட்டு, இவர் மனைவியாகிய மமதாபாயின் முன்னே சென்று,

அவளடியில் வீழ்ந்து, தனது குறையைச் சொல்லித் தன்னைப் போசலபாவாவே கிரயத்திற்கு வாங்கிக் கொள்ளும்படி கிருபை செய்யவேண்டும்" என்று வேண்டிக்கொண்டாள். மமதாபாய் ஆசியின் வார்த்தையைக் கேட்டு "அப்படியே செய்கிறேன்" என்று சொல்லி அவளை அனுப்பிவிட்டு தன் கணவன் வந்ததும், "ஆசியை நாமே கிரயத்திற்கு வாங்கி விடுவோம்" என்று சொல்லவும், அவரும் அதற்கிணங்கி புராதன கடத்திற்கு வந்து போதகமகானது சோதரரைப் பார்த்து, "ஆசி என்னும் உங்கள் அடிமையை நீங்கள் விற்பதாகக் கேள்விப்பட்டேன். அவளுக்கு என்ன கிரயம் கேட்கிறீர்களோ அந்தக் கிரயத்தை யானே தருகிறேன்" என்று சொல்லவும், அவர்கள் கோபத்துடனே உமக்கு இவளை என்னவிலை கொடுப்பினும் தரமாட்டோம். உம்மாலே இவள் ஞானபைத்தியம் கொண்டனள்; நீர்போம்" என்று சொல்லிவிட்டு தூரதேசத்திலிருந்து வந்திருந்த வொரு நிலவானுக்கு முப்பது விராகன் என்று விலைகூறி விற்கவும், ஆசி ஆற்றுதவளாய் அழுதுகொண்டு போசலபாவாவின் அடிகளில் வீழ்ந்தாள். அவர் அந்த ஆசியைப்பார்த்து, "என்னால் உன்னைக் காக்க முடியாதுபோயினும், எனது தந்தையாகிய பண்டரி நாதனுக்கு உன்னை அடிமையாக்கி விடுகிறேன்." என்று சொல்லிவிட்டு தனது ஊருக்கு வந்து, "ஆசியைக் காக்கவேண்டும் கடவுளே என்று பாண்டுரங்களை பஜிக்கும்போது பகவான் ஆசிக்கு பரமபதமளிக்க விரும்பி, ஒரு வேதியர் உருவத்தையடைந்து வந்து ஆசியையும் அவள் பெண்ணையும் பார்த்து நீ பாண்டுரங்கனுக்கு அடிமையாதலால், அவனிடம் வாவென்று அழைக்கவும், அக்கணத்து ஆசியும் அவள் மகளும் மாண்டனளாக பரமபதம் சென்றனள். இவளை விலைக்கு வாங்கியவன் மோதகமகானின் சோதரர்களிடம் வந்து, "உங்கள் அடிமையை விற்று இன்னம் அரை நாழிகைகூட ஆகவில்லை; அவளும் அவள் மகளும் மாண்டனர். ஆதலால், நாங்கள் இவளுக்குக் கிரயமாகக் கொடுத்த முப்பது விராகனையுந் தந்துவிடுங்கள்" என்று வாதாடி விராகன்களைப் பெற்றுக்கொண்டு தமது ஊரை நாடிச்சென்றனர்.

இப்படியிருக்க, ஆசியானவள் பரமபதம் சேர்ந்த நிலைமை பகவான் போசலபாவாவினிடம் சொல்லி விட்டு பாண்டுரங்கன் பண்டரிபுரத்திற்கு எழுந்தருளவும், போசலபாவா பகவான் தன் வேண்டுகோளுக்காக ஆசிக்கு பரமபதம் தந்ததை நினைந்து மகிழ்ச்சியடைந்திருந்தார். இப்படி இருக்கும்பொழுது அந்த ஊரிலிருந்து பஞ்சமனான இருளன் என்னும் புலையன், போசலபாவாவினிடம்வந்து தண்டனிட்டு, "சுவாமி! அடியேனுக்கு ஞானோபதேசம் செய்யவேண்டும்" என்று பலநாளாகப் பிரார்த்தித்துக் கொண்டிருந்தனன். போசலபாவாவானவர், இவன் தன்னிடம் நாள் தவறாது வந்து வேண்டிக்கொள்ளும்பொழுது, பாண்டுரங்

கனது நியமனமிருந்தால், உபதேசம் செய்வோமென்று நினைந்து பகவானை தியானித்தார். அந்தக்கணமே பகவான் போசலபாவாவின் முன்னே தோன்றி, "நண்பா! நீ நினைந்ததை நானறிவேன். பஞ்சமனுக்கு உபதேசம் செய்யலாமா என்னும் சந்தேகம் உனக்கிருக்கிறது. என்னை வணங்குவதற்கு இன்ன சாதியான் தான் உரியவனென்பதில்லை. பிராமணன் முதல் பஞ்சமன் வரை உபதேசம் பெறத் தகுதியுடையவனே; ஆனால், உபதேசம் பெற வேண்டியவன் குருமொழி கடவாதவனா? வைராக்கிய முடையவனா? என்பதை மாத்திரம் அறிந்துகொண்டு உபதேசம் செய்ய வேண்டும். இந்த பஞ்சமனுக்கு உன்னிடம் விசுவாச மிருக்கிறதா? உன் வார்த்தைக்கு கீழ்ப்படிந்து நடக்கின்றனா? இதை அறிந்து உபதேசியும். இதற்கு நான் ஒன்று சொல்லுகிறேன். அதாவது, உனது வயலிலிருக்கும் தெய்வத்திற்குப் பூசை போடுகிறேனென்று சொல்லி உம்மிடமுள்ள பசு வொன்றை அந்த புலையனிடம் கொடுத்து அதைக் கொன்று மாமிசத்தைக் கொணர்ந்து கொடுக்கும்படி சொல்லும். அதோடு இது ஒருவருக்கும் தெரியப்படாதென்றும், ரகசியமென்றும் சொல்லும். அவன் உமது சொல்லைத் தட்டாமல், ரகசியத்தைவெளியாக்காமல் இருந்தால், அவனை நீர் உபதேசத்திற்கு உரியவனென்று மதித்துக் கொள்ளும். அன்றியும், அவன் தந்த மாமிசத்தைப் பக்குவமாய்ச் சமைத்து கறியாக்கி ரொட்டி முதலியவற்றுடனே கழனிக்கு வந்து பூசைபோடுவதுபோல நடித்து, அந்த மாமிசம் தின்னக் கூடியவர்களை அழைத்து உணவு செய்யும்படி சொல்லும். அப்பொழுது இவன் நிலைமை தெரியும். நீர் வைஷ்ணவராக யிருந்தும் தேவதாந்திர பஜனம் செய்யத் தகாதேயெனில், அது நீர் செய்கின்றதில்லை. கோஹத்தியின் பாபம் வருமோவென்று நீர் நினைக்கவேண்டாம். உம்மால் கொல்லப்பட்ட பசு மீண்டும் உயிருடனே அமையும். இது விஷயமான கவலை உமக்கு வேண்டாம்" என்றுசொல்லிமறையவும், போசலபாவா மறுநாள் தன்னை நாடிவந்து வணங்கி உபதேசம் செய்துவைக்க வேண்டுமென்று கேட்கும் பஞ்சமனைப் பார்த்து, "உனக்கு உபதேசம் செய்கிறேன் எனது வயலிலுள்ள தேவதைக்கு பூசை போடவேண்டும். நான் ஒருபசு தருகிறேன்; அதைக் கொன்று அதின்மாமிசம்பூராவையும் என்னிடம்கொணர்ந்து தரவேண்டும். நீ பசுவை அறுத்து தந்ததாக யாரிடமும் சொல்லப்படாது" என்று சொல்லி, பசுவையவிழ்த்து பஞ்சமன்கையில் கொடுக்கவும், அவன் அதைக்கொன்று, தலையையும் கால்களையும் பத்திரமாக ஓரிடத்திலே தோண்டிபுதைத்து விட்டு மற்ற மாமிசத்தைக்கொணர்ந்து போசல பாவாவினிடம் கொடுக்கவும், பகவான் நியமித்தபடியே பக்குவப்படுத்தி புளை இன்னுமோராகிய யாவரையும் நினைத்துக்கொண்டு வயலுக்கு வந்து பூசை போடுவதாகப் பாவனைசெய்து யாவரையும் வரிசை

யாக உட்காரவைத்து, ரொட்டியும் மாமிசவர்க்கங்களும் பரிமாற அவர்கள் யாவரும் வயிறுபுடைக்க தின்றபின்னே மீதமிருப்பதை புலையனுக்கும் போட்டு, நாளைவா உனக்கு உபதேசம் செய்கிறேன் என்று சொல்லியனுப்பி தானும் தனதுவீட்டிற்குவந்து பகவானை பஜித்துக்கொண்டிருந்தார்.

இப்படியிருக்க மறுநாள் காலையிலே பஞ்சமனை இருளன், மேலே ஒரு போர்வையைப் போர்த்திக்கொண்டு ஒரு குடியானவனுடைய வீட்டிற்குள்ளே நுழையவும், அவன், 'அடே! பறப்பயலே! நீ தெருவிலே நின்றுகொண்டிருப்பதைவிட்டு, வீட்டில் வருகிறாயா? உனது அகம்பாவமென்ன" என்று கேட்கவும், "நீர் என்னைப்பார்க்கிலும் என்ன உயர்வுபடைத்தவர்? நான் மாடு தின்பதினாலேயோ இழிந்தவன்? நேற்று நீங்களும் மாட்டுக்கறி தின்றீர்களே? நேற்று போசலபாவாவென்பவர், கழனியிலே நடத்திய பூசைக்கு சமைத்து வைத்தது பசுமாட்டிறைச்சி யல்லவா? அதை ருசியோடு தின்றுவிட்டபின் எங்களுக்கு நீங்கள் எப்படி மேலானவர்களா?" என்று சொல்லவும், இந்த வார்த்தையைக் கேட்டு பலருக்கும் அறிவிக்கவும், யாவரும் ஒன்றாய்க்கூடி பஞ்சமனைப் பார்த்து, நீ சொன்னது உண்மையா? உண்மை யில்லாது போனால், உன்னைக் கொன்றுவிடுவோம்" என்றுசொல்ல, "ஆண்டைமாரே! என் குலதேவதையின் மேலே ஆணை, உங்களுக்குக் காட்டுவதற்கென்றே அந்த பசுவின் தலையையும் கால்களையும் பத்திரமாகப் புதைத்து வைத்திருக்கிறேன். அவருடைய தொழுவிலேயுள்ள செவலைப்பசு தொழுவிலிருக்கிறதா? முதலில் அதைப் போய்ப் பாருங்கள். அதன் தோலையும் வைத்திருக்கிறேன்" என்று சொல்லவும், இதைக்கேட்டவுடனே யாவரும் திகைத்து, "போசலபாவா பெரிய வேஷக்காரனாய் நடித்து நம்மையெல்லாம் பசுமாமிசம் புசிக்கச்செய்து பிரஷ்டராக்கிவிட்டான்; இந்த புலையன் சொன்னபடி அவன் செய்திருந்தால், அவனைக் கழனியின் அடிமடையிலே தோண்டிப் புதைத்துவிட்டு நாமும் பிராயச்சித்தம் செய்துகொண்டு பாபத்தைப் போக்கிக்கொள்ளவேண்டும்" என்று முடிவு செய்துகொண்டு போசலபாவாவின் வீட்டிற்கு வந்து அவரைக் கண்டு, "நீர்தானா உண்மை வைஷ்ணவன்? பசுவைக் கொன்று எங்களுக்கு விருந்து செய்துவைத்து எங்களைக் கெடுத்தீரோ? என்ன பாவி நீங்கள்" என்று சொல்லவும், அவர் பகவானை தியானித்துக்கொண்டு ஒன்றும் சொல்லாதிருந்தனர்.

அப்பொழுது யாவரும் ஒன்றுகூடி புலையனை நோக்கி, "இருளா! இவர் நாங்கள் கேட்கும் கேள்விக்கு ஒன்றும் பதில் சொல்லாதிருக்கிறார். நீ அந்த பசுவின் தலையையும் கால்களையும் காட்டு அதன்பிறகு நாங்கள் அவருக்கு தக்க சிக்ஷைசெய்கிறோம்" என்று சொல்லவும், இருளன் அவர்களை அழைத்துக்கொண்டு தான் முன்னே புதைத்திருந்த இடத்தைத் தோண்டி 'இதோ

பாருங்கள்' என்று காட்டவும், அது ஆட்டுத்தலையும் ஆட்டுக் கால்களுமாக யிருந்தது. இதைக்கண்டு யாவரும் அந்தப் புலையனைக் கட்டி யடித்தனர். அப்பொழுது அவன், "இது போகட்டும், தொழுவிலே செவலைப்பசு யிருக்கிறதா? அதைப் போய்ப் பாருங்கள்" என்று வேண்டிக்கொள்ளவும், யாவரும் போசலபாவாவின் வீட்டுவாயலுக்கு புலையனையும் அழைத்து வந்து நிறுத்திக் கொண்டு தொழுவில் வந்து பார்க்கவும், செவலைப்பசு பசுக்கள் கூட்டத்திலே கட்டப்பட்டிருப்பதைக் கண்டு, புலிப்போல் புலையன் மீது பாய்ந்துவரவும் போசலபாவா 'இவர்கள் இவனைக் கொன்று விடுவார்கள்' என்று நினைத்து, அவர்கள் அடியில் வீழ்ந்து, "ஐயா! இவனை விட்டுவிடுங்கள். இழிந்தவனுதலால் தவறு செய்துவிட்டான்" என்று வேண்டிக்கொள்ளவும், இவருடைய கருணையை நினைந்து யாவரும் அவனை விட்டுவிட்டு போசலபாவாவைப் பணிந்து "இந்த புலையன் சொல்லைக்கேட்டு, உமது திருவடிகளிலே அபசாரப்பட்டோம். மன்னிக்கவேண்டும்" என்று பிரார்த்தித்துவிட்டு தமது வீடுகளுக்குச் சென்றனர். புலையன் இன்று தெய்வச்செயலாய் நான் தப்பினேனென்று நினைந்து அந்த ஊரிலேயே இனி யிருக்கப்படாதென்று ஓடிவிட்டான்.

போசலபாவா ஹரிகீர்த்தனம் செய்துகொண்டுவந்த விருந்தினரை பாண்டுரங்கனைப் பூசித்துவரும்பொழுது, மீண்டும் அந்த நாடு மழையின்றி பஞ்சம் வந்தது. போசலபாவா முன்போல் ஏழைகளுக்குத் தம்மிடமிருந்த தானியங்களையெல்லாம் கொடுத்துவிட்டு விரைமுதல்கூட இல்லாமலிருக்கும்பொழுது மழை பெய்தது. யாவரும் வயல்களில் விதை விதைக்க ஆரம்பித்தனர். போசலபாவா கடனுக சோளவிரை வாங்கி தனது தோட்டத்திலே விதைத்துவிட்டு வீட்டிற்கு வந்து சேரவும், சில சாதுக்கள் பசியால் வருந்தி, போசலபாவாவைப் பார்த்து நாங்கள் பண்டரிபுரத்திற்கு யாத்திரை போகிறோம். பசி அதிகமாயிருக்கிறதென்று சொல்லவும், அவர்களுக்கு ஆசனமளித்துவிட்டு தன் வீட்டில் சென்று ஆராய்ந்து பார்க்கவும், சிவந்துபோன புழுத்த சோளமிருந்தது. அதைப் பார்த்துவிட்டு இந்த புழுத்த சோளத்தை சாதுக்களுக்கெப்படி கொடுப்பதென்று நினைந்து தனது மைந்தனை ஏமாஜியை அழைத்து, "இந்த புழுத்த சோளத்தை சாதுக்களுக்கு ஆகாரமாகக் கொடுக்கப்படாது. நமது சோளத் தோட்டத்திலே இன்று விதைத்திருந்ததைக் கூட்டிப் புதைத்த தானியத்தை யெடுத்துவா" வென்று சொல்லவும், 'தந்தை சொல்மிக்க மந்திரமில்லை' என்று எண்ணும் ஏமாஜி தன் தோட்டத்திற்குப் போய் விதைகளைக் கூட்டி புடைத்துக் கொண்டுவந்து சாதுக்களுக்கு உணவுசெய்தற்குரிய மாவாக்கி ரொட்டி சுடுவதற்குரிய பக்குவமாய்க் கொடுக்க, அவர்கள் அதைப் பெற்றுக்கொண்டு ரொட்டி சுட்டு தின்றுப்போயினர்.

போசலபாவா கொல்லையில் விதைத்திருந்ததை அடுத்து வரச்சொல்லி சாதுக்களை உபசரித்து அனுப்பிவிட்டுப் புழுத்த சோளத்தைக் கொண்டுபோய்க் கொல்லையிலே விதைத்துவிட்டு வந்தனர். விரை ஒன்றுபோட சுரை ஒன்று முளைத்தது என்பதற்கு ஏற்ப, இவை விதைத்த சோளமெல்லாம் சுரையாய் கொடி வீசி படர்ந்து பூத்து பெரிய பெரிய காய்களாகக் காய்த்தன. அந்த சுரைக்காயை போசலபாவா ஆச்சரியத்துடன் அறுத்துப் பார்க்க, அந்த சுரக்காயில் குருணிகோதுமை யடைந்திருந்தது. இதைக்கண்டு ஆச்சரியத்தையடைந்து, அந்த கொல்லையில் காய்த்திருந்த சுரக்காய்கள் யாவற்றையும் பறித்து இரண்டு மூன்று காயை மாத்திரம் வைத்துக்கொண்டு மற்றவற்றை யாவரும் காணக் களத்தில் மலைபோல் குவித்து உடைக்கும்பொழுது பதினாயிரம் கலன் கோதுமை யிருந்தது. இதுகள் யாவும் பண்டரிநாதனுடையதென்று களஞ்சியத்திற்கு அனுப்பிவிட்டுத் தான் பகவன்நாம சங்கீர்த்தனம் செய்துகொண்டிருந்தனர். இதைக்கண்ட அவ்வூரினர் யாவரும் ஆச்சரியமடைந்து பாகவதரின் வைபவத்தைக் கொண்டாடினார்கள். அப்பொழுது அவ்வூருக்கு அரசனான அருக்கமன்னன் அறிந்து, போசலபாவா வீட்டிற்குவந்து அவரிடமிருந்த சுரக்காய்களில் ஒன்றைவாங்கி உடைத்துப் பார்த்து, அது முற்றும் சோளமாக நிரம்பியிருப்பதைக்கண்டு இவர் இந்திரசாலம் கற்றவர்; இவரால் உலகம் ஏமாற்றமடையுமென்று நினைத்துத் தனது அரண்மனைக்கு அழைத்துவந்து பிரஷ்டனுக்க நினைத்து, நீர் என் வீட்டில் உண்ணவேண்டுமென்று, கோவின் இறைச்சியை சமைத்து ஒரு தட்டத்திலே வைத்து மேலேமூடி போசலபாவாவின் முன்னே வைத்து, "இதை உணவு செய்யும்" என்று சொல்ல, அவர் பண்டரிநாதனை தியானித்துக்கொண்டு தட்டத்தின் மேலே மூடியிருந்த துணியைத் திறக்கவும், அந்த மாமிச பக்ஷணம் திருத்துழாய் பிரகாசித்துக் கொண்டிருந்தது. இதைக் கண்ட அருக்கமன்னவன் அதிசயமடைந்து போசலபாவாவிற்கு மண்டியிட்டு சலாம் செய்து உமக்கு வேண்டியதை என்னிடம் கேளும் என்று சொல்லவும், போசலபாவாவானவர், அரசே! எனக்குப் பெருநிதி யிருக்கிறது. அது இருக்க வேறொன்றும் தேவையில்லை" எனக்கூறி, அரசனிடம் விடைபெற்றுத் தனது வீட்டிற்கு எழுந்தருளிவந்து பண்டரிநாதனை தியானம் செய்துகொண்டிருந்து முடிவில் தனது பத்தினியுடனே நித்திய சூரிகள் எதிர்கொண்டழைக்க, பரமபதத்திற்கு எழுந்தருளினார்.

வாழ்த்துகவி கொண்டல்தரும் குருகைவாழ்வோன் குளிமலர்ப் பதங்கள்வாழி
தொண்டனு மெதிராஜப்பேர் தூயவ் அடிகள்வாழி
பண்டரிபுரத்தோ னன்றேன் பரமபாகவதர் வாழி
புண்டர மணிந்தமேனி போசல பாவாவாழி.

போசலபாவா சரித்திரம் முற்றிற்று.

ஸ்ரீ

ஸ்ரீபாண்டுரங்காய நம:

சோகாமேளர் சரித்திரம்

ஆழ்வார் திருநகரி

சிங்கம். ஸ்ரீனிவாச அய்யங்கார் எழுதியது.

கலி

பஞ்சமர் தன்குலத்துதித்து யிளமையிலே பரம்பொருளை பார்க்கவேண்டி
நெஞ்சகத்து நினைந்து பல திவ்விய தேசங்களோடு நினைவினோடு
மஞ்சமரும் பொழிலரங்க மாநகரில் வைணவராய் மருவிவந்த
கஞ்சமலர்முக சோகாமேளர் திருத்தொண்டதனைக் கழறுவாமால்.

திருமகளும் நிலமகளும் தமது கலைவனுடைய உரையிடமென்று களிப்புடன் செழிக்கும் பண்டரிபுரமானது, வேதியர்களின் வேதகோஷ்டமும், பாகவதர்களுடைய நாதகோஷ்டமும் நீங்காதது. அன்றியும் கடவுள் யாருக்கும் சமமானவன். உயர்ந்த சாதியாராகிய அந்தணரே தன்னை வணங்குதற்கு உரியவர். மற்றையோர்கள் அருகே வரத்தகாதவர்கள் என்பதைக் காட்டுகின்ற மற்றைய திவ்விய தேசத்திலுள்ள ஆலயங்கள் போலில்லாது யாவரும் தன்னை தழுவுவராய், எழுந்தருளியிருக்கும் மூர்த்தி விசேஷத்தோடு கூடியது. அன்றியும், பக்த கோடிகளென்றால், அவர்கள் பாடும் பாட்டு முற்றும் அந்தத் தேவனையே சார்ந்ததாய் அப்பாடலைக் கேட்கும் பொழுதே எல்லோருடைய மனதையும் பக்தியில் ஈடுபடும்படி செய்யத் தகுந்ததாம். பாண்டுரங்கனென்றாலே யார் பரவசமடையாதவர்? சவுலப்பியம் போல சவுலப்பியம் வேறு எந்த தெய்வத்தினிடம் காணலாம் என்று அடியவர் கொண்டாடும் தகுதியுடையதென்று வேதியர் யாகமும், சாதுக்களின் யோகமும் பாகவதர்களின் பஜனையும், அடியவர்களின் ஆட்டமும் கூடி, பரவசமாக்கும் தகுதியுடையது. இந்த பண்டரிபுரத்தில் எழுந்தருளியிருக்கும் பாண்டுரங்கன் எப்படி யாவரும் தன்னைத்தழுவி வணங்கலாமென்று எழுந்தருளி யிருக்கின்றாரோ அதேபோல, அந்த திவ்வியதேசத்தில் பிறந்த எந்த சாதியாரும் பாண்டுரங்கனுக்கு ஆட்பட்ட அன்பராய், அவரை ஆலயத்திற்சென்று புறத்தே தழுவுவதோடு தமது வீட்டிலிருந்தும் அகத்தே பாண்டுரங்கனைத் தழுவும் பாவலர்களாக நிறைந்தது. இந்த பண்டரிபுரத்தில் பஞ்சமசாதியிலே சிப்பியிலிருந்து முத்து உதிப்பதுபோலவும், சேற்றிலிருந்து தாமரை தோற்றுவது போலவும், கள்ளியிலிருந்து காரகில் கட்டை உண்டாவதுபோலவும், கொடிய விஷ சர்ப்பத்தினிடம் நாகரத்தினம் உண்டாவது போலவும், சோகாமேளர் என்று ஒருவரிருந்தார். பிறந்த பத்தாவது வயதி

லேயே தனது குலத்தின் இழிவை நினைத்து வருத்தமுற்று, "அந்தோ! மானிடராகத் தோன்றியவ ரெல்லோரும், ஈஸ்வரனுடைய குழந்தைக ளென்றிருக்க, இதில் ஒருவன் உயர்ந்தவனென்றும், வேறு ஒருவனைத் தாழ்ந்த குலத்தவனாய்க் கருதித் தனது பக்கத்தேகூட வராதபடி நாயினும் கழுதையினும் கடைப்பட்டு, எவ்வளவு தூரம் ஒதுங்கி நின்றாலும் 'இன்னும் ஒதுங்கு' என்று வாயில் வந்தபடி பேசியும், கல்லையும் மண்ணையும் எடுத்து மேலே எறிந்தும், வருத்தும் இந்த குல ஈனம் எக்காலத்தி லுண்டாயது? கடவுளுடைய வாய்மொழியாகிய வேதம் ஒன்றிருக்கிறதென்றும்; அது உயர்ந்தவர்களென்று தம்மைச் சொல்லிக்கொள்ளும் அந்தணர் ஒருவரிருக்க உரியதென்றும்; அந்த வேதத்திலே தான் மந்திரங்கள் இருக்கிறதென்றும், அந்த மந்திரங்களினாலே தான் ஆலயப்பிரதிஷ்டை செய்யவேண்டுமென்றும்; அந்த வேதமந்திரங்களினாலேதான் ஈஸ்வரனை வணங்கவேண்டுமென்றும், அப்படி வணங்கியவனுக்கே ஈஸ்வரனுடைய அருள் கிடைக்குமென்றும்; சொல்லுகிறார்களே? அப்படியானால், இந்த உலகமும் இதிலுள்ள பொருள்களும் அப்பொருள்களின் பயனை அனுபவிக்கும் மானிடரும் சர்வேஸ்வரனுடைய கருணையால் தோன்றியவை யென்றும், உலகத்தில் காணப்படும் உயிர்கள் யாவும் சர்வேஸ்வரனுடைய ஆலயமென்றும் ஒவ்வொருவனிடத்திலும் சர்வேஸ்வரன் உள்ளொளியாய்க் கலந்து நின்று எவ்வுயிரையும் ஆட்டிவைக்கிறானென்றும், அவன் பஞ்சமனிடத்தும் பிராமணனிடத்தும் ஒத்த அன்பே வைப்பவனென்றும், ஆனால் அருளிலார் மனத்து முள்ளிருப்பது போலவும், அருளுடையார் மனத்து தாமரைமலர் இருப்பதுபோலவும், இருப்பானென்றும் வேதவாக்கியங்கள் கூறுகிறதாக பெரியவர் பேசிக்கொள்ளுகிறார்களே? இதைக் கவனிக்கும்போது, மானிடர்களுக்குள் இந்த வித்தியாசமான சாதி சண்டை வந்ததன்றி, கடவுளுக்கு இந்த வித்தியாசம் இல்லைபோல் தோன்றுகிறது. கடவுள் பாராட்டும் வித்தியாசம் இரண்டு என்று கூறுவதில்; ஒன்று அருளுடைமையும் மற்றொன்று அருளில்லாமையுமேயாகும். அந்த முறையில் கடவுள், அருளுள்ளவனிடத்து மிக்க அன்பும், அருளில்லானிடத்து அன்பில்லாமையுமே தனது கடனாகக் கொண்டிருக்கிறாரென்று தான் தெரிகிறது. பஞ்சமனாயினும் அவன் அருளுடையவனாகில், அவன் ஈஸ்வரனுடைய அருளுக்கிலக்கானவன் என்றும், அந்தணனாயினும் அருளில்லாது போவானேயானால், அவன் ஈஸ்வரனுடைய அருளைப்பெறாதவனென்றும் தோன்றுகிறது. இதை நோக்கும்பொழுது, இந்தப் பழைய சாதிவித்தியாசம் மானிடவர்க்கத்தினருக்கே தோன்றி, இதில் உயர்ந்தவனே கடவுளை வணங்குவதற்குரியனென்றும், தாழ்ந்தவன் கடவுளை வணங்காதவனென்றும், ஏற்படுத்திக்கொண்ட

தாகத் தோன்றுகிறது. அதினும் தாழ்ந்தவர் வணங்கும் கடவுள் வேறு, உயர்ந்தவர் வணங்கும் கடவுள் வேறு என்றும், உயர்ந்தவர் தாழ்ந்தவர் வணங்கும் கடவுளை வணங்கத் தகாதவர்களென்றும் சொல்லி, மானிடரில் பலகோடி சாதிகள் விரிந்ததுபோல தெய்வங்களும் பலவாய் விரிந்து இவைகளுள் அருளுடைய தெய்வங்கள் பலவும், அருளில்லாத தெய்வங்கள் பலவுமாகப் பரவி, அருளுடைய தெய்வங்களே அந்தணர் முதலிய மேல் குலத்தோர்கள் வணங்கத்தகுந்ததாகவும், அருளில்லாத தெய்வங்கள் எம்போன்ற பஞ்சமர் முதலிய கீழ் குலத்தோர் வணங்கத் தகுந்ததாகச் சொல்லி, அருள்பெருங் கடவுளர்க்கு பூசையென்று பெயரிட்டு அபிஷேக அலங்கார தூபதீப நைவேத்தியங்களை மந்திரங்களோடு செய்தும் அருளில் கடவுளுக்கு கொடையில்லையேல் பொங்கல் என்று பெயரிட்டு எங்கும் நிறைந்த கடவுளை எங்கேயோ ஒரு மலையிலிருக்கும் பாடனென்றும், பனைமரத்திலிருக்கும் பனைமரத்தானென்றும், காட்டுதுரையும்சங்கிலியென்று விகாரமான பெயரிட்டு ஒரு செங்கல்லை நட்டு இல்லையேல், வாயில் ஒரு குழந்தையை மென்று தின்றுகொண்டும், மடியில் ஒரு குழந்தையைக் கட்டிக்கொண்டும், ஒரு குழந்தையைக் கீழே கிடத்தி மிதித்துக்கொண்டும், கண்களில் தீப்பொறி பரப்பி யிருப்பது போல உள்ளத்தோற்றம் தோன்றுமாறு குயவனிடம் செய்யச் சொல்லி, அதன் கையில் கொலை செய்வதற்குரியவைகளையும் பிடித்தபடியே சமைத்த உருவத்திற்கு மாடன் பிடாரி சங்கிலியென்று பெயர் வைத்து தேவதை கோவிலிடமென்று காலியாயிருக்கும் ஊர் பொதுவிடத்தில் வைத்து பூசாரி யென்பவனால் சாமியை வருத்தி அந்த சிலையில் புகுத்துவதாகச் சொல்லி, கள்ளு சாராயம் என்பதாகிய மயக்கம்தரும் மதுவைக் குடித்துவிட்டு சாமியை வருத்துகின்ற பாடலை வீரச்சுவை தோன்ற அடிக்கொண்டு உடுக்கை உரிமி முதலிய வாத்தியங்களுடன் பாடியும், சுவாமி வந்ததென்று ஒருவன் குடிவெறியால் ஆடி விழுந்து பேசும் வார்த்தையை நம்பி பாடலை நிறுத்திவிட்டு பூசை போடுகிறோமென்று அபிஷேகத்திற்குப் பதிலாக மாமிசநிறமுள்ள மஞ்சளைக் கழுத்திலும் நெற்றியிலும் மார்பிலும் அப்பிவிட்டு செவ்வரளி மாலையை அந்த உருவத்தின் கழுத்தில் போட்டு பெண்தேவதையானால் தோம்புச் சேலையையும், ஆண்தேவதையானால் சாய வேஷ்டியையும் இடையில் உடுத்தி அலங்காரம்செய்தும், பார்த்த உயிர் நடுங்க பெரிய வாளை அந்த உருவத்தின் மேலே சாத்தி வைத்து அதன் முன்னே வாழையிலையைப் பரப்பி விரித்து அதன்மேல் சாராயக்குப்பி, புகையிலை, சுருட்டு, பொடி, முட்டை, கோழி முட்டை, புண்ணாக்கு, கருப்புக்கட்டி, பொரி, கடலை, தேங்காய், பழம், வெற்றிலை, பாக்கு இவைகளைப் பரப்பி வைத்து, அந்த தெய்வத்திற்கு பொங்கலிடுகிறேனென்று அதன்முன்னே

வரிசையாகப் பொங்கல் பானையை வைத்து உமியை மாத்திரம் வேறுபடுத்திய அரிசியை களைந்த கழுவு நீரையே பொங்க விடுவதற்குரிய உலைநீராக வார்த்து அது கொதித்ததும் கழுவிய அரிசியை அதில்போட்டு கொதிக்கும்பொழுதே அந்தப்பானையை முந்தியே கொஞ்சம் கிழக்கே சரியவைத்திருப்பதால், பொங்கி நுரையாகக் கிழக்குமுகமாகவழிவதைக்கண்டு, குலவையிட்டு பால் பொங்கிற்று, கிழக்கேவழிந்தது. தெய்வம் பூசையை ஏற்றுக்கொண்டது, இந்த வருஷம் பூராவும் நமக்கு க்ஷேமந்தான். நமது குழந்தை குட்டி, மாடு கன்று, ஆடு இவைகளெல்லாம் க்ஷேமமாய் வாழும் என்று சொல்லிக்கொண் டிருக்கும்பொழுது பூசாரியானவன், சாராயத்தைக் குடித்துவிட்டு ஆவேசம் வந்ததென்று உரக்க சத்தமிட்டு, “அடே மக்களா!” என்று சொல்லும்பொழுதே கர்ப்பம் கலங்கும்படி கூவி ஆடும்பொழுது அவனையேதெய்வமென்று யாரும் அவன் முன்னே விழுந்து பணிந்து, “சாமி! கோபிக்கப் படாது. ஏழைகளைக் காக்கவேண்டும். எங்கள் குழந்தை குட்டிகளை எல்லாம் உன்னிடமே ஒப்புவித்திருக்கிறோம் நீயே காக்கவேண்டும்” என்று பிரார்த்தித்து அந்த குடி வெறியால் ஆடுகின்றவனுக்கு தூபப்புகை காட்டி, சூடன்கொளுத்திவைத்து “சாமிவரம் கொடுக்கவேண்டும்” என்று கேட்க, இந்த பூசாரியானவன். அடுத்த வருஷத்திற்கு மிகுந்த வருமானம் வரவேண்டும் என்று நினைத்து, சாமி கோபமடைந்ததாக கர்ச்சித்து பல்லைக் கடித்து, “அடே பயல்கள்! இந்த வருஷம் பூராவும் என்னை நினைத்தீர்களா? எனக்குப் போட்ட பூசையை நான் பெற்றுக் கொண்டேனென்று நினைக்கிறீர்களா? போன வருஷம் வைத்த சாராயத்தில் பாதிகூட இந்த வருஷத்தில் இல்லை. எங்கடா கோழிகுஞ்சு? கோழி குஞ்சியின் கழுத்தைத்திருகுவதுபோல உங்கள் கழுத்தைத் திருகிவிடுகிறேன். உங்களுக்கு வந்த வாந்தி பேதி மகாமாரி மாரியாத்தா இவர்களை இந்த ஊருக்கே வராதபடி தடுத்து காத்துக்கொண்டிருக்கிறேனே? எனக்கு ஒரு பெரியபன்றி வாங்கி இடுவதற்கு மனமில்லாது போய்விட்டது பாருங்கள். இந்த வருஷம் ஊரையே அழித்துவிடுகிறேன்” என்று இடி முழக்கினாற்போல பேசும்பொழுது, வீட்டிற்கு தலைக்கட்டாக வரி பெறுத்து ஐந்நூறு அறுநூறு என்று சேர்த்து ஆடம்பரமாய் செய்த பூசையை ஏற்றுக்கொள்ளாது இந்த ஊரையே அழித்து விடுவேன் என்பதை வரமாய்க் கொடுத்தும், பூசையிட்டவர் யாவரும் நடுநடுங்கி எல்லோரும் அந்த பூசாரியின் அடியில் விழுந்து, “சாமி! கோபிக்கப்படாது. எங்களைக் காக்கவேண்டும். அடுத்த வருஷம் தலைக்கட்டுக்கு இன்னொரு பங்கு அதிகமாக வரிவைத்து இந்த வருஷத்திற்கு இரண்டுமடங்கு அதிகமாக பூசை போடுகிறோம். சாராயத்தை சாடியோடு நிறைந்துவைக்கிறோம் என்று சொல்ல, “எங்கே பலி” என்று உரத்த சப்தமிடும்பொழுது வீட்

டிற்கு ஒரு ஆடுவீதம் வரிசையாக ஆடுகளைக் கொணர்ந்து நிறுத்தி, சாமியுள்ள சாந்நியமானது நிற்கவும் பூசாரியினிடம் வந்திருந்த சாமியும் போய்விடுகிறது. சாமி வந்த பூசாரி ஆட்டுக்கல்லுக்கு ஆசைகொண்டு ஓடுகிறான். பூசை போட்டவரும் சாமி வரம் கொடுக்காது போனாலும், நமது பூசையை பெற்றுக்கொண்டதாக பலி எங்கேயென்று கேட்டுப்போனதுவே போதுமானது என்று, அந்த கொல்லைக்கார தெய்வங்களுக்கு ஆடுகளை பலியிட்டு விட்டு அந்தோ! தெய்வ வணக்கமும் முடிந்தது. நமக்கு க்ஷேமம் பிறந்தது என்று மகிழ்கின்றனர். இதுவே கீழ் குலத்தவர் வணங்கும் தெய்வமாம். இவர் இந்த தெய்வ வணக்கத்தை விட்டுப் பரம காருணிகனும், சர்வக்ஞராய், ஆனந்தமயராய், கருணை வாருதியாய் பேரருளுடையோராய், இருக்கும் சர்வேஸ்வரனை வணங்கப்படாமல் குழந்தைகளைக் கொன்று தின்னும் கொடுமையுடைய கடவுளை தான் நம்மனோரால் இழிகுலத்தவர் வணங்கும் கடவுளென்று வகுத்தது கடவுளுடைய சங்கல்பமா? அப்படியானால், கடவுள் பக்ஷபாதி என்று எப்படாதா? ஒருவனுக்கு ஐந்து குழந்தைகள் பிள்ளைகளாகப் பிறந்திருக்க, அந்த ஐந்து குழந்தைகளையும் சமத்துவமாய்ப் பாவியாது போனால், அவன் தந்தை யாவனோ? ஆயினும், தந்தைக்குப் படித்த மைந்தனிடத்திலேயே அன்பு அதிகமும், படியாத மைந்தனிடத்து அன்பு குறைவதும் சகஜமே என்று சொல்லி அதுபோல வேதம் முதலிய நூல்களை கற்றவரான பிராமணரிடம் சர்வேஸ்வரன் அன்பு செலுத்துவான் என்றும் படியாது சுத்தப் பாமரராய்த் திரியும் பஞ்சமரிடம் அன்பு செலுத்தான் என்றும் சொன்னால் அது பொருந்துமா? ஒரு தந்தை தனக்குப் பிறந்த ஐந்து மைந்தர்களில் ஒருவனை மாத்திரம் கல்விச் சாலைக்கு அனுப்பி அவனைப் பண்டிதனாக்கி விட்டு, அவனன்றி மற்றைய மைந்தரை பள்ளிக்கே வையாது போனால், "என்னாலே பள்ளிக்கு அனுப்பாத மைந்தன் படிக்கவில்லை. அவனிடம் நான் அன்பு பாராட்ட மாட்டேன். என்னாலே பள்ளிக்கூடத்திற்கு அனுப்பப் பட்டு பண்டிதனான என் மைந்தனிடமே எனக்கு அதிக அன்பு என்று சொன்னால், அந்த தந்தையின் மொழியைக் கேட்டவர், எப்படி நகைப்பரோ அதே போல, ஈஸ்வரனுடைய நியமனத்தைக் கேட்டவரும் நகைக்கும் படி நேரும். எப்படியென்றால், ஈஸ்வரனை தந்தைக்குப் பிறந்த மைந்தர்கள் பிராமணர்களென்றும், க்ஷத்திரியர்களென்றும் வைசியரென்றும் சூத்திரரென்றும்; பஞ்சமரென்றும் அமைந்த ஐவர்களில் மூத்தவராகிய பிராமணர்க்கே வேதம் உரியது. அவரே தான் அதைப்படிக்கவேண்டும். என்று நியமித்து இரண்டாவது மைந்தரான க்ஷத்திரியர் மாத்திரம் அந்த வேதத்தை பிராமணரிடம் கற்றுக்கொள்ளலாம். அன்றி, மூன்றாவது நான்காவது மைந்தரான வேறிருவருக்கும் வேதம் படிப்பதற்கு அதி

காரமில்லை என்று நியமித்து வர்த்தகராகிய வைசியர்கள் என்கிற மூன்றாவது மைந்தன் வியாபாரம் செய்யவும், நான்காவது மைந்தனை சூத்திரர் விவசாயம் செய்யவும், ஐந்தாவது மைந்தனை பஞ்சமர் அடிமை செய்யவும், அமைந்துவிட்டு அடிமை வேலைசெய்ய நம்மால் நியமிக்கப்பட்ட பஞ்சமர் படிக்கவில்லையென்று அவர்மீது அன்பு பாராட்டேனென்று சொல்லுவராகில் ஈஸ்வரனை தந்தை எப்படி தந்தை யாவான்? அவனுடைய நியமனத்தை அறிந்தோர் நகைக்கமாட்டாரா? ஆதலால், சர்வேஸ்வரன் தன்னை பிராமணரன்றி, மற்றையோர் வணங்கத் தகாதவரென்னும் வார்த்தை அவனுடைய வார்த்தையாக இருக்காது. அப்படியிருந்தால் அது அவருடைய கடவுள் தன்மைக்கே குறைவானது. இது ஈஸ்வர சங்கல்பமென்று சொல்லுகின்றவன் ஈஸ்வரனுக்கே அபசாரப்பட்டவனாகிறான், என்று தோன்றுகின்றது. ஆதலால் நாமும் சர்வேஸ்வரனை அடையத் தகுந்தவரே. நமது சாதியில் பிறந்தவர் யாராவது சர்வேஸ்வரனை அடைந்திருக்கின்றாரா? அதை அறியவேண்டுமென்று தனது மனத்தில் நினைத்து தனக்கு இயற்கைஞானமேயன்றி, படிப்பில்லையாதலால், படிக்கலாமென்று நினைந்தாரானால் படிக்கலாமென்று பள்ளிச்சாலையில் பஞ்சமர் வந்து படிப்பதற்கு முடியாததாலும் பஞ்சமர்க்கென்று தனியான பள்ளிச்சாலையில்லாமையினாலும் படித்து விஷயங்களை தெரியமுடியாதென்று நினைத்தார். படியாது விஷயங்களை தெரியமுடியாதென்று தெரிந்ததும் பக்த சரித்திரங்களை வாசிக்கின்ற இடங்களிற் சென்று கேட்கலாம். கற்றலின் கேட்டலே நன்று. கற்றதில் அடையும் அறிவைப் பார்க்கிலும் கேட்பதிலேயே அறிவு விசாலமாகிறது; ஒரு பிரசங்க மேடையிலிருந்து பிரசங்கம் செய்யவேண்டிய பண்டிதர் ஒருநாள் செய்யும் பிரசங்கத்திற்காக பல வருஷங்கள் ஆராய்ச்சி பண்ணிய விஷயங்களை விஷயதானம் பண்ணுகிறாரென்று அறிவுடையவர்கள் சொல்லுகிறார்கள். நாமே படித்து அறிய முடியாத விஷயங்களை கேள்வியினாலே அறியலாம், என்று நினைத்து அடியார் சரித்திரங்கள் நடக்குமிடத்தில் சென்று சிரவணம் செய்யவேண்டுமென்று அன்று இரவு அந்தணர் வீதியில் புராணப் பிரசங்கம் நடக்கிறது என்று கேள்விப்பட்டு அங்கேபோய் உட்கார்ந்து இரண்டு மூன்று நாள் பிரசங்கம் கேட்டு வரும் பொழுது அந்த வேதியர்கள் இவரைக் கண்டுகொண்டு "அடே பறப்பயலே? இங்கு ஏன் வந்தாய்? இந்தக் கூட்டத்திலுள்ளவர்களையெல்லாம் தொட்டுவிட்டாயே? என்று வாயில் வந்தபடியெல்லாம் வைதும், இவனைப் பிடித்துக் கட்டுங்கள். இவன் எப்பொழுதுமே அகம்பாவம் பிடித்தவன். பறையனாகப் பிறந்து பிராமணனாகப் பார்க்கிறான். இவன் எங்கேயாவது வெளியில் வந்தால் நாம் சொன்னாலும் ஒதுங்குகிறதுகூடயில்லை. ஒதுங்கு

என்றால் விரைத்துப் பார்க்கிறான்' என்று பலவேதியர்கள் சூழ்ந்து அடிக்கவும் வரும்பொழுது அவர்கள் காலில் வீழ்ந்து, "உங்கள் அடிமையான என்னைக் காப்பாற்றவேண்டும். ஸர்வேஸ்வரனுடைய திவ்விய சரித்திரம் நடக்கின்றதே, இந்த புண்ய ஜென்மம் கடைத்தேறுமே என்று நினைந்து இருப்பவனானதால், வந்து கேட்கப்படாது என்று தெரியாமல் இங்கு வந்து தூரத்தில் உட்கார்ந்து கேட்டுவிட்டேன். அது குற்றந்தான் என்னை மன்னியுங்கள். இனி இந்த திசையையே நான் பார்க்கவில்லை." என்று கெஞ்சும்பொழுது, அவர்களில் ஒரு பிராமணன், கருணையுடையவனாய் அவன் முன்னே வந்து, "அடே நீச்சப்பயலே! இந்த திசைவழி நாளை வந்தால் எமலோகமே சேர்ந்துவிடுவாய் ஓடிவிடு பறையனுக்கு பகவத்விஷயம் கேட்பது தகாது போய்விடு" என்று சொல்லி; மற்றைய வேதியரையும் சமாதானப்படுத்தவும், அவர்களும் இவனை விட்டுவிட்டனர். புராணச் சிரவணஞ் செய்து விஷயங்களைத் தெரிந்துகொள்ளலாம் என்று வந்த சோகாமேளர் நம்மிடம் இவர்களுக்கு இருக்குங் க்ஷாத்திரத்தினால் கொன்று விடுவார்கள் என்று நடுங்கிய நடுக்கம் தீர்ந்து இன்று நான் மற்றொரு முறை தாயின் வயிற்றிலிருந்து வெளிவந்தேன் என்று நினைத்துக்கொண்டு தனது சேரிக்குப்போய்ச் சேர்ந்தார்.

சோகாமேளர் யாத்திரைசென்ற அத்தியாயம்

தனது சேரியை யடைந்து வீட்டினுள்கூட செல்லாமல் ஒரு திண்ணையில் உட்கார்ந்துக்கொண்டு சர்வேஸ்வரனை நினைந்து கண்ணீர் விட்டு அழுதுக்கொண்டு, "ஈசா உனது அருட்பெருந் தகைமையை கல்வியறிவில்லாத நான் அறிய விரும்பி புராணச் சிரவணம் செய்யலாமென்று நினைந்து பிரசங்கம் நடக்கும் இடத்திலே நெடுந்தூரத்திலே போய் உட்கார்ந்து கேட்டதால் இதற்கு இவ்வளவு துன்பம் வரவேண்டுமா? உன்னை வணங்கத்தான் இந்தபாவி பஞ்சமனுக்கு அதிகாரமில்லை ஆனாலும் உனது குணங்களைக் கேட்பதற்கும் பஞ்சமனுக்கு அதிகாரமில்லையா?" என்று கதறினார். மீண்டும் தனக்கு ஒரு எண்ணம் உதித்தது. அதாவது நாம் இந்த வூரிலிருந்தால் நினைத்த காரியத்தைச் சாதிக்கமுடியாது. இந்த ஊரைவிட்டுவிட்டு யாத்திரையாய்ப் பல ஊர்களுக்குச்சென்று கதாச்சிரவணம் செய்தாலன்றி, பகவத்குணங்களையும் பாகவத லக்ஷணங்களையும் நாம் அறிந்துகொள்ள முடியாது. நாம் முக்கியமாய்த் தெரிந்துகொள்ளவேண்டியது பஞ்சமனுக்கு நற்கதி உண்டாவென்பதும்; பஞ்சமகுலத்தில் தோன்றியவர் யாராவது வேதியர் வணங்கும் கடவுளை வழிபட்டு மோக்ஷமடைந்தனரா என்றும், அவர்கள் போம்வழியைப் பின்பற்றினால் நமக்கு மோக்ஷம் உண்டா என்றும், தெரிந்துகொள்ளவேண்டும். இந்த ஊரில் நடக்கும் ராமா

யண படனத்தை மாத்திரம் கேட்பதனாலேயே யெல்லாம் தெரிந்துக்கொள்ள முடியாது. விஷ்ணு அடியார்களின் சரித்திரங்களும், சிவனடியார்களுடைய சரித்திரங்களும், கேட்டு அறியவேண்டும். அதற்கு தேசாடனமேதான் சிறந்தது, என்று நினைத்து நேரே யாத்திரை செய்துக்கொண்டு ஸ்ரீ காசி க்ஷேத்திரத்திற்குவந்து கங்கையில் தீர்த்தமாடிவிட்டு ஏதோ யிரண்டிடத்தில் பிச்சையேற்று உண்டு இரவிலே எங்கேயாவது புராண படலங்கள் கதா காலக்ஷேபங்கள் நடக்கிறதா பார்ப்போமென்று நினைத்து, வாரணாசியின் தெருக்களிலே சுற்றிவரும்போது ஒரு தெருவில் ஜனங்கள் திரளாகக் கூடியிருப்பதைக் கண்டு, இங்கு ஏதாவது சிரவணம் நடக்கலாமென்று நினைத்து அந்த இடத்தில் தானும் சென்று உட்கார்ந்துக்கொண்டு, இங்கு என்ன நடக்கிறதென்று பக்கத்தில் உட்கார்ந்துக் கொண்டிருப்பவரிடம் கேட்க, அவர், "இங்கே ஒரு பண்டிதரால் இந்த ஊரிலேயே துருக்கசாதியில் திருவவதரித்தவராகிய கபீர்தாசருடைய சரித்திரம் கதாரூபமாக நடக்கப்போகிறது. உயர்ந்த பக்கவாத்தியங்களுடன் அந்தப் பண்டிதரும் அவருடைய சிஷ்யர்களும் பாடும் பாடல்கள் எல்லாம் கேட்கத் தகுந்தது" என்று சொல்லினன்.

இவ்வார்த்தையைக் கேட்ட சோகாமேளர் பரமானந்தமடைந்தவராய், "இந்துமதமல்லாத மகம்மதிய மதத்தில்பிறந்த கபீர்தாஸ் என்பவருடைய சரித்திரத்தைக் கேட்டு நாம் விஷயங்களைத் தெரிந்துகொள்ளுவது நமது எண்ணங்களுக்கு அநுகூலமானதென்று நினைத்துக்கொண்டிருக்கும்பொழுதே பண்டிதர்வந்து கபீர்தாசருடைய சரித்திரத்தைக் கதாரூபமாக இனிய நிருபணங்களுடன் கதைசெய்துக்கொண்டிருக்கக் கேட்டவர்கள் யாவரும் ஆனந்தமேலீட்டால் பரவசமடைந்தனர். சோகாமேளரானவர் கபீருடைய பக்தியை நினைந்து மனமுருகியதோடு யாத்திரைக்கு வந்த பலனை இன்றே அடைந்துவிட்டேன். இந்து மதத்திற்கு நேர்விரோதியாகிய ஒரு துருக்கன் எம்சாதியாரான பஞ்சமர்களிலுன்னும் தன்மையுடையவன். ராம பக்தி பண்ணினால் பஞ்சமனான நம் குலத்தவர் பகவானை பக்தி பண்ணலாமென்று நினைந்து கொண்டிருக்கும்போதே பண்டிதர் கபீர்தாசரானவர் நானகவென்னும் மகம்மதியனை தனது உபதேசத்தால், ராம பக்தி செய்யும்படி உபதேசி ஆக்கிவிட்டு காசிக்கு பக்கத்திலே உள்ள சேரியில் சக்கிலிய குலத்திலே திருவவதரித்த ரோகிதாசர் என்னும் திருவைஷ்ணவபக்தருடைய பக்தியைக்கேட்டு அவரை தரிசனம் பண்ண சென்றாரென்னும் பாகத்தைச் சொல்ல ஆரம்பித்தார். சோகாமேளர் இந்த பாகத்தைக் கேட்டதும், பரமானந்தமடைந்தவராய் "நாம் கோரிவந்த காரியத்தைப் பூர்த்திசெய்துவைப்பதற்கே சர்வேஸ்வரன் நம்மை வேதியரால் பண்டரிபுரத்தி

விருந்து அகற்றினர் போதும்? அந்த வேதியன் என்னை தூக்கியது முடிவில் நன்மையாகவே முடிந்தது." என எண்ணிக்கொண்டு மஹீபதியும் பண்டிதர் சொல்லும் கதையைக் கவனமாய்க் கேட்கும்போது கதையானது பின் வருமாறு சொல்ல நேர்ந்தது.

கபீர்தாசர் ரோகிதாசருடைய குடிசைக்கு அவர் திருவாராதனம் பண்ணிக்கொண்டிருக்கும்போது சென்றாரென்று திருவாராதனம் செய்துகொண்டிருந்ததை நிறுத்திவிட்டு கபீர்தாசரை எதிர்கொண்டழைத்து தனது சேரியில் ஒரு பலகை போட்டு அதில் உட்கார வைத்துவிட்டு அவர் நியமனத்தின்மேல் திருவாராதனத்தை செய்யவும், தான் ஆராதனை செய்யும்பொழுது கபீர்தாசர் எழுந்து வணங்காமையைக் கண்டு, "இவரை பரம பக்தரென்று சொல்லுகிறார்களே! நாம் திருவாராதனம் பண்ணும் பொழுது இருந்தபடியே யிருக்கிறாரே! எழுந்து வணங்கவேண்டாமோ! இதை இவரிடமே கேட்போம்" என்று நினைந்து கபீர்தாசரிடம் கேட்க, "ரோகிதாசனே! நீர்செய்யும் திருவாராதனம் நிரம்ப அருவருப்புடையது, தோலாலே கிருஷ்ணமூர்த்தி செய்திருக்கிறாய்; திருவாராதன பாத்திரங்களெல்லாம் மாட்டுத்தோலாலே செய்யப்பட்டிருக்கிறது; இந்தத் தோலில் ஊறி நாற்றமெடுத்த தண்ணீரைக் கொண்டு கண்ணனை வந்திக்கிறாய்; இந்தக் கண்ணனை நான் எப்படி வணங்குவேன்? என்னுடைய ராமனை இப்படி பூசை செய்தால் ஏற்றுக்கொள்ளமாட்டார்." என்று சொல்ல, உடனே ரோகிதாசருக்கும் கபீர்தாசருக்கும் ராமனையும் கிருஷ்ணனையும் பற்றி பெரிய சண்டை வந்துவிட்டது. ரோகிதாசர் எனது கிருஷ்ணனே பெரியவர் என்றார். கபீர்தாசர் எனது ராமனே பெரியவர் என்றார். இந்த வாதத்தில் ஒருவரை ஒருவர் வைது கொண்டனர். ரோகிதாசரானவர் கபீரை அடிக்க ஒரு தோல் பட்டையை யெடுத்தார். கபீர்தாசர் ரோகிதாசரை அடிக்க ஒரு சோட்டாதடியைத் தூக்கினார். இதை அறிந்த பகவான் இருவர் சண்டையையும் விலக்க பரமசிவனை அனுப்ப அவர் வந்து ரோகிதாசன் சார்பாக கிருஷ்ணனே மேலென்று சொல்ல கபீர்தாசர் சிவனை நிந்தித்து ஒரு தலை வழக்கு சொல்லிய உன் மண்டையை உடைத்து விடுகின்றேன் என்று சோட்டாதடியை தூக்கிக்கொண்டு பிரயோகம்பண்ண ஈசன் கபீர்தாசருடைய உயிரை வாங்கவிடுத்தார். கபீர்தாசர் சிரித்துக்கொண்டு தாரக மந்திரப் பிரயோகம் செய்து சோட்டாதடியை பாசுபதத்தை அழிக்கவும் சிவனுயிரை மடிக்கவும் விடுக்க, பாசுபதமும் கபீர் விட்ட சோட்டாதடியும் ஒன்றை ஒன்று எதிர்த்துக்கொண்டது. உடனே நாராயணன் வந்து கபீர்தாசரையும் சாம்பமூர்த்தியையும் சமாதானஞ்செய்து தானே கபீர்தாசருக்கு ராமனாகவும் ரோகிதாசருக்கு கிருஷ்ணனாகவும் சேவை சாதிக்க இருவரும் சேவைசெய்து மகிழ்ச்சியடைந்த

பொழுது, தான் சங்கு சக்கிரத்துடன் சேவைகாட்டி நானே ராமனும் கிருஷ்ணனுமாக அவதரித்திருக்கிறேன். நீங்கள் இருவரும் சண்டை செய்வது நன்றல்ல என்று சொல்லி, இருவரையும் சமாதானப் படுத்திவிட்டு பரமசிவனை கைலையங்கிரிக்கு அனுப்பிவிட்டு தான் திருப்பாற்கடலுக்கு எழுந்தருளினார். என்று பண்டிதர் கதை சொல்லும்பொழுது சோகாமேளர் ஆநந்த பரவசமடைந்து, ஏ! கோபாலா! நீ பஞ்சமனும் வணங்கும் கடவுளா! உன்னை அடியேனும் வணங்கி சரணடைய ஏதுவிருக்கிறதே! என்று நினைந்து காசிக்ஷேத்திரம் வந்ததும் நமது கருத்து முற்றும் நிரம்பியது ரோகிதாசர் வாழ்ந்துவந்த சேரி எங்கேயிருக்கிறது. இந்த கதை நடந்தசின்னங்கள் ஏதாவது ஆதாரமாக கிடைக்குமா! அதையறிய வேண்டி நினைத்து, மறுநாள் பொழுது விடியுமென்று எதிர்பார்த்தார். பொழுது விடிந்ததும், கங்காநதிக் கரையிலே காசியை அடுத்துள்ள இடத்திலே சேரியிருக்கிறதென்று தெரிந்துகொண்டு அந்தச் சேரியில் சென்றுபார்க்கவும், அங்குள்ள புலையர் யாவரும் தீர்த்தமாடிவிட்டு நெற்றியில் திருமண்ணிட்டுக்கொண்டு கிருஷ்ண பக்தராய் பகவானுடைய அநந்த கல்யாண குணங்களை பஜனை பண்ணிக்கொண்டு ரோகிதாசர் திருவாராதனம் பண்ணிய கிருஷ்ணமூர்த்தியான தோல் விக்கிரகத்தை வைத்து ஆராதனை செய்துகொண்டிருக்க அப்பொழுது சோகாமேளரானவர், அந்த பஞ்சமருடைய பாதத்தில் விழுந்து நமஸ்கரித்து தனது வரலாற்றை அவர்களிடம் சொல்லி, இந்த இடத்தில் ரோகிதாசருடைய சந்ததியார்களாவது ஞானிகளாவது யாராவது யிருக்கின்றார்களா? அவர் திருவாராதனம் செய்த சின்னங்கள் ஏதாவது இருக்கின்றதா? தரிசிப்பதற்கே வந்தேன் என்று சொல்ல, இதைக்கேட்ட அந்த சேரியிலுள்ளவர்கள் தங்களுடைய திருவாராதன மூர்த்தியைக் காட்டி, "இதுவே ரோகிதாசர் திருவாராதனம் செய்த மூர்த்தியாகும். இந்த பாத்திரங்களெல்லாம் அவர் திருவாராதன பாத்திரங்கள். இதோ திருவாராதனம் செய்பவரே அவருடைய சந்ததியில் தோன்றினவர். எங்கள் முன்னோர்கள் எல்லோரும் உங்கள் ஊரிலுள்ள புலையரைப்போல மாடன், மகமாயி, பேச்சி முதலிய தெய்வங்களை வணங்கினவர்கள்தான். இந்த சேரியில் ரோகிதாசரும் கபீர்தாசரும் சந்தித்த அன்றையதினம் பகவான் எங்கள் முன்னோர்கள் எல்லோரையும் கண்டு தரிசிக்கும்படி ராமனாகவும் கிருஷ்ணனாகவும் சேவைசாதித்த அன்றையிருந்து வைஷ்ணவராய் மாறிவிட்டனராம். அதனால் நாங்களும் வைஷ்ணவராய் வேதாந்த பஜனம் பண்ணாமல் பகவத் கைங்கரியமே புருஷார்த்தமென்று செய்துகொண்டிருக்கிறோம், எனச் சொல்லக் கேட்ட சோகாமேளரானவர், சந்தோஷமடைந்து அந்தணர்க்குரிய கடவுள் அடிமைகளான புலையருக்கும் உரியவரென்று தேறி, ரோகிதாசரின் சந்ததி

யில் உதித்து பரம பக்தராய் விளங்கும் ராதாவல்லப ரென்பவரைப் பணிந்து இன்னும் தேசாடனம் செய்தால் அநேக நன்மை உண்டென்று நினைந்து அதுவரைதான் வைஷ்ணவமதம் சைவமதம் இரண்டிலும் விருப்பு வெறுப்பு இல்லாதவராய் பொது நோக்குடையவராய் எந்த மதம்தான் பிறந்த சாதியிலிருந்தே மோக்ஷமடைய முடியும்? எந்த மதமானது கடவுளை அடைவதற்கு சொல்பமானது? எந்த மதத்தினர் வழிபடும் கடவுள் விரைந்து வந்து அடியவரை ஆதரிக்கும் சவுலப்பிய முடையவன் இதையெல்லாம் நன்றாய்த் தெரிந்துதான், நாம் ஒரு மதத்தில் பிரவேசிக்கவேண்டும். இந்த அரும்பெரிய விஷயங்களை யெல்லாம் தேசாடனத்திலே நான் தெரிந்துகொள்ளுவேன், எனக்கு ஈஸ்வரனுடைய கருணை நீங்காதிருக்கிறது. அதனாலேதான் இந்த காசிக்கு வந்ததும் அநேக விஷயங்களைத் தெரிந்துகொண்டேன், என்று எண்ணிக்கொண்டே இது சிவஸ்தலம் இது விஷ்ணுதலம் என்று பேதமெண்ணாது சிரவணம் எந்த ஊரில் நடக்கிறது என்று இதையே கவனித்துக்கொண்டு சிரவணம் நடவாத ஊர் திவ்யதேசமாயிருந்தாலும் அதை மதியாமல் சிரவணம் நடக்கும் ஊர் கிராமமாயிருந்தாலும் அதையே திவ்யதேசத்தின் மேலாய்க் கருதிக்கொண்டு பலபல இடங்களிலும் யாத்திரை செய்து சிதம்பர க்ஷேத்திரம் வந்து சேர்ந்தார். அவர் வந்ததினமானது நந்தனார் திருநக்ஷத்திரமான தினமாயிருக்க, அங்கோர் திருமடத்தில் அறுபத்துமூன்று நாயன்மார்களை பிரதிஷ்டை செய்வித்து சிவனடியார்களுக்கெல்லாம் நாயன்மார் திருநக்ஷத்திரங்களில் எந்த நாயனார்க் குரியதோ அந்த நாயனாருக்கு அபிஷேக அலங்கார தூபதீப நைவேத்தியம் செய்து குருபூஜை நடத்தும் வழக்கப்படி அன்று நடந்துகொண்டிருக்க, சோகாமேளரானவர், பார்த்து இருப்பவரைக் கேட்க இன்று நந்தனார் திருநக்ஷத்திரம் அதற்காக குருபூஜை நடக்கிறது என்றார். இதைக் கேட்ட சோகாமேளர், அவரைப் பார்த்து, "நந்தனார் என்பவர் எந்த குலத்திலே பிறந்து முக்தியடைந்தவர்? அவர் திருவவதரித்த ஊர் எது?" என்று கேட்கவும் அவர் "பஞ்சமகுலத்திலே, ஆதனூரிலே திருவவதரித்தவர்" என்று சொல்லவும் இதைக் கேட்டு காசிக்ஷேத்திரத்திலே ரோகிதாசர் சரித்திரத்தைக் கேட்டதும் ஆயிரமடங்கு அதிகமான சந்தோஷத்தினை யடைந்து அவரைப் பார்த்து, "ஸ்வாமி! அவர் சரித்திரம் பூராவும் அடியேன் தெரிந்துகொள்ளும்படி தயவுசெய்து சொல்லவேண்டும்" என்று கேட்க அவர், "அப்பா! எனக்கு அவர் சரித்திரமானது அவ்வளவு நன்றாகத் தெரியாது. இன்று இரவு பெரிய புராணத்திலே நந்தனாருடைய சரித்திரத்தை இந்த இடத்தில் வைத்து பிரசங்கம் செய்யப்படும். பலபேர் வந்து கேட்டுவிட்டு செல்வார்கள். நீயும் வந்து கேட்டால் உனக்கும் அவர் சரித்திரம் நன்றாகத்

தெரிந்துவிடும்" என்று சொல்லிவிட்டு உண்ட மயக்கம்தீர ஒரு வீட்டுத் திண்ணையில்போய்ப் படுத்துக்கொண்டார்.

சோகாமேளர், நந்தனார் பஞ்சமகுலத்தில் பிறந்தவரென்று கேட்டதும், முன்னிலும் அதிகமான சந்தோஷத்தை யடைந்த காரணம் என்னவெனில், ரோகிதாசருடைய சரித்திரம் என்று ஒன்று வேறாகயிராமல் கபீர்தாசருடைய சரித்திரத்தில் அவருடைய சரித்திரம் வரக்கேட்டார். நந்தனாருடைய சரித்திரமோவெனில், அவரை விக்கிரமாக திருமடத்தில் எழுந்தருளப்பண்ணி அவருக்கு அபிஷேக தூபதீப நைவேத்தியமும் செய்து குருபூஜையும் வருஷாந்தோறும் நடத்துவதோடு அவர் சரித்திரமும் பெரியபுராணத்தில் ஒரு சரித்திரமாக எழுதப்பட்டு அந்த சரித்திரத்தை யாவரும் கேட்டு உய்வதற்கு வாசிக்கப்படுகிறது என்பதே. இந்த சந்தோஷத்தினால் தானே சொல்லிக்கொள்ளுகிறார், அதாவது ஸ்ரீ காசியில் கபீர்தாசருடைய சரித்திரம் நடந்துக்கொண்டிருக்கும்பொழுது அங்கே சென்று அந்த சரித்திரத்தைக் கேட்க அதில் ரோகிதாசருடைய சரித்திரம் வந்து பிராமணர்கள் வணங்கும் கடவுளை பஞ்சமரும் வணங்கலாமென்று மாத்திரம் தெரியவந்தது. இந்த சிதம்பரத்திற்கு வந்ததும் பிராமணர் முதலிய மேல் குலத்தோர் பக்தியால் முக்திபெற்ற ஒரு பஞ்சமனை கடவுளாலயத்தினுள் விக்கிரமாக வைத்து தினமும் பூஜைசெய்து வணங்கலாம் என்னும் விஷயம் தெரியவந்தது. இந்த தெய்வத்தன்மை வாய்ந்த நந்தனாருடைய சரித்திரத்தை முற்றும் கேட்கவேண்டும். இந்த திருமடத்தில் இவருக்கு குருபூஜை நடந்ததுபோல் நடராஜருடைய ஆலயத்தில் இவருடைய விக்கிரக மிருக்கிறதா? இவர் திருநக்ஷத்திரத்திற்காக ஆலயத்தினில் ஏதாவது இவருக்கு செய்யப்படுகிறதா? அதையும் விசாரித்து அறியவேண்டுமென்று நினைந்து சந்நதி முன்னேபோய் நின்றுகொண்டிருக்கும்பொழுது தரிசனம் பண்ணிவிட்டு ஆலயத்திலிருந்து வருகின்ற இருவர்கள் இன்று கோவிலில் உச்சிக்காலம் கூடுவதற்குள் நிரம்ப நாழிகையாய் விட்டது என்று சொல்ல மற்றொருவர் இன்று நந்தனார் திருநக்ஷத்திரமாதலால், அவருக்கு அபிஷேக அலங்கார தூபதீப நைவேத்தியங்கள் நடந்து அவருடைய விக்கிரகத்தை அலங்காரம் செய்து நடராஜப்பெருமான் சன்னதிக்கு எழுந்தருளப்பண்ணி மாலை சாற்றி கர்ப்பூரம் காட்டி முடிந்து தானே உச்சிக்காலம் கூடும்? அதனாலேயே நேரமாய் விட்டது. நாயன்மார் திருநக்ஷத்திரத்திலெல்லாம் இப்படித்தான் நாழிகையாகிறது; இதற்கென்ன செய்யலாம்? சன்னதி காரியம் இப்படித்தான் நடக்கும்" என்று சொல்லிக்கொண்டே இருவரும் நடந்துசெல்ல, சோகாமேளரும் அவர்கள் பின்னே சென்று சன்னதியில் நந்தனாருக்கு நடந்த விஷயங்களைத் தெரிந்துக்கொண்டார்.

அன்றிரவு பத்து நாழிகையானதும் திரளான ஜனங்கள் திருமடத்தின் முன்னே கூடினார்கள். நந்தனார் சரித்திரத்தைக் கேட்க விரும்பிய சோகாமேளரும் அக்கூட்டத்தில் அமர்ந்தார். புராணிகர் பெரிய புராணத்தில் நந்தனாருடைய சரித்திரத்தை அவ்சமதுரசிங்கார சோகவீர ரசங்கள் தோன்ற பிரசங்க மழை பொழிந்தனர். பிரசங்கங்கேட்டோரெல்லோரும் நந்தனாருடைய பக்திவலையில் பட்டவராய்மயங்கினர். அவர்செய்த சரித்திரத்தின் சாரமாவது ஆதனூரில் ஒருவேதியர்க்கு அடிமைவேலையிலமர்ந்த நந்தன் சாம்பானென்பவன் பஞ்சமசாதியில்தோன்றியும், தனக்கு ஆண்டையான வேதியருடையகாரியங்களையும் குறைவறச்செய்து மார்கழிமாதம் திருவாதிரை நாளாகிய ஆருத்திரா தரிசனத்தை சேவிக்கவிரும்பி தனது ஆண்டையினிடம்விடைபெற்றுக்கொண்டு சில புலையருடனேசென்று நடராஜப்பெருமானை சேவித்துவிட்டு மீண்டு ஆதனூருக்கு வந்து அந்த சேரியிலுள்ளவர் யாவரையும் சிவநேசச் செல்வராக்க விரும்பி; அவர்களைச் சிவநாமம் சொல்லும்படிக்கும் சிவசின்னம் அணியும்படிக்கும் வற்புறுத்தவும் அவர்கள் நந்தனுக்கு ஏதோ தேவதையின் கோளாறு வந்திருக்கிறதென்று நினைத்து, தங்கள் தெய்வங்களுக்குப் பூசைபோட்டு வேண்டும்பொழுது, நந்தன் அங்கேசென்று, பூசைபோடுகிறவர்களை எல்லாம் குடாவால் அடித்து, "சிவ நாமங்கள் சொல்லுங்கள். இல்லையேல், உங்களைக் கொன்று விடுவேன்" என்று அடிக்கும்பொழுது, அடிக்கு அஞ்சி யாவரும் பயந்து சிவநாமத்தைச் சொல்லி அலைந்துவிட்டு நந்தனுடைய வேதியரிடம் சென்று முறையிடவும், அந்த வேதியர் நந்தனை அழைத்து அநேக புத்திசொல்லி தனது உழவுத் தொழிலுக்குக் குறைவராது செய்யும்படி ஏவியிருக்கும் பொழுது மீண்டும் நந்தனார் தில்லை சேவிக்க விரும்பி வேதியரிடம் கேட்க, அவர் "வயல் முற்றும் தரிசாய்க்கிடக்க நீ எங்கேயும் போகப்படாது. வயல்களை உழுது பயிராக்கிவிட்டு போய்வா" என்று சொல்ல, இதைக் கேட்டு நந்தன் வருந்தும்பொழுது சிவபெருமான் கணபதியை நோக்கி, "இந்த நந்தன் உழுது பயிர் செய்யவேண்டிய நிலங்கள் முழுவதையும் பயிரால் நிரப்பும்படி செய்" என்று கூறவும், அப்படியே கணபதியும் தனது சக்தியால் வேதியர் நிலங்கள் முற்றும் செழித்தோங்க பயிர்கள் உண்டாகும்படி செய்துவிட்டு செல்ல, நந்தன் பொழுது விடிந்ததும் மறுபடியும் வேதியரிடம் தில்லை செல்ல விடைதரும்படி கேட்போமென்று சேரியிலிருந்து புறப்படும்பொழுது தான் உழவேண்டிய நிலங்கள் முற்றும் பயிரால் மூடப்பட்டிருப்பதைக் கண்டு, "இது சிவன்செயல்" என்று ஆநந்தமடைந்து ஐயரிடம் சென்று பணிந்து "ஆண்டே! தில்லையின் எல்லையைச் சேர்வதற்கு உத்தரவு தாரும். உமது வயல்களை வந்து பாரும். எனது அயரைத் தீரும்" என்று

பிரார்த்தித்து அவரை கழனிகளுக்கு அழைத்துவந்து பயிராயிருப்பதைக் காட்ட, வேதியர்கண்டு பரமானந்த மடைந்து நந்தனை தில்லையம்பலத்திற்கு அனுப்பவும், அவர் தில்லையில்வந்து சேர்ந்ததை நடராஜர் தெரிந்து, தில்லைவாழ் அந்தணர்களாகிய மூவாயிரவர்கள் கனவிலும் தனித்தனியே சென்று, "நந்தன் என்றும் எனது பக்தன் பஞ்சம சாதியில் பிறந்து என்னைச் சேவிக்க வந்திருக்கிறான். நீங்கள் ஒரு அக்கினி குண்டம் வளர்த்து அதில் அவனை மூழ்கச் செய்யுங்கள்" என்று சொல்லவும், வேதியர்கள் தாம் தாம் கண்ட சொப்பனத்தை ஒருவரோடொருவர் சொல்லிக்கொண்டு நந்தனிருக்கும் இடத்திற்கு வந்து அவனிடம் நடராஜர் சொன்னதைச் சொல்லி பெரிய தீயினை வளர்க்க, நந்தன் அந்த தீயினை வலம் வந்து அதில் பிரவேசித்ததும் ஒரு மகரிஷியைப்போல பிராமண வடிவங்கொண்டு தன்முன்னே தோன்றும் உமாமகேஸ்வரரை தரிசித்தபடியே சிவபதம் சேர்ந்தாரென்று புராணிகரால் வாசிக்கப்பட்டு முடிவடைந்தது.

சோகாமேளர் இந்த சரித்திரத்தைக் கேட்டு பரமாநந்தமடைந்து சிவனடியார்களான அறுபத்தி மூவருள் நமது குலத்தில் பிறந்த நந்தனாரும் ஒருவரே. அவரைத் தில்லைவாழந்தணர்கள் எதிர்கொண்டழைத்தனரா? தேசாடனம் செய்ததினால் இந்த மட்டில் உண்மை பூராவும் தோன்றிற்று. இது போன்று விஷ்ணு வடியார்களில் யாராவது பஞ்சமர் கலந்திருக்கின்றனரா? இதையும் அறியவேண்டுமென்று அநேக ஸ்தலங்களை யாத்திரை செய்துகொண்டு ஸ்ரீரங்கம் வந்து சேர்ந்தார். வந்து ஊரை வலமாய்ப் பிரதக்ஷணம் செய்யும்பொழுது ஒரு தெருவில் வேதியரெல்லோரும் திரளாகக் கூடிக்கொண்டு "இது என்ன அநியாயம்? நமதுசாதியைக்கெடுத்து விட்டாரே! ஐயோ, நினைக்கும் பொழுதே உடல் நடுங்குகிறதே! ஐயோ, உடையவருக்கு ஆசாரியர்," என்று சொல்லித் தான் வேதியனாயிருக்கும் பஞ்சமனாகிய மாறனேர் நம்பிக்குத் தானே பிறந்த பிள்ளையாய் மதித்து கொள்ளி வைத்தானே. இவனுடைய தைரியமென்னே! இந்த ரங்கக்ஷேத்திரத்தில் கேள்வி கேட்போரில்லையா! இவர் யோக்கியதையும் படிப்பும் பஞ்சமனுக்கு சரம கைங்கரியம் செய்யவா உபயோகப்பட்டது என்று சொல்லிக்கொண்டு கூக்குரலிடுவதைக் கேட்டார்.

சோகாமேளர் இந்த கூக்குரலைக் கேட்டதும், 'இது என்ன ஆச்சரியம்! பஞ்சமனுக்குக் கர்மம் பண்ணிய பிராமணன் யார்?' இதற்குமுன் காசியில் ரோகிதாசரைப்பற்றியும் சிதம்பரத்தில் நந்தனாரைப்பற்றியும் நாம் கேட்டது கதைகளேயன்றி! கண்களால் கண்டதில்லை. இந்த சம்பவம் இன்றோ நேற்றோ நடந்ததாகத் தெரிகின்றது. இதை நன்றாய் விசாரிக்கவேண்டுமென்று

நினைத்து வேதியரிடங் கேட்டால் நம்மை நையப்புடைத்து விடுவார்களென்று நினைத்து அங்கொருபுறத்தில் நின்று வேடிக்கைப் பார்த்துக்கொண்டிருக்கும் ஒருவனிடம் சென்று "ஐயே! இந்த வேதியர் யாவரும் கூட்டம்கூடி யாரையோ நிந்தித்துக்கொண்டிருக்கிறார்களே அதன் காரணம் என்ன சொல்லவேண்டும்" என்று கேட்க, அவன் "சோகாமேளரைப் பார்த்து" இந்த ஊரில் பிராமணர்கள் எல்லோரும் இன்னது தான் செய்கிறதென்று ஒருநிலையில் நில்லாதவர்கள். எதற்கு மஞ்சாத தீயோர்கள். இங்கே ஆளவந்தார் என்பவர் ஒருவர் வைஷ்ணவராயிருந்தார். அவர் அநேக சிஷ்யர்களுடனே ஒரு இடத்தில் போய்க்கொண்டிருக்கும்பொழுது வயலின் கரையில் ஒரு பறையன் உட்கார்ந்துக்கொண்டு தனது பசிக்குக் களிமண்ணை உருட்டித் தின்றுவிட்டு சோலியுள்ள தண்ணீரைக் குடித்துக்கொண்டிருப்பதை இந்த ஆளவந்தார் என்பவர் பார்த்து அவனைத் தனது பக்கத்தில் அழைத்து, "என் மாறனேர் நம்பியோ" எனக்கட்டிக்கொண்டு அவனையும் தன்னுடைய சிஷ்யருள் ஒருவனுய்ச் சேர்த்துக்கொண்டு இந்த ஸ்ரீரங்கம் வந்து சேர்ந்தாராம். மாறனேர் நம்பியும் தான் பஞ்சமனுதலால் பிராமணகோஷ்டியில் கலவாமல் மதிலிற் பக்கமே நின்றுகொண்டு ஆசாரியராகிய ஆளவந்தார் சொல்லுவதையெல்லாம் கேட்டுக்கொண்டு இருந்தனராம். இப்படியிருக்க ஆளவந்தார் என்னும் ஆசாரியருக்குப் புழுமலி நோய் என்று சரீரத்தில் அநேக இடங்களில் பெரிய புண்கள் தோன்றி அதிலிருந்து புழுக்கள் வெளியே வந்தன. இந்த நோயால் அவர் அவதிப்படும்பொழுது நாராயணன் அவர் முன்னே வந்து அவரைப் பரமபதத்திற்கு அழைக்கவும், இந்த நோயுடன் வருந்தும் கர்மம் கொஞ்சம் நாளைக்கு இருப்பதால், இதனைக் கழித்தாலன்றி தான் பரமபதம் செல்லப்படாதென்று நினைத்துத் தனது கோஷ்டியிலிருந்து காலக்ஷேபம் கேட்கும் சிஷியர்களைப் பார்த்து, "சுவாமிகளே! என்னைச் சர்வேஸ்வரன் பரமபதத்திற்கு அழைக்கிறான். நான் இந்த நோயை அனுபவிக்கவேண்டிய காலம் இன்னும் கொஞ்சமிருக்கிறது. உங்களில் யாராவது ஒருவன் இந்த நோயை வாங்கிக்கொண்டால், பகவானது நியமனத்தின்படி பரமபதம் சேருவேன்" என்று சொல்ல; வேதியராகிய சிஷ்யர்களெல்லோரும் அவருக்கு ஒன்றும்சொல்லாமல் வெளியே சென்றனர். பஞ்சமனாகிய மாறனேர் நம்பி மதிலோரத்தில் நின்றுக்கொண்டு "அது அடியேனுக்குரிய பிரசாதம்" என்று ஆளவந்தாரிடமுள்ள புழுமலி நோயைத் தான் வாங்கிக்கொண்டு ஆசாரியனைப் பரமபதத்திற்கு அனுப்பிவிட்டு அந்த நோயுடனே ஒரு தோட்டத்திலே குடிசை கட்டிக்கொண்டு அதிலே தங்கி துன்பமடைந்திருக்கும்பொழுது, ஆளவந்தாருடைய சிஷ்யரும் உடையவருக்கு ஆச்சாரியருமான பெரியநம்பிகள் என்னும் பிரா

மணகுலத்திலே தோன்றிய ஸ்ரீவைஷ்ணவர் ஒவ்வொருநாளும் தனது திருவாராதனம் முடிந்ததும் தான் சாப்பிடும் முன்னே சாதமெடுத்துக்கொண்டு மாறனேர் நம்பியிருக்கும் குடிசைக்கு வந்து அவருடைய சரீரத்திலிருந்து சிந்தின புழுக்களை வாரி எறிந்துவிட்டு அவருக்கு தீர்த்தமாட்டிவைத்து திருமண்ணிட்டு தான் கொண்டுவந்த பிரசாதத்தினை அவருக்கு ஊட்டித் தீர்த்த மாடாமலே தன்னுடைய திருமாளிகைக்கு வந்து தான் சாப்பிடுவதுவழக்கமாம். இப்படி இவர் நடந்துகொண்டு வரும்பொழுது அந்த மாறனேர் நம்பிக்கு மரணகாலம் நெருங்கவும், தானே அவரைத் தன்னுடைய திருமாளிகைக்குக் கொணர்ந்து அவருக்கு வேண்டியசிகிச்சைசெய்தும் இன்று அவர் இறக்கவும், அந்த வேதியரான பெரிய நம்பியே கர்மம் செய்கின்றார். இந்த அடாத செயலைக்கண்டு இவர்களெல்லோரும் கூக்குர லிடுகின்றார்கள்" என்று சொன்னான்.

இவ்வார்த்தைகளைக் கேட்ட சோகாமேளர், பரமானந்தமடைந்து பலபடியும் அவனைப் பார்த்து, "ஐயா! நீர் சொல்லியவையெல்லாம் உண்மைதானு?" பஞ்சமனுக்கு பிராமணன் கர்மம் பண்ணினான் என்பது ஆச்சரியமாகவும் எங்கும் நடவாததாகவும் இருக்கிறதே? இது உண்மைதானு?" என மீண்டும் மீண்டும் கேட்க, அவன், "ஐயா! உமக்கு சந்தேகமிருந்தால் நீரே மசானம் சென்று பார்த்துவிட்டு வாரும். இப்பொழுதுதான் அவரை எடுத்து வண்டியில் போட்டுக்கொண்டு தானே வண்டியை ஓட்டிக்கொண்டு சென்றிருக்கிறார்" என்று சொல்லவும், இதைக் கேட்டு சோகாமேளர் அவனிடம் "போய் வருகிறேன்" என்று சொல்லிவிட்டு அந்த பெரியவரான மாறனேர் நம்பியை இன்னம் அடக்கம் செய்யவில்லையானால் எனது அதிர்ஷ்ட வசத்தால் அவருடைய அடக்கத்தையாவது கண்ணாலாயினும் பார்த்துவிட்டு அவரைப் பரமபதத்திற்குச் சேருமாறு சரம கைங்கரியம் செய்யும் வேதியரான பெரிய நம்பியையாவது சேவிக்கலாம் என்று நினைத்து, மயானம் போய்ச் சேர்ந்தார். அப்பொழுதுதான் பெரிய நம்பிகள் செதையில் மாறனேர் நம்பியைவைத்து நெஞ்சியில் கொள்ளி வைக்கின்ற சமயம். சோகாமேளர் மாறனேர் நம்பியையும், பெரிய நம்பியார் சிரத்தையோடு செய்யும் கர்மத்தையும் கண்டு, பரமானந்த மடைந்து, அவ்விடத்திலிருந்து வெளியே வந்து, "நாம் யாத்திரைசெய்து வருவதால் அநேக தத்துவங்கள் வெளியாய்விட்டன. முதலில் காசியிலே கதாசிரவணம் செய்துக்கொண்டிருப்பதைக் கேட்டு பஞ்சமர் பிராமணர் வணங்கும் கடவுளை வணங்கலாம் என்பதற்கு சாதகமாக ரோகிதாசருடைய சரித்திரத்தை யறிந்தேன். அதைவிட்டு சிதம்பரம் வந்ததும், அன்று நந்தனுருடைய திருநக்ஷத்திரதினமாக இருக்க, பஞ்சம

னும் பக்திசெய்தால் அவனும் ஆலயத்தில் வைத்து தொழுதற்குரியவனாகிறான் என்பதையும், சிவபிரானே நேராக வந்து காக்ஷி கொடுப்பாரென்பதையும், தெரிந்துகொண்டேன். இங்கு வந்ததும் பஞ்சமன் ஆச்சாரிய விசுவாசமடைந்து இருந்ததினால் பிராமணன் அவனுக்குக் கர்மம் பண்ணினானென்பதைத் தெரிந்து கொண்டேன். அறுபத்திமூன்று நாயன்மார்களிலே பஞ்சமகுலத்தில் தோன்றிய நந்தனாரும் ஒருவரானதுபோல, ஆழ்வார்களான விஷ்ணுவடியார்களிலும் பஞ்சமர் உண்டாகித் தெரிவது நல்லது என்று அந்த ஸ்ரீரங்கத்தை வலமாய் வரும்பொழுது, ஒரு வீட்டில் வாயில் கூடத்தில் அனேக விஷ்ணு பக்தர்கள் கூடி இருந்தனர். அந்த வீட்டின் வாயிலில் வாழை மாவிலைகளால் அலங்கரிக்கப்பட்டிருந்தது. அங்கு போய் நின்று, "இங்கு என்ன விசேஷம்" என்று ஒருவரிடம் கேட்க, அவர் சோகாமேளரிடம் "இங்கு முதலாயிரம் காலக்ஷேபம் நடந்து வருகிறது. அதில் அமலனாதிப்பிரான் என்னும் பாசுரத்தை வியாக்கியானம் செய்யப்போகிறார். இந்த பாசுரம் பாடியவர் இந்த ஊரில் எழுந்தருளியிருக்கும் ரங்கநாதருடைய திருமார்பிலே கலந்து பரமபதத்திற்கு எழுந்தருளின திருப்பாணாழ்வார் பாடிய பாசுரமாதலால், அது ஆரம்பமாகும். இன்றையதினம் அதற்காகவே வாழை மாவிலையெல்லாம் கட்டியிருக்கிறார்கள். காலக்ஷேபம் முடிந்ததும் அனேக பிரசாதங்களும் விநியோகம் செய்வார்கள்" என்று சொல்ல, சோகாமேளர், "அந்தத் திருப்பாணாழ்வார் எந்தகுலத்தில் திருவவதரித்தவர்" என்று கேட்க, அவன் சோகாமேளரைப் பார்த்து, "அவர் பஞ்சம குலத்திலே பிறந்து ரங்கநாதரைக் காவேரிக் கரையிலே மணலால் விக்கிரகம்போலே வகுத்து அந்த விக்கிரகத்திற்கு திருவாராதனம் பண்ணிவந்தார். இப்படி அவர் காவேரிக்கரையில் வழக்கமாக திருவாராதனம் பண்ணிக்கொண்டு வருங்காலத்தில், ஒருநாள் ரங்கநாதருக்கு திருமஞ்சனம் எடுப்பதற்கு காவேரிக்கு வந்த பரிசாரகர்கள் பஞ்சமர் திருவாராதனம் பண்ணுவதைப் பார்த்து, அவரை அகலச்செய்து திருவாராதனத்திற்கு தீர்த்தம் கொண்டுபோக வேண்டுமென்று பாணரைப் பார்த்து, "அப்பா! சற்று ஒதுங்கி நில். நாங்கள் திருமஞ்சனம் கொண்டுபோகவேண்டும்" எனப் பலமுறை சொல்லினர். அவர் ரங்கநாதனுடைய பக்தியில் ஈடுபட்டு உணர்ச்சியற்று இருந்ததினால், அவர்கள் சொல்லியதை அவர் உணர்ந்தாரில்லை. இதை அறியாத அப்பரிசாரகர்களில் ஒருவன் ஒரு கல்லை எடுத்து அவர்மேலில் எறிந்தனன். அவர் உடனே உணர்ச்சிபெற்று பார்க்க, பரிசாரகர்கள் திருமஞ்சனம் கொண்டுபோக நிற்பதைக் கண்டு திடுக்கிட்டு நெடுந்தூரம் ஓடிப்போய் நின்று, "அந்தோ! இன்று பகவான் அபசாரமும் பாகவத அபசாரமும் செய்துவிட்டேனே" என்று நினைந்து வருந்தி அவர்கள் திருமஞ்சனம் எடுத்

துப்போனதும் தான் செய்யவேண்டிய திருவாராதனத்தை மறுபடியும் ஆரம்பித்து செய்துகொண்டிருந்தார்.

இப்படியிருக்கும்பொழுது, இவர் மேலே எறிந்த கல்லானது ரங்கநாதருடைய சரீரத்தில் பட்டு நோயுற்றவராய் தனக்கு திருவாராதனம் பண்ணும் லோகசாரங்க முனிவரைப் பார்த்து, "என்னுடைய பக்தனான பஞ்சமகுலத்திற் றோன்றிய திருப்பாணாழ்வாரென்பவர் என்னைக் காவேரியில் வைத்து திருவாராதனம் செய்துகொண்டிருக்கிறார். அவரை நீர் உம்முடைய தோள்களில் தூக்கிக் கொணர்ந்து என் முன்னே விடும்" என்று நேரே வாய்திறந்து சொல்லியதுமன்றி, அக்கணமே சன்னிதியின் அர்ச்சகனிடமும் தோன்றி, "என்னுடைய அடியவனான திருப்பாணாழ்வாரென்பவரை லோகசாரங்க முனிவன் தனது தோளில் தூக்கிக்கொண்டு என் சன்னிதிக்கு வருவதால் என்னுடைய ருதுக்கள் சின்னங்கள் மேளங்கள்யாவையும் எடுத்துக்கொண்டு அவரை எழுந்தருளப்பண்ணி வாருங்கள்" என்று நியமித்தார். அவர்களும் ரங்கநாதனுடைய நியமனப்படியே எல்லாவற்றையும் எடுத்துக்கொண்டு லோகசாரங்க முனிவருடன் காவேரிக்குவந்து திருப்பாணாழ்வாரை நோக்கிப் போகவும், அவர் இவர்களைக் கண்டு "சுவாமி! நான் நீசன். இதோ ஒதுங்கிக் கொள்ளுகிறேன்" என்று சற்று ஒதுங்கும்பொழுது, லோகசாரங்க முனிவர் அவரை நோக்கி, "சுவாமி தாம் ஒதுங்கவேண்டாம். ரங்கநாதன் உம்மை எழுந்தருளப்பண்ணிக்கொண்டுவரச்சொன்னார்." என்று சொல்லி அவரிடம் சென்று அவரைத் தூக்கித் தோளில் வைத்துக்கொண்டு அனேக விருதுகளுடன் சன்னதிக்கு எழுந்தருளப்பண்ணி வந்து ரங்கநாதன் முன்னே விடவும், ரங்கநாதர் அவரைக்கண்டு ஆனந்தமேலீட்டால் அருளுடன் நோக்கும்பொழுது "அமலனாதிபிரானென்று துவக்கி, பத்து பாசுரத்தால் ரங்கநாதரைப் பாடவும், அப்படியே பெருந்த திருப்பாணாழ்வாரைத் தனது கைகளால் வாரித் தன் திருமார்போடு அணைத்துக்கொள்ளவும், அப்படியே திருப்பாணாழ்வாரானவர் திருமார்பிலேயேகலந்து பரமபதம் சேர்ந்தார். அந்த திருப்பாணாழ்வார் அருளிச் செய்த பத்து பாசுரத்தையும் இங்கு வியாக்கியானம் செய்யப் போகிறார்கள்" எனக்கூறினன்.

இதைக்கேட்ட சோகாமேளர் முற்றிலும் அதிக ஆநந்தத்தை யடைந்து அங்கேயே உட்கார்ந்துக் கொண்டிருந்து காலக்ஷேபத்தை மிக்க விருப்பத்தோடும் பக்தியோடும் கேட்டு வந்தார். காலக்ஷேபம் செய்யும் சுவாமிகள் அந்தத் திருப்பாணாழ்வாருடைய சரித்திரத்தை அநேக ஆதாரங்களுடன் சொல்லி வரும்பொழுதே, இவரைப்போல பஞ்சம குலத்திற் பிறந்து சிவனை நினைந்து முத்தியடைந்த நந்தனாரையும் திருப்பாணாழ்வாரையும் பற்றிப் பேசவந்த காலத்து, நந்தன் தில்லையிலே நட

ராஜரால் அழைக்கப்பட்டு முக்தியடைந்தாலும், அவன் அக்கினியில் மூழ்கிப் பிராமணனாய்ப் போனபின்னே முக்தியடைந்தான். திருப்பாணாழ்வாரை பிராமணரான லோக சாரங்க முனிவரால் எழுந்தருளப்பண்ணிவந்து ரங்கநாதர் தனது திருமார்பிலேயே சேர்த்துக்கொண்டு பரமபதம் சாதித்தார். நந்தனை சிவன் பிராமணனாக்கி முக்தி எடுப்பானேன்? திருப்பாணாழ்வாரை ரங்கநாதன் பிராமணனாகும் ஜென்மம் வருமுன்னே அவரைத் தனது திருமார்பில் அணைத்துக் கொண்டு அவருக்கு பரமபதம் சாதிப்பானேன்? என்றால், சைவ சித்தாந்தத்திற்கு பாஷ்யம் செய்த நீலகண்டரென்பவர் சிவபதம் சேரவேண்டுமானால் பிராமணனாய்த்தான் சேரவேண்டும். பிராமணனாகாத வேறு குலத்தோர் மோக்ஷத்திற்கு அதிகாரியில்லை. என்று சொல்லியிருக்கிறார். ஆகையால், பிராமணனாகாதவன் மோக்ஷாதிகாரியில்லை என்றே நந்தனை பிராமணனாக்கி முக்தி கொடுத்தார். நமது வைஷ்ணவ சித்தாந்தமோவெனில், ராமாநுஜ ரெழுதிய பாஷ்யத்தின்படி எவன் எந்த சாதியில் பிறந்தவனாயினும் அவன் பரமபதத்திற்குப்போக உரியவனாகிறான் என்றிருப்பதால் திருப்பாணாழ்வார் லோக சாரங்க முனிவரால் தூக்கிவரப்பெற்று ரங்கநாதருடைய திருமார்பில் கலந்து பரமபதத்திற்கு எழுந்தருளினார். மற்றைய சித்தாந்தங்கள் பிராமணனுக்கே மோக்ஷமடையும் யோக்கியதை உண்டென்று கூறும். எந்த குலத்தில் பிறந்தவனாயிருந்தாலும் அவன் மோக்ஷாதிகாரியே யென்று கூறிநிற்கும் இந்த வைஷ்ணவத்தை ஒருவன் பற்றாதுபோனால், அவன் மீண்டும் மீண்டும் பல ஜென்மங்களிலும் பிறந்து இறந்து வருந்தவேண்டியவனே யாவான்" எனச் சொல்லி வந்ததைக் கேட்டு சோகாமேளர், "இப்படியா உண்மை இருக்கிறது! நாம் சிதம்பரத்தில் நந்தனார் சரித்திரத்தைக் கேட்டபோது நந்தன் தீயில் மூழ்கி பிராமணனான பின்னே சிவபிரான் முத்தியளித்ததாகப் பிரசங்கி திருவாய் மலர்ந்திருக்கிறார். இத்திவ்விய க்ஷேத்திரமாகிய ஸ்ரீரங்கத்தில், எக்குலத்திற் பிறந்தவனாயிருந்தாலும் அவன் வைஷ்ணவத்தைப் பற்றுவானேயானால், அவன் மோக்ஷாதிகாரியே யாவான் என உறுதியாய்க் கூறுகின்றார். தவிரவும், சிவனை பிராமணன் ஒருவன் தவிர, பிராமணனல்லாத வொருவன் என்ன பக்திபண்ணினாலும் முத்தியடைய முடியாதென்று நன்கு விளங்குகிறது. நம்முடைய பஞ்சம ஜென்மம் நீங்கி பிராமண ஜென்மம் வரவேண்டுமானால் எத்தனை ஜன்மங்கள் எடுக்கவேண்டுமோ தெரியவில்லையே! சைவ சித்தாந்தப்படி கடவுள் பிராமணனுக்குத் தானே சொந்தமானார். வைஷ்ணவசித்தாந்தப்படியில்லையே! எந்த சாதியில் பிறந்தவனாயிருந்தாலும் பக்தி பண்ணினால் மோக்ஷாதிகாரியாகிறானென்று சொல்லுகிறது! இதற்கு என்ன செய்யலாம்! இந்தமதத்தைச் சார்ந்தாலன்று மற்றபடி நாம் சர்வேஸ்வரனை அடைந்து

மோக்ஷம் பெற முடியாது" என அவருக்கவரே பலவாறு யோசனை செய்து கடைசியாய், "இதுவே நாம் கைக்கொள்ள வேண்டிய மதம்" என உறுதிகொண்டார். சில வைஷ்ணவர்கள் ஸ்ரீராமாநுஜர் ஸ்ரீரங்கத்தில் எழுந்தருளுகிறாரென்று சொல்லக் கேட்டு, அவருடைய நேமனங் கிடைக்குமென்று நம்பி ஸ்ரீரங்கத்தில் சிறிதுநாள் தாமதித்து அவர் வந்ததும் ஓர்நாள் அவர் சன்னதிக்கு எழுந்தருளும் சமயத்தில் தூரநின்று தண்டம் சமர்ப்பித்து, அவர் சோகாமேளரைப் பார்த்து 'இவர் விஷ்ணுபக்தியில் சிறந்த பாண்டுரங்கனுடைய அந்தரங்க பக்தனுவார்' என்றுணர்ந்து, தன்னுடைய சிஷ்யருள் சிறந்த வடக்குத் திருவீதிப்பிள்ளை யென்பவரை அழைத்து, "நீர் இவருக்கு சமாஸ்ரயணமும் மந்திரோபதேசமும் செய்யும்" என்று நியமிக்க, ராமாநுஜருடைய நேமத்தின்படி வடக்குத் திருவீதிப்பிள்ளை சோகாமேளருக்கு. திருமந்திரார்த்தத்தை உபதேசிக்க விரும்பி முதலில் சுதர்சன ஹோமம் செய்து சமாஸ்ரயணம் செய்வித்து திருமந்திரத்தை உபதேசித்து அதன் தத்துவத்தையும் விருப்புற்று சொல்ல அதைப் பெற்றுக்கொண்டு ஆசாரியனை வணங்கி வைஷ்ணவனாய் த்வாதசநாமங்களுட சமாஸ்ரயணத்துடனும் தனது திருமேனி பொலிவுற சதா பகவத்தியானபரனாய், "நான் பெற்ற பேறும் பெறுவர்" என்று மகிழ்ச்சியடைந்து தன்னுடைய சொந்த ஊராகிய பண்டரிபுரம் வந்து சேர்ந்தார்.

சோகாமேளர் பண்டரிபுரத்திலே யெழுந்தருளியிருக்கும் போது அந்த ஊரிலுள்ள பஞ்சமர் யாவரும் இவருடைய அநுஷ்டானங்களைக் கண்டு "நமது குலத்திலில்லாத வழக்கத்தை இவன் ஆசரிக்கிறான். புலையனுக்கு பஞ்சகச்ச வேஷ்டியாம், பார்ப்பார் கும்பிடும் தெய்வமாம், பன்னிரண்டு நாமமாம், இது என்ன வேஷம்! தோள்களிலும் சூடுபோட்டுக்கொண்டு வந்திருக்கிறான். இவனைக் கண்டதும் நம்முடைய ஊரிலுள்ள வேதியர்கள் யாவரும் "அகம்பாவம் பிடித்த பறப்பயலைப் பார்" என்று நிந்திக்கிறார்கள். இவனால் இந்த ஊரிலுள்ள பஞ்சமர்களாகிய நம்மையும் அவனைப் போலவே நிந்திப்பார்கள். இதற்கென்ன செய்வது" என்று யோசித்து நாம் ஒரு கூட்டம் கூடி இவனை நம்மிடம் சேர்த்துக் கொள்ளுவதா அன்றி, நமது சாதியை விட்டு விலக்கிவிடுவதா என்பதை தீர்மானிப்போமென்று முடிவுசெய்துகொண்டு, ஒருநாள் அந்த சேரியிலுள்ள பறையர்கள் யாவரும் கூடி சோகாமேளரை அழைத்து நீ எங்களைப்போல இராமல். நமது சாதியிலுள்ளவர்களின் அநுஷ்டானத்திற்கு மாறாக நீ எதற்காக விடியற்காலங்குளிக்கிறாய்? பிராமணரைப்போல உடை உடுத்திக்கொண்டால் பஞ்சமனாகிய நீ பிராமணனாய் விடுவையோ எங்களைப்போல சூன்னியமான நெற்றியுடன் இல்லாமல் உடம்பெல்லாம் வெள்ளை

மண்ணை அப்பிக்கொள்கிறாயே இதனால் உனக்கு என்ன வந்துவிட்டது? உன்னைக் கண்ட வேதியர் யாவரும் 'பறையனுக்குவந்த அகம்பாவத்தைப் பார்' என்று பழிக்கின்றார்களே? பிராமணர்கள் வணங்குவதுபோல வீட்டிற் சில பொம்மைகளை வைத்துக்கொண்டு கும்பிடுகிறாயே? நமது குலதேவதைகளான பனைமரத்தான், இருளன், காட்டேரி, கன்னிகாத்தான், கருப்பண்ணன், சங்கிலி முதலிய தெய்வங்களை வணங்கவேண்டியதிருக்க பொம்மைகளைக் கும்பிடப்போமோ? பார்ப்பார் தெய்வம் பறையனுக்குதவுமோ? நீ எங்கள் சாதியில் சேர்ந்திருக்க மனமுண்டானால் எங்களைப்போல இரு. இல்லையேல் உன்னைச் சாதியிலிருந்து தள்ளிவிடுவோம்" என்று சொன்னார்கள்.

சோகாமேளர் இவ்வார்த்தைகளைக் கேட்டுக்கொண்டு, உண்மையறியாத நம்மவரே! நான் சொல்லுவதைக் கேளுங்கள். கடவுள் குழந்தைகளான மானிடர்களுள் ஒருவர் உயர்ந்தவரென்றும், ஒருவர் தாழ்வடைந்தது நாமே செய்துகொண்டதன்றி, கடவுள் செய்யவில்லை, அல்லாமலும், வேதியர் வணங்கும் கடவுள் வேறென்றும் நீங்கள் நினைப்பது உங்கள் அறிவீனத்தாலல்லாமல் வேறில்லை. கடவுள் ஒருவனே. அவனை யாவரும் வணங்கலாம். அவன் யாவையும் ஒன்றாகப் பாவிப்பவனே, அவனுக்கு பிராம்மணன் பஞ்சமன் என்ற வித்தியாசம் கிடையாது, அவன் ஒரு விஷயத்தினை மாத்திரம் கவனிக்கின்றான். அது என்னவென்றால், தன்னை வணங்குகின்றவன் அருளுடையவனா; வேறு உயிர்களிடத்து அவனுக்கு அன்பு இருக்கிறதா; தனக்கு உடலாகிய உயிர்களைக் கொல்லாதிருக்கின்றானா; என்பதுவே. இந்த விஷயங்களைத் தெரிந்துகொள்ளுவதற்கு பாடுபட்டேன் இதற்காகவே தேசாடனம் பண்ணினேன். காசியிலே ஒரு கதா காலக்ஷேபம் நடந்துகொண்டிருக்குமிடத்தில் உட்கார்ந்து நமதுபஞ்சமகுலத்திற் பிறந்தவரான ரோகிதாச ரென்பவருடைய சரித்திரத்தைக் கேட்டேன். அவர், பிராமணர் வணங்கும் உண்மைக் கடவுளை அதாவது, நமது பண்டரிபுரத்தில் கோவிலிலே இருக்கும் தெய்வத்தினிடம் பக்தி செய்து தனது கண்களினாலேயே அந்த தெய்வத்தை நேராகக் கண்டார். அவர் பூசைசெய்த விக்கிரகத்தையும், அவருடைய சந்ததியாரையும், பார்த்துவிட்டுவந்தேன். அல்லாமலும், ஸ்ரீரங்கமென்னும் ஊரிலே திருப்பாணாழ்வார் என்று ஒருவர் நமது சாதியில் பிறந்தவரே. அவரைப் பார்: பரத் தெய்வமாகிய ஸ்ரீரங்கநாதர் தனக்கு பூசை செய்யும் லோகசாரங்க முனிவனைக் கொண்டு தோளில் சுமந்துவரச் செய்து தன்னுடைய கைகளால் அவரைத் தூக்கி மார்போடணைத்து தன் உருவத்துடன் கலந்துகொள்ளச் செய்தார். அந்த பஞ்சமனுடைய திருப்பாணாழ்வார் பாடிய பத்து பாட்டும் திராவிட வேதமாகப் பெருமாள் கோவிலிலே பிராமணர்களாலே படிக்கப்படுகிறது.

அன்றியும், இன்னொரு அதிசயம்; எனது கண்களினாலே நேரே கண்டேன்: ஸ்ரீரங்கத்திலே பெரியநம்பி என்று ஒரு வேதியர் விஷ்ணுபக்தர்களுக்கெல்லாம் ஆசாரியராகிய ராமானுஜரென்பவருக்கு குருவாக விருப்பவரென்றால் அவர் யோக்கியதையை நீங்களே யோசித்துப் பாருங்கள். அப்படிப்பட்டவர் நமது பஞ்சமகுலத்திலே பிறந்த மாறனேர்நம்பி என்பவருக்கு மரணகாலம் சமீபிக்க அவரைத் தன்னுடைய வீட்டில் வைத்துக்கொண்டு அவருக்கு வேண்டிய வெல்லாம் செய்து இறந்ததும் தானே வண்டியில் அவரைப் போட்டுக்கொண்டு மயானத்தில் கொண்டுபோய்த் தனது கையாலே கர்மம்செய்ய நான் கண்ணாலே கண்டேன். இதையெல்லாம் கண்களால் கண்டும் கேட்டும் நாமும் கடவுளை அடையத் தகுந்தவரோ என்று நினைத்து ஸ்ரீரங்கத்திலேயே அந்த வைஷ்ணவ ஆசாரியராகிய ராமானுஜருடைய நேமனத்தால் வடக்குத் திருவீதிப் பிள்ளை யென்பவர் எனக்கு சரீர சுத்தி யடையும்படி பகவானுடைய சின்னமான சமாஸ்ரயணம் செய்து மந்திரோபதேசமும் செய்யப்பெற்றுக்கொண்டேன். இந்த நிலையில் இனி உங்களைப்போல என்னை இரு என்று சொன்னால் நான் எப்படி யிருப்பேன்? உங்களுக்கும் ஒன்று சொல்லுகிறேன். நீங்களும் ரோகிதாசரைப்போல கடவுளைக் கண்களால் பார்க்கத் தக்கவரே. திருப்பாணாழ்வாரைப்போல கடவுளுடன் கலக்கத் தக்கவரே. மாறநேர்நம்பியைப்போல பிராமணர்களும் ஆதரிக்கத் தக்கவரே. பூசாரி வயிறு நிறைய குடித்துவிட்டு சாமிவந்ததென்றும் ஆடும் அவனுடைய வார்த்தையை நம்பி பொய் தேவதைகளுக்குக் கும்பிடும் வழக்கத்தை இன்றோடு விட்டுவிடுங்கள். தன் வயிற்றுக்கு அநேக உயிர்கள் வேண்டுமென்னும் தேவதைகளா உங்கள் உயிரைக் காக்கப்போகிறது? பூசாரியின் ஏமாற்றத்திலே நூற்றுக்கணக்காகப் பொருளை விரயம் செய்யாதீர்கள். நமது கோவிலில் எழுந்தருளியிருக்கும் பாண்டுரங்கனைக் காலையிலெழுந்து முழுகிவிட்டு கும்பிடுங்கள். அவனிடம் உங்கள்குறைகளைச் சொல்லுங்கள். அவரே உங்களை ரக்ஷிப்பவன் என்று சொன்னார்.

இந்த வார்த்தையைக் கேட்ட பஞ்சமரில் சிலர், அவருடைய அடியில் வீழ்ந்து வணங்கி, "நீர் சொல்லுவது ஆச்சரியமாகவிருக்கிறதே? பஞ்சமர் பார்ப்பார் தெய்வத்தைத் தொழப்படாதென்பது கட்டுக்கதையா? நமது சாதியிலே பிறந்தவர் நீ சொல்லியபடி நடந்தால் மோக்ஷம் அடையமுடியுமா?" என்று கேட்டு அவருடைய வார்த்தையை நம்பி அவரையே தங்களுக்குக் குருவாக மதித்து அவருடைய சொல்வழியே நடந்துகொண்டனர். இவருடைய நற்குணங்களுக்கேற்ப ஒரு குணவதியை மணம் செய்துகொண்டு சதா பாண்டுரங்கனை பஜித்துக்கொண்டு உள்ளமுருக அவருடைய அநந்த கல்யாணகுணங்களில் ஈடுபட்டு பரம

பாகவதோத்தமராக விளங்கி வந்தார். இவர் ஒவ்வொரு நாளும் விடியற்காலத்திலே தீர்த்தமாடிவிட்டு திருமண்காப்பு தரித்துப் பரிசுத்தமான உடைதரித்துக்கொண்டு திருவாராதனம் செய்துவிட்டு பாண்டுரங்கனை ஸ்மரித்துக்கொண்டு ஆலயத்தை பிரதக்ஷிணம் செய்து கோபுரவாசலில் நின்று, உள்ளமுருக, கண்களில் ஆநந்தக் கண்ணீர் பெருக, சரீரம் புளகாங்கிதத்தினால் மூட பகவானைத் தியானித்து, "ஏ தீனபந்து! சர்வரக்ஷகனாகிய நீ இந்த ஏழையை என்று காப்பாற்றுவையோ!" என்று உம்முடைய அருளைப் பெறுவேனோ! உமக்கு எளியேன்மீது எப்போது கருணை வருமோ! உம்முடைய சேவையைக்கண்டு களிக்குங்காலம் எப்பொழுது வருமோ! ஏ கருணாநிதியே! லக்ஷ்மீ பதியே! லீலா விநோதனே!" என்று உள்ளமுருகக் கதறித் தன்னை மறந்து நிற்பார். இப்படி இவர் செய்துகொண்டுவரும் நாளில், ஒருநாள் சில வேதியர்கள் ஆலயத்தில் பண்டரிநாதனை தரிசனம் செய்துவிட்டு சன்னதி வாசலுக்கு வந்து பகவானை நினைந்து கதறும் சோகாமேளரைப் பார்த்து, "அடே பஞ்சமனான சோகாமேளா! நீ ஏன் இப்படி கதறுகிறாய்? மாடு இன்னும் பறையனிடம் மறையவர் கடவுள் வருவாரோ? நீ ஆலயத்தினுள்ளே சென்று சேவிக்கத் தகுவையோ? சுவானத்திற்கு அவிப்பாகத்திற்குரிய ஆசை ஏற்பட்டால் அது கிடைக்குமா? ஆலயத்தினுள்ளே சென்று வணங்கத்தகாத உனக்குப் பாண்டுரங்கனுடைய சேவை எப்படி கிடைக்கும்" என்று சொல்ல, இவ்வார்த்தையைக்கேட்ட சோகாமேளர் எழுந்து மறையவரைப் பணிந்து அஞ்சலியஸ்தராய் நின்று, "ஏ விப்பிரோத்தமர்களே! பஞ்சமனான நான் ஆலயத்தினுள்ளே தானிருக்கிறான் வெளியிடங்களிலில்லையென்று வேதவித்தாகிய நீங்கள் சொல்லத்தகுமோ? அவனன்றி அணுவும் அசையாதுபோமே? அவனில்லாத ஒரு பொருளிருப்பதாக எளியேனுடைய சிற்றறிவில் தோன்றவில்லை. எங்கும் நிறைந்த ஏகநாயகனை எங்கும் இருந்தும் யாரும் பஜிக்கலாம் என்றுதான் தோன்றுகிறது. அன்பர் இருதய கமலவாசனான பரம்பொருளை ஆலயத்தினுள்ளே மாத்திரம் இருப்பதாக அடிமை நினைக்கவில்லை. என் உள்ளத் தாமரையின் உள்ளேயும் இந்த ஆலயத்தின் உள்ளேயும் இருந்து என்னை ரக்ஷிக்கிறான். எனதுள்ளே என்றும் அவனுடைய திவ்விய மங்கள சொரூபத்தை எனது ஊனக்கண்ணால் புறத்தே எப்பொழுது காணப்பெறுமோவென்றுதான் ஏக்கங்கொண்டு கதறுகிறேன். கடவுளை நம்பினோர் கைவிடப்படமாட்டார். என்று தம் போன்ற பெரியோர்கள் சொல்லும் வார்த்தை பொய்யாகாது. என்று 'எனக்குப்பட்டிருக்கிறது. இன்று அவனை சேவிக்கப் பெறாதபோனாலும், வைராக்கியத்தோடு இதே சிந்தனையிலிருந்தால் பக்ஷபாதமில்லாத பரந்தாமன் அடியேனுடைய கோரிக்கையைப் பூர்த்திசெய்து வைப்பார்" என்று சொல்லி அவர்களை மீண்

டும் பணிந்து தன்னுடைய வீட்டிற்குச் சென்று பாண்டுரங்கனை சதா பஜித்துக்கொண்டிருந்தார்.

இவ்வாறு இருக்கும்பொழுது ஒருநாள் பகல்காலம் கூடிய சிற்பாடு ஆலயத்தின் கதவுகளைப் பூட்டிக்கொண்டு அர்ச்சக பரிசாரகர்கள் போனபின் பாண்டுரங்கன் யாவருடைய கண்களுக்கும் தோன்றாதவராய் வெளிப்பட்டு, தன்னை உள்ளமுருக தியானித்துக்கொண்டிருக்கும் சோகாமேளருடைய முன்னே சென்று நிற்கவும், அவர் ஆநந்த மேலிட்டால் அவருடைய சரணாரவிந்தத்தில் விழுந்து பணிந்து அநேகவாக்கியங்களால் ஸ்தோத்திரம் செய்யவும், பாண்டுரங்கன் சோகாமேளருடைய பக்திவலையில் பட்டவராய் அவரைப்பார்த்து, "ஏ பாகவத சிரோமணி! நான் போற்ற அடியாரை நினைக்கும்பொழுதெல்லாம் உன்னையே முதலில் நினைப்பேன் உன் வசமிருக்கும் என்னை தெரிசிப்பதற்கு நீ யடைந்த சிரமமெல்லாம் நானறிவேன்" என்று அவரிடத்தில் அருள் சுரந்து "உனது நினைப்பு என்னவென்று கேட்கவும், இவர் ராமானுஜருடைய சிஷ்யராதலால், அவருடைய சித்தாந்தம் சர்வேஸ்வரனிடம் காம்மிய நலத்தையோ மோக்ஷநலத்தையோ யெனக்குத் தரவேண்டுமென்று நினைத்து பக்திபண்ணாது யாதொரு அபேக்ஷையுமில்லாமல் சர்வேஸ்வரனைப் பற்றுவதென்று சொல்லியிருப்பதை நினைந்து காம்மிய நலத்தையாவது மோக்ஷநலத்தையாவது கோராமல் உம்முடைய சன்னதியில் வந்து உம்மை சேவிக்கவேண்டுமென்று வேண்டிக்கொண்டார்.

இதைக்கேட்ட பண்டரிநாதன், "என்னுடன் வா" வென்று சோகாமேளருடைய கையைப் பிடித்துக்கொண்டு தன்னுடைய கர்ப்பக்கிரகத்தின் கதவு பூட்டியபடியேயிருக்க, தனது ஆஸ்தானத்தில் சோகாமேளரை உட்காரவைத்துக்கொண்டு பேசிக்கொண்டிருந்தனர். கெர்ப்பக்கிரகத்தில் இருவர் பேசும் சப்தத்தைக் கேட்ட பரிசாரகனொருவன், பயந்து யாரோ கள்வன் உள்ளே பிரவேசித்திருக்கிறானென்று நினைத்து திருவாபரணங்கள் களவாடிப் போய்விட்டதே என்று அர்ச்சகர், ஸ்தானிகர் முதலானவர்களையும் அழைத்துவந்து சன்னதிக் கதவைத் திறந்துபார்க்க, சோகாமேளர் உட்கார்ந்திருப்பதைக் கண்டு மிகுந்த கோபமடைந்து சோகாமேளரைப் பார்த்து, "அடே பறப்பயலே! நீ எப்படி கதவு பூட்டியிருக்கும்பொழுது ஆலயத்தினுள்ளே வந்தாய்? எங்கே ஒளித்திருந்து ஆலயத்தினுள்ளே நுழைந்தாய்?" என்று அவரை வெளியில் இழுத்து வரச்செய்து அடிக்கச் சென்றபொழுது சோகாமேளர் அவர்களுடைய திருவடிகளில் சாஷ்டாங்கமாக வீழ்ந்து பணிந்து, "சுவாமிகளே! அடியேன் வரவில்லை; பாண்டுரங்கன் என் கையைப் பிடித்துக் கொண்டு சன்னதிக்கு வந்தனர். என்னை மன்னியுங்கள். இனி நான் அவர் அழைத்தாலும் வரவில்லை. ஏதோ தெரியாது

வந்துவிட்டேன்." என்று பிரார்த்திக்கும்பொழுது 'வேதியர் யாவருங்கூடி இதற்கு என்ன செய்கிறது? இவன் வழியிலே ஆலயத்திற்கு வந்தால் நாம் கோபிக்கலாம். நமது பண்டரிநாதனே அக்கிரமம் செய்தால் நாம் யாவரை நொந்துகொள்ளுகிறது? நமது ஆலயத்திற்கு ஏற்பட்ட பெருமையெல்லாம் பாழாய்ப் போய்விட்டது. பஞ்சமனை கெர்ப்பக்கிரகத்தில் கூட்டிக்கொண்டு வைத்து இவர் பேசிக்கொண்டிருந்தால், நாம் இவரைத்தொட்டு எப்படி ஆராதனை செய்கிறது. இன்று சம்புரோக்ஷணை செய்து திருவாராதனம் செய்வோமென்றால், நாளை இவனைக்கூட்டி கர்ப்பக்கிரகத்திலிவைத்துப்பேசினால், ஒவ்வொருநாளும் சம்புரோக்ஷணை செய்வதா? இதற்கு ஒரு தகுந்த ஏற்பாடு செய்யவேண்டும். இவன் இந்த பண்டரிபுரத்தின் எல்லையிலிருக்கும்வரை இந்த துன்பம் ஒவ்வொருநாளும் உண்டு. ஆகையினால், இவனை இந்த ஊரின் எல்லையைவிட்டு அகற்றிவிடவேண்டும். என்று தீர்மானித்துக் கொண்டு சோகாமேளரைப் பார்த்து, நீ இந்த ஊரின் எல்லையிலேயே யிருக்கப்படாது. நீ இருந்தால், ஆலயமும் பாண்டுரங்கனும் உன்னாலே சம்புரோக்ஷணை செய்யும்படி ஏற்படுகிறது. ஆதலால் இந்த ஊரின் எல்லையைக் கடந்து பீமநதிக்கு அக்கரையில் குடிசை கட்டிக்கொண்டிரு" என்று சொல்லவும், சோகாமேளர், அவர்கள் திருவடியில் வீழ்ந்து வணங்கி சுவாமிகளே! நீங்கள் அடியேனுக்கு இப்படி கொடூரமாகிய தண்டனையை விதிப்பது நீதியா? சொர்க்கானுபவம் செய்துக் கொண்டிருப்பவனை திடீரென்று நரகத்தில் தள்ளியதுபோல பூலோக வைகுண்டமாக நான் நினைக்கும் பண்டரிபுரத்தில் இருக்கின்ற என்னை இந்த ஊரைவிட்டுத் துரத்துகின்றீர்களே? உங்கள் சன்னதிக்கு வந்தால் தானே சன்னதி தீட்டமாய் விடுகிறது? நான் அவர் அழைத்தாலும் சன்னதிக்கு வருவதில்லை என்கிறேனே? நான் வராது இந்த ஊரிலிருந்தாலுமா சன்னதி தீட்டாய்விடுகிறது? இங்கு இருந்தாலன்றி, பகவானை பிரதக்ஷணம் செய்வதாவது முடியுமா? எனக்கு மோக்ஷமென்று நினைப்பதெல்லாம் இந்த ஆலயம் வலம் வருவதேயன்றி வேறொன்றில்லை. ஆகலால், இந்த அடிமையினிடம் கருணைகூர்ந்து இந்த ஊரில் இருக்கும்படி கிருபை செய்ய வேண்டும். உங்களை சரணாகதி செய்கிறேன்" என்று பிரார்த்தித்தார்.

இந்த வார்த்தைகளைக் கேட்ட வேதியர்கள் யாவரும் கோபத்தோடு, "அடே! பறப்பயலே! நீ ஆலயத்தில் வந்து, கர்ப்பக்கிரகத்தில் உட்கார்ந்ததுமன்றி எங்களுடன் எதிர்வழக்கு தொடுக்கின்றாயா? இந்த ஆலயத்திலிருந்து உயிருடன் திரும்பி உன் வீடு சென்றவனன்றோ நாளை இந்த ஆலயத்தை சுற்றிவரப் போகிறாய். நாங்கள் நீ செய்த குற்றங்களையெல்லாம் மன்னித்து நீர் இந்த ஊர் எல்லையைவிட்டு கடந்து பீமநதிக்கரைக்குப்போய் குடிசை

கட்டிக்கொண்டிரு என்றால், இதற்கா ஆக்ஷேபிக்கிறாய்? இப்பொழுதே உன் உயிரை வாங்கிவிடுகிறோம். ஒரே சம்புரோக்ஷணையாக போய்விடட்டும்" என்று சொல்லிக்கொண்டு குடைக்காம்புகளையும், கருட்டுத் தடிகளையும், விறகு கட்டைகளையும், எடுத்து ஓங்கிக்கொண்டு அடிக்க வருவதைக்கண்டு சோகாமேளரானவர், அவர்கள் பாதத்தில் விழுந்து பணிந்து; "சுவாமிகளே! என்னை மன்னியுங்கள் நான் இந்த நிமிஷமே இந்த ஊரைவிட்டு பீமநதிக்கரைக்கு போய்விடுகிறேன். இந்த ஊரின் எல்லையை அடியேன், இனி மிதிக்கமாட்டேன்" என்று சொல்லிவிட்டு தன் ஊருக்கு வந்து மனைவியையும் அழைத்துக்கொண்டு பீமநதியின் அக்கரையிலே குடிசை கட்டிக்கொண்டு வாழ்ந்து வருவாராயினர்.

சன்னதியிலுள்ள அர்ச்சக பரிசாரகர்களால் விடப்பட்டு பீமநதிக்கரையிலே எழுந்தருளியிருக்கும் சோகாமேளர், பாண்டுரங்கனை, சதா சர்வகாலமும் பஜித்துக்கொண்டு அவருடைய அருளை அடைய விரும்பினவராதலால் தனக்கு பண்டரிநாதன் சன்னதியை வலம் வராது போயதிற் காரணத்தை நினைந்தார். அதாவது, "நான் ராமாநுஜருடைய சிஷ்யனாகயிருந்தும் அவருடைய கொள்கைக்கு மாறாக நடந்ததினாலேயே பண்டரிநாதனுடைய திவ்விய தேசமாகிய பண்டரிபுரத்தில் பிறந்திருந்தும் பண்டரிபுரத்தின் எல்லையைவிட்டு வெளியில் வந்துவிடநேர்ந்தது. இந்த சரீரமும் உயிரும் பண்டரிநாதன் சன்னதி வாயிலில் கிடப்பதை யிழந்தது. அவருடைய திருக்கோயிலை வலம்வர அதிர்ஷ்டம் செய்யாது போயிற்று. அவர் சித்தாந்தத்தின் விஷ்ணுபக்தர்கள் பகவானை பஜிக்கும்பொழுது அவரால் ஒன்றை அடையவேண்டுமென்றும், விருப்பம் கொள்ளக்கூடாது என்றிருக்க பஞ்சமனான நான் பாண்டுரங்கனிடம் உனது சன்னதியில் வந்து சேவிக்க வேண்டும் என்று சொன்னது எவ்வளவு தப்பிதமான காரியம் இது ராமானுஜனுடைய கொள்கைக்கு முற்றும் விரோதமானது அன்றோ! அதினாலேயே இந்த பீமநதிக்கரையில் குடிசை கட்டிக்கொண்டு வாழவேண்டியதாயிற்று" என்று நினைந்து 'இனி அவருடைய கொள்கைகளுக்கு மாறாக நடக்கப்படாது. அவருடைய உண்மை தத்துவத்தையே கடைப்பிடிக்கவேண்டும் விரோதியானாலும் அவனை உறவினராக பாவிக்கவேண்டும். எந்த வஸ்துவும் சர்வேஸ்வரச் சொரூபமாக நினைக்கவேண்டும்" என்று நினைந்துகொண்டு தனது மனைவியுடனே பாண்டுரங்கனை தியானித்துக்கொண்டிருந்தார்.

இவ்வாறிருக்கும்பொழுது ஏகாதசி வந்தது. அதற்கு முதல் நாளிலேயே உபவாசம் துவக்கி ஏகாதசியன்று பூராவும் பகவானை தியானித்து பகவன்நாம சங்கீர்த்தனம் பண்ணிக்கொண்டிருக்கும்போதே பாண்டுரங்கன் அவர் முன்னே தோன்றி, "சோகாமேளரே! உம்மைக் காணாது கண்கள் பூத்துவிட்டன,

இன்றுதான் உம்மைக் காணப்பெற்றேன். நாளை பாரணை உமது வீட்டிலேயே வைத்துக்கொள்ளப்போகிறேன்" என்று சொல்லி விட்டு மறைந்தார். சோகாமேளர் இந்த வார்த்தையைக் கேட்டு பரமாநந்த மடைந்தவராய்த் தனது மனைவியை அழைத்து 'பெண்ணே! நாளை நமது வீட்டிலே பண்டரிநாதன், பாரணை பண்ணப் போவதாய்ச் சொல்லிவிட்டுப் போயினர். நீ நன்றாய்த் தளிகைப் பண்ணிவை" என்று நியமித்துவிட்டு விடியற்காலமே எழுந்து தீர்த்தமாடித் தனது திருவாராதனமூர்த்திக்கு திருமஞ்சனம்செய்து அலங்காரம்பண்ணி திருவாராதனம் செய்துக்கொண்டிருக்கும்பொழுது பீதாம்பரதரனாய் பாண்டுரங்கன் எழுந்தருளி வந்து "சோகாமேளரே! திருவாராதனம் நடக்கிறதா? தளிகையாய்விட்டதா?" என்று கேட்க, இவ்வார்த்தையைக்கேட்ட சோகாமேளர், திரும்பிப்பார்த்து பாண்டுரங்கன் எழுந்தருளியிருப்பதைக் கண்டு, பரமாநந்தமடைந்து அவருடைய திருவடிகளில் வீழ்ந்து தண்டம் சமர்ப்பித்து "இந்த ஏழை பஞ்சமனிடம் உமக்குக் கருணைவந்ததோ? பதினான்கு உலகத்திலும் இரக்ஷகனான நீர் என்னுடைய குடிசையில் தங்கி பாரணை செய்யத் திருவுள்ளமாயதோ? தேவாதிதேவனே! பக்த பராதீனனென்னும் உமது திருநாமத்தின் பெருமையை வெளிப்படுத்த அடியேனுக்கு விருந்தினராய் பாரணை செய்ய வந்தீரோ? பஞ்சமன் வீடு என்னும் பேதத்தை மறந்தீரோ? என்று உள்ளமுருக அவருடைய அனந்த கல்யாணகுணங்களைக் கொண்டாடிக்கொண்டே திருவாராதனத்தை முடித்ததும் பகவானும் தானுமாக பாரணை செய்தார்கள். பாண்டுரங்கன் சோகாமேளருடனே சமபந்தியிலிருந்து அமுது செய்துவிட்டு, அவரால் கொடுக்கப்பட்ட சந்தன தாம்பூலத்தைப் பெற்றுக்கொண்டு "அடுத்த பாரணைக்கு வருகிறேன்" என்று சொல்லிவிட்டு பண்டரிபுரத்திலுள்ள தனது சன்னிதிக்கு எழுந்தருளினார்.

சோகாமேளர் தனது பாக்கியத்தை நினைந்து ஆநந்தமடைந்தவராய்பாண்டுரங்கனை யதவாதமும் சிந்தித்துக்கொண்டிருந்தார். உலகரக்ஷகனான ருக்மணிநாதன், அடுத்த துவாதசி அன்று சொல் தவறாது வந்து பாரணைவிரதத்தை சோகாமேளர் குடிசையிலே வைத்துக்கொண்டு அவருடன் உட்கார்ந்து அவருடைய பத்தினியால் பரிமாறப்பட்ட பிரசாதத்தை சுவீகரித்துக்கொண்டு வழக்கம்போல் சந்தனதாம்பூலம் வாங்கிக்கொண்டு ஆலயத்திற்கு எழுந்தருளினார். இப்படி நடந்துவரும்பொழுது இந்த சோகாமேளருடைய பக்தியை வெளிப்படுத்த விரும்பிய பாண்டுரங்கன், ஒரு ஏகாதசியன்று சோகாமேளரும் அவர் பத்தினியும் பஜனை பாடிக்கொண்டிருக்கும்பொழுது அவர்களுக்கு நித்திரை வரும்படி செய்ய, இருவரும் பகவன்நாமபஜனம் செய்துக்கொண்டிருக்கும் பொழுதே படுத்துத் தூங்கிவிட்டனர். கோழி கூவிற்று. பல பக்ஷி

கள் மரங்களில் இருந்து கூவின. பீமநதிக்கு தீர்த்தமாட வந்தவர்களுடைய வேஷ்டி துவைக்கும் ஓசை பெரும்பாலாயிற்று. சோகாமேளர் அப்பொழுது திடீரென்று கண்விழித்து, "அந்தோ! பொழுது விடிந்துவிட்டது, நாம் நன்றாகத் தூங்கிவிட்டோமே, இன்று துவாதசியாயிற்றே! பாண்டுரங்கன் பாரணைபண்ண எழுந்தருளுவாரே! என்னசெய்வது" என்று நினைத்துத் தனது மனைவியை எழுப்பி, "நீ ஏது இப்படி தூங்கிவிட்டாய்? இன்று பாண்டுரங்கன் பாரணைக்கு எழுந்தருளும் தினமல்லவா? இதற்குள் ஆலயத்திலிருந்து எழுந்தருளி வருவாரே? நீ எப்பொழுது தீர்த்தமாடி தளிகை பண்ணப்போகிறாய்? நீயென்ன பெரும் பைத்தியக்காரி" என்றுகேட்க, அவ்வம்மையார், "நாதா! நானென்ன செய்வேன்? ஒருநாளுமில்லாத தூக்கம் எனக்கு வந்து என்னைக் கெடுத்தது. நான் என்னையறியாது தூங்கியதும், பகவான் பாரணைக்கு வருவாரே என்பதை மறந்ததும் என் குற்றமே. ஆனால் நான் சுய அறிவோடும் அகம்பாவத்தோடும் அவர் வருகையை மறந்து நான் தூங்கினவளல்ல. அவரே அறிவார். நான் இதோ தீர்த்தமாடி வருகிறேன்" என்று சொல்லிவிட்டு பீமநதிக் கரைக்குச் சென்றாள்.

சோகாமேளர் தனது மனைவியுடன் சொன்ன வார்த்தைகளை எல்லாம் பீமநதிக்கரையில் தீர்த்தமாடி வந்த வொருவேதியன் கேட்டு மிகுந்த கோபங்கொண்டு "பறப்பயலுக்குள்ள அக்கிரமத்தைப்பார்? விடிந்தெழுந் திருக்கும்பொழுது நம்மைப் பார்த்துவிட்டு பரிகசிப்பவனாய் தன் பெண்சாதியைப் பார்த்து" பண்டரிநாதன் சாப்பிட வருவாரே? நீ தூங்குகின்றாயே? நீ என்ன பைத்தியக்காரி" என்று வைகிறான். இவன்வீட்டில் பண்டரிநாதன் சாப்பிடுவதாக பயமில்லாமல் சொன்ன இவனைச் சரியானபடி தண்டிக்கவேண்டும். இல்லாவிடில் இந்த வேஷக்காரப் பறையன் சரியாய் வழிக்கு வரமாட்டான் என்று பொழுது விடிந்ததும் நமது அரசனிடம் சொல்லி சிக்ஷைசெய்து வைக்கவேண்டும்" என்னும் கோபத்தோடு தீர்த்தமாடிவிட்டு தனது வீட்டிற்குச் சென்று பாரணை பண்ணிவிட்டு நேரே அரசனிடம் சென்று, "என்ன அநியாயமாக யிருக்கிறது? இந்த இராஜ்ஜியத்திலே பிராமணர் தங்கி யிருப்பதற்கு நீதியில்லை" என்று கூக்குரலிடவும், அரசன் பார்த்து "என்ன நடந்தது? அதைச் சொல்லாமல் கூக்குரலிடுகின்றீரே? விஷயத்தைச் சொல்லும்" என்று கேட்கும்பொழுது, "அரசே! பீமநதிக் கரையில் பண்டரிபுர வாசிகளாலே விரட்டப்பட்டு குடிசைக் கட்டிக்கொண்டு இருக்கும் சோகாமேளர் என்னும் புலையன் என்னைப் பார்த்துவிட்டு தூங்கிக்கொண்டிருக்கும் தனது மனைவியை யெழுப்பி, "அடி! இன்னுமா தூங்குகிறாய்? இன்று பாண்டுரங்கன் நம்மிடம் பாரணை பண்ண வருவானே? இன்னும் சமயல் ஆகவில்லையோ?"

என்று என் காதுகளில் கேட்கவேண்டுமென்று ஓங்கிய குரலுடன் சொல்லி பரிகசிக்கிறான். அந்த அகம்பாவம் பிடித்த பறையனை தக்க தண்டனை செய்யாதுபோனால் எங்களுக்கு பண்டரிபுரத்திலே இருக்க நீதியில்லை" என்று சொல்லவும், அரசன் இந்த வார்த்தைகளைக் கேட்டு, கோபத்தால் இருகண்கள் சிகப்பேற, தனது பக்கத்திலிருக்கும் இரண்டு சேவகரைப் பார்த்து "இந்தக் கணமே இந்த வேதியர் சொல்லும் சோகாமேளரென்னும் பறையனை என்முன் கொண்டுவாருங்கள்" என்று ஆக்ஞையிடவும், இருவரும் பீமநதிக்கரையிலே குடிசை கட்டிக்கொண்டிருக்கும் சோகாமேளரிடம் வந்து, "அடே! பறப்பயலே! வெளியில் வா? உன்னை கைதி செய்துக்கொண்டு வரும்படி அரசருடைய ஆக்ஞை. எம்முடன் புறப்படு; இல்லையேல், உன்னை உதைத்து இழுத்துக் கொண்டு செல்வோம்" என்று சொல்லவும், இவ்வார்த்தையைக் கேட்ட சோகாமேளர், அச்சேவகர்களைப் பார்த்து, "ஐயா! நான் ஒரு குற்றமும் செய்யவில்லையே? அப்படியிருக்க, அரசருடைய கோபம் என்மீது ஏற்பட காரணமில்லையே?" என்று கேட்க, சேவகர்கள் "அது எங்களுக்குத் தெரியாது. அரசனிடம் நீ கேட்டுக்கொள் எங்களுடன் புறப்படு" என்று கடுகடுத்துச் சொல்லவும் வார்த்தைகளைக் கேட்டு நடுக்கமுற்று அவர்களுடன் சென்று ராஜசபைக்கு வெளியே நின்று அரசனைப்பணிந்தார். அப்பொழுது ஒரு சேவகன் சென்று அரசனைப் பணிந்து "அரசே! தாம் இட்ட ஆக்ஞையின்படியே சோகாமேளர் என்னும் பறையனைக் கொண்டுவந்திருக்கிறோம்" என்று சொல்ல, அரசன் எழுந்து நியாய சபைக்கு வெளியேவந்து சோகாமேளரைப் பார்த்து "அடே பறப்பயலே! இன்று விடியற்காலம் இந்த வேதியர் பீமநதிக்கு குளிக்க வந்திருக்கும்போது இவரைப் பார்த்து என்ன சொன்னாய்? உண்மையைச் சொல்? உன் உயிரை வாங்கி விடுவேன்" எனக் கோபத்தோடு கேட்டான்.

இதைக் கேட்ட சோகாமேளர் நடுக்கமுற்று, "அரசே! இந்த மறையவரை நான் பார்த்ததில்லையே இவரை இப்பொழுதுதான் பார்க்கிறேன்" எனக்கூற, அரசன் வேதியரைப் பார்த்து, "இவன் உம்மைப் பார்த்ததில்லையென்கிறானே, நீர் என்ன சொல்லுகிறீர்" என்றனன். அந்தணன் சோகாமேளரைப் பார்த்து, "இன்று விடியற்காலம் நான் பீமநதிக்கு தீர்த்தமாட வந்தபொழுது என்னை நீ பார்க்கவில்லையா? பார்த்துவிட்டு என்னை பரிகாசமாக உனதுமனைவியிடம் 'இன்று நமதுவீட்டிற்கு பாண்டுரங்கன் பாரணை பண்ண வரப்போகிறான். நீ தூங்குகிறாயே; இன்னும் தளிகை செய்யவில்லையே' என்று சொல்லவில்லையா? உண்மையைச் சொல்" என்று சொல்ல, சோகாமேளர் அரசனைப் பணிந்து, "அரசர் பெருமானே! நான் இவரைப் பார்த்ததில்லை. ஆனால் இவர் சொல்லியபடி எனது மனைவியினிடம் சொல்லியது

உண்டு" என இயம்பவும், அரசன் கோபமுற்று "அடே! பறப்பயலே! பாண்டுரங்கன் உன்னுடைய குடிசையில் வந்து உன்னுடன் உட்கார்ந்து பாரணை பண்ணுவாரா? உன் வாயால் பாண்டுரங்கனென்று நீ சொல்லலாமா? இவ்வளவு அகந்தையா உனக்கு? உன்னை என்ன செய்கிறேன் பார்" என்று தனது சேவகர்களை அழைத்து "இவனைக்கொண்டுபோய்க் காட்டிலே யெதேச்சையாய்த் திரிந்துகொண்டிருக்கும் எருது மந்தையில் தள்ளிவிட்டு வாருங்கள்" என்று உத்திரவிட்டான். அக்கணமே அந்த சேவகர்கள் சோகாமேளரை அழைத்துக் காட்டில்கொண்டுபோய் மனிதர்களைக் கண்டதும் நம்மைப் பிடிக்கவே வந்தனரென்று நினைத்து கண்களில் கண்ட மனிதரைக் குத்திக்கொல்லும் எருதுக் கூட்டத்தில் விட்டுவிட்டு ஒதுங்கிநின்றார்கள்.

அப்பொழுது சோகாமேளர் நிரபராதியாகிய தன்னைக் குற்றவாளி என்று கருதி ஒரு பிராமணன் வார்த்தையைக் கேட்டு தன்னைக் கொல்லக் கருதிய கொடுங்கோன்மையை நினைந்தும், பக்தவற்சலனுன பரந்தாமனது கருணைப்பிரவாகத்தை நினைந்தும், பகவானைத் தோத்திரம் செய்ய ஆரம்பித்தார். "எ தீனபந்து, உனது அடியார்கள் குற்றம்செய்யினும், அதை அவர்கள்செய்த குற்றமல்லவென்றும் நீ செய்யும் குற்றமென்றும், கருதுகின்ற உமக்கு எளியேன் குற்றவாளியென்று தோன்றின், இந்தகொடிய எருதுகள் என்னைக் கொல்லட்டும் உமது மனமறிய நான் குற்றவாளி யல்லவென்று தோன்றின், என்னைக் காப்பது உன் கடனன்றோ? கருணாகரா! அரசன் ஒரு தலையாகநின்று வழக்குச் சொல்லின் அதுவும் நின் குற்றமேயாகும். என்னையெனில், 'நாவிஷ்ணுப் பிருதி விபதி' என்று வேதவாக்கியம் கூறுகின்றதன்றோ! ஆதலின் அரசன் உன்னுடைய அம்சம்பெற்றவனாயின் அவன் செய்யும் குற்றமும் நீ செய்யும் குற்றமேயாகும். அக்குற்றத்தினை நீ அடைந்திடப்போமோ? அடியேனால் நீ குற்றவாளியாகவேண்டுமாயின், இந்த எருதுக்கூட்டங்கள் என்னைக்கொல்லட்டும். உனது நாமத்தை விடாதுபோற்றிய பிரஹலாதாழ்வாரையும், உன் நாமத்தை ஒருகால் சொன்ன கஜேந்திரனையும் ஒரு பக்ஷமாகக்கருதி, பிரஹலாதாழ்வானையும், ஐராவதம் என்னும் யானை குத்திக்கொல்ல வரும்போது காத்தனை. கஜேந்திரனை முதலை விழுங்குங்காலத்தில் அதனையும் காத்தனை. ஒருகால் சொல்லினும் உனதடியரென்று கருதி, அவர்கள் இடுக்கண் தீர்க்கும் அருட்பெருந்தகையான உனக்கு என்னையும் காப்பது உன் கடனேயாம். எ கிருபாநிதி! இந்த அரசன் என்னைக் குற்றவாளியென்று கருதி கொலை செய்யும் எருதுகள் கூட்டத்தில் விட்டு கொல்லக்கருதினாலும், அவரும் உமது பக்தனே. என்னையெனின், வேதியர் பூசிக்கும் கடவுளாகிய உம்மை நான் பூசிப்ப

தாகப் பேசினேன் என்னும் குற்றத்திற்காக உன்னிடத்திலுள்ள
பிரேமையால் நீ இதை நன்கு விசாரியாமல் என்னைக் கொலைசெய்
யக்கருதினான். ஆதலின், அவனும் உனது பக்தனே. அந்த
மன்னனுக்கு நீதிதுரந்தரனென்னும்பெயர் நிலைத்திருக்கவேண்டு
வது உன்கடனேயாம். ஆதலின், என்னை இரக்ஷித்து உமது அடிமை
யாகிய அந்தமன்னவனையும் காத்தருளும்" என்று பிரார்த்தித்தார்.
இவ்வாறு சோகாமேளர் பிரார்த்திக்கும் பொழுது பலதிசைகளி
லும் திரிந்து மேய்ந்து கொழுத்திருக்கும் ரிஷபங்கள் தமது
காட்டில் ஒருவன் வந்து நிற்பதைக்கண்டு இவன் நம்மைப்பற்ற
வந்தவனென்று நினைத்து, இவனுயிரை மாய்ப்பதற்கெண்ணி,
கண்களில் கனல்பொறிபறக்க விழித்துக்கொண்டு வாலை மேலே
தூக்கி கோபத்தோடு குத்திக்கொல்ல நெருங்கி வரும்பொழுது
சோகாமேளர் அதைக்கண்டதும், தமது இளம்பிராயத்தில் தம்
தாய்பசுவைக் கண்டதும், எத்தகைய அன்புபாராட்டுமோ அதே
போல அன்புகாட்டி சோகாமேளரை சுற்றிவந்து தமது நாவால்
நக்கி முன்னே நின்று துள்ளி விளையாடிக்கொண்டு இருந்தன.
இதைக்கண்டு சேவகர்களில் சிலர் இந்த அற்புதத்தைத் தெரி
விப்பதற்கு அரசனிடம் ஓடினார்கள்.

இப்படியிருக்க பீமநதிக்கரையில் குடிசை கட்டிக்கொண்டு
பகவத் குணத்தில் ஈடுபட்டு சதாவும் பண்டரிநாதனையே தியா
னித்துக்கொண் டிருப்பவராகிய சோகாமேளரது மனைவியான
வள், தனது நாயகரை இராஜசேவகர்கள் அழைத்துச்சென்றது
முதல் ஆற்றொணாத் துயர்க்கடலில் ஆழ்ந்தித் தனது கணவர் வரு
வரோ என்று நெடுநேரம் பார்த்தும் வராமையை நினைந்து,
நமது நாதருக்கு அரசனால் ஏதாவது தண்டனை விதிக்கப்பட்டி
ருக்கும், இல்லையேல், இவ்வளவுநேரம் தாமதித்திருக்கமாட்டார்.
நாமேசென்று விசாரித்து அவருக்கு ஆபத்துவந்து உயிர் துறக்க
நேரின் நாமும் நமது உயிரை துறந்துவிடுவோம் என்று துணி
ந்து இராஜனிருக்கும் நகரத்தை யடைந்து தெருவிலுள்ளவர்க
ளைப் பார்த்து, "ஐயா! எனது கணவர், விஷ்ணு சின்னம் தரித்த
வர், அவரை இராஜ சேவகர்கள் அரசர்பெருமானிடம் அழைத்
துவந்தார்கள். அவருக்கு மன்னர்பிரான் என்ன தண்டனை விதித்
தார்? உங்களில் யாருக்காவது தெரிந்திருந்தால் இந்த அடிமை
மீது கருணைகூர்ந்து சொல்லவேண்டும்" என்று கண்களில் நீர்
சொரிய பூமியில் விழுந்து புரண்டழுதாள். அப்பொழுது
இராஜசபையி லிருந்து வந்துக்கொண் டிருந்த வொருவர்,
பெண்ணே! நீயார்? அந்த சோகாமேள னென்பவனுடைய மனை
வியா? ஐயோ பாவம்! உனது கணவனை இனி நீ காணப்போகி
றாயா? அவனைக் குற்றவாளியென்று மதித்து காட்டில் திரியும்
எருதுக்கூட்டத்தில் தள்ளிவிடும்படி இராஜன் உத்திரவு செய்ய

அதன்படியே சேவகர்கள் அவனைக் காட்டிற்கு அழைத்துச்
சென்றுவிட்டனர். இதற்குள் அவன் இறந்திருப்பான். அவனு
டைய பிரேதசரீரத்தைக்கூட நீ பார்க்கமுடியாது, நீ அங்கு சென்
றால், அந்தப் பொல்லா எருதுகள் உன்னையும் குத்திக் கொன்று
விடும். நீயாவது பிழைத்துப்போ" என்று சொல்லவும், இவ்
வார்த்தையைக் கேட்டதே, இடி ஓசை கேட்ட நாகம்போல்
சுருண்டுக் கீழே விழுந்தனள். கருவி கரணங்களெல்லாம் சோர
வும், மூர்ச்சை யடைந்தனள். புலைய நங்கையான இவளிடம்
சென்று எவரே மூர்ச்சை தெளிவிப்பவர் ஒருவாறு தனக்குத்
தானே தேறி எழுந்து தனது கணவனை நினைந்து பிரலாபிக்கத்
தொடங்கினாள்.

"எனதன்பனே! அடியாள் பணிசெய்ய, சதாகாலமும் பக
வானையே வந்தித்துக்கொண்டிருந்தவராகிய உம்மை என்ன கார
ணத்திற்காகக் கொலை செய்ய நேர்ந்தது! பிறருக்கு நேரும்
துன்பங்களையெல்லாம் தனக்கு வந்ததாகக் கருதியும், ஒவ்
வொரு ஜீவராசிகளையும் பண்டரிநாதனாகிய பாண்டுரங்கனைப்
போல் பார்க்கும் எனது ஆருயிரே! கொடிய காட்டெருதுகள்
உம்மைக் குத்திக்கொல்ல மனந்துணிந்ததோ! தமியேனை பரித
விக்கவிட்டு அரசதண்டனையால் உயிர் துறந்தீரோ! சர்வரக்ஷக
னை பாண்டுரங்கன் நிரபராதியான உம்மைக்காக்க மனமிலாது
போயினரோ! அல்லது உமக்குவந்த ஆபத்தை அவர் உணராது
போயினரோ! அப்படிப்போனால் அவரை சர்வவியாபகனென்று
கூறுவது தகுமோ! அன்றி உம்மைப்போல வேறு அடியவர் உம்
மினும் மேலான துன்பநிலையிலிருக்க அவரைக் காப்பதற்குச்
சென்றனரோ! அப்படிச் சென்றாலும், உம்மைப்பார்க்கும் தன்
மையுடையவரோ! மறந்தவராகின் அவருடைய பேரறிவுடைமைக்
குக் குற்றம் வராதோ? கண்ணனே! அடியவர் நினைக்கும்பொழு
தெல்லாம், அவரவர் நினைத்தபடியே ஓடிச்சென்று ஆதரிக்க
வல்ல பாண்டுரங்கனுக்கு உம்மை இரக்ஷிக்க மனமிலாதுபோன
காரணம் யாதோ! பிராணநாதா! இன்று நீர் அவரை நினையாது
நமது உயிரை மாய்த்துக் கொள்ளுவதென்று துணிந்துவிட்
டீரோ! எனது காதலரே! நீர் அவரை மறந்தீராயினும் அவர்
உம்மை மறப்பரோ! பெற்ற தாயினைப் பிள்ளை மறந்தாலும்,
தாயானவள் தான் பெற்ற பிள்ளையை மறந்தாலும் உலோக
ரக்ஷகனான சர்வேஸ்வரன் தனது அடியவரை மறவாரோ!
அநியாயமாக நீர் இன்று எருதுகள் கொல்ல இறப்பீரோ!
என்று ஏக்கமுற்று மண்ணில் விழுந்து புரளுவாள். தனது
வயிற்றில் கரங்களைக்கொண்டு மோதுவள். தனது உயிரைமாய்
த்துக்கொள்ள துணிவள். எழுந்து கணவன் இறந்த காட்
டிற்கு ஓட யெண்ணுவள். நடக்கக் கால்கள் வராது தள்ளாடி
விழுவள். மன்னனுடைய அநீதியை உணர்ந்து அந்த விதியி

லுள்ள சுவர்களில் முட்டிக்கொள்ளுவாள். மீண்டும் அறிவு கொண்டு நமது கணவனைக் கொன்ற எருதுக்கூட்டத்தில் நாமும் சென்று கணவனுடைய பிரேத சரீரத்தையும்கண்டு மேல்விழுந்து உயிர் துறப்பதென்று நினைந்து அந்த கானகத்தை நோக்கி ஓடினாள்.

இப்படியிருக்க எருதுக் காட்டிலிருந்துவந்த சேவகர்கள் அரசனைக் கண்டு அவரடியில் விழுந்து பணிந்து எம்பெருமானே! தங்களுடைய ஆக்ஞையின்படியே சோகாமேளரைக் கொண்டுபோய் எருதுக் காட்டில் விட்டுவிட்டு நாங்கள் தூர நின்றுகொண்டிருந்தோம். அப்போது எருதுக்கூட்டங்கள் அடங்காத கோபத்தோடும் கண்களில் தீப்பொறி பறக்கவந்து அவன் பக்கம் சேர்ந்ததும், அவனை முகர்ந்துபார்த்து அன்புபாராட்டி நாவினால் நக்கி முன்னே நின்று துள்ளிவிளையாடிக் கொண்டிருக்கின்றன. இதைத் தமக்குத் தெரிவிக்க வந்தோம்" என்று சேவகர்கள் சொல்லவும், அரசன் அதைக்கேட்டு ஆச்சரியத்தை யடைந்து, சோகாமேளரென்பவர் பரமபாகவதராக இருக்கவேண்டும். இல்லையேல், பாண்டுரங்கனால் விரும்பப்பட்ட அவரது அன்பனாகவாவது இருக்கவேண்டும். அந்தோ! நிரபராதியாகிய சோகாமேளரிடம் கேவலம் சாதி அவேசத்தைப் பாராட்டி ஒரு பார்ப்பானுடைய வார்த்தையை நம்பி நான் நீதி தவறியவனாய்விட்டேனே! ஆ! அரசனானவன் தன்னைச் சார்ந்தவரையும் அன்னியரையும் ஒன்றாகக் கருதவேண்டுமென்றும், வேதியர் உயர்ந்தவரென்கருதி ஒரு வழக்குசொன்னால் அவன் கொடுங்கோன் மன்னனாவானென்றும், செங்கோலும் கொடுங்கோலாகுமென்றும், சுருதிவாக்கியங்கள் சொல்லக் கேட்டும், நான் கொடுங்கோன் மன்னனாயினேனே! என் செய்வேன்" எனப் பலவாறு எண்ணி மனம் வருந்தி சேவகர்களை நோக்கி, "நீங்கள் அந்த சோகாமேளரென்னும் பஞ்சமனை மரியாதையோடு அழைத்து வாருங்கள்" என்று உத்திரவிடவும், சேவகர்கள் இராஜ உத்திரவை ஏற்று சோகாமேளரிருக்கும் எருதுக் காட்டிற்குச் சென்று சோகாமேளரை அழைத்து வரும்பொழுது தனது மனைவி தன்னைத்தேடி அழுது வருவதைக்கண்டு, "ஏ பெண்ணருங்கலமே! ஏன் அழுகிறாய்? நான் வந்துவிட்டேன்" என்று சொல்லிக்கொண்டே, தனது காதலியிடம் வந்து நடந்ததையெல்லாம் சொல்லி, அவள் சோகத்தை மாற்றி, அவளையும் அழைத்துக்கொண்டு அரசனது கொலுக் கூடத்தின் முன்னே வந்து நின்றார்.

அரசன் அவரைக் கண்டதும் எழுந்து சென்று, "நீ பஞ்சமனென்று உம்மைத் தாழ்மையாக மதித்து உமது பெருமையை அறியாது உமக்குக் கொடுமையான தண்டனையை விதி

த்து எனது நீதியையும் இழந்தேன். உம்மால் வெறுக்கப்பட்டவனுமாயினேன். அடியேன் செய்த குற்றத்தை மன்னித்தருளவேண்டும்" என வேண்டவும், சோகாமேளர் அரசனைப் பணிந்து, மன்னர் பெருமானே! நீரும் நமது பாண்டுரங்கனிடம் கொண்ட அன்பின் பெருக்காலேயே நான் அவரை அவமதித்துப் பேசுகிறேனென்று மதித்து எனக்கு இத்தகைய தண்டனையை விதித்தீர். எல்லாம்வல்ல சர்வேஸ்வரன் உமது நீதிக்கும் எனது உயிருக்கும் பங்கம் வராது காத்தருளினர் என்று அரசனிடம் சொல்லி விடைபெற்றுக்கொண்டு தனது மனைவியுடன் தன்னுடைய குடிசைக் கெழுந்தருளினர்.

சோகாமேளர் பாண்ரேங்கனுடைய சன்னதிக்கு எழுந்தருளிய அத்தியாயம்

அரசனுடைய கொடுங் குற்றத்திலிருந்து விடுவிக்கப்பட்ட சோகாமேளர் தனது மனைவியுடன் பீமநதிக்கரையில் கட்டியிருக்கும் தனது குடிசைக்கு வந்ததும் தன் உள்ளம் பூராவும் பாண்டுரங்கனைப்பற்றி நிற்க வேறு சிந்தனையில்லாமல் பகவத்தியானபரராய் எழுந்தருளி யிருக்கும்பொழுது பக்தி வலையில் படுபவனாகிய பாண்டுரங்கன் திவ்விய பீதாம்பர உடைதரித்தவராய் தனது தோழரென்று கருதும் சோகாமேளருடைய குடிசைக்கு எழுந்தருளவும் சோகாமேளர் எழுந்து எதிர்கொண்டு சென்று இணையடித் தாமரையை தனது தலையில் சூடி இருகரமும் குவித்து நின்று கேசவாதி நாமங்களால் தோத்திரம் செய்யவும், சர்வேஸ்வரன் அவருடைய பக்தியின் வசத்தனாய் சோகாமேளரைப் பார்த்து, நண்பா! இன்று உனது விருந்தினனாயினேன். உன்னுடனிருந்து உண்டாலல்லது எனக்கு உணவுசெல்லுவதில்லையென்று சொல்ல, சோகாமேளர் பரமானந்த மடைந்து தனது மனையாளை அழைத்து "பெண்ணணங்கே! நீ செய்த பாக்கியமே பாக்கியம். பரம்பொருளாகிய மாயவன் உனது கைகளால் பரிமாறும் விருந்தினை உவக்கின்றார். இன்னும் நமது விருந்தினராய் இங்கு எழுந்தருளி யிருக்கின்றார். அவருக்கு வேண்டுவன வெல்லாம் விரைவில் சமைத்து விருந்தினை யமைத்திடு" என்று சொல்லவும், மனமகிழ்ச்சியுடனே பரிசுத்தமான உணவும் பொருள்களைத் தளிகை பண்ணி வைத்துவிட்டுத் தனது நாயகனிடம் தெரிவிக்கவும், சோகாமேளர் பாண்டுரங்கனுடைய திருவடியில் விழுந்து பணிந்து, "சுவாமி! தேவரீர் அமுதுசெய்ய எழுந்தருளுக." என்று பிரார்த்திக்கவும், பாண்டுரங்கன் சிரித்துக்கொண்டு சோகாமேளரைப் பார்த்து "நண்பா! நாம் இருவரும் ஒன்றாகிய பின் உனக்கு உரிமையான இந்த குடிசையே என்னுடைய ஆலயமேயாகும். நான் இந்த குடிசையில் உன்னு

டன் உட்கார்ந்து துவாதசிபாரணையன்று ஏகாந்தமாக சாப்பிட்டு விட்டு போவதுவழக்கம். அதுபோல இன்று வரவில்லை. உன்னு டனிருந்து வனபோசனம் பண்ண வேண்டுமென்று விரும்பி வந் தேன். மனோரம்மியமான இந்த பீமநதிக் கரையிலுள்ள வேப் பஞ் சோலையைப் பார்க்கினும், நான் இராசக்கிரீடை நடாத்திய பிருந்தாவனம் எனக்கு மிகுந்த சந்தோஷத்தைத் தருவதில்லை இந்த வேப்பஞ்சோலை என் மனத்துக்கு ரம்மியமாகினும், எனது பிருந்தாவனத்தில் உள்ள கிரீட மண்டபத்திலும் மிகுந்த உற்சா கத்தைத் தருவது உனது குடிசையேயாகும். ஆதலினால், இன்று இந்த வேப்பஞ் சோலையிலேயே நீயும் நானும் உட்கார்ந்து போசனம் பண்ணவேண்டும் என்னும் ஆசை பெரிதுடையவனாய் வந்தேன்" என்று திருவாய் மலர்ந்தருளவும், சோகாமேளர் அந்த வார்த்தையைக் கேட்டதும் பரமானந்த மடைந்து, "ஸ்வாமி! தேவரீருடைய திருவடித் தாமரைகளிலே தண்டம் சமர்ப்பிவித்து, தேவரீருடைய நியமனப்படியே அடியேன் நடந் துக்கொள்ளுகிறேன்" என்று தெரிவித்துவிட்டு தனது மனைவி யிடம் சென்று "பகவான் வனபோசனம் செய்யவேண்டுமென்று விரும்புகிறார்.

இந்த வேப்பஞ்சோலையில் வைத்து அவர் போசனம்செய்ய வேண்டுமென்று தெரிவிக்கவும், ஆக்ஞை என்று சொல்லி விட்டு சித்தமாக யிருந்தனள். அப்பொழுது சோகாமேளர் அந்த வேப்பஞ்சோலைக்கு பகவானை எழுந்தருளப்பண்ணி அவ ருடன் உட்கார்ந்து போசனம் பண்ண அமர்ந்ததும், இவர் மனையாள் இருவருக்கும் ஸ்தலசுத்தி பண்ணி, இலைத்தளிகை சேர்த்து தான் பக்குவப்படுத்திய அறுசுவையோடு கூடிய உண வுப்பொருள்களை பலவகை பொரியலென்றும் கூட்டுக் கறியமுது என்றும், பச்சடியமுது என்றும், கிச்சடியமுது என்றும், அழ காய் இருவர் இலையிலும் பரிமாறி பிரசாதம் சாதித்து பகவா னுக்குத் தீர்த்தம் வாங்கிக்கொள்ள தீர்த்தமும் வார்த்து உபச ரித்து விருந்துசெய்யவும், பஞ்சபக்ஷண பாயாசத்தோடு கூடிய தாய் சோகாமேளர் அன்புடனளிக்கும் விருந்தை விரும்பி உண்டு கொண் டிருக்கும்பொழுதே சோகாமேளருடைய பக்தியை வெளி ப்படுத்த வேண்டுமென்று கருதிக்கொண்டு பாயாசத்தை யருந்தி னார். உடனே சோகாமேளருடைய மனையாள் தயிருக்கு பிரசாதம் கேட்டுவிட்டு தாழியிலேபாலை வற்றக்காய்ச்சி புரைகுத்தி தயிரைத் தாழியுடனே எடுத்துக்கொண்டு பகவானுக்கு சாதிப்பதற்கு விரை ந்துவரும்பொழுது இடையிலுள்ள கல்லானது காலைத்தட்டவும், பகவான்முன்னே தயிர்தாழியைப் போட்டு உடைத்து நின்றனள். அந்தத்தாழியிலிருந்த தயிரானது பாண்டுரங்கனுடைய திருவரை யில் சாத்தியிருந்த பீதாம்பரத்தில்பட்டது. இதைக்கண்ட சோகா

மேளர் மிகுந்த வருத்தமடைந்து தன் மனைவியைப் பார்த்து, "பெண்ணே! பயபக்தியாகச் செய்யவேண்டாமா? நமக்கு விருந் தாய் அமைந்தவர் பாண்டுரங்கனல்லவா? அவர் திருப்பரிவட்டத் தில் தயிர் கொட்டிவிட்டதே? என்ன தப்பிதமான காரியத்தைச் செய்துவிட்டாய்? என்று சொல்லிக்கொண்டிருந்தார்.

இப்படி இவர் சொல்லிக்கொண்டிருக்கும்பொழுதே பாண்டு ரங்கனுக்கு திருவாராதனம் செய்யும் அர்ச்சகரொருவர், அந்த இடத்திற்கு வந்துகொண்டிருக்கும்பொழுது சோகாமேளர் தன் மனைவியுடன் வருத்தமுற்று சொல்லிய வார்த்தையைக் கேட்டு மிகுந்த கோபமடைந்து "இந்த பறப்பயலுக்கு வந்த அகம் பாவத்தைப் பார்த்தீரோ! இவன் வீட்டில் பாண்டுரங்கன் வந்து சாப்பிடுவதாகவும், சாப்பிடும் பொழுது இவன் மனைவி தயிர்த் தாழியைப் போட்டுடைக்கவும், தாழியிலுள்ள தயிர் அவர் பீதாம் பர உடையில் பட்டுவிட்டதாகவும், அகம்பாவத்தோடு பேசுகிறான். இவன் எப்பொழுதும் பிராமணர்களைக் காணும்பொழுதெல்லாம் இப்படியே பேசுகின்றனன் என்று யாவரும் சொல்லுகின்றனர். இவனைத் தொட்டு அடித்துவிட்டு பீமநதியில் குளித்துவிட்டால் தீட்டு தொலைந்துவிடும். இவனுக்குத் தக்க சிக்ஷை செய்யாது போனால், இவன் கர்வம் தொலையாது" என்று ஓடிவந்து "அடே பறப்பயலே! பாண்டுரங்கன் உன்னுடன் கூடவந்து உட்கார்ந்து சாப்பிடுகிறார்? என்னடா அகம்பாவமாகப் பேசுகிறாய்?" என்று சொல்லி அவர் கன்னத்தில் ஓங்கி அடிக்கவும், சோகாமேளரு டைய பற்களும் தகர்ந்து விழ்ந்தது. அந்த அடியைப் பொறுக்க மாட்டாதவராய்ச் சோகாமேளர் கீழே விழுந்தார்.

இதைக் கண்ட அர்ச்சகர் "இந்தப் பயலுக்கு இதுவே போதுமானது" என்று எண்ணித் தன்கோபம் தணிந்தவராய் பீமநதிக்குச் சென்று சண்டாளன் ஸ்பரிசம் நீங்குவதற்கு சங்கல் பம்பண்ணி, பீமநதியில் தீர்த்தமாடிவிட்டு தன்வீட்டுக்குவந்து உடை உடுத்திக்கொண்டு நெற்றியில் புண்டரம் தரித்துப் பாண்டு ரங்கனுடைய சன்னதிக்குச் சென்று கர்ப்பக்கிரகத்தின் கதவைத் திறந்து பார்க்கும்பொழுது தன்னுலேயே பாண்டுரங்கனுக்குச் சாத்தியிருந்த பீதாம்பர உடை முற்றும் தயிர்கட்டிகள் ஒட்டிக் கொண்டிருப்பதும் கன்னம்புடைத்து திருமுகமண்டலமே விகார முற்றிருப்பதையும் பார்த்து நடுக்கம் கொண்டு கோவில் ஸ்தானி கர்கள் யாவரையும் அழைத்துவந்து பகவானுடைய திருமுக மண்டலத்தைக் காட்டி அவர்களிடம் பீமநதிக்கரையிலிருக்கும் சோகாமேளருடைய வீட்டில் நடந்தவற்றையெல்லாம் விடாமல் சொல்லவும், யாவரும் துயர்க்கடலில் ஆழ்ந்து என்னசெய்வது? எம்பெருமானுடைய சுந்தரவதனம் வீங்கி விகாரமுற்றதே? கன்

களும் கலங்கிப் போயிருக்கின்றேர்? இதற்கென்ன செய்வோம்? என்று கவலைக்கடலுள் அழுந்தவராய் வருந்தும்பொழுது, பக வானே ஒரு ஸ்தானிகர்மேல் ஆவேசமாகவந்து, "இந்த அர்ச்ச கன் என்னைச் சோகாமேளரே என்று நினைத்து அடித்துவிட் டான். என் கன்னத்தி லுள்ள வீக்கம் நீங்கவேண்டுமாகுல், சோகா மேளர் இங்குவந்து தனது கைகளால் எனது கன்னத்தைத் தட விஞலல்லாது, இந்த வீக்கம் குறையாது" என்று சொல்லி மறை யவும் இதைக்கேட்ட வேதியர்கள் யாவரும் நடுக்கமுற்று, "அந் தோ! சண்டாளனுன சோகாமேளரை ஆலயத்துக்குள் அழைத்து வருவதுமன்றி, அவன் கைகளால் கன்னத்தைத் தடவிஞலன்றி வீக்கம் வற்ருதென்கிருரே! இதற்கு என்ன செய்வோம்? நாமே சென்று அவரை அழைத்து வருவோமென்று துணிவுகொண்டு பீமநதிக்கரைக்கு வரவும், சோகாமேளர் தன்னை அடித்தவேதிய ராக அர்ச்சகருடன் அநேக பிராமணர்கள் வருவதைக்கண்டு பயந்து "இவ்வளவுபெயர்களும் நம்மைக்கொன்றுவிட வேண்டு மென்றே வருகின்றனர். நம்மை விடமாட்டார்கள்" என்று பயந்து ஓட ஆரம்பித்தனர். இதைக்கண்ட வேதியர்களில் சிலர் விரைந்தோடி முன்னே சென்று வழிமறித்துக்கொண்டு, "சோகா மேளரே! நீர் பயந்து ஓடாதீர். பாண்டுரங்கன் தனது சன்ன திக்கு உம்மை அழைத்து வரும்படி எங்களை அனுப்ப நாங்கள் உம்மை அழைத்துக்கொண்டு போவதற்கே வந்திருக்கிறோம். இந்த அர்ச்சகர் உமது மகிமை தெரியாமல் கன்னத்தில் அடித்த அடியானது பாண்டுரங்கனுக்குப்பட்டு கன்னம் புடைத்து திரு முகமண்டலமே விகாரமுற்றுவிட்டது. நீர் வந்து கன்னத்தி லுள்ள வீக்கத்தை தடவிஞலல்லது, வீக்கம் மாருது" என்று தெரிவிக்கவும், வேதியர்கள் சொல்லும் இரக்கமான மொழிகளைக் கேட்டு பயந்தவிர்ந்து, அவர்களுடனே சன்னதிக்குட்சென்று, புண்டரீகவரதனது அப்பிரமேயமான திருமேனியைத் தனது கையாரத் தழுவி, அனந்தபரவசராய்க் கண்களில் நீர் கசிந்துருக அவருடைய அநந்த கல்யாண குணங்களை நினைந்து அதிசய முற்று ஆநந்தக் கூத்தாடி ஆர்ப்பரித்து நாத்தழும்பேற தோத் திரம் செய்து தனது கைகளால் திருமுகமண்டலத்தைத் தடவ வும், வீக்கம் முற்றும் நீங்கிப் பிரகாசித்தது.

இந்த அற்புதத்தைக் கண்ட யாவரும், சோகாமேளரது பக்தியைக் கொண்டாடியதோடு பக்தவற்சலனுன பாண்டுரங்க னுடையபிரபாவத்தைதினைந்துகொண்டாடிஞர்கள். சோகாமேள ருடைய மகிமையைக்கண்டதும், இவரை நாம் சாதியிஞல் இழிந் தவரென்று நினைந்து இந்த ஊரைவிட்டு அகற்றிஞேமே என்று வருந்தித் தங்களை மன்னிக்குமாறு சோகாமேளரை வேண்டவும், சோகாமேளர் அவர்கள் யாவருக்கும் தண்டம் சமர்ப்பித்து,

"சுவாமிகளே! அடியேன் புழுவினும் கடையேன். என்னை நீங்கள் வேண்டப்போமோ? எளியேன்மீது கருணை கூர்ந்து சர்வேஸ்வரனை தரிசனம் பண்ணிவைத்து என்னைப் புனிதனுக்கி னீர்கள். என்னுடைய சாதியினை நீங்கள் நோக்காது, வேதிய ராகிய நீங்கள் என்னை மன்னிக்கும்படி கேட்கப்போமோவென்று சொல்லி, அவர்களிடம் விடைபெற்றுக்கொண்டு பீமநதிக்கரையி லுள்ள தன் குடிசைக்கு செல்லப் போம்போது, அந்த வேதியர் கள் சோகாமேளரைப் பார்த்து, "இந்த ஆலயமே உமதாயிருக் கும்போது இனி நீர் பீமநதிக்கரையில் எழுந்தருளி யிருக்கப் படாது. இந்த பண்டரிபுரத்திலேயே எழுந்தருளியிருந்து, பாண்டுரங்கனை சதா பஜித்துக்கொண்டிருக்கவேண்டும்" என்று பிரார்த்தித்தார்கள். சோகாமேளரும் அவர்கள் விருப்பத்திற்கு இணங்கினவராய்த் தனது மனைவியாளுடனே பண்டரிபுரத்திற்கு எழுந்தருளித் தனது குலத்தவர்களுக்கெல்லாம் தனது அற்புதச் செயல்களைத் தெரிவித்து அவர்களையும் தன்னைப்போல பக்தி யில்ஈடுபடச் செய்துக்கொண்டிருந்து முடிவில் பரமபதத்திற்கு எழுந்தருளினுர்.

வாழ்த்து கவி.

நித்திய நியமஞ்செய்யும் வைதிகர்கள் வாழி
சத்திய நெறிநிற்கத் தகைபெறு மாசர்வாழி
பக்தியின் மிக்கோராய பரமபாகவதர் வாழி
முத்தி நெறிசேர் சோகாமேளர் முதல்வர்வாழி.

சோகாமேளர் சரித்திரம்

முற்றிற்று.

ஸ்ரீ

ஸ்ரீபாண்டுரங்காய நம:

துக்காராம் சரித்திரம்

ஆழ்வார் திருநகரி

சிங்கம். ஸ்ரீனிவாச அய்யங்கார் எழுதியது.

கலி

சீர்மேவும் தேவநகர்தனில் மராட்டியர் குலத்திற் பிறந்து தோன்றி
பார்மேவு பாண்டுரங்கன் பதம்பணிந்து பனுவல்பல பாடியாய்
தார்மேவு சக்கரத்தோன் தனிக்கடவுளென உலகில் சாற்றவந்த
பேர்மேவு வைணவனும் துக்காராம் திருத்தொண்டை பேசுவாமால்.

உத்தவசித்தர்கள் ஒருநாள் நித்திய கடன் கழித்து, தேம ஆரந்தரான நாபாசி சித்தருடைய திருவடியைப் பணிந்து, "சுவாமி! பத்தருள் சிறந்த பக்தராகிய துக்காராம் சரித்திரத்தை அடியோங்கள் கேட்கவேண்டும் என்னும் ஆசை அதிகமாகயிருக்கிறது. தேவரீர் திருவாய் மலர்ந்தருளவேண்டும்." என்று சொல்ல, நாபாசிசித்தர், "நற்றவரே! கேளுங்கள்:—"மாராட்டிர தேசத்திலே அழகாபுரி என்றொரு பட்டணம் இருக்கிறது. அந்த பட்டணமானது மாறாத செல்வ முடையவர்களாலும், வர்த்தகர்களாலும், கல்வியுடையவர்களாலும், சிறந்து, அழகிய தெருக்களுடையதாய், குபேரனுடைய பட்டணம் போல காணப்படுவதால் அழகாபுரமென்று அதற்குப் பெயர்வந்தது. இந்த அழகாபுரிக்கு மேற்கே ஒரு நாழிகை வழிதூரத்தில் தேவநகரம் என்றொரு கிராமமிருக்கிறது. அந்த கிராமத்திலே மாராஷ்டிர குலத்தில தேவராஜாராம் என்று ஒரு பொதிமாட்டு வியாபாரி வெகு நாணயமாக தானியங்களை வாங்கி பொதிமாட்டின் முதுகில் போட்டுக்கொண்டு அயல் கிராமங்கள் தோறும் சென்று, நான்கு ஐந்து தினம் ஊரூராகத் திரிந்து வியாபாரம் செய்து, தனது இல்லறத்தை நடத்திவந்தார்.

இந்த தேவராஜாராம் என்பவருக்கு அநேக ஜென்மங்களில் செய்த தவமெல்லாம் திரண்டு ஒரு வடிவானதுபோல ஒரு மைந்தன் பிறந்தான். இவன் குலத்தவரெல்லாம் புண்ணியாகவசனம் தினத்தன்று கூடி சோதிடரால் ஜாதகம் கணித்து வாசிக்க, துக்காராமென்று பெயரிட்டு மகிழ்ந்தனர். தேவராஜாராம் தனக்குப் புத்திரனில்லா திருந்து, நெடுநாள் கழிந்து அத்திபூத்தது போல ஆண் குழந்தை பிறந்த சந்தோஷத்தால் அந்தணர்களுக்கு அரும் பொருளளித்து, அன்புடன் இனத்தவர்களுக்கு அறுசுவை அன்னம் அளித்து, சந்தன புஷ்ப தாம்பூலம் வழங்கி, சந்தோஷித்திருந்தான். குழந்தை வளர்பிறை திங்கள்

போல் நாளொரு மேனியாய் நலம்பெற வளர்ந்து, தந்தை தோளிலும் தாயின்மடியிலும் வளர்ந்து, வருஷபூர்த்தி கழிந்து மூன்றாமாண்டில் சவுளம் நடத்தி, ஐந்தாமாண்டு மாராஷ்டிர விதிப்படி உபநயனம் செய்வித்து, கல்வி கற்க பள்ளிச்சாலைக்கு அனுப்பினார்கள். துக்காராம் வர்த்தகத்திற்குரிய கணக்கு, பத்திக்குரிய கலைகள், இரண்டிலும் வல்லமை அடைந்தவனாய் உபாத்தியாயர் மனமகிழ, பள்ளியில் வாசிக்கும் பிள்ளைகளுக்கெல்லாம் சிறந்தவனாய் விளங்கி, பள்ளிச்சாலையில் படிக்கவேண்டியவரை முற்றும் படித்து தனது வீட்டிலேயே சர்வேஸ்வரனை பாண்டுரங்கன் பிரபாவங்களையும், அவனடித்துணையடைந்த அடியவர்களின் பெருமைகளையும் கேட்டு, ஆராமகிழ்வடைந்து, தனது வீட்டிலேயே பண்டரிநாதனது திருவுருவப்படத்தை எழுந்தருளப் பண்ணி, தினமும் தீர்த்தமாடி, திருத்துழாய் புஷ்பம் முதலியது எடுத்துவந்து படமர்க்கிக்கு தொடுத்து சாத்தி பரிவுடன் பண்டரிநாதனை கேசவாதி நாமங்களால் அர்ச்சித்து, மானிட ஜென்மம் எடுத்ததன்பயன் இதுவே என்று மகிழ்ச்சியடைந்து, திருவாராதனம் முடிந்தபின் ஏதோ சிறிது உணவுண்டு சதா பகவத்குணங்களை விரித்துரைக்கும் தத்வத்திரயம், ஸ்ரீவசன பூஷணம், ஆசாரிய ஹிருதயம் முதலிய கிரந்தங்களையும், ஞான நூல்களையும் கவனத்துடன் வாசித்துக்கொண்டு இடையிடையே பகவானுடைய அநந்த கல்யாண குணங்களை நினைந்து, ஆநந்தக் கண்ணீர் உதித்து புளகாங்கித முண்டாகத் தன்னைமறந்து பரவசமடைவார்.

இவ்வாறு துக்காராம் பத்தியிற் சிறந்து விளங்கி வரும்பொழுது வயது பதினாறாயிற்று. இவர் தந்தையாகிய தேவராஜாராம் தனக்கு வயது திரம்பி வயோதிகம் மிஞ்சுவதால் தனது மைந்தனுக்கு கலியாணம் செய்யவேண்டுமென்னும் கருத்துடனே தனது பந்துக்களுடன் கலந்து, தனது மைந்தனுடைய அழகிற்கும் குணத்திற்கும் பொருத்தமுடைய மீராபாய் என்னும் ஒரு வனிதையை நல்ல சுபலக்கினத்தில் மணஞ்செய்துவைத்தார். மீராபாயும் தனது நாயகனுடைய பக்தியையும் ஞானத்தையும் கண்டு, தானும் அதற்கேற்ப நடக்க விரும்பி நாயகனுக்கு முன்னேதான் தீர்த்தமாடி திருவாராதன பாத்திரங்களை யெல்லாம் சுத்தி பண்ணிவைத்து, நறுமலர் தொடுத்து வைத்து, நாதனுக்குதவியாய் நிற்பதோடு, மாமன் மாமியார் இருவரையும் வணங்கி வீட்டுக்காரியங்களையும் குறைவறப்பார்த்து, அறுசுவை உணவை அன்புடன் சமைத்து காத்திருப்பாள். துக்காராம் சுவாமி, ஞான நூற்களைக் கற்கும் பொழுதெல்லாம், மாதர் வலையில் சிக்கினால் பக்தி பாழாய்விடுமென்று ஒவ்வொருநாளும் நினைந்து கலியாணம் வேண்டாமென்று பண்டரிநாதனை தியானிக்கும் பொழு

தெல்லாம், பிரார்த்தனை செய்தவர்; மீராபாய் தனது பூஜைக்கு ஆதரவாயிருந்து செய்யும் பணிவிடைகளைக் கண்டு, "இவள் போன்ற உத்தம மனைவி கிடைத்தால் பக்தியானது வந்துறுவதற்குச் சாதகமேயன்றி, பாதகமேற்படாது" என நினைந்து தனது மனைவியையும் அன்புடன் நடத்தி வந்தார். தேவராஜாராம் தனது மைந்தனுடைய நற்குண நற்செய்கைகளையும், தனக்கு வாய்த்த மருமகளது நற்குணங்களையும் கண்டு, ஆனந்தமடைந்து இருக்கும்பொழுது, தன்னைப்போன்ற பொதிமாட்டு வியாபாரியும் தனக்கு ஆப்த நண்பனுமான ஆநந்த ராமாராம் என்பவருக்கு ஒரே ஒரு புதல்வியிருந்தாள். அவள் அழகில் லக்ஷ்மிக்கு நிகரானவள். குணங்களில் மீராபாய்க்கு சமானமானவள். சதா ஈஸ்வரபக்தி செய்பவள். தனக்கு மணமகனாக துக்காராம் வாய்த்தால் மணம் செய்துகொள்வது; இல்லையேல், நெருப்பில் விழுந்து உயிர் துறப்பதென்றும் விரதம் பூண்டவள். மஹாராஷ்டிர நங்கையரே வீரத் தாய்மார்களென்று பழைய இந்திய சரித்திரங்கள் கூறும். இவளும் துக்காராமையன்றி, தனது தாய் தந்தையர்கள் வேறு ஒருவனுக்கு மணம் முடித்தால் தனது விரதத்தின்படி தீயில் விழுந்து இறந்திடுவாள். இவள் பெயரும் லக்ஷ்மிபாய் என்று சொல்லுவார்கள். ஒருநாள் இவள் தந்தை, "உனக்குக் கலியாணம் செய்யவேண்டாமா" எனக் கேட்டார். இவள் துக்காராம்தான் என் கணவன். அவரையன்றி, வேறு புருஷரை நீங்கள் நியமித்தால், நான் அக்கினியில் விழுந்து இறப்பேன்" என்று சொல்ல, அந்த வார்த்தையைக் கேட்டு, "அந்தோ! துக்காராம் கலியாணம் வேண்டாமென்று வெறுப்புற்றிருந்தவராயிற்றே. ஏதோ மீராபாய் என்னும் பெண்ணை பிதாவினுடைய வேண்டுகோளுக் கிரங்கி மணம் செய்துகொண்டான். இன்னொரு பெண்ணை எப்படி மணஞ்செய்துக்கொள்ள சம்மதிப்பான்! இவள் அவன்மீது காதல்கொண்டாளே! ஐயோ! என்ன செய்கிறது" என்று வருந்தி, தன் சிநேகிதராகிய தேவராஜாராம் இடம் தனது புத்திரியின் விரதத்தை தெரிவித்து, "என்னையும் என்மகளையும் காப்பாற்றவேண்டும்" என்று பிரார்த்தித்தார். தேவராஜாராம் தன்னுடன் வியாபாரஞ் செய்யும் ஆநந்தராமாராம் சொன்ன வார்த்தைகளைக் கேட்டு, அவரைத் தேற்றி, தன் குமாரனை துக்காராமிடம் வந்து "மைந்தா! நான் உன்னிடம் ஒரு வரம் வேண்டுகின்றேன்: இல்லை என்னாது தந்தருளவேண்டும்" எனவேண்டிக்கொண்டார். துக்காராம், 'தந்தை சொல் மிக்க மந்திரமில்லை' எனக் கருதுபவராதலால், பிதாவின் திருவடிகளில் வீழ்ந்து வணங்கி, "எந்தாய்! அடியேனிடம் என்ன சொல்லினும் அதைத் தட்டுவேனோ? தாங்கள் இதற்கு வரம் வேண்டுமென்று கேட்பதென்ன? எதையும் நான் ஏவலாய் செய்யக் காத்திருக்கிறேன்" என்றான். தேவராஜாராம் துக்கா

ராமினுடைய வார்த்தையைக் கேட்டு "கண்ணே! எனது சிநேகிதர் ஆநந்த ராமாராம் என்பவருக்கு லக்ஷ்மிபாயென்று ஒரு பெண்மணி யிருக்கிறாள். அழகிலும் குணத்திலும் இணையற்றவள். உன்னை அன்றி, வேறு ஒருவனை தனக்கு மணம் பேசில் தன் உயிரை தீக்கிரையாக்குவேனென்று சபதம் பண்ணி இருக்கிறாள். அவள் இறந்தால், அவள் தந்தையும் உயிர் துறப்பான். அநியாயமாக இரண்டு உயிர்கள் உன்னால் போய்விடுவதாக இருக்கிறது. ஆதலால், அந்த லக்ஷ்மிபாயை மணஞ்செய்து கொள்ளவேண்டும்" என்று சொல்ல, துக்காராம் தந்தையின் வார்த்தையைக் கேட்டு, மீராபாயைத் தான் மணஞ்செய்துகொண்டதுமுதல், தனது திருவாராதனத்திற்கும், தனது ஞானநூல் கல்விக்கும் துணையாயிருப்பது பற்றி, விவாகத்தில் வெறுப்புமாறி இருக்கிறாராதலாலும், தனக்கு திருவாராதனம்பண்ணும்பொழுது துணையாயிருப்பதற்கு இல்லாமல் மீராபாய்க்கு வீட்டுவேலையும் சேர, மீராபாய் அங்குமிங்கு மலைந்து கஷ்டப்படுவதினாலும், இன்னொரு மனைவியுமிருந்தால் தனது பணிவிடைக்கு ஒருத்தியும், வீட்டுவேலைக்கு ஒருத்தியுமாக இருந்துகொள்ளுவார்கள். அப்பொழுது நமக்கு திருவாராதன விஷயத்திலுள்ள சிரமம் குறையும். நமது இல்லறமும் சிரமமின்றி நடக்கும்." என யோசித்தாரன்றி, இரண்டு மனைவியரை மணந்தால் ஏற்படும் துன்பம் இன்னதென்று உணர்ந்தாரில்லை. தன் தந்தையிடம் அப்படியே லக்ஷ்மிபாயையும் மணஞ்செய்துகொள்ள சம்மதித்தார். உடனே ஒரு நல்லதினத்தில் லக்ஷ்மிபாயை துக்காராம் சுவாமிகளுக்கு விவாகம் செய்துவைத்தனர். துக்காராம் இரண்டு மனைவியரும் பணிசெய்ய, தந்தை தேடிவரும் பொருளால் கவலையற்று தாயினுடைய அன்பிற்கு இலக்காய், வாழ்ந்துவருங்காலத்தில், தாயானவள் சர்வேஸ்வரன சரணாரவிந்த மடைந்தாள். துக்காராம் தாயார் இறந்த துக்கம் சகிக்க முடியாதவராய், தாய்க்கு செய்யவேண்டிய ஈமக்கடனை முடித்து, சிறிது நாள் சென்றதும், தந்தையும் சர்வேஸ்வரன் சரணடைந்தார். தந்தைக்கும் செய்ய வேண்டிய ஈமக்கடனை முடித்து, சிறிது நாள் வீட்டிலிருந்து வியாபாரத்திற்காகத் தந்தை வைத்திருந்த முதலைத் தனது வீட்டுச் செலவிற்கு உபயோகித்து. அந்த பொருள் செலவாயதும், இல்லற வாழ்விற்கு வழியில்லாது தந்தை நடத்திவந்த பொதிமாட்டு வியாபாரத்தை தானும் செய்யவேண்டுமென்று நினைத்து, வீட்டிலிருந்த ஒரு நகையைக் கொண்டுபோய் மார்வாடி கடையில் அடகுவைத்து நூறு வராகன் வாங்கி, அனகாபுரிக்குச் சென்று, சோளம் கம்பு கேழ்வரகு கேப்பை முதலிய தானியங்களை வாங்கி, தனது பொதிமாடுகளில் போட்டுக்கொண்டு பல ஊர்களிலேயும் சென்று விற்று சிறிது லாபத்துடன் திரும்பிவந்து தனது திருவாராதனத்தையும் இல்லறத்தையும் குறைவின்றி நடத்தி, சிறிது

நாள் செய்த வியாபாரத்திலே வியாபாரத்திற்கு முதலும் தேடிக் கொண்டனர்.

இப்படி இருந்துவரும் நாளில், துக்காராம் சுவாமிகளுக்கு பண்டரிநாதனனுக்கிரகத்தால் மீராபாயின் வயிற்றில் ராஜாராம் முகுந்தாராம் என்னும் இரண்டு ஆண் குழந்தைகள் பிறந்தார்கள். துக்காராம் சந்தைதோறும்சென்று, தானியங்களைபிடித்து பொதி மாட்டின் மேலேற்றி சில ஊர்கள் சென்றுவிற்று இரண்டுநாளில் திரும்பி வீட்டிற்கு வந்து சேருவர். இம்மாதிரி துக்காராம் வர்த்தகம்செய்து வாழ்நாளைக் கழித்து வருங்காலத்தில், அவ்வூரில் கோயில்கொண்டு எழுந்தருளியிருக்கும் பகவானுக்கு திருவாராதனம் முட்டுப்பட்டு கதவுசாற்றும் நிலைமையில் வந்துவிட்டது. இதை அறிந்த துக்காராம் தானே திருவாராதனத்திற்கு உரியவராய் அந்த ஊரிலுள்ளவர்கள் வேண்டிக்கொள்ள, தான் வியாபாரம் செய்யப் போகும்பொழுது திருவாராதனம் தடைப்படாமலிருப்பதற்கு தனது மைந்தனை ராஜாராம் என்பவனை திருவாராதனம் செய்வதற்குரிய மந்திர தந்திரங்களை எல்லாம் சொல்லிவைத்து, தான் ஊரிலிருக்கும்பொழுது திருவாராதனத்தைத் தானே செய்வதும், தான் ஊரிலிராது வியாபாரம் செய்யப் போய்விட்டால் தன் மகன் இராஜாராம் செய்வதுமாக திருவாராதனம் நடந்துவந்தது. துக்காராம், தான் இல்லாத காலங்களில் தன் மகன் ராஜாராம் வியாபாரம், கிருகக்ருத்தியம், ஆலய திருவாராதனை முதலியவைகளை குறைவராது செய்துவருவதைக் கண்டு, பெருமகிழ்வடைந்தது மன்றி, சதா பண்டரி நாதனை தியானித்துக்கொண்டு ஞான சாஸ்திரங்களை ஆராய்ந்து பார்க்கப் பார்க்க, வைராக்கியம் பிறந்து, மனைவி மக்களென்னும் இவையெல்லாம் மோக்ஷ நெறியை அழிக்கும் முள்வேலி என்று நினைத்து, இல்லறத்திலிருப்பினும் தாமரையிலை தண்ணீர்போல ஒட்டியும் ஒட்டாமலுமாயிருந்துவந்தார். இந்த சமயத்தில் அந்த நாடு பூராவும் பஞ்சமேற்பட ஜனங்கள் இலைகளைத்தின்று ஜீவிக்கும் காலம் வந்துவிட்டது. அப்பொழுது இவர் தானியங்களை அதிகவிலை கொடுத்து வாங்கி சிறு கிராமங்களுக்குச்சென்று, கொள் முதலுக்கு விற்று லாபமின்றி திரும்பி வருவார். இதனிடையே இவர் மனைவியான மீராபாய் என்பவள், தனது நாயகனையும் இரண்டு மக்களையும் பிரிந்து பண்டரிநாதன் பதாம்புய மடைந்தாள். துக்காராம் சுவாமி அவள் இறந்துவிட்டதால் பெரிதும் வருந்தி, தனது மைந்தர்கள் இருவரைக் கொண்டு அவளுக்கு செய்யவேண்டிய ஈமக்கடன் யாவையும் செய்துவிட்டு, வர்த்தகம் செய்ய முதலில்லாமல் வீட்டிலிருந்த நகைகளையெல்லாம் கொண்டுபோய் மார்வாடி கடையில் வைத்து பொருள்வாங்கி அளகாபுரிக்குப் போய், சோளம் கேழ்வரகு முதலிய தானியங்களை வாங்கிக் கொண்டு சில ஊர்கள் சென்றதே, பஞ்சத்தால் பட்டினி கிடந்து

பரதவிக்கும் ஏழைகளிடத்து இரங்கி, அவர்களிடம் கிரயம் இல்லாமல் தனது தானியங்களைப் பங்கிட்டு கொடுத்துவிட்டு மாடும் கோணியும் லாபமாக வீட்டிற்கு வந்து தானும் தனது மைந்தரும் மனைவியுமாகப் பட்டினியுடன் பரதவிப்பாராயினர். இவர் இந்த பஞ்சகாலத்தில்செய்த வியாபாரத்தில் தர்மமெனும் லாபத்தை மலைபோல் திரட்டி தனது கைமுதலுடன் வீட்டிலுள்ள நகைகள் யாவும் மார்வாடி கடையில் அடகாய் விட்டதால், ஏழைகளைக் காப்பாற்ற தானியம்பிடிக்க வழியில்லையே யென்றும் கவலையும் பட்டினியும் தம்மை வருத்த, இனி என்ன செய்வதென்று ஏக்கமுற்றிருக்கும் பொழுது, இவரது இரண்டு குமாரர்களும், தன் தந்தை தம் பட்டினியால் வருந்த வீட்டிலுள்ள நகைகளையும் அடகுவைத்து ஏழைகளுக்கு தானியம் சுமந்து கொண்டுபோய் கொடுப்பதைக்கண்டு மனந்தாளாதவர்களாய்த் தந்தையிடம் வந்து, தந்தாய்! தாயின்றி உமது சுரக்ஷணையிலிருந்த நாங்கள் பசியால் வருந்த நீர் வீட்டிலுள்ள நகைகளைக் கொண்டுபோய் மார்வாடி கடையில் வைத்துத் தானியத்தை வாங்கி ஏழைகளுக்கு இனாமாகக்கொடுக்கிறீரே? இது என்ன தருமம்? தனக்கு மிஞ்சி தானம் தர்மம்’ என்று சொல்லியிருக்க, தானும் தன்மக்கள் மனைவியும் பசியால் துடிக்க, பிறர் இருக்குமிடந்தேடி தர்மம் செய்ய வேண்டுமென்று எங்கே சொல்லியிருக்கிறது? எங்கள் தாயோ இறந்தனள். நீயோ எங்களைக் காப்பாற்றப் போகிறாய்” என்று சொல்லி நிந்தித்து, துக்காராம் சுவாமிகளை விட்டு காசியாத்திரை சென்றனர். தனக்கு வறுமை வந்தகாலத்து தனது மைந்தரிருவரும் தம்மைத் துறந்து காசியாத்திரை சென்றதும், மகா பதிவிரதையான லக்ஷ்மீபாய் நாதன் பக்கம் வந்து “நாதா! பொருளில்லையே யென்று மயங்கி சோர்கின்றீரா? கடவுளை நம்பினோர் கைவிடப்பட மாட்டார்கள். நீர் தைரியத்தை மாத்திரம் விடப்படாது. உமது குமாரர்கள் இருவரும் சிறுவராதலால் தம்மையும் பழித்து எங்கோ சென்றனர். எப்படியும் அவர்களை நாம் வீட்டிற்கு அழைத்து வந்துவிடலாம்” என்று சமாதானப்படுத்தி தான் நேரே மார்வாடி கடைக்குச் சென்று தனது பணிவினும் இனியவசனத்தாலும் தன்னை நாணயமுடையவளென மார்வாடி நம்பும்படி செய்து, நூறு ரூபாய் கைமாற்றலாக வாங்கிவந்து தனது நாயகன் கையிலே கொடுத்து, நாதா! இது கைமாற்றலாக நானே தருகிறேன் என்று சொல்லி ஒருவரிடம் இந்த ரூபாயை வாங்கிவந்தேன் நாணயமாக நாளைக்கே இந்த ரூபாயைக் கொடுத்தால் நமக்கு நாணயம் நிலைக்கும். இந்த ரூபாயைக் கொண்டு வியாபாரம் செய்து முதல் கொடுத்தவனுக்கு முதலை நாளையே சேர்த்து விடவேண்டும் என்று சொன்னாள்.

துக்காராம் தன் மனைவியான லக்ஷ்மிபாய், பஞ்சகாலத்தில் எப்படியோ ரூபாயைக் கொண்டுவந்து தன்னிடம் கொடுத்து

நாணயத்தைக் கப்பாற்றவேண்டுமென்று சொன்னதைக் கேட்ட உடனே, "நமது மனைவி சொல்லுவது நியாயமே. வியாபாரியின் குலதர்மம் முதலழிய செலவு செய்யாமையே என்று ஏற்பட்டிருக்கிறது. முதலழிந்து வியாபாரம் செய்ததினாலேயே எனது மைந்தரும் என்னைப் பிரிந்து போயினர். சன்னதி திருவாராதனமும் இனி முட்டுபட்டுவிடும். இனி இப்படி வியாபாரம் செய்யப்படாது" எனப் பலவாறு நினைந்து நூறு ரூபாயுடன் தனது பொதிமாட்டுகளை ஓட்டிக்கொண்டு அளகாபுரிக்குப் போய், சோளம் உப்பு இந்த இரண்டு சரக்கையும் பிடித்து கோணிகளில் போட்டு தைத்து பொதிமாடுகளின் மேலேற்றி ஒரு கிராமத்தை நாடி வந்து கொண்டிருக்கும்பொழுது, திடீரென்று வானம் கறுத்து இடிமுழங்கி நாற்றிசைகளிலும் இரண்டு வருஷ தாரையாக மழை பெய்தது. மழை அதிகமாய்ப் பெய்யவே பொதிமாட்டின்மேல் ஏற்பட்ட உப்பு மூட்டைகள் முழுதும் நனைந்து கரைந்துபோய் வெறும் கோணிகளே மிஞ்சின. சோளமூட்டைகளும் நனைந்து ஊறிப்போய் சோளம்பூராவும் உருண்டையாய்த் திரண்டு போயின. இந்நிலையிலும் மழை விடாது பெய்துக் கொண்டிருக்க, துக்காராம் சுவாமிகள் பரமஞானியாதலால் ஒரு சிறிதும் கலங்காது எல்லாம் ஈசன்செயல். நமது முயற்சியாலாவது ஒன்றுமில்லை என்று நினைந்து அங்குள்ள ஆலமரத்தினடியில் பொதிமாடுகளை நிறுத்திவிட்டு நின்றார். மழை சிறிது விட்டதும் குளிர் அதிகரித்தது. நேரமும் அந்தியாயிற்று. மேகங்கள் வானங்களில் பரவியிருந்தலால் காடாந்தகாரமாய்க் கானகமெல்லாம் இருள் மூடிவிட்டது. துக்காராம் சுவாமிகள் இந்த இருளில் எங்கே செல்லுவதென்று நினைத்துத் தனது பொதிமாடுகளை ஆலமரத்தின் அடியிலுள்ள வேர்களில் கட்டிவிட்டு, தானும் ஒருவேரில் தலைவைத்து பண்டரிநாதனைப் பஜித்துக் கொண்டே நித்திரை போயினர். இரவு பதினைந்து நாழிகையானது சில புலிகள் வந்து மரத்தில் கட்டியிருந்த பொதிமாடுகளையும் காணாது அடித்துத் தூக்கிக்கொண்டு போயின. மறுநாள் பொழுது விடிந்தது. துக்காராம் கண்திறந்து பார்க்க, பொதிமாடுகளையும் காணாது புலியடித்துக்கொண்டுபோய் விட்டதென்று தெரிந்து, தன்னுடைய மாடுகளின் உயிருக்கு அழிவு வந்ததே என்று வருந்தி, இனி செய்வதென்ன? நூறு ரூபாய்க்கும் தானியங்களை வாங்கி ஏழைகளுக்குக் கொடுத்தாலும் வயிறார உண்டு பிழைக்குமே. இப்பொழுது முதல் ரூபாயும் போய் வியாபாரத்துக்கு உதவியாயிருந்த மாடுகளும் புலிக்கிரையாகவும் நாமும் மழையில் நனைந்து வருந்தியதுதானே லாபமாயிற்று. இந்த இல்லறவாழ்விலுள்ள சுகம் என்ன? இத்தகைய சஞ்சலங்களுக்கு அல்பமன்றி வேறு என்ன சுகமிருக்கிறது? என்று நினைந்து தாம் வீடுசேர்ந்து மனைவியினிடம் இந்த சம்பவத்

தைச் சொல்லி துக்கித்து வருந்துவதைப் பார்க்கிலும் சர்வேஸ்வரனுடைய சரணாரவிந்தத்தில் சித்தத்தை நிறுத்தித் தவஞ்செய்வது சிறந்ததென்று நினைத்து அந்த ஆரண்யமாகச் சிறிது தூரம் சென்று தமது ஊரையடுத்துள்ள ஒரு மலையின்மீதேறி ஒரு கருங்கற்பாறையில் பத்மாசனம் அமைத்து தீனபந்துவான பண்டரிநாதனைத் தியானித்துக்கொண்டிருந்துவிட்டார்.

பாண்டுரங்கன் துக்காராம் உருக்கொண்டு கடன்தீர்த்த அத்தியாயம்

துக்காராம் சுவாமிகள் வியாபாரம் செய்யச்சென்று மழையால் சரக்கும் போய் சரக்கேற்றும் பொதிமாடுகளையும் புலிக்கு இரையாக்கி ஊரை நாடிச் செல்லாது மலைசிகரத்திலுள்ள பாறையில் பத்மாசனமிட்டு உட்கார்ந்துகொண்டு பண்டரிநாதனை பஜித்துக்கொண்டிருக்கும்பொழுது பாண்டுரங்கன் துக்காராம் சுவாமிகளின் உருவத்தையடைந்து சிலபொதிமாடுகளை ஓட்டிக்கொண்டு துக்காராம் வாசஞ்செய்யும் தேவநகரம் வந்து இவர் மனைவியான லக்ஷிமீபாய் கைக்கடனாக வாங்கியிருந்த மார்வாரி கடைக்குச்சென்று, நூறுரூபாயும் வட்டியும் கொடுத்து ரசீது வாங்கிக்கொண்டு துக்காராம் வீட்டிற்குவந்து மாடுகளைக் கொல்லையில் கொண்டுபோய் கட்டிவிட்டு துக்காராம் மனைவியான லக்ஷ்மீபாயினிடம் நூற்றைம்பது ரூபாயைக்கொடுத்துவிட்டு, பெண்ணே! நீ விரைவாய் சமையல் செய்துவை. நான் தீர்த்தமாடிவிட்டு வருகின்றேனென்று சொல்லி, வெளியில் சென்று மறைந்தார். லக்ஷ்மீபாய் தனது நாதனிடம் நூறு ரூபாய் கொடுக்க மறுநாள் நூற்றைம்பது ரூபாய் கொணர்ந்து தன்னிடம் கொடுத்துவிட்டாரென்று ஆராமகிழ்ச்சியடைந்து விரைவாய் சமையல் செய்துவைத்துவிட்டு நூறு ரூபாயும் வட்டியும் எடுத்துக்கொண்டு மார்வாரி கடைக்குப் போய் ஐயா! நான் நேற்றையதினம் தங்களிடம் கைக்கடனாக வாங்கிய நூறுரூபாயும் வட்டியும் இதோ கொண்டு வந்திருக்கிறேன் பெற்றுக்கொள்ள வேண்டுமென்று சொன்னாள்.

மார்வாரியானவன் லக்ஷ்மீபாயின் வார்த்தையைக் கேட்டு, அம்மணீ! சற்றுநேரத்திற்குமுன் உம்முடைய நாயகர் வந்து ரூபாயும் வட்டியையும் கொடுத்துவிட்டு ரசீது வாங்கிக்கொண்டு போய்விட்டார். இந்த நூறு ரூபாயையும் தாங்கள் எடுத்துக் கொண்டு போங்கள்" என்று சொன்னான். லக்ஷிமிபாய் மார்வாரி கூறிய வார்த்தையைக் கேட்டு, நூறு ரூபாயையும் எடுத்துக் கொண்டு வரும்பொழுதே நமது நாயகன் இன்று செய்த வியாபாரத்தில் இவ்வளவு நாள்பட்ட நஷ்டத்தையும் எடுத்துவிட்டார். இவ்வளவு லாபம் கிடைத்ததும் எனது கை விசேஷமேயன்றி வேறில்லை என்று தன்னைப் புகழ்ந்துகொண்டு தனது வீடுவந்து தனது நாதன் வந்துவிட்டாராவென்று பார்த்து

வராமையினால் தெருவில்வந்து சற்றுநேரம்நின்று பார்த்து ஏன் இன்னும் வரவில்லை? கொல்லையில் சென்று மாட்டுக்கு வைக் கோல் வைத்துக்கொண்டிருக்கிறாரா? பார்ப்போம் என்று கொல்லை யில் சென்று பார்க்க கட்டியிருந்த மாடுகளில் ஒன்றையும் காணு மல்திகைத்து, இது என்ன ஆச்சரியமாயிருக்கிறது; இப்பொழுது தானே மாடுகளைக் கட்டிவிட்டு தீர்த்தமாடச்சென்றார். மாடுகள் எங் கே? பஞ்சகாலமாதலால் யாராவது அவிழ்த்துக்கொண்டுபோயிருப் பாரோ? கொல்லையின் கதவுசாத்தி தாளிட்டபடியே யிருக்கிறதே; வேறு யார் வந்து மாடுகளை அவிழ்த்துக்கொண்டு போவார்கள்? ஒருவேளை நமது நாயகன் வந்து நான் மார்வாரி கடைக்குப் போயிருக்கும் சமயத்தில் மாடுகளைக் குளிப்பாட்டகொண்டு சென் றிருப்பாரா? அப்படியானால் அவர் கொல்லைவழியாகத்தானே சென்றிருக்கவேண்டும். கொல்லைக்கதவு தாளிட்டிருக்கும்பொழுது மாடுகளைக் குளிப்பாட்ட எப்படிபோவார்? குளிப்பாட்டப் போக வேண்டுமானால், தான் தீர்த்தமாடச் செல்லும்பொழுதே கொண் டுபோயிருக்கமாட்டாரா? இதில் ஏதோ மோசமிருக்கிறது. மாடு களை ஒருவரும் ஓட்டிச் செல்லவுமில்லை. நாதனும் குளிப்பாட்டச் செல்லவுமில்லை. மாடுகள் மோசமாகவே போயிருக்கிறது" என நன்றாய்த் தீர்மானஞ் செய்துக்கொண்டு, தன் நாதனைத் தேடிப் பிடிக்க உடனே வீட்டைவிட்டுப் புறப்பட்டு அவர் வழக்கப்படி தீர்த்தமாடும் குளத்திற்குச் சென்று தேடக்காணாது மனம்நொந்த வளாய், அங்கு ஸ்நானம் பண்ணிக் கொண்டிருந்தவர்களைப் பார்த்து," எனது நாதன் தீர்த்தமாட இங்கு வந்ததுண்டோ? எனக் கேட்டாள். "இங்கு அவர் வரவில்லை" என்று அவர்கள் பதில் சொல்லக் கேட்டதும், பெருந்துயர் கடலில் ஆழ்ந்தினவ ளாய் அவ்வூரிலுள்ள ஆலயத்துக்கு வந்து தேடினாள். அங்குங் காணாததால், ஊரெங்குந்தேட ஆரம்பித்தாள். எங்குங் கிடைக்க வில்லை. என்ன செய்வாள்! புத்தித் தடுமாட்ட மடைந்தவளாய்த் தன்னைவிட்டுப் பிரிந்துசென்ற தனது நாயகனை இன்ன இடந் தான் தேடுகின்றேமென்ற நினைவேயில்லாது அனேக ஆரண்ணி யங்களெல்லாம் தேடி முடிவில், தன் நாதன் ஈஸ்வரத்தியானம் பண்ணிக்கொண்டிருக்கும் மலையினடிவாரத்தையடைந்து அவ் விடங்களிலும் தேடிக் காணாது, கடைசியாய் அந்த மலையின் மேலேறிப் பார்க்க, தனது கணவனை துக்காராம்சுவாமிகள் ஒரு பாறையின்மீது உட்கார்ந்துக்கொண்டு பண்டரிநாதனை தியானித் துக் கொண்டிருப்பதைக் கண்டாள். இழந்த உயிரை மீளப் பெற்றவள்போல புளகாங்கித மடைந்து, முள்ளென்றும் கல் லென்றும் நினையாது பாதையில்லாத அந்த மலையிலிருந்து, தன் நாதனிருக்கும் பாதைக்கு ஓட "ஆ! என் பிராணபதே!" என்று சொல்லி, அவர் காலடியில் விழுந்து மூர்ச்சையடைந்தாள். மறு படியும் தேறி நாதன் காலடியில் கடகடவென்று உருண்டு புரண்டு

அழுது சோர்ந்தாள். துக்காராம் தனது பத்தினி தன் காலடியில் கிடந்து புரண்டு அழுவதைக்கண்டு, மனம் தாளாது இவள் இவ் வளவு துக்கத்துடனே பிரலாபிப்பதற்குக் காரணம் என்ன? ஒரு வேளை நமக்கு நேற்றையதினம் வியாபாரத்திற்காக நூறுரூபாய் மார்வாரியிடம் கைக்கடனாக வாங்கிக்கொண்டு வந்ததைப்பற்றி அவன் ஏதாவது ஒருக்கால் வீட்டண்டை போய்க் கடனைக்கொடுக் கும்படி இவளை நிர்ப்பந்தித்திருப்பானோ? அதனால் பொறுக்க முடியாது நம்மிடம் வந்து முறையிடுகிறாளோ? அன்றியும், நாம் இவளை வஞ்சித்து ஒன்றும் சொல்லாது வந்துவிட்டதினால் நம் மைக் காணாது சோர்ந்து ஊரெங்கும் தேடியலைந்து கானகம் புகுந்து பாதவித்து முடிவில் இந்த இடத்திற்கு வந்தாளோ? இவள் அழவேண்டியதற்குக் காரணம்" என்ன எனப் பலவாறு உள்ளே நினைந்துவருந்தி ஒருவாறுதேர்ந்து, "கண்மணி! உன க்கு என்ன துயர் வந்தது? இந்த இடத்தில் வந்து இவ்வளவு துக்கத்தோடு வருந்துவதற்குக் காரணம் என்ன? எனக் கேட்டார்.

லக்ஷ்மிபாய் துக்காராம் சுவாமிகளின் வார்த்தையைக் கேட்டு முன்னிலும் அதிகமாக அழுதுக்கொண்டு "நாதா! நீர் பேசுகிற வார்த்தை நன்றாக யிருக்கிறது. நாயகி நாயகன் என்று மன மொத்த அன்பினராய் அமைந்து இல்லறம் நடத்துங்காதலிரு வருக்குள்ளே பிரிவு என்பது வந்துவிட்டால், அதினும் துயர் தருவது மற்றொன்றுண்டோ? நாயகன் நாயகியைப் பிரிந்து போவதென்றால் பொருள் தேடுவதற்கேனும், கல்வி தேடுவதற்கே னும் பிரிய நேரும். அப்படி நேர்ந்தால், "கார்காலம் வருகின் றேன்" என்று ஒரு கெடுவைத்துப் பிரிவர். அப்படி நேர்ந்த காலத்திலேயே நாயகியர் பிரிவாற்றுமல் பரிதவிப்பரோ? நீர் என் னிடம் சொல்லாது என்னையும் துறந்து இந்த மலையிலிருந்து தவம் பண்ணுவீரானால், உம்மைப் பிரிந்த நான் பிரலாபித்து வருந்துவது தக்கதோ? நானும் நீரும் உடலும் உயிரும் என்று நீரே எத்தனையோமுறை சொல்லி இருந்தீரே? உயிரின்றி உடல் தரிக்குமோ? நீர் இல்லாது போனால் நானெப்படி தரிப்பேன்? பிராணேசா! சற்றுநேரத்திற்குமுன் நீர் மார்வாரிகடைக்குப்போய் நேற்று நான்கைக்கடனாக வாங்கிய ரூபாய் நூறையும் வட்டியுடன் கொடுத்து ரசீது வாங்கிக்கொண்டு வீட்டிற்கு வந்து, என்கையி லும் நூற்றைம்பது ரூபாயைக் கொடுத்துவிட்டு மாடுகளையும் கொல்லையில் கொண்டுபோய்க் கட்டிவிட்டு என்னைப் பார்த்து "சமையல் செய்துவை. தீர்த்தமாடி வருகின்றேன்" என்று என்னிடம் சொல்லி குளத்திற்கு வந்தீரே? அதற்குள் உமக்கு என்ன நினைப்புவந்து வீட்டை நோக்காது பட்டினியுடன் இங்கு வந்து பகவானை தியானித்துக்கொண் டிருக்கிறீரே? உமது கிர கத்திலிருந்து பகவத்தியானம் பண்ண ஏதாவது குறைவு வந் ததா? அடியாள் தாங்கள் தியானமத்தியில் இடையே வந்து

எதாவது ஒன்றைச் சொல்லி உமது தியானத்தை இதுவரை என்றாவது ஒருநாள் கெடுத்திருக்கிறேனா! அன்றி உமது திருவாராதன காலங்களில் அடியாள் செய்யவேண்டிய பணிகளைச் செய்யாது ஒருநாளாவது குறைவுவந்து உமது மனம் நோகும்படி நேர்ந்திருக்கிறதா? இதுவரை நானறிந்த அளவு ஒன்றும் குறை நடந்ததாக எனக்கு தெரியவில்லையே? அப்படியிருக்க, இன்றையதினம் என்னை வெறுத்து தவம் செய்ய இங்கு வந்ததென்னே! வியாபாரத்தில் ஏதாவது நஷ்டம் வந்தது நாணயம் கொடுக்கவேண்டியவனுக்கு பணம் கொடுக்க முடியவில்லை. அதனால் மலைக்கு வந்துவிட்டேன் என்று சொன்னால் அதுவும் பொருந்தாதே? நேற்றையதினம் மார்வாரியிடம் நூறுரூபாய் வாங்கி வியாபாரம் பண்ணி அதில் இந்த பஞ்சகாலத்தில் உமது சாமர்த்தியத்தால் இருநூற்றைம்பது ரூபாய் கிடைத்து, மார்வாரிக்கு கொடுக்கவேண்டிய நூறு ரூபாயும் கொடுத்தும் மேல் வியாபாரத்திற்கு முதல் நூறு ரூபாயும் வீட்டுச்செலவுக்கு ரூபாய் ஐம்பதும் கிடைத்திருக்கிறதே? இப்படி சிறிது நாள் வியாபாரஞ் செய்தால், நாம் பெருத்த தனவந்தராய் வியாபாரத்தில் உம்மையின்றி யெவரும் உலகில் இல்லை என்று பெயரெடுத்து மிகச்சிறப்புடன் இல்லறம் நடத்தி, அனேக தான தர்மங்களைச் செய்து வாழலாமே? வெண்ணை திரண்டு வரும் வேளையில் தாழி உடைந்ததென்னும்படி வியாபாரத்தில் பெருத்த லாபம் கிடைக்கின்ற சமயத்தில் வனத்துக்கு வந்து தவம் செய்ய ஆரம்பித்தீர்? நான் இன்று அறியாமல் மார்வாரியின் கடைக்குப் போய் பணம் வாங்கினந்த நிலையில் அது உமக்கு கௌரவ அணியாகத் தோன்ற நானிருக்கும்பொழுது, நமக்கு நாணயம் செல்லாமையினால் நமது மனைவி வியாபாரத்திற்கு நாணயம் புரட்டி வந்தாள். என்று வெட்கமுற்று, இந்த வியாபாரம் இனி நமக்கு வேண்டுவதில்லையென்று மனந்தளர்ந்து தவஞ்செய்ய வந்தீரா? இந்த எண்ணத்துடன் தவத்திற்கு வந்திருந்தால், நான் வாங்கிய கடனை என்னிடம் கொடுத்து மார்வாரிக்கு கொடுக்கச் சொல்லுவீரன்றி, நீராகக் கொண்டுபோய் கொடுக்க மாட்டீரன்றோ. அன்றியும் வியாபாரத்திற்கே கையாக்கமொன்று வேண்டுமென்று சிலர்சொல்லுவதுண்டு. நான் நேற்று நூறு ரூபாய் வாங்கிக்கொடுக்க, அது இருநூற்றைம்பது ரூபாயாய்ப் பெருகுமானால், இது கையாக்கமென்றுகூடச் சொல்லலாம். இந்த நல்லதிர்ஷ்டகாலத்தில் என்னைப் பரதவிக்கவிட்டு இப்படி வரலாமா? எனப் பலவாறு லக்ஷ்மிபாய் தனது கணவனைக் கேட்டாள்.

துக்காராம் சுவாமிகள் லக்ஷ்மிபாய் சொன்ன வார்த்தைகளைக் கேட்டு அத்தியாச்சரியத்தை யடைந்து தன் மனைவியைப் பார்த்து, “கண்மணி! நீ சொல்லுவதெல்லாம் விந்தையாக யிருக்

கிறது. இன்றையதினம் நான் மார்வாரி கடையில் நீ நேற்று என்னிடம் வாங்கித் தந்த நூறு ரூபாயையும் கட்டி ரசீதும் வாங்கிக்கொண்டுவந்து உன்னிடம் நூற்றைம்பது ரூபாய் கொடுத்துவிட்டு, உன்னை விரைவாகச் சமையல் செய்யும்படி சொல்லி நான் தீர்த்தமாட வந்தேனென்று சொல்லுகிறாயே? இது உண்மையா? என்னிடம் வஞ்சனையாக பேசுகிறாயே? பேசுவது ஞாயமா எனக் கேட்டார். லக்ஷ்மிபாய், “நாதா! கணவனை வஞ்சிக்கும் பாதக நங்கையர் கூட்டத்தை நான் சேர்ந்தவளில்லை. நீர் கொடுத்த ரூபாயும் என்னிடமே யிருக்கிறது” என்று தனது அடிமுந்தியில் முடிந்து வைத்திருந்த முடிப்பை அவிழ்த்து, அன்று செலவுக்கு எடுத்ததுபோக, மீதி நூற்றிநாற்பத்தொன்பது ரூபாயை துக்காராம் சுவாமி கையில் கொடுத்தாள். துக்காராம் சுவாமிகள் அந்த ரூபாயைத் தனது கைகளில் வாங்கிப் பார்த்து இது பண்டரிநாதனான பாண்டுரங்கன் செயலெனத் தெரிந்து, எழுந்து நின்று, கரதாளம் போட்டுக்கொண்டு பண்டரிநாதனைப் பாடித் தன்னை மறந்தாடி ஆநந்த பரவசராய்த் தன் மனைவியைப் பார்த்து, “பிரியே, நீயே பாக்கியசாலி. பாண்டுரங்கன் உனக்கே என்னுருவாகவந்து சேவை தந்தார். உன்னைப்போன்ற உத்தமி இந்த உலகில் இல்லை” என்று நினைக்கின்றேன். நீ வாங்கிய கடனை தீர்க்க வேண்டுமென்னும் கருத்துடைய எனது உருவுடன் வந்து, மார்வாரியின் கடனைத் தீர்த்து, உனது செலவுக்கென்று நூற்றைம்பது ரூபாயும் தந்து போயினரென்றால், உன்னுடைய பெருமை சாமான்னியமானதா?” என்று தன் மனைவியினிடம் சொல்லி, பின்னும் சில வார்த்தைகள் சொல்லுகிறார். நங்காய்! நேற்றையத் தினம் நீ என்னிடம் மார்வாரியினிடம் ரூபாய் நூறு வாங்கி என்னிடம் கொடுத்து வியாபாரம் செய்ய அனுப்பினையன்றோ? நான் அந்த ரூபாய் நூறையும் கொண்டு பொதிமாடுகளுடன் அளகாபுரிக்குப் போய், உப்பு சோளம் இரண்டு சரக்கும் பிடித்து பொதிமாடுகளின் மேலே போட்டுக்கொண்டு வியாபாரம் செய்ய ஒரு கிராமத்திற்கு வந்துகொண்டிருக்கும்பொழுது, வானம் கறுத்து இடி முழங்கி சோனாவருஷமாக மழை பொழிந்தது. பொதிமாடுகளின்மேல் போட்டிருந்த உப்பு மூட்டைகள் முற்றும் நனைந்து மிச்சம் கோணி என்னும்படி ஆயிற்று. பெண்ணருங்கலமே! உனது கை விசேஷத்தை இன்னும் சொல்லுகிறேன் கேள்: சோளச் சரக்குகள் நனைந்து உள்ளிருந்த சோளம் ஊறி, அடையாய்த் திரண்டு உருண்டது. இந்தமட்டும் மழைவிடாது மேலும் அடித்துக்கொண்டிருந்ததினால், ஆலமரத்தடியில் வந்து நின்றுகொண்டிருந்தேன். இராத்திரிகாலமும் வந்துவிட்டது. வானத்தில் மேகங்கள் பரவி நக்ஷத்திரங்களின் பிரகாசங்களும் தோற்றாது இருண்டுவிட்டதால், வேறு இடத்திற்குப் போகமுடியாமல் மரத்தின் வேரிலே மாடுகளை கட்டி வைத்துவிட்டு நானும் வேரில்

தலை வைத்துப் படுத்தேன். அவ்வளவே என்னை மறந்து அயர்ந்து தூங்கிவிட்டேன். நான் விழிக்கும்பொழுது, கீழ்திசையிலே சூரியன் மெல்ல எழுவதைக் கண்டேன். எனது மாடுகளையாவது அவிழ்த்துக்கொண்டு ஊருக்கு வருவோமென்று வேருகளில் கட்டியிருக்கும் மாடுகளைப் பார்க்க, மாடுகளை புலிகள் அடித்துத் தூக்கிக்கொண்டு போய்விட்டது. கண்ணே! நீ கடன் வாங்கித்தந்த முதலும் போய், வர்த்தகம் செய்வதற்கு ஆதாரவாயிருந்த பொதி மாடுகளையும் புலிகளுக்கு இரையாக்கிவிட்டு ஊரில் வந்து பாதவிப்பதைவிட, பண்டரிநாதன் விட்டபடிவிடட்டுமென்று இந்த மலைமீதிலிருந்து பண்டரிநாதனை பஜித்துக்கொண்டிருந்தேன். நீயும் இப்பொழுது வந்தாய். பொதிமாடுகள் கொல்லையில் கட்டப்பட்டதென்றாயே? நீ மறுபடியும் கொல்லையில் சென்று அந்த மாடுகள் இருக்கக் கண்டாயோ? உண்மையைச் சொல்" எனக் கேட்டார். லக்ஷ்மிபாய், "நாதா! நான் தங்களைக் காணாமையினால் கொல்லையில் மாடுகளுக்கு வைக்கோல் போட்டுக்கொண்டு தண்ணீர் காட்டிக்கொண்டிருப்பீரென்று கொல்லையில் சென்று பார்க்க, அங்கே கட்டியிருந்த ஒரு மாடுகளையும் காணோம். அவைகள் தாளிட்டபடியேயிருக்க, மாடுகளைமாத்திரம் காணவில்லை" என்று சொல்லி, "நாதா! நீர் பட்டினியுடன் இந்த மலையிலிருந்துவருந்த அடியாள் மனம் எப்படித் தாளும்? நான் பொருளாசையால் மதியிழந்தேன். இப்பொழுது பாண்டுரங்கன் ஏராளமாக சிலவுக்கு தந்திருக்கிறார். இதைக்கொண்டு நாம் கொஞ்சநாள் ஜீவனம் பண்ணிக்கொள்ளலாம். இந்த மலையும் நமது ஊரை அடுத்தேயிருப்பதால் நான் விரைவாய்ச்சென்று உமக்கு ஆகாரம் கொண்டு வருகிறேன். இந்த இடத்தைவிட்டு எங்கேயும் போய்விடாதீர்கள்" என்று சொல்லி தன் வீட்டிற்கு வந்து அறுசுவை உணவுப் பொருள்களை அன்புடன் சமைத்து துக்காராம் சுவாமிகள் எழுந்தருளியிருக்கும் மலைக்குச் சென்று உபசரித்து உணவூட்டி வருவாள்.

இப்படி சிலநாள் கழிந்ததும், ஒருநாள் உணவுக்கு ஒருவழியுமின்றி, பட்டினி கிடக்கும்படியான நிலைவந்துவிட்டது. லக்ஷ்மிபாய் தன் நாதன் எழுந்தருளியிருக்கும் மலையின் பாதையை அடுத்து, "நாதா! இன்று கஞ்சி வைப்பதற்குக்கூட ஒரு பிடி அரிசி கிடைக்கவில்லையே. என்ன செய்வது" என்று துயருடன் பிரலாபித்தாள். துக்காராம் சுவாமிகள், "பெண்ணே! நாம் வருந்தினால் ஆவது ஒன்றுமில்லை. நான் என்ன பாடுபடினும் கொடுத்து வைத்ததுதான் கிடைக்கும். பண்டரிநாதன் இன்று நம்மைப் பட்டினி கிடக்கும்படி வைத்தால் நாம் கிடந்துதான் தீரவேண்டும்" என்று சொன்னார். லக்ஷ்மிபாய் தன் நாதன் சொல்லைக்கேட்டு, "நீர் சொல்லுவது ஒரு சிறிதும் சரியல்ல. உலகத்திலே பிறந்தவன் ஒவ்வொருவனும் ஈஸ்வரனுடைய கருணையால் தோன்றிய

வனை ஈஸ்வரனுக்கு எல்லோரும் சமமேயன்றி, ஒருவன் வேண்டியவன். ஒருவன் வேண்டாதவன் என்பது இல்லை. அவன் பக்ஷபாதியல்லன். ரக்ஷகன் ஒவ்வொருவனையும் ரக்ஷிப்பது தன் கடமையாயினும் ஒவ்வொருவனும் பிழைப்பதற்கு ஒவ்வொரு வழிகளைக் காட்டியிருக்கிறான். அந்தந்த வழிகளில் ஒவ்வொருவனும் பாடுபட்டால், அவனவன் முயற்சிக்கு தகுந்த கூலிகொடுத்து ரக்ஷிக்கிறான். அதுவன்றி, ஈஸ்வரன் ரக்ஷகன் என்று, கண்ணை மூடிக்கொண்டு திண்ணையிலிருந்தால் அவன் எப்படி ரக்ஷிப்பான்? உணவுப் பொருள்களை வைத்துக்கொண்டு அன்னமாகவும் பதார்த்தங்களாகவும் ஆகவேண்டுமென்று நினைத்தால், ஆகுமா? அதை உலையிலேற்றி தளிகை பண்ணினால் தான் ஆகும். அதுபோல நமக்கு ஜீவன் விருத்திக்காக பரம்பரையாக வியாபாரவிருத்தியை எம்பெருமான் கற்பித்திருக்கிறான். அந்த விருத்தியை விடாது செய்தால், நமக்கு பண்டரிநாதன் படி அளப்பான். இதைவிட்டு மலையில் வந்து உட்கார்ந்துக்கொண்டு, பண்டரிநாதன் உணவூட்டுவான் என்று வாயைத்திறந்து கொண்டிருந்தால், அவரே, "இவன் சோம்பேறி தனது வயிற்றுக்கே தேடி உண்ணாதவன்" என்று வெறுப்புறுவரேயன்றி, ஆதரவு செய்யார். ஆதலால், நாதா! நாம் ஊருக்குசென்று ஏதாவது ஒரு முயற்சிசெய்து ஜீவனம் செய்யவேண்டும்" என்று லக்ஷ்மிபாய் சொல்ல, துக்காராம் சுவாமிகள் லக்ஷ்மிபாயின் வார்த்தையைக் கேட்டு உடனே மலையிலிருந் திறங்கி ஊருக்கு வந்தார். ஏதாவது தொழில் செய்யவேண்டும். அல்லது வியாபாரம் செய்யவேண்டும். என்னும் எண்ணம் மாத்திரம் அவருக்கு வரவில்லை. சதா பண்டரிநாதனை பஜித்துக் கொண்டு, அவரது அநந்த கல்யாண குணங்களை நினைந்து நினைந்து உள்ளமுருகி, கண்களில் ஆநந்த பாஷ்பம் பெருக, பக்திபரவசராய் நின்று கூத்தாடிக் கொண்டிருக்கும்பொழுது, அவர் மனைவியானவள், அயலகத்தில் கொஞ்சம் அரிசி வாங்கி சமையல் செய்து தனது நாயகனுக்கு உணவளித்து தானும் சிறிது உணவருந்தி தனது நாயகன் ஊருக்கு வந்ததும் ஆகாரத்திற்கு ஒருவழியும் தேடாமலிருப்பதை நினைந்து நாளை ஆகாரத்திற்கு என்ன செய்வோம், யாரிடம் சென்று கேட்போம், என்று இதே சிந்தனையில் மூழ்கினவளாயிருந்தாள்.

துக்காராம் சுவாமிகள் சோளக்கொல்லை காத்த சருக்கம்

துக்காராம் சுவாமிகள் பண்டரிநாதனை பஜித்துக்கொண்டு வீட்டில் சிந்தனையின்றி இருக்கும்பொழுது, அந்த ஊரில் குடியானவனாகிய வணிகன் ஒருவன் தனது கதிர்விளைந்த சோளக்கொல்லையை பக்ஷிகள் வந்து கவர்ந்து செல்லாமல் காக்க, தனக்கோர் மனிதன் தேவையாக ஒருவரும் அகப்படாமையால் துக்காராம்

சுவாமிகள் வேலையின்றி இருக்கிறாரென்பது தெரிந்து அவரிடம் வந்து, "ஐயா! நீர் யாதொரு வேலையுமின்றி இருக்கின்றீரே? எனது சோளக்கொல்லையில் கதிர் விளைந்திருக்கிறது. அதைப் பக்ஷிகள் கவர்ந்துகொண்டு செல்லாமல் பரண்மீதிருந்து காத்தால், அறுவடை செய்யும்பொழுது உமக்கு எட்டிலொரு பங்கு கொடுக்கிறேன்" என்றான். துக்காராம் வணிகன் கூறிய வார்த்தையைக் கேட்டு 'இது ஒரு நல்ல வேலையே? நாம் வீட்டிலிருந்து பண்டரிநாதனை பஜனை செய்வதென்றால் நமது மனைவி வந்து அரிசியில்லை உப்பு இல்லை புளியில்லை என்று அடிக்கடி நம்மிடம் வந்து தியானத்தைக் கெடுக்கிறாள். நாம் தனியிடத்தில் இருந்தால் பகவத் தியானம் இடையூறின்றி நடைபெறும். சோளக் கொல்லை காப்பதோடு பகவத்தியானமும் கொஞ்சம் உணவிற்கு ஆதாரமும் ஏற்படுகின்றது. ஆகையால், இதுவே நமக்குத் தகுந்த வேலை" என உள்ளே நினைத்துக்கொண்டு வணிகனிடம் தான் கொல்லை காக்க வருவதாக ஒப்புக்கொண்டார். வணிகனும், இவர் நம்மை ஏமாற்றாமல் இரவும் பகலும் காவல்செய்வார் என்று நினைத்து அவருக்கு ஆகாரத்திற்கு வேண்டியவற்றை அவர் மனைவியிடம் கொடுத்துவிட்டு அவரை அழைத்துச்சென்று தனது சோளக் கொல்லையில் கட்டியிருக்கும் பரண்மேல் இருக்கச் செய்து, "சுவாமிகளே! பக்ஷிகள் வந்து கதிர்களிலுள்ள மணிகளைப் பொறுக்கிக்கொண்டு போகாமல் சாக்கிரதையாகக் காத்துக் கொள்ளும். இடையிடையே இந்த கவுணில் கல்லைவைத்து சுற்றி எறிந்து பறவைகளை விரட்டியும், உமது துவனியால் பறவைகள் அணுகாவண்ணம் செய்தும், சாக்கிரதையாக காக்கவேண்டும்" என்று சொல்லி, தனது வீட்டிற்கு சென்றான்.

துக்காராம் சுவாமிகள் வணிகன் வீடு சேர்ந்ததும், பண்டரிநாதனை நினைந்து, குயிலினும் இனிய தனது கண்டத்துவனியுடன் அருமையான கீர்த்தனங்களைப் பாடி, தன்னை மறந்து ஆடிக்கொண்டு பரண்மீதிருக்க, இவர் இன்னிசை கேட்டு குயில்களும் கவுதாரிகளும் காடைகளும் மைனாக்களும் காக்கைகளும் சோளக்கொல்லையே தமக்கு உறைவிடமாகக்கொண்டு கதிர்களிலுள்ள மணிகளைத் தின்று கியானாசத்தில் மயங்கி இருந்தன. இவர் மனைவியானவள், வணிகன் கொடுத்த உணவுப் பொருள்களைக்கொண்டு சமையல் செய்து எடுத்துக்கொண்டு சோளக் கொல்லையைக் காத்துக்கொண்டிருக்கும் தனது நாயகனுக்குக் கொண்டுபோய்க் கொடுத்து அவர் உண்ணும்வரை தான் அக்கொல்லையைக் காத்துக்கொண்டிருந்து, அவர் சாப்பிட்டுவிட்டு வந்ததும் தான் தனது வீட்டிற்கு வந்து தானும் சாப்பிட்டுவிட்டு தனது நாயகனையே நினைந்து கொண்டிருப்பாள். துக்காராம் சுவாமிகளை சோளக்கொல்லையைக் காத்து, கதிர்களைப் பறவைகள் கவராமலிருக்க நியமித்த வணிகன் ஒருநாள் கொல்லையைப்

பார்ப்பதற்கு வந்தான். அவன் கொல்லையில் வந்ததும், கூட்டம் கூட்டமாகப் பறவைகள் கதிர்களைக்கோதி மணிகளைத் தின்று கொண்டிருப்பதும், கதிர்களெல்லாம் மணிகளின்றி இருப்பதும், தன்னால் காவலாக நியமிக்கப்பட்ட துக்காராம் சுவாமிகள் தன்னை மறந்து பரண்மீதிருந்து பண்டரிநாதனைப் பாடி ஆடிக்கொண்டிருப்பதும் கண்டான். சோளக்கொல்லைக்கு காவல் வைத்தும் பறவைகளால் அழிந்துபோனதை நினைந்து மிகுந்த வருத்தமடைந்து, மனம் தாளாமல், துக்காராம் சுவாமிகளை வாயில் வந்ததெல்லாம் சொல்லி, "உன்னைக் காவலாக வைத்ததில் உள்ள மணிகளும் போயிற்றே" என்று பெருங் கூச்சலிட்டுக்கொண்டு ஊருக்குள் வந்து ஒவ்வொரு வீடுதோறும்சென்று, "ஐயா! எனது சோளக்கொல்லையைக் காப்பதற்கு வேலையின்றி வருந்தும் துக்காராம் என்பவருக்கு எட்டிலொருபங்கு கொடுப்பதாகச் சொல்லி, கொல்லையை அவர் வசம் ஒப்புவித்தேன். அவர் கொல்லையின் காவலை கொஞ்சமும் கவனியாமல் பாடி ஆடிக்கொண்டிருந்து விளைந்த கதிர்களையெல்லாம் பறவைகளுக்குஇரையாக்கிவிட்டார். இந்த வருஷம் நல்ல விளைவென்று நினைந்து மகிழ்ந்தேன். கதிர்களில் ஒரு மணியையாவது காணவில்லை" என்று சொன்னான். துக்காராம் பக்தியையறிந்த சிலர், வணிகனைப் பார்த்து, "நீ அவரை அவதூறாகப் பேசாதே? அவர் சாது. அவருடைய காவலில் உனக்குக் கஷ்டம் ஏற்படாது" எனச் சொன்னார்கள். வணிகன், "ஐயா! நான் விவசாயியல்லவா? எனது கொல்லையில் விளைந்த தானியத்தை எனக்கு மதிக்கத் தெரியாதா? சென்ற வருஷம் விளைந்ததில், நாலிலொரு பங்குகூட இந்த வருஷத்தில் கிடையாது. இந்த வருஷத்தில் பயிர் செழிப்பும் கதிர்களின் வளப்பமும் கண்டு மகிழ்ந்து, சென்ற வருஷத்திற்கு ஒருபங்கு அதிகமாகப் பலன் கிடைக்குமென்று மகிழ்ந்தேன். துக்காராம் சுவாமிகளை கொல்லைக் காவலுக்கு வைத்து விளைந்ததும் போயிற்று" என்று முறையிட்டான். அப்பொழுது ஒரு பெரிய விவசாயியெழுந்து, வணிகனைப் பார்த்து, "நினது சோளக்கொல்லையில் துக்காராம் சுவாமிகள் காப்பதிலிருந்து எவ்வளவு நஷ்டம் உனக்கு வந்ததோ அதை நான் கட்டித் தருகிறேன். பரமசாதுவான அவரை நீ இனி நிந்தியாதே" என்று வேண்டிக் கொண்டான். வணிகனும் அதுமுதல் துக்காராம் சுவாமிகளை நிந்திப்பதைவிட்டு, தன் அதிர்ஷ்டப்போல கிடைக்குமென்று தேறுதலடைந்து, கதிர் முற்றியபின் கதிரைக் கொய்து முதல் செய்ய முந்திய வருஷத்தைவிட ஒரு பங்கு அதிகமாக தானியம் கூடியதைக்கண்டு, "அந்தோ! பரமசாதுவை நிந்தித்தோமே! ஊரெங்கும் குறை கூறினேமே! என்ன நம்முடைய புத்தி" என வருந்தி, துக்காராம் சுவாமிகளின் வீட்டிற்குவந்து அவர் திருவடிகளில் சாஷ்டாங்கமாக விழுந்து நமஸ்கரித்து, "சுவாமி! உமது பிர

பாவம் தெரியாது நீர் சோளக் கொல்லையைச் சரியானபடி காக்கவில்லை என்று உம்மை நிந்தித்து பாவியானேன் என்னை மன்னிக்கவேண்டும்" என்று பிரார்த்தித்து அன்றுமுதல் அவருக்கும் அவர் பத்தினிக்கும் ஆகாரத்திற்கு வேண்டிய தானியங்களைக் கொடுத்து ஆதரித்துவந்தான்.

துக்காராம் சுவாமிகளின் பூர்வ ஜனன சருக்கம்

துக்காராம் சுவாமிகள் வணிகன் தரும் உணவுப் பொருள்களால் தனது கிரக கிருத்தியத்தை நடத்தி பண்டரிநாதனை பஜித்துக்கொண்டிருக்கும்பொழுது, ஒருநாள் ஒரு சொர்ப்பனம் கண்டு திடுக்கென்று விழித்து எழுந்தார். அந்த சொர்ப்பனமாவது, நாமதேவர் பண்டரிநாதனால் தனக்கு ஆச்சாரியனாக நியமிக்கப்பட்ட விசோபாகேசரிடம் விசிஷ்டாத்வைத சித்தாந்த உண்மைகளையும், திருமந்திரத்தையும் உபதேசமாகப் பெற்று பரமஞானியாய் பண்டரிநாதனை பஜனை செய்துகொண்டிருக்கும்பொழுது, ஒருநாள் பாண்டுரங்கன் சன்னதியின்முன் நின்றுகொண்டு, "ஏ! தனித்தந்தையே! உனது அநந்த கல்யாண குணங்களை நினைக்க நினைக்க, ஆநந்தமகிழ்ச்சி ஏற்படுவதோடு உனது குணக்கடலிலிருந்து கரைசேர முடியாதபடி ஆழச் செய்கின்றது. இந்த நிலையே வைஷ்ணவத்தின் தனிநிலை என்று கண்டேனெனினும், உனதருளின்றி உன்னை வழிபடுவதும் அரிதென்பதும் தேறினேன் தேவா! உனது அநந்த கல்யாண குணங்களை சதகோடி விருத்தங்களாகப்பாடி பரவசமடையவேண்டுமென்னும் ஆசை அதிகமாகயிருக்கிறது, அந்த ஆசையைப் பூர்த்திசெய்து வைக்கவேண்டும்" என்று பிரார்த்தித்தார். பண்டரிநாதன் நாமதேவருடைய பிரார்த்தனையைக்கேட்டு, "நாமதேவர் சதகோடி விருத்தங்கள் எனது குணங்களை விரிப்பனவாய்ப் பாடவேண்டுமென்று ஆசைப்படுகின்றனை. சரீரமானது அநித்தியமானதென்பதை யறியாயோ? அதனினும், மானிட சரீரத்திற்கு நூறு வயதென்று ஏற்பட்டிருக்கிறது. அந்த நூறுவயதில் பாதி நித்திரையில் கழிகிறது. மிஞ்சிய ஐம்பதுவயதில் பதினைந்துவருஷம் பேதையென்றும் பாலனென்றும் கழிகிறது. அதற்குமேல் யௌவனமென்னும் பருவத்தில் மகளிர் மயக்கம், பொருள் மயக்கம், மண்மயக்கமென்னும் வனங்களில் புகுந்து உழல்வதால் சில வருஷங்கள் கழிகிறது. இப்படி யௌவனம் கழிந்தால், வயோதிகமென்னும் கிழப்பருவம் வருகிறது. அந்த பருவத்தே தான் பற்கள் கழன்று, உடல் திரைந்து, உரோமம் வெளுத்து, கண்கள் பீளைசோர, ஈழைநோய் ஒன்று துணையாய் வந்துகூட, பண்டு காமுகராய் வாழ்ந்த வாழ்க்கையும் பல நங்கையர்களின் அதராமிருதமுண்ட மகிழ்ச்சியையும் நினைந்து, இடையில்வரும் இருமலால் வருந்தி சோரும் நிலைமையில் சாக்காடென்னும் மரணம்

சம்பவிக்கிறது. இத்தகைய மானிட சரீரமுடையவர்களில் நீயும் ஒருவனன்றி வேறில்லை. நீ சதகோடி விருத்தங்கள் பாடவேண்டுமென்றால் எப்படி முடியும்? நீ பாடினால் இந்த சதகோடி விருத்தங்களையும் எழுதுகின்றவர்கள் யார்? இதையெல்லாம் யோசிக்கவேண்டாமா?" என்று பண்டரிநாதனான பாண்டுரங்கன் திருவாய்மலர்ந்தருள, நாமதேவர் பாண்டுரங்கனது சரணாரவிந்தத்தில் விழுந்து பணிந்து, "தேவாதி தேவா! நானா பாடுகிறேனென்றும் உம்மை வேண்டுகிறேனென்றும் நினைக்க என்ன இருக்கிறது? "நானே நீ என்னுடைமையும் நீ வானோரேத்தும் வானவரேறே" என்று நம்மாழ்வார் திருவாய்மலர்ந்திருக்கிறார். ஆதலால், என் உள்ளிருந்து நீயே உன் குணங்களைப் பாடவேண்டும். அன்றி, நான் பாடினேனென்றுவது எனக்கு அத்தகைய சக்திஉண்டோ என்று நினைக்கவாவது கூடுமோவென்று விண்ணப்பம் செய்து, "சுவாமி! அடியவர் கோரியதை பூர்த்திசெய்துவைக்கவேண்டியது தேவரீருடைய கடமையன்றோ? ஆதலால், எனது குறையையும் ஈடேற்றி வைக்கவேண்டும்" எனப் பிரார்த்தித்தார். உடனே பாண்டுரங்கன் கருணை கூர்ந்து, "நாமதேவா! உனக்கு நான் அன்னியனல்லன். சொந்தமாகவேயிருக்கிறேன். உனது பிரார்த்தனையைப் பூர்த்தி பண்ணுவதை தவிர வேறொன்றும் எனக்கு சிறந்தது இல்லை" எனத் திருவாய்மலர்ந்தருளி நாமகளை நினைந்தார். நினைந்த அளவே வாணிதேவி வந்து பரந்தாமனைப் பணிந்துநிற்க, பார்த்தசாரதியானவர், வெண்டாமரைமே லுறைவாளைப் பார்த்து, "வாணிதே! நாமதேவர் சதகோடி விருத்தங்களாக எனது குணங்களைப் பாடவேண்டுமென்று ஆசைப்படுகிறான். ஆதலால், நீ அவனது நாவிலிருந்து நூறுகோடி விருத்தங்களைச் சொல்லுதி" என்று நியமனம் செய்ய, சரஸ்வதியானவள், சர்வேஸ்வரனுடைய திருவடியில் விழுந்து பணிந்து, "இறைவா! உனது அநந்த கல்யாண குணங்களை விரித்துச் சொல்ல உமது அருகே வீற்றிருக்கும் அநந்த கருட விஷ்வக்சேனாதியருக்கும் தெரியாத உம்முடைய கல்யாண குணங்களை ஒன்றுமறியாப் பேதையாகிய நானோ சொல்லும் தரமுடையவள்? ஆயினும், உமது நேமனம் ஏற்படின், அதை நிறைவேற்றுவது எனது கடமையாகும். நான் நாமதேவருடைய நாவினின்று விருத்தரூபமாய் ஏதோ சொல்லுகிறேன். நூறுகோடி சுலோகமாதலால், விரைவாய் எழுதவேண்டியதற்கு ஒருவரை நியமிக்கவேண்டும்" எனக் கலைமகள் சொல்ல, கார்வண்ணன் கேட்டு, "நானே எழுதுகிறேன்" என்று ஓலையுமெழுத்தாணியும் பிடித்து நின்றார். நாமடந்தை நாமதேவர் நாவிலிருந்து நாதனுடைய அநந்த கல்யாணகுணங்களை சுலோக ரூபகமாய்ச் சொல்ல, பாண்டுரங்கன் எழுதிக்கொண்டேவரும்பொழுது தொண்ணூற்று நான்குகோடியே நாற்பது லக்ஷ விருத்தங்களாயின. சர்வேஸ்

வரனுடைய அநந்த கல்யாண குணங்களை யிடையறாது பாசுரங்களாகப் பாடிக்கொண்டு வரும்பொழுது இந்த மண்ணுலகவாழ்வில் வெறுப்பும் நித்திய விபூதியான பரமபதத்தில் விருப்பும் வந்து பஞ்சபூத பௌதிகமான ஆக்கையினிடம் அருவருப்பு தோன்ற, நாமதேவர் பாடாது நின்றுவிட, பண்டரிநாதர் நாமதேவராது நினைப்பையறிந்து நாமதேவரைப் பார்த்து, தனயா! நீ பாடாது நின்றதின் கருத்தைத் தெரிந்து கொண்டேன். உனக்குரிய விபூதியில் வெறுப்புவந்து, நித்திய விபூதியையடைய ஆசைவந்தது. நினது ஆசை பூர்த்தியடைய உமக்கு பரமபதந் தந்தேன். பரமபதம் சென்றவன் மீண்டும் இந்த புவியுலகத்திற்கு வருவதில்லையாயினும் நீ மாத்திரம் இன்னும் சிறிது காலம் சென்று புவியுலகத்திற்கு வரும்படி நேர்ந்துவிட்டது. ஏனென்றால், சதகோடி விருத்தங்களால் எனது கல்யாண குணங்களைப் பாடுகிறேனென்று பாட, நானும் சதகோடி சுலோகங்களையும் எழுதுகிறேனென்று சங்கல்பம் செய்துகொண்டு ஓலையையும் எழுத்தாணியையும் பிடித்து எழுத ஆரம்பித்தேன். இதுவரை தொண்ணூற்று நான்கு கோடியே நாற்பது இலக்ஷ விருத்தமே பூர்த்தியாயிருக்கிறது. இன்னும் ஐந்து கோடியே அறுபதுலக்ஷம் விருத்தங்களானால், உனது சங்கல்பமும் எனது சங்கல்பமும் நிறைவேறும் இதற்காகவே நீ மீண்டும் புவியில் பிறக்கவேண்டும். அப்படி பிறக்கும்பொழுது, 'துக்காராம்' என்னும் நாமதேயமுடையவனாய் எனது பக்தியில் சிறந்தவனாய்ப் பிறந்து, ஐந்து கோடியே அறுபது லக்ஷம் விருத்தங்களையும் பூர்த்திசெய்து சேதனர்களையும் திருத்தி மீண்டும் பரமபதத்திற்குச் செல்லுவாயென்று நாமதேவரிடம் பண்டரிநாதன் தெரிவித்து நாமதேவரை பரமபதத்திற்கு அனுப்பினர். அந்த நாமதேவரே சிலகாலம் கழிந்து தேவநகரத்தில் தேவராஜாராம் என்பவருக்கு புத்திரராய் வந்து பிறந்தார்" என்று துக்காராம் சொர்ப்பனத்தில் பண்டரிநாதன் எழுந்தருளி தெரிவித்து, பின்னும், "ஏ துக்காராம்! நீ நாமதேவருடைய அவதாரமாகும்! கேவலம் இந்த சம்சாரபந்தத்தில் மயங்கி சேதனர்போல உழலாதே. நீ என்னையன்றி, ஒன்றிலும் பற்றுவையாதே. உனக்கு சர்வதேச சர்வகால சர்வாவஸ்தையிலும் நானே துணையாயிருந்து வேண்டுவன செய்வேன். நாமதேவர் பூர்த்திபண்ணாத பாசுரங்களை நீரே பூர்த்திபண்ணவேண்டு" என்று பண்டரிநாதன் சாதித்ததே இவர்கண்ட சொர்ப்பனமாகும்.

துக்காராம் சுவாமிகள் பகவான் தனக்கு சொர்ப்பனத்தில் சேவை சாதித்து சொன்னவைகளுக்கு ஏற்ப, கவித்துவம் எழுந்துவிட்டது. பண்டரிநாதன்மீது அன்றுமுதல் கவிபாட ஆரம்பித்தார். இவர் பாடுகின்ற கவிகளில் ஒவ்வொன்றிலும் சொன்னயமும் பொருள் நயமும் செறிந்து பக்திரசமானது

ததும்பிக்கொண்டிருப்பதால் அநேக பாகவதோத்தமர்கள் துக்காராம் சுவாமிகளின் கவிகளைக் கேட்டு ஆனந்தபரவசராய் இப்பாக்கள் தெய்வத்தன்மை அமைந்தனவென்று புகழ்ந்தனர். சாதாரணமாக சொற்பகல்வியை கற்றுவிட்டுத் தானும் கவித்துவமுடையவரென்று சில பதங்களைச் சேர்த்து கவியெழுதி தாம் எழுதிய கவியைத் தாமே மெச்சிக்கொள்ளும் போலிப்பண்டிதர்கள் துக்காராம் சுவாமிகள் சொன்ன பாக்களிலுள்ள சொல் நயங்களையும் பொருள் நயங்களையும் கற்பனையலங்காரங்களையும் கண்டு, அசூயைகொண்டு நமது கவிகளுக்கு மங்குங்காலம் வந்ததேயென்று வருந்தி, இவர் காதுகளில் படும்படியே துக்காராம் எந்த ஆசானிடம் கல்விகற்றவர்? எந்த சாஸ்திரங்களில் இவருக்குப் பழக்கமுண்டு? முதலில் இலக்கண நூல் கற்றிருக்கிறாரா? கவிபாடுதற்குரிய யாப்பிலக்கணம் இவருக்குத்தெரியுமா? யாப்பிலக்கணம் தெரியாதான் கவியைப் பண்டிதர்கள் எப்படி ஒப்ப முடியும்? இவர் பொதிமாட்டின்மீது தானிய மூட்டைகளை ஏற்றிக்கொண்டு ஊரூராகத்திரிந்து வியாபாரத்தையுமிழந்து வாணிப சோளக்கொல்லையைக்காத்த இவர் கவியையும் கவி என்று சில மந்தமதிகள் கேட்டு தலையசைக்கின்றனரே என்று நிந்தித்தார்கள். துக்காராம் சுவாமிகள் தன் முன்னே நின்று தன்னைத் தூஷிக்கின்றவரிடம் சென்று, "சாதுக்களே! நான் ஒன்றும் கல்லாதவனே. கோணக் கோணக் கோவிந்தா என்று வாயில் வந்தவற்றை உளறுகின்றேன். அன்றி இலக்கண வரம்புடன் கவியென்று நினைத்து ஒன்றும் சொன்னவனில்லை. என்னிடம் அநேக தோஷங்கள் இருக்கலாம். நீங்கள் அந்தத்தோஷங்களை எடுத்து எனக்குச்சொல்லி என்னை நல்வழி படும்படி செய்கின்றீர். ஆதலால் எனக்கு நீங்களே ஆசாரியனாகின்றீர்கள். உங்களாலே யான் நல்வழியடைகின்றேன்" என்று தாழ்ந்துவேண்ட, அசூயைகொண்ட போலிப்பண்டிதர்களும் இவருடைய நயமான மொழிகளைக்கேட்டு இவருடைய உத்தமகுணங்களைக் கொண்டாடி, துக்காராம் சுவாமிகளுடன்கலந்து, பக்திபண்ண ஆரம்பித்தனர். துக்காராம் சுவாமிகளின் கவிகள் பல பண்டிதர்களாலும் கொண்டாடப்பட்டு பக்திரசமாகவிளங்கி அக்காலத்து மகாகவியென்று கொண்டாட, குன்றத்தில் வைத்த விளக்குப்போல் பிரகாசித்தது.

துக்காராம் சுவாமிகளைக்காண சிவாஜி வந்த அத்தியாயம்

துக்காராம் சுவாமிகள் ஆடிமாதம் பண்டரிபுரத்தின் பிரம்மோத்ஸவமானதால் தனதுபத்தினியோடும் அநேகசாதுக்களோடும் பண்டரீபுரத்திற்கு எழுந்தருளி, பாண்டுரங்கனைக் சேவித்து, ஆராமகிழ்வடைந்து, தேவா! உனது சேவையையிழந்து அரிதே காலம் கழிந்தனவேயென்று, தேனினும் இனிய செஞ்சொல் பனு

வல்களாய் அமைந்த பாடல்களைப்பாடி பண்டரியில் உற்சவத்திற்காக வந்திருக்கும் சகல பாகவதர்களும் ஆனந்தபரவசமடைய இனிய கண்டத்தொனியுடன்பாடினர். பாண்டுரங்கனது சேவார்த்தமாய்வந்த சாதுக்களும் சேவார்த்திகளும் துக்காராம் சுவாமிகளின் பஜனைகோஷ்டியில் கலந்து பரவசமாய் பண்டரிநாதன் சேவையைக்கூட பொருள்படுத்தாது போயினர். துக்காராம் சுவாமிகளோ நினைக்கும்பொழுதெல்லாம் அருட்பாக்களைப் பாடிக்கொண்டு உணவு செய்வதையும் நித்திரை பண்ணுவதையும்கூட மறந்து பண்டரிநாதனுடைய அனந்த கல்யாண குணங்களாகிய அமிர்தத்தைப் பானம்பண்ணி ஆனந்தவாரியில் மூழ்கி பண்டரியில் எழுந்தருளியிருந்தார்.

இவருடைய பிரபாவமானது உலகெங்கும் பரவியது. அப்பொழுது புனாவிலிருந்துகொண்டு அந்தத்தேசம் முழுதும் இராஜ்ஜியபரிபாலனம் செய்யும் சிவாஜி மகாராஜன் துக்காராம் சுவாமிகளின் பிர்பாவத்தைக் கேள்வியுற்று, அவரை தரிசிக்க வேண்டுமென்னும் பேரவாவுடையவராய்த் தனது சத்துருவாகிய அவுரங்கஸீப் தன்னைக் கண்டுகொள்ளாதபடி மாறுவேடம்புனைந்து வேறு ஒருவரும் தன்னுடன் துணையாகவாராமல் தான்மாத்திரம் தனிப்பட்டு ஒரு தட்டம் நிறையத் தங்கநாணயத்தைக் கொணர்ந்து பண்டரிபுரத்தில் எழுந்தருளியிருக்கும் துக்காராம் சுவாமிகளின் திருமடத்திற்குவந்து அவருடைய பஜனை கோஷ்டியில் கலந்து அவர் பாடும் பாடல்களைக்கேட்டு ஆனந்தமுற்று, 'இன்றுதான் என் ஜன்மம் சாபல்யமடைந்தது' என்று மகிழ்ந்து, அவர் திருவடிகளில் சாஷ்டாங்கமாக நமஸ்காரம் செய்து தான் கொணர்ந்த தங்க நாணயங்களை அவர் திருவடிகளில் சமர்ப்பித்து அஞ்சலிபஸ்தனாய் நின்று பிரார்த்தித்தான்.

துக்காராம் சுவாமிகள் தனது திருவடிகளில் ஏராளமாகக் கொட்டியிருக்கும் தங்கநாணயத்தைக் கண்டு சிறிது வருத்தமுற்று சிவாஜி மகாராஜனைப் பார்த்து, ஐயா! நீர் இந்த ஆட்கொல்லியை என்னிடம் கொணர்ந்து சேர்க்க நான் உமக்கு செய்த குற்றம் யாது? அம்மம்மா! இதினும் கொடிய விஷம் வேறுண்டோ! அருந்தவத்தினரையும் கெடுக்க வேண்டுமென்றால் இதுபோதுமே. ஒருவன் சன்னியாசமென்று சர்வத்தையும் விட்டேன் என்பதாக இடையில்காஷாயவுடையைத்தரித்துக்கொண்டு மனைவி மக்கள் சுற்றம் இல்லம் மாடு செல்வம் யாவற்றையும் விட்டு திரிதண்டத்தை கரத்திலேந்தி வெளிப்படுகிறான். அவனையாராவது இல்லறத்தானதிகியாயிற்றே என்று பாதபூசைபண்ணி பிட்சைகொடுத்து உபசரித்தால் இதிலிருந்து அவன் சிந்தனை மாறி நம்மை அநேகர் அதிதியென்று வணங்க வேண்டும். அநேகர் நமக்கு சிஷ்யராகவேண்டும். அப்படி சிஷ்யராயின் நாம் தங்க ஒரு திருமடம் வேண்டும். அந்த மடத்துக்கு வந்தவர்

களைத் திருப்தி செய்துவைக்கவேண்டும். இதற்கெல்லாம் போதிய பொருளும் வேண்டும். பொருள்தேட யாத்திரை புறப்படவேண்டும். யாத்திரையில் படோடோபம் இல்லையானால் பொருள் சேராது. அதற்காக பல்லக்கு பிருதுகள் இவைகளுடன் பல பெயர் தனது சிஷ்யர்களாகத் தன்னுடன் வரவேண்டும் என்று நினைத்து, இதே சிந்தனையாக சர்வேஸ்வரனையும் மறந்து திண்டாடச்செய்யும் இந்த நிதியை யென்னிடம் சேர்த்தீரே? பண்டரிநாதனது சரணாரவிந்தமொன்று எனக்கு வேண்டப்படும் செல்வமன்றி நீர் கொடுக்கும் இந்த தங்க நாணயம் எனக்கு செல்வமல்ல. நிராசையுடையோனிடம் நீர் செல்வத்தை சேர்க்கக் கருதினால் அந்த செல்வமானது, மதிப்புடையதாக நிரம்ப சாக்கிரதையாக எண்ணித் தனது கண்களில் ஒத்திக்கொண்டு பெட்டியில் வைத்துப் பூட்டி தினமும் ஒருமுறை திறந்துபார்த்து மகிழ்ச்சி அடைவான். அக்கணமே தங்க நாணயமாயிற்றே என்றும் பாராமல் பல ஆசையுடையோர் அடையட்டுமென்று சொல்லி தெருவில் வாரியிறைத்து அந்த நாணயத்தைக் கவருவோர் மேல்விழுந்து சண்டை செய்வதைக் கண்டு மகிழுவன். ஓடுமிருநிதியும் ஒன்றாகக் காண்பவரிடமே சர்வேஸ்வரன் கோயில்கொண்டு எழுந்தருளியிருக்கிறான். இந்த நாணயம் பரந்தாமனாகிய சர்வரக்ஷகன் வழியாய் என்னைக் காப்பாற்ற சக்தியற்றபொழுது எனக்கு விருப்பம் தருமேயன்றி, இப்பொழுது வெறுப்பையே தரும். கடவுளை நம்பினோர் கைவிடப்படமாட்டாரென்னும் சிறிய பழமொழியை நீர் கேட்டதில்லையோ? தினபந்துவாய் அவனொருவன் ரக்ஷிக்கக் காத்திருக்கும்பொழுது, உமது பொருளினிடம் எனக்கு விருப்பம் வருமா? எனக்கு யாதொரு குறையுமில்லை. இது உமது கைவசமிருந்தால் அது அநேக நல்வழியில் செலவுசெய்து கியாதி லாப பூசையை அடையலாமன்றி அநேக ஏழைகளுக்கு வழங்கின் சிலநாளைக்கு அவர்கள் சந்தோஷமாகக் கவலையற்று உணவுண்டு மகிழ்வர். சாதுக்கள் இத்தகைய நிதி ஆசைக்குத் தப்பியே வனம் சென்று வைராக்கியமான நிதியைப்போற்றி, பரந்தாமன் கருணை செல்வத்தைப் பெறுகிறார்கள். உலகத்திலுள்ள விஷயாதி மார்க்கங்களுக்கெல்லாம் ஆதாரமானது இந்தபொருளன்றி உற்று நோக்கினால் வேறில்லை. 'பொருளிலார்க் கிவ்வுலக மில்லை. அருளிலார்க் கவ்வுலக மில்லாத ஆங்கு' என்று பொய்யா மொழியான திராவிடவேதம் புகலுகிறது. பொருளுடையவனே எழிலுடையவளின் தயையடைய நடந்து இன்பத்தை யடையமுடியும். பொருளுடையவனே நிரம்பிய பூமியை யடைய மாட்டுவன். பொருளுடையவனையே உலகம் மதிக்கும் பரமஞானியாராயினும் வறுமை அடைந்தவராயின் ஞாலத்தவர் அவனை மதியார். சுருங்கச் சொல்லின், பொருளில்லாதபொழுது பெற்றதாயும் நிந்திப்பள். பிதாவோ, கண்ணெடுத்துப்பாராது விரோதியைப்

போல் பாவிப்பான். சகோதரர்கள் பேசவும் மாட்டார்கள். கொண்ட மனையாட்டியும் குருகுருத்து சண்டை செய்வாள். இத்தகைய விபரீதங்களுக்கெல்லாம் எல்லையதாகிய இந்தசெல்வத்தை நீர் என்னிடம் சேர்ப்பிக்காது நீரே வைத்திருப்பது எனக்கு பரமோபகாரம் செய்ததாகும்" என்று துக்காராம் சுவாமிகள் சிவாஜி மகாராஜனிடம் சொன்னார்.

இவர் மனைவியான லக்ஷ்மிபாய், பொற்றட்டில் நிரம்ப தங்க நாணயம் இருப்பதைக்கண்டும், அதைத் தன் நாயகன் வேண்டாமென்று மறுப்பதைக்கண்டும், மனந்தாளாதவளாய், "அந்தோ! இந்த தங்க நாணயங்களால் எவ்வளவு நகைசெய்து அணிந்து கொள்ளலாம்! எவ்வளவு நாகரீகமாக உடைதரித்து மகிழலாம். அறுசுவை உணவை அருமையாய் சமைத்து ஆநந்தமாக உண்டு மகிழலாம். இதையெல்லாம் நினையாது நமது நாயகன் 'வேண்டாம் நீரே கொண்டுபோம்' என்று புறக்கணிக்கிறாரே? இந்த வைதிகனுக்கு வாழ்க்கைப்பட்டு எனது வாழ்நாள் வீழ்நாளாயிற்றே என்று தனது கைகளை நெறித்தாள். துக்காராம் சுவாமிகள் இதை அறிந்து அறியாதவர்போல இருந்துவிட்டார்.

சிவாஜிமகாராஜன் தான் கொண்டுவந்த பொன் நாணயத்தில் ஒன்றுகூட தொடாமல் தன்னையே கொண்டுசென்ற அவருடைய மனபரிபாகத்தைக்கண்டு ஆறுமகிழ்ச்சியடைந்து தனது ராஜ்ய செல்வத்தையும் மறந்து, துக்காராம் சுவாமிகளினுடைய சாமித்தியங்களிலும் பஜனையிலும் ஈடுபட்டு பரமானந்தத்தையடைந்தவனாய் மூன்றுமாதம்வரை பண்டரிபுரத்திலேயே தங்கி இருந்துவிட்டான்.

சிவாஜி தனது இராஜ்ஜியத்தைவிட்டு தனிப்பட்டு பண்டரிபுரத்தில் சென்று துக்காராம் சுவாமியினுடைய பஜனையில் மயங்க, அங்கேயே தாமதித்திருக்கிறான் என்பதை ஒற்றர்களால் தெரிந்துகொண்டு இவன் விரோதியான அவுரங்கசீப் என்னும் துருக்கமன்னன் நாம் சிவாஜியை ஜெயிக்க இதுவேசமயமென்று நினைத்து தனது சேனாதிபதியை ரகசியமாய் அழைத்து, "சேனாநாதா! நாம் பலநாளாக படையுடன் எதிர்த்தும் நம்மைத் தோல்வியடையும்படி செய்த சிவாஜிமன்னன் நம் நற்காலத்தில் பண்டரிபுரத்தில் துக்காராம் என்னும் ஒரு பாகவதன் வீட்டில் மூன்றுமாதமாகத் தனியேதாமதித்துக்கொண்டிருக்கிறானாம். இந்த சமயம் யாரும் அறியாது பண்டரிபுரத்திற்குப் படையை அனுப்பி துக்காராம் வீட்டிலிருக்கும் சிவாஜிமன்னனைப் பிடித்துக் கைதியாக்கிவிட்டால், நமது பகை அலைந்து சுகப்படுவோம். ஆதலில், நீ உனது உதவி சேனாபதிக்கும் இந்த விஷயத்தைச் சொல்லாது இரண்டாயிரம் குதிரைவீரருடன் சென்று துக்காராம் வீட்டை முற்றுகைபோட்டு சிவாஜியைப் பிடித்து கைதியாக்கி விலங்கிட்டுக் கொண்டுவா" என உத்திரவிட்டான்.

சேனாதிபதி அவுரங்கசீப்பான தனது மன்னன் உத்திரவைப் பெற்று தனது உதவிசேனாதிபதிகளுடன் இரண்டாயிரம் குதிரை வீரர்கள் புடைசூழ இரவு பதினைந்து நாழிகைக்குமேல் எல்லோரும் அயர்ந்து தூங்கும் நேரத்திலே பண்டரிபுரத்திற்கு வந்து துக்காராம் வீட்டைவளைந்து முற்றுகை போட்டு உருவியவாளுடன் குதிரைவீரர்கள் காக்க, சேனாநாயகன் தனது உதவி சேனாபதிகள் மூவருடன் ஆயுதந்தரித்து, துக்காராம் சுவாமிகள் எழுந்தருளியிருக்கும் திருமடத்திற்குள் பிரவேசித்தார்கள். அன்றைய தினம் ஏகாதசியானதால், தனது சிஷ்யர்களுடனும் சாதுக்களுடனும் பகவன்நாமபஜனம் செய்து பஜனை பண்ணிக்கொண்டிருக்கிறார். அந்தசமயம் சேனாநாயகன் அவ்விடம் சென்று "சிவாஜி மன்னன் இங்கிருக்கின்றானா" என்றுகேட்க, அவர், "இங்கில்லை" யென்று சொன்னார்கள். சிவாஜி மகாராஜன் தனது விரோதியான அவுரங்கசீப் ஒற்றர்களால் தன்னை அறிந்து கைதியாக்கப் படை அனுப்பியிருக்கிறானென்று தெரிந்து, இனி தப்புவது கஷ்டந்தானென்று தயங்கினான். இதையறிந்த துக்காராம் சுவாமிகள் சிவாஜியையும் தனது சிநேகிதர்களான சாதுக்களையும் பாகவதர்களையும் சிஷ்யர்களையும் பார்த்து, "அந்த சேனாதிபதி தெரிந்து கொள்ள முடியாத குஜிராத்திபாஷையில் இன்று துருக்கர்கள் நமது மடத்தை சுற்றிக்கொண்டு சிவாஜி மன்னவரைக் கொல்லவோ கைதியாக்கவோ வந்திருக்கின்றனர். இந்த சந்தர்ப்பத்தில் பண்டரிநாதனது பஜனையைத் தன்னை மறந்து செய்துக்கொண்டிருந்தால், பாண்டுரங்கன் மன்னனைக் காக்கினும் காக்க நேரும். இல்லாது துருக்கர்கள் வாளுடன் வந்திருப்பதால் நம்மைவெட்டி உயிர்வதை செய்வது நிச்சயம். ஆகையால் பகவன்நாம பஜனம் செய்துக்கொண்டிருக்கும்பொழுதே உயிர் நீங்கின், இந்த கர்மபூமியின் சம்மந்தமொழிந்து நிரதிசய ஆநந்த வீடான பரமபதத்தைச் சாருவோம். நாம் மாத்திரம் விடாமல் பஜனை பண்ணிக்கொண்டிருப்போம்" என்று திருவாய் மலர்ந்தருள, சிவாஜியும், மற்றும் யாவரும் கேட்டு கவலையென்பது ஒரு சிறிதும் இல்லாதவராய் பண்டரிநாதனுடைய திவ்விய நாமங்களைப் பாடிக்கொண்டிருந்தார்கள்.

சிவாஜியின் உருவத்தையடைந்து பண்டரிநாதன் சிப்பாய்களை விரட்டிய அத்தியாயம்

சேனாதிபதியும் அவனுடைய உதவி சேனாபதியுமான நால்வர்கள் உருவிய கத்தியுடன் பாகவதர்கள் பஜனை செய்துக்கொண்டிருக்கும் இடத்தில் வந்து ஒவ்வொருவராய் உற்றுப்பார்த்துக் கொண்டு சிவாஜிமன்னனை தேடிவரும்பொழுது, பாண்டுரங்கன் துக்காராம் சுவாமிகளுக்கும் சிவாஜி முதலானவர்களுக்கும் தெரியாமல், சேனாபதிகளுக்கு மாத்திரம் தோன்ற, உயுத்த உடை

தரித்து சிவாஜியின் உருவத்தையடைந்து கையில் பற்றிய வாளுடன் விரைவாய் வெளிப்பட்டார். சேனாபதியானவன், சிவாஜி வெளிப்படுகிறானென்று அறிந்து தனது படைவீரர்களுக்கு எச்சரிக்கைசெய்து விரைவாக வாயிலில் வந்ததும் பண்டரிநாதனை சிவாஜிமகாராஜன் துக்காராம் திருமடத்தின் முன்னே நிறுத்தப்பட்டிருந்த மாயப்புரவி மீதேறி, காற்றிலும் கடிய வேகமாக வெளிப்பட்டு சென்றார். இதற்குள் சேனாநாயகன் தனது இரண்டாயிரம் குதிரைவீரர்களையும் பார்த்து, "என் துணை வீரர்களே! அதோ! குதிரைமீது செல்லுகின்றவனை மடக்கிப் பிடியுங்கள்" என்று ஆக்ஞாபிக்க, இரண்டாயிரம் குதிரைவீரர்களும் தமது குதிரைகளை அந்த நள்ளிருளில் பலவழியாகப் பிரித்து விரைவாக ஓட்டிக்கொண்டு மாயசிவாஜியைப் பின்தொடர்ந்தார்கள். சேனாதன் பண்டரிநாத சிவாஜியின் குதிரை விரைவாய் ஓடுவதைக்கண்டு "விடாதீர். விடாதீர்" என்று பின்னே குதிரைகளின்மீது ஓடி வருகின்றனர்.

இந்தக் காலத்தில் பகவான், இந்த இரண்டாயிரம் வீரரும் அறியவேண்டுமென்று நினைத்து அந்த நள்ளிருளில் ஒரு ஆரண்ணியத்திற்குள்ளே நுழைந்தார். சேனாபதியால் தூண்டப்பட்ட இரண்டாயிரம் வீரர்களும் அந்த ஆரண்ணியத்தில் நுழைந்தனர். பல வனமரங்கள் வானமளாவியுயர்ந்து பகலிலும் சூரிய கிரணங்கள் செல்லாது தெறுண்டு தோன்றும் ஆரண்ணியத்துள் நுழைந்ததும் அந்த இருளில் நக்ஷத்திரங்களினுடைய பிரகாசமும் மேகப்படலம் மூண்டு அவ்வானம் மறையும்படி செய்தார். விண்ணும் மண்டான். இருண்டு வனத்திலகப்பட்டுக்கொண்டு சேனாபதியினுடைய சைனியங்கள் திசை தெரியாது மயங்கும்போது பண்டரிநாதன் சிவாஜி மாயமாய்ப் பரியுடன் மறைந்தனர். இப்பொழுது வானகமெல்லாம் இருண்டு பரந்த மேகங்கள் மழையும் பொழிந்தன. படைவீரர்கள் ஏறியிருந்த பரிகள் இருளின் கொடுமையாலும் மிகுதியாகப் பொழியும் மழையிலும் உணவின்றி வருந்தும் சிரமத்தாலும் தமது முதுகிலுள்ள வீரரைத் தாமே கீழேதள்ளி கால்களால் மிதித்துக்கொன்று அவைகளும் மரங்களில் மோதுண்டு திசைதெரியா தோடின. பல வீரர்கள் சுரங்கங்களிலிருந்து குதித்து நானாதிசைகளிலும் ஓடி அலைந்து கொண்டிருந்தனர். சேனாயகன் வேறாக ஓர் மரத்தினடியில் மழைக்காக தங்கியிருந்துகொண்டு, "அந்தோ! சிவாஜி என்னும் ஒருமன்னவனைப் பிடிப்பதற்கு நான் இரண்டாயிரம் குதிரைவீரர்களுடன் வந்தும், அவன் நமது கையில் அகப்படாது தப்பி ஓடினான். இனி யாது செய்வது" என்று வருந்தியும், தனது சேனையிலுள்ள குதிரைகளும் சேனாவீரர்களும் என்னவாயினரோவென்று வருந்தியும், பொழுது விடியும் நேரத்தை யெதிர்பார்த்திருந்தான். மழையும் விட்டது. சூரியனும் மெல்ல தனது சப்த

மாவென்னும் குதிரைகளை அருணன் ஓட்ட உதயகிரியில் தோன்றினான். தாமரைகளெல்லாம் தடாகங்களில் மலர்ந்து தோன்றின. அரிதாய அர்க்கியநீரினால் அந்தணர் ஆதித்தனை வழிபட்டனர். ஔரங்கசீப்பின் சேனைத் தலைவன் சூரியோதயமானதும் அந்த வனத்தில் குதிரைகளால் மிதியுண்டிருந்தவரும் உயிர் துடித்துக் கொண்டிருப்பவரும் கைகால்கள் நசுக்குண்டு வருந்துகின்றவருமான தனது சேனைத்தலைவரையும் படை வீரரையும் கண்டு துயருற்று, குதிரைகள் யாவும் காடுகளில் புகுந்துவிட்டன என்பதையும் உணர்ந்து துயருற்று, அந்த வனத்தில் திசைதெரியாது ஓடிக்கொண்டிருக்கும் ஒரு குதிரையைப் பிடித்து அதன்மீது ஏறி உட்கார்ந்துக்கொண்டு பலநாள் வழிநடந்து டில்லிக்குவந்து ஔரங்கசீப்பை சலாம் செய்து, நடந்தவையெல்லாம் சொல்ல, ஔரங்கசீப் சேனைத் தலைவனை வெறுத்து இந்த முறையும் சிவாஜி தப்பிவித்ததை நினைந்து ஆற்றொணாத் துயரிலாழ்ந்தினன்.

சிவாஜி மகாராஜன் தன்னைப்பிடிக்க ஔரங்கசீப்பின் குதிரைப்படை வந்து வளைந்துகொண்டதென்று தெரிந்து இனித் தப்புவதரிதென்று நினைந்து துக்காராம் பஜனையில் தன்னை மறந்து பரவசனாயிருக்கும்பொழுது வாயிலில் சென்ற ஒருபாகவதர் திருமடத்தைச் சுற்றி வளைந்துகொண்டிருந்த குதிரைப் படைகள் யாவும் அகன்றனவென்று சொல்லக்கேட்டு சூரியோதயமானதும் வெளிப்பட்டு ஒருவரும் அறியாது தனது ஊர்வந்து சேர்ந்தான். சிவாஜி தனது இராஜ்ஜியம் வந்ததும், எப்பொழுதும் துக்காராம் சுவாமிகளின் பஜனையிலும் அவருடைய கவித்துவங்களைக் கேட்டு ஆநந்திப்பதிலுமே தனது மனம் செல்ல, தான் துக்காராம் சுவாமிகளுக்கு ஒரு உதவியும் செய்யாததை நினைந்தும், தான் கொடுத்த தங்க நாணயங்களை துக்காராம் சுவாமிகள் ஏற்றுக்கொள்ளாது தன்னிடமே கொடுத்ததையும் நினைந்து, கொஞ்சம் அரிசியாவது கொண்டுபோய்க் கொடுப்போமென்று தனது மனதில் நினைந்து, ஒரு பொதிமாட்டு வியாபாரியைப்போல் உருவமடைந்து பண்டரிபுரத்தில் எழுந்தருளியிருக்கும் துக்காராம் சுவாமிகளின் திருமடத்திற்குவந்து சுவாமிகளைப் பணிந்து, "சுவாமி இந்த ஏழை வர்த்தகன் சொல்லைச் சிறிது வத்துக்கொள்ளவேண்டும். அடியேன் உமது பஜனையைச் சிறிது நேரம் கேட்டுவிட்டு என் வியாபாரத்தில் நான் இன்று மிகுந்த லாபமடைந்திருக்கிறேன். இந்த ஒரு மூட்டையும் விற்று நான் முதலும் லாபமும் கணக்கு பார்த்து அடையவேண்டிய பணத்தை இந்த மூட்டை விற்குமுன்னே அடைந்துவிட்டேன். ஆகலால், இந்த மூட்டையைத் தேவரீருடைய நித்திய ததியாராதனத்தில் உபயோகித்துக்கொள்ளவேண்டும்" என்று பிரார்த்தித்தான்.

துக்காராம் சுவாமிகள் தன்னிடம் அரிசி மூட்டையைச் சேர்ப்பிக்குமாறு வேடம் புனைந்து பொதிமாட்டில் அரிசிமூட்டையையேற்றிக்கொண்டு வந்தவன் சிவாஜி என்று தெரிந்து அவன் மனம் கோணாமலிருப்பதற்காக அரிசி மூட்டையை வாங்கி அதில் ஒருபடி அரிசியே தனது ஆகாரத்திற் குரியதென்று எடுத்துவைக்கச் சொல்லி மீதமுள்ள அரிசியை ஏழைகளுக்குக் கொடுத்துவிடுமாறு தனது மனைவியான லக்ஷ்மிபாய் ஒரு மூட்டை அரிசியில் ஒருபடி போக மீதமுள்ளவற்றை ஏழைகளுக்குக் கொடுக்கவேண்டுமென்று தனது நாதன் சொன்ன வார்த்தையைக் கேளாமல், இந்த அரிசி நமக்கே உரியதென்றெண்ணி யிருந்தனள். துக்காராம் சுவாமிகள் தனது மனைவி எண்ணிய வெண்ணத்தையறிந்து அவள் தீர்த்தமாட சந்திரபாகா நதிக்கு சென்றிருக்கும் சமயம் பார்த்து தெருவில் வந்து, ஏழைகளைக் கூவியழைத்து, தான் வீட்டுக்கு எடுத்துக்கொண்டதுபோல ஒவ்வொரு படியரிசி கொடுத்து மூட்டையைக் காலிசெய்து பண்டரிநாதனைப் பஜித்துக்கொண்டிருந்தார்.

இவர் மனைவியான லக்ஷ்மிபாய், சந்திரபாகா நதியில் தீர்த்தமாடிவிட்டு வீட்டிற்குவந்து அரிசி மூட்டையைப்பார்க்க, மூட்டை காணாமல் வெறும் கோணி மாத்திரம் இருப்பதைக்கண்டு, தனது நாதன் தன்னிடம் ஏழைகளுக்குக் கொடுக்கும்படி, சொல்ல, தான் மறுத்ததால் தானில்லாத சமயம் பார்த்து, அவரே ஏழைகளுக்கு அரிசியைக் கொடுத்துவிட்டார் என்று தெரிந்து, வெட்கமுற்று வெளியில் சொல்லா திருந்தனள்.

சிவாஜி மகாராஜன் தான் கொடுத்த அரிசி மூட்டையை யாவது துக்காராம் சுவாமிகள் ஏற்றுக்கொண்டபடி உபயோகித்துக்கொள்ளுகிறாரா இதையறிந்து வாருங்களென்று இரண்டு தூதுவர்களை நியமித்துப் போயினான். துக்காராம் சுவாமிகள், தன் மனைவி தீர்த்தமாடச் சென்ற சமயம்பார்த்து ஏழைகளை அழைத்து மூட்டையைப் பிரித்துத் தன் வீட்டிற்கு ஒருபடி அரிசி எடுத்துக்கொண்டு அதேபோல ஒவ்வொருவருக்கும் கொடுத்ததைக் கண்டு தங்க ளரசனிடம் சென்று, துக்காராம் அரிசி மூட்டையை யேழைகளுக்கு வழங்கியதைச் சொன்னார்கள். சிவாஜி அதைக்கேட்டு அவரது வைராக்கியத்தைப் பாராட்டி மகிழ்ச்சியடைந்தான்.

துக்காராம் சுவாமிகள் ஒரு வர்த்தகன் குழந்தையை உயிரெழுப்பிய அத்தியாயம்

பண்டரிநாதன் பஜனையிலும், அவருடைய அநந்த கல்யாண குணங்களிலும் ஈடுபட்டு அநேக விருத்தங்கள் பாடிக்கொண்டும், பண்டரிபுரத்தில் எழுந்தருளி யிருக்கும் பொழுது, அந்த ஊரில் வியாபாரம் செய்யும் வர்த்தகனொருவன் அரிசிங்

கென்பவர், துக்காராம் சுவாமிகளின் பஜனையில் ஈடுபட்டு காலையில் எழுந்து கடைக்குப் போவதைவிட்டு தீர்த்தமாடி பாகவதர்களுடன் கலந்து பஜனை செய்துக்கொண்டு வியாபாரத்தை முற்றும் மறந்தவராய் இருந்தார். இவர் மனையாள் தன் நாதன் பாகவதனாய் பஜனைகோஷ்டியில் கலந்துகொண்டும் வியாபாரத்தை வெறுத்தது கண்டும் மனம் சகியாதவளாய்த் தன் கணவனுடன் சண்டை செய்துக்கொண்டு எப்பொழுதும் சந்தோஷமில்லாத வண்ணம் வாழ்ந்துவரும் காலத்தில், இவருக்கு இரண்டு வயதுள்ள ஒரு ஆண்குழந்தை மாத்திரமே நெடுநாள் கழிந்தபின் பிறந்து, தாய் தந்தையால் அருமையாய் வளர்க்க வளர்ந்துவரும் காலத்தில், ஒருநாள் விடியற்காலையில் மாந்தவலி வந்து அபாயநிலையிலிருந்தது. அந்தச்சமயம் அரிசிங்கின் மனைவி ஆற்றொணாத் துயரத்திலாழ்ந்து, தன் கணவனைப் பார்த்து, "இன்று நீர் தீர்த்தமாடி பஜனைக்குப்போனால், பஜனை முடிந்து திரும்பிவரும்பொழுது குழந்தையைப் பார்க்கமாட்டீர். இப்பொழுதே நல்ல வைத்தியனை அழைத்துவந்து நல்ல மருந்து கொடுத்து சாக்கிரதையாகக் குழந்தையைப் பார்க்கவேண்டும். மருத்துவன் வீட்டுக்குச் சென்று விரைவாய் அழைத்து வாருங்கள்" என்று சொல்ல, அதைக் கேளாமல் பஜனையில் மனம் சென்றதால், தீர்த்தமாடச்சென்று வழக்கப்படி பஜனைகோஷ்டியில் கலந்து பண்டரிநாதனைப்பாடி ஆனந்தவெள்ளத்தில் ஆழ்ந்தினவராய் இருந்துவிட்டார். இவர் வீட்டில் தன் மனைவி தன் நாதன் மருத்துவனை அழைத்துவருவாரென்று காத்திருந்து, வைத்தியன் வந்து மருந்து கொடுக்காததினால் அந்த குழந்தை மாந்தவலியால் மாண்டுபோயிற்று. அக்குழந்தை மரித்ததைக்கண்ட அம்மாது, வயிற்றிலும்வாயிலும் அறைந்துகொண்டு, குழந்தை இறந்த வருத்தத்தினும் கொழுநன் செய்த கொடுமை தன் மனத்தை அதிகமாய் வருத்த, புவியில் விழுந்து கடகடவென புரண்டு சுவரில் முட்டி, தலையை மோதிக்கொண்டு, கண்ணீர் ஆறாய்ச்சோர, இறந்த மைந்தனை கரத்திலேந்திக்கொண்டு துக்காராம் சுவாமிகள் பஜனைசெய்துக்கொண்டிருக்கும் திருமடத்திற்கு வந்து இறந்த குழந்தையை அவர் காலை முன்னே கிடத்தி, அக்குழந்தையைச் சுற்றிவந்து மார்பில் அறைந்துக்கொண்டு, காலடியில் கிடந்து முட்டி, துக்காராம் சுவாமிகளைப் பார்த்து, அடே! பாகவதா! நீ என் குடும்பத்தை அநியாயமாய்க் கெடுத்துவிட்டாயே. இந்த ஜோலிக்கே வராமல் பொழுது விடிந்ததும், கடைத்திறவுகோலை எடுத்துக்கொண்டு, கடைக்குப் போய் வியாபாரத்தில் கருத்துடையவராய் கிடைத்தவற்றை சற்று கௌரவமாக ஜீவனம் பண்ணிவந்த எனது கணவனுக்கு நீ ஏதோ துர்ப்போதனைகள் செய்து வியாபாரத்தையே அவர் விட்டுவிடும்படி செய்தாய்? இந்த

குழந்தை யொன்றை வைத்துக்கொண்டு வந்திருந்தேன். இன்று விடியற்காலையில் மாந்தவலி வந்து அவஸ்தையடையும்பொழுது ஒரு வைத்தியனை அழைத்துவந்து மருந்து கொடுக்கும்படி வேண்டினேன். உயிர்போம் தருவாயிலிருந்த குழந்தையைக் கவனியாது உன் பஜனைக்கு வந்துவிட்டார். நல்ல வைத்தியனை அழைத்து மருந்து கொடுத்தால் என் குழந்தை மாண்டுபோமா? உன் வலையில் என் கணவன் சிக்கி, குழந்தையைக் கவனியாததினாலே குழந்தையும் செத்து, என் குடும்பமே உன்னால் அநியாயமாய் அழிந்து போயிற்று. என் குடும்பத்தை அழித்தபாவி நீ சுகப்படுவையா? நீ என்ன கதியாய்ப் போய்விடுவாய் என்று துக்காரம் சுவாமிகளை நிந்தித்து, அழுதுகொண்டிருந்தாள். அரிசிங் தனதுமனைவி திருமடத்தில் வந்து இறந்த தன்குழந்தையை துக்காராம் சுவாமிகளின் காலடியில் கிடத்தி, அவரையும் நிந்தித்துக்கொண்டு அழுவதொன்றையும் உணர்ந்தாரில்லை. பகவத்தியானம் பண்ணிக்கொண்டிருந்தார். சில பாகவதர்கள் அரிசிங்கின் மனைவியைப் பார்த்து, "ஏபேதாய்! இறந்த சவத்தைக் கொண்டுவந்து துக்காராம் சுவாமிகளின் முன்னே கிடத்தி கதறி அழுது கொண்டிருக்கிறாயே? இறந்த உயிரைப் பிழைக்கச்செய்யும் சித்தௌஷதம் சுவாமிகளிடம் இருக்கின்றதென்று நினைத்து இங்கு இந்த குழந்தையைப்போட்டுக்கொண்டு கதறுகிறாயா? என்ன" என்று கேட்டார்கள். இந்த வார்த்தையைக்கேட்ட துக்காராம் சுவாமிகள், அகில பாகவதரையும் பார்த்து, "நமது பண்டரிநாதனைவிட சித்தௌஷதம் வேறொன்றிருக்கிறதென்று நீங்கள் நினையாதீர்கள். நீங்களெல்லோரும் ஏகமனமுடையாராய் பண்டரிநாதனை ஒரு நிமிஷநேரம் பஜியுங்கள். அவர் பிரபாவத்தைப் பின்னே தெரிவீர்கள்" என்று சொன்னார்.

உடனே பாகவதர்கள் யாவரும் கடலொலிமாறுகொள்ளுமாறு "ஜேஜே விட்டல், ஜேஜே விட்டல்" என்று விட்டல் நாதனைப்பாடி, ஏகாக்கிர சித்த மடைந்தார்கள். அவ்வமயம் மாண்டு கிடந்த அரிசிங்கினுடைய குழந்தை தூங்கி எழுந்து உட்காருவதுபோல உட்கார்ந்தது. இதைக்கண்ட யாவரும், ஆச்சரியமடைந்து, துக்காராம் சுவாமிகளின் பிரபாவங்களைப் புகழ்ந்தனர். அரிசிங்கின் மனைவியானவள், தன் மைந்தன் எழுந்து உட்கார்ந்து தனது மடிமீது ஏறி உட்கார்ந்ததைக்கண்டு ஆராமகிழ்ச்சியடைந்து துக்காராம் சுவாமிகளின் சரணாரவிந்தங்களில் விழுந்து, "சுவாமி! தேவரீருடைய மகிமை தெரியாது பேதையான நான் வெகுவாய் தூஷித்தேன். என்னை மன்னித்தருளவேண்டும். இறந்த பாலனை எழுப்பித்தந்த உமக்கு அடிமையாகிய நான் எனது உடல் பொருள் ஆவியாவும் உமக்கே அர்ப்பணம் செய்தேன். என்னையும் உமது அடியாள் குழாத்தினுள் சேர்த்துக்கொண்டு ஆதரிக்கவேண்டும்" எனப் பிரார்த்தித்தாள்.

துக்காராம் சுவாமிகள் அரிசிங்கின் மனையாள் தன்னைப் பிரார்த்திக்கும்பொழுது, "அம்மா! நீ என்னைப் புகழாதே. உனது குழந்தையை உயிர்ப்பித்தவர் பண்டரிநாதனான பாண்டுரங்கனே அவருடைய நாமத்தை சிந்தித்து நீயும் நற்கதி அடை" என்று சொல்லிவிட்டு பகவத்தியானபரராய் எழுந்தருளியிருந்தார்.

லக்ஷ்மிபாய் தன்னிடமுள்ள யாவும் தானம் செய்த அத்தியாயம்

துக்காராம் சுவாமிகள் அரிபஜனை பண்ணிக்கொண்டு இல்லறத்தையும்விட்டு துறவாதவரா யிருந்துவரும் காலத்தில், இவருக்கு மூன்று ஆண்குழந்தைகள் பிறந்து வளர்ந்துவந்தன. லக்ஷ்மிபாய் தனது நாயகன் சுகத்தையும் குழந்தைகளின் சுகத்தையும் கருதாமல் இரவும் பகலும் இடைவிடாது பண்டரிநாதனை பஜனை செய்துகொண்டிருப்பதைக் கண்டு, தனது நாதனிடம் ஒவ்வொருநாளும் சமயம் நோக்காதுவந்து, "என் பிராணேசா! உமது குழந்தைகள் வயிறார உண்ணுவதற்கு நல்ல உணவில்லையே? பிறந்தபடியே யிருக்கின்றதன்றி, காதுகுத்தி ஓர் பொன் வளையமாவது போடவேண்டாமா? எனக்கு உடுத்திக்கொள்ள நல்ல வஸ்திரமில்லாது கிழிந்த புடவையைத் தைத்து எத்தனை நாள் கட்டிக்கொண்டிருப்பேன்? உம்மைப்போன்ற பாகவதர்களின் மனைவியர்களெல்லாரும் என்னைப்போலவா உடுத்ததுணியின்றி யிருக்கிறார்கள்? நீ பஜனை செய்துக் கொண்டிருக்கும் போது குழந்தைகளுக்கு ஆதரவளிக்க விரும்பி யாராவது கொஞ்சம் தானியமோ பொருளோ கொடுத்தால், அதை வறியோர்க்கு வாரியிறைத்துவிட்டு வானத்தைப்பார்க்கிறீர்? இல்லறம்நடத்துவது இப்படித்தானோ? நீரே யோசித்துப் பாரும்? அன்றியும், தான் கெட்டதோடு சந்திர புஷ்கரணியையும் கெடுத்ததாம், என்பதுபோல, இந்த ஊரில் விவசாயம் செய்வோரும் வர்த்தகம் செய்வோருமான அநேக குடும்பங்கள் உமது பஜனையில் மயங்கி கெட்டுவிட்டதென்று ஊரெல்லாம் உம்மைநிந்திக்கிறதே? ஊரெல்லாம் உம்மைப் பழிக்க, குடும்பமும் பட்டினியால் வருந்த பஜனை யென்ன வேண்டியிருக்கிறது? நீர் பஜனை செய்யச் செய்ய தரித்திரம் நம்மைப் பிடுங்கித்தின்ன ஆரம்பித்துவிட்டது. எனது முகத்தைப் பார்த்துப் பேச உமக்கு மனமில்லையாயினும், ஏழைகளாய் நல்ல உணவிற்கு நாக்கில்லாது வருந்தும் உமது குழந்தைகளின் பஞ்சை முகத்தையாவது பார்க்கப்படாதா? 'கடந்த ஞானியும் கடப்பரோ, மக்கள்மேல் காதல்' என்று முற்றத்துறந்த முனிவரும் குழந்தைகளிடம் மாறா அன்பு செலுத்துவரே? உமக்கு மாத்திரம் புத்திரவாச்சல்யம் இல்லாது போயிற்றே? இது என்ன காரணம்" என்று ஒரு புராணம்போல இடைவிடாது தியானத்திற்கு யிடையூறாய் உபத்திரவிக்க துக்காராம்

சுவாமிகளுக்கு இல்லறத்தில் வெறுப்புவந்தது. "இனி வீட்டிலிருந்து கணநேரமேனும் பகவானை பஜிக்கமுடியாது" என்று நினைத்தார். வனம்சென்று தவம் செய்யவேண்டுமென்னும் ஆசை அதிகரித்தது. தவத்திற்கு உறுப்பான வைராக்கியம் தனக்கு சாதனமாக வமைந்திருந்தலால், அக்கணமே ஒருவரிடமும் சொல்லாது வனத்தையடைந்து பஞ்சேந்திரியங்களையடக்கி, பண்டரிநாதனுன பாண்டுரங்கனை மனதிற் பதித்து, உண்டிசுருங்க, கந்தமூலங்களை உண்டு, சிலசமயம் கதிரவனொளியையும், காய்ந்த சருகையும், காற்றையும்கூட ஆகாரமாக உண்டு, பண்டரிநாதனை பஜித்துக்கொண்டிருக்கும்பொழுது, பண்டரிநாதன் திவ்விய மங்கள விக்ரகத்தை சேவிப்பதினும் அவனடியார் கூட்டங்களில் கலந்து, பஜனைபண்ணி, ஆடிப்பாடுவதினும் உள்ளே ஆநந்தம், தவத்தில் அந்தரியாமியாக சேவைசாதிக்கும் சேவையில்லாமையால், தவத்தில் வெறுப்பும் பண்டரிநாதனுடைய சேவையில் விருப்பும் அதிகரித்தது. பண்டரிநாதனை சேவித்துக்கொண்டு பண்டரிபுரத்திலேயே பஜனை செய்துக்கொண்டிருக்கலாம் என்றால் தன் மனைவியான லக்ஷ்மிபாயின் துன்பம் தன்னை வந்து பற்றிக்கொள்ளுமே என்னும் எண்ணம் வர, வனமே சிறந்ததென்று தோன்றிற்று. வனத்திலிருந்துகொண்டு ஒவ்வொருநாளும் பண்டரிபுரத்திற்குவந்து பாண்டுரங்கனை சேவை பண்ணுவதென்று துணிந்தார். பிரதிதினமும் காலையிலெழுந்து வனத்தைவிட்டு சந்திரபாகா நதிக்குவந்து தீர்த்தமாடி கர்மானுஷ்டானங்களை முடித்துக்கொண்டு பாண்டுரங்கன் சன்னதிக்கு எழுந்தருளி சர்வேஸ்வரனை சேவித்துவிட்டு, எங்கே தன் மனைவி தன்னைக் கண்டுகொள்ளுவாளோ என்று பண்டரிபுரத்தில் அரைக்கணமும் தாமதியாது வனம் சென்றுவிடுவார்.

துக்காராம் சுவாமிகள் இவ்வாறு இரண்டுமாதம்வரை மனைவிமக்களைப்பிரிந்து வாழ்ந்துவரும்நாளில் ஒருநாள் சேவார்த்தமாக பண்டரிபுரத்திற்கு எழுந்தருளிபகவானை சேவித்துவிட்டு வனம் நாடிச் சென்றுகொண்டிருக்கும்பொழுது, தீர்த்தம்கொண்டுவரச்சென்ற இவர் மனைவியான லக்ஷ்மிபாய் தனது நாதன் வருவதைக் கண்டுகொண்டு, கண்களில் கண்ணீர் தாரை தாரையாய்ச் சோர, தன் நாதன்முன்னேவந்து வழிமறித்துக்கொண்டு 'நாதா! தாம் இரண்டுமாதமாக என்னையும் குழந்தைகளையும் பரதவிக்கவிட்டு எங்கே போய்விட்டீர்கள்? இது தர்மமா? அந்தோ! குழந்தைகள் பசியென்று துடிக்கின்றனவே? குழந்தைகளையும் என்னையும் யார் காப்பாற்றுவாரென்று நினைத்து எம்மைப்பிரிந்து சென்றீர், நமது சொந்த ஊரிலிருந்தால் தாங்கள் என்னையும் குழந்தைகளையும் விட்டு சென்றதற்கு எனது தந்தையும் சகோதரரும் என்னைக் காப்பாற்றுவார்கள். எனக்கு ஒருவரும் அறிமுகமும் இல்லாத இந்த பண்டரிபுரத்தில் பரதவிக்கவிட்டு சென்றீரே? நீங்கள்

என்னை மணம் செய்துகொண்ட நிலையில் எனக்கும் என் குழந்தைகளுக்கும் அரைவயிற்று கஞ்சிக்கேனும் வழிகாட்டிவிட்டுச் செல்லும். இல்லையேல் உம்மை நான் விடமாட்டேன்" என்று மறித்துக்கொண்டாள்.

துக்காராம் சுவாமிகள் பலநாளாக தன் மனைவியின் கண்களில் படாமல் பண்டரிநாதனை சேவித்துக்கொண்டு வனத்தில் சென்றுகொண்டிருக்கும்பொழுது இன்று இவள் கண்களில் தோன்றும்படி நேர்ந்ததை நினைந்து, உயிரைப்பருகும் கூற்றுவனைக் கண்டவர்களினும் நடுங்கினர். அவ்வாறு நடுங்கியவர், சிறிது தேறுதலடைந்து, "பெண்ணே! நீயேன் என்னை வழிமறிக்கிறாய்? உன்னைக் காப்பவரொருவருமில்லையென்று வருந்துகின்றனையோ? என் தாய் தந்தையர்கள் உன்னைக்காக்க சக்தியற்றவரா? அவர்கள் உன்னைத் தனது மருகியென்று அன்போடு காப்பாற்றுவர். அவ்விருவரும் உன்னைக் காக்க நீ உனது மக்களோடு சுகமாகவே வாழ்வாய் நான்போவதற்கு வழிவிடுவென்றார்.

லக்ஷ்மிபாய் தன் கணவன் கூறிய வார்த்தையைக் கேட்டு தன் நாதனைப்பார்த்து 'கொடாத இடையன் சினைமாட்டைக் காட்டியதுபோல' நீர் பேசுகிறீர். உமது தாய் தந்தையர்கள் இறந்து எத்தனை வருஷங்களாயின? வானுலகம் சென்ற உமது தாய் தந்தையர்கள் புவியுலகிலிருக்கும் எங்களை எப்படி காப்பாற்றுவார்கள்? உம்மால் நானும் என்னுடைய குழந்தைகளும் பட்டினியாலிறந்து பரலோகம் சேர்ந்தால் உமது தாய் தந்தையர்கள் நமது மருகிப் பேரப்பிள்ளைகளுடன் வந்தாளென்று எங்களைக் காப்பாற்றினால் காப்பாற்றலாம். உமது கட்டளையும் நாங்கள் பட்டினியால் சாகவேண்டு மென்பதே. நீங்கள் என்னை நம்பியதற்காக மாண்டுவிடுங்களென்பதற்கும் பதிலாகக் கவிதாவாதலால் சொல் சாதுரியமாக என் தாய் தந்தையர்கள் காப்பாற்றுவார்களென்றீர்? நாதா! இது நியாயமல்ல. எங்களுக்கு ஏதாவது சாப்பாட்டுக்கு வழி யேற்படுத்திவிட்டு தாங்கள் எங்கேனும் செல்லுங்கள். இந்த பண்டரிபுரத்திற்கு ஒவ்வொரு நாளும் வருகின்றீரென்று நான் கேட்டு உம்மைக் காண எத்தனையோதரம் முயன்றும் காண முடியாது போயிற்று. இன்றே கண்டேன். இனியும் உம்மை விட்டுவிட்டால் என்கெதி அதோகதிதான் என்றாள்.

துக்காராம் சுவாமிகள் தான் சொன்ன விஷயத்தின் கருத்தைத் தெரிந்துகொள்ளாமல் தன் மனைவி கூறிய வார்த்தைகளைக் கேட்டு, "பெண்ணே! என் தந்தையும் தாயும் உன்னைக் காப்பாற்றுவார்களென்றேனே? அதன் குணத்தைத் தெரிந்துகொள்ளாமல் பேதை மதியால் ஏதேதோ பிதற்றுகிறாய். நான் என்பதும் எனது என்பதும் இந்த சரீரத்தைத் தழுவியதல்ல. இந்த சரீரம் அழியுமேயன்றி, நான் அழியமாட்டேன். நான் இதுவரை

அடைந்த சரீரங்களுக்கு எல்லையில்லை. நான் அடைந்த ஒவ்வொரு பிறப்பிற்கும் தாய் தந்தையர்களுண்டு. நான் முன்செய்த கர்மவசத்தால் சரீரத்தை அடைகிறேன். நான் சரீரமடையும் பொழுதெல்லாம் கர்மவசத்தால் வந்த தாய் தந்தையர்கள் எத்தனையோ பேர் அழிந்தனர். அதுபோல இப்பிறப்பிற்குரிய தாய் தந்தையரும் அழிந்தனர். தனித்தந்தையும் தனித்தாயும் ஆனோர் வேறாயிருக்க, அன்னவரைத் தத்துவஞான உணர்ச்சியால் அறிந்த பின்பு கர்மவசத்தால் தோன்றிய இவர்களையோ தாய் தந்தையராக நினைப்பேன். எனக்குத் தந்தையும் தாயுமானவர்கள் இன்னவரென்று உன்னிடம் சொல்லுகிறேன். நான் கண்டுகொண்ட தந்தையும் தாயுமானவர் எனக்கன்றி உனக்கும் இந்த உலகத்திற்கும், உலகத்தைப் படைத்தல் அழித்தல் செய்வோர்க்கும் தந்தையும் தாயுமேயாவர். பெண்ணருங்கலமே! இந்த தாய் தந்தையரைப்போல என் தந்தையும் தாயும் அழியாதவர்கள். என்றும் உள்ளவர்கள். அறுவகை விகாரப்பாடுமில்லாதவர். சமயவாதிகளெல்லாம் "தன்தெய்வ மென்தெய்வ மென்றெங்குந் தொடர்ந்தெதிர் வழக்கிட நின்றவர். உலகை வயிற்றிலடக்கி மீண்டும் தோற்றுவிப்பதைப் பார்க்கும்பொழுது, பெண்பாலெனலாம். தன்னில் தோன்றிய உலகை ரக்ஷிக்குங் காலத்தில் ஆண்பாலெனலாம். இதுபற்றியே யென் தந்தையான ஒருவனை ஆழ்வார், ஆணல்லன் பெண்ணல்லன் அல்லா அலியுமல்லன், பேணலுமாகான் கொளப்படான்" என்று பாசுரமிட்டருளினர். கவிச்சக்ரவர்த்தியாகிய கம்பநாட்டாழ்வாரும் "சர்வேஸ்வரனுடைய மகா மாயையை நோக்க, ஆண்பாலோ பெண்பாலோ அப்பாலோ எப்பாலோ என்று ஈடுபட்டாரன்றியும், அவருடைய நிலைமை யறிய வேண்டுமானால், உலகப்பற்றை முற்றும் துறந்து தவம் செய்யும் பரமஞானிகளுக்கு அறியப்படுமன்றி, விஷய நலன்களில் மயங்கி, நிலையில்லாதவற்றை நிலையென என்றும் சாமான்னியருக்கு அகப்படாதவர். தன்வயத்தனாதல், தூயவுடம்பினனாதல், இயல்பாகவே பாசங்களில் நின்றும் நீங்குதல், பொருளுடைமை வரம்பிலின்ப முடைமை வரம்பிலாற்றலுடைமை முதலிய அநந்த கல்யாண குணங்களுடையவர். ஆதிமத்தியாந்தரகிதர். யாவர் எவ்வெத்தெய்வமாய் வணங்கினும், அவரவர் நினைத்தவடிவோடுசென்று, தன்னை வழிபடுவோருடைய மனோரதத்தைப் பூர்த்திசெய்து வைக்கும் கருணாமூர்த்தி. மலரில் வாசனையும், எள்ளில் எண்ணெயும்போல் ஒவ்வொரு பொருளிலும் கரந்து பரந்துளார் எனினும், தன்னை வழிபடுவோர்களுக்கென்றே நாமரூபத்தையடைந்து, இன்னருள் சுரக்கும் ஆதிமூர்த்தி. அவரது நிலையத்தையறிவதென்றால், வேதங்களும் அறியவொண்ணாதென்றேகதறும். அத்தகைய சர்வேஸ்வரனான பாண்டுரங்கனே எனக்குத் தந்தையாவார். அவர் திருமார்பை விட்டு என்றும் பிரியாதவளாய் வீற்றிருக்கும் ருக்மணிதேவியே

என் தேவியானவள். இந்த தாய் தந்தையரை நீ அறிந்து வழிப்பட்டால், அவர்கள் உன்னைக் காப்பரென்றனனேயன்றி, கர்மவசத்தால் தோன்றிய என் தாய் தந்தையரை நான் புகழ்ந்து அவர்கள் உன்னை இரக்ஷிப்பார்களென்று சொல்லவில்லை. ஆதலால், நீயும் பண்டரிநாதனையும் ருக்மணி தேவியையும் தந்தையும் தாயுமாகக் கொண்டால்; அவர்கள் உன்னையும் உன் மக்களையும் காப்பாற்றுவார்" என்றார்.

இலக்ஷ்மிபாய், தன் நாதன் கூறிய வார்த்தைகளைக் கேட்டு, தனது கணவனை நோக்கி, "நாதா! உமது வார்த்தைகளைக் கேட்கும்பொழுது அறியாமையுடைய என் மனமானது பாண்டுரங்கனது திருவடிகளுக்கு உரைவிடமாய் விட்டது. இன்றுமுதல் அடியாளும் உம்முடன் கலந்திருந்து பண்டரிநாதனைப் பஜிக்கிறேன். அடியாள்மீது கருணைகூர்ந்து கிரகத்திற்கு எழுந்தருள வேண்டும்" எனப் பிரார்த்தித்தாள்.

துக்காராம் சுவாமிகள் தன் மனைவியான லக்ஷ்மிபாய் கூறிய வார்த்தைகளைக் கேட்டு, "பெண்ணே! நான் உன்னிடம் கேட்டுக்கொள்ளுவதெல்லாம் ஒன்றே. என்னையெனில், நீ ஒரு பொருளினும் ஆசை வைக்கப்படாது. எந்த வஸ்துவும் பண்டரீநாதனது அவன் எப்படி யாவற்றிற்கும் இரக்ஷகனோ; அதுபோல், அவன் சொத்து யாவற்றிற்கும் உரியதென்னும் எண்ணத்தை நீ கொண்டால், அப்பொழுதுதான் பண்டரிநாதனை பஜிக்கும் யோக்கியதை உனக்குவரும். நான் உன்னுடன் கிரகத்திற்கு வரவேண்டுமானால், "நான் இன்றுமுதல் ஒன்றினும் ஆசைவைப்பதில்லை" யென்று என்னிடம் சத்தியம் செய்துதரவேண்டும். அவ்வாறு செய்துதந்தால் நான் வீட்டிற்கு வருகிறேன்" என்றார்.

லக்ஷ்மிபாய் தனது கணவன் சொல்லைக் கேட்டு "நாதா! இன்று முதல் ஒரு பொருளினும் ஆசையின்றி, உமது கைங்கரிய நேரம் தவிர, பண்டரிநாதனான பாண்டுரங்கனையே பஜித்துக்கொண்டிருப்பேன் என்று சத்தியம் செய்துகொடுத்தாள். துக்காராம் சுவாமிகள், தன் மனைவியின் சொல்லைக்கேட்டு, இன்னும் இவள் குணத்தை அறிவோமென்று நினைத்து, அவளுடன் வீட்டிற்கு எழுந்தருளினார். துக்காராம் சுவாமிகளின் மனைவியான லக்ஷ்மிபாயும் தனது கணவன் வீட்டிற்குவந்தநாள்முதல், செய்துகொடுத்த சத்தியத்தின்படி ஒரு பொருளினும் ஆசைவையாமல் தன் நாயகனுடைய கைங்கரியநேரம் தவிர, மற்றயநேரங்களிலெல்லாம் நாயகனுடன் பஜனைசெய்துக்கொண்டு பண்டரிநாதன் கல்யாண குணங்களையே கொண்டாடிக்கொண்டிருந்தாள்.

இந்நாளில் ஏகாதசி வந்தது. முதல்நாளிலேயே உபவாசம் துவக்கி அன்றுபூராவும் உபவாசமாய்ப் பண்டரிநாதனையே நாயகனோடு பஜனை செய்துக்கொண்டிருக்கிற காலத்தில், துக்காராம் சுவாமிகள் தன் மனைவியைப்பார்த்து, ஒன்பது சுலோகங்கள் சொன்

ஞர். அந்த சுலோகங்களின் பொருள் என்னை எனின், ஸ்ரீயப்பதியான பாண்டுரங்கன் சர்வாந்தரியாமியாய் எங்கும் வியாபித்திருக்கிறான். அவனையன்றி, எப்பொருளுமில்லை, அவனருளால் தோன்றிய பொருள் எல்லாம் அவனாலேயே காப்பாற்றப்பட்டு, முடிவில் அவனாலேயே அழிக்கப்படுகின்றன. எந்த வஸ்துவிலும் அவன் கலந்திருந்தாலும் அவன் ஒரு திருடன்போல் வெளிப்படாது மறைந்து வாசம் செய்துகொண்டிருக்கிறான். அவனுடைய திருட்டுத்தனத்தை அறியவேண்டின், அந்த திருடனைக் கண்டுபிடிக்க வேண்டின், நான் எனது என்றுமயங்கும் சம்சாரிகள் காணமுடியாதவனாய், யானெனதென்னும் செருக்கறுத்த ஞானயோகமுடையோர்களுக்குக் கண்டுகொள்ளத் தகுந்தவனாயிருக்கிறான். அந்த கள்வனைக்காணாதவரெல்லாம் பாமரராவார்கள். அக்கள்வனைக் கண்டவரே ஞானமுடையவராவர். இந்த மானிட யாக்கையடைந்த பயன் என்ன என நினைந்துபார்த்தால், மற்றைய பிறவியான ஊர்வன நடப்பன பறப்பனவான ஜென்மங்களெல்லாம் பகுத்தறிவில்லாமல் ஆகார நித்திரை பயமென்னும் மூன்று விஷயமே தெரிந்ததாக விருக்கின்றன. மானிடராகிய பின்னே தான் ஆறறிவு என்னும் பகுத்தறிவு வருகிறது. இந்த பகுத்தறியும் அறிவை ஞானநூல் கேள்விகளாலும், ஆசாரியனது உபதேசத்தாலும் சாது சங்கங்களில் கலந்து சிரவணம் செய்வதனாலும், விசாரிக்கச் செய்து, அந்த அறிவைக் கொண்டு சர்வேஸ்வரனை பண்டரிநாதனை அறியவேண்டும். அறிந்தால் அவன் அருளைப் பெறும் ஆசை ஏற்படும். அந்த ஆசை பூர்த்தியடையவேண்டுமானால், முதலில் மனசானது பண்டரிநாதனன்றி அழியாதனவான வஸ்து இல்லை. நமக்கு ஒருபொருளும் சொந்தமில்லை. எப்பொருளு மவனதே. என்று உணர்ந்து நம்மிடமுள்ள பொருள்கள் யாவற்றையும் ஏழைகளுக்குக் கொடுத்துவிட்டுப் பகவானை ஒருபொருளைப் பற்றவேண்டும். அன்றியும், மக்களைத் தன் மக்களென்று கருதும் நிலையும், போய்விடவேண்டும். உண்ண சரகுகள் இருக்கின்றன. தண்ணீர் பருக நதிகளிருக்கின்றன. உடுத்த கந்தைகள் தெருவில் கிடக்கின்றன. படுக்கக்குப்பை மேடுகள் இருக்கின்றன. நமக்கு என்னகுறை இருக்கிறதென்று திருப்திவரவேண்டும்.

நல்ல புதல்வர் மனையாள் நவையில்லினை
இல்லம் மாடு இவையனைத்தும் அல்லவினை
தோற்றி எரிதீயிற் சுடுமேலவர் தெளிதா
மேற்றவரும் வைகுந்தத்திருப்பு.

பெண்ணே உனக்குப் பண்டரிநாதனுடைய கருணை கிடைக்கவேண்டும். ஆனால், மாறி மாறி பல பிறப்பும் பிறந்துழலாதிருக்கவேண்டும். ஆனால் நித்திய விபூதியான பரமபதத்திலே வாசுதேவன் முன்னே நின்றுகொண்டு நித்திய சூரிகள்போல்

சதாசேவை செய்யவேண்டும். ஆனால் நிரதிசயானந்தமடைந்து குதூகலிக்கவேண்டும். ஆனால் அதற்கொருபாயம் உண்டு. அது என்னவெனில்! இன்று ஏகாதசி. நீயும் நேற்றுமுதல் உபவாசம் துவக்கியிருக்கிறாய். இன்று பகவானுக்குகந்த தினமானதினால், உன்னிடமுள்ள சகல சொத்துக்களையும் ஏழைகளுக்குக் கொடுத்துவிட்டு பண்டரிநாதனை சொத்தைப்பற்றி, உனது குழந்தைகளென்னும் பாவனையை யிப்பொழுதே பற்றிவிடு. அநித்திய வஸ்துவிலிருக்கும் ஆசையைவிட்டு நித்திய வஸ்துவைப்பற்று. உன்னைச் சூழ்ந்திருக்கும் பந்தங்களைவிட்டு, பந்தமில்லா நாளைப் பற்று. சம்சாரங்களைக்களைந்து, சம்சாரிகளுக்கு எய்தப்படாதானை அடைதி என்று கருத்துக்களடங்கிய ஒன்பது சுலோகங்களைச் சொன்னார்.

லக்ஷ்மிபாய் தன் நாயகன்கூறிய கருத்துக்களை கவனத்துடன் கேட்டவளவே வைராக்கியம் பிறக்க, வெளியில் எழுந்துவந்து ஏழைகளை அழைத்து தம்மிடமுள்ள குடிக்கும் செம்புமுதல் படுக்கும் பாய்வரை யாவற்றையும் கொடுத்துவிட்டு பரமசந்தோஷமடைந்து எனது பந்தங்கள் நீங்கின என்று பாண்டுரங்கனை பஜித்துக்கொண்டு தனது நாயகனுடன் கலந்து பஜனை செய்துக்கொண்டிருந்தாள். மறுநாள் பாரணைதினமாக பொழுது விடிந்தது. லக்ஷ்மிபாய் சந்திரபாகா நதிக்குச்சென்று தீர்த்தமாடிவிட்டு தன் வீட்டிற்குவந்து முன்னாள் மடியாக உலர்த்தியிருந்த வஸ்திரத்தை உடுத்திக்கொண்டு ஈரவஸ்திரத்தைப் புறக்கடையில் கட்டிவிட்டு தீர்த்தம் கொண்டுவர விரும்பி குடத்தை நினைத்தாள். நேற்றையதினம் வறியவருக்கு வழங்கிய பொருள்களோடு குடமும் போயிற்று என்னும் நினைப்பு வந்தது. இதற்குள் குழந்தைகள் இரண்டுநாளாக உபவாச தினமாய் சரியான ஆகாரம் கிடையாமையால் வருந்தி தாயிடம்வந்து "அம்மா! பசிக்கிறதே? நீ எப்பொழுது தளிகைபண்ணி எங்களுக்கு ஆகாரம் போடப் போகிறாய்? தாயின் முகத்தை இரக்கத்துடன் பார்க்கின்றன. வீட்டிலோ ஒருபொருளும் கிடையாது. இந்த நிலையில் நேற்றையதினம் தனக்கு வந்த வைராக்கியமும் பாண்டுரங்கனது பக்தியும் குறைந்தது. வீட்டிலுள்ள பொருளையெல்லாம் கொடுத்துவிட்டு திண்டாடும் நிலைவந்ததே என்று கவலைக்கடலில் ஆழ்ந்தினவளாய் ஒரு மூலையில் போய்ப் படுத்துக்கொண்டாள்

இப்படியிருக்க, ஜெகன்மாதாவான ருக்மணிபிராட்டி லக்ஷ்மிபாயின் பந்தங்கள் பூராவையும் அகற்ற நினைந்து, ஒரு நீசநங்கையின் உருவத்தை யடைந்து, துக்காராம் சுவாமிகளின் திருமடத்தின் முன்னேவந்து நின்றுகொண்டு "ஆண்டே! நான் நீசகுலத்தில் 'பிறந்து மிகுந்த தரித்திரமுடையவளாய் பரதவித்துக்கொண்டிருக்கிறேன். நேற்றையதினம் உமது வீட்டிலுள்ள பொருள்கள் யாவும் ஏழைகளுக்குக் கொடுத்தீரென்று கேட்டு

வந்தேன். இந்த ஏழையின்மீது கிருபைவைத்து அடிமைக்கு ஏதாவது கொடுக்கவேண்டும், எனச் சொல்ல, அக்கணமே துக்காராம் சுவாமிகள் திருமடத்தினுட் புகுந்து, அங்குமிங்குந் திரிந்து ஏதாவது ஒருபொருள் இருக்கின்றதாவென்று தேடிப் பார்க்க, ஒன்றும் தன்கண்களில் அகப்படாமையால், கொல்லைக்கதவைத் திறந்துபார்த்தார். அங்கே தனது மனைவி கட்டிக்கொண்டிருந்த புடவை உலரக் காயப்போட்டிருப்பதைக் கண்டு அந்த ஈரப்புடவையை அவிழ்த்துவந்து அந்த நீசஸ்திரீயின் கையில் கொடுத்தனுப்பிவிட்டு பகவத் சேவார்த்தமாய் பாண்டுரங்கன் சன்னதிக்கெழுந்தருளினர்.

லக்ஷ்மிபாய் தன் வீட்டிலுள்ள பொருளையெல்லாம் நாயகன் சொன்னபடியே ஏழைகளுக்குக் கொடுத்து தனது குழந்தை வயிற்றுக்கு உணவின்றி பசியால் வருந்துவதைக் கண்டும் மூலையில் படுத்துக்கொண்டிருந்தவள், இனி இன்னது செய்வதென்று தோன்றாமல் கொல்லையில் உலர கட்டியிருக்கும் புடவையை அவிழ்த்துவிட்டு தன் கணவனை அன்று உணவிற் கென்னசெய்வது கேட்போமென்று நினைத்தெழுந்து, புடவை உலர்த்தியிருக்கும் புறக்கடையில் வந்துபார்க்கத் தன்கணவன் உடுத்தும் புடவையையும் அவிழ்த்து யாருக்கோ கொடுத்துவிட்டாரென்பது தெரிந்து துக்கம் பொறுக்க முடியாதவளாய் தெருவில்வந்து நின்றுகொண்டு யாவரும் கேட்க, பின்வருமாறு சிலவார்த்தைகளைச் சொல்லுகிறாள். "இவ்வூரிலுள்ள சாது ஜனங்களே! என் கணவன் என்னையும் என் குழந்தைகளையும் உணவின்றிபரதவிக்க விட்டு இரண்டுமாதகாலமாகக் காட்டில் போய் உட்கார்ந்துக் கொண்டு ஒவ்வொருநாளும் எனக்குத் தெரியாமல் வந்து பாண்டுரங்கனைச் சேவித்துக்கொண்டிருந்தார். நான் எனது புருஷனைக் காணவேணுமென்று பலநாள் முயன்றும் என் கண்களில் அவர் அகப்படாது இந்த ஊரிலிருந்து திருட்டுத் தனமாகத் தப்பித்துக் கொண்டு வனத்திற்குச் சென்றுவிடுவார். இப்படியிருக்கும் பொழுது ஒருநாள் தண்ணீர் கொணரச் சென்றேன். அவ்வமயம் என் கணவன் என்முன் வருவதைக்கண்டு வழிமறித்துக்கொண்டு என்னையும் என் குழந்தைகளையும் காப்பாற்றுவதற்கு ஏதாவது வழி செய்துவிட்டுப் போமென்று தடுத்தேன். அப்பொழுது அவர் பாண்டுரங்கனும் ருக்மணிதேவியும் என்னையும் என் குழந்தைகளையும் இரக்ஷிப்பார். நீ அவரை தியானம்பண்ணு என்று சொன்னார். அப்பொழுது நான் அவருடைய திருவடிகளில் விழுந்து, இன்று முதல் உம்முடன் கலந்து பஜனை பண்ணுகிறேன். உமது சொல்வழியே நடக்கிறேன் என்று சத்தியம் பண்ணிக்கொடுத்து அவரை வீட்டிற்கு அழைத்துவந்தேன். நான் அவரிடம் தெரிவித்தபடி பண்டரிநாதனை பஜனைபண்ண எனது உள்ளமானது அந்த சர்வேஸ்வரனுடைய சரணாரவிந்தத்தையே

தாரகமென்று பற்றிற்று. இந்த சமயம் ஏகாதசி வந்ததும் எனது நாதன் என்னிடம் ஒன்பது சுலோகங்களைச் சொல்லி, என்னிடமுள்ள பொருள்களையெல்லாம் ஏழைகளுக்குக் கொடுத்து, பண்டரிநாதனை பெரும்பொருளைப் பற்றென்று எனக்குபதேசம் செய்தார். நான் அவருடைய உபதேசம் கேட்ட அப்பொழுதே தெருவில்வந்து ஏழைகளை அழைத்து உடுத்தியிருந்த புடவையையும் மறுபுடவையையும் மாத்திரம் வைத்துக்கொண்டு வீட்டிலுள்ள பாத்திரங்கள் யாவற்றையும் அந்த ஏழைகளுக்குக் கொடுத்துவிட்டு பண்டரிநாதனை பஜனை பண்ணிக்கொண்டிருந்தேன். இன்று பொழுது விடிந்தது. குழந்தைகள் 'பசி பசி' என்று துடிக்க, நான் குழந்தைகள் படும் துயரத்தைக்கண்டு பொறுக்க முடியாத விசனத்தால் ஒருமூலையில்போய் மயங்கிப் படுத்திருந்தேன். அந்தச்சமயம் அவரிடம் வந்து யாசித்த ஒரு ஏழைப்பெண்ணுக்கு நான் உலர்த்தியிருந்த புடவையை அவிழ்த்து என் நாதன் கொடுத்துவிட்டு சன்னதிக்குப் போய்விட்டார். பாண்டுரங்கனை நம்பி எனது வீட்டிலிருந்த பொருள்களையெல்லாம் தெருவில் வாரி இறைத்தபின் என் குழந்தைகள் பசி என்று வருந்தினால், அந்த குழந்தைகளுக்கு உணவூட்டி காக்கவேண்டியது அவன் கடமையன்றோ? பாண்டுரங்கன் என்குழந்தைகளுக்கு உணவூட்டி காக்க வாராமல் என்னதைரியத்தோடு கோயிலில் நின்றுகொண்டிருக்கிறான். இது அவனுக்கு நியாயமா? உலகிலுள்ள சாதுக்களை தன் வலையில் சிக்கவைத்து அவர்களை ஆடும்படிக்கும், பாடும்படிக்கும் செய்யும் பாண்டுரங்கனை இன்று நான் எளிதில் விடுவேனோ? அவனுடைய இரண்டுகால்களையும் ஒரு குண்டுக்கல்லால் நைய நசுக்கி விடுகின்றேன்" என்று சொல்லிக் கொண்டே ஒரு குண்டுக்கல்லை எடுத்துக்கொண்டு ஆலயத்திற்கு ஓடினாள்.

பாண்டுரங்கன் துக்காராம் சுவாமிகளின் மனைவியான லக்ஷ்மிபாய் பாண்டுரங்கனுடைய திருவடிகளை நசுக்குவதாக ஒரு குண்டுக்கல்லை எடுத்துக்கொண்டு விரைந்தோடி வருவதைப் பாண்டுரங்கன்கண்டு பயத்தால் உடனே உடல் முற்றும் நடுங்க, சரீரம் முற்றும் வியர்வை ஓட, நாற்புறங்களிலும் மலங்க மலங்க விழித்துக்கொண்டு என்னசெய்வேனென்று வருத்தமுறுவதை பக்கத்தில் நின்றுகொண்டிருக்கும் ருக்மணி பிராட்டி பார்த்து, "நாதா! உமது சரீரம் நடுங்குவதேனோ? உமது மேனிமுற்றும் வியர்வை நீர் ஓடுகிறதே? ஒரு புலியானது பற்ற வருவதைக்கண்ட மான் நடுங்குவதுபோல நடுங்கி நாற்புறமும் விழிக்கின்றீரே? உமக்கு என்ன துன்பம் வந்தது? உம்மை யடைந்தவர்களுடைய துன்பங்கள் எதுவாயினும் அகற்றவல்ல சர்வசக்தியுடைய உமக்கு நடுக்கஞ்செய்யும் வீரியரும் இந்த உலகில் இருக்கின்றார்களோ? அப்படிக் இருக்க, நீங்கள் பயப்படுவானேன்" எனக் கேட்டாள்,

வந்தேன். இந்த ஏழையின்மீது கிருபைவைத்து அடிமைக்கு ஏதாவது கொடுக்கவேண்டும், எனச் சொல்ல, அக்கணமே துக்காராம் சுவாமிகள் திருமடத்தினுட் புகுந்து, அங்குமிங்குந் திரிந்து ஏதாவது ஒருபொருள் இருக்கின்றதாவென்று தேடிப் பார்க்க, ஒன்றும் தன்கண்களில் அகப்படாமையால், கொல்லைக்கதவைத் திறந்துபார்த்தார். அங்கே தனது மனைவி கட்டிக்கொண்டிருந்த புடவை உலரக் காயப்போட்டிருப்பதைக் கண்டு அந்த ஈரப்புடவையை அவிழ்த்துவந்து அந்த நீசஸ்திரீயின் கையில் கொடுத்தனுப்பிவிட்டு பகவத் சேவார்த்தமாய் பாண்டுரங்கன் சன்னிதிக்கெழுந்தருளினார்.

லக்ஷ்மிபாய் தன் வீட்டிலுள்ள பொருளையெல்லாம் நாயகன் சொன்னபடியே ஏழைகளுக்குக் கொடுத்து தனது குழந்தை வயிற்றுக்கு உணவின்றி பசியால் வருந்துவதைக் கண்டும் மூலையில் படுத்துக்கொண்டிருந்தவள், இனி இன்னது செய்வதென்று தோன்றாமல் கொல்லையில் உலர கட்டியிருக்கும் புடவையை அவிழ்த்துவிட்டு தன் கணவனை அன்று உணவிற் கென்னசெய்வது கேட்போமென்று நினைத்தெழுந்து, புடவை உலர்த்தியிருக்கும் புறக்கடையில் வந்துபார்க்கத் தன்கணவன் உடுத்தும் புடவையையும் அவிழ்த்து யாருக்கோ கொடுத்துவிட்டாரென்பது தெரிந்து துக்கம் பொறுக்க முடியாதவளாய் தெருவில்வந்து நின்றுகொண்டு யாவரும் கேட்க, பின்வருமாறு சிலவார்த்தைகளைச் சொல்லுகிறாள். "இவ்வூரிலுள்ள சாது ஜனங்களே! என் கணவன் என்னையும் என் குழந்தைகளையும் உணவின்றிப் பரதவிக்கவிட்டு இரண்டுமாதகாலமாகக் காட்டில் போய் உட்கார்ந்துக்கொண்டு ஒவ்வொருநாளும் எனக்குத் தெரியாமல் வந்து பாண்டுரங்கனைச் சேவித்துக்கொண்டிருந்தார். நான் எனது புருஷனைக் காணவேணுமென்று பலநாள் முயன்றும் என் கண்களில் அவர் அகப்படாது இந்த ஊரிலிருந்து திருட்டுத் தனமாகத் தப்பித்துக் கொண்டு வனத்திற்குச் சென்றுவிடுவார். இப்படியிருக்கும் பொழுது ஒருநாள் தண்ணீர் கொணரச் சென்றேன். அவ்வமயம் என் கணவன் என்முன் வருவதைக்கண்டு வழிமறித்துக்கொண்டு என்னையும் என் குழந்தைகளையும் காப்பாற்றுவதற்கு ஏதாவது வழி செய்துவிட்டுப் போமென்று தடுத்தேன். அப்பொழுது அவர் பாண்டுரங்கனும் ருக்மணிதேவியும் என்னையும் என் குழந்தைகளையும் இரக்ஷிப்பார். நீ அவரை தியானம்பண்ணு என்று சொன்னார். அப்பொழுது நான் அவருடைய திருவடிகளில் விழுந்து, இன்று முதல் உம்முடன் கலந்து பஜனை பண்ணுகிறேன். உமது சொல்வழியே நடக்கிறேன் என்று சத்தியம் பண்ணிக்கொடுத்து அவரை வீட்டிற்கு அழைத்துவந்தேன். நான் அவரிடம் தெரிவித்தபடி பண்டரிநாதனை பஜனைபண்ண எனது உள்ளமானது அந்த சர்வேஸ்வரனுடைய சரணாரவிந்தத்தையே

தாரகமென்று பற்றிற்று. இந்த சமயம் ஏகாதசி வந்ததும் எனது நாதன் என்னிடம் ஒன்பது சுலோகங்களைச் சொல்லி, என்னிடமுள்ள பொருள்களையெல்லாம் ஏழைகளுக்குக் கொடுத்து, பண்டரிநாதனை பெரும்பொருளைப் பற்றென்று எனக்குபதேசம் செய்தார். நான் அவருடைய உபதேசம் கேட்ட அப்பொழுதே தெருவில்வந்து ஏழைகளை அழைத்து உடுத்தியிருந்த புடவையையும் மறுபுடவையையும் மாத்திரம் வைத்துக்கொண்டு வீட்டிலுள்ள பாத்திரங்கள் யாவற்றையும் அந்த ஏழைகளுக்குக் கொடுத்துவிட்டு பண்டரிநாதனை பஜனை பண்ணிக்கொண்டிருந்தேன். இன்று பொழுது விடிந்தது. குழந்தைகள் ‘பசிபசி என்று துடிக்க, நான் குழந்தைகள் படும் துயரத்தைக்கண்டு பொறுக்க முடியாத விசனத்தால் ஒருமூலையில்போய் மயங்கிப் படுத்திருந்தேன். அந்தச்சமயம் அவரிடம் வந்து யாசித்த ஒரு ஏழைப்பெண்ணுக்கு நான் உலர்த்தியிருந்த புடவையை அவிழ்த்து என் நாதன் கொடுத்துவிட்டு சன்னதிக்குப் போய்விட்டார். பாண்டுரங்கனை நம்பி எனது வீட்டிலிருந்த பொருள்களையெல்லாம் தெருவில் வாரி இறைத்தபின் என் குழந்தைகள் பசி என்று வருந்தினால், அந்த குழந்தைகளுக்கு உணவூட்டி காக்கவேண்டியது அவன் கடமையன்றோ? பாண்டுரங்கன் என்குழந்தைகளுக்கு உணவூட்டி காக்க வாராமல் என்னதைரியத்தோடு கோயிலில் நின்றுகொண்டிருக்கிறான். இது அவனுக்கு நியாயமா? உலகிலுள்ள சாதுக்களை தன் வலையில் சிக்கவைத்து அவர்களை ஆடும்படிக்கும், பாடும்படிக்கும் செய்யும் பாண்டுரங்கனை இன்று நான் எளிதில் விடுவேனோ? அவனுடைய இரண்டுகால்களையும் ஒரு குண்டுக்கல்லால் நைய நசுக்கி விடுகின்றேன்" என்று சொல்லிக் கொண்டே ஒரு குண்டுக்கல்லை எடுத்துக்கொண்டு ஆலயத்திற்கு ஓடினாள்.

பாண்டுரங்கன் துக்காராம் சுவாமிகளின் மனைவியான லக்ஷ்மிபாய் பாண்டுரங்கனுடைய திருவடிகளை நசுக்குவதாக ஒரு குண்டுக்கல்லை எடுத்துக்கொண்டு விரைந்தோடி வருவதைப் பாண்டுரங்கன்கண்டு பயத்தால் உடனே உடல் முற்றும் நடுங்க, சரீரம் முற்றும் வியர்வை ஓட, நாற்புறங்களிலும் மலங்க மலங்க விழித்துக்கொண்டு என்னசெய்வேனென்று வருத்தமுறுவதை பக்கத்தில் நின்றுகொண்டிருக்கும் ருக்மணி பிராட்டி பார்த்து, "நாதா! உமது சரீரம் நடுங்குவதேனோ? உமது மேனிமுற்றும் வியர்வை நீர் ஓடுகிறதே? ஒரு புலியானது பற்ற வருவதைக்கண்ட மான் நடுங்குவதுபோல நடுங்கி நாற்புறமும் விழிக்கின்றீரே? உமக்கு என்ன துன்பம் வந்தது? உம்மை யடைந்தவர்களுடைய துன்பங்கள் எதுவாயினும் அகற்றவல்ல சர்வசக்தியுடைய உமக்கு நடுக்கம்செய்யும் வீரியரும் இந்த உலகில் இருக்கின்றார்களோ? அப்படிக் கிருக்க, நீங்கள் பயப்படுவானேன்" எனக் கேட்டாள்.

பாண்டுரங்கன் ருக்மணி பிராட்டியின் வார்த்தையைக் கேட்டு, "பெண்ணமுதே! அதோ பார்! துக்காராம் மனைவியான லக்ஷ்மிபாய் ஒரு பெரிய குண்டுக்கல்லை யெடுத்துக்கொண்டு ஓடிவருகிறாள். என்னுடைய இரண்டு கால்களையும் தான் கொண்டுவரும் குண்டுக்கல்லால் நசுக்குவதற்கென்றே வருகிறாள். இன்னும் சற்று நேரத்தில் எனது கால்கள் அவள் கொண்டுவரும் கல்லால் நசுங்குண்டு போகும். கால்களும் இழந்து வருந்தும் துன்பம் வந்துவிட்டதே. என்பதற்காகவே நான் நடுங்குகிறேன்" என்று பதிலளித்தனர்.

ருக்மணி பிராட்டி தனது நாயகன்கூறிய வார்த்தையைக் கேட்டு, "நாதா! லக்ஷ்மிபாய் உமது திருவடிகளை நசுக்காவண்ணம் அவள் கண்களில் படாது எங்கேயாவது சற்றுநேரம் மறைந்திருந்து, அவள் வீட்டிற்குப் போயதும் வந்துவிடப்படாதா? பதினாறாயிரம் கோபிகா ஸ்திரீகளை ஏமாற்றித் திரிந்த உமக்கு துக்காராம் மனைவியை யேமாற்றி மறைந்து கொள்ளுவதரிதோ?" என்று சொல்ல, பாண்டுரங்கன் "துக்காராம் மனைவி மாத்திரம் இவ்விடம் வந்தால் நான் அவளுக்கு தப்பி மறைந்து கொள்ளுவேன். நம் குழந்தை நாமதேவனுடைய அவதாரமான துக்காராம் சேவார்த்தமாய் ஆலயத்திற்கு வந்திருக்கிறானே? அவன் ஆலயத்திலுள்ள என்னைக் காணாதுபோனால் அக்கணமே தனதுயிரை மாய்த்துக்கொள்ளுவானன்றோ? அன்றியும், இந்த நிமிஷம் சுதந்தரமில்லாதவனாய், பரதந்திரனாய் இருக்கிறேன். துக்காராம் பக்தி என்னும் வலையால் என் கால்களைக் கட்டியிருக்கிறான். அவன் அந்த கட்டை அவிழ்த்துவிட்டாலன்றி, நான் எங்கும் செல்ல முடியாதே? அவன் பக்தியால் என் கால்களைக்கட்ட, அவன் மனைவியான லக்ஷ்மிபாய் அக்கால்களைக் குண்டுக்கல்லால் நசுக்குகின்றேனென்று வருகின்றனளே? இந்த ஆபத்திலிருந்து நான் எப்படி தப்புவது? எனக்கு ஒருவழியும் தெரியவில்லையே என் கண்மணியே" என்று சொன்னார்.

இதற்குள் துக்காராம் சுவாமிகள் பாண்டுரங்கனைச் சேவித்து தனது இருதயாலத்தில் இருத்தி பக்தி என்னும் கயிற்றால் அவர் திருவடிகளைக் கட்டி, பாண்டுரங்கன் தன்னை விட்டகலாமற்படிக்கு அவரையே பஜித்துக்கொண்டு பிரதக்ஷணம் வந்துகொண்டிருந்தவர், தன் மனைவியான லக்ஷ்மிபாய் கோபாவேசமுடையவளாய் ஒரு குண்டுக்கல்லை யெடுத்துக்கொண்டு ஆலயத்தைநாடி ஓடி வருவதைக் கண்டு நடுங்கி நடுங்கி அவள் முன்னே சென்று, வழிமறித்து, "ஆ! என்பிரியமான லக்ஷ்மீ! நீ என் இந்தகுண்டுக்கல்லை எடுத்துக்கொண்டு ஆலயத்திற்குள் ஓடுகிறாய்? யாரைக் கொல்ல வேண்டுமென்று நினைத்தாய்? உனக்கு யார்மீது இவ்வளவு கோபம் வந்தது? கண்மணி! நேற்றிரவெல்லாம் உலகில் காணப்படும் பொருள்களெல்லாம் பாண்டுரங்கனாகவே பார்க்கவேண்டு

மென்று நான் உன்னிடம் சொன்ன உபதேசமொழியை இன்று மறந்துபோயினையோ? இக்கல்லால் யாருடைய உயிரை போக்கக் கருதினாய்? பெண்ணமுதே! ஸ்திரீகளுக்கு இத்தனைக் கோபம் வரப்போமோ? கோபமே சர்வேஸ்வரனுடைய சரணாரவிந்தத்தை அடையமுடியாது தடுக்கும் திரையன்றோ? அருந்தவம் செய்யும் முனிவர்கள்கூட கோபத்தினால் தமது தவத்தை யிழந்து துன்பமுற்றனரென்று புராணங்கள் புகலக்கேட்டும், பாகவத தர்மத்தை யநுசரித்த நமக்கு கோபம் வரப்போமோ? நங்கையர் திலகமே! வீட்டிற்குப் போவோம்வா" என அன்போடு துக்காராம் சுவாமிகள் தன் மனைவியை அழைத்தார்.

லக்ஷ்மிபாய், "நீ என்னை விலக்காதே? விடு! இக்கணமே அந்த பாண்டுரங்கனது இரண்டு கால்களையும் நைய நசுக்கிவிட்டு வருகிறேன்" எனக் கோபத்தோடு சொல்லும் தன் மனைவியைத் தடுத்து "அந்தோ! நல்லகாரியம் செய்யத்துணிந்தாய்? பாண்டுரங்கனை பஜிக்கவேண்டுமென்று உனக்கு நான் நேற்று உபதேசம் செய்ததற்கு இன்று பாண்டுரங்கனைக் கொல்லவேண்டிய புத்தியா வந்தது? அடி பேதாய்! நான் சொல்லுவதைக்கேள். பக்தவத்ஸலன் சரணாரவிந்தங்களையும் பஜிக்கச் சொல்ல, அச்சரணங்களை வெட்டத் துணிந்தனையே? நீ அவனுடைய திருவடிகளை நசுக்க வந்த கோபத்தை தர்மநியான உனக்கு சத்விஷயத்தை உபதேசித்த குற்றத்திற்காக, என் கால்களை இந்தக் கல்லால் நசுக்கிவிடு?" என்று சொன்னார்.

பாண்டுரங்கனுடைய திருவடிகளை நசுக்குவதாய்க் குண்டுக்கல்லை எடுத்துக்கொண்டு கோபத்தோடு வரும் லக்ஷ்மிபாயைத் துக்காராம் சுவாமிகள் தடுத்து, 'என் காலை நசுக்கிவிடு' என்று சொல்லும் வார்த்தைகளை பண்டரிநாதன் கேட்டு, ருக்மணி பிராட்டியைப் பார்த்து, "எனது பிரியே! எனது கால்களை நசுக்குவதற்கென்றுவரும் லக்ஷ்மிபாயை துக்காராம் வழிமறித்து தன் கால்களை நசுக்கிவிடும்படி வேண்டிக்கொள்ளுகிறானே! எனது திவ்விய நாமாவளிகளைச் சதிவிசைகளோடு தாளமுறைப்படி நடனமாடும் துக்காராம் கால்கள் அவளால் தரிக்கப்பட்டுபோனால் உலகம் என்னையன்றோ பழிக்கும்? இதற்கு யான் என்னசெய்வேன்" என்று சொல்லி கண்ணீருகுத்தார்.

இதற்குள் லக்ஷ்மிபாய் தன் கணவனைத் தள்ளிவிட்டு, 'இந்த நிமிஷமே பாண்டுரங்கனுடைய கால்களைத் தரித்துவிட்டு வருகிறேன் பார்" என்று சன்னதியின் கர்ப்பக்கிரகத்திற்குள் ஓடினள். துக்காராம் சுவாமிகள், "அந்தோ! அடிபாதகி! வேண்டாம். உன்னை நான் விடமாட்டேன். எனது உயிரைக் கொடுத்து என் நாதன் திருவடிகளுக்கு பயம் ஏற்படாமல் காப்பாற்றுவே"னென்று லக்ஷ்மிபாயின் பின்னே ஓடினர். இதற்குள் லக்ஷ்மிபாய் கர்ப்பக்கிரகத்தில் சென்றுவிட ருக்மணிதேவி முதலில் துக்காராம்

சுவாமிகளுக்கு துன்பம் வரப்படாதென்று நினைத்து, திடீரென்று மணிக்கதவுகளைமூடி தாளிட்டுக்கொண்டாள். துக்காராம் சுவாமிகள் தன்மனைவி செய்ய நினைத்த காரியத்தில் நடுக்கமுற்றாரெனினும் தன் மனைவி தன்னிடம் இரண்டுநாள் கூடயிருந்து பஜனை செய்ததினாலேயே யாவருக்கும் அன்னையான ருக்மணிபிராட்டி, தன் மனைவி கர்ப்பக்கிரகத்தில் வந்ததும் நேரே தோன்றி சேவை தந்து கதவைத் தாளிட்டுக்கொண்டதைக் கண்டு தன் மனைவியின் பாக்கிய விசேஷத்தைக் கொண்டாடினார்.

பண்டரிநாதனுடைய கால்களை நறுக்குவதாக கூழாங்கல்லை எடுத்துக்கொண்டு கர்ப்பக்கிரகத்தில் பிரவேசித்த லக்ஷ்மிபாயின் இருகரங்களையும் கெட்டியாய்ப் பிடித்துக்கொண்டு, "ஏ பெண் பாவாய்! நீ பாண்டுரங்கனை சேவிப்பதற்கு வந்தால், தேங்காய் பழம் வெற்றிலை பாக்கு இவைகள் கொண்டுவருவதற்குப் பதிலாக இந்த குண்டுக்கல்தான் நிவேதனத்திற் குரியதாக உனக்குக் கிடைத்ததோ? இதை நிவேதனம் பண்ணினால் பாண்டுரங்கன் ஏற்றுக்கொள்ளுவாரென்று கருதினையோ? இந்த குண்டுக்கல்லைக் கொண்டுவந்த காரணம்தான் என்ன?" என்று ருக்மணிதேவி கேட்டதும், லக்ஷ்மிபாய், "அம்மா! என் கைகளை விட்டுவிடும். பண்டரிநாதனுக்கு நிவேதனம் செய்து வணங்கவந்தேனென்று நீர் நினைந்தீரோ? இவருடைய இரண்டு கால்களையும் நைய்ய நறுக்கி விடுவதற்காகவே இந்த கல்லை எடுத்து வந்தேன். என் கைகளைவிடுங்கள், இப்பொழுதே இவர் கால்களை நறுக்குகிறேன்" என்று சொல்ல, ருக்மணிதேவி லக்ஷ்மிபாயைப்பார்த்து நீ சொல்லியபடியே செய். நானும் உன் கைகளை விட்டுவிடுகிறேன். நீ இவர்மீது இவ்வளவு கோபங்கொண்டு இவர் கால்களை நறுக்குவதற்கு இவர் உனக்கு என்ன குற்றம் செய்தார்? அதை மாத்திரம் என்னிடம் தயவுசெய்து சொல்லிவிட்டு பிறகு உன்னிஷ்டம்போல் செய்துக்கொள்" எனக் கேட்டாள்.

லக்ஷ்மிபாய் ருக்மணி பிராட்டியைப் பார்த்து, "அன்னாய்! இவர் செய்த குற்றமாவது மன்னிக்க முடியாதது. அதற்கு மாறான தண்டனை இவர் கால்களை நறுக்குவதைவிட வேறில்லை. அக்குற்றத்தைச் சொல்லுகிறேன் கேள். நான் இவரையே நினையாது என் வீட்டுக்காரியத்தையும் குழந்தைகளையுமே பார்த்து மகிழ்ந்திருந்தேன். என் நாதன் இவரிடம் பெரிய பைத்தியம் கொண்டவராதலால், என் சுபாவம் அவருக்குப் பிடியாமல் என்னைவிட்டுப் பிரிந்து, வனம் சென்றார். நான் அவரைப்பிரிந்து குழந்தைகளுடன் பரதவித்துக் கொண்டிருக்கும்பொழுது, வனத்திற்குச் சென்ற எனது நாயகன் சிறிதுநாள் தவம்செய்துபார்த்து பாண்டுரங்கனை இவர் சேவையிலும் தவம் சிறந்ததில்லை என்று நினைந்து, வனத்திலிருந்துகொண்டே ஒவ்வொருநாளும் பண்டரிபுரத்திற்குவந்து இவரைச் சேவித்துவிட்டு என் கண்ணில் மாத்தி

ரம் அகப்படாமல் தப்பித்துக்கொண்டு வனத்திற்குசென்றுகொண்டிருந்தார். ஒருநாள் தீர்த்தம்கொண்டுவர தெருவில் வந்துகொண்டிருக்கும்பொழுது, எப்படியோ என் கண்ணில் தென்பட்டுவிட்டார். நான் அவரைக் கண்டதே வழிமறித்துக்கொண்டு குழந்தைகளுக்கும் எனக்கும் ஏதாவது ஆகாரத்திற்கு வழிகாட்டும். இல்லையேல், உம்மை விடமாட்டேன்' என்று சொல்ல, அவர், 'என் தாய்தந்தையரான ருக்மணி பிராட்டியும் பண்டரிநாதனும் உன்னையும் உன் குழந்தைகளையும் காப்பாற்றுவார்கள். நீ அவர்களை நினைந்து பிரார்த்தித்துக்கொள்' என்று என்னிடம் சொன்னார். நான் அவரை நோக்கி, 'நீர் வீட்டிற்குவாரும் உம்முடன் நான் கூடயிருந்து பாண்டுரங்கனையும் ருக்மணிபிராட்டியையும் பஜிக்கிறேன்' என்று சொன்னேன். அவர் என்னிடம் சத்தியம் வாங்கிக்கொண்டு வீட்டிற்கு வந்தார். நான் கணவனிடம் சொல்லியவண்ணம் இரண்டுதினம் பண்டரிநாதனை பஜனம் பண்ணவும், எனக்கே விரத்திவந்து ஏகாதசியான நேற்றைய தினம் என் கணவன் சொற்படி யாவற்றையும் ஏழைகளுக்குக் கொடுத்துவிட்டேன். இரண்டுநாளாக உபவாசதினமாதலால் சரியான உணவில்லாத என் குழந்தைகள் இன்று என்னிடம் வந்து கதறுகின்றன. பசி என்று அடிக்கின்றன. பாண்டுரங்கன் எங்களை ரக்ஷிப்பாரென்று நினைத்துத்தானே என்னிடமிருந்ததையெல்லாம் வறியவர்க்கு வழங்கி குழந்தைகள் என்முகம் நோக்க, நான் அவர்கள் முகம் நோக்க, துயரடைந்தேன். குழந்தைகளைப் பண்டரிநாதன் காப்பாற்றுவாரென்று நினைத்துத்தானே பொருள்களைத் தோற்றேன்? பாண்டுரங்கன் எந்தன் குழந்தைகளின் பசியை நீக்கினாரா? எங்களைப் பசி பசியென்று பரதவிக்கவிட்டாரே? நான் இரண்டுதினம் அவருடைய திருவடிகளைப் பற்றியதால் எனக்கும் என் குழந்தைகளுக்கும் இத்தகைய துன்பம் வந்தது. இதுபோன்றுதானே பண்டரிநாதன் திருவடிகள் நம்மைக் காக்குமென்று கருதியவர்களெல்லோருந் துன்பமடைய வேண்டியது வரும். இனி உள்ளவர்கள் துன்பத்தை அடையாமல் அவர் கால்களை நறுக்கிவிட்டால் அடியவர்கள் இவர் கால்களைப் பற்ற முடியாதன்றோ? அதனால் அவர்கள் யாவரும் என்னால் துன்பமடையாமல் சுகமாய் வாழ்வார்கள். இதற்காகவே, பாண்டுரங்கன் கால்களை நறுக்குவதற்கு வந்தேன்" என்று சொல்லும் லக்ஷ்மிபாயின் வார்த்தையைக் கேட்டு ருக்மணிதேவியானவள், "நீ தரித்திரத்தின் கொடுமையால்தானே பாண்டுரங்கன் திருவடிகளை நறுக்குகின்றேனென்கிறாய்? உனது தரித்திரம் அதனால் நீங்கினால், நீ அவனுடைய சரணாரவிந்தத்தை என்றும் மறக்கமாட்டாயன்றோ?" என்று சொல்லி உயர்ந்த தகடயுடையைத் தன் கரத்தால் லக்ஷ்மிபாயின் அரையில் உடுத்தி, விலைமதிப்பில்லாத இரத்தினாபரணங்களை

நகம்முதற் சிகைவரை அணிந்து, அவள் மடி நிறைய மோகராக்களைக் கொட்டி, "இது சிலவானதும் இன்னும் உனக்கு இதே போல் தருகின்றேன். ஆனால் இனி பண்டரிநாதன் உனக்கு விரோதியில்லையே? நீ அவனை என்றும் இடையறாது சிந்தித்துக்கொண்டிருப்பாயன்றோ?" என்று சொல்லி அனுப்பி, கதவைத் திறந்துவிட்டாள். லக்ஷ்மிபாய் வெளிவந்ததும் தன் கணவன் மணிக்குரட்டில் உட்கார்ந்துகொண்டு, "நமது மனைவி ஆலயத்தினுட் சென்றாளே! ருக்மணி பிராட்டி கதவை மூடிக்கொண்டபின் நடந்தது யாதோ! பாவியான லக்ஷ்மி, தான் கொணர்ந்த கல்லை பாண்டுரங்கன் திருவடிகளில் போட்டு விக்கிரகத்தைப் பின்னப்படுத்தி விட்டனளோ! என்ன நேர்ந்ததோ! ஏ பாண்டுரங்கா! நீ தான் அவளுக்கு நற்புத்தியளிக்கவேண்டும்" எனப் பலவாறு தனக்குத்தானே பேசிக்கொண்டு கண்மூடி மௌனியாயிருந்துகொண்டிருந்தார்.

துக்காராம் சுவாமிகள் கண்மூடி மௌனியாயிருப்பதைக் கண்ட லக்ஷ்மிபாய், "இதுவும் நமது நற்காலச் செயலே. இவர் ருக்மணி பிராட்டியால் தரப்பட்ட பொன் நாணயங்களைப் பார்த்துவிட்டால் இதையும் தந்திரமாய் என்னிடமிருந்து வாங்கி ஏழைகளுக்குக் கொடுத்து மகிழ்வர். இவர் கண்விழிக்கு முன்னே என் வீட்டிற்குச் சென்று இந்த பொருள்களையெல்லாம் இவர் அறியாமல் பத்திரப்படுத்திவைப்போம்" என்று மனதில் தீர்மானம் செய்துகொண்டு தன் வீடுசென்று ருக்மணிபாய் தன்னிடம் கொடுத்த தங்க நாணயங்களைப் பத்திரமாய் ஒருவரும் அறியாதபடி சேமித்து வைத்துவிட்டு, இரண்டு மூன்று நாணயத்தைக் கொண்டு கடைக்குச்சென்று, வீட்டிற்கு இன்றியமையாத சில பாத்திரங்களையும், ஆகாரத்திற்குரிய சில பதார்த்தங்களையும் வாங்கிவந்து சமையல் செய்து, தன் குழந்தைகள் பசியால் சோர்வடைவதினால் தானே திருவாராதனத்தைச்செய்து, குழந்தைகளை ஆகாரம் செய்யச் சொல்லி தன் நாதனுடைய வருகைக்கு எதிர்பார்த்துக்கொண்டிருந்தாள்.

துக்காராம் சுவாமிகள் சற்றுநேரம்வரை பண்டரிநாதனை பஜனம்பண்ணி, மணிக்குரட்டில் தன்னை மறந்து உட்கார்ந்திருந்தவர், தன் மனைவியை நினைந்து கண்களை விழித்து ஆலயத்தை நோக்க, மணிக்கதவு திறக்கப்பட்டிருப்பதைக் கண்டு, உடனே எழுந்து விரைந்து சென்று பண்டரிநாதன் திருவடிகளைச் சேவிக்க, அது தன் மனைவியான லக்ஷ்மிபாயால் பின்னப்படாது கண்டு, பரமாநந்த மடைந்து, பாண்டுரங்கன் நாமத்தைப் பாடியாடிக்கொண்டு தனது கிரகத்திற் கெழுந்தருளினர். லக்ஷ்மிபாய் தன் நாதன் எழுந்தருளுவதைக் கண்டு மகிழ்ச்சியடைந்து கரகநீர்கொண்டுவந்து கால்களை அலம்பி, [illegible]மந்து வைத்திருந்த

அறுசுவை உணவை அன்புடன் ஊட்டி, தான் பாண்டுரங்கன் கால்களைத்தழிக்க கெர்ப்பகிரகத்தினுள் நுழைந்ததும் ருக்மணி தேவி கதவைச் சாத்தி தாளிட்டு தன் வரலாற்றைக்கேட்டு தனக்கு ஆபரணங்கள் தன்கைகளால் புனைந்து கொஞ்சம் ஆகாரத்திற்குரிய பொருளும் தந்தனுப்பினளென்று தன் கணவனுடன் தெரிவித்து, நாயகனுடன் பண்டரிநாதனை பஜனை செய்துகொண்டிருந்தாள்.

துக்காராம் சுவாமிகள் தனது மனைவி பக்தியில் ஈடுபட்டு தன்னுடன் கலந்து பஜனை செய்துகொண்டிருக்கும்பொழுது, இவள் பாண்டுரங்கனை வைராக்கியத்தோடு பக்தி செய்கிற தன்மையைத் தெரிந்து மோக்ஷபதவியை அடையவேண்டிய யிவள், சாமான்னியமான உலகப்பொருள்களில் மயங்கி ருக்மணிபிராட்டியிடம் ஆடை ஆபரணங்கள் பெற்றதை நினைந்தும், அவள் கொடுத்த அளவிறந்த தங்க நாணயங்களைப்பெற்று, அதைத் தன்னிடம் சொல்லாமல் மறைத்ததையும் நினைந்து, சிறிது வருத்தமுற்று, இவளை எப்படியும் சீர்திருத்தி, பொருளாசை இவளிடம் அணுகாது செய்துவிட வேண்டுமென்று மதித்து ஒருநாள் தன் பக்கத்தில் உட்காரவைத்துக்கொண்டு, "பெண்ணாமுதே! நீ பாண்டுரங்கனையும் ருக்மணி பிராட்டியையும் இரண்டு தினத்தில் கண்டுவணங்கும் வைராக்கியம் உனக்கு வந்ததை நினைந்தால் என்னுடைய மனசானது உன்னை நினைக்கும்பொழுதெல்லாம், ஆநந்தமடைகின்றது. கற்பகத்தருவினிடம் சென்று ஒருவன் காசுபணம் கேட்டதுபோல், மோக்ஷம்தரும் முதல்வனிடம் சென்று அழிந்து போகும் செல்வத்தை நீ வேண்டுமென்று பெற்று வந்தாயே! பெரிய லாபம் பெறவேண்டிய நீ, அந்த லாபத்தை இழந்து பேதையானையே? நமக்கு என்னகுறை இருக்கிறதென்று நினைந்து ருக்மணி பிராட்டியிடம் ஆடையாபரணங்களையும், பொன் நாணயங்களையும் பெற்று வந்தாய்? என்னுடைய அறிவிற்கு இந்த பொன் நாணயமும் குப்பையில் கிடக்கும் ஓடும், ஒன்றாகத்தான் தோன்றுகின்றதன்றி, உனக்கு மந்த நினைப்பு வந்தாலன்றி, நித்தியாநந்த வாழ்வான பரமபதத்தை நீ அடையமுடியாது. ஆதலால் ருக்மணிதேவியிடம் நீ பெற்றுக்கொண்டயாவற்றையும் ஏழைகளிடம் கொடுத்துவிடு. வைராக்கிய நிலையில் நின்று பாண்டுரங்கனை பஜனை செய்துகொண்டிரு. நம்மைக் காப்பது அவன் கடன் என்று கருது. சர்வரக்ஷகனான அவன், உன்னையும் உன்மக்களையும் காக்காது போவானாயின், அந்தக்குற்றம் அவனுக்கன்றோ? உனக்கு என்னகுறை?" என்று சொல்ல, லக்ஷ்மிபாய் தனது கணவன் சொல்லைக் கேட்டு, அக்கணமே சில ஏழைகளை அழைத்து ருக்மணிதேவி தன்னிடம் கொடுத்தவை யாவும் கொடுத்துவிட்டு வைராக்கியத்தோடு பக்தி செய்துகொண்டிருந்தாள்.

கிஞ்சிவாடி பிராமணன் வீட்டில் துக்காராம் விநாயகரையும் பண்டரிநாதனையும் விருந்துசெய்துவைத்த அத்தியாயம்

துக்காராம்சுவாமிகள் பண்டரிபுரத்தில் தனது மனைவியோடு பகவத் பக்தி செய்துக்கொண்டு, சிலநாளிருந்து, தனது ஊரான தேவநகரம் வந்துசேர்ந்தார். இவருடைய பக்தி வைராக்கியம் யாவராலும் கொண்டாடப்பட்டதாக விளங்கிற்று. அன்றியும், பாண்டுரங்கன் துக்காராம் சுவாமிகளின் பக்தி வலையில்பட்டவராய், துக்காராமுடன் உட்கார்ந்து சமபந்தியில் அமுது செய்ய ஆரம்பித்தார். இந்த விருத்தாந்தம் ஊரெங்கும் பரவிற்று. சில வேதியர்கள் துக்காராம் சுவாமிகளின் பக்தியைக் கொண்டாடி, பாண்டுரங்கன் கூடயிருந்து உணவுசெய்யும் நிலையைப் புகழ்ந்து பேசிக்கொண்டிருந்தார்கள். அதில் சில வேதியர்கள், "பாண்டுரங்கன் அர்ச்சாவிக்கிரகமாயிற்றே? அவர் துக்காராம் சுவாமியோடு எப்படி உட்கார்ந்து விருந்துண்ண முடியும்" என ஆசங்கைகொண்டார்கள்.

இவர்கள் இவ்வாறு பேசிக்கொண்டிருப்பதை தேவநகரத்திற்கு வந்து கேட்டுக்கொண்டிருந்தவேதியர், தேவநகரின் அடுத்தாற்போன்ற கிஞ்சிவாடி என்னும் கிராமத்தில் பிறந்தவர். வேதங்களின் தத்துவார்த்தங்களையெல்லாம் தெரிந்தவர். மந்திரசாஸ்திரத்திலும் மிகப் பழக்கமுடையவர். தனக்கு உபாசனாமூர்த்தியாகக் கணபதியை ஆராதனைசெய்துக்கொண்டு வருபவர். வைதிக ஒழுக்கம் குன்றாதவர். இல்லற தர்மத்திலிருந்து ஐவகையாகமும் குறைவிலாது செய்பவர். இவர் துக்காராம் சுவாமிகளின் மகிமையைக் கேட்டதும், நம்பிக்கை பிறவாமல் தன்னுள் ஆலோசிக்கலாயினார். "வேதியர் வேதத்து மெய்யனென்றும், மந்திரங்களின் உட்பொருளாய் விளங்குகின்றவனென்றும், வேதத்தின் உட்பொருளை அறிந்தோனன்றி, பிறிதொருவரால் அறியப்படாதவனென்றும், அறிந்தோர் பேசும்வார்த்தைகள் பொய்யாயிற்றோ? துக்காராம் சூத்திர சாதியில் பிறந்தவராயிற்றே! அவருக்கு வேதங்கற்கும் அதிகாரமில்லையே! அவர் வேதத்தின் உட்பொருளை எப்படி அறியமாட்டுவர்! வேதத்தின் பொருளறியாதவர்களுக்கு பாண்டுரங்கன் எப்படி சொற்பனாவான்! அந்தணர்களாலும் அறியப்படாதவனை அமலன், துக்காராமுடனிருந்து உண்டானென்று சொன்னால் நான் எப்படி நம்புவது! நானும் கணபதி உபாசனையுடையவனே. என்னுடைய மந்திரங்களுக்கு ஈடுபட்டு அவரும் எனக்கு வேண்டியன செய்துக்கொண்டுதானிருக்கிறார். அவர் என்னுடன் சமபந்தியில் உட்கார்ந்து ஆகாரம் செய்ய விரும்புகின்றாரா! நாம் செய்யும் ஒவ்வொரு பிரசாதங்களையும் பகவான் நிவேதனம் செய்யவேண்டுமென்று சொல்லியிருக்கிறதேயன்றி, அவர் அந்த பிரசாதத்தைச்

சாப்பிடும்படி செய்யவேண்டுமென்றாவது அவர் அந்த பிரசாதத்தைச் சாப்பிடாது போனால், அந்த பிரசாதம் நிவேதனமாகவில்லையென்று ஒரு ஏட்டிலும் எழுதியிருப்பதாகத் தெரியவில்லையே! இவ்வாறிருக்க துக்காராம் சுவாமிகளுடன் பாண்டுரங்கன்கூட உட்கார்ந்து சாப்பிடுகிறாரென்றால், இது சாஸ்திரங்களுக்கும் அநுபவங்களுக்கும் ஒவ்வாததாகவும், கேட்பதற்கே புதிதாகவும் இருக்கிறது. துக்காராம் பண்டரிநாதனுடன் சமபந்தியில் உட்கார்ந்து உண்டதினால் பெரிய சிறப்படைந்தானென்றாவது அல்லது பெருஞ்சிறப் படைந்துவிட்டானென்றாவது சொல்லுவதற்கு இல்லையே! ஆயினும் இந்த விஷயத்தை நன்றாய்த் தெரிந்துகொள்ளவேண்டும். துக்காராம் சுவாமியை நேரே விசாரித்தும், நம் கண்களால் நாமேபார்த்தும், தெரிந்துகொள்ளவேண்டும்" என நினைத்துக்கொண்டே கனதூரம் வந்து சேர்ந்தார்.

கிஞ்சவாடி வேதியர் துக்காராம் சுவாமியைச் சோதிக்கவேண்டுமென்னும் நினைப்புடன் தன் வீடுபோய்ச் சேர்ந்ததும், சர்வக்ஞனை பாண்டுரங்கனுக்கு உள்ளத்தையே ஆலயமாக்கி, எப்பொழுதும் அன்னவருடைய அநந்த கல்யாண குணங்களையே பாடி பக்தி செய்துக்கொண்டிருக்கும் துக்காராம் சுவாமிகள், கிஞ்சவாடி வேதியர் நினைந்ததைத் தனக்குக் கிடைத்திருக்கும் ஞானநோக்கால் தெரிந்து, அவரது ஐயத்தை யகற்ற, அவர் பின்னேயே சென்றுகொண்டிருந்தார். வேதியர் கிஞ்சவாடி சேர்ந்து, தன் வீட்டை அடைந்து தன் மனைவியைத் தீர்த்தம் கொண்டுவரச்சொல்லி கால் கைகளைச் சுத்திசெய்துக்கொண்டு ஆசமனம் பண்ணி தெருத்திண்ணையில் வந்து உட்கார்ந்துக்கொண்டு, துக்காராம் சுவாமிகளை யெப்படி பரீக்ஷிப்பதென்று சிந்தித்துக்கொண்டிருக்கும்பொழுது, இவருக்குப் பின்னேயே வந்துக்கொண்டிருந்த துக்காராம்வந்து வேதியரைப் பணிந்து, தானும் எதிர் திண்ணையில் உட்கார்ந்தார். கிஞ்சவாடி சாஸ்திரியானவர் துக்காராம் சுவாமிகளைக்கண்டதே, ஓர் அருநிதி கண்டெடுத்தவர்போல் ஆநந்தமடைந்து, "ஐயா! எதிங்கே எழுந்தருளியது? நான் இன்று இப்பொழுது உம்மையே நினைந்து, உம்மை எப்பொழுது காண்பதென்று எண்ணிக்கொண்டிருக்கும் இந்நிமிஷமே, உம்மைக் காணப்பெற்றேன். தேவரீர் எனது கிரகத்திலேயே இன்றையதினம் அமுதுசெய்யவேண்டும். பரமசாதுவான உம்மை நான் பூஜித்து பாவனமடையவேண்டுமென்று சொல்லி, தன் மனைவியையழைத்து, "இன்று துக்காராம் சுவாமிகளுக்கு விருந்துசெய்து வைக்கவேண்டும்" எனச்சொல்ல, அந்த வனிதையும் நாதன் சொல்வழியே தன் அயலகத்து நங்கையரை அழைத்து, தனக்கு உதவிசெய்யுமாறு கேட்டுக்கொண்டு பல பக்ஷணவகைகளுடன் சித்திரான்னங்களான பிரசாதங்களை

பாயசம் பூருப்பு பச்சடி கிச்சடி பொரியல் அருவல் கூட்டு குழம்பு ரசவகைகளுடன் பக்குவமாகத் தளிகைபண்ணி முடித்து கணபதி சாஸ்திரி அக்கிராமத்திலுள்ள வேதியர் பலரையும் தன் வீட்டில் துக்காராம் சுவாமிகளுக்காக நடக்கும் ததியாராதனத்திற்கு அழைத்துவிட்டு துக்காராம் சுவாமியோடு சமபந்தியில் உட்கார்ந்து போஜனம் பண்ணுவதாய் நினைந்து அவரைத் தீர்த்தமாட அழைத்துக்கொண்டு நதிக்குச்சென்று தீர்த்தமாடி கர்மானுஷ்டானங்களை முடித்து, தனது வீட்டிற்கு வந்து தான் வழிபடும் தெய்வமான கணபதிக்கு ஆராதனை செய்து, ஜலசுத்தி பண்ணி இலைபோட்டபொழுது, வேதியர் யாவரும் விருந்துக்கு வந்து கூடினர். அப்பொழுது, துக்காராம் சுவாமிகள் கணேச சாஸ்திரியைப்பார்த்து, "சுவாமிகளே! என் இலையின் பக்கத்தில் மற்றோரிலையும், உமது இலையின் பக்கத்தில் மற்றோரிலையும், போடும் எனச்சொன்னார். சாஸ்திரி துக்காராம் சுவாமிகளைப் பார்த்து, "உமக்குவேண்டியவர் இருவர் யாராவது இன்று விருந்துக்கு வருவாரோ? எதற்காக இரண்டு இலைகள்" எனக்கேட்டார். துக்காராம் சுவாமிகள், "நான் சாப்பிடும்பொழுதெல்லாம் என்னுடன்கூட இருந்து பாண்டுரங்கனும் சாப்பிடுவது வழக்கம். ஆதலால், நீர் அவருக்காக என் பக்கத்தில் ஒரு இலைபோட வேண்டுமென்றும், நீரும் என்னைப்போல் கணபதி பக்தி செய்பவரானதால், அவரும் உம்மோடு உண்ண உமது பக்கத்தில் ஒரு இலைபோடவேண்டுமென்றும் சொன்னதேயல்லது வேறல்ல" எனச்சொன்னார். வேதியர்க ளெல்லாரும் இவ்வார்த்தையைக் கேட்டு ஆநந்தமடைந்தார்கள். கணபதி சாஸ்திரி துக்காராம் சுவாமிகளைப் பார்த்து, "சுவாமி! கணபதி என்னுடன் உட்கார்ந்து உணவு செய்ய இலைபோடுமென்று சொல்லுகிறீரே? அவர் ஒரு நாளாவது என்னுடனிருந்து உணவு செய்யவில்லையே? அப்படியிருக்க, இன்று மாத்திரம் எப்படி வந்து இலையில் உட்காருவார்" என்று சொல்ல, துக்காராம் சுவாமிகள் சாஸ்திரியாரைப் பார்த்து, "நீர் சென்று அழையும். அவர் இன்று உமது பக்கத்தே உட்கார்ந்து அமுது செய்வார்" எனக் கூறினர்.

துக்காராம் சுவாமிகளின் வார்த்தைகளைக்கேட்ட கணேச சாஸ்திரியானவர், தன் பூஜாக்கிரகத்தை திறந்து, கணபதியை தியானித்து தன்னுடன் உடனாய் நின்று உண்ணவேண்டுமென்றழைக்கவராமையினால், துக்காராமிடம் வந்து, "நான் அவரை அழைக்க அவர் ஒன்றுமே என்னிடம் பேசுகிறாரில்லையே? அவர் எப்படி என்னுடன் சமபந்தியில் வந்து உட்காரப்போகிறார்" என்று சொல்ல, துக்காராம், "கணபதி இன்று உம்முடன் உட்காராமல் போனால், பண்டரிநாதனும் இவ்வளவு வேதியருக்கும் நானும் பட்டினியேயன்றி, உணவு செய்யப்போவதில்லை. ஆனால், நீர் அழைத்தபொழுது கணபதி இங்கில்லை. ஒரு பிரா

மணன் உன்னைப்போல தன்னை உபாசனை செய்யக்கூடிய உத்தமர். அவர் குழந்தை அயலகத்து குழந்தைகளுடன் கடற்கரையில் சென்று விளையாடிக்கொண்டிருக்கும்பொழுது திடீரென்று ஒரு பெரிய அலைவந்து அந்த குழந்தையைப் புரட்டித் தள்ளி அடித்துக்கொண்டு போயிற்று. உடனே வேதியன் தெரிந்து கணபதியைப் பிரார்த்திக்க, கடலில் வீழ்ந்தழுந்திய குழந்தையை எடுப்பதற்காகச் சென்றிருந்தார். அவர் இங்கில்லையாதலால், நீ அழைத்ததே அவருக்கு கேட்கவில்லை. இப்பொழுதுதான் வந்திருக்கிறார். நீர் இப்பொழுது சென்றழைத்தால் கட்டாயம் உணவுசெய்ய வருவார்" என்று சொன்னார்.

கணபதிசாஸ்திரி துக்காராம் சுவாமிகளின் வார்த்தைகளைக் கேட்டு, "இவர் நம்மை இன்று எளிதில் விடமாட்டார்போலிருக்கிறதே! கணபதியாவது நம்முடன் உட்கார்ந்து உணவு உண்பதாவது! இது கேட்பதற்கே விந்தையாயிருக்கிறதே! இவர் நமது கௌரவத்தை குலைத்துவிடுவார்போல் தோன்றுகிறதே! கணேச சாஸ்திரி என்று இந்த பக்கங்களெல்லாம் என்னுடைய கல்விக்கும் அநுஷ்டானத்திற்கும் பக்திக்கும் மெச்சி, பேசுவது இன்றோடு போய்விடும்போல் தோன்றுகின்றதே" என்று தன்னுள் யோசித்து, ஆயினும் இந்த முறையும் இவர் சொன்னபடி சென்றழைப்போமென்று பூஜாகிரகத்தின் கதவுகளைத்திறந்து பார்க்கும்பொழுது, அப்பொழுதுதான் குளத்தில் முழ்கி எழுந்த ஒருவன் ஜலம் கொட்ட நின்றுகொண் டிருப்பதுபோல் ஈரம் சிந்தும் வஸ்திரத்துடன் கணபதி நின்றுகொண்டிருப்பதைக் கண்டு, வேறொரு காய்ந்த வஸ்திரத்தை அவர் திருவரையில் சாத்தி, நனைந்த வஸ்திரத்தைப் பிழிந்துபார்க்க, அந்த நீர் கடல்நீராக இருப்பதைக்கண்டு ஆச்சரியமடைந்து, தேவதேவனை கணபதியைப் பார்த்து, "என் தனிப்பெருங் கடவுளே! விஷ்ணு பக்தரான துக்காராம் சுவாமிகளை இன்று என் வீட்டில் விருந்துக்கு அழைத்தேன். அவரும் ஒப்புக்கொண்டு தன் பக்கத்தில் ஒரு இலையும், என் பக்கத்தில் ஒரு இலையும் போடும்படி சொன்னார். நான் அது எதற்கென்றேன். அவர் என்னுடன் பாண்டுரங்கன் சமமாக உட்கார்ந்து உணவுசெய்வது வழக்கம். ஆதலால், அவருக்கு ஒரு இலையும், உமது கணபதி உம்முடன் உட்கார்ந்து உண்ண அவருக்கு ஒரு இலையும் போடுமென்றார். அப்படியே போட்டிருக்கிறேன் அவர் பக்திக்குகந்து பாண்டுரங்கன் சமபந்தியில் உட்கார்ந்து அமுது செய்யும்பொழுது நீரும் என்னுடன் உட்கார்ந்து அமுது செய்தால்தான் என்மானம் தக்கும். இல்லையேல், உம்மை பக்திபண்ணின என்னை ஊரார் நகைக்கும்படி வந்துவிடும். ஆதலால், என்னுடன் எழுந்தருளி உட்கார்ந்து அமுதுசெய்யவேண்டுமென்று பிரார்த்தித்தார்.

கணபதி சாஸ்திரி இவ்வாறு விநாயக மூர்த்தியைப் பிரார்த்திக்கவும் அவன் தன்னுடன் ஒன்றும் சொல்லாமை கண்டு, பூஜாக்கிரகத்திலிருந்து வெளிவந்து, துக்காராம் சுவாமிகளைப் பார்த்து, "சுவாமி, உம்முடைய பெருமையை யென்னென்று சொல்லுவேன்? நான் பூஜாகிரகத்தை திறந்து பார்க்கும்பொழுது, விக்கினேஸ்வரர் நனைந்த சரீரமுடையவராய், சலம்சிந்தி பெருகும் ஈரவஸ்திரத்தோடு நின்றுகொண்டிருந்தார். நான் அந்த வஸ்திரத்தை அவிழ்த்து வேறு வஸ்திரம் உடுத்தி, நனைந்த வஸ்திரத்தைப் பிழியும்பொழுது அது கடல்நீராக யிருப்பதைக் கண்டேன். கணபதியானவர் கடலில் விழுந்த குழந்தையை யெடுக்கச் சென்றாரென்று உமக்கு எப்படித் தெரிந்தது? தயை செய்து சொல்ல வேண்டும்" என்று கேட்க, துக்காராம் சுவாமிகள் சிரித்துக்கொண்டு, "சர்வேந்திரியாமியாய், எங்கும் எப்பொருளிலும் எக்காலத்திலும் வீற்றிருக்கும் சர்வேஸ்வரனான பாண்டுரங்கன், எனது உள்ளத்தில் தங்கியிருக்கும்பொழுது, இந்த சாமான்னிய விஷயங்களை அறிந்து சொல்லுவது எனக்கரிதோ? அது இருக்கட்டும், கணபதி என் உம்மிடம் கருணைகூர்ந்து நீ அழைக்க வரவில்லை" எனக் கேட்டார். கணபதி சாஸ்திரி, "சுவாமிகளே! இதுவரை வழக்கமில்லாத விஷயத்தைப் புதிதாகச் செய்யென்றால், அது எப்படி நடக்கும்? என்னால் கணபதியை அழைத்துக்கொண்டு வருவதற்கு இயலாது. அவர் நான் அழைக்க இதுவரை வந்ததுமில்லை. என்னுடன் பேசுவதுமில்லை. ஆதலால், நீரே அழையும் அவர் வருகின்றாரா? பார்ப்போம்" என்று சாஸ்திரியார் சொல்லினர்.

துக்காராம் சுவாமிகள், நல்லதென்று முதலில் பாண்டுரங்கனை நினைந்து, தன்னிடமிருந்த பண்டரி ஜாலரை எடுத்து, குயிலினு மினிய துவனியுடன் பாட உடனே, பாண்டுரங்கன் தன் கால்களில் கஜ்ஜை கட்டிக்கொண்டு துக்காராம் சுவாமிகளின் பாடலுக் கிசைய ஆடினார். ஆனால், அங்கு கூடிநின்று காணும் வேதியர்களுக்கு தனது திருமேனிமாத்திரம் தோன்றாது, அவர் ஆடும்பொழுது காலில் அணிந்திருந்த கெஜ்ஜையின் ஒலிமாத்திரம் யாவருடைய காதுகளிலும் கேட்டது. பிராமணர்கள் எல்லோரும் துக்காராம் பஜனையைக் கேட்ட அளவே தன்னை மறந்து பரவசமுடைய சரீரம் புளகாங்கிதமுண்டாக, ஆநந்தக்கண்ணீர் பெருக, அன்பே வடிவமாய் அமைந்தார்கள். அப்பொழுது துக்காராம் சுவாமி, கணபதியை நினைந்து, "ஏ! மகா கணபதே! உன் மாமன் உனது பக்தனை சாஸ்திரியாருக்கு விருந்தினராய் உன் வீடு தேடி வந்திருக்க, உன் மாமனை உபசரியாது இருந்தால் அது உன்பெருமைக்கே இழிவில்லையோ? இக்கணமே விரைந்து வருவாய்" எனச்சொல்ல, கணபதியானவர் தனது பூஜாகிரகத்தின் கதவுகளைத் திறந்துகொண்டு வெளிவந்தார். அங்குகூடிய பிரா

மணர்களுக்கும், கணபதி சாஸ்திரியாருக்கும் கணேசருடைய திருவுருவம் தோற்றப்படாது போயினும், பூட்டப்பட்ட கதவு திறந்த சப்தமும் கதவு திறந்திருப்பதும் கண்டு, கணபதி வெளியில் வந்துவிட்டாரென்று தெரிந்துகொண்டனர். ஆலயத்தினுள்ளிருந்து வெளிப்பட்ட கணேசமூர்த்தியும், தனது மாமனான பண்டரிநாதனை நமஸ்கரித்து, கைகளைப் பற்றிக்கொண்டு துக்காராம் சுவாமிகளுக்கு முன்னே போடப்பட்டிருக்கும் இலையில் கொண்டுவந்து உட்காரவைத்து, தான் கணபதிசாஸ்திரியின் பக்கத்தே போடப்பட்டிருக்கும் இலையில் உட்கார்ந்தார். இதைக் கண்ட துக்காராம் சுவாமிகள், பாண்டுரங்கனும் பந்தியில் உட்கார்ந்தாய்விட்டது. இந்த ஈஸ்வர பந்தியில் உடனாய் உட்கார்ந்து அமுது செய்ய விருப்பமுடையவர்களெல்லோரும் உட்காரலாமென்றுசொல்ல, வேதியர்கள் யாவரும், துக்காராம் சுவாமிகள் சூத்திரராயிற்றே என்று கருதாமல் அவருடைய பக்தியைக் கொண்டாடி, இவருடன் பாண்டுரங்கனும் கணபதியுமே உட்கார்ந்து சமபோஜனம் செய்யும்பொழுது, நாம் இவர்களிலும் மேலோவென்று நினைந்து, எல்லோரும் அந்த பந்தியில் வரிசையாக உட்கார்ந்தார்கள். கணபதி சாஸ்திரியாரின் மனைவியார் உபசாரத்துடன் பரிமாற, பாண்டுரங்கனை பண்டரிநாதன் உட்கார்ந்திருக்கும் உருவம் தெரியாமல் இலையும் பரிமாறிய பதார்த்தங்களுமே தோற்றிற்று. ஆபோசனம் வாங்கும்பொழுது உத்தரணி தீர்த்தத்தைப் பண்டரிநாதன் இலையின் மத்தியிலும் கணபதி இலையின் மத்தியிலும் விட, அவ்விருவர்களின் கைகளும் தோன்றாதெனினும் அந்த தீர்த்தமாத்திரம் பிராமணர்களுக்கெல்லாம் ஆபோசனம் வார்த்து முடியும்வரை, உள்ளங்கையிலேந்தி நிற்கும் ஜலம்போல், இலையின்மேலே சாண் உயரத்தில் நின்று ஆபோசனம் போட்டாயதும், அந்த தீர்த்தம் வரவர உயர்ந்து காணாமல் மறைந்தது.

இதைக்கண்டவரெல்லோரும், கணபதியும் உண்மையாகவே தம்முடன் உட்கார்ந்து அமுது செய்கின்றாரென்று தெரிந்தனர். அன்றி, இலையில் பரிமாறிய பதார்த்தங்கள் எல்லாம் கொஞ்சம் கொஞ்சமாகக் குறைந்துபோயது. யாவரும் சமாராதனையில் போசனம் முடிந்து எழுந்ததும், துக்காராம் சுவாமிகள் முதலில் பாண்டுரங்கனுக்கும் வினாயகருக்கும் சந்தன தாம்பூலங் கொடுக்க, கணபதி சாஸ்திரி, துக்காராம் சுவாமிகளின் பக்தியைக்கொண்டாடி, தான் வேதங்களென்றும் மந்திரங்களென்றும் கர்மானுஷ்டானங்களென்றும் இதுகளையே நம்பி எனது வாழ்நாள் கழித்ததனேயன்றி, மோக்ஷபதவியை யடைவதற்குரிய பக்திமார்க்கம் இன்னதென்று தெரியாது போயிற்று. நாமும் இவர்போல் பக்திசெய்யவேண்டுமென்று சொல்ல கிஞ்சவாடியிலுள்ள வேதியர்களெல்லோரும், தாங்களும் பண்டரிநாதன் பாதத் தாம

ரைக்கே ஆட்பட விரும்பினவராய்த் துக்காராம் சுவாமிகளைப் பார்த்து, "நாங்களும் உமது அடியவராதற்கு இன்று இரவு இங்கே எழுந்தருளியிருந்து எங்களுக்கு பக்திபண்ணும் வழியை உபதேசித்து இன்று இரவு பஜனைசெய்து பண்டரிநாதனுக்கு டோலோற்சவம் நடத்திவிட்டு ஊருக்கு எழுந்தருளவேண்டுமென்று பிரார்த்தித்தார்கள்.

துக்காராம் சுவாமிகள் அந்த வேதியர்கள் பிரார்த்தனையைப் பூர்த்திசெய்துவைக்க அன்று அங்கேயே தங்கி, அவர்களுக்கு பக்திசெய்யும் மார்க்கங்களை உபதேசித்து, இரவில் பண்டரிநாதனுடைய படமூர்த்திக்கு புஷ்பாலங்காரம் செய்து, மிருதங்கம் தபேலா கிஞ்சிரா ஜாலர் குண்டு ஜாலர் பண்டரி ஜாலர் சிப்பிளா பிட்டில் சித்தார் முதலிய வாத்தியங்களுடன் குதூகலமாய்ப் பஜனை பாடியாடிப் பல பிரசாதங்களை பகவானுக்கு நிவேதனம் பண்ணி, டோலோத்சவத்தை முடித்து, அன்றிரவெல்லாம் பகவன்நாம பஜனம் செய்துகொண்டிருந்து, மறுநாள் பொழுது விடிந்ததும், வேதியர்களிடம் விடைபெற்றுக்கொண்டு கிஞ்சிவாடியை விட்டு புறப்பட்டு தேவநகரம் வந்துகொண்டிருந்தார்.

துக்காராம் சுவாமிகளை லக்ஷ்மிபாய் கரும்பால் அடித்த அத்தியாயம்

கிஞ்சவாடியில் முதல்நாள் இரவு டோலோத்சவம் நடத்தி பஜனை செய்யும்பொழுது வந்திருந்த கரும்புத் தோட்டக்காரன் இவர் பக்தியில் ஈடுபட்டு தன் வீட்டிற்சென்று, படுத்து அன்றிரவெல்லாம் பாண்டுரங்கன் நாமத்தையே பஜனம் பண்ணிக்கொண்டிருந்து அறுவடைசெய்து ஆலையில் சர்க்கரை காய்ச்ச வேண்டிய தன் கரும்புத்தோட்டத்திற்கு விடியற்காலமே வந்து சேர்ந்து, கரும்புகளைத் துண்டித்து ஆலையில் கொடுத்து சார் பிழிந்துக்கொண்டிருந்தான். துக்காராம் சுவாமிகள் தனதூருக்கு அந்த மார்க்கமாகவே போகவேண்டுமாதலால், துக்காராம்சுவாமிகள் எழுந்தருளுவதைத் தோட்டக்காரன் கண்டு ஓடோடிவந்து அவர் திருவடிகளில் விழுந்து சாஷ்டாங்கமாக நமஸ்காரம் செய்து, "சுவாமி! இந்த கருப்பஞ்சாறைப் பானம் பண்ணவேண்டும்" என்று, துக்காராம் சுவாமிகளிடம் கொடுத்து பானம் பண்ணச்செய்து, நன்றாய் முற்றிய சில கரும்புகளைத் தோகை நீக்கி கட்டாகக்கட்டி, "இதைக் குழந்தைகளுக்கு உபயோகப் படுத்திக் கொள்ளும்" எனக் கொடுக்க, அந்தக் கரும்புக்கட்டை வாங்கித் தலையில் வைத்துக்கொண்டு தேவநகரம் வந்து சேர்ந்தார். தேவநகரம் வந்ததும், அவ்வூரிலுள்ள குழந்தைகள் துக்காராம் சுவாமிகள் கொண்டுவரும் கட்டிலுள்ள கரும்புகளைப் பார்த்து அவர் முன்னே ஓடிவந்து "தாதா! எனக்கொரு கரும்பு, எனக்கொரு கரும்பு" என்று அவரைச் சூழ்ந்துக்கொண்டு கேட்க, அப்

பொழுது அவர் பாண்டுரங்கனை பஜித்துக்கொண்டே வருவதினால் அந்த குழந்தைகள் யாவரும் பாண்டுரங்கனாகவே இவர் கண்களில் தோன்றினர். உடனே கரும்புக் கட்டை அவிழ்த்து குழந்தைகள் கையில் கொடுக்கும்பொழுது, "கோவிந்தா! இந்த கரும்பை வாங்கிக்கொள். வாசுதேவா! இந்த கரும்பைப் பெற்றுக்கொள். முகுந்தா! இந்த கரும்பை ஏற்றுக்கொள். வாமனா! இந்த கரும்பை அடைந்துகொள்" என்று சொல்லிக்கொண்டே குழந்தைகளிடம் கரும்புகளைக் கொடுத்துவிட்டு, மிஞ்சின ஒரு கரும்பை எடுத்துக்கொண்டு தன் வீட்டிற்கு வந்துகொண்டிருந்தார்.

இப்படி வந்துகொண்டிருக்கும்பொழுது, இவர் மனைவியான லக்ஷ்மிபாய் தெருவில்வந்து நின்றுகொண்டு, "நம் கணவன் நேற்று காலையிலே நம்மிடமும் சொல்லாது எங்கேயோ சென்றாரே? இன்னும் வரவில்லையே? என்னகாரணம்" என நினைந்து தனது நாதன் வருகையைப் பார்த்துக்கொண்டு நிற்கும்பொழுது, தனது நாயகன் தெருவில் கரும்புக்கட்டைச் சுமந்து வருவதையும், வரும்பொழுது ஊர் குழந்தைகள் கரும்பைக்கேட்க, கட்டை அவிழ்த்து தன்னிடமுள்ள கரும்புகள் யாவையும் கொடுத்துவிட்டு, கொண்டுவந்த அடையாளத்திற்கு ஒரு கரும்பை வீட்டிற்குக் கொண்டுவருவதையும், பார்த்து வயிறெரிந்து, நாதன் ஒரு கட்டு கரும்பைச் சுமந்து ஊர்வரை வந்தும், நமது மூன்று குழந்தைகளுக்கு மூன்று கரும்பையேனும் கொண்டுவராமல் தெருவில் வரும் குழந்தைகளையெல்லாம் அழைத்து கரும்புகளைத் தானம் பண்ணிவிட்டு வருகிறாரே என்று கோபமடைந்து நின்றுகொண்டிருந்தாள். துக்காராம் சுவாமிகள் வந்ததும், தான் கொண்டுவந்த ஒரு கரும்பையும் வாயல் திண்ணையில் நின்றுகொண்டிருந்த தன் மனைவியான லக்ஷ்மிபாயிடம் கொடுக்க, அவள் கோபத்துடன் அதை வாங்கிக்கொண்டு, "ஒரு கட்டு கரும்பைச் சுமந்துகொண்டுவந்து ஊர் குழந்தைகளுக்குக் கொடுத்துவிட்டு, ஒரு கரும்பைக் கொண்டுவரச் சொல்லியவள் யார்? உமக்குப் புத்தியில்லையா" எனக் கேட்டு அக்கரும்பைக்கொண்டு ஓங்கி அவர் தலையிலடித்தாள். தலையில் அடிப்பட்ட அளவே அந்த கரும்பு இரண்டாய் முறிந்து ஒரு பாதி லக்ஷ்மிபாய் கையிலிருக்க, மற்றோர்பாதி பூமியில் கிடந்தது. துக்காராம் சுவாமிகள், தன்னை அடித்ததைப் பொருட்படுத்தாது லக்ஷ்மிபாயைப் பார்த்து, நேரிழையே! நமது பாண்டுரங்கன் பக்ஷபாத முடையவனல்லன். உனக்கும் எனக்கும் இந்தக் கரும்பைச் சமமாய்ப் பங்கிட்டிருக்கிறார் பார்? இவ்விரண்டு துண்டில் ஒன்று அதிகமாவது அல்லது குறைந்தாவது இருக்கிறதா? இவ்வளவு சமமாய் நம்மிருவருக்கும் பங்கிட்டுக் கொடுத்த அவர் செயலை அறிவாரார்? காரிழையே! உன் பங்கு உன் கையிலேயே

யிருக்கிறது. என் பங்கு கீழே கிடக்கிறது. அதை நான் எடுத்துக்கொள்ளுகிறேன்" என்று சொல்லி, கீழே விழுந்துகிடக்கும் கரும்பை எடுத்து அங்கு வந்திருக்கும் குழந்தைகளுக்கு அதைத் துண்டு துண்டாக முறித்துக் கொடுத்தார். லக்ஷ்மிபாய் இதைக்கண்டதும் நடுக்கமுற்று, "அந்தோ! சாந்தமூர்த்தியான எனது கணவனைப் பேத மதியால் கரும்பைக்கொண்டு தலையிலடித்தேனே! அநியாயமாய்க் கணவனை யடித்த காரிகையென்று ஊரார்பழிக்க அமைந்தேனே! இந்த தீமைக்கு என்னசெய்வேன் ஆ! இது என்வினையே" எனச் சொல்லிக்கொண்டே வருத்தத்துடன் திண்ணையிலிருந்து கீழே யிறங்கித் தன் கணவனை மூன்று முறை பிரதக்ஷிணம் செய்து பணிந்து, "நாதா! உமது திருமேனியில் நோய் உண்டாக என் மந்த புத்தியால் அடித்துவிட்டேன் அந்த பெருங்குற்றத்தைப் பொறுத்து மன்னிக்கவேண்டும்" எனப் பிரார்த்தித்தாள். பரமசாந்தரான துக்காராம் லக்ஷ்மிபாயைப்பார்த்து, "பெண்ணே! நீ என்னிடம் மன்னிப்பு கேட்கும்படியாக அவ்வளவு குற்றம் ஒன்றும் நீசெய்துவிடவில்லையே? உனது கைகளுக்கு கரும்பு முறிபடாததினால் என் பாகம் என்னிடம் வரும்படி செய்தாய். இது குற்றமாமோ? காலம் வீணாகாமல் பாண்டுரங்கனை பஜனை செய்வோம் வா" என்று தன் மனைவியை யழைத்துக்கொண்டு வீட்டிற்குட் சென்றார்.

துக்காராம் சுவாமிகள் பண்டரிநாதனுக்கு விண்ணப்பச்சீட்டு அனுப்பிய அத்தியாயம்

துக்காராம் சுவாமிகள் தன் மனைவியுடன் இருந்து, தேவ நகரத்தில் பாண்டுரங்கனை பக்தி செய்துக் கொண்டிருக்கும் பொழுது, இவர் பண்டரிபுரத்தில் நடக்கும் பிரம்மோத்சவம் சேவிக்க ஆடிமாசம் தவறாமல் போய்க்கொண்டிருப்பார். அந்த வருஷம் தனக்கு தேக அசௌகரியம் ஏற்பட்டுவிட்டதினாலும், நடக்க முடியாதவண்ணம் வாதநோயும் வந்தெய்தியதாலும், வழக்கம்போல் பிரம்மோத்சவம் சேவிக்க செல்லமுடியாததுபற்றி பெரிதும் வருந்தினார். "ஏ! பாண்டுரங்கா! உனது சேவையையும் இழக்கும்படி நேர்ந்ததே! உமது சேவை செய்யத் தவறி எங்ஙனம் உயிர் தரிப்பேன்’ எப்படி உய்வேன்! எந்தாய்" என்றேங்கினார். தான் சேவை செய்யவராத காரணத்தைப் பாண்டுரங்கன் தெரியப்படுத்தாதுபோனால், அவர் என்னை கண்டுவந்து உற்சவத்தில் சேவார்த்திகளாய்ச் சேவைசெய்ய வருகின்றவர்களுக்கெல்லாம் அருள்முகம் காட்டாது துக்கமுகத்தோடு சேவை காட்டுவரோ என்று எண்ணி துக்கித்தார். தாம் வரமுடியாததை பகவானுக்கு தெரிவிப்பதுவே நன்று என்று துணிந்தார். பண்டரிபுரத்தில் எழுந்தருளியிருக்கும் பாண்டுரங்கனுக்கு விண்ணப்ப ஓலை எழுதி அனுப்ப விரும்பினார். அக்கணமே ஓலையையெடுத்து

எழுத்தாணியைக்கொண்டு விண்ணப்பச் சீட்டு எழுத ஆரம்பித்தார். அதாவது "ஏ! அகிலாண்டகோடி பிரம்மாண்ட நாயகா! அயர்வரு மமரர்கள் அதிபதே! ஸ்ரீதேவி பூதேவி நீளாதேவி சமேதா! தீனபந்தோ! சித்தசன ரக்ஷகா! ஸ்ரீயப்பதே! ராதாருக்மணி சமேதா! நான்மறை பரவும் நாயகா! உமது திருத்தாள்களுக்கு அடியேன் செய்யும் விண்ணப்பம்; பண்டரிபுரத்தி லிருந்துச் சாதுசேவை செய்துக்கொண்டிருந்த அடியேன் உமது நேமனத்தாலேயே பண்டரிபுரத்தை விட்டு எனது ஊரான தேவநகரம் வந்தேன். சர்வாந்தர்யாமியாய் நீ எங்கும் பரந்திருக்கும் நிலையை அடியேன் உணர்ந்தபின்னே தான் நான் எங்கிருந்தும் உம்மை சேவை செய்துகொள்ளலாமென்னும் நம்பிக்கை எனக்கு வந்தது. அப்படியே அடியேன் தேவநகரம் வந்ததும், நீர் ஒவ்வொரு நாளும் என்னை விட்டகலாமல் என்னுடன் கூடயிருந்தே என்னை ஆட்படுத்திக்கொண்டீர். இறைவனே! நீ என்னுடன் சமபந்தியில் உட்கார்ந்துக்கொண்டு அமுதுசெய்தீர். மலர்மகளுறையும் மார்பா! அடியேன் வருஷந்தோறும் தவறாது வந்து உன்னைச் சேவிக்கும் பிரமோத்சவத்திற்கு இந்தவருஷம் வரமுடியாதபடி இந்த வாதநோயை ஏன் எனக்கு அளித்தாய்? நீ என்னை இப்பிறவியுடன் நித்திய விபூதியை அடைவதற்கு தகுதி உடையவனென்று நினைந்து கிஞ்சித்து அனுபவிக்கவேண்டிய பிராரத்துவ வினையை அடியேன் அனுபவித்துத் தீரவேண்டும் என்பது உனது மன நிலையோ? அதனால்தான் உன்னையே யடைந்து சேவைசெய்ய ஒண்ணாதபடி இந்த வாதரோகம் எனக்கு வந்ததுவோ? இந்த காரணமாயின், நீர் எனக்கு தந்த வாதநோயைப் பொன்னேபோல் போற்றுவேன். ஏ! வாசுதேவா! மானிட யாக்கையை யடைந்த பலன் உன் திருவடிகளைக் காட்படுவதென்று வேதங்களெல்லாம் முரசறைவதைக் கேட்டு மந்தமதியாகிய நானும் உம்மைப் பஜிக்க, நீர் பெற்ற பிள்ளைபோல் பாவித்து என்னிடம் கருணைகாட்டி வந்தீரே? உம்முடைய கருணைப் பிரவாகத்தை வாரி உண்டு மதிமயங்கி, உனது நாமங்களையன்றி, நவிலாமல் உன்னை யன்றி, வேறொரு தேவாலயங்களை நோக்காமல் உனதுகீர்த்தனங்களையன்றி, பிறிதொரு தெய்வங்களைப் புகழும் கீர்த்தனங்களைக் காதிலும் கேளாமலிருந்த எனக்கு இந்தவருஷம் சேவையிழக்கநேர்ந்ததே? அன்றியும், ஒவ்வொரு தினமும் என்னுடன் கலந்திருந்து பிரிதலில்லாதிருந்த நீர் இந்த நோய் வந்துவருந்தும்பொழுது என்னை மறந்துபோனதேனோ? செந்தாமரைநயனா! நான் உன்னையன்றி, ஒரு வஸ்துவினிலும் சிந்தையில்லாதிருந்தது மாறி, நோயால் வருந்தும் தேகத்தினிடம் சிறிது அபிமானம் காட்டியதால் துக்காராம் நம்மை அபிமானிப்பதைவிட்டு, தேகத்தில் அபிமானம் வந்ததென்றென்னை விட்டகன்றனையோ? அன்றி, என்னிலும் மேலாய் உன்னை பக்திபண்

னும் அடியவரை நாடிச்சென்று, அன்னவரை விட்டுப்பிரிய மனமில்லாது அவரிடம் தங்கினையோ? ஏ! தீனபந்து! உம்மை அங்குவந்து சேவை செய்ய சாத்தியமில்லாதபடி சரீரம் அமைந்தபின், இருந்தவிடமேயிருந்து எப்பொழுதும் நீயாகவே காணும் காக்ஷி யிழந்ததேனோ? எந்தாய்! புத்திரன் மந்தமதியாய் இருந்தாலும் அவனுக்கு கல்வி அறிவு ஞானத்தையூட்டி காக்கவேண்டிய கடமை தந்தையைச் சார்ந்ததன்றோ? உனது மைந்தனான நான், மந்தமதியாய் உன்னை மறந்தேனெனினும் எனக்கு ஞானத்தையூட்டிகாப்பது நின்கடனன்றோ? எப்பொருளையும் எவ்விஷயத்தையும் எக்காலமும் அறியவல்ல சர்வசக்திவாய்ந்தவனான உமக்கு இந்த ஏழை படும்பாடு தெரியாது போமோ? தேவாதிதேவா! நீர் உமதடியவரிடமே கலந்து என்னை நாடிவந்து நோயால் உன்னைச் சேவைசெய்ய வர முடியாமல் வருந்தும் எனக்கோராதரவாக நின்னடியவருள் ஒருவரையாவது என்னிடமனுப்பி, என் குறைகளைக் கேட்க உமக்கு மனம் வராது போயதென்ன? உனக்கும் எனக்கும் உள்ள பழமையான சம்மந்தம், நீர்பாராக்காக இருந்தாலும் விட்டுவிடுமென்று கருதினீரோ? ஏ! வாசுதேவா! உனக்கு என்னிடம்வர மனமில்லாமலும், உனதடியவரொருவரை என்னிடம் அனுப்பி என் நிலைமையைத் தெரிந்துகொள்ளவும், திருவுளமில்லாது போனல், யாராவது தேவநகரத்திற்கு வருபவரிடம் எனக்கோர் ஆறுதல் ஏற்பட ஒருதுண்டு சீட்டாவது எழுதிக்கொடுத்தனுப்பவும், உமக்குதிருவுளமில்லாது போனதேனோ? ஏ! பாண்டுரங்கா! எல்லாமறியும் சர்வக்கியானியனை உனக்கு ஒன்றுமறியா பேதையான நான், தெரிவிக்கும் விண்ணப்பம் உமது திருச்செவிகளுக்கு ஏராதாயினும் என்னை நீர் மறந்ததற்குக்காரணமும், உம்மைதரிசிப்பதற்குமாறாய் இந்த நோய்வந்த காரணமும், இதுவரை எனது துயரத்தை தன் துயராகப் பாவித்ததுபோய், நோயுற்றகாலத்தென்னை மறந்திருந்த காரணமும், அன்றி, என்னை மறவாமல் உமது அடியவர் இடுக்கண்களை யொழிக்க சென்றீரெனினும், உமதடியவருள் ஒருவரை அனுப்பி எனக்கோர் ஆதரவு மொழியேனும் சொல்லாதிருந்ததற்குக் காரணமும், என்னிடம் உமக்க அடியவரொருவரும் அனுப்ப சாத்தியமில்லாது போயிற்றாயினும், இங்கு வருபவரிடம் நீ எழுந்தருளுவதற்குதடையாய் உமக்கு வந்த காரியங்கள் இது என்று எழுதிக்கொடுக்காத காரணத்தையும் அடியேன் உணர்ந்துகொள்ள இனியும் தாமசமில்லாமல் இந்த விண்ணப்பக்கவியைக் கண்டதும், பதிலெழுதிவருபவரிடம் கொடுத்தனுப்புமாறு உமது திருவடிகளைப் பிரார்த்திக்கிறேன்" என்று முப்பது கவிகளாக விண்ணப்பச் சீட்டெழுதி உற்சவத்திற்காக பண்டரிபுரத்திற் கெழுந்தருளும் சாதுக்கள் தன் வீட்டுக்கு எழுந்தருள, அவர்களை உபசரித்து அவர்களிடம் தான் எழுதி தனதுகையெழுத்

திட்ட விண்ணப்பச் சீட்டைக் கொடுத்து, "சாதுக்களே! துக்காராம் தந்தானென்று இதைப் பாண்டுரங்கன் கையில் கொடுங்கள்" என்று கொடுத்தனுப்பினர்.

பாண்டுரங்கன் கருடபகவான்கையில் விண்ணப்பச்சீட்டு அனுப்பிய அத்தியாயம்

துக்காராம் சுவாமிகள் கொடுத்த விண்ணப்பக் கவியைக் கொண்டு சாதுக்கள் பண்டரிபுரத்திற் கெழுந்தருளி, சந்திரபாகா நதியில் தீர்த்தமாடி, மடிவஸ்திரம் தரித்து, துவாதசநாமஞ் சொல்லி, திருமண் காப்பணிந்து திருமணித்தாவடம் சாத்தி, பாண்டுரங்கனை பஜனை பண்ணிக்கொண்டு பண்டரிநாதனது சன்னதியை வலம்வந்து, சன்னதியின் குடவரை வாயிலில் வந்து சேவித்து, ஆலயத்தினுள் எழுந்தருளி துவஜ ஸ்தம்பத்தின் முன்னே நமஸ்காரம்பண்ணி மணிமண்டபஞ் சேர்ந்து, மாதவனைத் தியானித்துக்கொண்டு கர்ப்பக்கிரகத்தின் உட்சென்று, செங்கல்படியின் தன் திருவடியிலே இரண்டு திருக்கைகளையும் வைத்துக்கொண்டு அடியவர்தழுவ, அன்பனைச் சேவித்து ஆநந்தவெள்ளத்தில்ஆழ்ந்தவராய், அமலா சரணம்! ஆதிசரணம்! விமலாசரணம்! மெய்ப்பொருள்சரணம்! மாதவாசரணம்! யாதவாசரணம்!வாமனு சரணம்! என்றுஸ்தோத்திரம்பண்ணி துக்காராம்சுவாமிகள் தம்மிடம்கொடுத்த சீட்டைக் கொடுத்தார்கள். பாண்டுரங்கன் அதைவாங்கி அதன்மேலேபொதிந்திருக்கும் சீலமண்ணை உடைத்து,சுருளை மாற்றி ஓலையைப்பிரித்து, அவ்வோலையில் எழுதியிருந்த முப்பது கவிகளையும் ஒவ்வொன்றாகப் படித்துக்கொண்டே வரும்பொழுது, தனது கண்களிலிருந்து முத்துத்துளிபோல் கண்ணீர்பெருகலாயின. பக்கத்தே வீற்றிருந்த ருக்மணி பிராட்டி துக்காராம் எழுதிய கவிகள் எப்பொழுதுமே பக்திரசபுஞ்சமாக யிருப்பதால் அந்தக்கவிகளிலுள்ள நயங்களைக்கண்டு, ஆநந்தத்தால் நாதனுடைய கண்களில் நீர் பெருகுகிறதென்று நினைத்தாள். இரண்டொரு கவிகள் வாசித்துக்கொண்டு வரும்பொழுதே விம்மிவிம்மி அழத்தொடங்கினர். திருமுகமண்டலம் பெரிய குற்றம் செய்தவனைக் கண்டு பிடித்துவிட்டால் அவன் முகம் நடுக்கத்தால் எப்படி மாறுதலடையுமோ அதேபோல் ஒளியிழந்து மாறுதலடைந்து துக்கத்தை யடக்கிக்கொள்ள முடியாதவராய் அந்த ஓலையைச் சுருட்டி இன்னொரு சந்தர்ப்பம் படிப்போமென்று தனது மடியில் வைத்துக்கொள்ளுவர். மறுபடியும் பின் கவியை வாசிக்க வேண்டுமென்னும் ஆசை அதிகரிக்க அந்தஓலைச்சுருளை நிமிர்த்து மேலும் மேலும் கண்ணீர் பெருகுவதைக்கண்டு, ருக்மணி பிராட்டியானவர் துக்காராம் வீட்டில் ஏதாவது துக்கசம்பவம் நடந்துவிட்டதோவென்ற ஏக்கங்கொண்டு, தனது கண்களிலும் நீர் தாரையாய்ச்சோர நாதன்முன்னே நின்று, அவர் கண்ணீரைத்

துடைத்து, "உலகங்கள் பிரளயத்தா லழிய நேரினும் கவலையின்றி வீற்றிருக்கும் தேவரீருக்கு இப்பொழுது அளவுகடந்த கவலை ஏற்பட்டு கண்ணீர்பெருக விம்மி விம்மி நீர் அழுவதன் காரணம் யாது? துக்காராம் திருமாளிகையில் ஏதாவது துக்க சம்பவம் நடந்துவிட்டதோ? அவருக்கு நேர்ந்த துக்கத்தைக் காக்கஎழுந்தருளாது அவரைமறந்து நீர் இங்கேயே இருந்துவிட்டீரோ? அவர் எழுதிய ஓலையிலுள்ள விஷயங்கள் யாது? அதை அடியாளுக்கு அருளவேண்டும்" என்று விண்ணப்பம் செய்ய பாண்டுரங்கன் துக்காராம் தனக்கு எழுதிய விண்ணப்பக் கவியை ருக்மணி தேவியிடம் கொடுத்து, என் கண்மணி! இந்தக் கவிகளை படிக்கும்பொழுதே துக்கமேலிட்டால் கண்களில் நீர் ததும்பி ஓலையில் எழுதியிருக்கும் எழுத்துக்கள் தெரியாது போகின்றன. ஆதலால் இதை நீயே படித்துக் காட்டென்று சொன்னார்.

ருக்மணி பிராட்டியும் நாதன் கட்டளைப்படி தனது மெல்லிய குரலுடன் கான வின்பமும் சேர, மதுரிதகவிகளை வாசிக்க கேட்டுக்கொண்டே வரும்பொழுது மீண்டும் துக்கத்தால் கண்கள் நீரை யுதிர்க்க, பிராட்டி கவிகளைப் படித்து முடித்ததே பாண்டுரங்கன் ருக்மணியைப் பார்த்து, "பெண்ணரமுதே! நம்மைமறந்தனை துக்காராம் இவ்வளவு தூரம் நம்மிடம் வருந்தி விண்ணப்பக்கவி எழுதும்வரை நான் அவனை உபேக்ஷித்தவனாயிருந்துவிட்டேனே! அந்தோ! அவன் என்னை நினைந்து இந்த பாசுரங்களில் கதறுகிறானே! தேவநகரத்தில் அவன் நோயால் வருந்தி, என்சேவையை நினைந்துருக, நான் சந்தோஷமாக உற்சவத்தின் திவ்யாலங்காரம் செய்துகொண்டு திருவீதி எழுந்தருளுவேனோ! உற்சவத்திற்கு அவன் பண்டரிபுரம் வராது போனால் அவனில்லாத காலத்து எனக்கு செய்யும் அபிஷேகத்திலும் அலங்காரத்திலும் பிரசாதத்திலும் விருப்பம் வருமோவே! வனிதாரத்தினமே! அவனைப் பாராத கண்களும், அவனது நாமசங்கீர்த்தனங்களைக் கேளாத இந்த காதுகளும், அவனுடைய கரங்களால் தழுவப்பெறாத இந்த மெய்யும், அவனுடன் இனிய மொழிகளைப் புகலாத இந்த வாயும், அவனைத் தழுவி உச்சி முகராத இந்த மூக்கும் உடையவனாய் நானிருக்க நேரின் உற்சவம் எதற்கு? அவனில்லாதபோது அடியவர்க்கானம் என் செவிக்கமுதமாகாமல் விஷம்போல் பரவுமே? அவனைப் பாராத கண்களுடையவனாய் உற்சவத்தில் எனக்கென்று நடத்தும் ஒவ்வொரு வைபவமும் பார்க்க நேரினும் அவனையல்லாத அடியவரைப் பார்க்கக் கண்களும் கூசுமே. அவனுடன் சமபோஜனம் செய்வதற்கு இல்லாதுபோய் இந்த உற்சவத்தில் எனக்கு நிவேதனமாகச் செய்யும் பிரசாதங்களெல்லாம் என் நாவிற்கு சுவைதராது. விஷம்போலாகும். ஏந்திழையே! அவனுடைய ஆடலைப் பார்த்து

புளகாங்கித மடையாத இந்தச் சரீரம், இந்த உற்சவத்தில் மரமெனத் தக்கதாகும். மாதே! அவன் எனக்கு சூட்டும் பாமாலையின் மணத்தை நுகராத நாசியானது, இந்த உற்சவத்தில் எனக்கென்று அடியவர்களால் சமர்ப்பிக்கும் நறுமலர் மாலையின் மணம் துர்மணமாகும். செல்வி! இனி நான் என்ன செய்வேன்? இப்பொழுது என்னை நோக்கிக் கதறிக்கொண்டிருக்கும் துக்காராமைக்காண தேவநகரம் போகவேண்டும். அவனை என்னுடைய மார்பில் அணைத்துக்கொண்டு, அவன் கண்ணீரை என் கையால் துடைக்கவேண்டும். என் பெருங்குணங்களை விரித்துப் பாடிய வாயையுடைய அவனுக்கு என் வாயால் ஒரு உபசாரமொழியேனும் சொல்லி வரவேணும். கண்மணி! இதற்கென்ன செய்வது? இந்த துக்காராம்; இந்த நெருக்கடியான சமயத்திலே இந்த ஓலையை எழுதினவனுடைய அன்பை சோதனை செய்யப் பார்த்தேனே? இன்று துவஜாரோகணமாகக் கோவிலிலுள்ள அர்ச்சக பரிசாரகர்களெல்லாம் என்னை நவமணித் தொட்டியில் வரிந்து கட்டி, திவ்யாபரணங்களைச் சாத்தி, திருமாலையணிந்து, மருள்மாலை நீக்கிய சாதுக்களெல்லாரும் ஆயிரமாயிரமாய் வந்து சேவிக்க அலங்கரித்து வைத்திருக்கின்றனர். துவஜாரோகணத்திற்குரிய லக்கினமும் நெருங்கி வரும்பொழுது நானிங்கில்லாது தேவநகரம் செல்லுவது நன்றல்லவே. இந்த உற்சவத்திற்கு வந்திருக்கும் பல்லாயிர பக்தர்களான சாதுக்களுள் அவனே எனக்குச் சிறந்தவனெனினும், இத்தனை சாதுக்களுக்கும் சேவைதராது அவன் ஒருவனையே நாடிச்சென்றால், சர்வக்ஞனென்னும் நாமத்திற்கு குறைவு வருமே? நான் இங்கிருந்து நினைப்பின் முன்னே தேவநகரம் சென்று அக்கணமே திரும்பி வந்துவிடலாமென்றால், அவன் என்னைக் கண்டதும் பக்தி என்னும் பாசம் கொண்டு எனது கால்களைக்கட்டி இறுக்கிவிடுவானே? அவன் மீண்டும் என் கால்களில் கட்டிய கட்டை அவிழ்த்தாலன்றி, நான் பண்டரிபுரத்திற்கு வரமுடியுமா? நீ உற்சவம் கண்டருளவேண்டாம். என்னுடனேயே யிருந்துவிடு. என்று சொன்னால் அவன் மொழியை தடுத்துவிட்டு இங்கு உற்சவத்திற்குவர எனக்கு சக்தி உண்டோ? ஏந்திழையே! நான் அவனைக் கவனியாத குற்றத்திற்காகப் பதில் தண்டனையாக உற்சவதினம் பத்துநாளும் என்னை அங்கேயே நிறுத்திக் கொள்ளுவானோ? அவன் என்னை அங்கேயே நிறுத்திக் கொண்டால் என்னைச் சேவிக்க உற்சவத்திற்கென்று வந்திருக்கும் பல்லாயிரம் சாதுக்களின் கதியென்ன? தேவி! எனக்கொன்றும் விளங்கவில்லையே? உனக்கு ஏதாவது இந்த சமயம் யோசனை தோன்றினால் சொல்லென்று பாண்டுரங்கன் ருக்மணி பிராட்டியைக் கேட்டார்.

பாண்டுரங்கன் கூறிய வார்த்தைகளைக் கேட்ட ருக்மணி பிராட்டி தனது நாயகனைப் பணிந்து, "நாதா! நீர் இந்த உற்சவ

காலத்தில் இங்கு நின்றும் எங்கேயும் எழுந்தருளுவது தகாது. துக்காராம் இல்லாது நீர் உற்சவம் கண்டருளுவதற்கு எனக்கும் சம்மதமில்லை. ஆதலால், துக்காராம் இங்கு வருவதற்கும் நீர் இங்கு நின்றும் தேவநகரத்திற்கு எழுந்தருளாமலிருப்பதற்கு எனக்கோருபாயம் தோன்றுகிறது. அதாவது, வைனதேயனை கருடனிடம் ஒரு விண்ணப்பச் சீட்டெழுதிக் கொடுத்து துக்காராம் சுவாமியைத் தூக்கிக்கொண்டு வரும்படி செய்வதே மேலானது" என்று எனக்குத் தோன்றுகிறது. ஆனாலும், துவஜாரோகணத்திற்கு வைனதேயன் இல்லாமல் நடவாது. இக்கணமே வயினதேயனை தேவநகரத்திற் கனுப்பி லக்கினம் வருவதற்குள் துக்காராம் சுவாமியைத் தூக்கிக்கொண்டு வரும்படி செய்தால், துவஜாரோகணமும் நல்ல லக்கினத்தில் துவக்கம் செய்யும். துவஜாரோகண மானமுதல் உற்சவத்திலிருந்து துக்காராம் சுவாமியும் சேவை செய்வாரென்று தெரிவித்தாள்.

பாண்டுரங்கன் ருக்மணி பிராட்டியின் வார்த்தையைக் கேட்டதும் தன் மனத்திற்கு அதுவே நன்றென்று துணிந்து தன் முன்னே நின்றுகொண்டிருக்கும் கருடபகவானைப் பார்த்து, "ஏ! வினதசுதா! துக்காராம் பிரம்மோற்சவத்திற்கு வரமுடியாத நிலையில் வாதநோயால் வருத்தமுற்று தேவநகரத்திலிருந்து விண்ணப்பக்கவி எழுதி அனுப்பியிருக்கிறான். நானே அவனிடம் செல்லவேண்டுமானால், இன்று துவஜாரோகணம் நானில்லாமலே நடைபெறும். என்னை அவன் எளிதில் விடமாட்டான். ஆதலால், நீசென்று அவனை உனது தோள்களில் சுமந்து வரவேண்டும். நானில்லாது எப்படி துவஜாரோகணம் நடவாதோ, அப்படி நீ இல்லாமலும் துவஜாரோகணம் நடவாது. ஆதலால், தேவநகரத்தில் தாமசம் செய்யாமல் துக்காராமையும் சுமந்துகொண்டு துவஜாரோகணலக்கினம் வருவதற்கு முன்னே நீவந்து சேரவேண்டும் எனச் சொல்லி, ஒரு விண்ணப்பச்சீட்டு எழுதினார். அதாவது, தேவநகரத்தின் செல்வமாய் அமர்ந்த எனதுமைந்தனாகிய துக்காராமுக்கு சர்வ மங்களமும் உண்டாவதாக. நான் உன்னை மறந்தவனென்று நீ எழுதிய பாசுரத்தை நோக்கும் பொழுது அந்தப் பாசுரம் என்னைத் துயர்க்கடலில் ஆழச்செய்தது. தூயவனே! நான் வேறு நீ வேறு என்னும் வித்தியாசமிருந்தால் உன்னை நான் அடையாத வழி நீ என்னை மறந்தவனென்னும் குற்றம் கூறுவது நீதியாகும். நீயும் நானும் ஒன்றாய வழி. நீயுள்ள விடத்தில் நானும், நான் உள்ள விடத்தில் நீயும் இருக்கின்றோமன்றோ? அவ்வாறாயின், ஒருவரை ஒருவர் எப்படிப் பிரிந்ததாகும்? உத்தமா! நீ நோயால் வருந்துகின்றனை என்பதை நான் உணராது போனது என்மீது குற்றமாகலாம். நான் உணர்ந்தேனாயினும், உனது பிராரத்துவ வினையை நீ அனுபவித்தாலன்றி, உனக்குப் பிறவிநோய்க் கெடாதன்றோ? அதுபற்றி, நீ

அனுபவிப்பது நன்றென்று துணிந்தனன். அன்பா! நீயின்றி, பண்டரிபுரத்தில் நான் உற்சவம் கண்டருளேன். உனது விண்ணப்பக்கவியைப் பார்த்தவுடனே உன்னிடம் வரத் துணிவுகொண்டேன். ஆனால், எனக்கொரு பயமும் சனித்தது. என்னையெனில், இன்று துவஜாரோகண தினமாதலால், உன்னிடம் வந்தால் என் கால்களை உனது பக்தியென்னும் பாசம்கொண்டு பிணித்துவிடுவை. பின்னே நீ அவிழ்த்தாலன்றி, நான்விடுதலையடைந்து பண்டரிபுரத்திற்கு வருவதற்கு இல்லாது போகும். உற்சவத்திற்கென்று வந்த ஆயிரக்கணக்கான சாதுக்கள் சேவையின்றி வருந்துவரே என்று நினைத்து, உன்னைத் தூக்கிக்கொண்டு உற்சவம் சேவிக்க வருவதற்கு கருடனை அனுப்பியிருக்கிறேன். கருடன் வந்துதான் துவஜாரோகணம் நடக்கவேண்டும். அவனை அங்கு தாமதிக்கும்படி செய்யாது இக்கணமே வந்துசேருவாய்" என்று எழுதி; தனது கை எழுத்திட்டு, அந்த ஓலையைச் சுருள் செய்து சீலைமண் பொதிந்து தனது ஆழி அடையாளமிட்டு கருடபகவான் கையில் கொடுத்தனுப்பினார்.

வைனதேயர் அந்த திருமுகத்தை வாங்கிக்கொண்டு தேவநகரத்திற்கு எழுந்தருளி, துக்காராம்சுவாமிகள் திருமாளிகைக்கு எழுந்தருள, துக்காராம் கருடபகவானைக் கண்டதும் அடங்காத சந்தோஷத்தை மேலிட்டால், சிறிது சரீரவன்மைபெற்று எழுந்து தீர்க்கதண்டம் செய்து, "சுவாமி! ருக்மணிநாதன் பக்தஜன ரக்ஷகனை பண்டரிபுரத்தில் எழுந்தருளியிருக்கிறாரா? அவனடியார்களான பாகவதர்கள் அவனருளுக்கிலக்காய் அமைந்து வாழ்கின்றனரா? அன்றி, நான் பாண்டுரங்கனால் உபேக்ஷிக்கப்பட்டதுபோல் யாவரும் உபேக்ஷிக்கப்பட்டனரா? எழுந்து நடக்க சக்தியற்று பண்டரிநாதனை எண்ணி எண்ணி ஏக்கமுறும் என்னைப்போல் அவனடியார்கள் அவன் அருள்பெறாது அடிக்கின்றனரா? வைனதேயா! மாதவன் என்னை உபேக்ஷித்ததினால் இரவும் பகலும் ஏக்கங்கொண்டு நோயுற்று வருந்தலானேன். என்னை அவர் மறந்த காரணம் யாதென்று தெரிந்திலேன். எந்தாய்! நீர் எங்கு நின்றெழுந்தருளுகிறீர்?" எனக்கேட்டார். வைனதேயன் துக்காராம் சுவாமிகளின் வார்த்தைகளைக் கேட்டு, ஏ! பக்தசிகாமணி! நீர் பாண்டுரங்கன் உம்மைப்பிரிந்ததால் துயருற்று வருந்துகிறேனென்கிறீர்? உம்மைப் பாண்டுரங்கன் பிரிவுற்றதால் அவரடையும் துக்கத்தை யாரே அறிவார்? நீராவது அவரைப்பிரிந்த நிலையில் தனியே வருந்துகிறீர். உம்மை அவர் பிரிந்ததால் எத்தனை பெயர்கள் வருந்துகிறார்களென்பதை நீர் அறிவீரா? முதலில் உம்முடைய தாயான ருக்மணிதேவி, இரவும் பகலும் நித்திரையின்றி உம்மைப் பிரிந்துவருந்தும் நாயகனை உபசரித்து இன்மொழிகூறி தேற்றிவருந்துகிறாள். வருத்தமுற்ற அவர்முகம் நோக்கி யானும் உன்னைப்போன்ற அடியவரும் பண்டரிநாத

னுக்கு என்ன துன்பம் வந்ததோ என்று வருந்துகிறோம். இந்த நிலையில் நீர் விடுத்த விண்ணப்பக்கவியும் வந்து சேர்ந்தது. உற்சவதினமான இன்றே உன்னிடம் வரப் பிரயத்தனப்பட்ட பாண்டுரங்கனை உனதன்னையான ருக்மணிபிராட்டி பிரார்த்தித்து தடுத்து உம்மைத் தன்னிடம் அழைத்து வரும்படி என்னை அனுப்ப, உம்மை எனது முதுகில் சுமந்துகொண்டு பண்டரிபுரம் செல்லவே நான் இங்கு வந்தேன். பாண்டுரங்கன் உன்னிடம் கொடுக்கும்படி தந்த விண்ணப்பச்சீட்டு இதுவென்று தன்னிடமிருந்த ஓலைச்சுருளை துக்காராமிடம் கொடுத்தார். துக்காராம் சுவாமிகள் அந்த ஓலைச்சுருளை வாங்கித் தன் தலையில் சூடி கண்களில் ஒத்திக்கொண்டு கரத்தால் பிரித்து அதில் எழுதியிருந்த விஷயங்களை நன்றாய்ப் படித்து ஆநந்தமுற்று, "தேவே! நீர் என்னை மறந்தீரென்று மதித்து வருந்தினேன். உமது நிருபம் கண்ட நிலையில் நான் நினைந்தது தவறென்றுணர்ந்தேன். தயாநிதி! மன்னியும் என்று பண்டரிநாதன் பெரும்புகழைப் பலகாலும் பாடி கருடபகவானைப் பார்த்து, தோத்திரம் செய்ய ஆரம்பித்தார். "ஏ! தேவனே! உமது வடிவமே வேதஸ்வரூபமென்றும் வேதத்தின் சிகரத்தில் பிரணவவடிவாய் விளங்கும் தத்துவத்தையே உனது முதுகிலிருந்து சேவை தந்தருளும் காக்ஷியாகும் என்று சாஸ்திரங்கள் கொண்டாடுகின்றது. அன்றியும் நீ வானத்தே பறந்து செல்லும்பொழுது உமது இறகுகளிலிருந்து எழும்பும்போதே வேதகோஷமென்று கூறப்படுகிறது. வேதாவான சர்வேஸ்வரன் உமது தோள்களில் ஏறிக்கொண்டு ஞானியர் உள்ளமாம் இராஜவீதியில் பவனி வருகின்றனரன்றோ? அநேககோடி காதங்களை உமது கடைக்கண்களால் நோக்கும் கர்த்தனே! முன்னொருகாலத்தில் தேவாசுரர்கள் திருப்பாற்கடலைக்கடைந்து அமுதம்பெற விரும்பியபொழுது உமது நாதனை பரந்தாமன் மந்திர பர்வதத்தை மத்தாக நாட்டி, வாசுகியைக் கடைகயிறாக பிணைத்து சந்திரனை அடைத்தூணாக நாட்டி, பாற்கடலைக் கடையுங்கள்" என நியமிக்க, அதற்குடன்பட்ட தேவர்கள் மந்திரமலையைப் பிடுங்கும்பொழுது அது வாராமைகண்டு நீர் உமது கால்களால் மந்திரமலையைப் பெயர்த்து தூக்கிக்கொண்டுபோய் வீழ்த்தித் தேவர்க்கு உதவிசெய்த உமது கீர்த்தியானது புராணங்களெங்கும் முழங்குகின்றதன்றோ? உமது சிறிய தாயான கத்ருவைக்கும், அவள் மக்களான சர்பராஜர்களுக்கும் உமது தாயான வினதையென்பவள், அடிமையானபோது நீர் இந்திரனைவென்று தேவாமிர்தத்தை சர்பராஜருக்கு உதவி, உன்தாயின் அடிமைத்தன்மையை யொழித்த உமது பராக்கிரமத்தை உவந்தன்றோ நீர் ஸ்ரீதரனுக்கு வாகனமானீர். தேவர்கள் வணங்கும் தேவனே! பாண்டுரங்கன் என்மீதுள்ள பக்ஷத்தால் என்னை உமது முதுகின்மேல் ஏறி பண்டரிபுரத்திற்கு வருமாறு தெரிவித்தாலும்

அடியேன் உமது திருத்தோள்களில் ஏறுவனோ? இறைவனே! நீ பண்டரிபுரத்திற்கு இப்போதே எழுந்தருளி பாண்டுரங்கன் பிரிவால் வருந்தும் எனது அயரை அவரிடம் தெரிவித்து என்னை ரக்ஷிக்க விரைவாய் என்னிடம் வரும்படி சொல்லவேணும். இதுவே நீர் எனக்குச்செய்த உதவியும் ரக்ஷக்ரமமாகும்" என்று தெரிவித்தார். வைனதேயன், துக்காராம் சுவாமிகளின் சொல்லைக் கேட்டு அகமகிழ்வடைந்து, துக்காராமைப்பார்த்து, "பாகவத சிகாமணி! நான் இப்பொழுதே சென்று, உமது அயரை பண்டரிநாதரிடம் விண்ணப்பம்பண்ணி இங்கு எழுந்தருளுமாறு சொல்லுகிறேன்" என்று தெரிவித்து தேவநகரைவிட்டு பண்டரிபுரத்திற்கு எழுந்தருளி, பாண்டுரங்கனைச் சேவித்து, தேவநகரம் சென்றதும், துக்காராம் தன் முதுகின்மீது ஏறிவர மறுத்ததும், அவர் பிரிவால் வருந்தும் அயருஞ்சொல்லி, "சுவாமி! நீர் இன்றே சென்று துக்காராம் சுவாமிகளை ரக்ஷியாது போவீராயின், உமது பிரிவால் அவர் உயிர் துறப்பார் என்று சொன்னார்.

பாண்டுரங்கன் கருடபகவான் வார்த்தையைக் கேட்டு, ஆற்றாதவராய்த் தன் தேவியாகிய ருக்மணியைநோக்கி, பெண்ணாரமுதே! இதற்கென்னசெய்வது? உன்சொல்லை நினைந்து இதுகாறும் இங்குவருமாறு வைனதேயனை அனுப்பினேன். அவன் வருவதற்கு மறுத்துவிட்டான். நான் சென்று காவாதுபோனால் அவன் உயிர் துறப்பான். ஆதலால், இக்கணமே செல்லவேண்டும்" எனச்சொல்ல, ருக்மணிதேவி, "நாதா! நீர் சொல்லும் வார்த்தை நன்றாகவிருக்கிறது. உற்சவம் முடியும்வரை பத்து நாளும் நீர் எங்கேயும் போகப்படாது. ஆயிரக் கணக்கான பக்தஜனங்கள் உமது சேவார்த்தமாக எழுந்தருளியிருக்கும்பொழுது துக்காராம் ஒருவரிடம் மாத்திரம் கருணை காட்டினால், பக்தரக்ஷகனென்னும் உமது நாமத்திற்கே பங்கம்வரும். உற்சவம் கழிந்ததும் அடியாளும் கூடவே தேவநகரம் வருகிறேன். நாமெல்லோரும் துக்காராமுக்கு சமாதானம் பண்ணிவருவோம்" என்றாள்.

பாண்டுரங்கன் ருக்மணிபிராட்டியின் வார்த்தையைக்கேட்டு அவ்வாறே செய்வதென்று துணிந்திருந்தார். இதற்குள் துவஜாரோகண லக்கினம் வந்தது. உற்சவ விக்கிரகமான பாண்டுரங்கனை அலங்காரம் பண்ணி அநேக விருதுகளுடனும், அநேக வாத்திய கோஷங்களுடனும், பாகவத பஜனை கோஷ்டிகளுடனும் துஜஸ்தம்பத்தின் எதிரில் எழுந்தருளச் செய்தார்கள். அப்பொழுது சேவார்த்தமாக துஜஸ்தம்பத்தின் பக்கத்தேவந்து நின்றுகொண்டிருந்த பரமபாகவதர்களான ஷேக்முகம்மது, சுதேசநாதன், நிப்ப நாதன் முதலியவர்கள் வந்திருப்பதை பாண்டுரங்கன் கண்டு, தன்பக்கத்தே யெழுந்தருளியிருக்கும் ருக்மணிதேவியைப்பார்த்து, "வனிதாரத்தினமே! நான் உன்னிடம்

பஜனை செய்வதில் சிறந்தவனென்று பலசமயங்களிலும்சொன்ன நிம்பராசன் என்பவர் அதோ நின்றுகொண்டிருப்பவரே. அவர் பாடலில் கல்லுகளும்கரைந்துருகு மென்றால், அறு அறிவுடைய மானிடராய்ப் பிறந்தவர்கள் யாரே மயங்காதவர்? நீ இன்றைய தினம் அவருக்கு பூர்ண கடாக்ஷம் செய்து வரவேண்டும்'' என்று திருவாய் மலர்ந்தருளினார். தனது நாயகன் கூறியமொழியை நன்றெனக்கேட்டு துவஜாரோகணமாய் திருவீதிவலம்வந்து சன்னதிக்குள் எழுந்தருளியதும் பகவான் நியமனப்படி தான் ஒரு சாதாரணமான தாழ்ந்தகுலத்து நங்கைபோல் தனது திருவுருவை மாற்றிக்கொண்டு குடைவரை வாயலின் முன்னே வள்ளிக்கிழங்கு விற்பவள்போல பாவனைசெய்து, நிம்பராஜன் வருகைக்காகக் காத்திருந்தாள். நிம்பராஜன் பாண்டுரங்கனைச் சேவித்துவிட்டு அவர் திவ்விய குணாதிசயங்களை நினைந்து சாயித்தியம் இணைத்துக்கொண்டு குடைவரை வாயில் படியண்டை வந்ததும், வள்ளிக்கிழங்கு விற்கும் நங்கையாய் உருவத்தை யடைந்த ருக்மணி பிராட்டி நிம்பராஜனைப் பார்த்து, ''தம்பீ! நான் குழந்தையை இதோ காணும் எனது வீட்டில் விட்டுவிட்டு வியாபாரநிமித்தம் வந்துவிட்டேன். அந்தோ! குழந்தை இன்னேரம் என்னைக் காணாது அடித்துக்கொண்டிருக்கும். நான் ஒரு நொடிப்பொழுதில் குழந்தையை எடுத்துக்கொண்டு வருகிறேன். அதுவரை இந்த கூடையைப் பார்த்துக்கொள்ளும். எனக்கு நீர்தான் நம்பிக்கை உள்ளவராய்த் தோன்றிற்று. சற்று நிமிஷத்தில் வருகிறேன்'' என்று சொல்லி; நிம்பராஜனைக்கூடையினருகே உட்கார வைத்துவிட்டு சிறிது தூரம்சென்றுமறைந்தாள். நிம்பராஜன்சில நிமிஷத்திற்குப்பதிலாக சில சாமம்வரை காத்திருந்தும், அந்த நங்கைவாராமைகண்டு அவள்போம்பொழுது, 'நீதான்எனக்குநம்பிக்கை யுடையவனாகத் தோன்றிற்று'. என்றுசொன்னளே! இதில் ஏதாவது விலையுயர்ந்தவஸ்து இருக்கிறதோவென்றுமேலேமூடியிருந்த அழுக்கடைந்த வஸ்திரத்தை ஒரு குச்சியால் தள்ளிவிட்டு பார்க்கும்பொழுது வள்ளிக்கிழங்கொன்றேனும் இல்லாது தங்க நாணயங்களும் மாணிக்கம் முதலிய இரத்தினங்களுமாய் அந்தக் கூடை நிரம்பியிருப்பதைக்கண்டதே 'ஒரு கிருஷ்ணசர்பம் படம் விரித்து எழுந்து கடிக்க வரும்பொழுது, அது தன்னைத்தீண்டாமல் தான் தப்புவதற்காகத் துள்ளி விழும் ஒருவனைப்போல், நடுங்கிவீழ்ந்து, ''நம் அன்னையான ருக்மணிபிராட்டி இந்த நிதியை என்னிடம் கொடுத்து என்னை யேமாற்றிவிட்டு அகன்றனள். நானோ இந்த செல்வத்தில் மயங்குவேன்? ஏ! நிதியே! நீ என்னை அருநரகத்தில் தள்ள கூடையிலிருந்து ஒளிவிடுகின்றனேயோ! உனது ஒளியைக்கண்டு மயங்குகின்றவன் நிம்பராஜனல்ல. உன்னுடைய வல்லபம் என்னிடம் செல்லாது'' என்று சொல்லி, அக்கணமே பாண்டுரங்கன் சன்னதியில் சென்று, பண்

டரிநாதனைப்பணிந்து ''தந்தையே! என் தாயான ருக்மணிபிராட்டியார் செய்த மோசத்தைப் பார்த்திரோ? இவன் என் உனது நாமத்தை பஜித்துக்கொண்டிருக்கிறான்? இவனைச் சேதனருக்கி அருநரகில் தள்ளுவோம் என்று நினைந்து ஒரு கூடை நிறைய தங்கநாணயங்களையும் நவமணிகளையும் என்னிடம் ஒப்பிவித்து மறைந்துபோயினாள். நான் சரணாரவிந்தத்தை தவிர ஒன்றிலும் பற்றில்லாது இருக்குமென்னை என்தாயே யிப்படிசெய்வது நீதியோ? இது தர்மமோ?'' என்று சொல்லி அழுதனர். உடனே பாண்டுரங்கன் அவரைத் தழுவிக்கொண்டு கண்ணீரைத் துடைத்து, ''என் காதல்மைந்தா! நீ மலினமான உடை தரித்திருப்பதனாலும், இந்த வேருடையன்றி மாறுடையில்லாமலிருப்பதாலும், உன் தாயான ருக்மணிகண்டு இரக்கங்கொண்டு நமது மைந்தன் இத்தகைய வறுமை நிலையிலிருப்பதோ'' வென்று நினைந்து மனந்தாளாது தாயாதலால் செய்தகாரியம் இது. இதைக் குற்றமெனக் கருதி நீ அழாதே'' என அவரைத் தேற்றியனுப்பினார்.

இரண்டாவது உற்சவமான மறுநாள் காலையில் அகிலபாகவதர்களும் சந்திரபாகா நதிக்கெழுந்தருளி, தீர்த்தமாடிக்கொண்டிருக்கும்பொழுது நிம்பராஜன் தனது திருவரையில் பல கந்தல்களுடன் தையல் நிரம்பிய ஒற்றை வஸ்திரத்துடன் தீர்த்தமாடிவிட்டு, அவிழ்த்து உணர்த்தி உடுத்துவதற்கும் சாத்தியமில்லாத நிலையில் நீர்த்துளி பெருகும் வஸ்திரத்தோடு நின்றுகொண்டிருக்கும் சமயத்தில், பாண்டுரங்கன் நிம்பராஜனுக்கு மாறுடையேனும் கொடுக்க வேண்டுமென்று நினைந்து, ஒரு பிராமணனுருவத்தையடைந்து, நிம்பராஜன் முன்னேவந்து, ''தம்பி! நீ நல்ல யோக்கியனாய்க் காணப்படுகிறாய். இந்த மடிசஞ்சியை சற்று நேரம் பார்த்துக்கொள்ளு. உற்சவதினமாதலால் ஏராளமான கூட்டங்கள் தீர்த்தமாட வந்துகொண்டிருக்கின்றன. கூட்டத்தினிடையே களவுசெய்வோரும் திரிந்துகொண்டிருக்கின்றனர். ஆதலால், மடிசஞ்சி சாக்கிரதை. நான் ஒரு நொடியில் தீர்த்தமாடிவிட்டு வருகிறேன்'' என்றுசொல்லி, நிம்பராஜன் முன்னே மடிசஞ்சியை வைத்துவிட்டு தண்ணீரிலிறங்கி தீர்த்தமாடிக்கொண்டே மறைந்தனர். நிம்பராஜன் நெடுநேரம் காத்திருந்து, தன்னிடம் மடிசஞ்சியைவைத்த வேதியர்வாராமைகண்டு வருத்தமுற்று, மடிசஞ்சியை யெடுத்துக்கொண்டு தன்னுடன் தீர்த்தமாடவந்த சாதுக்கள் முன்னே மடிசஞ்சியைவைத்து ''சாதுக்களே! இந்த மடிசஞ்சியை ஒரு வேதியர் என் முன்னே வைத்துவிட்டு 'இதைப் பார்த்துக்கொண்டிரு தீர்த்தமாடிவிட்டு வருகிறேன்' என்று சொல்லி வைத்துவிட்டு சந்திரபாகா நதியில் இறங்கினார். இதை வைத்துவிட்டு, அவர் சென்று நெடுநேரமாயிற்று. இன்னும் அவர் வரவில்லையே? இந்த மடிசஞ்சியை நான் என்ன செய்வது?

யாரிடம் கொடுப்பது?'' என்று சொல்லும் நிம்பராஜனைப் பார்த்து; சாதுக்கள் "நிம்பராஜனே! இந்த மடிசஞ்சியைக் கொண்டு வந்து உன்னிடம் வைத்தவர் வேதியர் அல்லர். நீர் உடையில்லாது ஒரே உடையுடன் நிற்பதுகண்டு, நமது பாண்டுரங்கனே உமக்கு இந்த மடிசஞ்சியை வேதியர் உருவுடன் வந்து தந்து போயினர். இதை நீர் அவிழ்த்து இதில் உள்ள உடை முதலியவற்றைத் தரித்துக்கொள்ளும்'' என்று சாதுக்கள் சொல்லினார்கள்.

நிம்பராஜன் சாதுக்கள் சொல்லியவண்ணம் மடிசஞ்சிகையை அவிழ்த்துப்பார்க்க, அதில் இரண்டுஜோடுவஸ்திரமும், திருமண்பெட்டியும் அப்பெட்டியினுள் திருமண்காப்பு, ஸ்ரீசூர்ணம், திருமணித்தாவடம், துளசிமாலை யிருந்தன. நிம்பராஜன் என்று பெயர்வெட்டிய ஒரு செப்புச் செம்பும் பண்டரிஜாலரும் இருந்தன. அந்தச் செம்பிலுள்ள பெயரைப் பார்த்ததே சாதுக்கள் பண்டரிநாதன் மகிமையைக்கொண்டாடினார்கள். நிம்பராஜன் பலகந்தலுடன் கூடிய தான் உடுத்தியிருந்த வஸ்திரத்தைக் களைந்துவிட்டு மடிசஞ்சியிலிருந்த வஸ்திரத்தை உடுத்திக்கொண்டு பண்டரிநாதன் சன்னதிக்கு சாதுக்களுடனும் பாகவதர்களுடனும் வந்து சேவித்துவிட்டு பகவன்நாமங்களைக் கீர்த்தனரூபமாய் குயிலினுமினிய குரலுடன் பாடிப் பரமானந்த பரிதனாய் ஆடும்பொழுது, அந்திநேரமாயிற்று. உற்சவத்திற்கு வந்தவர்களெல்லோரும் சந்தியாவந்தனம் செய்ய சந்திரபாகா நதிக்கு வந்தார்கள். நிம்பராஜனும் மாலைக்கடனைக் கழித்துவிட்டு சந்திரபாகா நதிக்கரையிலுள்ள ஒரு மண்டபத்தில் நின்றுகொண்டு பஜனை செய்ய ஆரம்பித்தார். இரவு பகலென்று சொல்லுமாறு சாயுங்காலத்து நதிக்கு வந்தவர்களெல்லோரும் நிம்பராஜன் பஜனையிலேயே லயமுற்று தங்களை மறவாதவர்களாய் திருவீதி எழுந்தருளும் பாண்டுரங்கனைச் சேவிப்பதையும் மறந்து, ஆகார நித்திரையைத் துறந்து, ஆநந்தபரவசர்களாய் நின்றனர்கள். இதற்குள் நிம்பராஜன் சந்திரபாகா நதிக்கரையில் பஜனை செய்கிறாரென்று சொல்லக்கேட்ட பண்டரிபுரத்திலுள்ளவர்கள் யாவரும் பஜனை கேட்க வந்துவிட்டனர். திருவீதி எழுந்தருளும் பாண்டுரங்கன் அன்று இராத்திரி தான் எழுந்தருளும்பொழுது ஒருவரும் தன்னை சேவை செய்ய வாராமை கண்டு காரணமென்னவென்று நினைக்க, நிம்பராஜனுடைய பஜனையில் தன்னை மறந்து பரவசமுற்று, சந்திரபாகா நதிக்கரையில் நின்றுகொண்டிருக்கின்றனரென்று தெரிந்தாலும் அவர் பஜனையைக் கேட்க விரும்பி வந்து, ஒரு அழகிய குழந்தையாய் நிம்பராஜனுடைய தோள்மீது உட்கார்ந்துக்கொண்டு ஒரு விசிறியால் அவர் முகத்தில் துளிக்கும் குருவேர்வைபோக விசிறிக்கொண்டிருந்தார். விடியற்காலமாயிற்று. அப்பொழுது அந்தவூரில் வியாபாரம் செய்து

வந்த அரிசிங்கென்னும் பெயருடையவர் துக்காராம் சுவாமிகளின் அந்தரங்க சிஷ்யரானவர், சந்திரபாகா நதிக்கு தீர்த்தமாட வந்துசேர, அங்கே நிம்பராஜன் பஜனையைப் பார்த்ததும், அவர் தோளின்பேரில் உட்கார்ந்துக்கொண்டிருக்கும் குழந்தையைக்கண்டு, இக்குழந்தை பண்டரிநாதனே என்று தெரிந்து தரிசனம் செய்ய ஓடிவரும்பொழுது, நிம்பராஜன் தோளிலிருந்த குழந்தை விசிறியுடன் மறைந்தது கண்டு, யாவரும் திகைத்தனர். அரிசிங்கென்பவர், நிம்பராஜனுடைய திருவடிகளில் வீழ்ந்து பணிந்து, "சர்வேஸ்வரன் உமது தோளிலிருந்து விசிறி வீசிக்கொண்டு கேட்க நீர்பாடிய பஜனைக்குவந்து சிரவணம் செய்யாத பாவியானேனே? அந்தோ'' என வருந்தினர். யாவரும் இதைக் கேட்டு, "அந்தோ! இவர் தோளில் குழந்தையாயிருந்து பஜனைக் கேட்டவர் பாண்டுரங்கனும் அவரை அறிந்து சேவைசெய்யாது போயினேமே! என்ன பாவிகள்'' என வருந்தாதும் வருந்தினர். சூரியனும் உதய பர்வதத்தில் எழுந்தருளினன். அப்பொழுது தீர்த்தமாட விரும்பிய நிம்பராஜன் தனது பஜனையைப் பூர்த்திசெய்ய, பஜனைகேட்டவர் யாவரும் தீர்த்தமாடச் சென்றனர்.

இப்படி பாகவதோத்தமர்களின் திருக்கூட்டங்களுடன் பிரம்மோற்சவம் நடந்து முடிவுபெற்றது. உற்சவம் முடிந்ததும், சேவார்த்திகளாய் வந்த சாதுக்கள் பாகவதர்கள் யாவரும் பாண்டுரங்கனுடைய நியமனத்தால் தங்கள் உறைவிடம்போய்ச் சேர்ந்தனர். சாது ஜனங்களையும் பாகவதர்களையும் பிரிந்த அந்த பண்டரிபுரமானது, சந்திரனில்லா வானம்போலும், தாமரையில்லா பொய்கைபோலும், மைந்தரையடையா மனைவாழ்வுபோலும், மன்னவனில்லா வளநகர்போலும் இருந்தது. பாண்டுரங்கன் தனது பக்தசனரைப் பிரிந்ததால் வருத்தமுற்று, தனது பக்கத்திலேயே வீற்றிருக்கும் திருமகளான ருக்மணி பிராட்டியைப் பார்த்து, "மங்கையர் திலகமே! எனதடியவரொருவருமில்லாத இந்த ஊர் எனக்கு மிக வெறுப்பைத் தருகிறது. அடியவர் நம்மைத் தேடி வருவதுபோல், நாம் அடியவரைத் தேடும் காலமும் வந்துவிட்டது. நம்மையே நினைந்து துதிசெய்துக்கொண்டு வருந்தும் எனது அந்தரங்க பக்தனை துக்காராமிட மிந்தநிமிஷமே போகத் துணிந்தேன்'' என்று சொல்ல, ருக்மணி பிராட்டியாரும்கூடவருவதாக விண்ணப்பம் செய்துக்கொண்டாள். பாண்டுரங்கனும் ருக்மணியுடைய வார்த்தையைக் கேட்டு மகிழ்ந்து அவளுடன் கருடபகவான் தோள்களில் ஆரோகணித்துக்கொண்டு துக்காராம் சுவாமிகள் எழுந்தருளியிருக்கும் தேவநகரத்தை யடைந்து, துக்காராம் சுவாமிகளுக்கு சேவை தந்தருள், பகவானை பாண்டுரங்கனைக் கண்டதும், அந்தியில் வந்ததாய்ப் பசுவைக்கண்ட ஆள்கள் அன்பின் மயமாய் நின்று தோத்திரம்

செய்து, "எனது தந்தையே, இத்தனை நாளாக உன்னையே நினைந்துருகும் எளியேனை மறந்ததேனோ? எந்தாய்! உன்னையன்றி எனக்குற்ற துணையும் வேறு உளதோ? இப்படியும் என்னை நீர் உபேக்ஷிப்பது நீதியோ" எனக் கண்களில் நீர் தாரை தாரையாய்ச் சொரிய உருகிய மனதுடன் மெல்லிய குரலால் கேட்டனர். இவர் பக்திவலையில் அகப்பட்ட பரந்தாமன், தனது கமலக்கண்களிலிருந்து நீர்த்துளிகள் சிந்த, துக்காராம் சுவாமிகளைப் பார்த்து, "அன்பார்ந்த எனது மைந்தா! நீ என்னைப் பிரிந்து வருந்தும் வருத்தம் நான் அறிவேன். உன்னைப் பிரிந்து நானடையும் துயரத்தை நீ அறிவையோ? உனக்காவது என்னைக் காணமுடியவில்லையே யென்னும் கவலையொன்று. எனக்கோ உன்னைப் பிரிந்திருக்கும் கவலையொன்று, உன்னை வந்தடையவேண்டுமென்னும் கவலையொன்று, உன்னைப்போல் எனது தத்துவ நிலையையறிந்த பாகவதர்களுக்கு வஞ்சனை விளைத்து, கள்வனாய்மறைந்து உன்னிடம் வரமுடியாததை நினைந்து, வருந்தும் வருத்தமொன்று. உற்சவகாலத்து நீவராத வருத்தமொன்று, இவ்வளவுகூடி இரவும் பகலும் பீடிக்கச்சேர்ந்தேன். என் வற்ஸா! இனி நாம் சென்றதைக் குறித்து வருந்துவதில் பயனொன்றுமில்லை" என்றுசொல்லி, துக்காராம் சுவாமியைத் தேற்றி, உன் வீட்டிலுள்ள சிற்றுண்டியை யருந்தவேண்டுமென்னும் ஆசையோடு வந்தேன்" என்று திருவாய்மலர்ந்தருளினர். துக்காராம் சுவாமிகள் உடனே தன்வீட்டினுள் புகுந்து இரண்டு மூன்று நாளைக்குமுன் உணவுசெய்வதற்காக சுட்டு காய்ந்துபோன ரொட்டிகளைப்பொறுக்கி எடுத்து ஒரு இலையில் வைத்து, உபசாரமாய்க் கொண்டுவந்து ஜலசுத்தி பண்ணிவைக்க, பகவான் தனக்கு விதுரர் செய்த கூழ்விருந்தினும், கண்ட கர்ணன் செய்த பிணவிருந்தினும், சபரி அளித்த எச்சில்கனியினும், இனிமையுடையதாய் அமுதுசெய்து ஆநந்தமுற்று அன்பனை துக்காராம் சுவாமிகளைப் பார்த்து, "தனயா! எனக்குத் திருப்தியான பதார்த்தம் இரண்டேதடவைதான் எனதுவாழ்நாள்களில் கிடைத்தது: அதாவது குசேலர் கொடுத்த நொய் அவலும் நீர்கொடுத்த காய்ந்த ரொட்டியுமே யாகும்" என்றுகொண்டாடி, துக்காராம் சுவாமியைத் தழுவிக்கொண்டு பண்டரிபுரத்திற் கெழுந்தருளினார்.

மாதவனென்னும் பிராமணனுக்கு பிரசங்க வன்மையளித்த அத்தியாயம்

துக்காராம் சுவாமிகள் தேவநகரத்தில் எழுந்தருளியிருக்கும் பொழுது, அவந்தியென்னும் ஊரிலிருந்து புண்டரீகனென்னும் ஒரு பிராமணன், தான் பண்டிதனாய் ஞானச்செல்வம் அடைய விரும்பி, ஞானதேவர் மோக்ஷமடைந்த அளகாபுரிக்குச் சென்று

ஞானதேவரை நோக்கி அருந்தவம் செய்துகொண்டிருந்தார். ஒருநாள் இவர் முன்னே ஞானதேவர் தோன்றி, "தேவநகரத்தில் எழுந்தருளியிருக்கும் துக்காராம் சுவாமிகளிடம் சென்று அவருடைய அனுக்கிரகத்தால் இஷ்டபூர்த்தி யடைவாய்" என்று சொல்லி மறைந்தனர். அப்பொழுதே புண்டரீகனென்னும் மறையவர், தேவநகரம் வந்து துக்காராம் சுவாமிகளைப் பார்த்து, இவர் இழிகுலத்தவரென்று நினைந்து, அவரைவணங்காது தான் வந்த கருத்தைச் சொல்ல துக்காராம் சுவாமிகள் வேதியரை நோக்கி, "ஞானத்திற் குறைவுள்ள அந்தணர்குலத்துதித்த தாங்கள் அடியேனை யடுத்து பண்டிதனுல் மாறவேண்டினீர்கள். என்னிடம் அத்தகைய செயலொன்றும் இல்லையாயினும், ஞானதேவர் நேமனத்தைக்கொண்டு பண்டரிநாதன் கருணையால் நான் சில கவிகளை எழுதித் தருகிறேன். அதை நீர் மனனம் செய்துக்கொண்டு இந்த தேங்காயை யுடைத்து இதிலுள்ளதைப் பிறர்க்குக்கொடாது நீரே அருந்தவேண்டும்" என்று சொல்லி, பதினொரு விருத்தங்களை ஒரு சீட்டில் வரைந்து தேங்காயுடன் வேதியர் கையில் கொடுக்க அதை வாங்கிய வேதியர், "இதுவென்ன ஆச்சரியமாக விருக்கிறது! இந்த தேங்காயைத் தின்பதினும் இக்கவியைப் பாடச் செய்வதினாலும், நானெப்படி பண்டிதனாவேன்! இவர் ஏதாவது உபதேசம் செய்வாரென்று வந்த எனக்கு இந்த கவியாலும் தேங்காயாலுமா பாண்டித்தியம் வரப்போகிறது!" என்று நினைத்து, அத்தேங்காயையும் கவியையும் அவர் முன்னேயே வைத்துவிட்டு போயினர்.

துக்காராம் சுவாமிகள் வேதியர்செய்த வித்தையைப்பார்த்து "இவர் கொடுத்து வைக்காதவர்" என்று நினைத்துக்கொண்டு பாண்டுரங்கனை பஜனம் பண்ணிக்கொண்டிருந்தார். இப்படியிருக்கும்பொழுது, சிவாஜி மகாராஜன் சபையில் பண்டிதராய் இருக்கும் முகுந்தசாஸ்திரி என்பவருக்குப் புத்திரராய் நிரக்ஷரகுக்ஷியென்று கண்டவர் யாவரும் நகைக்க வளர்ந்துகொண்டிருந்தவன், தனக்குப் பண்டிதனாகவேண்டிய நல்வினையிருந்ததால், தேவநகரத்திற்கு வந்து துக்காராம் சுவாமிகளின் திருமாளிகையிற் சென்று, அவர்பக்திசெய்துகொண்டிருப்பதைக்கண்டு சாஷ்டாங்கமாய் அவர் திருவடிகளில் வீழ்ந்து தோத்திரம் செய்து, "சுவாமி! அடியேன் நிரக்ஷரகுக்ஷியென்று யாவராலும் நிந்திக்கப்படுகிறேன். என்னை அந்த நிந்தனையிலிருந்து மாற்றியருளவேண்டும் என்று சொல்லினன். துக்காராம் சுவாமிகள் விப்பிரனை மாதவையர் வார்த்தையைக்கேட்டு, "அந்தணர் குலத்தினில் தோன்றிய அருமறைச் செல்வரே! என்னை ஒருபொருளாய் நினைந்து தோத்திரம் செய்கின்றீர். உமது வேண்டுகோள் நிறைவேற இந்த பதினொரு கவியையும் படனம் செய்துகொள்ளும்"

என்று சொல்லி, மாதவனென்னும் வேதியன் கரத்தில் கொடுத்தார். அவன் அதை வாங்கிக்கொண்டு தன் வீட்டிற்குவந்து தனது ஆச்சாரியனுய் துக்காராம்சுவாமிகளை நினைந்து தேங்காயையுடைத்து, ஆசாரியனை தியானித்து, அதில் உள்ளவற்றைப் பூராவும் சாப்பிட்டு பதினொரு கவியையும் ஒரு தடவை படிக்கவே பாடமாயிற்று. இதுகண்டு மகிழ்வடைந்து அன்று தன் தந்தை பிரசங்கம்செய்யும், சிவாஜி மகாராஜன் சபைக்குச் செல்ல, ஆங்கு பல பண்டிதர்கள் கூடி தன் தந்தையான முகுந்த சாஸ்திரியைப் பல கேள்விகள் கேட்டு பங்கப்படும்படி செய்யவேண்டுமென்று நினைத்து சபையில் வந்திருந்தனர். முகுந்த சாஸ்திரி பிரசங்கம் செய்துவரும்பொழுது ஒவ்வொருவரும் தனித்தனியே ஒவ்வொரு கேள்விகேட்க முகுந்தசாஸ்திரி சில கேள்விகளுக்கு சமாதானம் சொல்ல முடியாமல் திகைக்கும்பொழுது, தன் தந்தைக்கு அவமானம் வந்துவிடுமென்பதைத்தெரிந்த மாதவன் எழுந்துநின்று அங்குகூடியபண்டிதர்களைப்பார்த்து, "நீங்கள் கேட்ட கேள்விகளுக்கு சமாதானம் நான் சொல்லுகிறேன். நீங்கள் கேட்கும் கேள்விகளே தர்க்க நியாயப்படி கேள்விகளாகா. அந்தகேள்விகள் இந்த மாதிரியாயிருக்கவேண்டும். ஆயினும், நீங்கள் கேட்ட கேள்விகளுக்கு சமாதானம் நான் சொல்லுகிறேன்" என்று பண்டிதர்கள் யாவரும் திகைக்க, இவர்கள் பார்த்தும் கேட்டுமிராத நூல்களிலிருக்கும் ஆதாரங்களையெடுத்துக்காட்டி, பிரசங்கமாரி பொழிந்தனர்.

இதுகண்ட பண்டிதர் யாவரும் திகைத்து, நேற்றுவரை அரி என்னும் அக்ஷரம் கூட தெரியாதிருந்த இவனுக்கு இன்று இந்த பிரசங்கவன்மையும் பாண்டித்தியமும் எப்படி வந்ததென்று நினைந்தனர். தன் புத்திரன் மந்தமதியாயிருப்பதை நினைக்கும்பொழுதெல்லாம் துயரக்கடலில் ஆழ்ந்திருந்தும் முகுந்தசாஸ்திரி தன் மைந்தன் பேசிய சொல்வன்மையும் பொருள் செறிவும் கண்டு, அருமகிழ்ச்சியடைந்து பரவசமானர். சிவாஜி தன் மன்னன் மந்தமதியனுயிருந்த முகுந்த சாஸ்திரியின் மைந்தனை மாதவன், பிரசங்க மழை பொழிந்தது கண்டு, இச்செயல் உனக்கு எப்படி வந்ததென்றுகேட்க, "என் ஆசாரியனுய் தேவநகரத்தில் எழுந்தருளியிருக்கும் துக்காராம் சுவாமிகளின் அநுக்கிரகம்" என்று சொன்னன். சிவாஜி மன்னனுக்கு எப்பொழுதும் துக்காராம் சுவாமிகளிடம் அளவுகடந்த பக்தி உண்டாதலால், அவர் பெரும்புகழைக்கேட்டு மகிழ்ந்தனர். இந்த முகுந்த சாஸ்திரியை அவமானப்படும்படிசெய்யவேண்டுமென்று வந்த பண்டிதர்களுள் இஞ்சிவாடி வேதியரான கணபதி சாஸ்திரியும் ஒருவராய் அங்குபலவேதியருடன் வந்திருந்ததால், முன்னே தன்னுடைய கிரகத்தில் விநாயகரையும் பண்டரிநாதனையும் தங்க

ளுடன் சமபந்தியில் உட்கார்ந்து போஜனம் செய்யும்படி செய்தவரான துக்காராம் சுவாமிகளின் பிரபாவத்தைக்கேட்டு அருமகிழ்ச்சியடைந்து, தன்னுடன் வந்த வேதியரொருவரைப்பார்த்து, "நீர்தேவநகரத்திற்குப்போய் துக்காராம் சுவாமிகளை நமது ஊருக்கு எழுந்தருளப்பண்ணிவருவீர்" என்று அனுப்பிவிட்டு இஞ்சவாடிக்கு வந்துசேர்ந்தார்.

துக்காராம் சுவாமிகள் தேவநகரத்தில் பண்டரிநாதனை ருக்மணி பிராட்டியுடன் சேவித்து அவருடைய கடாக்ஷத்தால் தனக்கு வந்த வாதரோயும் குணமடைந்து முன்னைப்போல் பஜனைசெய்ய ஆரம்பித்தார். தேவநகரத்தில் உள்ளவரெல்லோரும் துக்காராம் பக்தியில் ஈடுபட்டு பஜனையில் கலந்து தன்னை மறந்தனர். இந்த சமயம் இஞ்சவாடியிலிருந்து கணபதி சாஸ்திரியால் அனுப்பப்பட்ட வேதியர், துக்காராம் சுவாமிகளை அழைக்கவந்ததை மறந்து பஜனையில் மயங்கி, தேவநகரத்திலேயே யிருந்துவிட்டார். கணபதி சாஸ்திரி இஞ்சவாடியில் துக்காராம் சுவாமிகளை அழைக்கச்சென்ற வேதியர் அவரை அழைத்து வராததுகண்டு, பின்னும் ஒரு வேதியரை அனுப்ப, அவரும் அவ்வாறே பஜனை கேட்டு மகிழ்ந்திருந்தனர். பின்னும் ஒருவர் வந்து பஜனைகேட்டு இஞ்சவாடியைமறந்தனர். மூன்று வேதியர்கள் இஞ்சவாடிக்கு துக்காராம் சுவாமிகளை அழைக்கவந்தும், ஒருவரும் திரும்பி வராததுகண்ட கணபதி சாஸ்திரி அந்த ஊரிலுள்ள வேதியர் யாவரையும் அழைத்து "நாம் துக்காராம் சுவாமிகளை அழைத்துவர மூன்றுவேதியரை அனுப்பினேம். தேவநகரம் சென்றவர்களெல்லாம் திரும்பி வராது அவருடைய பஜனையில் மயங்கிக் கிடக்கின்றனர். ஆதலால், நாமெல்லோரும் திரண்டு சென்று, துக்காராம் சுவாமிகளை அழைத்துவரவேண்டும் என்று சொல்லி, அவ்வூர் வேதியர் யாவரும் தன்னை சூழ்ந்துவர, தேவநகரைநோக்கி வந்துகொண்டிருந்தார். தன்னை நாடி வேதியர்கள் அழைக்க வந்ததையறிந்த துக்காராம் சுவாமிகள், அவர்கள் நம்மிடம் வருவதற்குமுன் நாமே அவர்களை யெதிர்சென்று காண்போமென்று கொண்டிருந்தார். துக்காராம் சுவாமிகளை அழைக்க வரும் வேதியர்கள் தங்கள் முன்னே எழுந்தருளும் துக்காராம் சுவாமிகளைக் கண்டு அருமகிழ்வெய்த துக்காராம் வேதியர்களின் பாதத்தில் சாஷ்டாங்கமாக விழுந்து சேவித்தார். கணபதி சாஸ்திரியாருடன் வந்த வேதியர்கள் தம்மை வணங்கிய துக்காராம் சுவாமிகளை கரங்குவித்துப் பணிந்து, பாகவத சிகாமணிகளே! உமது நாமசங்கீர்த்தனம் என்னும் வருஷத்தால் எங்களிடம் குடிகொண்டிருக்கும் அஞ்ஞானமென்னும் தாபத்தைமாற்றி, ஞானமென்னும் பயிரை ஓங்கிவளரும்படி செய்யக்கடவீர். புண்டரீகரக்ஷகனை பாண்டுரங்கனது கருணை

பிரவாகத்திற்குரிய ஞானவாரிதியே! நாங்கள் செய்ததவமே இங்கு உம்மைச் சேவிக்கநேர்ந்தது" என்று புகழ்ந்து, சுவாமி! எங்களுக்கு ஒரு சந்தேக மிருக்கிறது. அதனைத் தீர்த்தருளவேண்டும். நீர் செய்யும் அற்புத செயல்களை நோக்கும்பொழுதும் நினைக்கும்பொழுதும் அமாநுஷ்யகரமா யிருக்கிறது. நீர் மானிடராகக்காணப்படினும், எங்களறிவில் உம்மை மானிடரென்று மதிக்கமுடியவில்லை. நீர் மூன்றுகாலங்களையும் அறியவல்லவராதலால், உமது அவதார விசேஷத்தை நீர் அறிந்திருப்பீர். ஆதலால் அதை எமக்குச் சொல்லவேண்டும் என்று பிரார்த்தித்தார்.

துக்காராம் சுவாமிகள் வேதியர்சொன்னதைக்கேட்டு, வினயமாய், "சுவாமிகள்! காமம் வெகுளிமயக்க மென்னும் முப்புரிகயிற்ருல் கட்டுண்டுவருந்துமிந்த அறிவிலியை யிப்படி வாயாரப்புகழப்போமோ" என்று சொல்லி ஒரு கத்தியையெடுத்து தனது துடையைக்கீறி, அதிலுள்ள பாகத்தை வேதியர் காணக்காட்டினர். வேதியர் பார்த்தபொழுது, இரத்த மாமிசம் ஒன்றுமில்லாது மிகவும் பரிசுத்தமான வெண்மைநிறமாய் இருக்கக்கண்டு, ஆச்சரியத்தையடைந்து, "சுவாமி! நீர் துடையை யறுக்கும்பொழுது ஒருதிவலை இரத்தம் சிந்தாதுகண்டு திகைத்தோம். அறுத்தபின் உற்று நோக்க பார்ப்பதற்கே மனோக்கியமுடையதாய்க் கண்ணொளிகூசுமாறு சுத்தவெண்மை நிறமுடையதாய் இருக்கிறதே" என்று கொண்டாடிப்பணிந்தனர். துக்காராம் சுவாமிகள் அவரைப்பார்த்து, நீங்கள் என்னைப்பணிவது நீதியாமோ? வேதசாரத்தையறிந்து சர்வேஸ்வரனை சதாபரவும் வேதியராயிற்றே? என்றுசொல்ல, கணபதிசாஸ்திரி, "சர்வேஸ்வரன்வேறு நீவேறு என்று எங்களுக்கு தோன்றுமையால், நாங்கள் உம்மைவணங்கும் வணக்கமே பாண்டுரங்கனை வணங்கும் வணக்கமாகக்கொண்டிருக்கிறோம். நீர் எழுந்தருளியிருக்கும் இடமே பாண்டுரங்கன் சன்னதியென்று எங்கள் நினைப்பு. ஆதலினல், தேவரீர் எழுந்தருளி எங்களுடைய அஞ்ஞானத்தை யொழித்து பண்டரிநாதருடைய சரணாரவிந்தத்திற்கு இலக்காக்க வேண்டுமென்று பிரார்த்தித்தார்.

இவ்வாறு பிரார்த்தனைசெய்யும்பொழுது லோகநகரத்திலுள்ளவர்கள் யாவரும் தாம் ஒரு பஜனைமடம் புதிதாகக்கட்டி அதில் பாண்டுரங்கன் திருவுருவப்படத்தையெழுந்தருளச்செய்யவேண்டுமென்று துக்காராம் சுவாமிகளை அழைத்துப்போக தேவநகரத்திற்கு பஜனைகோஷ்டிகளுடன் வந்துகொண்டிருப்பவர் இடைவழியில் கிஞ்சவாடி மறையவருடன் அளவளாவிக்கொண்டிருக்கிற துக்காராம் சுவாமிகளைக் கண்டதும், அவர் திருவடிகளில் சாஷ்டாங்கமாக வீழ்ந்து தண்டப் சமர்ப்பித்து தாங்கள் வந்தகாரியத்

தைத்தெரிவித்துக்கொள்ள கிஞ்சவாடிவேதியரும் தம்மூருக்கு துக்காராம் சுவாமிகளை அழைத்து செல்லும் மனமுடையவராய் வந்தாரெனினும் லோகநகரவாசிகள் திருமடங்கட்டி பகவானை எழுந்தருளப் பண்ணுவதற்கு துக்காராம் சுவாமிகள் எழுந்தருளுவதே தக்கதென்று நினைந்து, "சுவாமி! இது முக்கியமான சம்பவமாதலால், தேவரீர் லோகநகரத்திற்கெழுந்தருளி பண்டரிநாதனைப் பிரதிஷ்டை செய்து எம்மூருக்கு எழுந்தருளுக" என்று பிரார்த்தித்தார்கள். துக்காராம் சுவாமிகளும் லோக நகரவாசிகளுடன் சென்று புதிதாய்க்கட்டிய திருமடத்தில் பண்டரிநாதனை பிரதிஷ்டைசெய்துவைத்து கோஷ்டிகளுடன் பஜனைசெய்ய ஆரம்பித்தார். லோகநகரத்தவர்களெல்லோரும் துக்காராம் சுவாமியின் பஜனையில் ஈடுபட்டு பண்டரிநாதனிடம் பக்தி ஏற்படத் தன்னை மறந்து பாடி ஆடிக்கொண்டிருந்தனர்.

இப்படி யிருக்கும்பொழுது, பண்டரிபுரத்தில் வசிப்பவனுன வித்வானொருவன், லோகநகரத்திற்கு வந்து தனது பிரசங்க வன்மையால் ஏதாவது சம்பாதித்துத் தன் மைந்தனுக்கு கலியாணம் செய்யலாமென்று கருதிவந்தார். அந்த மறையவர் லோகநகரம் வந்ததும், அங்கே துக்காராம் சுவாமியின் பஜனை நடந்துகொண்டிருக்கிறதென்று தெரிந்ததும், பண்டிதர் துக்காராம் சுவாமிகள் இங்கு எழுந்தருளி பஜனை பண்ணுவதாயின், நமது பிரசங்கத்தை இந்த ஊரில் யாரும் கேட்கமாட்டார்கள். ஆதலால், வேறொரு ஊருக்குப்போவோம் என்றுபுறப்பட, இதையறிந்த துக்காராம் சுவாமிகள் விரைவாகவந்து வேதியரை மறித்துக்கொண்டு, "நீங்கள் இந்த ஊருக்கு வந்துவிட்டு ஒரு நாள்கூட தாமதியாது வேறொரு ஊரைத்தேடிச்செல்ல என்ன நேர்ந்ததென்று கேட்க, பண்டிதர் துக்காராம் சுவாமிகளைப் பார்த்து, "நான் கொஞ்சம் வாசித்தவன். எனக்கு உறைவிடம் பண்டரிபுரம். மிக்க ஏழை. ஒரு மைந்தனிருக்கிறன். அவனுக்குக் கலியாணம் செய்துவைக்க வேண்டும். ஆதலால், எனக்குத் தெரிந்த விஷயங்களை இவ்வூராருக்கு பிரசங்கம் செய்து அதில்வரும் பொருளால் என் மைந்தனுக்குக் கலியாணம் செய்து வைக்கக்கருதிவந்தேன். வந்ததும் நீர் இங்கெழுந்தருளி பஜனை பண்ணுகிறீரென்று கேட்டதும் என்பிரசங்கம் இந்த ஊரிலுள்ள ஒருவர் காதிலும் ஏருதென்று நினைத்து வேறு ஊரை நாடி செல்லத் துணிந்து போகின்றேன்" என்றார். இவ் வார்த்தையைக் கேட்ட துக்காராம் சுவாமிகள் அவரை அழைத்துவந்து அன்று பஜனைக்கு வந்திருக்கும் யாவரையும் பார்த்து, "இந்த மகாநுபாவர், பண்டரிபுரத்திலிருந்து எழுந்தருளி யிருக்கிறார். இவரை நாம் திருப்தி செய்துவைத்தால், சாக்ஷாத் பண்டரிநாதனை திருப்தி செய்ததாகும். இவர் தனது குழந்தைக்கு கலியாணம் செய்ய

வேண்டுமென்று கருதி, அதற்காக திரவிய சகாயத்தை நாடி இந்த ஊருக்கு எழுந்தருளியிருக்கிறார். ஆதலால், இந்த முதல் வகுப்புள்ளவர்கள் மூன்று பணமும், இரண்டாம் வகுப்பைச் சார்ந்தவர்கள் இரண்டு பணமும், மூன்றாம் வகுப்பைச் சார்ந்தவர்கள் ஒரு பணமுமாக வரிவைத்து இவருக்குக் கொடுத்தால் சிரமமின்றி தன் மைந்தனுடைய கலியாணத்தை நடத்திக் கொள்ளுவர்” எனத் தெரிவித்தார். அவ்வூராரனைவரும் அந்த வார்த்தையைக் கேட்டு மகிழ்ச்சி யடைந்து, சுவாமிகள் தெரிவித்தபடி, மூன்று வகுப்பாக ஊரிலுள்ளவர்களைக் கணக்கெழுதி, மூன்று பணமென்று சொன்னதை மூன்று ரூபாய் இரண்டு ரூபாய் ஒரு ரூபாய் பதிவுசெய்து அக்கணமே துக்காராம் சுவாமிகள் முன்னே முடிப்புகட்டி வைத்தனர். துக்காராம் சுவாமிகள், இதில் யாவருடைய பணமும் சேர்ந்துவிட்டதாவென்று கேட்க, இந்த ஊரில் வர்த்தகம் செய்யும் நாஸ்திகனான சுரேந்திரனென்பவனுடைய பணம் மாத்திரம் சேரவில்லை. மற்றையோர் பணமெல்லாம் சேர்ந்துவிட்டதென்று தெரிவிக்க, துக்காராம் சுவாமிகள் அவன் காசு சேராமலிருக்கப்படாது. ஆதலால், நான் சொன்னேனென்று அவனிடம் சொல்லி ஏதாவது வாங்கிவந்து இதில் சேருங்களென்று சொன்னார்.

துக்காராம் சுவாமிகள் கூறிய வார்த்தையைக் கேட்ட அவ்வூர் நாட்டாண்மைக்காரர் தன்னுடன் அநேகம் பேர்களை கூட்டிக்கொண்டு சுரேந்திரன் என்னும் பெயருடைய வர்த்தகன் வீட்டுக்குச்சென்று இந்த ஊரிலுள்ளவர்களெல்லோரும் கொடுத்த வரியைத் தாம்மாத்திரம் கொடாமலிருப்பது நீதியல்ல. ‘ஊரோடொத்துவாழ்’ என்னும் பழமொழியைப் பார்க்கவேண்டும். இந்த ஊரில் நீர் வியாபாரம் செய்வதில் மிகத் தேர்ச்சியுடையராய் ஏராளமான பொருள் சம்பாதித்திருக்கிறீர்; நீர் முதல் வகுப்பில் சேர்க்கப்படுவதால், உமக்குரிய மூன்று ரூபாயைக் கொடுத்தால் நல்லது. இல்லையேல், உமது சக்தியானுசாரம் ஏதாவது கொடும். துக்காராம் சுவாமிகளும்கூட தம்மிடம் ஏதாவது வாங்கிவரும்படி எங்களை அனுப்பியிருக்கிறார் என்று சொல்ல, அந்த வார்த்தையைக் கேட்ட வர்த்தகன் தன்னிடம் காசு கேட்கவந்த காரணத்தால் மிகுந்த கோபத்தையடைந்து நாட்டாண்மைக்காரரைப் பார்த்து, ஐயா! நான் தர்மவிஷயங்களில் தம்படியேனும் சிலவு செய்வதில்லை என்பது உமக்குத் தெரிந்திருந்தும் என்னிடம் வரி கேட்க வந்தீரே? அந்த சாமியார் துக்காராம் என்பவர் வலையில் சிக்கிக்கொண்டு உங்கள் நிலங்களையும் பாராது வீட்டுக்காரியத்தையும் மறந்து, இரவெல்லாம் கண்விழித்து வியாதியாகிய பொருளைத் தேடிக்கொண்டு வருந்துகின்ற உங்கள் கூட்டத்தில் சேர்ந்திருந்தால் நீங்கள் என்னிடம் வருவது நியாயமாகும். ஊரி

லிருப்பவரை ஓட்டாண்டியாக்குவதற்கு ஒரு சாமியார் இங்குவந்து சேர்ந்தான். அவன் எப்பொழுது இந்த ஊரைவிட்டுத் தொலைகின்றானோ அப்பொழுதுதான் இந்த ஊருக்கு க்ஷேமம் பிறக்கப் போகின்றது. அந்தோ! அவன் எங்கே தொலையப் போகின்றான்? இந்த ஊரிலுள்ளவர்கள் யாவரும் தன்னைப்போல் சாமியாரானபின்னன்றோ தொலைவான் என்று பரமசாதுவான துக்காராம்சுவாமிகளையும் நிந்தித்து, அவன் மயக்கில் நீங்கள் ஏமார்ந்ததுபோல நான் ஏமாரமாட்டேன். நீங்களாக ஏதாவதுகேட்டாலும் கொடுப்பேன். இந்த ஊருக்கே சத்துருவாக முளைத்த அந்த ஆட்டக்காரன் என்னிடம் உங்களை யனுப்பியதால் நான் அரைக்காசும் கொடேன்” என்றான்.

சுரேந்திரனான வர்த்தகன் இவ்வாறு சொல்ல, வீட்டினுள்ளிருந்து கேட்டவளான இவன் மனைவி பெரிதும் வருந்தி, தன் கணவனிடம் வந்து, “நாதா! உம்மிடம் யாராவதுவந்து ஏதாகிலும் கொடு என்று கேட்டால் விசேஷமாகக் கொடுக்க மனமில்லாமல் போனாலும் ஏதாவது கிஞ்சித்து கொடுத்தனுப்பப்படாதா? அப்படி அதுவும் கொடுக்க மனமில்லாவிட்டாலும், இனிய வார்த்தையாவது சொல்லப்படாதா? பரமசாந்தராயிருக்கும் துக்காராம் சுவாமிகளைப் பழித்து நரகத்திற்கு ஆட்படுகின்றீரே” எனச் சொல்ல, சுரேந்திரன் தன் மனைவியின் சொல்லைக் கேட்டு, “இந்த ஊரிலுள்ளவர்களின் பயித்தியம் உன்னையும் பிடித்துவிட்டது போலிருக்கிறதே? என் கையால் யாசகம் என்று ஒரு தம்படியேனும் கொடுக்கமாட்டேன். உனக்கு அந்த சாமியார் பக்தியிருப்பதினால் உன்னுடைய பிடிவாதத்திற்கு இடந்தரப்படாது. உன்னிடமிருக்கும் ஓட்டைச்செம்பை வேணுமென்றால் கொடு” என்று சொல்ல, அந்த வனிதை தன் நாயகனுக்கு இந்தமட்டாவது தயவுவந்ததே யென்று நினைத்து விரைவாய்ச் சென்று ஒரு ஓட்டை செம்பைக் கொணர்ந்து இந்த செம்பை சொர்ணமாகப் பாவித்துக்கொண்டிருக்கும்படி அவர்கள் கையிலே கொடுத்து, துக்காராம் சுவாமிகளிருக்கும் திக்கை நோக்கி தண்டம் சமர்ப்பித்து “சுவாமி! அடியாள் கொடுத்த ஓட்டைச்செம்பை பொன் செம்பாய்ப்பாவித்து ஏற்றுக்கொள்ளுமாறு உமது திருவடிகளுக்கு தண்டம் சமர்ப்பிக்கிறேன்” என அவரை வேண்டிக் கொண்டாள். அந்த நாட்டாண்மைக்காரன் அந்த செம்பை பெற்றுக்கொண்டு துக்காராம் சுவாமியின் கையில் கொடுத்து “இதுவே வர்த்தகன் தந்தது” என்றான்.

அந்த செம்பு துக்காராம் சுவாமிகளின் கையில் பட்டதும் பத்தரைமாற்று பசும்பொன்னாயிற்று. அதை யாவருக்கும்காட்டி ஜவுளிவர்த்தகனை சுரேந்திரன் உலோபி என்றும், அவன் சாதுக்களைப் பழிப்பவனென்றும் சொன்னீர்களே? மிக்க விலை

யுடைய தங்கச்செம்பன்றே அவர் கொடுத்திருக்கிறன்? தெரிகிறதா? என்றுசொல்ல, நாட்டாண்மைக்காரன் துக்காராம்சுவாமிகளிடம், தாங்கள் வர்த்தகனிடம் சென்றதுமுதல், அவன்மனைவி தன் கையில் ஒட்டைச் செம்பைக் கொடுத்து, துக்காராம் சுவாமிகள் கையில் கொடுத்து இதைத் தங்க செம்பாகப் பாவிக்கும்படி வேண்டினு ளென்பதுவரை சொல்லி முடித்தார். அங்கு கூடியவரெல்லாம் துக்காராம் சுவாமிகள் பித்தளை ஒட்டைச் செம்பை ஸ்பரிசித்த மாத்திரத்தில் தங்கச் செம்பாகிய தன்மையைக்கண்டு வியந்தார்கள். சுவாமிகள் பண்டரிபுரத்திலிருந்துவந்த வித்வான் விப்பிரருக்கு சந்தன புஷ்ப தாம்பூலம் அளித்து, அவ்வூரார் கொடுத்த பணப்பையையும் தங்கச்செம்பையும் கொடுத்து, அவரையும் சேவித்து, பாண்டுரங்கனது சன்னதியான பண்டரிபுரத்தில் நித்திய வாசம்பண்ணும் சாதுவே! இந்த நகரவாசிகளுக்கு பண்டரிநாதன் கிருபைவருமாறு பாண்டுரங்கனிடம் விண்ணப்பம் பண்ணுமென்று சொல்லி அனுப்பிவிட்டு, அவ்வூரிலே சிறிது நாள் பஜனை செய்துக் கொண்டிருந்து தேவநகரத்திற்கு எழுந்தருளினர். இவர் செய்துவந்த தோத்திரப்பாக்கள் பக்திரஸபுஞ்சமாய் இருப்பதுகண்டு சில வேதியர்கள் அந்தப் பாசுரங்களை நன்றாய் கவனித்துப்பார்த்து இது பக்திமார்க்கத்தையே தழுவினதாய் கர்மயோகங்களை முற்றத் துறந்ததாய் இருக்கின்றது. இது வேத வழக்கத்திற்கும் இதிகாசபுராணங்களுக்கும் மாறுதலடைந்திருக்கின்றது. ஆதலால் இந்தக் கிரந்தத்தின் பெருமையை அழித்துவிட வேண்டும். இவையிருந்தால் கர்மமே நசித்துப் போய்விடும் என்று நினைத்து அவைகளை ஒருகட்டாகக் கட்டி தண்ணீர் நிறைந்த குளத்தில் போட்டுவிட்டு துக்காராம் சுவாமிகளிடம் வந்து, "நீர் எழுதிய பாசுரங்கள் வேதவிதிக்கு மாறுதலுடையது என்று கருதி ஜலத்தில் போட்டுவிட்டோம்" அது பதினைந்து தினம் நனையாமலிருக்குமாகில் நாம் அதை ஒப்புக்கொள்வோம் என்று சொல்லி அகன்றனர். துக்காராம் சுவாமிகள் வேதியர் வார்த்தையைக் கேட்டு நடுக்கமுற்று தன் தந்தையாகிய பண்டரிநாதனைத் தியானித்து, ஏ! பாண்டுரங்கா! உனது அருளால் நீயே பாடிய பாசுரங்களுக்கு அழிவெனின் அது உனக்குக் குற்றமன்றி வேறென்ன இருக்கிறது? நாமதேவர் பாடாது விடுத்தனவற்றை நீயே என்னுள் கலந்து பாடியருளினை என்று பிரார்த்திக்க, பாண்டுரங்கன் குழந்தை வடிவாய் வந்து துக்காராம் சுவாமிகளைப்பார்த்து "உமது பாசுரங்களுக்கு அழிவு வருமோ? நீர் அஞ்சாதீர். நானே காக்கின்றேன்" என்று பதினைந்து நாளும் அந்தச் சுவடியில் ஒன்றேனும் தண்ணீரால் நனைந்து அழுந்தாதபடி காத்து அருளினர்.

பதினைந்துநாள் சென்றதும், வேதியர் கூடி சுவடி இதற்குள் அழுந்தியிருக்கும் என்று நினைத்து குளத்தில் சென்று

பார்க்க, அது நனையாது மிதந்துகொண்டு இருப்பதைக்கண்டு திகிலடைந்து அந்தச் சுவடிக்கட்டை தூக்கிவந்து துக்காராம் சுவாமியின் முன்வைத்து சுவாமி! உமது பெருமை தெரிந்துக் கொள்ளாமல் நாங்களே வேதம் இதிகாசம் புராணங்களைக் கற்றுக்கொண்டவர் என்றும், நித்திய வழிப்படி கர்மானுஷ்டானங்கள் தவறாமல் செய்பவர்கள் என்றும் கர்வமுற்று, உமது திருவடிகளில் அபசாரப்பட்டோம், க்ஷமித்தருளவேண்டும் என்று பிரார்த்தித்தார்கள்.

துக்காராம் சுவாமிகள் அவர்களைப் பார்த்து பாண்டுரங்கனது பாததாமரைகளுக்கு அடியவரை ஆட்படுத்தும் ஆரியர்களே! "நீங்கள் அடியேனை உண்மை வைஷ்ணவ தர்மத்திலிருந்து மாறுபடாமல் இருக்கும்படி அநுக்கிரகம் செய்யுங்கள்" என்று பணிந்தார்.

வேதியரும் ஆசிகூறி அகன்றனர். நாமதேவரே துக்காராம் சுவாமிகளாக திருவவதரித்துத் தான் விட்ட பாசுரங்களைப்பாடி அருளினர். ஆதலால் தான் வந்தகாரியம் முடிந்ததும், பரமபதம் சாரவேண்டி அந்த ஊரிலுள்ள பண்டரிநாதன் சன்னதிக்கு எழுந்தருளி பாண்டுரங்கனைத் தோத்திரம்பண்ணி, அவரைத் தனது கைகளால் தழுவியபடியே அவர் திருமேனியில் கலந்து பரமபதத்திற்கு எழுந்தருளினர். இன்னும் அவருடைய மகிமையைக் கொண்டாடி ஸ்தோத்திரம் செய்பவர்களுக்கெல்லாம் சொப்பனத்தில் எழுந்தருளவேண்டியன இஷ்டபூர்த்திகளை செய்துக் கொண்டு இருக்கின்றார்கள்.

வாழி விருத்தம்

சீர்மருவும் கன்னடத்தலைவர்கள் வாழி ஸ்ரீவைஷ்ணவ கோஷ்டிகளும் சிறந்து வாழி
போமருளும் துக்காராம் அசர் வாழி பேசுபுகழ் சத்குருவைதிகமும் வாழி
நாமேவும் கவிராசர் கோஷ்டி வாழி தரணியில் பாகவதரென்னும் வாழி
பாபுகழும் பக்தர்களெல்லோரும் வாழி பரமபத நாதனடியார்கள் வாழி.

துக்காராம் சுவாமிகள் சரித்திரம்

முற்றிற்று.

ஸ்ரீ

ஸ்ரீபாண்டுரங்காய நமஃ

ஸ்ரீதரதாசர் சரித்திரம்

ஆழ்வார் திருநகரி

சிங்கம். ஸ்ரீனிவாச அய்யங்கார் எழுதியது.

துதி கவி

மாதவன் தனைவந் துவணங்கிட
நீதகன் றநெறிலையோடெருங்கால்
பாதகம்செய்கள்வர்தலைபற்றிட
ஏதமின்றியெழுந்தவர்போற்றுவாம்.

திருமடந்தையின் முகமோ கண்களோ என்று கூறும் கோசல நாட்டினில் அயோத்தி என்னும் நகரமானது சர்வேஸ்வரன் தசரதகுமாரனாய்த் திருவவதரித்து அரசாண்ட தனிநகரம். அந்த நகரத்தினில் கல்வி, அறிவு, ஒழுக்கங்களில் மிக்கவராய் வேதியர்களுக்குரிய கர்மானுஷ்டானங்கள் ஒன்றினும் குறைபாடற்றவராய் சாது சங்கத்திலும் வேதாந்த விசாரணையிலும் மனம் வைத்தவராய் சதா ஸ்ரீராமச்சந்திரனையே தியானிப்பவராய்த் தன்னை நாடிவந்த அதிதிகளை ஆதரிப்பதில் மிக்க சந்தோஷமுடையவராய் அளவிடற்கரிய செல்வந்தராய் ஸ்ரீதரர் என்னும் திருநாமம் அமைந்த வேதியர் ஒருவர் இருந்தார். அவருடைய கனங்களுக்கும் தர்மசிந்தனைக்கும் ஏற்றவளாய் இல்லறதர்மத்திற்கு இற்றுணையாய்க் கணவனையன்றி கடவுள் இல்லையென்று கருதி கணவனுடைய க்ஷேமத்தைக்கோரி அநேக நோன்பு விரதங்களை ஆதரித்துச் செய்துகொண்டு நாயக சிசுருஷையே கடவுள் பூஜையென்றும், நாயகன் சொல் கடவாமையே ஜனன நோக்கு மருத்தென்று கருதி வாழ்பவள். இவள் பெயரும் மைதலியா என்று கூறுவர். ஸ்ரீதரர் மைதலியினுடைய கற்பிலக்கணங்களை முழுதும் கண்டு மனம் பூரித்து எனது இல்லறவாழ்வுபோல யாவருக்கும் அமையாது என்று மனமகிழ்ந்து அறந்தார்பேணல் விருந்தாராய்தல் ஆச்சிரமிகளுக்கு உண்டி உடையளித்தல் முதலிய சத்கருமங்களைச் செய்துக்கொண்டு பரமானந்த பரிதராய் பகவதாராதனத்தையும் குறைவின்றி நடத்தி வரும்பொழுது, அநேக திவ்யதேசங்கள்தோறும் யாத்திரை சென்று சேவை செய்து வரவேண்டும் என்று தன் உள்ளத்தில் நினைத்து தனது மனைவியான மைதலியாளை நோக்கி, "பெண்ணாரமுதமே! பெறுதற்கரிய மானிட சரீரத்தை அடைந்ததின் பயன் பலவிடங்களிலும் தேசாடனம்பண்ணி அங்காங்குள்ள ஜனங்களின் பழக்க வழக்கங்களைத் தெரிவது ஒன்று; புண்ணிய தீர்த்தங்களில் தீர்த்தமாடி நம்பாவங்களைப் போக்கிக் கொள்ளுவது ஒன்று; திவ்விய

தேசங்கள்தோறும் சென்று பகவானைச் சேவைபண்ணிப் பிறவிப் பிணியைத் தீர்ப்பது ஒன்று; அநேக சாதுக்களையும் ஆசாரிய பீடங்களையும் சேவைசெய்து உபதேசம் பெறுவது ஒன்று; கிணற்றுத் தவளைபோல் தான் பிறந்த ஊரிலிருந்து உலகவிஷயங்கள் ஒன்றும் தெரியாது மாளுது. அநேக நகரங்களின் நாகரீகங்களும் கைத்தொழில் சாலைகள் தர்மஸ்தாபனங்கள் முதலியன யாவும் கண்டறிவது ஒன்று; முதலிய அநேக நன்மைகளை தேசயாத்திரை செய்வதினாலேயே அடையலாம், பெண்ணே! சர்வேஸ்வரனான ராமச்சந்திரன் நம்மிடம் ஏராளமான செல்வத்தைக் கொடுத்திருக்கிறார். இந்தச் செல்வத்தைத் திவ்விய தேசங்கள்தோறும் யாத்திரைசெய்து பகவத் கைங்கரியமாகச் செலவு செய்து பகவானுடைய கருணைக்கிலக்காய் வைகுந்தபதவியைப் பெறவேண்டுமென்று எண்ணுகின்றேன். உனது கருத்து யாதோ?" என்று கூறினன். இந்த வார்த்தைகளைக் கேட்ட மைதலியாய் தனது கணவனை நோக்கி, "நாதா! திவ்வியதேசங்கள் தோறும் சென்று வணங்கும் சர்வேஸ்வரன் எனக்கு நீரேயன்றி வேறில்லை. நான் காணும் அபூர்வமான பொருள்கள் யாவும் உம்மையன்றி எனக்கு வேறில்லை. உம்முடனே சேர்ந்து உமக்குக் கைங்கரியம் செய்வதே எனக்கு மோக்ஷபலன் பெறுதல். உமது சொல்லைக் கடவாமையே சத்கதைகளைச் சிரவணம் செய்த பயனாகும். உமது திருவுள்ளம் திவ்ய தேசயாத்திரையை நாடியதால் அடியாள் அதற்கு அட்டி சொல்வேனே? உம்மைப் பிரிந்து வருந்தாதிருப்பதொன்றே அடியாளுடைய பிரார்த்தனையாகும். நான் நோற்கும் நோன்புகளும் நான் செய்யும் விரதங்களும் உம்மைப் பிரியாமலிருக்கவேண்டுமென்னும் ஒன்றினைக் கருதியதேயாகும். அனுசூயாதேவி சத்தியவானுக்குக் கானகத்தில் துணையாயிருந்ததுபோலவும், நளாயினி மௌத்கலியரென்பவருக்குக் கைங்கரியம் செய்ததுபோலவும் உமது யாத்திரையில் அடியாள் துணையாயிருக்குமாறு அனுக்கிரகம் செய்யவேண்டும் என்று அன்புடனே கூறும் வனிதையின் சொல்லைக் கேட்டு மகிழ்ச்சியடைந்தார் ஸ்ரீதரதாசர். அக்கணமே சோதிஷசாஸ்திர பண்டிதருடைய வீட்டினை நாடிச்சென்று யாத்திரைக்குரிய நாள் வைத்து வீட்டினை நாடி வந்தார்.

ஸ்ரீதரதாசர் யாத்திரைக்கு நாள் வைத்துக்கொண்டு வீட்டிற்கு வந்ததும், யாத்திரைக்கு வேண்டிய சாமான்கள் யாவும் சேகரித்து நல்ல நாழிகையில் வேதியர்களை வரவழைத்து, யாத்திரை செய்வதற்கு வேண்டிய சங்கல்பம் செய்து யாத்திரா தானங்களும் பிராம்மணர்களுக்கு வழங்கி ராமனுடைய சந்நிதிக்குச் சென்று சேவைபண்ணி பிரார்த்தனை செய்துகொண்டு தன் இல்லத்தினை நாடிவந்து இரண்டு குதிரைகளில் சாமான்கள் மணிபணிகள் ஆடையாபரணங்கள் யாவற்றையுமேற்றி வேறிரண்டு

குதிரைகளில் தான் ஒன்றிலும் தன் மனைவி ஒன்றிலுமாய் ஏறி அயோத்திமா நகரத்தை விடுத்து யாத்திரையாகக் கானகவழியாய் வந்துகொண்டிருக்கும்பொழுது இவர்கள் மிகுந்த பொருளோடு யாத்திரை செய்கிறார்களென்று உணர்ந்த கள்வர்கள் தம் தலைவனோடு இவர்களைப் பின்தொடர்ந்து கவரக்கருதிய கள்வர்கள் தம் தலைவனோடு இவர்களைப் பின்தொடர்ந்து வருவதை இவர் மனைவியானவள் கண்டு, அவர்கள் மேல் சந்தேகம் கொண்டு தன் கணவனை நோக்கி, "நாதா! இவர்களைப் பார்த்தால் கள்வர்கள் போலத் தோன்றுகின்றது. அன்னவர் பார்வை மிக்க வஞ்சனையுடையதாய்த் தோற்றுகின்றது. நாம் சற்று தாமதித்திருந்து இவர்கள் போனதும் போகலாமென்றுதோன்றுகிறது" என்றுசொன்னாள்.

இவ்வண்ணம் இவர் மனைவியாகிய மைதலிபாய் கூறவும் இதனைக் கேட்ட ஸ்ரீதரர், "பெண்ணே! ஸ்திரீகளுடனே பெரியோர்கள் யாத்திரை செய்வதற்கு மனம் பொருந்தாத காரணம் யாதோவெனில், ஸ்திரீகள் மட்டு அச்சமென்பதுகுடிகொண்டிருப்பதால்யாரைப்பார்த்தாலும் கள்வரென்று எண்ணிப்பயப்படுவது அன்னோரியற்கையாக விருக்கின்றது. ஆதலால் குளிர்ந்த மாலை நேரத்தில் சந்தோஷமாய் யாத்திரை செய்வதற்கு ஸ்திரீகள் தடையாகின்றனர். நல்லவரைத் தீயவரென்று கருதும் சுபாவமுடைய மகளிர்களை அழைத்துக்கொண்டு யாத்திரை புறப்பட்டால் குறித்த விடத்திற்கு எப்படிப்போவது? நீ ஒன்றிற்கும் அஞ்சாதே. இவர்கள் வழிப்போக்கரேயன்றிக் கள்வர்களல்ல. நமக்குத் துணையாய் உதவிசெய்வதற்குக் கானகத்தினை நாடி வந்து கொண்டிருக்கின்றனர். இவர்களுடைய துணையினால் விரைவாய்க் குறித்தவிடம் போய்ச் சேரலாம்" என்று சொல்லிக் கொண்டிருந்தனர். அப்பொழுது கூட்டக்கள்வர்கள் ஸ்ரீதரரைப் பின்பற்றிவந்து நெருங்கவும், கள்வர் தலைவன் ஸ்ரீதரரை உற்று நோக்கி, "ஐயா! தாங்கள் எங்கிருந்து பிரயாணமாய் வருகின்றீர்கள்? இந்தமார்க்கம் கள்வர் பயமுள்ள இடமாயிற்றே. தனியே வேறு துணையின்றிப்போவது தகாதென்றுதான் உங்களுக்குத் துணையாய் ஈசன் எங்களை அனுப்பினான்போல் தோன்றுகின்றது. இங்கிருந்து மூன்று நாழிகைவழி தூரம் சென்றால் எங்கள்கிராமம் இருக்கின்றது. அங்கேபோனால் தர்மசத்திரத்தில் இரவு தங்கியிருந்து மறுநாள் பொழுது புலர்ந்ததும் யாத்திரையாகப் போகலாம்" என்று கூறினான் இந்தவார்த்தையைக் கேட்ட ஸ்ரீதரர் கள்வர் தலைவனை நோக்கி, "நீங்கள் எங்கிருந்து வருகின்றீர்கள்?" என்று கேட்டனர். அவன் ஸ்ரீதரனைநோக்கி, "நாங்கள் கூலி வேலை செய்து ஜீவிப்பவர்கள் ஆதலால் இதோ தோன்றும் பட்டணத்தில் சென்று வேலை செய்துவிட்டு வீட்டிற்குப் போகிறோம். நீங்களும் வந்தால் உங்களையும் அழைத்துக்கொண்டு போய் சத்திரத்திலில் விடுத்துச் செல்லுகின்றோம்" என்று கூறினர். இத

னைக் கேட்ட ஸ்ரீதரர் தன் மனைவியை நோக்கி, "பெண்ணே! இவர்களைக் கள்வரென்றாயே. அந்தோ! கஷ்டப்பட்டு உடல் முறியப் பாடுபடும் ஏழைகள். இவர்களுக்கு ஏதாவது கொடுப்பதுதான் புண்ணியம்" என்று கூறினர். மைதலிபாய் அவர்களைக் கள்வரென்றே நிச்சயித்துக்கொண்டு தன் கணவனை நோக்கி, வங்காளபாஷையில் "அன்பனே! இவர்கள் கள்வரேயன்றி கூலிவேலை செய்பவரல்லர். இவர்களுடைய பேச்சு முற்றும் வஞ்சனையே கலந்திருக்கின்றது. இவர்கள் நமது பொருளைமாத்திரம் கவருகின்றவர்களாய்த் தோன்றவில்லை. உம்முடனே 'பேசும் இவன் என்னையே பன்முறையும் நோக்குகின்றான். உம்மைக் கொன்றுவிட்டு என்னையும் கைப்பற்றிக்கொள்ளும் எண்ணமுடையவனாக எனக்குத் தோன்றுகின்றது. சந்தேகமான இடங்களிலும் சந்தேகமுள்ள மனிதனையும் ஒழித்துவிடவேண்டும்" என்று பெரியோர்கள் கூறுகின்றார்கள். ஆதலின் இவர்களுடனே சென்றால் நமக்கு ஆபத்து நேரும். நாம் அதோ தெரிகின்ற நகரத்தை நாடித் திரும்பிப்போய் மறுநாள் பொழுது புலர்ந்ததும் யாத்திரையாகச் செல்வோமென்று கூறவும், ஸ்ரீதரர் தனது மனைவி இவரைக் கள்வரென்று கூறுவதைக் கேட்டவளவே, இவள் கூறுவதும் நியாயமே என்று உணர்ந்து கள்வர் தலைவனை நோக்கி, "அப்பா! நாங்கள் உங்களுடனே வருவதற்கு எனது மனைவி சம்மதிக்கவில்லை. ஆதலால் பின்னே வருகின்றோம். நீங்கள் உங்கள் ஊருக்குமுன்னே செல்லுங்கள்" என்று கூறினர்.

அதற்குக் கள்வர் தலைவன் ஸ்ரீதரனை நோக்கி, "சுவாமி! இப்பொழுதே அஸ்தமிக்கும் நேரமாகின்றது. நீங்கள் பின்னே வருவீர்களானால் இந்த மார்க்கம் கள்வர்கள் சஞ்சரிக்குமிடம். ஆதலால் உங்கள் பொருள்களை அபகரித்துக்கொண்டு உங்களையும் கொன்று விடுவர். உங்களுக்குத் துணையாய்க் கடவுள் எங்களை அனுப்பியிருக்கவும், எங்களுடனே பயமின்றி வராமல் கள்வர்களிடம் அகப்பட்டு உயிர்விடத் துணிவது என்ன மதியீனம்! இந்த மார்க்கமாகச் சிறிது தூரம் சென்றால் மரங்கள் அடர்ந்த கானகமொன்று வரும். அதைக் கடந்ததும் எமது ஊர் தோன்றும். இருள் சூழவும் எம் ஊர் சேரலாம்" என்று கூறினான். ஸ்ரீதரர் உண்மையே பேசுவோராதலால் கள்வர் தலைவனை நோக்கி, "உங்கள் வார்த்தையினில் எனக்கும் பூரண நம்பிக்கை வரவில்லை. எனது மனைவியும் உங்களைக் கள்வரென்று எண்ணுகின்றாள். ஆதலால் நாங்கள் அதோ தோன்றும் நகரத்தை நாடிச் செல்லுகின்றோம்" என்று கூறினர். கள்வர்தலைவன் ஸ்ரீதரரைநோக்கி, "ஐயா! எங்களையா நீர் கள்வர் என்று நினைத்தீர். கள்வராயின் இவ்வனத்திலேவந்து அகப்பட்டுக்கொண்ட உங்களை வாளுக்கு இரையாக்கி உங்கள் பொருள்களை முற்றும் கவர்ந்துகொண்டு

ஏகாமல் இத்தனைநேரம் உங்களுடனே பேசிக்கொண்டா வருவார்கள். நீங்கள் வரும்பொழுதே உங்களைச் சுமந்து செல்லும் குதிரைகளையும் கொன்று உங்களையும் வதைசெய்வார்கள் என்பதை உணரவில்லையே. உங்களைச் சௌகரியமாய் அழைத்துச் செல்ல விரும்பிய ஏழைகளாகிய எங்களைக் கள்வரென்றீர். ஸ்ரீராமச்சந்திரன்மேல் ஆணையாய் நாங்கள் கூலிவேலைசெய்து வயிறு பிழைப்பவர்கள்; எங்களிடம் சந்தேகியாது உடனாய் வருவீர்களாயின் இக்கானகத்தைக் கடத்திவிட்டு உங்களையும் எம் ஊருக்கு அழைத்து ஏகுவோம்" என்று கூறினான்.

இப்படி கள்வர்தலைவன் ஆணையிட்டுக் கூறிய வார்த்தையைக் கேட்ட ஸ்ரீதரர் இவன் ராமன்மீது ஆணையிட்டுவிட்டான். ஆகலால் கள்வனல்லன். கூலிவேலை செய்பவன்தான் என்று நினைத்து அக்கள்வர்கள் பின்னே மெல்லெனக் குதிரையை நடத்திக்கொண்டு போகவும், கள்வர்கள் மிக்க ஆனந்தமடைந்து அக்கானகத்தினில் ஓர் வழியாக இவர்களை அழைத்துக்கொண்டு மனிதசஞ்சாரமில்லாத ஓர் கொடுங்கானகத்தினில் செல்லவும், இப்பாவிகள் தம் குலத்தோன்றலான ராகவன்மேல் ஆணையிட்டு ஓர் அந்தணனைக்கொலை செய்யும் கொடுமையைக் காண அஞ்சினவன்போல சூரியன் மேற்றிசையில் மறைந்தான். சூரியன் அஸ்தமித்ததும் இத்தப் பாதகருடைய தீவினைபோல இருளானது எங்கும் பரவிற்று. பகற்காலத்திலும் விருக்ஷங்களின் நெருக்கத்தால் இருள் சூழ்ந்தது போலத் தோன்றும்கொடுங்கானகத்தில் ராத்திரிகாலத்தில் முட்களிலும் செடிகளிலும் நடந்துவருந்தி மரங்களில் முட்டிக்கொண்டு குதிரைகள் நடக்கச்செயலற்று நின்றன. அப்பொழுது ஸ்ரீதரரும் அவர் மனைவியும் பெரும் பயங்கொண்ட நெஞ்சினராய்க் கள்வர் தலைவனை நோக்கி, "அப்பா! குதிரைகள் நடவாமல் நின்றுவிட்டன. உமது ஊர் எவ்வளவு தூரத்திலிருக்கிறது?" என்று கேட்டார்கள். அந்தக் கொடிய வனத்திலுள்ள தன் குடிசையொன்றில் மின்மினிப்போல் எரிந்துகொண்டிருக்கும் விளக்கு வெளிச்சத்தினைக் காட்டி, "அதோ விளக்கெரிகின்றதே. அதுதான் எமது ஊர். நாம் வந்துவிட்டோம். இதுவரையில் கள்வர் பயமில்லாமல் தப்பித்துக் கொண்டோம். குதிரை நடவாது என்றால் நீங்கள் இருவரும் என் பின்னே வாருங்கள். அடே வாசி? சாமுண்டி? நீங்கள் இருவரும் குதிரைகளைப் பிடித்துக்கொண்டு மெள்ள நடந்து வாருங்கள் என்று கூறி, அவ்விருவரையும் குதிரையிலிருந்து இறக்கித் தன்பின்னே ஒருவர் நடக்கும் பாதையாயுள்ள வழியில் ஸ்ரீதரரையும் அவர் மனைவியையும் அழைத்துக்கொண்டு சிறிது தூரம் சென்று தம் குடிசைகளுக்குப் பக்கத்திலுள்ள ஓர் மண்டபத்திற்கு அழைத்து வந்து இதுதான் நான் சொன்ன சத்திரம். இதோ காணப்படுவனவெல்லாம் எங்கள் வீடுகளே. நீங்கள் பிராம்மணர்க

ளாதலால் உங்களுக்கு அனுஷ்டானம் செய்வதற்குரிய குளமிதோ இருக்கின்றது. இந்தக் குளத்தினில் இறங்கி நீங்கள் செய்ய வேண்டிய அனுஷ்டானங்களைச் செய்து ஆகாரம் கொணர்ந்திருந்தால் சாப்பிடுங்கள். உங்கள் குதிரைகளுக்கும் தண்ணீர் காட்டிச் சத்திரத்து தூணில் கட்டி வைக்கின்றோம். நீங்கள் உணவுசெய்து சத்திரத்தின் திண்ணையில் படுத்துத் தூங்கினால் நாங்களும் உங்களைப் பத்திரமாய்க் காத்திருந்து பொழுதுவிடிந்ததும், உங்களை எழுப்பிச் சரியான பாதையில் விட்டுவிட்டுத் திரும்பிச் செல்லுகின்றோம்" என்று கள்வர் தலைவன் கூறினான். அவன் வார்த்தையை மெய்யென நம்பி அவன் காட்டிய குளத்தினில் இறங்கி சந்தியாவந்தனம் முடித்துத் தாம் கொணர்ந்த ரொட்டிகளை உண்டு தண்ணீர் அருந்தி இவர்கள் உத்தமரேயன்றி கள்வரில்லையென்று நம்பி அந்தமண்டபமானது நன்றாய்ப் பெருக்கப் பட்டிருந்ததால் அதில் வந்து குதிரைகள் கட்டப்பட்டிருப்பதையும் கண்டு மகிழ்ச்சியடைந்து திண்ணையில் படுத்ததும் அயர்ந்து நித்திரைபோயினர்.

அந்தோ! ஸ்ரீதரரும் அவர் மனைவியாகிய மைதிலீபாயும் கள்வர்களின் குடிசைகளை இரவில் ஓர் ஊரென்றும், பாழ்மண்டபத்தை இது ஓர் சத்திரமென்றும் நினைத்துப் படுத்துத் தூங்கும் சமயத்தில் கள்வர் தலைவன் தன் சிநேகர்களாகிய திருடர்களை நோக்கி, "நான் தூங்குவதுபோலப் படுத்திருக்கிறேன். இவர்களுடைய பொருள்கள் யாவும் மூட்டைகட்டி அதைத் தலையின் பக்கமாக வைத்திருக்கின்றனர். அதனை மெல்லத் தூக்கிக் கொண்டு வந்துவிடுங்கள்" என்று சொல்லினான். உடனே அந்தச் சோரர்கள் தூங்குகின்ற இவர்களிடம் அணுகி மூட்டையைத் திருடி ஓரிடத்தில் பத்திரமாய்ப் புதைத்து வைத்துவிட்டுத் தம் எஜமானனான தலைவனிடம் சொல்லினார்கள். அவன் "நல்லது நீங்களும் விழித்திருந்து மேல்நடக்கும் காரியத்திற்கு உதவியாய் நில்லுங்கள்" என்று கூறிவிட்டு, மீண்டும் படுத்துத் தூங்குவதுபோலப் பாசாங்கு பண்ணிக்கொண்டிருந்தான்.

இப்படி இருக்கும்பொழுது ஸ்ரீதரருக்கு அற்பசங்கைக்கு வந்துவிடவும், பொருக்கெனக் கண்ணைவிழித்துப் பார்க்கும்பொழுது, தனது செல்வமுழுதும் வைத்திருந்த மூட்டை காணாமல் போயதைக் கண்டு, "அந்தோ! எனது மூட்டையை யாரோ களவாடிவிட்டுச் சென்றார்களே. இனி என்ன செய்வேன்?" என்று அலறிக்கொண்டு கள்வர் தலைவனுடைய குடிசையை நாடிச்சென்று, "அடே! உத்தமனே! உனது வார்த்தையை நம்பி உன்னுடனே வந்தேனே. யாரோ ஒருகள்வன் என் மூட்டையைத் தூக்கிக்கொண்டு போய்விட்டானே"

என்று கதறினார். உடனே கள்வர்தலைவன் வாளையெடுத்துக் கொண்டு குடிசையிலிருந்து வெளிப்போந்து, "ஐயா! நீர் கூறுவது விந்தையாக இருக்கின்றது. இந்தச் சத்திரத்தில் பெரிய அரசர்கள் அளவிடற்கரிய பொருளுடனே வந்து தங்கிப் போவார்கள். ஓர் இம்மியளவேனும் இதுவரை களவு போன தில்லை இன்று உம்முடைய மூட்டையைக் கவருவதற்குக் கள்ளன் வந்துவிட்டானே. அடே! ஏமார்ந்த பிராம்மணா? உன் மனைவியை நான் பலமுறையும் வரும்பொழுது பார்த்துக்கொண்டே வந்திருக்கிறேன். அவள் வேறு ஓர் சோரநாயகனுக்கு உனது பொருளை முற்றும் சேர்க்கக் கருதியே நீ தூங்கும் சமயத்தில் மூட்டையைத் திருடி ஒளித்து வைத்துவிட்டாள். அவள் கெட்டவளென்று பார்த்தபொழுதே தெரிந்துகொண்டேன்" என்றான். இதனைக் கேட்ட ஸ்ரீதரர் "அடே பாபி! அவள் கற்பினுக்கரசியடா; வயிறெரிந்து அவள் வாயால் ஒருவார்த்தை சொன்னால் உனது குலம் முழுதும் அழிந்துபோகும். பத்தினிப்பெண்கள் விஷயத்தில் பழிசுமத்தாதே பாதகா" என்று கூறினான். அதற்குக் கள்வர் தலைவன் "அடே பார்ப்பாரப்பயலே! என்னையா பாதகன் என்கிறாய். எனது பாதகத்தொழிலைக் காட்டுகின்றேன்" என்று வாளை ஓங்கி ஸ்ரீதரரை ஒரே வெட்டாக வெட்டி வீழ்த்தி விட்டுத் தனது கள்வர்களை நோக்கி, "இக்கணமே இவன் மனைவியை அழைத்து வந்து கணவன் இறந்ததைக் காட்டி நம் குடிசையில் கொண்டுபோய் நிலவறையின் கதவினைத்திறந்து பாதாளவறையிலே வைத்துவிடுங்கள்" என்று கூறினான். கள்வர்கள் அக்கணமே அயர்ந்து தூங்கிக்கொண்டிருக்கும் மைதிலிதேவியை எழுப்பி "உனது கணவன் கள்வரால் கொலையுண்டுகிடக்கின்றான்" என்று சொன்னார்கள். உடனே அவள் இடிவிழுந்த சர்ப்பம் போல் நடுங்கி, விழுந்து வெட்டுண்டு கிடக்கும் கணவன் முன்னே ஓடி, அவர் மேனிமேல் விழுந்து, ஆ பிராணபதி! இந்த நடுகாட்டில் நட்டாற்றில் இறக்கிவிட்டு மாண்டீரோ! எனது சொல்லைக் கேளாது கள்வனை நம்பிவந்து உயிர்துறந்தீரோ! நாதா! ராமனை வணங்கிய தலையோ அறுபட்டது. இராகவனை ஸ்தோத்தரித்த நாவோ ஒன்றும் பேசாது ஒடுங்கி இருக்கின்றது. நறுமலரிட்டு அர்ச்சித்த நற்கரமோ சோர்ந்து கிடக்கின்றது. ஏ ராகவா! உனக்குக் கண் இல்லையா! உன்மீது ஆணையிட்டதை நம்பியன்றோ இந்தக் கள்வர்பின்னே வந்தார். இவரைக்காப்பது உன் கடனன்றோ. ஆசாரசீலனையன்றி நான் நோற்ற நோன்பெல்லாம் பாழாயினவோ என்று நாதன்மேல் வீழ்ந்து மூர்ச்சையடைந்தாள். உடனே கள்வர்தலைவன் அவள் முகத்தில் தண்ணீரைத் தெளித்து மூர்ச்சை தெளிவித்தான். உடனே அவள் கண் விழித்து எதிரில் நிற்கின்ற கள்வர்தலைவனை நோக்கி, "அடே பத்தா! நீதானே எனது அன்பனைக் கொன்றவன்" என்று கேட்

டாள். அவன் நகைத்துக்கொண்டு "பெண்ணமுதமே! உனது கணவன் நானே; என்னுடனே கூடி இணங்க வா" என்று கூறினான். இந்தக்கொடுமொழியைக்கேட்ட மைதிலியாய் தர்மதேவதை நடுங்க, "நான் கணவனையன்றி வேறு தெய்வமில்லையென்று கருதியது உண்மையானால் இக்கணமே சீதாசமேதனாக ஸ்ரீராமச்சந்திரர் இங்கு எழுந்தருளி என்னைக் காக்கட்டும் என்று கூறினாள். அக்கணமே கள்வர்களின் கண்கள் முற்றும் குருடாயின. அக்காலத்தில் சீதாசமேதராய் ராகவன் ஆங்கெழுந்தருளி ஸ்ரீதரரைத் தனது அஸ்தத்தால் தடவவும், தூங்கி விழிப்பதுபோல அவர் விழித்துத் தன்தேவியைத் தழுவி எதிரேதோன்றி சேவை தந்தருளும் சீதாராமனைக்கண்டு, அவருடைய சரணாரவிந்தத்தில்வீழ்ந்து ஸ்தோத்திரம் செய்யவும், ஸ்ரீதரரை ராகவனும், மைதிலியாளை ஜானகியுமாய்த் தழுவிக் கள்வர்கள் புதைத்துவைத்திருந்த அபாரங்கள் பொருள்கள் முற்றும் புதைத்தவிடத்திலிருந்து எடுத்துக் கொடுத்துவிட்டு இருவரையும் நோக்கி, "நீங்கள் யாத்திரை முடிந்து சிலநாள் மண்ணுலகில் வாழ்ந்திருந்து முடிவில் பரமபதம் சேருங்கள்" என்று திருவாய்மலர்ந்தருளி, கள்வர்களையும் நல்லோராக்கிவிட்டு அந்தர மார்க்கமாய் மறைந்தருளினார். ஸ்ரீதரர் தனது மனைவியுடனே யாத்திரைசெய்து மீண்டும் அயோத்திமா நகரத்திற்குவந்து ஸ்ரீராமபக்திசெய்து சிலகாலமிருந்து முடிவில் வைகுந்த நகரத்திற்கு எழுந்தருளி மகிழ்ச்சியடைந்தனர்.

வாழி.

பரிமாவே றிக்கள்வர் கையில்பட்டு மடிந்துபட வருளால்
உருமாய்ந் தகலாதுயிர்பெற்ற உறவோன் வாழி மனுவினரும்
பரமானந்த முடனினியப் பழிப்போன் வாழி மைதிலிபெண்
பெருமாதி னக்குராபாலு யுயர்ந்தவன் தன்னை வாழி.

ஸ்ரீதரதாசர் சரித்திரம்

முற்றிற்று.

சரித்திரங்களின் அட்டவணை

விஷயம்	பக்கம்
முகவுரை	1
ஸ்ரீமகா பக்தவிஜய வரலாறு	3
கடவுள் வாழ்த்து	5
ஸ்ரீபண்டரிபுரச் சிறப்பு	6
1 ஜெயதேவஸ்வாமிகள் சரித்திரம் பிற்பாதி	9
2 கபீர்தாசர் சரித்திரம் பிற்பாதி	26
3 துளசிதாசர் சரித்திரம் பிற்பாதி	83
4 நாமதேவர் சரித்திரம் பிற்பாதி	94
5 ஞானேசுவரர் சரித்திரம் பிற்பாதி	158
6 ஜனாபாய் சரித்திரம்	170
7 மீராபாய் சரித்திரம்	173
8 தாமாசிபண்டிதர் சரித்திரம்	199
9 புரந்தரதாசர் சரித்திரம்	221
10 பெரியதாசர் சரித்திரம்	280
11 நரசிம்மமேதா சரித்திரம்	311
12 கோராகும்பர் சரித்திரம்	356
13 சைநாதசுவாமிகள் சரித்திரம்	393
14 லதிபூஷா சரித்திரம்	438
15 சக்குபாய் சரித்திரம்	442
16 பத்திராசல ராமதாசர் சரித்திரம்	520
17 போசலபாவா சரித்திரம்	631
18 சோகாமேளர் சரித்திரம்	668
19 துக்காராம் சரித்திரம்	706
20 ஸ்ரீதரதாசர் சரித்திரம்	782

காபிரைட் அறிவிப்பு

ஸ்ரீமகா பக்தவிஜயம் இரண்டாம்பாகம் என்னும் இந்நூலை ம-ள-ள-ஸ்ரீ, ப. கணேசமுதலியார் அவர்கள் முயற்சியினால் பிரம்மஸ்ரீ ஆழ்வார் திருநகரி சிங்கம் - ஸ்ரீனிவாச அய்யங்கார் அவர்களைக்கொண்டு எழுதுவித்துத் தன் பேரால் ரிஜிஸ்டர் காபிரைட் செய்து அனுபவித்து வந்ததை அடியில் கையொப்பமிட்டுள்ள யான் மேற்படி ப. கணேசமுதலியாரிடம் மேற்படி புத்தகத்தின் காபிரயிட் சுதந்தரத்தைக் கிரையத்துக்குப்பெற்று என்னால் அச்சிட்டு, மகாகனம்பொருந்திய கவர்ன்மெண்டார் அவர்கள் காபிரைட் சட்டத்தின்படி ரிஜிஸ்தர் செய்திருக்கின்றேன். ஆகையால் இதனை எனது உத்தரவின்றி யாரேனும் அச்சிடுவரேல் யான் கோரும் சகல கஷ்ட நஷ்டங்களுக்கும் உட்படுவார்கள் என்பதை இதன்மூலம் தெரிவிக்கிறேன்.

இப்படிக்கு

அ. முத்துவடிவேல் முதலியார்

24, தாண்டவராயப்பிள்ளை வீதி, சென்னை.

ஸ்ரீமகா பக்தவிஜயம்

(3-4-5-6-பாகங்கள்)

ஓம் சச்சிதானந்த நித்ய நிர்மலக்கடவுளாகிய பரப்பிரம்மம் தன் மாயாவிலாசத்தால் மூவுருவாகி, சிருஷ்டி ஸ்திதி சம்ஹார கிருத்தியஞ் செய்யும் இப்பூவுலகில், கிரேதா திரேதா துவாபர யுகங்களில் நடந்தவண்ணமே இக்கலியுகத்திலும் சகுணதியானமும், பிரம்மக்ஞானமும், கிரகஸ்த சன்யாச வர்ணாசிரம தர்மங்களும் நடக்கும்பொருட்டு, மூவரும் முனிவரும் அவதாரஞ் செய்து, மாந்தர்களின் பக்குவா பக்குவப்படி போதிக்கவேண்டியதாகும் என்று பவுஷிய புராணத்தில் உரைத்தபடியே பக்தர் முக்தர்களில் 71-தாசர்கள் சரித்திரங்களை ஆழ்வார் திருநகரி சிங்கம்-ஸ்ரீனிவாச அய்யங்கார் அவர்களாலும், வேலூர்-கன்னையதாசர் அவர்களாலும் விரித்தெழுதவேண்டிய விடங்களில் விரிவாயும், சுருக்குமிடங்களில் சுருக்கியும் எழுதுவித்து சுத்தப் பிரதியாய் அச்சிட்டுள்ளோம். ஆகையால் ஒவ்வொருவரும் எமது பூமகள்விலாச அச்சுக்கூடத்தில் அச்சிட்ட புத்தகந்தானா என்று பார்த்து வாங்கக் கோருகிறேம்.

இதன் விலை ரூபா 2 0 0

விலாசம்:

அ. இரங்கசாமிமுதலியார் ஸன்ஸ்

21, தாண்டவராயப்பிள்ளை வீதி, சென்னை.